திருக் காளத்திப் புராணம்

பேரவை அமைப்பாளர்

[illegible]

2001

V2 11, 31'PC1
F01.19.1
224969.

வெளியீடு 4-12-2002

Issued 4-12-2002

நாடு ஆவணக் காப்பகம்
2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 4, 2001 – தொகுதி 10 – எண் 1

**Tuesday the 4th September, 2001 – Volume 10 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

*விலை ரூ. 3.00]* **[Price Rs. 3.00**

| | பக்கங்கள் |
|---|---|
| **4. கவன ஈர்ப்பு—** | |
| பொறியியற் கல்லூரிகளில் காலியிடங்கள் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை | 31-41 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 37 — சுற்றுச் சூழல் | 41-141 |
| (ஆ) கோரிக்கை எண் 44 — காட்டுவளத் துறை | |
| (இ) கோரிக்கை எண் 46 — செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் | |
| (ஈ) கோரிக்கை எண் 58 — காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | |
| * மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு | 54, 58-59, 109, 111-134 |
| * திரு. து. நெப்போலியன் | 55-69, 133, 138 |
| * திரு. எம்.எஸ். சந்திரசேகரன் | 70-75 |
| * திரு. கா. கந்தசாமி | 76-80, 135, 137 |
| * திரு. பி.எஸ். அருள் | 80-87 |
| திரு. தி. வேல் முருகன் | 87-92 |
| திரு. க.ரா. கந்தசாமி | 93-98 |
| திரு. என்.ஆர். ரங்கராஜன் | 98-101 |
| * திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 101-104 |
| திரு. போளூர் வரதன் | 104-109 |


224969
சென்னை-600 008




| | பக்கங்கள் |
|---|---|
| **5. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (உ) கோரிக்கை எண் 20 — வேளாண்மை | 142-245 |
| (ஊ) கோரிக்கை எண் 52 — வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | |
| * மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் | 143, 145, 147, 152, 153, 168, 223-243 |
| * திரு. கோ.சி. மணி | 147-152, 157-161 |
| திரு. சி. இராசேந்திரன் | 161-167 |
| திரு. எம். ராம்குமார் | 168-173 |
| * திரு. கு. ஜெயக்குமார் | 173-178 |
| * திரு. வது. நடராஜன் | 178-183 |
| திரு. அ.இரா. மலையப்பசாமி | 183-191 |
| * திருமதி ஆர். சசிகலா | 191-194 |
| திரு. என். நன்மாறன் | 194-198 |
| திரு. வெ. கோவிந்தராஜ் | 199-204 |
| * திரு. ப. அரசன் | 207-212 |
| திரு. ஜி. பழனிசாமி | 143, 146, 212-222, 232, 238, 243 |
| **6. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 141-142 |
| **7. அறிவிப்பு—** | |
| உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் | 142 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 245-246 |

## 4–9–2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v - ix |
| Governor and Council of Ministers | xi - xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv - xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix - xxix |
| **1. வினாக்கள்–விடைகள்–** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 23 |
| **2. தகவல் கோரல்–** | |
| உறுப்பினரின் முன்னறிவிப்பு | 23 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு–** | |
| இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினரின் தாக்குதல் | 24 - 30 |
| திரு. டி. மணி | 24 |
| திரு. ஐ. கணேசன் | 25 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 25 - 26 |
| திரு. ஆஸ்டின் | 26 - 27 |
| திரு. ப. ரங்கநாதன் | 27 - 29 |
| * திரு. லா. சந்தானம் | 29 |
| * மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத் | 30 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – டாக்டர் சி. ரங்கராஜன்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.*

2. நிதி மற்றும் சட்ட அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   *நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.*

3. கல்வி அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

   *கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

4. மின் துறை அமைச்சர் - **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

   *மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.*

16. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.*

17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:**

*ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.*

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

19. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

*மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.*

20. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

*தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.*

21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*வணிக வரிகள்.*



23. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:**

*வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

24. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.*

25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.*

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.*

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.*

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**

*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

*தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.*

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

*குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.*

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**

*கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.*



11. வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

*வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.*

12. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

*பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.*

13. செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.*

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.*

15. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- Dr. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:** Finance, Planning, Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare. Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Electricity, Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. Minister for Health | .. | **The Hon. Thiru S. Semmalai:**<br>Health, Medical Education and Family Welfare. |
| 7. Minister for Local Administration | .. | **The Hon. Thiru C. Durairaj:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 8. Minister for Labour | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs. |
| 9. Minister for Rural Industries | .. | **The Hon. Thiru K. Pandurangan:**<br>Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| 10. Minister for Co-operation, Food, Civil Supplies and Consumer Protection | .. | **The Hon. Thiru P. Dhanabal:**<br>Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 11. Minister for Revenue | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses. |



| | | |
|---|---|---|
| 12. Minister for Public Works | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:**<br>Public Works, Highways, Irrigation including Minor Irrigation. |
| 13. Minister for Information and Publicity and Forests and Environment | .. | **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control. |
| 14. Minister for Agriculture | .. | **The Hon. Thiru R. Jeevanandham:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development. |
| 15. Minister for Tourism | .. | **The Hon. Tmt. R. Saroja:**<br>Tourism and Tourism Development Corporation. |
| 16. Minister for Social Welfare | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 17. Minister for Adi-Dravidar Welfare | .. | **The Hon. Thiru V. Subramanian:**<br>Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 18. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru S.P. Shanmuganathan:**<br>Handlooms and Textiles. |

19. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**
Fisheries and Animal Husbandry.

20. **Minister for Industries** .. **The Hon. Thiru R. Vaithilingam:**
Industries, Iron and Steel Control, Mines and Minerals.

21. **Minister for Milk and Dairy Development** .. **The Hon. Thiru C. Shanmugavelu:**
Milk and Dairy Development.

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**
Commercial Taxes.

23. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru A.K. Selvaraj:**
Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority.

24. **Minister for Transport** .. **The Hon. Thiru Nainar Nagendran:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

25. **Minister for Backward Classes** .. **The Hon. Tmt. Valarmathi Jebaraj:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities.



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

## மாற்றுத் தலைவர்கள் #

*திரு. பி.ஆர். சுந்தரம்*

*திரு. அ. பாப்பா சுந்தரம்*

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. சோ. பாலகிருஷ்ணன்*

*திருமதி டி. யசோதா*

*திரு. லா. சந்தானம்*

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

***# 20—8—2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.***

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ர. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 8. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 9. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 10. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 11 | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 12. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 13. | அன்பழகன், திரு. ஆகு.சி. | .. | பெரணமல்லூர் |
| 14. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 16. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 17. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 18. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி—2 |
| 19. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 20. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | .. | திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | .. | நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | .. | திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | .. | திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 29. | இராமசாமி, திரு பி.சி. | .. | மொடக்குறிச்சி |
| 30. | இராமச்சந்திரன், திரு. எஸ். | .. | கலசப்பாக்கம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. | சாத்தூர் |
| 33. | இராமு, திரு. ந. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 34. | இராம் பிரபு, திரு. இரா. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 35. | இராஜசேகர், திரு. மா. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 36. | இராஜரெத்தினம், திரு. ப. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 37. | இராஜா, திரு. டி.கே. | .. | திருப்பத்தூர் |
| 38. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. | பத்மநாபபுரம் |
| 39. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. | ஆலங்குளம் |
| 40. | இலட்சுமணன், திரு. கே.என். | .. | மயிலாப்பூர் |
| 41. | இளவழகன், திரு. ப. | .. | அரியலூர் |
| 42. | இளையகண்ணு, திரு. கா.தி. | .. | ஏற்காடு (ஆவா.) |
| 43. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | | |
|---|---|---|---|
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. | திருவல்லிக்கேணி |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 47. | உமாதேவன், திரு. கே.கே. | .. | திருப்பத்தூர் |
| 48. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. | செய்யாறு |
| 49. | ஏழுமலை, திரு. வெ. | .. | செஞ்சி |
| 50. | கணபதி, திரு. ந. | .. | வானூர் (செ.வ.) |
| 51. | கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 52. | கணேசன், திரு. ஆர்.டி. | .. | தேனி |
| 53. | கண்ணன், திரு. ஏ.எஸ். | .. | பொன்னேரி (செ.வ.) |
| 54. | கந்தசாமி, திரு. க.ரா. | .. | சத்தியமங்கலம் |
| 55. | கந்தசாமி, திரு. கா. | .. | குன்னூர் (செ.வ.) |
| 56. | கருணாகரன், திரு. கே.சி. | .. | சிங்காநல்லூர் |
| 57. | கருணாநிதி, திரு. மு. | .. | சேப்பாக்கம் |
| 58. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ) |
| 59. | கருப்பணன், திரு. கே.சி. | .. | பவானி |
| 60. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 61. | கலாவதி, திருமதி கு. | .. | சேந்தமங்கலம் (ஆவா.) |
| 62. | கனகதாரா, செல்வி சி. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 63. | கனிதா சம்பத், திருமதி எஸ். | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 64. | காசாம்பு பூமாலை, திருமதி பூ. | .. | சங்கராபுரம் |
| 65. | காமராஜ், திரு. மே.ப. | .. | தாரமங்கலம் |
| 66. | கார்த்தி, திரு. மு. | .. | சேலம்—2 |

காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
குரு என்கிற குருநாதன், திரு. ஜெ... ஆண்டிமடம்
கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
சக்கரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)



91. சாமி, திரு. ஆர். .. மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. .. திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் .. கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

115. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி ராஜதத்தன் திருமதி .. மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
125. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
137. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்



138. நடராஜன், திரு. எஸ்.* .. நாட்ராம்பள்ளி
139. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
140. நடராஜன், திரு. வ.து. .. இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
144. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
145. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
146. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
147. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
148. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி—I
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
154. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
158. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
159. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. .. தர்மபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் .. தொண்டாமுத்தூர்
163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
164. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
165. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
179. மணி, திரு. டி . .. விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
182. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. .. முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



185. மில்லர், திரு. அ. .. கூடலூர்
186. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிச்செட்டிப்பாளையம்
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
197. ராமச்சந்திரன், திரு. கே. .. ஆரணி
198. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
199. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
200. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
201. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
202. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
203. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
204. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
205. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
206. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
207. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

| | | |
|---|---|---|
| 208. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 209. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 210. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 212. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 213. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 214. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 215. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 218. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்—I |
| 221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 222. வேலுசாமி, திரு. செ.மா. | .. | பல்லடம் |
| 223. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 224. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 226. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 227. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |



| | | |
|---|---|---|
| 231. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 232. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 235. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 19, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 4, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

### 1. வினாக்கள்–விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 40, திரு. இரா. வில்வநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**40–**

#### தொழில்நுட்பப் பயிலகம்

***115–திரு. இரா. வில்வநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் தொழில்நுட்பப் பயிலகம் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நேற்று இந்த அவையிலே நான் குறிப்பிட்டதுபோல, மீண்டும் இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்

தெரிவித்துக்கொள்வது, இந்த ஆண்டு அரசானது எந்தத் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தையும் ஆரம்பிக்கின்ற நிலையில் இல்லை. நிதிநிலையைப் பொறுத்து அடுத்த ஆண்டு பரிசீலனை செய்யப்படும்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் தேர்வுநிலைப் பேரூராட்சியிலிருந்து ஒரு தொழில்நுட்பக் கல்லூரிக்கோ அல்லது அரசுக் கல்லூரிக்கோ செல்வது என்று சொன்னால், 30 கிலோமீட்டர் தொலைவிலுள்ள காஞ்சிபுரத்திற்கோ அல்லது 45 கிலோமீட்டர் தொலைவிலுள்ள வேலூர் நகருக்கோதான் சென்று பயிலவேண்டிய ஒரு நிலை உள்ளது. காவேரிப்பாக்கம் தேர்வுநிலைப் பேரூராட்சியைப் பொறுத்தமட்டிலே அங்கு விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் கிடையாது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு, வருகின்ற நிதியாண்டில் இதை எடுத்துக்கொள்ள முன்வருமா என்பதைக் கேட்கவிருந்தேன். அமைச்சரவர்கள் அதற்கு முன்கூட்டியே பதிலைச் சொல்லிவிட்ட காரணத்தினால், அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வில்வநாதன் அவர்கள் சொல்லியதற்காகவும், இந்த ஆண்டு இதனைச் செயல்படுத்த அவர் மீண்டும் வற்புறுத்தாததன் காரணமாகவும் நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 41, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**41–**

## நிலவள வங்கி

***2142–திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பாப்பிரெட்டிபட்டி வட்டத் தலைமையிடத்தில் நிலவள வங்கி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிக் கேள்வி என்பதால், இந்த மாமன்றத்திலே பேசக்கூடிய வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், 1995 ஆம் ஆண்டு எங்களுடைய நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அரூர் வட்டத்திலிருந்து பாப்பிரெட்டிபட்டியைத் தனி வட்டமாகப் பிரித்துக் கொடுத்தார்கள். புரட்சித் தலைவி ஆட்சி வரும்போது எல்லாம் எங்களுடைய பகுதிக்கு நல்ல பல திட்டங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதி விவசாயத்தை நம்பி வாழ்கிற பகுதி. அந்தப் பகுதி மக்கள் அரூருக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 30, 40 கிலோமீட்டர் சென்று, வசதிகளைப் பெறக்கூடிய அளவிலே இருக்கின்றது. மா, தென்னை, கரும்பு போன்ற விவசாயப் பொருட்கள் அங்கே உற்பத்தியாகின்றன. அது அம்மாவினுடைய சொந்த மாவட்டம் என்பதாலும், என்னுடைய தொகுதிக்கு உட்பட்டது என்பதாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே எப்படியாவது அங்கே நிலவள வங்கியை விவசாய மக்கள் பெறுகிற வகையிலே வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலே கடுமையான சுமைகள் இருந்தாலும்கூட, என்னுடைய கோரிக்கையை கருணை அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதனை நிறைவேற்றிக் கொடுக்கும்படி மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஏற்கெனவே 247.6 இலட்சம் ரூபாய் நட்டத்திலே இயங்கிக்

கொண்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் கோரிக்கையை ஏற்றோம் என்று சொன்னால், தொடங்குகிற அந்த வங்கியும், ஏற்கெனவே இருக்கிற அந்தத் தாய் வங்கியும், இரண்டுமே viable–ஆக இல்லாமல், மிக, மிக நட்டத்திலே இயங்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் என்ற காரணத்தினாலும், ஏற்கெனவே NABARD–க்கு எழுதி, அந்தக் கோரிக்கையை NABARD ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலும், அதை ஏற்பதிலே மிகுந்த சிக்கல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் உள்ள மொரப்பூர் தொகுதி, வளர்ந்துகொண்டிருக்கிற தொகுதி. அந்தப் பகுதியில் புதிய முறையில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மேடும் பள்ளமுமாக நிலங்கள் இருக்கிற காரணத்தால், அந்த நிலங்களைப் பண்படுத்துவதற்காக நிச்சயமாக அந்த வட்டத்திற்கு ஒரு நிலவள வங்கி தேவைப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் NABARD இடத்திலே முறையாக இந்தத் தொகுதியினுடைய பிரச்சினையை எடுத்துச்சொல்லி, நிலவள வங்கியை பாப்பிரெட்டிபட்டி வட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த வங்கி எல்லைக்குட்பட்ட பாப்பிரெட்டிபட்டி பகுதியிலே ஏறக்குறைய 5,170 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுப்பதிலே அந்த வங்கிக்குச் சிரமம் இல்லை. ஆனால், அந்த வங்கியை இரண்டாகப் பிரிக்கிறபோது, அது செயல்படுவதிலே நல்ல சாத்தியக்கூறுகள் இல்லை என்ற காரணத்தினாலே, இரு முறை NABARD–க்கு எழுதப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியின் மூலமாக விவசாயிகள் பல்வேறு கடன்களைப் பெற்று, செலுத்தமுடியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள். விவசாயிகள் பட்ட கடனை ஈடு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 310 கோடி ரூபாயை வழங்கி விவசாயிகளுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள். அதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், நிலவள வங்கி மூலமாகப் பெற்றிருக்கிற கடனுக்கு நிவாரணம் பெற வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் சந்தித்து மனு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நிலவள வங்கி மூலமாக விவசாயிகள் பெற்றிருக்கிற கடனுக்கு நிவாரணம் பெறுவதற்கான முயற்சியை NABARD–உடன் பேசி, தீர்வு காண்பதற்கான முயற்சி அரசிடத்திலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற அந்தத் திட்டம், விவசாயக் காரியங்களுக்காகக் கடனை வாங்கி, செலுத்த முடியாதவர்களுக்கு வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ததிலேயே 311 கோடி ரூபாய் இந்த அரசாங்கம் ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான, L.D. Bank Long Term loan–ஐயும் ஏற்க வேண்டுமென்று சொன்னால், மிகப் பெரிய நஷ்டம் ஏற்படும். 10 ஆண்டு, 15 ஆண்டு காலத்திற்கு அந்த Long Term loans கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; நிலவள வங்கிகள் எல்லாம் non–farming–க்கும் கடன்கள் கொடுத்திருப்பதனால், இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றால் மிகப் பெரிய கஷ்டம் ஏற்படும் என்பதால், இக்கோரிக்கையை இப்போது பரிசீலிப்பதற்கு இல்லை என்பதன்ன நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு நிலவள வங்கி என்கின்ற நிலைகூட சில இடங்களிலே இருக்கிறது. கடன் பெறுபவர்கள், 40, 50 கிலோமீட்டர் தூரம் சென்று மனுக்களைக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதனைக் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு நிலவள வங்கி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 செப்டம்பர் 4

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே தெளிவாகத் தெரிவித்துவிட்டேன். தொடங்குகிற புதிய வங்கி viable–ஆக இருக்கும்பட்சத்தில், இலாபகரமாக இயங்கும் சூழ்நிலை இருக்குமென்று சொன்னால், விவசாயிகளுடைய நலனைக் கருதி, இந்த அரசு அந்தக் கோரிக்கையினைப் பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா, நிலவள வங்கியைப் பொறுத்தது என்று சொன்னாலும்கூட, நான் எழுப்புகின்ற துணை வினாவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துறையைச் சார்ந்தது என்கிற காரணத்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் துறையைச் சார்ந்ததெல்லாம் கேட்கக்கூடாது. கேள்விக்குத் தொடர்புடையதைத்தான் கேட்க வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** பொதுவாகக் கேட்கிறேன். இந்திய நாட்டிலே பல்வேறு மாநிலங்களிலே வறுமைச் சாவு அதிகரித்திருக்கிறது என்பதை இந்திய உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டி, இப்போது மக்களுக்கு வழங்குகிற குடிமைப் பொருட்களை, 73 கிலோ அளவுக்குக்கூட ஒரு குடும்பத்திற்கு உயர்த்தி வழங்கலாம் என்கின்ற நிலையைச் சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த மாநிலங்களிலே மட்டுமல்ல, நமது தமிழகத்திலும்கூட அதனுடைய தாக்கம் இருக்கிறது என்பதை இன்றைக்குப் பத்திரிகைகளிலே பார்த்தேன். தமிழகத்திலே நாம் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்குகின்றோம். நமது அரசு ஏற்கெனவே கையிருப்பிலே நிறைய நெல்லும், அரிசியும் இருக்கின்றன என்ற தகவலைச் சொல்லியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் ஆணையை எதிர்நோக்கி...

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம், இதை ஒரு தனிக் கேள்வியாகப் போடுங்கள். ஏனென்றால், மூல வினா நிலவள வங்கிப் பிரச்சினை. அமைச்சரிடம் பதில் இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** முதலமைச்சருடன் கலந்து அரசு ஆவன செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 4]

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலிக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அம்மா அவர்கள் அதற்கான ஒரு கூட்டத்தைக் கூட்ட இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அரசினுடைய பரிசீலனையில் அது இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நிலவள வங்கியின் மூலமாகப் பெறும் தொகையை சில சமயங்களில் அதிகரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுகிறார்கள். பழைய திட்டத்தில் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. அதை அதிகரித்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பணிகளுக்கு அதிகரிக்க வேண்டும் என்பதற்கு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கோரிக்கை கொடுத்தால், அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்ற நிலவள வங்கிகள் இலாபத்தில் நடக்கும்படியாக தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. விவசாயப் பெருமக்கள் வாங்கியிருக்கிற கடனுக்கான தவணைகளை முறையான நேரத்திலே, சரியான நேரத்திலே கொண்டுவந்து கட்டினால் அந்த வங்கிகள் எல்லாம் இலாபத்திலே இயங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கியைப் புதிதாகத் தொடங்காவிட்டாலும்கூட, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியை நாகை மாவட்டத்தில் திருவாரூரை மையமாகக் கொண்டு தொடங்குவதாக ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. அது நம்முடைய

அரசால் தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டிருக்கிற அந்த விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை. இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டாலோ அல்லது கோரிக்கை மனு கொடுத்தாலோ அரசு அதைப் பற்றி விவரமாக ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நிலவள வங்கிகளிலே விவசாயிகள் கடன் பாக்கியைக் கட்டாத காரணத்தால் கடன் வழங்க முடியாத நிலை இருக்கிறது. அரசாங்கத்தினுடைய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே அவர்களுக்கான பணம் பல மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், நிலவள வங்கிகளிலே கொடுத்த கடன் பணத்திற்கு மட்டும் வட்டியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் தரவேண்டிய பணத்தைத் தராததன் காரணமாக விவசாயிகள் நிலவள வங்கிகளிலே பணம் கட்டமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த சர்க்கரை ஆலைகளில் பணம் தராத நிலையில், நிலவள வங்கியிலே இருக்கின்ற கடன்களை, வட்டியை இரத்து செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இது நிலவள வங்கி சம்பந்தப்பட்ட கேள்வி. சர்க்கரை சம்பந்தப்பட்ட கேள்விக்குத் தனியாக உறுப்பினர் கேட்டால் அந்தத் துறை அமைச்சர் அவருக்கு விவரமான பதிலைச் சொல்வார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று, தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை நிலவள வங்கிகள் உள்ளன? இரண்டு, தற்போது இருக்கின்ற நிலவள வங்கிகளில் எத்தனை வங்கிகள் இலாபகரமாகச் செயல்படுகின்றன? எத்தனை வங்கிகள் நட்டத்திலே செயல்படுகின்றன? மூன்று, பாப்பிரெட்டிபட்டி போன்ற பகுதிகளில் அல்லாமல் தமிழகத்தில் இருக்கின்ற பிற பின்தங்கிய பகுதிகளில் எல்லாம் கூடுதலாக நிலவள வங்கிகளை ஆரம்பிக்கும் எண்ணம் அரசின் கவனத்தில் உள்ளதா என பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்களை எல்லாம் அடக்கி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களும் தரப்படும் என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

42–

சுக்கிரன் ஏரி

***947–திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், சுக்கிரன் ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுக்கிரன் ஏரியை 1999–2000 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரி கரைகளைப் பலப்படுத்தும் பணி முடிக்கப்பட்டது.

*முற்பகல் 10–15*

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதியிலே உள்ள சுக்கிரன் ஏரியில் கடந்த 40 ஆண்டு காலமாகத் தூர் வாரும் பணி நடைபெறவில்லை. முந்தைய ஆட்சியிலே தூர் வாரும் பணி என்ற பெயரிலே கரைகளிலே மட்டும் மண்ணைப் போட்டார்கள். அதற்குத் தூர் வாரும் பணி என்று அர்த்தம் இல்லை. அரியலூர் தொகுதியிலே இருக்கக்கூடிய பிரதான, மிக முக்கியமான ஏரிகளில் இதுவும் ஒன்று. கிட்டத்தட்ட ஏழாயிரம் ஏக்கர்களுக்கும் மேல் பாசனம் அளிக்கக்கூடிய ஏரி இது. ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் கிடைக்காமல், சாலை மறியல் போராட்டம், உடனே R.D.O. தலைமையிலே Peace Committee Meeting, மீண்டும் சாலை மறியல் போராட்டம், உடனே Peace Committee Meeting என்று இப்படியே கடந்த ஐந்து வருடங்களாக நடந்தது. நானே அந்தக் கூட்டங்களிலே பல முறை கலந்துகொண்டிருக்கிறேன். இந்த ஏரிக்கரையிலே, நவக் கிரகங்களிலே

ஒன்றான சுக்கிரன் தெய்வம் இருக்கிறது. அதனாலேயே, அதிலே இருக்கிற தண்ணீர் எல்லாம் ஒருவேளை காய்ந்துவிடுகிறதோ, என்னவோ தெரியவில்லை. ஆகையினாலே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இந்த ஏரியினுடைய ஆழத்தை அதிகப்படுத்தி, இந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் இனி தண்ணீர்ப் பிரச்சினையும் ஏற்படாத அளவுக்குத் தூர் வாரும் பணியை இந்த ஆண்டே மேற்கொண்டு, அதை நடத்தி முடித்துத் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 4–4–1999 அன்று வேலை தொடங்கி 5–6–1999 அன்று வேலை முடிவு பெற்றுள்ளது. மேலும், 9.23 இலட்சம் ரூபாயிலே வேலை சிறப்பாக முடிவடைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே உள்ள அந்த ஏரியின் கரை மட்டும்தான் சரிசெய்யப் பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மேலும், அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, வரும் ஆண்டிலே நிதிநிலைமையைப் பொறுத்து அந்த ஏரி தூர் வாரப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகிறது. மனித வளம் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. ஆனால், நீர்வளம் மட்டும் குறைந்துகொண்டே போகிறது. குடிதண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருந்துகொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு நீர் ஆதாரத்தைப் பெருக்கக்கூடிய இந்த இக்கட்டான சூழ்நிலையிலே, நடப்பு ஆண்டிலே நம்முடைய அரசு எத்தனை ஏரிகளைத் தூர் வாரப்போகிறது? நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக புதிய ஏரிகளை அமைக்க இருக்கிறதா? கடந்த ஆட்சிக் காலத்திலேகூட ஒரு தொகுதிக்கு ஓர் ஆண்டுக்கு ஓர் ஏரி என்று சொல்லி, தூர் வாரும் பணிகளெல்லாம் நடைபெற்றன. ஆகவே, பாசனத் துறையின் மூலமாக, நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு அரசு நடப்பு ஆண்டிலே என்ன யுக்தியைக் கையாள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே மொத்தம் பொதுப் பணித் துறை சார்பாக 10,071 குளங்கள் இருக்கின்றன. அதிலே system tank 5,336,





non–system tank 5,375 இருக்கின்றன. 1986–லேயிருந்து 1996 வரையில் 143 ஏரிகள் ரூபாய் 40 கோடியே 86 இலட்சத்திற்குத் தூர் வாரப்பட்டன. 1990–லேயிருந்து 1996 வரையில் 284 ஏரிகள் ரூபாய் 97.87 கோடிக்குத் தூர் வாரப்பட்டன. 1996–லேயிருந்து 1999 வரையில் 172 ஏரிகளும் அதன் பின்பாக [illegible]20 ஏரிகளும், கிட்டத்தட்ட 1,463 ஏரிகள் இதுவரையில் தூர் வாரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள். வரும் ஆண்டிலே எவ்வளவு ஏரிகளில் தூர் வாரப்படும் என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்போது அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் ஏரிகளில் தூர் வாரும் பணி செய்வதற்குத் தேர்வு செய்கிறார்கள்? அதிகாரிகளுக்கு எந்தெந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் வந்து சொல்கின்றார்களோ, அதனுடைய அடிப்படையிலே சில பகுதிகளிலே தேர்வு செய்யப்படுகிறது. உண்மையாக எந்த இடத்திற்குத் தேவையோ அந்த இடங்கள் தேர்வு செய்யப்படவில்லை. ஆகவே, எந்தெந்த ஏரிகளைத் தேர்வு செய்யவேண்டுமென்று எதனுடைய அடிப்படையிலே அவர்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்பதையும், ஏரிகளிலே இருக்கின்ற ஆக்கிரமிப்புகள், ஏரிகளிலே இருக்கின்ற lay–out–களை அகற்றுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளிலே உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சில கட்டளைகளை பொதுப் பணித் துறையினருக்கு ஆணையாகத் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் பதவி ஏற்றதற்குப் பிறகு, எந்த ஏரிகளிலும் ஆக்கிரமிப்புகள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை – அவர்களை eviction செய்ய, அவர்களைக் காலி செய்ய முடியுமா என்று கேட்டார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், திரு. ரங்கநாதன் அவர்களும் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். நானே அந்த ஏரிக்கு நேரடியாகச் சென்று, அங்குள்ள மக்களைச் சந்தித்து, அங்குள்ள நிலையை நான் நன்றாக ஆராய்ந்தேன். அதிகாரிகளிடம்

[2001 செப்டம்பர் 4

ஆலோசனை நடத்தினோம். சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஏரிகளிலும், எங்கெங்கு ஆக்கிரமிப்பு இருக்கின்றதோ, அதாவது நீதிமன்றத்திலே தடையாணை இல்லாத அனைத்து ஏரிகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை, அவை குடிசைகளாக இருந்தாலும், கட்டடங்களாக இருந்தாலும் அவற்றை உடனே அகற்றுமாறு அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், தாசில்தார்களுக்கும், காவல் துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் இதற்கான உறுத்துக் கட்டளைகளை நாங்கள் பிறப்பித்திருக்கிறோம்.

*முற்பகல் 10–20*

மேலும், எந்த அடிப்படையில் இந்த ஏரிகளைத் தூர் வாருகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏரிகளைத் தூர் வாரும்போது, குறிப்பாக பேசின் (Basin) பிரகாரம், இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், காவிரி பேசினைத் தவிர்த்து – ஏனென்றால் அதுகுறித்து வழக்கு நிலுவையிலே இருக்கிற காரணத்தினாலே, காவிரி பேசினைத் தவிர்த்து – மற்ற இடங்களில் எல்லாம் பொதுவாக பாலாறு பேசின், தாமிரபரணி பேசின் இவற்றில் எல்லாம் தூர் வாரும் பணி நடைபெற்றிருக்கிறது. உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளைப் பொறுத்தவரையில், எந்தெந்த ஏரியிலே தூர் வாரவேண்டும் என்பதுபற்றி ஒரு கோரிக்கைக் கொடுங்கள்; அது கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. சோமசுந்தரம்.

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள உத்திரமேரூர் ஏரி, காஞ்சிபுரம் மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியாகும். தமிழகத்தில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்றாக உத்திரமேரூர் ஏரி உள்ளது. அந்த ஏரியில் தூர் வாரும் பணி, ஆழப்படுத்தும் பணி கடந்த 50 ஆண்டு காலமாக நிறைவேறாமல் இருக்கிறது. அதை இந்த அரசு செய்ய முன்வருமா; அந்த மக்களின் கனவு நிறைவேறுமா என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கையை வைக்கிறார்கள். இந்தக் கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும்.



2001 செப்டம்பர் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வரகூர் தொகுதி வானம் பார்த்த பூமியாகும். அந்தப் பகுதியில் இருப்பவர்கள் எல்லாம், ஏரியிலே தண்ணீர் வந்தால்தான் விவசாயம் செய்ய முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வரகூர், வேப்பூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அத்தியூர், ஒகலூர், கீழப்புலியூர் பகுதிகளில் உள்ள ஏரிகள் மூலம் விவசாயத்தை நம்பி மக்கள் இருக்கிறார்கள். அவையும் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஏரிகள் ஆகும். இந்த ஆண்டிலேயாவது, புரட்சித் தலைவி ஆட்சியிலேயாவது அந்தப் பகுதி மக்களின் குறையைத் தீர்க்கிற வகையில், அந்த ஏரிகளை ஆழப்படுத்தி சீர்செய்து கொடுக்கப்படுமா என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக W.R.C.–1 பிரகாரம் 690 குளங்களும், W.R.C.–2 பிரகாரம் தமிழ்நாட்டிலுள்ள, கிட்டத்தட்ட 1,436 குளங்களும் ஏற்கெனவே தூர் வாரப்பட்டிருக்கின்றன; மேலும் உள்ள குளங்கள் அனைத்தும் தூர் வார வேண்டும் என்ற கோரிக்கைபற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே நடைபெற்ற கூட்டத்திலே கூறியிருக்கிறார்கள். ஆகவே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை வரும்போது, இதற்குத் தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்தில் பல ஏரிகள் தூர் வாரப்பட வேண்டிய நிலையிலே இருக்கின்றன. ஆனால், வானத்தை நம்பியிருக்கக்கூடிய பகுதிகளில் இதற்கு preference கொடுக்கப்படுமா? அடுத்தபடியாக, சென்ற அரசு இருந்தபோது, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு கண்மாயை சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தால் மராமத்து செய்து கொடுத்தார்கள். அதுபோன்ற விசேஷ திட்டம் இந்த அரசிடம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் 2 ஆண்டு காலம்தான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பின்னாலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, இது சம்பந்தமாக மாண்புமிகு இதய

[2001 செப்டம்பர் 4

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதியுடன் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்போது தெளிவான விளக்கத்தை அளிக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதியிலே நிறைய ஏரிகள் பல ஆண்டு காலமாகத் தூர் வாரப்படாமல் நெய்வேலி காட்டாமணக்கு, கருவேலமரம் போன்ற மரம், செடிகள் எல்லாம் அடர்ந்து, காடுகளாகக் காட்சி அளிக்கின்றன. அவற்றை எல்லாம் இந்த அரசு தூர் வார முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஏ.எம். உசேன். தூர் வாரும் ஏரி உங்கள் தொகுதியிலே எங்கே இருக்கிறது?

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** அடையாறு பகுதியில் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் இப்போது குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கின்றது. அடையாறு பகுதியில் நல்ல தண்ணீர் வருகிற நேரத்தில், கழிவுநீர் கலந்து குடிநீர் பாழடைந்துவிடுகிறது என்ற ஒரு கருத்து இருக்கின்றது. உலக வங்கித் திட்டத்தின் அடிப்படையிலே அடையாறு ஆற்றைத் தூர் வாரி சுத்தப்படுத்தினால், சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்று சொல்கிறார்கள். எனவே, அதில் கலக்கக்கூடிய கழிவுநீரைத் தடுத்து, அது சென்னை மாநகர மக்களுக்குப் பயன்படுகிற வகையில் செய்யக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.



2001 செப்டம்பர் 4]

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டத்திலே மகேந்திரா தொழில் வளாகம் என்ற தொழிற் பூங்காவை ஆரம்பிக்க ஏறக்குறைய 3 ஆயிரம் ஏக்கர் நிலம் தனியார் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு வட்டத்திலே வருகிற வீராபுரம் பெரிய ஏரியையும், வீராபுரத்தில் இருக்கிற தாங்கல் ஏரியையும் அறவே அந்தத் தொழிற் பூங்காவுக்காக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான புகைப்படமெல்லாம் என்னிடத்திலே இருக்கிறது. நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் அந்த ஏரியைப் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாகப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினருடைய மனுவை உடனடியாகக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அண்ணாதுரை.

**திரு. செ. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் சுத்தமல்லி அணை நீர்த்தேக்கத் திட்டம் எங்களது தொகுதியிலே ஆரம்பிக்கப்பட்டு, அந்த சுத்தமல்லி அணை பொதுப் பணித் துறையால் இதுவரையில் தூர் வாரப்படாமலும், அதனுடைய பாசன வாய்க்கால்கள் அனைத்தும் தூர்ந்த நிலையில் பாசனத்திற்குப் பயன்படாமலும் இருக்கிற காரணத்தால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த வாய்க்காலில் தூர் வாரும் பணி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சீர்காழி தொகுதியில் திருவாலி ஏரி, பெருந்தோட்டம் ஏரி

என்ற இரண்டு பெரிய ஏரிகள் உள்ளன. 10 ஆயிரம் ஏக்கர் பாசனப் பகுதிக்கு அந்த ஏரிகள் பயன்படுகின்றன. சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த ஏரிகளை பல பேர் ஆக்கிரமிப்புச் செய்து பட்டா வாங்கியுள்ளார்கள். அந்த நிலையில், சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அந்த ஏரிகள் சுத்தப்படுத்தப்படாமல் இருந்து வந்தன. அந்த ஏரிக்குள் ஆக்கிரமிப்பு செய்தவர்களை அகற்றவும், பெருந்தோட்டம் ஏரியையும், திருவாலி ஏரியையும் சுத்தப்படுத்திக் கொடுக்கவும், சீர்படுத்திக் கொடுக்கவும் அரசு முன்வருமா என்பதை, பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு சிறந்த வழக்கறிஞர். அவர் கேள்வி கேட்கும்போதே, ஏற்கெனவே பட்டா வழங்கப் பட்டிருக்கிறது, அதை அகற்ற முடியுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் இது சம்பந்தமாக மனுக்களை என்னிடம் கொடுக்கவும். அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டிலேயே பெரிய ஏரிகளைக் கொண்டிருக்கிற ஆர்.எஸ். மங்கலம் நடராஜன்.

**திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பொதுப் பணித் துறையினுடைய இரண்டாவது ஏரியாக இருக்கின்ற ஆர்.எஸ். மங்கலம் என்ற கண்மாய் 1996–லேயிருந்து இதுவரையிலும் தூர் வாரப்படாமல் இருக்கிறது. அதைத் தூர் வாரி, அதைப் பாசனத்திற்குப் பயன்படுத்துகிற வகையிலும், அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 40 ஆயிரம், 50 ஆயிரம் பொதுமக்கள் குடிநீருக்கும் பயன்படுத்துகின்ற வகையிலும் உள்ள ஏரி என்பதால் அந்த ஏரிகளைத் தூர் வாரி அதில் இருக்கிற கொடுகுகளும் அகற்றப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதேநேரத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, போதும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லூக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.



**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் ஒன்றியத்தில் பாலூர் என்ற ஏரி ஒன்று இருக்கிறது. அங்கே கடந்த செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் மிகப் பெரிய துயரச் சம்பவம் நடந்திருக்கிறது. கடந்த கால தி.மு.க. அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கனகதாரா, அரியலூர் மாவட்டம், சுக்கிரன் ஏரிக்காகப் போட்ட கேள்வி. பொதுப் பிரச்சினை என்றால் நீங்கள் தனிக் கோரிக்கையாகக் கொடுங்கள். (குறுக்கீடு) குறுகிய கால வினா ஒன்று கொடுத்திருக்கிறீர்கள். அதை எடுக்கும்போது நீங்கள் கேட்கலாம். அமைச்சரிடம் பதில் இருக்காது. அதற்காகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான்.

*முற்பகல் 10–30*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டத்திலுள்ள 1,100 ஏக்கர் பரப்புள்ள மானூர் பெரிய குளம், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்கள் பயிரிட பாசன வசதி அளிக்கிறது. அது சிற்றார் நீர்ப்பாசனம் என்று சொன்னாலும்கூட, 10 ஆண்டுகளாக அது நிரம்பாத சூழ்நிலையில், இப்போது மதிகெட்டான் கால்வாய் என்ற கால்வாயிலிருந்து தண்ணீர் கொடுத்தால் அது நல்ல முறையில் செயல்படும் என்று மக்கள் கருதுகிறார்கள். அந்தப் பகுதியிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் 90 சதவிகிதத்திற்கும் மேல் வசிக்கின்ற காரணத்தினால் அந்தக் குளத்தை நிரப்புவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொடுக்குமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து உறுப்பினர்களும் கையைத் தூக்கிக்கொண்டிருக்கிறார்கள். நீர் என்ற பிரச்சினையினால் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்கள் தொகுதியிலே இருக்கிற ஏரிக்கு அவர்கள் ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பதால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கலந்து பேசி, என்னுடைய மானியக் கோரிக்கை வரும்போது இதற்கான விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருக்கும் அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்.

வினா எண் 43, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**43–**

## கால்நடை மருத்துவமனை

***1673–திரு. தி. வேல் முருகன்:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–*

*கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கோ. சத்திரத்துக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில் அமைந்துள்ள கோ. சத்திரம் கிராமத்திலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் இரண்டு கால்நடை கிளை நிலையங்கள் செயல்படுவதால் கோ. சத்திரம் கிராமத்தில் மேலும் ஒரு கால்நடை துணை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ. சத்திரத்தை ஒட்டியுள்ள புதுக்குப்பம், வேகக்கொல்லை, காட்டு வேகக்கொல்லை, வடக்கு வசனாகுப்பம், தெற்கு வசனாகுப்பம் என்று பல்வேறு கிராமங்கள் கோ. சத்திரம் பகுதியில் வந்து பயன்பெறுகின்ற வகையில் கால்நடை துணை மருத்துவமனை இல்லாமல் அந்த மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். பெரும்பான்மையான விவசாய மக்கள கால்நடைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டில் அந்தப் பகுதிக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைத்துத் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டத்தில் அமைந்துள்ள கோ. சத்திரம் என்னும் கிராமம் மருங்கூர்





கால்நடை மருந்தக எல்லைக்குட்பட்ட கிராமம் ஆகும். மேற்படி கிராமத்திற்கு அருகிலேயே 2 கிலோமீட்டர் தொலைவில் காட்டு வேகக்கொல்லை கால்நடை கிளை நிலையமும், 5 கிலோமீட்டர் தொலைவில் வெங்கடாம்பேட்டை கால்நடை கிளை நிலையமும் அமைந்துள்ளன. எனவே, கோ. சத்திரம் என்ற கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்றும், கோ. சத்திரம் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேற்படி ஊர்களில் இருக்கும் நிலையங்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**44–**

## குளிர்பதனக் கிடங்கு

***7451–திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ) தமிழகத்தில் அதிகமான கோழி முட்டை உற்பத்தி நாமக்கல்லில் இருப்பதால், முட்டைகளைத் தேக்கி வைத்து விற்க அப்பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாமக்கல் மாவட்டத்தில் பெருகி வரும் முட்டை உற்பத்தி நலிந்துவிடாத நிலையில் அதனை குளிர்பதனக் கிடங்கில் தேக்கி வைத்து முட்டைகளைப் பாதுகாக்க நாமக்கல் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாமக்கல் பகுதியில் ஓராண்டிற்கு 3,756 மில்லியன் முட்டைகள் உற்பத்தியில் சுமார் 10 மில்லியன் முட்டைகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, மீதமுள்ள முட்டைகளின் விலையைச் சீராக நிலைப்படுத்த கட்டட அமைப்பு வசதிகள் கொண்ட குளிர்பதன நிலையம் அமைப்பதற்கும்,

[2001 செப்டம்பர் 4

இதற்குத் தேவையான 5 ஏக்கர் நிலத்தை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ஒதுக்க, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வரிடம் கேட்கப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கித் தர இசைவு பெற்றவுடன் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு வேண்டிய அறிக்கையை வல்லுநர் குழுவிடமிருந்து பெற்று, ஆய்வு செய்து, நாமக்கல்லில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய குறுகிய கால வினாவை ஏற்றுக்கொண்டமைக்காக அநேக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய முன்தினம் நான் என்னுடைய தொகுதிக்குச் சென்று அங்கே கோழி முட்டைகளின் விலை மிகவும் வேகமாக சரிந்து வருகின்ற நிலையினை அறிந்து வந்து இந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளும்படியாக நான் அவரைக் கேட்டுக்கொண்டேன். அண்மையிலே செய்தித்தாள்களின் மூலம், மிகவும் அச்சுறுத்துகின்ற வகையிலே கோழி முட்டையின் விலை சரிந்து வருகிறது என்பதை அறியக் கண்டேன். இதை அறிந்துதானோ என்னவோ, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கோழித் தீவனத்திற்கு முதலிலே வரி விதிப்பதாக அறிவித்து, பிறகு இந்த நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில்கொண்டு அதற்கு இப்போது தற்காலிக வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதை நிரந்தரமாகச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

மாண்புமிகு அமைச்சர் சாதகமான பதிலைச் சொல்லியிருந்தாலும், இப்போது அந்தப் பகுதியிலே முட்டை 1 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு முட்டையின் விலை கடந்த ஜூன் மாதத்திலே 1 ரூபாய் 20 காசுக்கு விற்றுக்கொண்டிருந்தது. குறைந்தபட்சம் தினமும் 1 கோடி முட்டை உற்பத்தி செய்கின்ற அந்தப் பகுதியிலே தினமும் சுமார் 2 இலட்சம் ரூபாய்க்கு மேலாக நஷ்டப்பட்டு, மாதம் 6 கோடி ரூபாய் நஷ்டத்தில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அந்தத் துறையிலே இருப்பவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக நான் வேண்டிக்கொள்வதெல்லாம், குளிர்பதனக் கிடங்கை அங்கே மிக விரைவிலே அமைக்க வேண்டும். இதற்கு இடையிலே ஏற்படுகின்ற சிக்கல்கள் ஏதாவது இருந்தால் அதை அவசர கால முறையிலே தீர்த்து, பணிகளை மேற்கொண்டு நடத்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, மீண்டும் அமைச்சர் பெருந்தகை



2001 செப்டம்பர் 4]

அவர்களுக்குத் தங்கள் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் இராஜேந்திர பிரசாத், உட்காருங்கள். உறுப்பினர் நன்றிதான் சொல்கிறார். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாமக்கல் மாவட்டத்தில் முட்டை விலை ஏற்ற இறக்கத்தைத் தடுப்பதற்காக அங்கே அரசு குளிர்பதனக் கிடங்கு அமைக்க ஆவன செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை எங்களுடைய மாவட்டத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே முட்டைகளை அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். முட்டைக்கு சரியான விலை கிடைக்காத காரணத்தால், அங்கே முட்டை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எல்லாம் மிக நஷ்டத்திலே இருக்கிறார்கள். அங்கே முட்டைப் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்ற ஒரு கருத்துரு உருவாக்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலை இராசிபுரத்தில் அமைக்கப்படும் என்று முன்பு உறுதி கூறப்பட்டு, அந்தத் தொழிற்சாலை ஈரோட்டிற்குச் சென்றுவிட்டது. ஆகவே, வருங்காலத்தில் முட்டைப் பவுடர் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை இராசிபுரம் பகுதியில் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், தனியாகக் கேள்வி கேட்டால்தானே அமைச்சரால் பதில் சொல்ல முடியும்? குளிர்பதனக் கிடங்கு சம்பந்தமான வினாவிற்கான பதில்தான் அமைச்சரிடம் இருக்கும்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, இந்த அரசு பரிசீலிக்கும் என்ற பதிலைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல என்னுடைய நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கபிலர்மலை சட்டமன்ற தொகுதி பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருப்பதால், முட்டைப் பவுடர் தயாரிக்கும்

[2001 செப்டம்பர் 4

தொழிற்சாலையை நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியத்திலே ஆரம்பித்து உதவிட அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் இராசிபுரத்தில் கேட்கிறார், நீங்கள் கபிலர்மலையில் கேட்கிறீர்கள். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள், முதுகுளத்தூரில் கேட்கிறீர்களா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை என்பது இப்போது மிகவும் விலை வீழ்ச்சி அடைந்து அதனுடைய உற்பத்தியாளர்கள் எல்லாம் மிகவும் வேதனையோடு இருக்கிறார்கள். ஆகவே, நான் இந்த அரசுக்கு ஓர் ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பள்ளிகளில் 15 நாட்களுக்கு ஒரு நாள் முட்டை வழங்குவதை, நாள்தோறும் வழங்கினால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். நம்முடைய அரசு அதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் மேல் நாடுகளிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுவதாகக் கேள்விப் படுகிறேன். அப்படி ஏதேனும் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

*முற்பகல் 10–40*

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் பல கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவர்களே இல்லாத ஒரு நிலை உள்ளது. அதைத் தீர்க்க அரசு ஏதேனும் திட்டங்கள் வைத்திருக்கிறதா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 4]

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஆட்சியில் அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களிலும் மருத்துவர்கள் இருக்குமாறு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதனக் கிடங்கில் முட்டைகளை வைத்துக் கொள்வதினால் அதனுடைய தரம் குறையுமா? அதேபோன்று முட்டையிலிருந்து வரக்கூடிய பிராய்லர் கோழிகளைச் சாப்பிடுவதால் side effects ஏற்பட்டு, சில வியாதிகள் வருவதாக ஒரு சில நாட்களுக்கு முன்பு கூறினார்கள். இதை அமைச்சரவர்கள் தகுந்த முறையில் ஆராய்ந்து தக்க விளக்கம் அளிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினரின் முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** சேலத்தில் விஷச் சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட பிரச்சினை குறித்து விவாதிக்க நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், அரசின் பதில் கிடைத்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினரின் தாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது இலங்கை கடற்படையினரின் தாக்குதல் குறித்து விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பினை திரு. டி. மணி, திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் கொடுத்துள்ளார்கள். கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. ஆஸ்டின் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. ப. ரங்கநாதன் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். திரு. லா. சந்தானம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். அறிவிப்பு குறித்து சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். முதலில் திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் கடல் பகுதியில் தமிழ்நாட்டைச் சார்ந்த 6 மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு, அந்த 6 பேரும் காயமடைந்து, அவர்களுடைய படகும் மூழ்கிய நிலை அங்கே உருவாகி, அந்தப் படகை எடுத்துச் செல்வதற்கு கரைக்கு வந்து, அடுத்த படகிலே சென்று, அதை இழுத்துச் செல்கின்றபோது, மீண்டும் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சம்பவங்கள் என்பது—இலங்கை இராணுவமானாலும் சரி, இலங்கையைச் சார்ந்தவர்களானாலும் சரி, தமிழ்நாட்டைச் சார்ந்த மீனவர்களைத் தாக்குவது என்பது ஒரு தொடர் கதையாக, ஒரு மாதத்திலே ஒன்றிரண்டு சம்பவங்கள் வராத நிலையே இல்லை. ஆக, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில், நம்முடைய அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அல்லது இலங்கை அரசோடு தொடர்பு கொண்டு அந்த எல்லைப் பகுதியை எந்த அளவுக்கு நாம் கோடிட்டுக் காட்ட முடியும் என்கிற வகையில், ஓர் அடையாளம் காட்டுகின்ற வகையில் ஏதாவது ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா, அதேபோல், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குரிய நஷ்டயீட்டைக் கொடுப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தோடு பேசி, அவர்கள் மூலம் அந்த மீனவர்களுக்குரிய நஷ்டத்தையும், படகுகளுக்குரிய நஷ்டத்தையும் ஈடுசெய்து தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் கடல் பகுதியிலே தமிழக மீனவர்களை இதுவரை என்றுமே இல்லாத அளவுக்கு பீரங்கியால் தாக்கி 6 மீனவர்களை அநியாயமாகச் சுட்டிருக்கிறார்கள். கடலிலே பழுதாகி நின்ற படகைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கும்போது இந்தக் கோரச் சம்பவம் நடந்திருக்கிறது. இலங்கை இராணுவம் மிக அத்துமீறி, நம்முடைய கடல் பகுதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் பழுதான படகைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும்போது, அந்த மீனவர்கள் மீது தாக்குதல் செய்து, அநியாயமாக குண்டடிபடக்கூடிய வகையிலே செய்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக இரண்டு மீனவர்கள் விலாவிலே குண்டு பாய்ந்து மிகவும் ஆபத்தான நிலையிலே தீவிர சிகிச்சைப் பிரிவிலே இருப்பதாக அறிகிறேன். அந்த மீனவர்களைக் காப்பாற்றக்கூடிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். அந்த மீனவர்களுடைய குடும்பத்திற்கு அரசு தகுந்த நஷ்டயீடு வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட 6 மீனவர்கள் குடும்பங்களுக்கும் நஷ்டயீடு வழங்குவது மட்டுமல்லாமல், இதுபோன்ற கொடுமைகள் இனி நடைபெறாமல் இருக்க இலங்கை அரசுக்கு நம் தமிழக அரசு கடுமையான எச்சரிக்கையை விடக்கூடிய வகையிலே இந்தச் சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மான வடிவத்தில் கொண்டுவந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்கின்ற வகையில் அமைச்சரவர்களின் கவனத்தை உங்கள் மூலமாக ஈர்க்கின்றேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியிலே நடைபெறுகிற நிகழ்ச்சி என்று சொல்கிறபோது ஆண்டாண்டுதோறும் வாரத்துக்கு ஒருமுறை இப்படிப்பட்ட கொடுமையான செயல்கள் நடந்து வருகின்றன. ஏற்கெனவே இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில், கவர்னர் உரை வழங்குகிற நேரத்திலே அதிலே சொல்லியிருந்தார்கள். கச்சத் தீவை மீட்பதற்காக இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று மேற்கோள் காட்டியிருந்தார்கள். இது நிரந்தரத் தீர்வு. அந்தப் பகுதியிலே மீனவர்களுக்கு ஏற்படுகிற இன்னலைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், கச்சத் தீவை மீட்பதற்கு நீங்கள் எடுத்திருக்கிற முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். மீண்டும் மத்திய அரசை

வலியுறுத்தி அந்தத் தீவினை தமிழக அரசு பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று சொன்னால், அந்த மீனவ நண்பர்களை நாம் நிரந்தரமாகக் காப்பாற்ற முடியும் என்று கருதுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற **உறுப்பினர்கள்** கேட்டுக்கொண்டதைப்போல, பாதிக்கப்பட்ட 6 மீனவ சகோதரர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் அதிகமாக நிதி உதவியினை நிவாரணமாக வழங்கி நிரந்தரப் பாதுகாப்பு அவர்களுக்கு வழங்குகிற முகத்தான் இந்த அரசு முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டு, அரசினுடைய கவனத்துக்கு இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29 ஆம் தேதி இராமேஸ்வரம் கடலிலே மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களுடைய படகு நடுக்கடலிலே பழுதடைந்த காரணத்தால், அந்தப் பழுதை நீக்கும்பொருட்டு மேலும் 2 பேர் அங்கிருந்து நடுக்கடலுக்குச் சென்று, படகினைப் பழுது தீர்த்துக்கொண்டிருந்த நேரத்திலே இலங்கையினுடைய கடற்படைக் கப்பல் அங்கே வந்து பீரங்கியால் அவர்களைத் தாக்கியிருக்கின்றார்கள். இலங்கையினுடைய கப்பல் வந்த நேரத்திலே நம்முடைய மீனவர்கள் கைகளை உயர்த்தி, அவர்களிடத்திலே இந்தப் படகு பழுதடைந்திருக்கிறது, அதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று சரணடைந்து சொன்னபோதுகூட, அதையும் பொருட்படுத்தாமல் மிருகத்தனமாக பீரங்கியால் அவர்களைத் தாக்கி, எக்காளமிட்டு சிரித்துக்கொண்டு சென்றதாக நான் கேள்விப் பட்டிருக்கின்றேன். எனவே, வேண்டுமென்றே சிங்களப் படை, இலங்கை இராணுவம், இதைப் போன்ற தாக்குதலை நடத்தியிருக்கிறது. இது இப்போது மட்டுமல்ல, தொடர் நிகழ்ச்சியாக இராமேஸ்வரம் கடற்பகுதியிலே நடந்து கொண்டிருக்கிறது. நாம் கச்சத் தீவை மீட்போம் என்று பல முறை உறுதியிட்டுச் சொல்லியிருந்தாலும்கூட, நம்முடைய மீனவர்களைக்கூட நாம் பாதுகாப்பாக மீட்க முடியாத ஒரு நிலை இராமேஸ்வரம் பகுதியிலே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அரசு இதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும், தொடர்ந்து இதைப் போன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றியும், பாதிக்கப்பட்ட, உயிருக்கு ஆபத்தான





நிலையில் இருக்கக்கூடிய மீனவர்களுக்கு என்ன உதவி, நிவாரணம் நாம் வழங்கப் போகிறோம் என்பதைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்காக அரசின் கவனத்தை இதன்மூலமாக நான் ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29–8–2001 அன்று இராமேஸ்வரம் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற நேரத்தில், 4 மீனவர்கள் ஒரு விசைப் படகிலே சென்றபோது, இயந்திரக் கோளாறினால் அந்த விசைப் படகு பழுதடைந்துள்ளது. தகவல் அறிந்தவுடன் விசைப் படகு உரிமையாளரும், அவருடன் விசைப் படகைப் பழுதுபார்க்கின்ற தொழிலாளியும் மற்றொரு படகிலே சென்று அதைப் பழுதுபார்க்கின்ற நேரத்தில், நடுக்கடலில் பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது, அந்தப் பகுதியில் வந்த இலங்கை இராணுவ கடற்படை வீரர்கள், பழுது பார்த்துக் கொண்டிருந்த அந்தப் படகின்மீது பீரங்கித் தாக்குதலை நடத்தி, அதிலே முதல் படகிலே சென்ற 4 பேர், இரண்டாவது படகிலே சென்ற 2 பேர், ஆக 6 பேரும் படுகாயம் அடைந்துள்ளார்கள். அந்தத் தாக்குதல் நடந்த நேரத்தில் அந்தப் படகிலிருந்த 6 பேரும் சமாதானமாகப் போவதற்கு அவர்கள் கைகளை உயர்த்திக் காட்டியபோதும், அதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி ஏளனமாகப் பார்த்து விட்டுச் சென்றதாகத் தகவல்கள் வருகின்றன. ஆகவே, இந்தச் சூழ்நிலை–தொடர்ந்து இராமேஸ்வரம் பகுதியிலேயிருக்கிற மீனவர்களுக்கும், அதேபோன்று மற்ற கடற்கரை ஓரமாக இருக்கிற பகுதியிலேயிருக்கிற மீனவர்களுக்கும் தொடர்கதையாக பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கவர்னர் உரையிலேகூட, நாங்கள் கச்சத் தீவை மீட்போம், இந்தக் கடலோரப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்போம் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். நாங்கள் அதை வரவேற்கிறோம். அதேபோன்று 1991–96 ஆம் ஆண்டிலே–1991 ஆம் ஆண்டு அப்போது ஆட்சியிலே இருந்த தாங்கள், முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்....

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** முதல்வர் அவர்கள் அதேபோன்றுதான் சென்னை, செங்கோட்டையிலே கொடியேற்றும் போதும், (குறுக்கீடு) சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே கொடியேற்றும்போது, sorry, மன்னிக்க வேண்டும். நான் தவறுதலாகச் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு ஒன்றும் இல்லை. ரங்கநாதனுக்கு ஆசை, செங்கோட்டையிலும் கொடியேற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

***மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் செங்கோட்டையிலே கொடியேற்றுகிற நாள் மிக விரைவிலே வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், இராமேஸ்வரத்திலே மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் அதற்கு வாருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சொல்கிறேன். சென்னையிலே செங்கோட்டை இல்லை. ஜார்ஜ் கோட்டைதான் இருக்கிறது. செயின்ட் ஜார்ஜ் கோட்டைதான் இருக்கிறது. நான் தவறுதலாகச் சொல்லிவிட்டேன். ஆகவே, அப்போது கொடியேற்றுகிறபோதுகூட அவர்களுடைய உரையிலே, நான் நிச்சயமாக இழந்த கச்சத் தீவை மீட்பேன் என்று குறிப்பிட்டார்கள். அந்த 5 ஆண்டுகளில், அதைப் பற்றிக் கூறியதோடு சரி, தொடர் நடவடிக்கையாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் நீங்கள் இப்போது கவர்னர் உரையிலே கூறியுள்ளீர்கள். ஆகவே, இந்தக் கச்சத் தீவை மீட்பதிலே, கச்சத் தீவை நாம் எடுத்துக்கொண்டால்தான் (மணியடிக்கப்பெற்றது) மீட்டால்தான்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், பிரச்சினை கச்சத் தீவைப் பற்றியது இல்லை. மீனவர்கள் பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** அதை மீட்டால்தான் நம்முடைய மீனவர்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலை, மீன் பிடிப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதால் இந்த அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து இதற்கு ஒரு நல்ல தீர்வினை ஏற்படுத்தினால் அது நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலை தொடர்கதையாக இருக்கின்ற காரணத்தினால் பாதிக்கப்பட்ட அந்த 6 மீனவர்களுக்கும், அவர்களுடைய படகுகளுக்கும் இழப்பீட்டுத் தொகையாக



முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து கூடுதலான தொகையினை வழங்க இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரத்தில் நமது இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற நேரத்திலே அவர்களுடைய படகு பழுதடைந்து, அந்தப் பழுதடைந்த படகினை மீட்பதற்கு இன்னொரு படகிலே சென்று அதை மீட்டு எடுத்து வருகின்ற நிலையிலே இலங்கை கடற்படையைச் சேர்ந்தவர்கள் அந்த மீனவர்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அதன் மூலமாக அவர்களிலே 6 பேர் காயமடைந்து இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி–தமிழக எல்லையிலே இலங்கை இராணுவத்தினர் மீனவர்களைக் கொடுமைப்படுத்துவது என்பது ஒரு தொடர் நடவடிக்கையாகவே நடந்துகொண்டு இருக்கிறது. இங்கே குறிப்பிட்டவர்கள் எல்லாம் சொல்லியதுபோல, கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுக்கின்ற நேரத்திலேகூட எங்களுடைய இயக்கத்தின் தலைவராக அன்றைக்கு இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. மூக்கையா தேவர் அவர்கள்தான் மிகக் கடுமையாக நாடாளுமன்றத்திலேகூட தன்னுடைய ஆட்சேபணையைத் தெரிவித்தார்கள். கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுப்பதன் மூலமாக தமிழகத்திலே இருக்கின்ற மீனவர்கள் நிச்சயமாக பல்வேறு துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் ஆட்படுத்தப்படுவார்கள் என்ற நிலையை அன்றைக்கே எடுத்துச் சொன்னார்கள். கச்சத் தீவு என்பது நமது இராமநாதபுரம் சேதுபதி மன்னருடைய ஆளுகைக்கு உட்பட்ட ஒரு பகுதி. அதற்குரிய ஆவணங்கள் எல்லாம் இன்றைக்கும்கூட அந்த இராமநாதபுரம் சேதுபதியிடத்திலே இருக்கின்ற நிலைமை இருக்கிறது. நான் பார்த்திருக்கிறேன். நமது அரசும் இதிலே முனைப்பாக இருக்கிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்தத் தீவை மீட்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தொடர் நிகழ்ச்சிகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும். அதற்காகவும் மத்திய அரசோடு நமது தமிழக அரசு ஒரு பேச்சுவார்த்தையை நடத்தி அதற்கு ஒரு வரையறை செய்ய வேண்டும் என்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10–55*

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29–8–2001 அன்று காலை 6–30 மணிக்கு ஆர்.எம்.எஸ். 1254 என்ற எண் கொண்ட மோட்டார் படகில் திருவாளர்கள் விஜயன், இளையபெருமாள், முத்து முனியாண்டி, ஆறுமுகம் ஆகியோர் இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்றுள்ளனர். இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் தங்களது படகு பழுதடைந்ததால் முத்து முனியாண்டி என்பவர் மட்டும் வேறு ஒரு படகில் இராமேஸ்வரம் திரும்பி வந்து, மறுநாள் 30–8–2001 அன்று காலையில் மேற்படி படகின் உரிமையாளர் திரு. சண்முகநாதன் மற்றும் சரவணன் மற்றும் ஒரு மீனவ கூலித் தொழிலாளி ஆகியோருடன் R.M.S. 2139 என்ற மோட்டார் படகில், பழுதடைந்த படகினைக் கொண்டு வருவதற்காக கடலுக்குள் சென்றனர். பழுதடைந்த படகுடன் 30–8–2001 அன்று இரண்டு மோட்டார் படகுகளும் 7 நபர்களுடன் நடுத்தீவு என்ற இடத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு சுடப்பட்டனர். இதில் விஜயன், இளையபெருமாள், ஆறுமுகம், சண்முகநாதன், சரவணன் மற்றும் முத்து முனியாண்டி ஆகிய ஆறு பேரும் குண்டுக் காயங்களுடன் இராமேஸ்வரம் திரும்பினர். இவர்கள் அனைவரும் இராமேஸ்வரம் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சரவணன் மற்றும் முத்து முனியாண்டி ஆகிய இருவரும் பின்னர் இராமநாதபுரம் பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டனர். இது தொடர்பாக இராமேஸ்வரம் கோவில் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு எண் 307, 324 read with Indian Arms Act பிரிவு 25(1)–ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு எண் 81/2001. இதில் பழுதடைந்த படகு RMS 1254 கடலில் மூழ்கிவிட்டது. புதுக்கோட்டை மாவட்டம் அம்மாபட்டினத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி இராமேஸ்வரம் வந்தடைந்துள்ளார். அவர்கள் சென்ற படகு காணப்படவில்லை. ஆகையால், அதுகுறித்து முழுமையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## 4. கவன ஈர்ப்பு

### பொறியியற் கல்லூரிகளில் காலியிடங்கள் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொறியியற் கல்லூரிகளில் காலியிடங்கள் நிறைய உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போதுள்ள கல்லூரிகளில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் போதும். கேள்வி கேட்ட பிறகு பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழ்நாட்டில் 2000–2001 ஆம் கல்வியாண்டிற்கான பொறியியற் பட்டப்படிப்பு தொடர்பாக திருச்சி, மண்டலப் பொறியியற் கல்லூரி மற்றும் சாலைப் போக்குவரத்து நிறுவனக் கல்லூரி உட்பட அரசு மற்றும் உதவிபெறும் கல்லூரிகள் 11 மற்றும் 142 சுயநிதி பொறியியற் கல்லூரிகள் உட்பட மொத்தம் 153 பொறியியற் கல்லூரிகள் இயங்கி வந்துள்ளன. அவ்வாறு தமிழ்நாட்டில் மொத்தம் 43,552 பொறியியற் பட்டப்படிப்பிற்கான இருக்கைகள் மாத்திரமே 2000–2001 ஆம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு இருந்தன. அவற்றில் 40,003 இருக்கைகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டு மொத்தம் 3,549 காலியிடங்கள் சென்ற கல்வியாண்டில் ஏற்பட்டன.

நடப்புக் கல்வியாண்டிற்கு (2001–2002) 66 புதிய சுயநிதி பொறியியற் கல்லூரிகள் கூடுதலாக ஆரம்பிக்க அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதைத்தவிர, பாரதிதாசன் பல்கலைக்கழகம் நடத்தும் பொறியியற் கல்லூரியும் நடப்பு ஆண்டு ஒற்றைச் சாளர முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, மொத்தம் 222 பொறியியற் கல்லூரிகள் (நான்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உட்பட) ஒற்றைச் சாளர முறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அதன் காரணமாக தமிழ்நாட்டில் மொத்தம் 62,944 இருக்கைகள் இருந்தன. மொத்தம் 57,187 இருக்கைகள் ஒற்றைச் சாளர முறையின்கீழ் கொண்டுவரப்பட்டு, அவற்றில் 40,368 இருக்கைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மொத்தம் 16,819 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாகவுள்ளன. கடந்த ஆண்டில் உள்ள கல்லூரிகளில், பாடப் பிரிவுகளில் இருக்கைகள் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டதாலும், புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டதாலும், மேலும் நடப்புக் கல்வியாண்டில் 11 சுயநிதி பொறியியற் கல்லூரிகளுக்கு அரசு தடையின்மைச் சான்று வழங்கியதில் 8 கல்லூரிகள் உட்பட அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு 66 சுயநிதி பொறியியற் கல்லூரிகளுக்கு திடீரென அனுமதி வழங்கிவிட்டதாலும், மேற்கண்ட காலியிடங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இதனை Lapsed Seat –ஆகக் கருதலாம். அரசு பொறியியற் கல்லூரிகளில் காலியிடங்கள் இல்லை. சுயநிதி பொறியியற் கல்லூரிகளில்தான் காலியிடங்கள் உள்ளன. இதனால் அரசுக்கு இழப்பு ஏதும் இல்லை. எனினும் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கைக்கு அதிகத் தேவையிருப்பதால் இக்காலியிடங்களை கல்லூரி நிருவாகங்கள் பட்டயப் படிப்பு முடித்த மாணவர்களைக் கொண்டு நேரடி இரண்டாமாண்டு சேர்க்கையின் மூலம் வரும் ஆண்டில் நிரப்பிக்கொள்ள வாய்ப்புள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கின்ற விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இதிலே, இப்போது தமிழகத்திலே மொத்தம் 222 பொறியியற் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்றும், அந்தப் பொறியியற் கல்லூரிகளில் 62,944 இருக்கைகள் இப்போது பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு உள்ளது என்றும், அதிலே 16,819 இருக்கைகள் காலியாக உள்ளன என்றும் விவரத்தை அளித்திருக்கிறார்கள். இதிலே ஒற்றைச் சாளர முறையிலே ஏற்கெனவே கவுன்சலிங்குக்கு வந்து அவர்கள் 5,000 ரூபாய் கட்டி, முதலிலே D.D. கொடுத்து இடத்தை வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஆனால், போன மாணவர்கள் சில பேர் அந்தக் கல்லூரிகளிலே போய்ச் சேராமலும்





இருக்கிறார்கள். அதையும் சேர்த்துப் பார்த்தால், தமிழகத்திலே கிட்டத்தட்ட 20,000–க்கும் மேல் இன்று மாணவர்கள் இடங்கள் கல்லூரிகளிலே காலியாக இருக்கின்றன. 222 கல்லூரிகள் இப்போது தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், முதலிலே சென்ற ஆண்டைப் பார்த்தால், அப்போது 142 பொறியியற் கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகளாகவும், 11 கல்லூரிகள் அரசு சார்பிலும் நடத்தப்பட்டு வந்தன. ஆனால், இப்போது இந்த ஆண்டு மட்டும் 66 கல்லூரிகளுக்கு அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு, கல்லூரி தொடங்குவதற்கான அனுமதியை அளித்திருக்கிறது. தொடர்ந்து இப்படி தமிழகத்திலே அதிகமான கல்லூரிகள் வருகிறபோது, நிறையக் காலியிடங்கள் தமிழகத்திலே உருவாகிவிடுகிறது. அதைவிட ஓர் அபாயம், நாளைக்கு இவ்வளவு பேரும் படித்து முடித்துவிட்டு – அவர்கள் சொந்தமாக வேலை பார்த்துக்கொண்டால் பரவாயில்லை – அரசிடம் வேலை கேட்க ஆரம்பித்தால், வேலையில்லாத் திண்டாட்டம் வேறு அதிகமாகி தமிழகத்திலே கூடுதலாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், முன்பெல்லாம் தமிழகத்திலேயிருந்து, தமிழக அரசு ஆட்சேபணையில்லாச் சான்று – N.O.C. – கொடுத்தால்தான் அந்த அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு அந்தக் கல்லூரியை தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே தொடங்குவதற்கு அனுமதியை அளிக்கும். இப்போது அந்த நிலை இருக்கிறதா, இல்லையா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் விளக்க வேண்டும். காரணம், இந்த அரசேகூட 11 சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கு தடையின்மைச் சான்று வழங்கியிருப்பதாக இந்த விவர அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதிலே இன்னொரு பகுதியிலே சொல்கிறபோது, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு 66 சுயநிதி பொறியியற் கல்லூரிகளுக்கு...

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், கேள்வியை மட்டுந்தான் கேட்க வேண்டும். அதுதான் மரபு.

**திரு. சி. ஞானசேகரன்:** அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு சுயநிதி பொறியியற் கல்லூரிகளுக்கு திடீரென அனுமதி வழங்கிவிட்டார்கள் என்ற ஒரு கருத்தை இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு என்பது தடையின்மைச் சான்று இல்லாமல் அனுமதியை வழங்கியிருக்கிறார்களா? இந்த அரசே 11 கல்லூரிகளுக்கு அனுமதி

அளித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இனி வரக்கூடிய காலங்களிலேயாவது நம்முடைய தமிழக அரசு அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவிடம் எடுத்துச் சொல்லி, இனி தமிழக அரசு ஆட்சேபணையின்மைச் சான்று –N.O.C.–கொடுத்தால்தான் கல்லூரி தொடங்க முடியும் என்கிற ஒரு நிலையை இந்த அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள், போதும். அமைச்சர் இதற்கு விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் தமிழகத்தில் எவ்வாறு சுயநிதி பொறியியற் கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன என்ற விவரத்தையும், அப்படியிருக்கையில் எவ்வாறு மத்தியிலே, டெல்லியிலே இருக்கும் All India Council for Technical Education இவ்வளவு கல்லூரிகளுக்கு அனுமதி அளித்தது என்றும், அதனால் சுமார் 20,000 மாணவர்களுடைய இருக்கைகளானது இப்போது அந்தக் கல்லூரிகளில் காலியாக இருக்கின்றன, அதனால் பிரச்சினை வந்திருப்பதாகச் சொன்னார்கள். பொதுவாக, பொறியியற் கல்லூரியைத் தொடங்குவதிலே தமிழகத்தில் பலர் ஆர்வம் காட்டுகிறார்கள். நீங்கள் சொன்னதுபோல, 11 கல்லூரிகளுக்கு இந்த அரசு அனுமதி ஏதும் தரவில்லை. முந்தைய அரசு தந்தது. அதில் எட்டுதான் ஆரம்பித்து இருப்பதாகவும், அதற்கு மேற்கொண்டு மொத்தம் 66 புதிய கல்லூரிகள் இந்த ஆண்டிலே வந்திருக்கிறது என்றுதான் அறிக்கையிலே சொல்லபபட்டிருக்கிறது. இந்த ஆண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு No objection Certificate யாருக்கும் தரவில்லை. காரணம், நீங்கள் சொன்னதுபோல சென்ற ஆண்டே காலி இருக்கைகள் இருந்ததன் காரணமாக, அது தேவையா என்று ஆராய்ந்து கொண்டிருந்தோம். அதற்குள்ளாக அவசர அவசரமாக, நீங்கள் சொன்னதுபோல மத்தியிலே இருக்கும் All India Council for Technical Education 66 கல்லூரிகளுக்கு அனுமதி அளித்து, இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகள் தொடரப்பட்டு, உயர் நீதிமன்றமும், இந்தக் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் தர வேண்டுமென்ற தோரணையில் உத்தரவிட்டிருக்கிறார்கள். பொதுவாக, ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், தமிழகத்திற்கு இந்தக் கல்லூரிகள் தேவையா, எந்தளவு தேவை என்று ஆராய வேண்டியது அவசியம்தான். இப்போது மத்தியில்



இருக்கும் All India Council அங்கே வருகிற தலைவர்களுக்கு ஏற்றாற்போல முடிவெடுக்கிறது. Chairman என்று ஒருவர் இருக்கிறார். இப்போது Acting Chairman–தான் இருக்கிறார். நிரந்தர Chairman கிடையாது. முன்பு இருந்தவர்கள் எல்லாம், மாநில அரசைக் கேட்டு, No Objection Certificate வாங்கிய பிறகுதான் அனுமதி தந்தார்கள். அப்படியொரு ஐந்து ஆண்டு காலம் இருந்து கொண்டிருந்தது. அதற்கு முன்பு பார்த்தீர்களென்றால், அப்படிக் கிடையாது. இதற்குக் காரணம் All India Council for Technical Education Act வந்திருக்கிறது. 1987–லிருந்து இந்த Act இருக்கிறது. 1986–ல் அந்த Act வந்தது. நான் பாராளுமன்ற துணை சபாநாயகராக இருக்கும்போதுதான், அந்த சட்ட வடிவம் அந்த அவையிலே, பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டது. முன்பு பாரதப் பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்கள் அப்போது மனித வள மேம்பாட்டு அமைச்சராக இருந்தார். அவர்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இந்தியா முழுவதும் ஒரு நல்ல தொழிற் கல்வியைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது – All India Council for Technical Education – அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எதிர்த்தார்கள். ஏனென்றால், மாநில அரசினுடைய அதிகாரத்தில் நாம் தலையிடுகிறோம். All India Council–க்கு இவ்வளவு அதிகாரம் கொடுத்தோம் என்றால், எதிர்காலத்தில் மாநில அரசுக்கு எந்தவிதமான மதிப்பும் இல்லாமல் போய்விடும் என்று குரல் கொடுத்தார்கள். ஆனால், அந்த நேரத்திலே நரசிம்மராவ் அவர்கள் சொன்னது, நாங்கள் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம், அதை அப்படியே நாங்கள் செயல்படுத்த மாட்டோம். நாங்கள் மாநில அரசை அணுகித்தான், அவர்கள் ஒப்புதல் பெற்ற பிறகுதான் இதைச் செயல்படுத்துவோம் என்று சொன்னார்கள். நான் அவையை நடத்திக் கொண்டிருந்தவன். அதனால் நடந்த நிகழ்ச்சிகள் எனக்கு நினைப்பிலே இருக்கின்றன. நான் இருந்தபோது, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

*முற்பகல் 11–05*

அதற்குப் பிறகு, பல சூழ்நிலைகளின் காரணமாக ஒவ்வொருவரும் அந்த Act–ஐப் பற்றி கோர்ட்டுக்குச் சென்று, அவர்கள் எல்லாம் விளக்கம் கேட்டு, அதற்குப் பிறகு பல்வேறு தீர்ப்புகள் தரப்பட்டிருக்கின்றன; அந்தத் தீர்ப்பின்படி, பொதுவாக All India Council–க்குத்தான் இந்தக் கல்லூரிகளைத் தருகின்ற முழு அதிகாரம் இருக்கிறது. அவர்கள்

தேவைப்பட்டால் மாநில அரசை அணுகலாம் என்று ஒரு விளக்கத்தை நீதிமன்றங்கள் தந்திருக்கின்றன. ஆனால், நடைமுறையில் பார்த்தீர்கள் என்றால், வருகின்றவர்கள், நான் முன்பு சொன்னதைப்போல், அவர்களுக்கு ஏற்றாற்போல் முடிவை எடுத்துக்கொள்கிறார்கள். வேண்டுமென்றால் கேட்கிறார்கள். வேண்டாம் என்றால், உங்களுக்கு அதிகாரம் இல்லை, நாங்கள் தருகிறோம் என்று சொல்லித் தருகிறார்கள். மாநிலத்திலே, தமிழகத்திலே இந்த அளவிற்குத் தேவையா, மாநிலத்திலே இவ்வளவு கல்லூரிகள் தொடங்கலாமா, இவ்வளவு மாணவர்களை அனுமதிக்கலாமா என்ற கருத்தை ஆராயாமலேயே அவர்கள் தந்ததன் காரணமாகத்தான் இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, நீங்கள் சொன்னதைப் போல் மாநில அரசு இதைப் பற்றியெல்லாம் All India Council for Technical Education–க்குக் கடிதம் எழுதி, எங்களிடம் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும், நீங்கள் இப்படியெல்லாம் தருவது சரியில்லை என்றும் சொல்லியிருக்கிறோம். அதையே, கர்நாடக மாநிலத்திலே பார்த்தீர்கள் என்றால், அங்கு மாநில அரசைக் கேட்கிறார்கள். ஆந்திராவைப் பார்த்தீர்கள் என்றால் அங்கும் கேட்கின்றார்கள். தமிழகத்திலேயும் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்; சென்ற 5 ஆண்டு காலம். இப்போது கேட்பதில்லை. நான் முன்புகூடச் சொன்னேன். இதை மீறி நாங்கள் ஏதாவது சொல்லும்போது, ஏதோ மத்திய அரசினுடைய அதிகாரத்திலே நாங்கள் தலையிடுகிறோம் என்ற அந்தப் பொருள்படும்படி அதனுடைய தற்காலிகத் தலைவராக இருப்பவர் பேசினார்.

சென்னைக்கு வந்தவர் பேட்டி அளித்திருக்கிறார். அப்போது சொல்லும்போதுகூட, கல்லூரிகளை எல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும், இதிலே சில முறைகேடுகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன என்று சொல்லும்போதுகூட, ஏன் மாநில அரசுக்கு போலீஸ் இருக்கிறது, மாநில அரசுக்கு வருவாய்த் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள், இவர்களை வைத்தே செய்யலாம் என்று சொன்னார்கள். நான்கூட அப்போது பேசும்போது சொன்னேன். அப்படிச் செய்ய ஆரம்பித்தால், போலீஸ் துறையை வைத்து செய்வது என்றால் சரியாக வராது, எனவே, நாம் கடைசியாகத் தேவைப்பட்டால்தான் பயன்படுத்திக்கொள்ளலாமே யொழிய, தேவையில்லாத நேரத்திலே போலீஸைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது என்று சொன்னோம். ஆகவே, உண்மை நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் மத்தியிலே இருக்கும் All India Council for Technical Education அவர்கள் விருப்பம் போல் அனுமதி தந்ததன் காரணமாக இந்த நிலைமை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால்,





அவர்கள் சொல்வது, அகில இந்திய அளவிலே நாங்கள் கருத்தைக் கொண்டு, இவ்வளவு கல்லூரிகள் தந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். பீகாரிலே இருந்து மாணவர்கள்கூட இங்கே வந்து படிக்கலாம் என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் சொல்கிறார்கள். வேண்டுமென்றே தாங்கள் செய்த நடவடிக்கையைத் தக்க வைத்துக்கொள்வதற்காக, அதற்குப் பக்கபலமாக இந்தக் கருத்துகளைச் சொல்கிறார்களேயொழிய, இங்கே படிக்கின்றவர்களில் தமிழக மாணவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள், இங்கே நாம் செய்வது எல்லாம், இட ஒதுக்கீடு எல்லாம், தமிழகத்தினுடைய மாணவர்களுக்கு ஏற்றாற்போல் செய்து கொண்டிருக்கிறோம். அதுதான் உண்மை நிலைமை. இருந்தாலும், அகில இந்திய அளவிலே மாணவர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றோம். அதற்குத் தேர்வும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், நீங்கள் சொன்னதைப் போல் சுமார் 20,000 இடங்கள் நாங்கள் தந்திருக்கிறோம். அதற்கு மேலே, நீங்கள் சொன்னதைப்போல் பல மாணவர்கள் சேராமலே சென்று விடுகிறார்கள். இத்தகைய நிலைமை தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது. இதனால் ஒரு பதற்ற நிலைமை இருக்கிறது என்று சொல்ல முடியாது. காரணம், மாணவர்களைப் பொறுத்தவரையில் வசதி பெற்றிருக்கிறார்கள். வேண்டிய கல்லூரியில் சேர அவர்களுக்கு விருப்பம் – choice – இருக்கிறது. ஆனால், யாருக்குப் பதற்றம் என்றால், கல்லூரியை நடத்துகிறவர்களுக்கு வேண்டுமானால் பதற்றம் இருக்கலாம். காலியாக இடங்கள் இருக்கின்றன; பணம் வராமல் இருக்கிறதே என்று அந்த எண்ணம் இருக்கலாமேயொழிய, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பெற்றோர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் எந்தப் பதற்றமும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. அப்படி ஏதாவது, யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், அவற்றை நீங்கள் சொன்னால் அந்தக் கருத்துகளை வைத்து நாங்கள் மத்தியிலே உள்ள All India Council for Technical Education–க்கு அந்தக் கருத்துகளை எடுத்துக்கூறி ஆவன செய்வோம் என்று உறுதி தருகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே கவன ஈர்ப்பு கொடுத்தவர்தான் விளக்கம் கேட்கலாம். (குறுக்கீடு) மற்றவர்கள் கேட்க முடியாது. திரு. ஞானசேகரன், உங்களுக்குத்தான் சொல்கிறேன், போதும். நீங்கள் ஒரு சிறப்பு சொற்பொழிவே ஆற்றி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கமும் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) கேள்விதான் கேட்கலாம். (குறுக்கீடு) சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது, கல்லூரி நடத்துபவர்களுக்குப் பதற்றம் இருக்கலாம் என்று கூறினார். இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்கிறபோது, ஏனென்றால் அவர்கள் முதலீடு செய்யும்போது, அவர்களுக்கும் பதற்றம் இருக்கத்தான் செய்யும். அப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க வேண்டுமென்றால், கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலே குறைந்த மதிப்பெண் 50 என்று வைத்திருக்கிறார்கள். அதாவது, Maths, Physics, Chemistry–லே 60 மதிப்பெண்கள் என்று நாம் வைத்திருக்கிறோம். அந்த மாநிலங்களிலே 50 என்று வைத்திருக்கிறார்கள். அந்த 50 மதிப்பெண்களை எடுத்தவர்கள் இந்தக் கல்லூரியிலே சேரலாம் என்கிற ஒரு விதிமுறையை நீங்கள் மாற்றியமைத்தீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக இந்தக் காலியிடங்களெல்லாம்கூட நிரப்பப்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதையாவது இந்த அரசு செய்யுமா? எதிர்காலத்திலே இந்த எஞ்சினீயரிங் graduates–க்கு எல்லாம் வேலைவாய்ப்பைப்பற்றி இந்த அரசு என்ன திட்டத்தை வைத்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**திரு. ஜெ. அன்பழகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 55–லே கேட்கக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நான் பதில் சொல்கிறேன். இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் விளக்கம் மட்டும் சொல்லுங்கள், போதும்.





**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது, பொறியியல் பட்டம் பெறுகின்ற மாணவர்களுக்கென்று அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசானது தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாகக் கொண்டு வருவதற்குத் திட்டங்கள் வைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் குறிப்பாக, அதிகத் தொழிற்சாலைகளை உருவாக்கி இதுபோன்ற பட்டம் படித்தவர்களுக்கெல்லாம், அதுவும் குறிப்பாக பொறியியல் கல்லூரிகளில் படித்த மாணவர்களுக்கெல்லாம் வேலை தருவதற்காக இந்த அரசு திட்டத்தை வைத்திருக்கிறது. இதைத்தான் இப்போது மத்தியிலே இருக்கிற அரசு, இந்தியாவிலுள்ள இதுபோன்ற நல்ல படித்த, விஞ்ஞான நுட்பம் பொருந்திய, பொறியியல் கல்லூரிகளிலே படித்துள்ள மனித வள்ம் தேவை என்பதை வருகின்ற 10–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்த வேண்டுமென்று அறிக்கை தந்திருக்கின்றார்கள். Super power–ஆக வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதைக் கருத்திற்கொண்டுதான் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் இத்தகைய கல்லூரிகளையெல்லாம் தொடங்குவதற்கு அனுமதி தந்தார்கள். ஆகவே, இந்த மாணவர்களுக்கு எதிர்காலம் நன்றாக இருக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. நாங்கள் அந்தத் திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்தவிருக்கின்றோம்.

அடுத்ததாக, நீங்கள் மார்க்கைப் பற்றிச் சொன்னீர்கள். நீங்கள் மார்க்கைப் பற்றிச் சொல்ல வேண்டிய காரணம், கர்நாடகத்திலே ஒரு மாதிரி இருந்தாலும், ஆந்திராவிலே எப்படி வைத்திருக்கிறார்கள் என்றால், 50 சதவிகிதம் மார்க் இருந்தால் ஒரு மாணவன் நுழைவுத் தேர்வு எழுதலாம். அதற்காக அதுவே qualification என்று சொல்ல முடியாது. 95% மார்க் வாங்கிய பையன் entrance exam–லே மார்க் வாங்காமல் போய், 50% மார்க் வாங்கியவன் நல்ல மார்க் வாங்கினால் அந்தப் பையனுக்குத்தான் கிடைக்கும்; அப்படி அந்தத் திட்டம், அந்த நடைமுறை இருக்கிறது. இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில் இதுபோன்ற நிலையை பல பேர்கள், பல கட்சிகள் எதிர்த்திருக்கின்றன. காரணம், நீங்கள் முழுவதும் அந்த நுழைவுத் தேர்வை மட்டும் வைத்துச் செயல்படுத்தினால் கிராமப்புற மாணவர்களுக்கு இதுபோன்ற தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைக்காது என்ற ஒரு கருத்தை எல்லோரும் சொல்லியிருக்கின்றார்கள். All India Council–லே இரண்டு விதமாக வைத்திருக்கின்றார்கள். ஒன்று 50% வைத்து நீங்கள் கொண்டு வந்தால், முழுவதும் entrance தேர்வை நம்பித்தான் அந்தத் தேர்வை நடத்த

வேண்டும். அங்கே நம்முடைய +2 மார்க் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. நுழைவுத் தேர்வுக்கு 50% இருந்தால் போதும், யாரும் எழுதலாம் என்று ஒரு முறை இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் விரும்புகின்றாரா? அப்படிச் செய்யும்போது உங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற கிராமப்புறத்திலேயுள்ள ஏழை மாணவர்களுக்கு இடம் கிடைக்குமா? அதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது ஒன்று.

இன்னொன்று, A.I.C.T.E.–லே இன்னொன்று வைத்திருப்பது என்னவென்றால், 60 சதவிகிதம் என்பது. நீங்கள் 60 சதவிகிதம் வைக்கும்போது +2 மார்க்கை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, இரண்டு முறைகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு முறைக்குச் செல்ல வேண்டும். நம் தமிழகத்தில் இரண்டு முறைகளையும் வைத்திருக்கின்றோம். Entrance Examination–க்கு 100 மார்க், +2–விலே 200 மார்க் என்று வைத்திருக்கிறோம். A.I.C.T.E.–லே அப்படி வைக்கும்போது 60 சதவிகிதமாவது இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, 50 சதவிகிதத்திற்குத் தந்துவிட முடியாது. ஆனால் தமிழகத்தில் நாம் 60 சதவிகிதத்தை வைத்திருக்கின்றோம். இந்தக் கருத்தையெல்லாம் நான் புரட்சித் தலைவி அவர்களிடம் சொல்லியிருக்கின்றேன். நீங்கள் சொன்னதைப்போல இத்தகைய ஒரு மாறுதல் வேண்டுமென்றால், புரட்சித் தலைவி அவர்கள்தான் அந்த மாறுதலைச் செய்ய வேண்டும். நீங்கள் சொன்ன கருத்துக்குச் சொல்கின்றேன். ஆனால், பொதுவாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், +2 மார்க்கை வைத்து நாம் நுழைவுத் தேர்வுகளைச் செய்வதன் காரணமாக, நாம் 50 சதவிகிதத்தை முழுவதுமாக எடுத்துக்கொள்ள முடியாது. அதை எடுத்துக்கொண்டால், நம்முடைய கிராமப்புற மாணவ, மாணவிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவேதான், +2 மார்க்கை வைத்து செயல்படுத்தும்போது குறைந்தது 60 சதவிகிதமாக இருக்க வேண்டுமே தவிர, அதைக் குறைத்து நாம் செய்ய முடியாது. இதுதான் உண்மையான நிலைமை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2001...

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, தனியாகக் கேளுங்கள். திரு. மணி அவர்களே, அதைத் தனியாகக் கேளுங்கள்.





**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, வருகிற 5 ஆம் தேதி, பாதிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதாவது இது கவன ஈர்ப்பு. கவன ஈர்ப்பிலே இப்படி விளக்கமாக எல்லாம் பேசக் கூடாது. தனியாகப் பேசிக்கொள்ளலாம். அப்புறம் பேசிக்கொள்ளலாம். விதிமுறைகளில் இடமில்லை. (குறுக்கீடு) திரு. மணி அவர்களே, விதிமுறைகளிலே இடம் இல்லை. அது வேறொன்றும் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** நான் 55–லே கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதைத் தனியாகக் கேளுங்கள். நாளைக்குக் கேளுங்கள்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 37 – சுற்றுச்சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 37– மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.3,83,43,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 746, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதியில் உள்ள தோல் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் ஏற்படும் சுகாதாரக் கேட்டைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மீ.அ. வைதியலிங்கம்] [2001 செப்டம்பர் 4

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 683, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தேங்கி வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை போன்ற பகுதிகள் மாசடைவதை முழுமையாகத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 611, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2589, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3273, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.



2001 செப்டம்பர் 4] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 1832, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2273, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1913, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2637, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2987, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3228, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2606, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 885, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2009, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூவிருந்தவல்லி தாலுகாவில் சென்னீர்குப்பம் ஊராட்சியில் திரு நகர் பகுதியில் இரவில் எரிக்கப்படும் இரசாயனப் பொருட்களால் காற்றும் நீரும் மாசுபட்டு வேளாண்மை பாதிக்கப்படுவதையும், பயிர்கள் கருகிவிடுவதையும் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2014, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2967, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1462, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,83,43,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"*

## (ஆ) கோரிக்கை எண் 44 – காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44– காட்டு வளத் துறை, மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.97,57,97,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1405, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள வடகாடு ஊராட்சிக்குட்பட்ட பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக் காட்டிற்கு சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டு வளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 669, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் சந்தன மரக் காடுகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2333, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 605, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுமக்கள் நலனுக்காக வனத் துறையின் நிலத்தில் சாலைகள் போடுவதற்கு வனத் துறையினர் அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2538, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3279, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1837, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1918, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3437, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3246, திரு. மு. கார்த்தி.

[2001 செப்டம்பர் 4

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2599, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காடுகளில் மரங்களை வெட்டுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 892, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2056, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கறப்பட்டு தொகுதி, புலிக்குடி வனம், எச்சூர், அஞ்சூர், சாலூர், திருமணி காடுகளில் புதிய மரங்கள் நட வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.97,57,97,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2001 செப்டம்பர் 4]

**(இ) கோரிக்கை எண் 46 – செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46– செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியியில், மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.24,78,70,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2067, திரு. து. நெப்போலியன்.

*முற்பகல் 11–20*

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திரைப்படம் எடுக்கும் தயாரிப்பாளர்களுக்கு மத்திய அரசு வங்கிகள் மூலம் முதலீட்டுப் பணம் தர ஒப்புதல் தந்து நடைமுறைப்படுத்தவுள்ளதால் அதில் மாநில அரசின் பங்கு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 926, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் திரைப்படக் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3527, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2545, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் சிறந்த தமிழ்ப்பட நடிகருக்கு வழங்கும் விருதை மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பெயரால் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3280, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1839, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3020, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களுக்கு எல்லை வரையறுக்கப்பட்ட உரிமம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3250, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 894, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,78,70,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

### (ஈ) கோரிக்கை எண் 58 – காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 58 – காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.126,78,53,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 733, திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யம்–கோடியக்காடு வனப் பகுதியை பாதுகாக்க முள்வேலி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1551, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களின் தரிசு நிலப் பகுதியை காடாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2104, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2596, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1846, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1923, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3447, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2985, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3136, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 902, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,78,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், காட்டுவளத் துறை, செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. து. நெப்போலியன். இது உங்களுக்கு கன்னிப் பேச்சு. புது நெல்லு புது நாத்து. (சிரிப்பு)

@ 247முதல் 342 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, III, மற்றும் IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.



***திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், எத்தனையோ அரசியல் மாமேதைகளைக் கண்ட இந்த மாமன்றத்தில், என்னையும் ஓர் உறுப்பினராக அமரச் செய்த உலகெங்கும் வாழும் தமிழர்களுடைய நெஞ்சில் குடிகொண்டிருக்கும் ஒப்பற்ற தலைவர், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி.

நான் போட்டியிட்ட வில்லிவாக்கம் தொகுதியில் இருந்து என்னை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும், கழகக் கண்மணிகளுக்கும், நண்பர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சபையில் எனது கன்னிப் பேச்சைப் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்பு சுற்றுச்சூழல், வனத் துறை, செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு போன்ற மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் செய்வது குறித்ததாகும். ஒரு மானியத்தின்மீது விவாதம் செய்வதற்கு குறைந்தது நிமிடங்கள் என்றாலும் நான்கு மானியங்களின்மீது விவாதம் செய்வதற்கு 20 நிமிடங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் எனக்குக் கொடுத்தாக வேண்டும். அது மட்டுமல்லாமல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், காட்டுவளம், சுற்றுச்சூழல் எல்லாம் உங்களுக்குச் சம்பந்தம் இல்லாதவை. திரைப்படம்தான் உங்களுக்கு முக்கியம்.

**திரு. து. நெப்போலியன்:** அது மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியும் பெரிசு, என்னுடைய துறையும் பெரிசு. மேலும், நான் கன்னிப் பேச்சுப் பேசுகிறேன் என்பதால் இந்த மாமன்றத்தின் மரபைக் கருத்தில்கொண்டு, குறுக்கீடு செய்யாமல் இருக்கப்போகும் இந்த மாமன்றத்தின் அத்தனை உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

1962–ல் தேனி தொகுதியில் திரைப்படத் துறையிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட்டு இந்த மாமன்றத்திற்கு சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நடிகர், இலட்சிய நடிகர் திரு. எஸ்.எஸ். இராஜேந்திரன் அவர்கள். 1967–ல் 4–வது சட்டப் பேரவைத் தேர்தலிலும், 1971–ல் 5–வது சட்டப் பேரவைத் தேர்தலிலும் பரங்கிமலைத் தொகுதியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட்டு சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நடிகர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். 30 ஆண்டுகளுக்குப் பிறகு 3–வது நடிகராக 2001–ல் வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட்டு சட்டப் பேரவை உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், முதலமைச்சர் அவர்களும் உங்கள் துறையிலிருந்து வந்தவர்தான்.

**திரு. து. நெப்போலியன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வந்தவர்களை நான் சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட்டு இந்தச் சபைக்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு நான் வந்திருக்கிறேன் என்பதை சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், டி. ராஜேந்தரை மறந்துவிட்டீர்களே!

**திரு. து. நெப்போலியன்:** அவரைப்பற்றி சொல்ல வருகிறேன். 1989–ல் காரைக்குடி தொகுதியிலிருந்து இயக்குநர் இராமநாராயணன் அவர்களும், 1996–ல் பூங்கா நகர் தொகுதியிலிருந்து இயக்குநரும், நடிகருமான டி. ராஜேந்தர் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத்தான் போட்டியிட்டு, வெற்றி பெற்று இந்தச் சபையில் இடம் பெற்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1967–ல் தமிழக முதல்வராக அறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றார்கள். 1969–ல் தமிழக முதல்வராக முத்தமிழ் அறிஞர் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றார்கள். மீண்டும் 1971–லும், 1989–லும், 1996–லும் தமிழக முதல்வராக 4 முறை பொறுப்பேற்று கிட்டத்தட்ட 14 ஆண்டு காலம் தமிழகத்தை தலைவர்



அவர்கள் ஆட்சி செய்தார்கள். அவருக்குப் பின்னால், மறைந்த நடிகர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் 1977–லும், 1980–லும், 1984–லும் தமிழக முதல்வராக 3 முறை பொறுப்பேற்று கிட்டத்தட்ட 10 ஆண்டு காலம் ஆட்சி செய்தார்கள். 1987–ல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு, அவருடைய துணைவியார் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் சிறிது காலம் தமிழகத்தின் முதல்வராக ஆட்சி செய்தார்கள்.

1991 ஆம் வருடம் அப்போதைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவம் தமிழகத்தில் நடைபெற்றதால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இன்றைய முதல்வர் 1991–ல் முதல் முதலாக தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். இவ்வாறு கடந்த 35 வருட காலமாக தமிழகத்தை ஆட்சி புரிந்த அத்துணை முதல்வர்களும் திரைப்படத் துறையைச் சார்ந்தவர்கள் என்பதில் தமிழ்த் திரைப்பட உலகமே பெருமைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், திரைப்பட உலகத்திற்கு என்று எந்தவிதமான சலுகைகளோ, மேம்பாட்டு நலத் திட்டங்களோ, வரிச் சலுகைகளோ, திரைப்படங்களைப் பற்றியோ, திரைப்படம் என்ற வார்த்தையோ அல்லது சினிமா என்ற வார்த்தையோ இந்த அரசின் நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லாதது கண்டு நாங்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினராகவும், திரையுலகிலே பல ஆண்டு காலம் பணிபுரிந்தவருமான இன்றைய முதல்வர் திரைப்படத் துறையை நிதிநிலை அறிக்கையில் புறக்கணித்திருப்பது திரைப்படத் துறையைச் சார்ந்த அனைத்துத் தரப்பினருக்கும் மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் துணைத் தலைவராகவும், இன்றைக்கும் திரைப்படத் துறையில் நடிகராகவும் பணியாற்றிவரும் நான் வில்லிவாக்கம் தொகுதி மக்களின் பிரதிநிதியாகவும், திரைப்படத் துறையின் பிரதிநிதியாகவும் என் தொகுதிக்கு உட்பட்ட மக்களின் பிரச்சினைகளையும், அத்தியாவசியத் தேவைகளையும், நான் சார்ந்துள்ள திரைப்படத் துறையின் கஷ்ட நஷ்டங்களையும், கோரிக்கைகளையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்து அதை நிறைவேற்றித்தர வழிவகை செய்யுமாறு இந்த அரசாங்கத்திடம் நான் கேட்பதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த உலகத்தில் சினிமாத் துறையில் ஹாலிவுட்டுக்குப் பிறகு இந்தியா இரண்டாவது இடமாகவும், இந்தியாவில் தமிழகம் இரண்டாவது

இடமாகவும் உள்ளது. அப்படி சிறப்பாகச் செயல்படும் திரைப்படத் துறைக்கு என்று அரசாங்கம் சார்பாக நிர்ணயம் செய்து அத்தனை வசதிகளையும் உள்ளடக்கிய திரைப்பட நகரம் ஒன்று 1995 ஆம் ஆண்டு உங்களது ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டது. அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். ஆனால், எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட கட்சியை நடத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரை வைக்காமல், அவர்களது பெயரை வைத்துக்கொண்டார்கள். ஆனால், 1996–ல் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொள்கை ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் 10 ஆண்டு காலத்திற்கு மேற்பட்டு நெருங்கிய நண்பராகத் திகழ்ந்த திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை வைத்து, எப்போதும் தமிழக மக்களிடையே எம்.ஜி.ஆரின் புகழ் ஆண்டாண்டு காலம் நீடித்து இருக்க வேண்டுமென்ற வகையில் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்று பெயர் சூட்டினார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், பதிலுரையின்போது இது குறித்து சொல்லலாம். இது கன்னிப் பேச்சு.

**திரு. து. நெப்போலியன்:** இப்போது தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்ற பெயரில் திரைப்படம் என்ற வார்த்தையை நீக்கிவிட்டு எம்.ஜி.ஆர். அறிவு நகர் என்று பெயர் மாற்றம் செய்துள்ளீர்கள். இந்த உலகத்திற்கு உங்களை அடையாளம் காட்டியது திரைப்படத் துறைதானே? அப்படியிருக்கும்போது, எதற்காக இந்தப் பெயர் மாற்றம்? நிதிநிலை அறிக்கையிலும் 'திரைப்பட' என்ற வார்த்தை புறக்கணிப்பு; பெயர் மாற்றத்திலும் 'திரைப்பட' என்ற வார்த்தை புறக்கணிப்பா? 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' என்ற பெயர் அப்படியே இருக்கட்டும். (குறுக்கீடு)

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலுரையில் சொல்லலாம். இது அவருடைய கன்னிப் பேச்சு. பேச்சைக் கட்டுப்படுத்த வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் மாற்றம் குறித்து மாண்புமிகு உறுப்பினருக்கு



ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். எம்.ஜி.ஆர். பெயரை மாற்றவில்லை. எம்.ஜி.ஆர். அறிவு நகரம், M.G.R. Knowledge City என்றுதான், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். பெயரை எடுக்கவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதிலுரையிலே, சொல்ல வேண்டியதைச் சொல்லலாம்.

**திரு. து. நெப்போலியன்:** எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்ற பெயர் அப்படியே இருக்கட்டும். அதேபோல எம்.ஜி.ஆர். அறிவு நகர் வருவதையும் நாங்கள் வரவேற்கின்றோம். பாராட்டுகின்றோம். அதை புதியதாக தனியாக எங்கு வேண்டுமானாலும் ஆரம்பித்துக்கொள்ளுங்கள். அப்படியில்லையென்றால், 'எம்.ஜி.ஆர். திரைப்பட அறிவு நகர்' என்று சேர்த்து வையுங்கள். எக்காரணம் கொண்டும், 'திரைப்பட' என்ற வார்த்தையையும், திரைப்படத் துறையினருக்காக உள்ள அந்தத் திரைப்பட நகரையும் மாற்றிவிடாதீர்கள் என்பதை திரை உலகின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களும், தங்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மாறுதலுக்காக குடும்பத்தோடு மகிழ்வதற்கும், பொழுதுபோக்குவதற்கும் ஒரு சாதனமாக விளங்கிக் கொண்டிருப்பதுதான் சினிமா. வருடத்திற்கு 150 படங்களுக்கு மேல் எடுத்து வெளியிட்டுக்கொண்டிருந்த தமிழ் சினிமா உலகம், இன்றைக்குச் சீரழிந்து கொண்டிருக்கிறது. தற்போது ஆண்டிற்கு 70 படங்களாகக் குறைந்துவிட்டது. 2,500–க்கும் மேற்பட்ட திரையரங்குகள் செயல்பட்டுக் கொண்டிருந்த தமிழ்நாட்டில், ஒரு சில ஆண்டுகளில் கிட்டத்தட்ட 300 திரையரங்குகள் மூடப்பட்டுவிட்டன. இன்னும் 200 திரையரங்குகள் மூடும் நிலையில் உள்ளன.

நவீன விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகவும், ஈடுகட்ட முடியாத செலவினங்கள் காரணமாகவும், அனைத்துப் படங்களையும் தயாரிப்பாளர்கள், 'டி.வி.', 'சேட்டலைட்' போன்ற சாதனங்களுக்கு விற்றுவிடுகிற காரணத்தினால், மக்கள் டி.வி.–யிலேயே படம் பார்த்துவிடுகிறார்கள். அதனால், திரையரங்குகளுக்கு வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனவே, படம் சரியாக ஓடுவதில்லை. இந்த நிலை தொடருமானால் தமிழ்த் திரைப்பட உலகமே காணாமல் போய்விடும். ஆகையால், பொழுதுபோக்கு அம்சமாக

விளங்கும் சினிமாவைக் காப்பாற்றும்பொருட்டும், தயாரிப்பாளர்கள், தொழிலாளர்கள், விநியோகஸ்தர்கள், நடிகர், நடிகைகள், இயக்குநர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அனைத்துத் தரப்பைச் சார்ந்தவர்களும் அவர்களது குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காக, நாங்கள் தங்களின் முன் வைக்கும் கோரிக்கைகளைப் பரிசீலித்து, பெருந்தன்மையோடு பரிசீலித்து, திரையுலகம் நசிந்து போகாமல் வாழ்வதற்கு வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்தித் துறை மூலமாக நடைபெற்ற பணிகளில் மகத்தான பணி 'அய்யன் திருவள்ளுவர் சிலை'. 20 ஆண்டு காலமாக தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் கனவை நினைவாக்கித் தந்தது தி.மு.க. அரசு. 133 அடி உயரத்தில் 7,000 டன் எடையில் சுமார் 10.00 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதுதான் அய்யன் திருவள்ளுவர் சிலை.

சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு வழங்கப்படும் விருதுகளில் முதல் பரிசுத் தொகை ரூ.1.25 இலட்சம் என்றிருப்பதை ரூ.2.00 இலட்சமாகவும், இரண்டாம் பரிசுத் தொகையான ரூ.75,000-யை ரூ.1.00 இலட்சமாகவும், மூன்றாம் பரிசுத் தொகை மற்றும் சிறப்புப் பரிசுக்கான விருதினை ரூ.50,000 என்றிருப்பதை ரூ.75,000/-ஆகவும் உயர்த்தித் தந்து, திரைப்படத் துறையினரை மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்தவர் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். திரைப்படக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் பிரிவில், கூடுதலாக சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர் ஆகிய கலைஞர்களுக்கும் கடந்த ஆட்சிக் காலத்தில்தான் விருதுகள் வழங்கப்பட்டன. புதிய படங்களுக்கு கேளிக்கை வரியை 1989 ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு 54 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாகக் குறைத்தது. 1998 ஆம் ஆண்டு 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாகவும், 2000 ஆம் ஆண்டு 30 விழுக்காட்டிலிருந்து 25 விழுக்காடாகவும் குறைத்தது. அதோடு, 10 ஆண்டுகளுக்கு முன்பு வந்த திரைப்படங்களுக்கு 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக கேளிக்கை வரியைக் குறைத்தது. இதுபோன்ற பல்வேறு சலுகைகளையும் வழங்கி, தமிழ்த் திரைப்படத் துறையினரை வாழ வைத்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு.

கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான திரைப்படங்களுக்கு வழங்கப்பட்ட 3.00 இலட்சம் ரூபாய் மானியத் தொகையை 5.00 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தது. 1994, 1995, 1996 ஆகிய வருடங்களில் தமிழ்த் திரைப்படங்களுக்கு, தங்கள் ஆட்சியில் வழங்கப்படாமல் இருந்த மானியத் தொகையை கழக அரசு



1996-ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மொத்தம் 103 படங்களுக்கு வழங்கியது. அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் படப்பிடிப்பு நடத்த, அரசுக்குத் தயாரிப்பாளர்கள் செலுத்திவந்த தொகை 5,000 ரூபாய் என்றிருந்ததை 1,000 ரூபாயாகவும், 2,500 ரூபாய் என்றிருந்ததை ரூ.500-ஆகவும் குறைத்தது கழக அரசுதான்.

தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது எதிர்பாராமல் உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு 1.00 இலட்சம் ரூபாயும், செயல்பட முடியாமல் காயம்பட்டு ஊனமடைந்தால் ரூ.50,000/-மும் வழங்கும் திட்டம் 1996 ஆம் ஆண்டு முதல் கழக அரசால் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், திரைப்படத்திற்கான புதிய வரிச் சலுகைகளோ, புதிய திட்டங்களோ இந்த அரசு வெளியிட்டிருக்கும் கொள்கைப் புத்தகத்தில் ஏதும் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்படும் சிறந்த குறும்படங்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தது கழக ஆட்சி. திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறும்படம் 1997 ஆம் ஆண்டு சிறந்த குறும்படத்திற்கான தேசிய விருதினைப் பெற்றது. இது எங்கள் திரைப்படத் துறைக்குப் பெருமை சேர்ப்பதாகும். வருங்காலத் திரை உலகை வாழ வைக்க இருக்கும் இவர்கள்மீது அரசு அதிக கவனம் செலுத்தி அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கைகள். ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு சிறு முதலீட்டுப் படங்களுக்கு மானியம் வழங்குவதற்காகப் போடப்பட்டிருக்கும் நிபந்தனையான, 25 பிரதிகள்வரை இருக்க வேண்டும் என்பதைத் தளர்த்தி, 35 பிரதிகள்வரை அனுமதி அளித்ததையும், மானியத் தொகை ரூ.5 இலட்சத்தை ரூ.10 இலட்சமாக உயர்த்தித் தந்ததைப் போல், தமிழ் சிறு முதலீட்டுப் படங்களுக்கும் தரவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, கலைஞர் அரசு பரிசீலனை செய்தது. அதை இந்த ஆட்சியில் தாங்கள் நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு படம் திரையிடும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு மேலானால் அந்தப் படத்திற்கு அரசு முழு வரிவிலக்கு அளிக்க வேண்டும். ஆண்டிற்கு

ஒரு முறை சிறந்த தமிழ்ப் படங்களுக்குத் தரப்படும் விருதுத் தொகையினை முதல் பரிசுக்கு ரூ.5 இலட்சமாகவும், [illegible] இலட்சமாகவும், மூன்றாம் பரிசு மற்றும் சிறப்புப் பரிசுக்கு ரூ.2 இலட்சமாகவும் உயர்த்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களைப்பற்றி உயர்வாக எடுக்கும் படங்களுக்கு நினைவுப் பரிசாக ரூ.1 இலட்சத்து 25 ஆயிரத்தை கழக அரசு வழங்கி வந்தது. அதைத் தற்போது ரூ.3 இலட்சமாக இந்த அரசு உயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்த வரி கட்டும் திரையரங்குகளுக்கு, வரியைக் கட்டுவதற்கான அளவிற்குக்கூட வசூல் இல்லை. அதனால் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுவதின் அடிப்படையில் வரி கட்டும் முறையை திரையரங்குகளுக்கு அளிக்க வேண்டும். கர்நாடக மாநிலத்தில் தயாரிக்கப்படும் கன்னடப் படங்களுக்கு 100 சதவிகித வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் தயாரிக்கப்படும் தெலுங்குப் படங்களுக்கு 10 சதவிகிதம் கேளிக்கை வரியும், வெளி மாநிலத்தில் தயாரிக்கப்படும் மாற்றுமொழிப் படங்களுக்கு 20 சதவிகித கேளிக்கை வரியும், சிறு முதலீட்டுப் படங்களுக்கு 7 சதவிகித கேளிக்கை வரியும் வசூலிக்கப்படுகிறது. எனவே, தமிழ்த் திரைப்படங்களுக்கும் அதே முறையில் வரிச்சலுகைகளை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திரையரங்குகளின் குறைந்தபட்ச நுழைவுக் கட்டணம் ரூ.1.25 பைசா என்றிருப்பதை மாற்றி ரூ.5 ஆக உயர்த்தித் தர வேண்டும். பராமரிப்புக் கட்டணத்தை A.C. திரையரங்கத்திற்கு ரூ.2 ஆகவும், Non–A.C. திரையரங்கத்திற்கு ரூ.1 ஆகவும் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். சினிமாத் துறையை மத்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழிலாக ஏற்றுக்கொண்டதினால் திரையரங்குகளுக்கு மின் கட்டணத்தைக் குறைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். கட்டட உறுதிச் சான்றிதழ் பெறுவதற்கு பேனல் இன்ஜினியர் நியமித்ததுபோல், மின் சான்றிதழ் பெறுவதற்கும் பேனல் இன்ஜினியரை நியமித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் பிறந்து வளர்ந்த மண்ணான திருச்சி மாவட்டத்தையும், அருகே உள்ள தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களையும் உள்ளடக்கிய டி.டி. ஏரியாவில், கோவில் நிலத்தில் இயங்கி வரும் திரையரங்குகளுக்குத் தொடர்ந்து தொழில் செய்ய குத்தகை ஒப்பந்தத்தை விரைந்து செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.





திரையரங்குகளுக்கு என்று தயாரிக்கப்பட்ட படங்களைத் திருட்டுத்தனமாக வி.சி.டி. மற்றும் கேபிள் டி.வி. மூலமாகக் காண்பித்துவிடுவதால் திரை உலகம் பாதிக்கப்படுகிறது. இதற்கு கடந்த கால அரசு எடுத்த அதிரடி நடவடிக்கையால் பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதைத் தங்கள் அரசும் மேலும் தீவிரப்படுத்தி, விசிடியில் வரும் புதிய படங்களைத் திருட்டுத்தனமாக கேபிள் டிவியில் போடுபவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து, அவர்களின் லைசென்சை ரத்து செய்வதோடு இரண்டாண்டு காலம் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறைத் தண்டனை வழங்க வேண்டும்.

மேலும், தனியார் பேருந்துகளிலும், அரசுப் பேருந்துகளிலும் உள்ள தொலைக்காட்சிகளில் புதிய படங்கள் காண்பிக்கப்படுவதைக் கண்டிப்பாகத் தடை செய்ய வேண்டும். தமிழ்நாடு சினிமா சட்டமும், கேளிக்கை வரிச் சட்டமும் மிகவும் பழமையாகிவிட்டதால், தற்போதைய காலத்திற்கேற்ப, சில சட்டத் திருத்தங்கள் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் நடக்கும் ஒவ்வொன்றும் செய்திதான். அதேபோல், இந்த மாமன்றத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொருவர் பேசுவதும் செய்திதான். இந்தச் செய்தியை உடனடியாக நாட்டு மக்களுக்கும், ஏன் உலகத்திற்கே வெளியே கொண்டுவந்து தெரியப்படுத்துவது தொலைக்காட்சித் துறையும், பத்திரிகைத் துறையும்தான். அந்தத் துறைக்கு, செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர்களுக்கு எந்தப் பாகுபாடும் இல்லாமல், முறையான அனுமதியையும், அவர்களுக்கே உரிய மரியாதையையும், எந்தச் சூழ்நிலையிலும் அவர்களுக்கு அது நிராகரிக்கப்படாமல், ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக விளங்கும் இந்தத் துறைக்கு இந்த அரசு முறையாக வழங்க வேண்டும்.

*முற்பகல் 11–40*

பத்திரிகை நிருபர்களுக்கென்று 1953 ஆம் ஆண்டு கர்ம வீரர் காமராஜர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரிப்போர்ட்டர்ஸ் கில்ட் என்ற அமைப்பு செயல்பட்டு வந்த கட்டடம் தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளது. பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் இருக்கும் அந்தக் கட்டடத்தை புதியதாகக் கட்டித் தருமாறு இந்த அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இயல், இசை, நாடக மன்றத்திற்குத் தாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து இன்று வரை தலைவர், செயலாளர் பதவிகளுக்கு யாரும் நியமிக்கப்படவில்லை. அதேபோல, சட்டமன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அன்றாடம் படம் பிடித்துக் கொண்டிருக்கும் பிலிம் டிவிஷன்–தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கும் தலைவர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை. இவற்றிற்கெல்லாம் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்திற்கு, தொழிலாளர்கள் சொந்தமாகக் குடியிருப்புகளை கட்டிக்கொள்வதற்காக 16–3–1995 அன்று 85 ஏக்கர் நிலத்தை பள்ளிக்கரணை கிராமத்தில் கொடுத்து, முன்நுழைவு அனுமதி மட்டும் வழங்கி அன்றைய உங்கள் அரசு ஆணை பிறப்பித்தது. அந்த ஆணை பின்வருமாறு:

"தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம் இந்த இடத்திற்கான நில மதிப்பினை, அரசால் நிர்ணயம் செய்யும் நில மதிப்பினை செலுத்த வேண்டும். செங்கற்பட்டு–எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சியாளர்கள், முதன்மை ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர், அரசு நிலையில் வருவாய்த் துறை விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டுமென்று" பல்வேறு நிபந்தனைகளோடு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

19–4–1995 அன்று பெப்சி திரைப்படத் தொழிலாளர் கூட்டுறவு வீட்டு வசதி வாரியச் சங்கம் அந்த அரசால் பதிவு செய்து தரப்பட்டது. 20–4–1995 அன்று பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அப்போது இன்றைய முதல்வர் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, அவர்கள் ஆற்றிய உரையின் விவரம்:

'The Chief Minister Ms. J. Jayalalitha announced that the Government has allotted 85 acres of prime land for housing colonies for the film workers near Velachery. She laid the foundation–stone for the project at a function organised by the Film Employees Federation of South India. The value of the land was Rs.10 crores and the Government had decided to make it available free of cost, she said. She was happy to announce this to the Film Industry who were like one big family,' என்று கூறியுள்ளது பத்திரிகையில் வெளிவந்துள்ளது.



திரைப்படத் தொழிலாளர்களுக்கு 85 ஏக்கர் நிலத்தை இனாமாகத் தருவதாக அன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து விட்டார்கள். இதனால் பெரும்பாலான தொழிலாளர்கள் முதல்வரே இனாமாகத் தருவதாகக் கூறிவிட்டார்கள், நாங்கள் எதற்காகப் பணம் கட்டவேண்டுமென்று மறுத்துவிட்டனர். 28–6–1995 அன்றே அரசாங்கம் பெப்சியிடம் நிலத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு என்பதனாலும், கலைத் துறையைச் சேர்ந்தவர் என்பதனாலும் 20 மணித்துளிகள் கொடுத்திருக்கின்றேன். இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** அரசாங்கம் பெப்சியிடம் நிலத்தை ஒப்படைத்தும், தொழிலாளர்கள் பணம் கட்ட மறுத்ததினால் தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்கள்.

அடுத்து, கழக ஆட்சி வந்தது. ஒன்றரை ஆண்டு காலமாக அந்த நிலத்தில் எந்த வேலையும் நடக்காததால் அரசு அந்த நிலத்தைத் திருப்பிக் கேட்டது. சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் அன்றைய முதல்வர் தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்ததால், அது மீண்டும் தொழிலாளர் அமைப்பிடமே ஒப்படைக்கப்பட்டது. மறைந்த முன்னாள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்களும், முன்னாள் வீட்டு வசதித் துறை அமைச்சர் மாண்புமிகு பிச்சாண்டி அவர்களும் வேலைகளைத் துரிதப்படுத்தியதால் வீடு கட்டும் வேலைக்காக சி.எம்.டி.ஏ.–வில் தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ரூ.5 இலட்சத்து 40 ஆயிரம் பணத்தைக் கட்டி அனுமதிக்காகக் காத்திருந்தார்கள்.

1997–98 ஆம் வருடங்களில் பெப்சி, படைப்பாளிகள் என்று இரு அணிகளின் பிரச்சினைகள் இருந்ததினால் இந்தத் திட்டம் செயல்படாமல் போனது. மீண்டும் 1991 ஆம் வருடம் உயிர்பெற்று 70 இலட்ச ரூபாய் செலவில் பள்ளமாக இருந்த அந்த இடம் மண்ணால் நிரப்பப்பட்டு, நிலச்சமன் செய்யப்பட்டது. அரசாங்கத்தால் பெப்சி அமைப்பின் பெயருக்குக் கொடுக்கப்பட்ட நிலம், பெப்சி திரைப்படத் தொழிலாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் பெயருக்கு மாற்றப்படாததினால் கூட்டுறவு வங்கியிடமிருந்து முறையாகக் கடன் பெற முடியாமல் போனது. திரு. பாலச்சந்தர் அவர்கள் பெப்சியின் தலைவராகப் பொறுப்பேற்றவுடன்

அப்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 12–6–2000 ஆம் நாள் தி.மு.க. அரசு அந்த நிலத்தை பெப்சி அமைப்பின் பெயரில் இருந்து பெப்சி தொழிலாளர் கூட்டுறவு அமைப்பின் பெயருக்கு வீடு கட்டுவதற்கான முழு அதிகாரத்தோடு மாற்றித் தந்தது. ஆனால், ஒரு சில அதிகாரிகளின் தவறான போக்காலும், இலவசமாக இடம் தருவதாக அன்றைய முதல்வர் கூறிவிட்டதால் நாங்கள் ஏன் இடத்திற்கான பணத்தைக் கட்ட வேண்டும் என்று தொழிலாளர்கள் பணம் கட்ட மறுப்பதினாலும், இந்தத் திட்டமே கைவிடப்பட்டுப் போகும் நிலையில் இருந்து வருகிறது. இதனால், 10,500 தொழிலாளர்கள் வீட்டு வசதி இல்லாமல் பாதிக்கப்படும் நிலையில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 85 ஏக்கரில் பள்ளிக்கரணை–வேளச்சேரி சாலையை அகலப்படுத்துவதால் 10 ஏக்கர் நிலமும்—உயர் மின்னழுத்தமுள்ள மின்சாரக் கம்பிகள் செல்லும் வழியினால் 10 ஏக்கர் நிலமும் உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. இதனால், மீதமுள்ள 65 ஏக்கர் நிலத்தையும், பாதிக்கப்பட்ட 20 ஏக்கர் நிலத்திற்குப் பதிலாக, அதற்குப் பக்கத்திலோ அல்லது வேறு இடத்திலோ, நிகரான நிலத்தைத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஞ்சியதை மற்ற பேச்சிலே வைத்துக்கொள்ளலாம். கன்னிப் பேச்சு சுருக்கமாகத்தான் இருக்க வேண்டும்.

**திரு. து. நெப்போலியன்:** பின்னர் நான் பேசவுள்ள 4 மானியக் கோரிக்கைகளில் பேச வேண்டியதை எனது சம்பந்தப்பட்ட இந்த மானியத்திலேயே பேசி முடித்துக்கொள்கிறேன். திரைப்பட உலகத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவை பிறகு பேசலாம்.

**திரு. து. நெப்போலியன்:** என்னுடைய நடிகர் சங்கக் கோரிக்கை; மறைந்த மாமேதை, நடிகர் திலகம் பத்மஸ்ரீ செவாலியர் சிவாஜி கணேசன்–டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் கட்டுவதற்காக மாநில அரசு இடம் ஒதுக்கித் தர வேண்டும். அவர் இல்லம் அமைந்திருக்கிற போக் ரோடு சந்திப்பிலோ அல்லது தி. நகரிலோ ஒரு சிலை வைக்க மாநில அரசு ஆவன செய்ய வேண்டும். நடிகர் திலகம் அவர்கள் உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலை ஒன்று வெளியிடுவதற்கு, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும். மேலும், திரைப்பட உலகத்தில் மூத்த நடிகர்களான திரு. எம்.என். நம்பியார், திரு. வி.கே. ராமசாமி, திருமதி மனோரமா ஆகியவர்களுக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்க, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்பதை தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் திரு. விஜயகாந்த், செயலாளர் திரு. சரத்குமார் அவர்களின் சார்பாகவும், மற்றுமுள்ள நிர்வாகிகள், உறுப்பினர்கள் சார்பாகவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய தொகுதி–இப்போதுதான் என்னுடைய தொகுதிக்கே வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. பிறகு பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்திரசேகரன். (குறுக்கீடு) 25 மணித்துளிகள் பேசியாகிவிட்டது.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. து. நெப்போலியன்:** மன்னிக்கவும். மேலும் இரண்டு மணித்துளிகள் மட்டும் கொடுக்கவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்திரசேகரன் இருங்கள். அவருக்கு ஒரு மணித்துளி மட்டும் அனுமதி தருகிறேன்.

*(திரு. து. நெப்போலியன் ஒரு தாளைக் காண்பித்தார்.)*

**திரு. து. நெப்போலியன்:** இந்த ஒரு பக்கம்; ஒன்றரைப் பக்கம்தான். பேசி முடித்துவிடுகிறேன். (சிரிப்பு) தொகுதியின் முக்கியக் கோரிக்கைகள். தொகுதியின் அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர்ப் பிரச்சினையை இந்த அரசு அதிகக் கவனம் செலுத்தி, உடனடியாகத் தீர்க்க வேண்டும். வில்லிவாக்கம் தொகுதியில் அம்பத்தூர் நகராட்சி மற்றும் மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், இவையெல்லாம் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளிலே வரும்; வனத் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைக் கேளுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** இவை எனது தொகுதிப் பிரச்சினை. என்னுடைய கன்னிப் பேச்சிலேயே சொல்லிவிட்டேன் என்றால் பரவாயில்லை. இல்லையென்றால், எனது தொகுதி மக்கள் வருத்தப் படுவார்கள். ஆகையால் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றை ஒரே நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** அம்பத்தூர் நகராட்சி மற்றும் மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

4 இலட்சம் மக்கள் தொகை கொண்ட அம்பத்தூர் நகராட்சியில் ஓர் அரசு பொது மருத்துவமனை வேண்டும். ஆசியாவிலேயே பெரிய மார்க்கெட்டும், பெரிய பஸ் ஸ்டாண்டும் இருக்கிற கோயம்பேடு பகுதியில் ஓர் அரசு மருத்துவமனை வேண்டும். அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரியும், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அரசு பாலிடெக்னிக் ஒன்றும் இந்த அரசு தொடங்க உடனடி நடவடிக்கை எடுத்து செயல்படுத்த வேண்டும்.

அம்பத்தூரிலிருந்து திருவள்ளூருக்குப் போக நேரடி பஸ் வசதி வேண்டும்.

அம்பத்தூர், கொரட்டூர், வில்லிவாக்கம், ராஜமங்கலம் பகுதிகளில் உள்ள இரயில்வே கேட்டை அன்றாடம் கடக்க அவதியுறும் மக்களுக்கு ஒரு நல்வழி கிடைத்திட இந்த இடங்களில் பாலங்கள் அமைத்திட வேண்டும்

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 8 பெரிய தொழிற்சாலைகளும், 400 சிறிய தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. இதில் அரசு நேரடிக் கவனம் செலுத்தி, தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

அம்பத்தூர் நகரத்தில் 200 அடி சாலைக்குக் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தாதங்குப்பம், ராஜீவ் காந்தி நகர், பழனிமலை நகர், சாஸ்திரி நகர், வெங்கடேஸ்வரா நகர், தியாகராஜா நகர், எஸ்.ஆர்.பி. நகர் ஆகிய பகுதிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசிப் பக்கமா?

**திரு. து. நெப்போலியன்:** பேசி முடித்துவிடுகிறேன். வளசரவாக்கம், விருகம்பாக்கம் ஆகிய பகுதிகளிலிருந்து எழும்பூர் செல்ல நேரடி பஸ் வசதி செய்துதர வேண்டும்.



ஆற்காடு சாலையை அகலப்படுத்தி போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும். பொது மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். ஆற்காடு சாலையை அகலப்படுத்தி போக்குவரத்தைச் சீர் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** சென்னையிலிருந்து செங்குன்றம் நகரத்திற்குச் செல்லும் சாலையில், செங்குன்றம் நகரத்திற்குள் நுழைவதற்கு முன்பு உபயோகத்தில் இருந்த ஒரு பாலம் உடைந்து, போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அதை உடனடியாகக் கட்டித்தர ஆவன செய்ய வேண்டும்.

சிறிய நொளம்பூர் பகுதியில் மழைக் காலங்களில் மெயின் ரோடுக்குச் செல்ல பாலம் வேண்டும்.

ஆவடி அருகே திருமுல்லைவாயிலில் 290 ஏக்கர் பரப்பளவில் சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் புதிய தொழிற்பேட்டை தொடங்குவதற்கான திட்டத்தினை, நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளீர்கள். ஆனால், அரசாங்கம் கையகப்படுத்தியிருக்கும் சுமார் 1,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள், வில்லிவாக்கம் தொகுதிக்குட்பட்ட வெள்ளானூர், பம்மதுகுளம், பொத்தூர் போன்ற கிராமங்களுடைய நிலங்களாகும். அதனால் அரசு ஏற்படுத்தும் தொழிற்பேட்டைக்கு வெள்ளானூர் தொழிற்பேட்டை என்று பெயர் வைத்து, அந்தப் பகுதி மக்களுக்குப் பெருமை சேர்த்திடவும், அப்பகுதி வளம் பெறவும், அப்பகுதி மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு கிடைக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்தக் கோரிக்கைகளின்மீதெல்லாம் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அன்போடு கவனம் செலுத்தி செய்து தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. பி.ஆர் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர்கள் கன்னிப் பேச்சுப் பேசுவதற்கு 30 மணித்துளிகள் மனமுவந்து கொடுக்க வேண்டுமென்ற அன்பான கோரிக்கையை உங்கள் முன் வைக்கிறேன்.

***திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்களையும், நன்றிகளையும் என்னுடைய குடும்பத்தின் சார்பாகவும், வேலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பாகவும், இராணிப்பேட்டை தொகுதி மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்துக் கட்சித் தொண்டர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 11–50*

பெண்களை மதிக்காத எந்த நாடும் இதுவரை சிறப்பான நிலையை அடைந்ததும் இல்லை. இனி அடையப் போவதும் இல்லை. பெண்களைத் துன்பத்தில் ஆழ்த்தும் வீட்டிற்கோ அல்லது நாட்டிற்கோ வளர்ச்சி காண வாய்ப்பே கிடையாது என்று சுவாமி விவேகானந்தர் அவர்கள் கூறியுள்ளார்கள். இதை மனதில் கொண்டு இந்த அரசு மகளிருக்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டியது பாராட்டுக்குரியது. ஆடம்பரத் திருமணம் என்று விளம்பரம் செய்து ஆட்சியைப் பிடித்தவர்கள், தங்கள் ஆட்சிக் காலத்தில் தாங்கள் தலைமையேற்று நடத்திய ஆடம்பரத் திருமண விழாவில், தம்பி இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் போல் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் செயல்பட்டு இருந்தால் நாம் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று பாராட்டினார்கள். பல கோடி ரூபாய் செலவு செய்த இந்தத் திருமணத்தைப் பொதுமக்கள் சார்லஸ்–டயானா திருமணத்துடன் ஒப்பிட்டுப் பேசினார்கள். ஆனால் இப்பேர்ப்பட்டவரை எதிர்த்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், சாதாரண கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்ற, அரசியல் வாழ்க்கை மேற்கொண்ட என்னை, ஒன்றியக் கழக இணைச்



செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராகவும், புரட்சித் தலைவி பேரவை மாவட்ட இணைச் செயலாளராகவும், மாவட்டக் கழகத் துணைச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும் பதவியை வழங்கியதோடு அல்லாமல் இராணிப்பேட்டை தொகுதி வேட்பாளராக நிறுத்தினார்கள். தேர்தல் பிரச்சாரப் பயணத்தின்போது எனது தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் வழி நெடுகிலும் இலட்சக்கணக்கான வாக்காளர்களைச் சந்தித்து என்னை வெற்றிபெறச் செய்தார்கள். இந்த ஆரவார வரவேற்பினை நல்கிய அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2001–2002* ஆம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் மானியக் கோரிக்கைகளின்மீது கருத்துகளைத் தெரிவிப்பதற்காக அம்மா அவர்களை வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"

ஏரி போன்ற நீர் நிலைகளும், நதிகளும், மலைகளும், காடுகளும் நாட்டிற்கு இன்றியமையாதவை என்றார் திருவள்ளுவர்.

நம்முடைய மூதாதையர்கள் சுற்றுச்சூழலின் முக்கிய அம்சங்களையும், காட்டு உயிர்களைப் பாதுகாக்க வேண்டியதுபற்றியும், இயற்கை சமனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருந்தார்கள்.

பழங்குடியினர், அடர்ந்த காட்டுப் பகுதிகளைப் புனிதத் தோப்பு என அழிக்காமல் பாதுகாத்தனர். இந்த அக்கறை மத நம்பிக்கையாகவும் உருவெடுத்தது. சமணர்கள், எல்லா உயிரினங்களும் சமம் எனக் கருணை காட்டினர். தாவரங்கள் அழிந்துவிடக் கூடாது என்பதற்காக கிழங்குகளைச் சாப்பிடுவதைத் தவிர்த்தார்கள். புத்த மதம் அஹிம்சையைப் போதித்து, புலால் உண்பதை ஒதுக்கியது. வசந்த விழா, ஆடி பதினெட்டாம் பண்டிகை போன்ற விழாக்கள் இயற்கையைப் போற்றுகின்றன. மாட்டுப் பொங்கல் கால்நடைகளுக்கான திருவிழா. அணில், குரங்கு போன்ற உயிரினங்களைப் பிள்ளை என்றழைப்பதும், பாம்புப் புற்று, மரம் போன்றவற்றை வழிபடுவதும் இந்தச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் ஒரு அம்சம் ஆகும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளிலும் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை நிதிநிலை அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது,

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுற்றுச்சூழலின்மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது.

இளைஞர்களே இந்நாட்டின் வருங்காலத் தூண்கள் என்பதை மனதில் கொண்டு, மாவட்டங்களில் உயிரின வாழ்க்கைச் சூழல் மன்றங்களை அமைத்திட ஆணையிட்டுள்ளது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனையைக் காட்டுகிறது. எதிர்கால சந்ததியர் நலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அக்கறையைக் காட்டுகிறது.

சென்னையிலிருந்து வேலூர் செல்லும் அனைவருக்கும் இராணிப்பேட்டை வருவதை, தூக்கத்தில் இருந்தால்கூட அங்கு நிலவும் நாற்றம்–மணம் காட்டிக் கொடுத்துவிடும். மண் வாசனை மக்களின் குணம் காட்டும்.

இராணிப்பேட்டையில் வீசும் காற்று மாசுபட்ட காற்றின் நிலையைக் காட்டும். காற்றின் நிலை இது என்றால், குடிநீரின் நிலையோ சொல்லவே வேண்டாம்.

தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிக்கப்பட்டு, சுவைமிகு நீராக இருந்த பாலாற்று நீர் இன்று பாழ்பட்டுள்ளது. குடிநீரின் நிறம், மணம் மாறிவிட்டது. விவசாய விளைநிலங்களோ சொல்லவே வேண்டாம். அவை விளைச்சலை மறந்து ஆண்டுகள் பல ஓடிவிட்டன. தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி இராணிப்பேட்டை. இதனால் வரும் கழிவுநீர் சுத்திகரித்தல் சரியாக நடைபெறுவதில்லை. இராணிப்பேட்டை தொகுதியில் காற்றும், நீரும் மாசுபட்டுள்ளது. நாம் எல்லாம் நிகழ்காலத்தைப் பற்றி மட்டும்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் அடுத்த மூன்று தலைமுறையினரின் நலனை சிந்திக்கின்றவர்கள். அம்மா அவர்களுக்கு எங்களுடைய மாவட்ட மக்களின் நலன் கருதி, என்னுடைய சிறிய கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–55*

தொழிற்சாலை மூலம் வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து, ஆற்றின் ஓரமாக, குழாய் மூலம் கடலில் கலப்பதால் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும். கடல் நீரும் மாசுபடுவதில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும்கூட, எங்கள் மாவட்டத்தில் மாசுபட்டிருக்கும் நிலத்தடி நீர் மாசு நீங்க இன்னும் 50 ஆண்டு காலம் ஆகும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகவே, அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை



நிறைவேற்றி எங்கள் மாவட்ட மக்களைக் காப்பாற்ற வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்ற பழமொழியை நிரூபிக்கும்வண்ணம் மேல்விஷாரம் பேரூராட்சியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மாதிரித் திட்டத்தை United Nations Industrial Development Organisation மற்றும் Central Leather Research Institute இணைந்து ஆரம்பித்துள்ளார்கள். ஆசியக் கண்டத்திலேயே இது ஒரு முன்மாதிரித் திட்டமாகும். இந்த மாதிரித் திட்டத்தில் 5 டன் கழிவுப் பொருள்களில் இருந்து தினசரி 1200 கிலோ வாட் மின்சாரம் தயாரிக்க உள்ளார்கள். இத்திட்டத்தின் வெற்றி கண்டு, திடக்கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிப்பதைப் பெரிய அளவில் இராணிப்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர், திண்டுக்கல் போன்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை, இன்றைக்கு நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இங்கே கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய பணிவான வேண்டுகோளாக இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராணிப்பேட்டை நகரப் பேருந்து நிலையத்தைப் போக்குவரத்து நெரிசல் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி பிஞ்சி ஏரிக்கு மாற்றி, புதிய பஸ் நிலையம் கட்டித் தர பணிவுடன் வேண்டுகிறேன்.

இராணிப்பேட்டை நகரத்தில் அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி மட்டுமே உள்ளது. எனவே, மகளிர் கல்வி மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்ட நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இராணிப்பேட்டை நகரத்தில் அரசு பெண்கள் மேனிலைப் பள்ளி ஒன்று அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

சிப்காட் பகுதியில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்களின் சிகிச்சைக்காக இராணிப்பேட்டை சிப்காட்டில் உள்ள E.S.I. மருந்தகத்தை E.S.I. மருத்துவமனையாக மேம்படுத்தக் கேட்டுக்கொள்கின்றேன்.

இராணிப்பேட்டை நகராட்சிக்கு உட்பட்ட நவல்பூர், பிஞ்சி, ஜெயராம் நகர் பகுதிகளுக்கு மேனிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர வேண்டுகின்றேன்.

இராணிப்பேட்டை தொகுதியில் மகளிர் தொழில் முனைவோருக்கான ஒரு தொழில் பூங்கா ஏற்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

இராணிப்பேட்டைக்கும், ஆற்காடு நகரத்திற்கும் இடையே பாலாற்றின் மீதுள்ள பாலத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் மாற்று வழிப்பாதையாக இருக்கின்ற தரைப்பாலத்தைப் புதுப்பித்துத் தரக் கேட்டுக்கொள்கின்றேன்.

இராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் மூடி இருக்கின்ற தொழிற்சாலைகளைத் திறந்திட ஆவன செய்திட வேண்டுகின்றேன். இராணிப்பேட்டை சிப்காட் Phase–3 விரிவாக்கத் திட்டத்தை விரைவில் தொடங்கிட வேண்டுகின்றேன்.

இராணிப்பேட்டையில் அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

வேலூரில் அரசு மருத்துவக் கல்லூரி அமைவதால், வேலூரில் இயங்கி வரும் மாவட்ட அரசு பென்ட்லாண்ட் தலைமை மருத்துவமனையை வாலாஜாப்பேட்டை தாலுகா மருத்துவமனைக்கு மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுப் புடவைக்குத் தேவையான ஜரிகை 15 சதவீதம் மட்டும் காஞ்சிபுரத்தில் கிடைக்கிறது. மீதம் 85 சதவீதம் வட மாநிலமான குஜராத் மாநிலம் சூரத்திலிருந்து பெறப்படுகிறது. ஆகவே, பட்டுப் புடவைக்குத் தேவையான ஜரிகை அனைத்தும் தமிழ்நாட்டிலேயே கிடைக்கும் அளவிற்கு காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள இராணிப்பேட்டை தொகுதியில் ஒரு ஜரிகைத் தொழிற்சாலை ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

வாலாஜாபேட்டை நகரில் உள்ள அறிஞர் அண்ணா மகளிர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு M.Sc., M.Com., M.A., துறைகளை உருவாக்கித் தர வேண்டுகின்றேன்.

வாலாஜாவிற்கு வந்தவாசியுடன் தொடர்பு ஏற்படும் வகையில், பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுகிறேன். சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொன்னை கிராம மக்களும், 121 கிராம மக்களும் பயன்பெறுகின்ற வகையில் புதியதீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுகின்றேன்.



வள்ளிமலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேனிலைப் பள்ளியாக மேம்படுத்தித் தர வேண்டுகின்றேன்.

குன்றுதோறும் ஆடும் தமிழ்க் கடவுள் முருகன் குடிகொண்டுள்ள இரத்தினகிரி, சித்தர்கள் தவம் செய்த வள்ளிமலை ஆகிய இரண்டு வழிபாட்டுத் தலங்களையும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் பட்டியலில் சேர்த்து, வெளிநாட்டுப் பயணிகளையும் கவருகின்ற வண்ணம் வசதிகளை ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு கருத்தை மட்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

பத்திரப் பதிவுத் துறையின் மூலமாக புதிய சார்பதிவாளர் அலுவலகம் பொன்னையில் அமைத்து மக்களின் 20 ஆண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னையாற்றின் குறுக்கே மேல்பாடி–கொண்டகுப்பம் இடையே ஒரு மேம்பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இராணிப்பேட்டை–பொன்னை சாலை, பொன்னை–திருவலம் சாலை, சித்தூர்–திருத்தணி சாலை ஆகிய ஒருவழிச் சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*நண்பகல் 12–00*

35000 மக்கள்தொகை கொண்ட மேல்விஷாரம் பேரூராட்சியில் பெரும்பான்மையாக வசிக்கும் முஸ்லீம் பெருமக்கள் பயன்பெறும் வண்ணம், மேலும் 20000 மக்கள்தொகை கொண்ட சுற்றுப்புறக் கிராமங்களில் உள்ள மக்கள் பயன் பெறும் வண்ணம், ஆற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மேல்விஷாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட சிறப்பு மருத்துவமனையாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மை மக்களின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்மீது உண்மையான பற்றும், பாசமும் கொண்டுள்ள மேல்விஷாரம் பேரூராட்சிக்குட்பட்ட இஸ்லாமிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, கழிவுநீர்க் கால்வாய்கள் அமைப்பதற்கும், சாலை வசதி செய்து கொடுப்பதற்கும், சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் பணிகளைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு, நான் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைக் கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி.

***திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் நஷ்டத்திலே இயங்கி வருகின்றது. இந்தத் தொழிலை வனத் துறை நஷ்டத்தில் நடத்துவதைத் தவிர்க்க வேண்டுகிறேன். 7100 தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கும் இந்தத் தொழில் நல்ல முறையிலே நடந்து வருகின்றது. இந்த மாவட்டத்தில் தேயிலைத் தொழில்தான், தேயிலை விவசாயம்தான் முக்கியத் தொழிலாகும். கீழ்ப் பகுதியிலே ஒரு பயிர் சரியாக வரவில்லை என்று சொன்னால், அதை அழித்துவிட்டு வேறு பயிரைப் பயிர் செய்து விடலாம். ஆனால், தேயிலைப் பயிரை அழிக்க முடியாது. காரணம் அது 100 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட பயிராகும். கடந்த 2 வருட காலமாக நீலகிரி மாவட்டத்திலே தேயிலைக்குச் சரியான விலை கிடைக்காத காரணத்தால், விவசாயிகள் மிகப் பெரிய கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, 3 முக்கிய உதவிகளை அந்த மாவட்ட மக்களுக்குச் செய்திருக்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே தேயிலை விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்றிருக்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் போராடிய தேயிலை விவசாயிகள்மீது பல்வேறு கொடுமைகள் இழைக்கப்பட்ட காரணத்தால், மனித உரிமைக் கமிஷன் விசாரணை நடத்தியது. மனித உரிமைக் கமிஷன் விசாரணை நடத்தி, பாதிக்கப்பட்ட தேயிலை விவசாயிகளுக்கு 31 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று அந்த கமிஷன் தீர்ப்பளித்தது. ஆனால், கடந்த கால ஆட்சியில் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்காமல் இருந்தார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, பாதிக்கப்பட்ட விவசாயிகளை நேரிலே அழைத்து, அந்த 31 இலட்சம் ரூபாயையும் வழங்கியிருக்கின்றார்கள். மேலும், தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் நமது முதலமைச்சர் அவர்கள், அங்கு இருக்கின்ற தேயிலையை இன்கோசர்வ் மூலம் கொள்முதல் செய்து, அந்தத் தேயிலைக்கு ஊட்டி தேயிலை என்று பெயர் வைத்து, இன்றைக்கு நியாய விலைக் கடைகளிலே அதை விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நல்ல காரியங்களைச் செய்த இந்த அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும்



நான் மனதாரப் பாராட்டுகின்றேன். மேலும் 4.00 ரூபாய்க்கு விற்ற தேயிலை, இன்றையதினம் முதலமைச்சர் எடுத்த நல்ல நடவடிக்கையின் காரணமாக 6.00 ரூபாய்க்கு விற்க ஆரம்பித்திருக்கின்றது. நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் ஊட்டி தேயிலையை மேலும் நல்ல முறையிலே விற்று அதிக அளவிலே கொள்முதல் செய்து, தேயிலை விவசாயிகளுக்கு கிலோவிற்கு 10.00 ரூபாய் கிடைக்கின்ற வகையிலே இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், நீலகிரி மாவட்டத்திலே இன்கோசர்வ் 16 தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றது. ஒரு சில தொழிற்சாலைகள் நஷ்டத்தின் காரணமாக மூடப்பட்டுள்ளன. பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்தப் புதிய அரசு, இந்த மூடப்பட்டிருக்கின்ற இன்கோசர்வ் தேயிலைத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கீழ்கோத்தகிரி தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை 1–9–2000 முதல் மூடப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான மதிப்புள்ள அந்த இயந்திரங்கள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தொழிலாளர்கள் வேலையில்லாமல் பசியாலும், பட்டினியாலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதே தொழிற்சாலையில் பணிபுரிந்த 31 தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து, வேலையிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு அளிக்க வேண்டிய புனர்வாழ்வு நிதித் தொகை ரூ. 1,25,000/–, P.F., Gratuity போன்ற தொகைகள் இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்களின் குடும்ப நலன் கருதி அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–05*

கழிவுநீர் ஆறுகளில் கலப்பதைத் தடுக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவது பாராட்டுக்குரியது. பல தொழிற்சாலைகளில் கழிவுநீரை அப்புறப்படுத்த முடியாதவர்கள், டேங்கர் லாரிகள் மூலமாக கழிவுநீரைச் சேகரித்து, வேறு இடங்களில் கொண்டு சென்று இறக்குகிறார்கள். நான் சென்ற வாரம் இராமச்சந்திரா மருத்துவமனை வழியாகச் சென்றபோது, பல நூற்றுக்கணக்கான லாரிகளில்

கழிவுநீரைக் கொண்டு வந்து, இராமச்சந்திரா மருத்துவமனை அருகே இறக்கிக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். இதுபோன்ற லாரிகள்மீது, டேங்கர் லாரிகள்மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் தேயிலை விலை குறைந்தபோது, 29–4–2000 அன்று இந்தச் சட்டமன்றத்தில் திரு. சி. ஞானசேகரன் உட்பட பல்வேறு உறுப்பினர்கள் தேயிலை விலை குறைந்தது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அன்றைய முதலமைச்சரவர்கள் இராணுவத்திற்குத் தேவைப்படுகின்ற 3000 மெட்ரிக் டன் தேயிலையைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று இராணுவ அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருப்பதாக இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். அப்படி முன்னாள் முதலமைச்சரவர்கள் 3000 மெட்ரிக் டன் தேயிலையைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று எழுதிய கடிதத்திற்கு மத்திய அரசிடமிருந்து ஏதேனும் பதில் வந்திருக்கிறதா, இந்த அரசு இராணுவத்திற்குத் தேவைப்படுகின்ற தேயிலையைக் கொள்முதல் செய்ய மத்திய அரசை வலியுறுத்துமா என்று நான் உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாக்கிறோம் என்று சொல்லி, குன்னூர் நகரத்திலே நூற்றுக்கணக்கான கட்டடங்களை மாவட்ட நிர்வாகம் இடித்து வருகிறது. அந்தக் கட்டடங்கள் கட்டி 30, 40 ஆண்டுகள் ஆகின்றன. அந்தக் கட்டடங்களைக் கட்டும்போது, இந்தச் சுற்றுப்புறச் சூழல் அதிகாரிகள், டவுன் பிளானிங் அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று தெரியவில்லை. இன்றையதினம் குடியிருக்கிற வீடுகளையும், கடைகளையும் இடித்து வருகிறார்கள். இதற்கு ஒரு நல்ல முடிவினை இந்த அரசு காணவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே முன்னோடியாக பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்த ஆட்சித் தலைவர் தடை விதித்துள்ளார். இந்தத் தடையின் காரணமாக, சுற்றுலாத் தலமாக விளங்குகின்ற நீலகிரி மாவட்டத்தில் நல்ல பயன் ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் மேய்ச்சல் நிலம் குறைந்து வருகிறது. மேய்ச்சல் நிலம் குறைந்த காரணத்தால், கால்நடைகள் ரோடுகளிலும், தெருக்களிலும் உள்ள பிளாஸ்டிக் பைகளைத் தின்று, நீலகிரி மாவட்டத்திலே பல்வேறு கால்நடைகள் இறந்து இருக்கின்றன. இவற்றைத் தடுக்க, பிளாஸ்டிக் பொருட்களை வீதிகளில் எறியாமல் இருக்குமாறு பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.



மூலிகைச் செடிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மூலிகைச் செடிகளின் patent உரிமைகளை வெளிநாட்டவர் பெற்றுவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு சில தனியார் தொலைக்காட்சிகள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மத்தியானம் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. கா. கந்தசாமி:** முடித்துவிடுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் சில்வர் ஓக் மரங்களை வனத் துறை ஷெட்யூல் பகுதியிலிருந்து ஏற்கெனவே நீக்கிவிட்டார்கள். ஆனால், தற்போது வனத் துறையினர் அந்த சில்வர் ஓக் மரங்களை மீண்டும் ஷெட்யூலிலே கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். விவசாயிகள் நலன் கருதி, அது ஷெட்யூல்டு இனத்தில் இடம் பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12–10*

திருநெல்வேலி மாவட்டம், சிங்கப்பட்டியில் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷனுக்கு 8373 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப்பட்டு, அந்தக் குத்தகை காலாவதியாகி 1999 ஆம் ஆண்டு வனத் துறைக்கு வந்துவிடும் என்று சொன்னார்கள். அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டு விட்டதா என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

செய்தியாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளை இந்த அரசு அளிக்க முன்வந்துள்ளதை வரவேற்கிறேன். தற்போது வழங்கிவரும் குடும்ப ஊதியத்தை ரூ.2000–லிருந்து ரூ.3000–மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.500–லிருந்து ரூ.2000–மாகவும் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்வதோடு, பத்திரிகையாளர் பிள்ளைகளின் திருமணத்தின்போது ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கவேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு இரப்பர் கழகத்தால் 1997 ஆம் ஆண்டு, முதிர்ந்த இரப்பர் மரங்களை ஏலம் விடும்போது, மரம் ஒன்றுக்கு விலை ரூ.1350/– என முடிவு செய்து, 17000 மரங்களை வெட்ட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார்கள். அன்றைய கான்ட்ராக்டர் 1999–ல் மரம் ஒன்றுக்கு ரூ.735/– விலைக்கு வெட்டியுள்ளார். மரம் ஒன்றுக்கு ரூ.615/– நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் இரப்பர் கழகத்திற்கு ரூ. 2.00 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அதைப்பற்றி விசாரணை செய்து, அதே கான்ட்ராக்டர் மீண்டும் இந்த மரங்களை வெட்டாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு திருவான்மியூரில் வீட்டு வசதி வாரியம் மூலம் ஒதுக்கிய நிலத்திற்கு 10 ஆண்டுகள் ஆகியும் விற்பனை கிரையப் பத்திரம் வழங்கவில்லை. இதற்குக் காரணம் அரசு வழங்கிய மானியத் தொகை ரூ.20.00 இலட்சம் 5–7–1991–க்குள் செலுத்துவதற்கு... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் வீடு அங்கு வருகிறதா? மாண்புமிகு உறுப்பினருக்கும் வீடு இருக்குமே?

**திரு. கா. கந்தசாமி:** ...பதிலாக 26–6–1992–ல் ஓராண்டு காலம் தாமதமாகச் செலுத்தியதால் வட்டியாக ரூ.6,82,500/– கேட்கிறார்கள். இது நியாயமாகத் தோன்றவில்லை. அரசு இதை ரத்து செய்து, உடனடியாக தாமதமின்றி கிரையப் பத்திரம் வழங்கவேண்டுமென்றும், மானியத் தொகையை அரசு காலதாமதமாக அளித்ததற்கு பத்திரிகையாளர்கள் பொறுப்பல்ல. எனவே, வட்டியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எஸ். அருள்.

***திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு கடலூர் மாவட்டம், புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சி.முட்லூர் கிராமத்தில் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, புவனகிரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து என்னை வெற்றி பெறச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடலூர் மாவட்டத்தில் புவனகிரி சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, கடந்த சட்டமன்றத் தேர்தலிலே என்ன நிலைமை ஏற்பட்டது என்பதை இந்தத் தமிழகமே நன்கு அறிந்த நிலையிலே, நமது தமிழகத்தினுடைய முதல்வர் புவனகிரி சட்டமன்றத் தொகுதியிலே வேட்பு மனுத் தாக்கல் செய்தும், அந்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டும், அதற்குப் பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்று வேட்பாளர் அவர்கள் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டும், கடந்த கால



ஆட்சியாளர்கள் யாருக்கோ நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கத்திலே அங்கு மற்றவர்களுடைய வேட்பு மனுவையெல்லாம் நிராகரிக்கச் செய்தார்கள். அப்படி வேட்பு மனு நிராகரிக்கப்பட்டாலும், நான் சுயேட்சையாக அங்கே அந்தத் தொகுதியிலே வேட்பு மனுத் தாக்கல் செய்து, ஒன்பது தினங்களுக்குள் எனக்கு ஒரு சின்னம் அளிக்கப்பட்டு, அந்தச் சின்னத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் என்னை மதுரை மாநருக்கு வரவழைத்து, இங்கே வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும், நாள் கணக்கில் குறைந்த நாள் உள்ளது என்பதால் நான் உங்களுடைய தொகுதியிலே நிச்சயமாக ஒரு வித்தியாசமான பிரச்சாரம் செய்து, என்னை ஆதரிக்கின்ற உங்களை நிச்சயமாக வெற்றி பெறச் செய்வேன் என்று உறுதியளித்து, அதன் அடிப்படையிலே ஐந்து தினங்கள் கழித்து புரட்சித் தலைவி அவர்கள் என்னுடைய புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்கு வந்து, 36 கிலோ மீட்டர் தூரம் பிரச்சாரம் செய்து, 16 இடங்களிலே பொது மக்களிடத்திலே எனக்காக வாக்குக் கேட்டு, 9 தினங்களிலே என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–15*

கோடிக்கணக்கான ரூபாயை மூட்டையிலே கட்டிக்கொண்டு வந்து எளிதில் ஜெயித்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டு வந்த எத்தர்களைத் தோற்கடித்து, நீங்கள்தான் இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லி, எனக்கு 51000 வாக்குகள் அளித்து, செல்வச் சீமான்களையெல்லாம் தோல்வி காணச் செய்த எனது புவனகிரி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தின் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாருடைய கண்களிலே கண்ணீர் வழிகிறதோ
யாருடைய பாதையிலே நடைபாதை சுடுகிறதோ
யாருடைய சோலையிலே வசந்தங்கள் உதிர்கிறதோ
அவர்களுக்காகப் போராடும் அன்பு மனத் தலைவி
ஆறு கோடி தமிழர்களின் ஆசைக் கனவுகளை
நனவாக்க வந்துதித்த நம்பிக்கை நட்சத்திரம்,
உலகத் தமிழர்களின் நாடி–நரம்புகளில்
பாடித் திரியும் கொள்கைப் புறா,

[திரு. பி.எஸ். அருள்] [2001 செப்டம்பர் 4

ஏழைகளுக்கும், ஏழைகளின் வாழ்வுக்கும், உயர்விற்கும் முன்னுரை எழுத வந்த எழுத்தாணி

எங்களின் இதய தெய்வம், திராவிடப் பேரியக்கத்தின் தன்னிகரற்ற தானைத் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி என் கன்னி உரையைத் தொடங்குகின்றேன்.

புரட்சித் தலைவி அவர்களை நான் தினந்தோறும் வணங்குகின்ற விதத்திலே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே எதிர்த் திசையிலே இடம் ஒதுக்கித் தந்ததற்கு இந்த நேரத்திலே நான் மனதார என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழையெளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளத் தோழர்கள், பெண்கள், காவலர்கள், மீனவர்கள், மாணவ, மாணவிகள் என்று அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ள நிதிநிலை அறிக்கையினை வழங்கிய, வள்ளலின் வாரிசாம் அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லாத காரணத்தால் வணங்கி மகிழ்கின்றேன்.

வனங்கள். இயற்கை அன்னை மனித குலத்திற்கு அளித்த நன்கொடையாகும். காடுகள் இல்லையெனில் மழை கிடையாது. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த வனத் துறை மனித குல மேம்பாட்டிற்கும், விலங்குகள், பறவைகளின் சரணாலயமாகவும் இருந்து வருகிறது.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் வனத் துறையை வனப்புமிகு துறையாக மாற்றியுள்ளார்கள். ஏழையெளிய மக்கள் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வுக்கும் வளம் சேர்க்கும் துறையே வனத் துறையாகும்.

கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்கும், வேலைவாய்ப்பிற்கும், ஏழையெளிய மக்களின் ஏற்றத்திற்கும் வகை செய்கின்ற வகையிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சீரிய பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே செயல் திட்டங்களைத் தீட்டியுள்ளதை வரவேற்று மகிழ்கின்றேன்.

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம், தரிசு நிலங்களில் பசுமைப் பகுதித் தோட்டங்களை உண்டாக்கும் திட்டம், வன உயிரின சரணாலயங்கள் புதியதாக அமைத்தல் போன்ற புரட்சிகரமான திட்டங்களை



2001 செப்டம்பர் 4] [திரு. பி.எஸ். அருள்]

அறிவித்ததன்மூலம் வனத் துறைக்குப் புதிய பொலிவும், வலிவும் ஏற்படுத்துகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தொலைநோக்கு சிந்தனையை வரவேற்கின்றேன்.

மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும் என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பழமொழிக்கேற்ப, திருவாரூர் மாவட்டம் வடுவூரில் பறவைகள் சரணாலயம் அமைக்க புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பிச்சாவரம் வனப் பகுதியில் புதிதாக வன உயிரின சரணாலயம் அமைத்திட மத்திய அரசுடன் கலந்து, ஆலோசனை செய்து அமைக்கப்படவுள்ளது என்ற அம்மா அவர்களின் அறிவிப்புக்காக, என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள பிச்சாவரம் வனப் பகுதி வனம் சார்ந்த ஒரு சுற்றுலா மையமாகும். வனம் சார்ந்த இந்தச் சுற்றுலாப் பகுதியின் பரப்பளவு 1099.53 எக்டேர் ஆகும். இந்த வனப் பகுதி மேங்க்ரோவ் காடுகள் என அழைக்கப்படும் சதுப்பு நிலக் காடுகள் ஆகும். இந்த வனப் பகுதியில் உள்ள மொத்த வாய்க்கால்களின் எண்ணிக்கை 4443 ஆகும்.

பிச்சாவரம் வனப் பகுதியைச் சுற்றி கிள்ளை, வடக்கு பிச்சாவரம், தெற்கு பிச்சாவரம், டி.எஸ்.பேட்டை கிராமம், பில்லுமேடு கிராமம், கண்ணகி நகர், சின்ன வாய்க்கால், எம்.ஜி.ஆர். திட்டு போன்ற கிராமங்களும் உள்ளன. இந்த வனப் பகுதியில் வெண்கண்டன், கடுங்கண்டன், சொரப்புண்ணை, பண்ணகுத்தி, சிறுகண்டன், நரிகண்டன், தில்லைமரம், மரமா மரம் போன்ற மர வகைகள் வளர்கின்றன.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் இந்த வனப் பகுதிக்கு ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஹங்கேரி, ருமேனியா, அந்தமான் நிக்கோபார் தீவுகள், சுவீடன், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து விதவிதமான பறவைகள் வந்து தங்கிவிட்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில் சென்று விடுகின்றன. பிளாக் டையில்டுகாடுவிட், நமுடு, சாம்பல் நிறக் கொக்கு, செங்கால் நாரை போன்ற பறவையினங்கள் இங்கு வந்து வாழ்ந்து செல்கின்றன.

பிச்சாவரம் வனப் பகுதியில் உள்ள சதுப்பு நிலக் காடுகளில் மட்டுமே இறால் மற்றும் நண்டு போன்றவை அதிக அளவில் உற்பத்தியாகின்றன. இயற்கைச் சீற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தக் காடுகள் அமைந்துள்ளன.

[திரு. பி.எஸ். அருள்] [2001 செப்டம்பர் 4

இப்பகுதியில் பெரு உமரி, சிறு உமரி, மணி உமரி, வங்காரவாசி, கழி முள்ளி போன்ற தாவரங்கள் வளர்கின்றன. இதுபோன்ற சதுப்பு நிலக் காடுகளால் மட்டுமே புயலைத் தடுத்து கிராம மக்களுக்குப் பாதுகாப்புத் தரமுடியும்.

*பிற்பகல் 12–20*

கடந்த ஆண்டுகளில் ஒரிசாவில் ஏற்பட்ட புயலிலிருந்து சதுப்பு நிலக் காடுகள் இருந்த பகுதி மட்டுமே பாதுகாக்கப்பட்டது. 150 கி.மீ. வேகத்தில் அடிக்கும் புயலைக்கூட 20 கி.மீ. வேகமாக மாற்றிக் காட்டும் சக்தி படைத்த காடுகள் இவை. உலகிலேயே இதுபோன்ற சதுப்பு நிலக் காடுகள் என்று அழைக்கப்படும் Mangrove காடுகள் ஆஸ்திரேலியாவிலும், இரண்டாவதாக நமது தமிழ்நாட்டில் பிச்சாவரம் வனப் பகுதியிலும் அமைந்துள்ளன. நில அரிப்பைத் தடுத்துப் பாதுகாக்கின்ற கேடயமாகவும் இந்த வனப் பகுதி அமைந்துள்ளது.

விவசாய விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மூலமாகவும், வனத் துறை மூலமாகவும், அழிந்துபோன, தரைக் காடாக இருந்த இடங்களை – பொட்டல் சதுப்பு நிலப் பகுதி – வன இலாகா மூலம் மீன் முள் வடிவத்தில் வாய்க்கால்களை வெட்டி அதில் வளர்வதற்கு ஏற்ற மேஸ்ரோ இன விதைகளை நேர்த்தி செய்து அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நட்டு பராமரிக்கப்படுகிறது.

எம்.ஜி.ஆர். நகர் பகுதி வனத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இருளர் இன மக்கள் இங்கே அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். அரசு மூலம் வன மேம்பாட்டுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு, இருளர் சமுதாய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வனக் குழுக்கள் மூலம், அரசு ஒதுக்கீட்டால் கிடைக்கின்ற தொகையைக் கொண்டும், கனடா, ஜப்பான் போன்ற நாடுகளில் இருந்து பெறும் தொகையைக் கொண்டும், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (மணியடிக்கப்பெற்றது) சுய வேலைவாய்ப்புமூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நடவடிக்கை எடுத்து, கரை ஓரமாக உள்ள எல்லை பராமரிக்கப்படுகிறது. இதுபோன்ற Mangrove காடுகள் அழிவதற்குத் தண்ணீர்ப் பற்றாக்குறையே காரணம். இதை நிவர்த்தி செய்திட அரசு முகத்துவாரம் வெட்ட முன்வரவேண்டும். இருளர் சமுதாயத்தைச் சார்ந்த குடும்பங்கள் இத்திட்டத்தின்மூலம் பயனடைகின்றன.

வனத் துறையோடு ஒருங்கிணைந்த சுற்றுலா மையமாகவும் இது விளங்குகின்றது. இந்த சுற்றுலா சார்ந்த வனப் பகுதியில் படகுச் சவாரி செய்கின்ற வகையில் 4443 கால்வாய்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.



2001 செப்டம்பர் 4] [திரு. பி.எஸ். அருள்]

இந்த வனப் பகுதியை முன்னாள் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்களும், 1959 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் வந்து பார்வையிட்டுச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய 'இதயக்கனி' என்ற திரைப்படம் இந்த வனப் பகுதியில்தான் படமாக்கப்பட்டது.

சமீப காலத்தில் அன்புக்கு வழிவிட்டு, அறிவுக்கு வாழ்த்துப் பாடி, துணிவுக்குத் துணை நின்று, மக்கள் தீர்ப்புக்கு மகுடம் சூட்டிய காரணத்தால், மத்திய அரசால் பழிவாங்கப்பட்ட வீராங்கனை, தமிழகத்தின் முன்னாள் கவர்னர் பாத்திமா பீவி அவர்களும் இந்த வனப் பகுதியைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

தமிழகத்தில் வனப் பகுதியைச் சார்ந்த மிகப் பெரிய பேரறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம் இங்குதான் உள்ளது. கடந்த மே மாதம் இந்த வனப் பகுதியை கனடா நாட்டு உயர்மட்டக் குழுவினர் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். திமுக. ஆட்சியில் கேட்பாரற்று, சீரழிந்து, சீர்குலைந்த நிலையில் இருந்த இந்த பிச்சாவரம் வனப் பகுதிக்கும், வனம் சார்ந்த சுற்றுலா மையத்திற்கும், புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிய பொலிவு ஏற்படுகின்ற வகையில், பேரறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம் என்ற தோரண வாயிலும், இப்பகுதிக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகமாக இருப்பதால், இந்த வனப் பகுதியின் சாலைக்கு இருபுறமும் சோடியம் விளக்குகள் அமைத்துத் தரவும் அம்மா அவர்கள் முன்வர வேண்டும் என்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுச்சூழல் என்பது, வளர்ந்து வரும் விஞ்ஞான உலகிற்கு இன்றியமையாதது. சுற்றுச்சூழலைப் பாதுகாத்திட இதுவரை 16 மாவட்டங்களில் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளதையும், இம்மன்றம் மேலும் 14 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படவுள்ளதையும் மன நெகிழ்வோடு வரவேற்கின்றேன். 560 பள்ளி மற்றும் கல்லூரிகளில் இம்மன்றம் ஆரம்பிக்கப்பட உள்ளதை நன்றி உணர்வோடு வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு முதன்முதலாக தமிழகத்திலேதான் சுற்றுச்சூழல் விருதுகள் இவ்வாண்டில் வழங்கப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததை மனதாரப் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

53-228—8a

எனது புவனகிரி தொகுதியை ஒட்டியுள்ள சிதம்பரம் நகராட்சிப் பகுதி மற்றும் அரசு பொது மருத்துவமனை மூலமாக வெகுவாக வெளியேற்றப்படும் கழிவுநீர், கான்சாகிப் வாய்க்காலில் கலப்பதால், வாய்க்காலில் வரும் நீர் மாசுபடிந்து, கான்சாகிப் வாய்க்காலின் மூலம் பயன்பெறுகின்ற சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட கிராம மக்களும், 10000 ஏக்கர் நன்செய் நிலமும், 5000 ஏக்கர் புன்செய் நிலமும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்நீர் குடிநீரில் கலந்து விடுவதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டு, பொதுமக்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தும் நிலத்தடி நீரும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனால் உயிர்க் கொல்லி நோய்களான காலரா மற்றும் தொற்று நோய்கள் ஏற்பட்டு கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதோடு, விவசாயிகளுக்குச் சொந்தமான ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எனவே, இந்தக் கழிவுநீரை சுத்திகரிக்கவும், வீணாகின்ற கழிவுநீர் ஆற்றில் கலக்காத வண்ணம் குழாய்கள் மூலம் அப்புறப்படுத்திட ஆய்வு மேற்கொண்டும், தகுந்த நடவடிக்கை எடுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் முன்வர வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் சார்பில் கூழ் மர விநியோகம், சந்தன எண்ணெய் விற்பனையை அம்மா அவர்கள் உற்சாகப்படுத்தியுள்ளார்கள்.

திருப்பத்தூரில் சந்தனக் கிடங்குகளுக்குத் தீ வைத்த நிலை மாறி, சந்தன மரப் பொருட்களின் வேலைப்பாடுகள் உலக அளவில் முதன்மை நிலை பெற்றிட முயற்சி மேற்கொண்டுள்ள முத்தான முதல்வரைப் பாராட்டி மகிழ்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். ஒரேயொரு நிமிடம்.

படிக்காத பாமரர்களின் பாடப் புத்தகம் என்று அழைக்கப்படும் திரைப்படத் துறையிலே இன்றைக்குத் தவறான, ஆபாசமிக்க படங்கள் வெட்ட வெளிச்சமாக திரையரங்குகளில் திரையிடப்படுகின்றன. இந்த இழிநிலை நீடித்தால் மிகப் பெரிய கலாச்சாரச் சீரழிவு ஏற்படும் அபாயம் உள்ளது. பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, ஒழுக்கக் குறைவு ஏற்படுகின்றது. எனவே, இதுபோன்ற ஆபாசப் படம் திரையிடப்படும் திரையரங்குகளின் உரிமத்தை ரத்து செய்கின்ற நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.



*பிற்பகல் 12–25*

இந்த மாமன்றத்திலே நான் பேசக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்த இந்திய நாட்டின் இதயத் துடிப்பே, செந்தமிழ் நாட்டின் சீர்மிகு தலைவியே, எட்டையபுரத்து எழுச்சிக் கவிஞனின் எட்டாக் கனவினை எட்டிப்பிடித்து, பட்டம் ஆளவும், திட்டம் வரையவும் பாரதம் வியக்கும் புதுமைப் பெண்ணே, நாட்டை ஆளும் நடைமுறை கண்டு போட்டி போட்டு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்திட முந்தும் புதுவைக் குயிலின் புரட்சிக் கீதமே, புறநானூற்றின் புதிய வார்ப்பே, இயலிசை நாடகத் தமிழின் இனிமையே, மலைதனில் வாழும் மக்களின் உயிரே, பகைவரையும் அஞ்ச வைக்கும் அஞ்சாத சிங்கமே, அரசியல் வானின் அற்புதச் சுடரே, வாய்ப்பும், பணியாற்ற வழியும் கொடுத்த அன்புத் தலைவியே, தங்களை வணங்கி அமர்ந்து மகிழ்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், காட்டுவளம் குறித்த விவாதத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு பேரவைத் தலைவர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும் எனக்கும் சண்டையே உருவாக்கிவிடுவீர்கள் போலிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் என்று கூறுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைக் கூறி, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் – அந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய கட்டடத்தில் மட்டும்தான் மாசு இல்லாமல் இருந்து வருகிற ஒரு நிலையை நாங்கள் காண்கிறோம். அதன் அடிப்படையிலே இன்றைக்கு கடலூர் மாவட்டம் சிப்காட் பகுதியிலே 39–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அங்கே இருந்து வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளிலே 31 தொழிற்சாலைகள் இரசாயனக் கழிவுகளை வெளியேற்றக்கூடியதும். இரசாயன ஆவி என்று சொல்லக்கூடிய காற்றை மேலோங்கச் செய்கின்ற சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே சிப்காட் வளாகம் அமைந்திருக்கிறது. அங்கே ஷாசன் என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. 1997 ஆம் ஆண்டு காஸ்டிக் சோடா என்னும் கெமிக்கல் பட்டு அங்கே பணிபுரிந்த தொழிலாளர்கள் இரண்டு பேர்

இறந்திருக்கிறார்கள். அதேபோல, பென்சீன் என்று சொல்லக்கூடிய கண் எரிச்சல் ஏற்படுகின்ற ஒரு மருந்தை அங்கே தயார் செய்து, அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் இன்றைக்கு கண் புரை மற்றும் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டு அவதிக்குள்ளாகி வருகிறார்கள். அதைப்போல, எத்தில் ஆல்கஹால் பயன்படுத்தப்பட்டு, நரம்புத் தளர்ச்சி, கண் பார்வை மங்குதல் போன்ற நோய்கள் அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படுகிறது. அதேபோல, ராணி குடின் தயாரிப்பில் உள்ள மெர்கொபன் வாயு வெளியேறுகிறது. அந்த வெளியேற்றத்தின்மூலமாக அங்கேயிருக்கக்கூடிய மக்களுக்கு துர்நாற்றம், தலைவலி, தலைசுற்றல் போன்ற நிலைகள் ஏற்பட்டு மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்று, அந்த மக்கள் தொடர்ந்து பல்வேறு அவதிக்குள்ளாகி வருகிறார்கள். அதேபோல, சல்பூரிக் ஆசிட், டைபுரோட் ஆசிட், காஸ்டிக் அமிலம் போன்ற அமிலக் கழிவுகள் அங்கே இருக்கக்கூடிய சிப்காட் தொழிற்சாலைகளால் அங்கேயிருக்கக்கூடிய பகுதி மக்களுக்குப் பெரும் தலைவலியாக இருந்து வருகிறது.

நான் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோது, மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் பதிலளிக்கையில்கூட, அந்த ஆலைகளைப் பற்றி, அந்த ஆலைகளினுடைய எண்ணிக்கையைப் பற்றியெல்லாம் ஒரு விவாதம் மூண்டது. அதிலே எனக்குப் பேசுவதற்கு அதிக நேரம் இல்லை. ஆனால் அங்கு இயங்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகளினால் பெண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்பட்டு, குழந்தை பிறப்பு விகிதாச்சாரம் இன்றைக்குக் குறைந்து வருகிறது. பல்வேறு குழந்தைகளுடைய உயிரின வாழ்க்கை இன்றைக்கு பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது . தென்னை மரங்களிலேயிருக்கிற இளநீர்கள், அந்தத் தேங்காய்கள் எல்லாம் இன்றைக்கு சுத்தம் செய்யப்பட்ட விஷ நீராக மக்களுக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், தொடர்ந்து சிப்காட் வளாகம் அப்படி ஒரு நிலையில் அங்கு தொடர்ந்து கொண்டிருப்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் என்பார்கள். அதுபோல இன்றைக்குத் தமிழகத்திலிருக்கிற பவானி, நொய்யல், காவிரி, பாலாறு, உப்பனாறு, பழவனாறு, அமராவதி, வைகை, தாமிரபரணி என்று சொல்லக்கூடிய ஆறுகளிலே இன்றைக்குப் பாலாறு என்பது தெற்காசியாவிலேயிருக்கிற அனைத்து ஆறுகளைக் காட்டிலும் மிகக் கொடிய விஷத் தன்மை வாய்ந்த அமிலங்களையும், கழிவுநீர்களையும் உள்ளடக்கிய ஒரு ஆறாக இருக்கிற செய்தியை இன்றைக்குப் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.



அதேபோல அணு மின் நிலையங்கள் இன்றைக்கு கூடங்குளத்திலேயும், கல்பாக்கத்திலேயும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு அணு மின் நிலையங்களால் இன்றைக்குத் தமிழகத்தினுடைய எதிர்கால இளைய தலைமுறையினுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய அந்த அணுக் கசிவினால் – 1995 ஆம் ஆண்டுகூட கல்பாக்கம் அணு உலையில் கசிவு ஏற்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு வாழ்க்கைச் சூழலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, அந்த அணு உலையைப் பயன்படுத்துகிறபோது அந்த அணு உலையினால் மக்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படுகிறது, அந்த பாதிப்புகளிலிருந்து அந்த மக்களை எப்படித் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளோ அல்லது அவர்களுக்கான அறிவுரைகளோ வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–30*

அதேபோல. பவானி ஆறு இருக்கிறது. எங்கள் மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள்கூட, பவானி ஆற்றைக் காப்போம், பழவனாற்றைக் காப்போம் என்று 120 கிலோ மீட்டர் சைக்கிள் பயணம் சென்று மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார். ஆனாலும் இன்றைக்கு அது பலனளிக்கவில்லை. இன்றைக்கு உலக ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் மிக மோசமான ஆறு பாலாறு என்கிற நிலையைத் தந்திருக்கிறார்கள். அதேபோல இந்த ஆறுகளினால் இந்தியாவில் மட்டும் அல்ல, உலக அளவில்கூட இந்த அவல நிலைதான். டெல்லியில் பிரம்மாண்டம் என்று சொன்னார்கள், அது யமுனையை அழித்தது. கான்பூரில் தொழில் வளர்ச்சி என்றார்கள், அது கங்கைக்கு எதிரியானது. லக்னோவில் முன்னேற்றம் என்றார்கள், கோமதியைப் பதம் பார்த்தது. கல்கத்தாவில் வளர்ச்சி என்றார்கள், ஹூக்ளியைக் குற்றுயிராக்கியது. நமது மண்ணிலும்–சென்னையில் முன்னேற்றம் என்றார்கள், கூவம் நதியை சாக்கடை ஆக்கியது. திருப்பத்தூரில் தொழில் வளர்ச்சி என்றார்கள், நொய்யலைக் கொன்றது. மதுரையில் சாக்கடை வைகையைப் பாழ்படுத்தியது. கரூரில் மேம்பாடு என்றார்கள். அமராவதியை அழித்தது. வேலூரில் தோல் வளர்ச்சி என்றார்கள், பாலாற்றைப் பாழ்படுத்தியது. இப்படியாகப் பட்டியல் இட்டால், நம் நாட்டில் இருக்கக்கூடிய நீர் வளங்களை வளர்க்கக்கூடிய ஆறுகள் எல்லாம் இன்றைக்குப் பாழாகிப் போய் இருக்கிற உண்மை நிலை புரியும். இப்போது விளைநிலம் எல்லாம் நச்சு

நிலங்களாகவும், பயன்படுத்தவே முடியாத பாழ் நிலங்களாகவும் ஆகிவிட்டன என்பதை நான் இந்தப் பேரவையின் மூலமாக தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பவானி, நொய்யல், அமராவதி ஆற்றங்கரை ஓரங்களில் அமைந்துள்ள சாயப் பட்டறைகள், தார், மரக்கூழ் ஆலைகள், சாராய ஆலைகள், சர்க்கரை ஆலைகள், தோல் ஆலைகள், வார்ப்பட ஆலைகள், மின் முலாம் பூசும் ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு ஆலைகளின் கழிவுகள் நீரில் கலப்பதால் அந்த ஆறுகள் மிகவும் மாசடைந்து உள்ளன. நொய்யல் இறப்பின் வாசலில் கிடக்கிறது. பவானியை இந்தியாவில் மிக மாசுபட்ட ஆறுகளில் ஒன்றாக இப்போதுகூட ஆராய்ச்சியாளர்களுடைய கட்டுரை காட்டுகிறது. அதேபோல கடலூரில் இருக்கக்கூடிய ஒரு நிறுவனத்தில் – நாம் குடிக்கக்கூடிய குடிநீரில் 1 பி.பி.எம். ஃப்ளோரைடு இருந்தால் அதனால் உடலுக்கு எந்தவிதமான கெடுதலும் கிடையாது. ஆனால் அதுவே 2 பி.பி.எம்.–ஆக அதிகரிக்குமானால் உடலில் எலும்பு சம்பந்தமான வியாதிகள் உண்டாகும். மேலும் பற்கள் பழுதடைந்துவிடும். 2 பி.பி.எம். என்பது பத்து இலட்சம் துளிகளில் ஒரு துளி இருந்தாலே போதும் என்கிறார்கள். TANFAC என்கிற ஒரு நிறுவனத்தால் நிலத்தடி நீரில் அதிகமாக அது இன்றைக்குச் சேர்க்கப்படுகிறது, கலக்கப்படுகிறது. ஆசிடாகவும், ஆசிட் கழிவுப் பொருளாகவும் கலக்கப்படுகிறது. இவற்றை எல்லாம் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோல, பண்ருட்டி தொகுதியில் இந்துஸ்தான் லெதர் கம்பெனி என்ற ஒரு கம்பெனி இருக்கிறது. பல்வேறு மாநிலங்களிலிருந்து இன்றைக்கு எடுத்து வரப்படுகின்ற அந்த லெதர்கள் – தோல்கள் எல்லாம் அந்த முந்திரிக் காடுகளின் அடியிலே புதைத்து வைக்கப்பட்டு இப்போது முந்திரி விவசாயிகளுக்கு முந்திரிக்கு விலை இல்லாமல் வாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்தத் தருணத்திலே இப்போது அந்த முந்திரி, ஒரு சில காய்க்கின்ற முந்திரிகூட இப்போது காய்க்க முடியாத ஒரு நிலைமைக்கு, பட்ட மரமாக ஆகிக்கொண்டிருக்கின்றது. அதையும் இந்த அரசு கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதிலளிக்கின்றபோது C.E.T.P. என்று சொன்னார்கள். ஆனால் அந்த C.E.T.P. குஜராத்திலும், இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் இப்போது பலன் தருவதாக இல்லை என்று பல்வேறு சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள்.



மாறாக, தூய்மையான உற்பத்தி – Clean Plantation என்ற முறையில், மிகவும் மாசுபடுத்தும் ஆலைகளை அமைப்பதைக் கைவிட வேண்டும் என்றும், மேலும் கழிவுகளை ஒவ்வொரு நிலையிலும் தூய்மை செய்ய வேண்டும். இதனை இந்த அரசாங்கம் புதிதாகத் தொடங்கவிருக்கிற ஆலைகளுக்கு ஒரு condition ஆகச் சொல்லக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டு (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணை தலைவர் அவர்களே, ஒரு துறை முடிந்து இருக்கிறது. அடுத்து வனத் துறைக்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வனத் துறையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையை காலச் சூழ்நிலைக்கேற்ப அதிகரிக்க வேண்டும், பழைய கால நிலையில் உள்ளது. எனவே நடப்பாண்டில் எல்லா நிலைகளிலும் வனத் துறையில் சீருடைப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும், வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் குறைவாக உள்ளது. எல்லா நிலைகளிலும், அதாவது கார்டனர், வாட்ச்சர், ஃபாரஸ்ட்டர், ரேஞ்சர், டி.எஃப்.ஓ., கன்சர்வேட்டர் போன்ற அனைத்து நிலைகளுக்கும் ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்றும், வனத் துறையில் 24 மணி நேரமும் பணியாற்றும் சூழ்நிலை உள்ளதால், அதை 8 மணி நேரமாக்கி பணி நியமனம் செய்ய வேண்டும் என்றும், வாரத்திற்கு 2 நாட்கள் அவர்களுக்கு விடுமுறை நாட்கள் அளிக்க வேண்டும் என்றும் தினக் கூலி அடிப்படையில் நீண்ட காலமாக, 15, 20 வருடங்களாகப் பணியாற்றுபவர்களான வனத் தோட்டக் காவலர்களுக்கு மிகக் குறைவான சம்பளம், அதாவது 817 ரூபாய் வழங்கப்படுகிறது. அவர்களையும் பணி நிரந்தரம் செய்து, கூடுதலான சம்பளம் வழங்க வேண்டும் எனவும், வனத் துறையினரை சீருடைப் பணியாளர்களாகக் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வேல் முருகன், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் ஜப்பான் நிதியுதவியுடன் செய்யப்பட்ட காடு வளர்ப்புத் திட்டம், கூட்டு வனக் குழு அமைத்து செயல்படுத்தப்பட்ட அந்தத் திட்டத்தில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. நடவேண்டிய குறியீடு அளவிற்கு மரங்கள் நடப்படவில்லை, தடுப்பணைகள் கட்ட ஒதுக்கப்படும் பணத்தில், ஒரு இலட்சத்திற்கு 40 சதவிகிதத்தை அந்த அதிகாரிகளே எடுத்துக்

கொள்கிறார்கள். மீதிப் பணம் தடுப்பணைகள் கட்டத் தரப்படுவதால் தரம் குறைந்த தடுப்பணைகள் கட்டப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12–35*

அதுபோலவே, மகளிர் குழுவிற்கு நிதியுதவி தராமலேயே வனக் குழுத் தலைவரிடமும் கையெழுத்துப் பெற்று செய்யப்படும் முறைகேடு நடந்துகொண்டிருக்கிறது. அதுபோல, திட்டத்தைத் தொடங்கும் முன்பே வனக் குழுத் தலைவரிடமும் வெற்றுத் தாள்களிலே கையெழுத்துப் பெற்றுக்கொண்டு, வருங்காலத்தில் தங்கள் தேவைக்கேற்ப அதைப் பயன்படுத்துதல் போன்ற தவறுகள் கடந்த காலத்தில் நடந்துள்ளன. இதைக் களைந்து தற்போது அறிவித்துள்ள காடு வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த, சட்டமன்ற உறுப்பினரைக் கொண்ட ஒரு குழு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் சந்தனக் கிடங்குகளில் 30 ஆண்டுகளாக தினக் கூலிகளாக உள்ள 75 ஊழியர்களையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முந்திரி, காடு வளர்ப்புத் துறையிலே வருகிறது. பல்லாண்டுகளாகப் போராடிக்கொண்டிருக்கிறோம், முந்திரிக்குச் சரியான விலை நிர்ணயம் செய்யவில்லை. அந்த முந்திரிக் காடுகள் அழிந்து வருகின்ற நிலையிலே இருக்கின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இதனைக் கவனத்தில்கொண்டு முந்திரிக்குச் சரியான விலை நிர்ணயிக்க வேண்டும். முந்திரி விவசாயிகள், இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழக்கூடிய அந்த முந்திரி விவசாயிகளுடைய எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு இந்த அரசு முந்திரிக்குச் சரியான விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு ஒரு அரசுக் கலைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பண்ருட்டிக்கு அருகே ஒரு மேம்பாலம், இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று கூறி, இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க.ரா. கந்தசாமி, சத்தியமங்கலம்.

**திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளியங்காடு என்னும் குக்கிராமத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, 10 ஆண்டு காலம் கழகக் கிளைச் செயலாளராகப் பணியாற்றி, 9 ஆண்டு காலம் அம்மா தங்கள் திருப்பெயரால் இயங்கும் பேரவையின் டி.என்.பாளையம் கழக ஒன்றியச் செயலாளராகப் பணியாற்றி, 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற கழக அமைப்புத் தேர்தலில் அம்மா அவர்களின் நல்லாசியுடன் ஒன்றியக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றி வந்த இந்தச் சாதாரணத் தொண்டனை, சத்தியமங்கலம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளராக அறிவித்து, எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளரைவிட சுமார் 34 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த எங்கள் அன்னையே, இந்த ஜென்மம் என்ன; இன்னும் ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் எங்கள் சந்ததியே தங்கள் திருவடியைத்தான் வணங்கும் என்று என் கோடானுகோடி நன்றியைத் தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பித்து என் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன் தாயே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக்குவேன் எனச் சூளுரையேற்று செயலாற்றி வரும் எங்கள் தாயே, சத்தியமங்கலம் சட்டமன்றத் தொகுதியானது தமிழகத்தின் பரப்பளவில் மிகப் பெரிய தொகுதியாகும். கர்நாடகா எல்லையில் சுமார் 200–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களையும், மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கும் 13 ஊராட்சிகளையும், அடர்ந்த வனப் பகுதியையும் உள்ளடக்கிய மலைப்பகுதியைக் கொண்ட தொகுதியாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதிக்குட்பட்ட மலை மக்கள் வசிக்கும் வனப் பகுதிகளில் சத்தியமங்கலம் வனக் கோட்டம் மூலமும், கோபிச்செட்டிபாளையம் மூங்கில் வளர்ப்பு வனக் கோட்டம் மூலமும் கடந்த தி.மு.க. ஆட்சியில் 1997 ஆம் ஆண்டு முதல் ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்னும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்திற்குச் சுமார் ரூபாய் 5 கோடி அளவில் இரு கோட்டங்களுக்கும் நிதியுதவி அளித்து, கோபி மூங்கில் கோட்டம் மூலம் 13 இடங்களிலும், சத்தியமங்கலம் வனக்

கோட்டம் மூலம் 6 இடங்களிலும் மேற்படி திட்டத்திற்கு வனப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்களை உறுப்பினராகச் சேர்த்து செயல்படுத்த வேண்டிய இத்திட்டத்தில் அவர்களை உறுப்பினராகச் சேர்க்காமல், திமுகவைச் சேர்ந்தவர்களை உறுப்பினராகச் சேர்த்து ஏட்டளவில் மட்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்தி சுமார் 20% பணியைக்கூடச் செய்யாமல், இந்த TAP விதிமுறைப்படி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் அனைவரும் முந்தைய ஆட்சியின் புள்ளிகள் என்பதை இம்மாமன்றத்தின்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மலைப் பகுதியில் வசிக்கின்ற பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மலைவாழ் மக்களாகிய இவர்களுக்குச் சொந்தமாக எந்த உடைமையும் கிடையாது. இவர்களுடைய தொழில், இங்குள்ள வனப் பகுதிகளுக்குச் சென்று வனப் பகுதியிலே விளைகின்ற சிறு வனப் பொருட்களை சேகரம் செய்து சத்தியமங்கலம் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுத்து, அதன்மூலம் வருகின்ற கூலியை வைத்துப் பிழைத்து வருகிறார்கள்.

*பிற்பகல் 12–10*

சத்தியமங்கலம் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் வனப் பகுதிகளில் சேகரம் செய்யும் சீமார்புல் என்னும் ஈச்சம் புல்லானது தமிழகத்திலேயே தரமிக்க, தலைசிறந்த துடைப்பம் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இதை வெளி வியாபாரிகள் ஒட்டுமொத்தமாக வாங்கி, கவர்ச்சிமிக்க பிடிகளாகக் கட்டி துடைப்பம் தயாரித்து தமிழகம் முழுவதும் நல்ல விலைக்கு விற்று வருகிறார்கள். இத்துடைப்பத்தை இச்சங்கத்தின்மூலம் மலைவாழ் மக்களைக் கொண்டு தயாரித்து, தமிழகம் முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளிலும், கூட்டுறவுப் பண்டகசாலைகளிலும் விற்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்தால், ஊட்டியில் உள்ள தேயிலை விவசாயிகளின் துயரை நீக்கியதுபோல், இந்த சத்தியமங்கலம் பகுதி மலைவாழ் மக்களின் வாழ்க்கையிலும் ஒளி பிறக்கும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான செயல் திட்ட விளக்கங்களை கோரிக்கை மனுவாக தங்களிடம் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன் என்பதையும் பணிவடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த திமுக. ஆட்சியில் இந்த மலைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள்கூடச் செய்து கொடுக்கப்படவில்லை. ரேஷன் பொருட்களும்கூட நல்ல முறையில் வழங்கப்படவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பு ஏற்றவுடன் இம்மலைப் பகுதி மக்களுக்கு, நடமாடும் நியாய விலைக் கடை, மொபைல் வேன் மூலம் அமைத்து இந்த மலைவாழ் மக்களுக்கு அவர்களுடைய இருப்பிடத்திற்கே வேன் மூலம் அத்தியாவசியப் பொருட்களை வழங்க உத்தரவிட்டதற்கு இம்மாமன்றத்தின் வாயிலாக என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இங்குள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் உள்ள பத்ரிப்படுகு, இட்டரை, தடசலட்டி, பெஜலட்டி, ஒரத்தி, கெத்தேசால் ஆகிய கிராமங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தத்தெடுத்து, இங்குள்ள சுமார் 400 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கி, இவர்களுக்கு உடனடியாக தொகுப்பு வீடுகள், சாலைகள், குடிநீர் வசதி, மின்சார வசதி, கல்வி வசதி, சமுதாயக் கூடங்கள் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க சுமார் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கித் தந்ததற்கு இந்த மலைவாழ் மக்களின் சார்பாகவும், இந்தத் தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றத்தின் வாயிலாக கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்த மலைப் பகுதியில் உள்ள நிலங்களில் கேழ்வரகு, சோளம், தினை, சாமை ஆகிய உணவுப் பொருட்கள் மட்டுமே விளைவதால் இங்குள்ள மக்களுக்கு ரேஷன் பொருட்களை நூறு சதவிகிதம் வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிடுமாறு பாதம் தொட்டு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மலைப் பகுதியில் உள்ள மக்களுக்கு கடந்த ஆட்சியில் எந்த ஒரு நலத் திட்டமும் செய்து கொடுக்கப்படாமல் இப்பகுதி மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகிறது. அவர்களுக்கு தொகுப்பு வீடுகள், சாலை வசதி, குடிநீர் வசதி, கல்வி வசதி, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை வசதிகளை சிறப்பு அடிப்படையில் செய்து கொடுக்க ஆணை வழங்குமாறும், இங்குள்ள வனத் துறைக்குச் சொந்தமான 225 கிலோ மீட்டர் நீளமுள்ள பழுதடைந்த சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின்மூலமும், கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின்மூலமும் செய்து கொடுக்கவும், குன்றி, மாக்கம்பாளையம், இட்டரை, தடசலட்டி,

[திரு. க.ரா. கந்தசாமி] [2001 செப்டம்பர் 4

காளித்திம்பம் போன்ற உயரமான மலைப் பகுதி கிராமங்களுக்கு ஊட்டியில் உள்ளதுபோல் மினி பஸ்களை அரசே இயக்க வேண்டுமென்றும், இங்குள்ள தாளவாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு மருத்துவமனையாக மாற்றி அமைக்கவும், இதற்கென தனி ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கித் தரவும், இங்குள்ள மலைவாழ் மக்கள் கிராமங்களுக்கு நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைத்துக் கொடுக்கவும், ஆசனூர், கடம்பூர் போன்ற பகுதிகளில் உள்ள சுகாதார நிலையங்களுக்கு 30 படுக்கைகள் கொண்ட கட்டடங்கள் கட்டித் தரவும் ஆணை பிறப்பிக்கும்படி இம்மாமன்றத்தின் வாயிலாக அம்மா அவர்களை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதிக்கு உட்பட்ட மலைப் பகுதிகளுக்கு அருகில் அமைந்துள்ள உலகப் பிரசித்திபெற்ற ஸ்ரீ பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலானது அனைவரும் நன்கு அறிந்த கோயிலாகும். கடந்த தி.மு.க. ஆட்சியில் இக்கோயில் நிர்வாகத்தை தி.மு.க.வினர் கையில் எடுத்துக்கொண்டு, கோயிலில் போதிய நிதி இருந்தும், கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு எந்தவொரு அடிப்படை வசதியும் செய்து கொடுக்காமல் புறக்கணிக்கப்பட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இக்கோயிலுக்கு வருகை தந்து, நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தங்கத் தேர் செய்யவும், குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகள் ஆகியன செய்து கொடுக்கவும், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்கான உத்தரவு வழங்கியதற்கு இந்த மாமன்றத்தின் மூலமாக எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

*பிற்பகல் 12–4.5*

மேலும், இப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான பண்ணாரியம்மன் கோயில் சார்பாக கலை மற்றும் அறிவியல் தமிழ்ப் பண்பாட்டுக் கல்லூரி ஒன்றைக் கட்டித் தர அனுமதி வழங்க வேண்டுமென்ற என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இத்தொகுதியின் மையப் பகுதியில் அமைந்துள்ள, சீரோடும், சிறப்போடும் விளங்கிவரும் எங்களுடைய சத்தியமங்கலம் நகரத்தின் வழியாகச்



2001 செப்டம்பர் 4] [திரு. க.ரா. கந்தசாமி]

செல்லும் N.H.209 என்ற திண்டுக்கல் முதல் சாம்ராஜ் நகர் வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையின்... (மணியடிக்கப்பெற்றது) தேசிய நெடுஞ்சாலையினுடைய போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, நகரத்தின் மையமாகச் செல்லும் பவானி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்து, புறவழிச் சாலை அமைத்துத்தர வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை இம்மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சத்தியமங்கலம் நகரின் மையப் பகுதியில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான இடத்தில் மிக விரைவாக ஒரு புதிய கட்டடம் கட்டித் தரவும் மாண்புமிகு அழ்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

கருணை உள்ளம் கொண்ட தாயே, எனது தொகுதியில் தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரியகொடிவேரி அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்கும் திட்டத்தை கடந்த தி.மு.க. ஆட்சி கிடப்பில் போட்டு வைத்துள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பாண்டில் இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, இத்திட்டத்தைச் சீரோடும், சிறப்போடும் செயல்படுத்த வேண்டுமாய் இம்மாமன்றத்தின்மூலம் பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது தூக்கநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 13 ஊராட்சிகளும் சேர்ந்து பெரியகொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்னும் திட்டத்தை கடந்த 20 ஆண்டுகளாக யூனிட்–1, யூனிட்–2 என்று செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டமானது மக்கள் தொகைக்கேற்ப, இதில் குடிநீர் குறைவாக இருப்பதால் இத்திட்டத்தினுடைய இரண்டு யூனிட்டுகளும் சேர்ந்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் என்.ஆர். ரங்கராஜன். ஐந்து நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நிறையப் பேர் பேச வேண்டும்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. க.ரா. கந்தசாமி நன்றியைச் சொல்லி உரையை முடித்துவிடட்டும்.

**திரு. க.ரா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தச் சட்டப் பேரவையிலே மாண்புமிகு இதய தெய்வம், எங்களை வாழ வைத்து, வழிநடத்திச் செல்கின்ற எங்களுடைய அன்னை அவர்களின் ஆசியுடன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த வனத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, எனது கன்னிப் பேச்சைப் பேச வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கிற திசை நோக்கி வணங்கி, அவர்களின் பொற்பாதங்களை வணங்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கு பேசுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்த மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களை வணங்கி, எங்கள் தலைவர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களையும் வணங்கி நன்றி தெரிவிக்கின்றேன்.

எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் உள்ள கூட்டணிக் கட்சித் தலைவர்களையும், பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மக்களையும் வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமை, நல்ல சுகாதாரமான சுற்றுச்சூழலில் வாழ வேண்டும் என்று அவன் ஆசைப்படுவதுதான். ஆனால் நாகரிக வாழ்வில், முன்னேற்றப் பாதையிலே செல்லும்போது பலவிதமான பாதிப்புகள் சுற்றுச்சூழலிலே ஏற்படுகின்றன. உதாரணமாக, வாகனங்களின் புகை நகரங்களிலே மாசை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆற்றிலே சாயப் பட்டறைக் கழிவுகளும், பெரும் தொழிற்சாலைகளினுடைய கழிவுகளும் கலந்து ஆறுகளை மாசுப்படுத்தி வருகின்றன. அதேபோல் காட்டுவளம் குறைவதால் மழை பொய்க்கின்றது. தமிழ்நாட்டில் காடுகள் குறைந்து வருகின்றன. மொத்தப் பரப்பளவில் சுமார் 17 சதவிகிதம் மட்டுமே காடுகள் உள்ளன என்று கூறுகின்றார்கள். மொத்தப் பரப்பில் 35 சதவிகிதம் காடுகள் இருந்தால்தான் நல்ல மழையைப் பெறமுடியும் என்ற நிலைமை உள்ளது.



*பிற்பகல் 12–50*

அதேபோல, 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என யானை கட்டிப் போரடித்த' நமது தமிழகத்தில் வயல்களெல்லாம், குறிப்பாக தஞ்சைத் தரணியிலே இரசாயன உரங்களை உபயோகித்து பாழ்பட்டுள்ளது. இவையெல்லாவற்றையும் நாம் உணர்ந்து, மாசு நீக்கும் பணியினை அரசு மட்டுமல்லாமல் தனி மனிதனும் உணர்ந்து அதில் தீவிரம் காட்டி சுற்றுச்சூழலைக் காக்க வேண்டும். மேலும், அதிக அளவிலே மரம் நடும் பணியை நமது அரசு சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மாசு நீக்கும் பணிக்காக தமிழக அரசு நல்ல திட்டங்களை வைத்துள்ளது. அது வரவேற்கத்தக்கது. மாசு நீக்கும் பணியைக் கண்காணிக்க அரசு சாரா அமைப்புகளுக்குக்கூட அதிக அளவிலே அதிகாரம் அளித்து அதைக் கண்காணிக்கச் செய்தால் நாம் சுற்றுப்புறச்சூழலைக் காப்பாற்றக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெறுவோம் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சமீபத்தில் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை விதிக்க வேண்டுமென்று கூறி, இயற்கைப் பொருட்களாலான வீட்டு உபயோகப் பொருட்கள் கண்காட்சியினைத் தொடங்கி வைத்ததை நான் இந்த நேரத்திலே நினைவுகூர்கின்றேன். அதைப் பாராட்டுகின்றேன்.

அதேபோல கோவை மாநகராட்சி போன்ற பல உள்ளாட்சி அமைப்புகள் பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இது வரவேற்கத்தக்கது. இதேபோல பல அமைப்புகளும், உள்ளாட்சி அமைப்புகளும் இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டில் யாரும் இதுவரை செய்யாத சாதனையாக, பொது இடங்களில் புகை பிடித்து சுற்றுச்சூழலைக் கெடுக்கும் நிலையைத் தடை செய்து உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக அதற்கு என்னுடைய மனம் நிறைந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வனத் துறையில் சுமார் 22 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வரக்கூடிய வனச் சரக அலுவலர்கள் – Forest Range Officers – கண்டிப்பாக 7 வருடங்கள் பல தனிப் பிரிவுகளில் வேலை செய்தால்தான் A.C.F. ஆகப்

பதவி உயர்வு அளிக்கப்படும் என்கிற அரசாணையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். இரப்பர் போர்டு அல்லது தேயிலைத் தோட்டக் கழகத்தில் ஒரு வருடம் பணி செய்தால் போதும் என்ற அரசாணையைத் திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகக் குறைந்த நேரமே இருப்பதால் எனது தொகுதிப் பிரச்சினைக்கு நேரடியாக வந்துவிடுகின்றேன்.

பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், பட்டுக்கோட்டை நகரத்தின் மிக அதிகமான போக்குவரத்தைக் கருதி பை–பாஸ் சாலைகள் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பட்டுக்கோட்டை, பேராவூரணி சட்டமன்றத் தொகுதிகளில் மிக அதிகமான அளவிலே வாகனங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த வாகனங்களுக்கு F.C. எடுக்க வேண்டுமானாலோ, அல்லது லைசென்ஸ் எடுப்பதற்கு முயற்சித்தாலோ தஞ்சைக்குத்தான் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இதை மனதிலே கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டுக்கோட்டையிலே R.T.O.–மண்டலப் போக்குவரத்து அலுவலகத்தினுடைய கிளையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பட்டுக்கோட்டை தொகுதியில் மதுக்கூர் பேரூராட்சியில் இருக்கிற Primary Health Centre என்கிற P.H.C. என்பது மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. மருத்துவர்களே இல்லாத ஒரு நிலை இருக்கிறது. நமது அரசு அறிவித்திருக்கக்கூடிய, P.H.C.–க்கள் எல்லாம் சிறு மருத்துவமனைகளாக மாற்றப்படும் என்கிற திட்டத்தின்கீழ் அதை முதன்மையாகச் சேர்த்தால் அது அந்த மக்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் மீனவர்கள் அதிக அளவிலே துறைமுகத்திற்குச் சென்றுவரக்கூடிய சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் மீனவர்களுக்காக இருக்கக்கூடிய நிதியை உபயோகித்து அந்தச் சாலையைச் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, பட்டுக்கோட்டையிலே ஒரு அரசு பொறியியல் கல்லூரியை அமைக்க முன்வர வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையையும் இந்த நேரத்திலே வைத்து, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் 5 நிமிடங்களிலே தொகுதிப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லுங்கள்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காடு சம்பந்தமான பல்வேறு கருத்துகள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. காடுகளையும், அதேபோன்று சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாத்துக்கொள்வதற்கான பல நடவடிக்கைகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது, எடுத்துக்கொண்டிருக்கிறது. அதையெல்லாம் நான் வரவேற்கிறேன். ஆனால், நான் சுட்டிக்காட்ட விரும்புவது, காடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக மக்களைத் துன்பப்படுத்தக்கூடியதான ஒரு நிலை ஏற்படக்கூடாது. காட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லி 50 ஆண்டு காலம், 60 ஆண்டு காலமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலேயும், அதேபோன்று விளவங்கோடு தொகுதியிலேயும், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. தளவாய் சுந்தரம் அவர்களுடைய தொகுதியிலேயும் இன்று பல மக்கள், பல முறைகளிலேயுள்ள பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கே வீடுகளை வைத்து, இடங்களைப் பிடித்து, விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே அவர்கள் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக சாலை போடுவதற்கு வனத் துறை தகராறு செய்துகொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12–55*

1992 ஆம் வருடத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின் காரணமாக ஒரு பாலம் அடித்துச் செல்லப்பட்டது. அந்தப் பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்கு என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்க முயற்சித்த நேரத்தில்கூட வனத் துறை அதிகாரிகள் தகராறு செய்து, அதைக் கட்டவிடவில்லை. Principal Chief Conservator அவர்களுக்கு இந்த விஷயங்கள் நன்றாகத் தெரியும். இப்போது குடிதண்ணீருக்காகக் கிணறு போடுவதற்குக்கூட அனுமதி இல்லை. மின்சாரத்தைப்



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22 4969.
சென்னை-600 008

பொருத்துவதற்கான மனுக்கள் கொடுக்கப்பட்டு, மின்சாரத் துறை அதுகுறித்து நடவடிக்கை எடுத்தால் வனத் துறையைச் சார்ந்தவர்கள் தகராறு செய்கின்றார்கள். அதே நேரத்தில் அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர்களுக்கெல்லாம் ரெவின்யூ இலாகாவிலே பி – மெமோ கொடுத்துள்ளார்கள். அதேபோல அவர்கள் வீட்டு வரியை பஞ்சாயத்துக்குக் கட்டுகிறார்கள். இது சம்பந்தமாக நான் ஒரு விரிவான மனுவை 27–7–2001 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்த நேரத்தில் கொடுத்து இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆனால் இன்னும் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்படவில்லை. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நாள் சாவகாசமாக எங்களுடைய மாவட்டத்திற்கு வந்து, மாவட்ட ஆட்சித் தலைவர், வனத் துறை அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் போன்றவர்களை எல்லாம் கூட்டி வைத்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

காடுகளைப் பாதுகாக்க வேண்டும், வளர்க்க வேண்டும் என்று உள்ள நிலையை நான் ஆதரிக்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால், பல ஆட்கள் வனத்தோடு ஒட்டியிருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களை எடுத்து, உங்களுடைய ஏரியாவைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றால், அந்த இடங்களைத் திரும்ப எடுத்து, காடுகளாக மாற்றுங்கள், வளருங்கள், அதற்கு நாங்கள் ஆதரவு தருகிறோம். ஆனால் சிறு விவசாயிகளையும், ஏழை எளியோர்களையும் பாதிக்கக்கூடிய முறையில் – குறிப்பாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, வலியஏலா, கோதையாறு போன்ற பகுதிகளிலே இந்த நிலைமை இருந்துகொண்டிருக்கிறது.

நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், நம்முடைய வனத் துறையினுடைய பாலிசி நோட்டில் கடைசியாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அரசு ரப்பர் கார்ப்பரேஷன், இப்போது ஏற்பட்டிருக்கின்ற ரப்பர் விலை வீழ்ச்சி காரணமாக பயங்கரமான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது என்பதாகும். அதற்கு என்ன விமோசனம்? 25 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் ரப்பர் விலை வீழ்ச்சி காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரசு ரப்பர் கார்ப்பரேஷனின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. தொழிலாளர்களின் சென்ற மாத சம்பளம் பல டிவிஷன்களில் கொடுக்கப்



படவில்லை. எனக்கு இன்று காலை வந்த தொலைபேசிச் செய்தி என்னவென்றால், ஏதோ ஒரு டிவிஷனில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதாகும். 750 ரூபாய் Festival Advance கொடுக்கப்படலாம் என்று ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் 500 ரூபாய்க்கு மேலே கொடுக்க முடியாது என்ற நிலையை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். இப்படி ஒரு பண நெருக்கடி அவர்களுக்கு வந்திருக்கிறது. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன் ரப்பர் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேயிலைத் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். தேயிலையினுடைய விலை இன்று உயர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதேபோல ரப்பர் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கின்ற நேரத்திலே நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது, இது சம்பந்தமாக மனுக்களை நான் வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதேபோல பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கொடுத்திருக்கின்றேன். Natural rubber mixed bitumen roads is a suggested remedy for the above drawbacks by the Central Road Research Institute, New Delhi. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், "Reports of several studies and researches revealed that the usual life of the bitumen roads in India is only two to three years. The inherent drawbacks of bitumen, adverse weather conditions, heavy load vehicles, increased traffic, etc., caused reduction of useful service, reduced the life of bitumen..."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் உரையை முடியுங்கள். இன்னும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், Central Road Research Institute, அதேபோல, Road Congress recommend செய்திருக்கிற rubberisation of roads என்பதை அமல்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும். கொச்சியிலே இன்றைக்கு rubber mixed bitumen தயாரிக்கப்படுகிறது. அதை, செங்கோட்டை–மதுரை ரோட்டிலே பயன்படுத்திப் பார்த்திருக்கிறார்கள். Highways Research Centre, Guindy இதேபோன்ற ஆராய்ச்சியை நடத்தி...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 7 நிமிடங்கள் முடிந்துவிட்டன. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Rubber mixed bitumen –ஐப் பயன்படுத்தி ரப்பர் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முடியும். அதன் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்திலேயுள்ள 25,000–க்கும் அதிகமான குடும்பங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நிலை உருவாகும். அரசு ரப்பர் கழகத்தைக்கூட பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த அரசு ரப்பர் கழகத்திலே இருக்கக்கூடிய ஒரு பிரதான பிரச்சினையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நிதி நெருக்கடி இருக்கும் நேரத்தில், ஏறத்தாழ 50,000 ரூபாய்க்கும் அதிகமான சம்பளத்தைப் பெறுகிற 4 அதிகாரிகள் அங்கே பணிபுரிகிறார்கள். நான் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கூட கொண்டுவந்தேன். அங்கே ஒரு CMD–யை வைத்து இந்த வேலைகளைப் பார்த்தால் இந்தக் கழகத்தை இலாபகரமாக நடத்த முடியும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். அங்கே தயாரிக்கப்படுகிற ரப்பரை, தொழில்கள் தொடங்கவும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று கூறி, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன். 5 நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், வனத் துறை, செய்தி, திரைப்பட மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி, மதுரை, திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, சேலம், ஈரோடு, கோவை, ஊட்டி, நீலகிரி போன்ற பகுதிகள் தமிழகத்திலே காடுகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. தமிழகத்திலே இருக்கின்ற நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு நிலங்கள் காடுகளாக இருந்தால்தான் நல்ல மழையைப் பெறமுடியும் என்று விஞ்ஞானிகள் சொல்கின்றார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே, 17.56 சதவிகிதம்தான் காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளும் எப்படி இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, நான் வேதனைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நிலைமையைத் தெளிவாகவே சொன்னார்கள்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், கன்னியாகுமரியிலே ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். கடந்த காலத்திலே, அங்கு ஏற்பட்ட அந்த yield–ஐப் பார்க்கின்றபோது ரப்பர் வருமானத்தைப் பார்க்கின்றபோது அது குறைந்திருக்கின்றது. காரணம் என்ன? காட்டிலாகாவிலே இருக்கின்ற மேல்மட்ட அதிகாரிகள் முதல் கடைசி ஊழியராக இருக்கின்ற அந்த Watcher வரை ஒரு co–ordination இல்லை; ஒற்றுமை இல்லை. அவர்களிடத்திலே ஒற்றுமையின்மைதான் இவற்றிற்குக் காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெரிய அதிகாரிகள் மாவட்டத்தினுடைய தலைநகரம் அல்லது headquarters–ல் இருந்துகொண்டு, அவர்களுக்குக்கீழே இருக்கின்ற அதிகாரிகளின் நலனைப் பேணிக் காப்பதில்லை. காடுகளிலே செல்கின்ற அந்த Watcher/Guard –களுக்கு உரிய முறையில் பாதுகாப்பு இல்லை. குற்றம் செய்யக்கூடியவர்களை அவர்கள் பிடிக்கிறார்கள் என்று சொன்னால், ஏ.சி.யிலே வீற்றிருக்கின்ற அதிகாரிகள், ஒரு வரியில் ஓர் உத்தரவைப் போட்டு விடுகிறார்கள், அவர்களும் வெளியே போய்விடுகிறார்கள். காட்டிலே போய், மலையிலே, முட்புதரிலே, கொடிய விலங்குகளுக்கு மத்தியிலே, தவறு செய்கின்ற குற்றவாளிகளைப் பிடிக்கின்ற ஒரு சாதாரண அதிகாரிக்கு இந்தத் துறையிலே பாதுகாப்பு இல்லை. அப்படிப் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை ஏற்படுகின்றபோதுதான், மரங்கள் கடத்தப்படுகின்றன, வெட்டப்படுகின்றன, மான்கள் கொல்லப்படுகின்றன, யானைகள் கொல்லப்படுகின்றன, காட்டினுடைய செல்வங்கள் அழிக்கப்படுகின்றன. இந்த அழிவிற்கு யார் காரணம் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். காட்டில் கிடைக்கின்ற வருமானத்தைப் பொதுமக்கள் சரியாகப் புரிந்துகொள்ளாத ஒரு நிலை இருக்கிறது. ஆனால், ஆட்சியிலே இருப்பவர்களுக்கு அது நன்கு தெரியும். விவசாயத்திலே கிடைக்கின்ற வருமானத்தைக் காட்டிலும், காட்டிலே கிடைக்கின்ற வருமானம் அதிகம் என்பதைப் புள்ளிவிவரங்கள் தெளிவாகவே சொல்கின்றன. அப்படியிருந்தும், அதிகமான வருமானம் கிடைக்கக்கூடிய இந்தத் துறை நலிவுற்று இருப்பதற்கு என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, சமூக விரோதிகள், தேச விரோதச் செயல்களில் ஈடுபடக்கூடியவர்கள் காட்டில் இருக்கின்ற கனிமத்தையும், விலை மதிக்க முடியாத மரங்களையும் வெட்டி எடுத்து, ஒரு குறிப்பிட்ட மனிதனுடைய வளர்ச்சிக்காகவும், குறிப்பிட்ட ஒரு கூட்டத்தினுடைய வளர்ச்சிக்காகவும் இந்தக் காட்டு இலாகாவைப் பயன்படுத்தி, வனங்கள் இன்றைக்கு

அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் மழை இப்போது நம் பூமியிலே இல்லை.

*பிற்பகல் 1–05*

பலரும் குடிநீர்ப் பிரச்சினை என்று சொல்கிறோம். நிலத்தடி நீர் இன்றைக்கு எங்கே இருக்கிறது என்று கேட்டால், 400 அடிக்குக் கீழே நிலத்தடி நீர் போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னால், காட்டை நாம் அழித்துக்கொண்டே வருகிறோம். ஆகவே, நிலத்தடி நீர் கீழே போய்க்கொண்டிருக்கிறது. மழை வருவது இல்லை. மழை வரவேண்டுமென்று சொன்னால், காட்டைப் பாதுகாக்க வேண்டும். காட்டில் இருக்கின்ற மரங்கள் வெட்டப்படாமல் தடுக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு அரசு என்னதான் திட்டங்களைக் கொண்டுவந்தாலும், அந்தத் திட்டத்திற்கு நாம் எப்படி உறுதுணையாக இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, ஆட்சி ஒவ்வொரு முறையும் மாறுகின்றபோது, ஆட்சிக்கு வரக்கூடியவர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றத்தைச் சுமத்திக்கொண்டு, அதிகாரிகள்மீது குற்றத்தை வாரிவிட்டுவிட்டுப் போய்விடுகிறோமே தவிர, உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படுகிறார்களா; வனப் பொருட்கள் பாதுகாக்கப்படுகின்றனவா என்று சொன்னால், இல்லை. இந்த நிலைமையை மாற்றி அமைப்பதற்கு–

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடம் முடிந்துவிட்டது.

**திரு. போளூர் வரதன்:** சார், 4 நிமிடங்கள்தான் ஆயிற்று. நான், நீங்கள் சொன்ன நேரத்தைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். இதை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொன்னால், நாட்டிலே புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மக்கள் ஒன்றை மட்டும் எதிர்பார்க்கிறார்கள். அதாவது, பழைய வட ஆற்காடு மாவட்டத்திலே, 1997–லே 140 கோடி ரூபாய் மரங்கள் எரிந்துவிட்டன; சந்தன மரங்கள் என்று செய்தி. அதற்கு Vigilance and Anti–Corruption, S.P.–ஐ வைத்து ஒரு enquiry போட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் பேசிக்கொள்வது—500 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சந்தன மரங்களைக் கடத்தி எடுத்துவிட்டு, வேறு மரங்களை அங்கே கொண்டுவந்து எரித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இதனுடைய பின்னணியிலே இருப்பவர்கள் யார்? அதிலே ஈடுபட்டிருந்த அதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறாரே தவிர, இதுவரையிலும் suspend பண்ணப்படவில்லை. எப்படி இதிலே உண்மை கிடைக்கும்? எப்படி இந்த அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும்?



அரசாங்கத்தை நம்பி மக்கள், அந்தக் கிராமத்திலே இருக்கின்ற சாதாரண மக்கள், அங்கே இருக்கின்ற ஒரு இலையைக்கூட எடுக்கப் பயப்படுகிறார்கள். ஆனால், கடத்தல்காரர்கள் அதிகாரிகளின் துணை இல்லாமல் அந்த மரங்களை வெட்ட முடியுமா? எண்ணிப் பாருங்கள். காட்டிலே வழி இல்லை. காட்டிலே செல்வதற்குப் பாதை இல்லை. காட்டிலே வாழ்கின்ற மக்களுக்கு உணவு இல்லை. காட்டுவாசிகளாக இருப்பவர்களுக்கு மின்சாரம் இல்லை. இந்த நிலையிலே இருக்கின்ற மக்களுக்கு–

**திரு. துரைமுருகன்:** Point of order, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கப் போகிறார்.

**திரு. போளூர் வரதன்:** நான் பேசிய பிறகு பேசுங்கள், சார். (குறுக்கீடு) அண்ணன், நான் பேசிய பிறகு பேசுங்கள். உங்களை cross பண்ணவில்லை. நீங்களும் நார்த் ஆற்காடு; நானும் நார்த் ஆற்காடு. எனவே, அந்த எரிந்த மரத்தைப் பற்றித்தான் நான் சொல்கிறேனே தவிர, உங்களைப் பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள். அமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. போளூர் வரதன்:** ஆகவே, நான் சொல்வதெல்லாம் நாட்டினுடைய நலன் கருதி, ஏழையெளிய மக்களுடைய நலன் கருதி, வன இலாகா பாதுகாக்கப்படவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

வனம் என்று வரும்போது, செங்கல்பட்டிலே காட்டிற்குச் சொந்தமான மலைகள் இருக்கின்றன. அதை ரெவின்யூவிலே போய்க் கேட்டால் அது காட்டு இலாகாவிலே வருகிறது என்கிறார்கள். காட்டு இலாகாவிலே போய்க் கேட்டால், ரெவின்யூ என்று சொல்கிறார்கள். பணம் படைத்தவர்கள், சமூக விரோதிகள், ஆண்டாண்டு காலமாக அதை உடைத்து, கோடி கோடியாகப் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு காட்டு இலாகா நடவடிக்கை எடுக்க வில்லை. ரெவின்யூ இலாகா நடவடிக்கை எடுக்கவில்லை. அதை ஏலம் விட்டால், உரிய முறையிலே ஏலம் விட்டால், நம்முடைய அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்திருக்கும். அதைச் செய்யாததற்கு யார் காரணம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) ஐந்து நிமிடம் முடிந்துவிட்டது.

உங்களால் உரையை முடிக்க முடியாது என்று தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் பேசுவீர்கள். இருந்தாலும், சீக்கிரம், ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் யாரைப் பற்றியும் குறை சொல்லவில்லை. இந்த அரசுக்கு வருமானம் கிடைக்கின்ற வழிகளைச் சொல்லியிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை.

**திரு. போளூர் வரதன்:** உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் சொல்லுங்கள். நான் உட்கார்ந்து விடுகிறேன். எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை இதிலே. நான் சொல்கின்ற காரணங்கள் தவறாக இருக்குமானால், யார் மனதையும் புண்படுத்துமானால் நான் அமருவதற்குத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை என்பதால், பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மக்கள் எதிர்பார்க்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கத்திலே மக்கள் எதிர்பார்ப்பை நான் சொல்கிறேன். இன்றைக்கு இந்த நாடு வளம்பெற வேண்டுமென்று சொன்னால், காடு நலம்பெற வேண்டும். காட்டை அழிக்கின்ற வீரப்பன் – புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள் – 1000 கோடி ரூபாய்க்கு சந்தன மரங்களை வெட்டினான். 400 கோடி ரூபாய்க்கு மான் கொம்புகளையும், யானைத் தந்தங்களையும் அழித்தவன், இந்தக் காட்டிலே, இந்த நாட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்று சொன்னால், அவனுக்குப் பின்னணியிலே இருப்பவர்கள் யார்? காட்டு இலாகாவை நிர்வகிக்கக்கூடிய D.F.O., Ranger, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துணை இல்லாமல் அந்தக் காட்டிலே வீரப்பன் இருக்க முடியுமா? இதோ வீரப்பன் வருகிறார்; செய்தி. வீரப்பனுடன் பேசினார்கள்; செய்தி. வீரப்பன், கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணாவிற்கு நிபந்தனை வைத்தான்; செய்தி. எங்கே மூன்று மாதங்களாக அந்தச் செய்தியைக் காணோம்? எங்கே அந்த வீரப்பன் ஓடி ஒளிந்திருக்கின்றான் என்பதை இன்றைக்குச் சொல்லவே முடியவில்லை. காரணம், காட்டு இலாகாவினுடைய அதிகாரிகள் அலறுகிறார்கள். தூது செல்லக்கூடியவர்கள் இன்றைக்கு நடுங்குகின்றார்கள். ஏன்? புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இப்படிப்பட்ட சமூக விரோதிகளை விடாது, விட்டு வைக்காது என்கின்ற ஒரு நிலை இந்த மண்ணில் நடந்துகொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)



*பிற்பகல் 1–10*

ஆகவே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறையப் பேச வேண்டுமென்று இருந்தாலும், நேரத்தினுடைய அருமை கருதி சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். காட்டு இலாகாவில் இருக்கின்ற அத்தனை பேரும் குற்றவாளிகள் அல்ல. அந்த இலாகாவில் இருக்கின்ற அதிகாரிகளுக்குச் சம்பளம் போதாது. காவல் துறைக்குக் கொடுக்கின்ற பாதுகாப்பை நீங்கள் அவர்களுக்குக் கொடுத்தால், அவர்களால் திறமையாக வேலையைச் செய்ய முடியும். காட்டு இலாகாவிலே இருக்கின்ற மேல் அதிகாரிகள் செய்த குற்றத்திற்குகீழ் அதிகாரிகள் தண்டிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் களைந்து, உரிய முறையில் நடவடிக்கை எடுத்து, நாட்டிற்கு நல்ல சேவையைச் செய்யக்கூடிய இந்தக் காட்டு இலாகாவைக் காப்பாற்றுங்கள் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பேசுகின்றார்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். திருப்பத்தூரில் எரிந்த சந்தனக் கிடங்கில்- (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அனுமதி பெற்றிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களைப் பேசச் சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணக் குடும்பத்திலே பிறந்த என்னை இலட்சோப இலட்சத் தொண்டர்களில் (குறுக்கீடுகள்) ஒரு தொண்டனாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றிய என்னை (குறுக்கீடுகள்) திராவிட இயக்கத்தின்-

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் கொஞ்சம் இருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் அவருடைய வாக்கைக் காப்பாற்ற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் பேசுகின்றபோது அவர் சொன்னார்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் கொஞ்சம் இருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு கருத்தை, தவறான கருத்தை இந்த அவையிலே சொன்னார். நான் பதில் சொல்வதற்கு எழுந்தேன். பிறகு அவரும் yield ஆகவில்லையென்று சொன்னார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அவர் பேசி முடித்தவுடன் உங்களுக்குப் பேச நேரம் தருகின்றேன் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் இப்போது சொல்கின்றேன். அனுமதி கொடுக்காமல் போனதால்தான் இந்த மாதிரியெல்லாம் பிரச்சினை வருகிறது. ஒன்றுமில்லை. மாண்புமிகு பேரவை உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் திருப்பத்தூரிலே சந்தனக் கிடங்கு எரிந்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, அதை அதிகாரிகளுடைய ஒரு விசாரணை என்று சொன்னார். அதுவல்ல. இரண்டாவது, அங்கே இருக்கின்ற சந்தனக் கட்டைகளை அப்புறப்படுத்திவிட்டு வேறு கட்டைகளை வைத்து எரித்தார்கள் என்று சொன்னார். ஆனால், அதைத் தீவிரமாக விசாரித்து, – இன்றைக்கு நீங்கள் எந்த இராமன் அவர்களை ஒரு கமிஷனுக்குப் போட்டு இருக்கின்றீர்களோ, அதே நீதிபதிதான் – இராமன் கமிஷன் அமைக்கப்பட்டு, அவர் ஒரு ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே அந்த ரிப்போர்ட் இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. வேண்டுமானால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா உறுப்பினர்களுக்கும்கூட அந்த இராமன் கமிஷன் ரிப்போர்ட்டைத் தரலாம். அங்கே இருந்த சந்தனக் கட்டைகளை அப்புறப்படுத்திவிட்டு



வேறு கட்டைகளை வைத்து எரித்தார்கள் என்று அந்த அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. எனவே, இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைத் தரக்கூடாது. அதுதான் என்னுடைய எண்ணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. துரைமுருகன், இராமன் கமிஷன் ரிப்போர்ட்டை ஏற்றுக்கொள்ளலாம். அதே இராமன் கமிஷனை இப்போது அங்கீகரித்து இருக்கலாமே!

**திரு. துரைமுருகன்:** ஆனைக்கு அர்ரம் என்றால், பூனைக்கு புர்ரம் என்று சொல்லக்கூடாது... (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அனுமதி கொடுத்தீர்கள்.

**திரு. ஆஸ்டின்:** தலைவர் அவர்களே...

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே...

**திரு. போளூர் வரதன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) விட்டுவிடுங்கள். வரதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) எல்லோரும் இப்போது அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** திராவிட இயக்கத்தின் தலைமகன், தென்னாட்டின் பெர்னார்ட் ஷா என்று வர்ணிக்கப்படுகிற பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த அந்த மண்ணிலே என்னை வேட்பாளராகச் சுட்டிக்காட்டி என்னை வெற்றி பெறச் செய்த எங்களுடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியை அவர் பாதங்களிலே நான் வைத்து வணங்கி இந்த உரையை ஆரம்பிக்கின்றேன். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவி அவர்கள் கடந்த தேர்தலிலே எதை நம்பினார். மக்கள் சக்தியை நம்பினார். இந்த இயக்கத்திலே உள்ள இலட்சோப இலட்சம் தொண்டர்களின் சக்தியை நம்பினார்.

*பிற்பகல் 1–15*

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி எதை நம்பினார்? தன்னுடைய கையிலே உள்ள ஆட்சியை நம்பினார்.

அதிகாரத்தை நம்பினார். பண பலத்தை நம்பினார். அவர் பின்னாலே உள்ள அந்தக் கூட்டத்தை நம்பினார். அதுமட்டுமல்ல, தன் கையிலே உள்ள சன் டி.வி.–யை நம்பினார். அதுமட்டுமல்ல, அவருக்கு ஜால்ரா போடுகின்ற ஒரு சில குறிப்பிட்ட பத்திரிகைகளை நம்பி இந்தத் தேர்தலிலே அவர் இறங்கினார். ஆனால், நடந்தது என்ன? எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, மக்கள் சக்தியை நம்பினார். அந்த மக்கள் சக்திதான் டாக்டர் புரட்சித் தலைவியை இங்கே தமிழக முதலமைச்சராக உருவாக்கி உள்ளது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கே மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் நெப்போலியன் அவர்கள் பேசும்போது, எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்ற பெயரை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துவிட்டார்கள், எங்களுடைய தலைவர்தான் அந்தப் பெயரைச் சூட்டினார் என்று கூறினார். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு பழமொழி சொல்வார்கள். "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்று. எம்.ஜி.ஆர்.–ஐப் பற்றிப் பேசுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 1972–லே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துத்தான் இந்த இயக்கத்தை உருவாக்கினார்கள். அதுமட்டுமல்ல, பேரவை உறுப்பினர்களே, அப்போது அந்த இயக்கத்தை உருவாக்கியபோது, இந்த கருணாநிதி என்ன பேசினார்? கைபர் கணவாய், போலன் கணவாய், மலபார் கணவாய் – இவர்களுக்கெல்லாம் தமிழ்நாட்டிலே இடம் இல்லை என்று பேசினார். அதுமட்டுமல்ல. *(கூச்சல்)* அது உண்மை. ஆணித்தரமான உண்மை.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, முன்னாள் முதலமைச்சரைப் பெயர் சொல்லி அழைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கூச்சலிட்டனர்)*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டை ஏதோ...

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று, தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டே இருந்தனர்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகன், உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். ஆத்திரப்பட வேண்டாம், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்க் கட்சியின் தலைவரைக் குறிப்பிடுகிறபோது, முன்னாள் முதலமைச்சர் என்று குறிப்பிட்டால் போதும்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் வேறொன்றும் சொன்னார். என்ன சொன்னார்? இந்தத் தமிழ்நாட்டை காமராஜர் போன்ற பச்சைத் தமிழன்தான் ஆளமுடியும் என்று பேசினார். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். யாரை எதிர்த்துப் பேசினார்? அதுமட்டுமல்ல. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியபோது, நேற்றுப் பெய்த மழையிலே இன்று முளைத்த காளான் என்று பேசினார். இப்படிச் சொல்லியவர்கள் எல்லாம் இன்று ஏதோ, புரட்சித். தலைவருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு இங்கே பேசினார்கள். வக்காலத்து வாங்கிக் கொண்டு இங்கே பேசினார்கள் என்றால், அதை என்னவென்று நினைப்பது? இது கேலிக்கூத்துதான் என்று ஆணித்தரமாகச் சொல்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சித் தலைவரை, 1972–ல் இயக்கம் தோன்றியது முதல் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிற வரை எப்படியெல்லாம் எள்ளி நகையாடினார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவருக்காக வக்காலத்து வாங்குவதுபோலப் பேசுவது, மக்களை ஏமாற்றுவதற்கே என்று நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் நெப்போலியன் அவர்கள், பள்ளிக்கரணையிலே 85 ஏக்கர் நிலம் திரைப்படத் தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், அதற்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை. அது கடனிலே இருக்கிறது. அதைக் கொடுத்தவர்கள் எல்லாம் கடனிலே இருக்கிறார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார். நான் ஒன்றை மட்டும் கூறுகிறேன். இங்கே அருமைச் சகோதரர் மாண்புமிகு நெப்போலியன் அவர்கள், அந்த நிலம் கொடுத்தது புரட்சித் தலைவி அவர்கள் என்று ஒப்புக்கொள்கிறார். 85 ஏக்கரா நிலம் கொடுத்தது புரட்சித் தலைவி. எந்த ஆண்டு என்றால், 1985 ஆம் ஆண்டு *(குறுக்கீடு)* மன்னிக்கவும். 1995 ஆம் ஆண்டு. ஆனால், 1996–லே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அந்த ஐந்தாண்டு காலத்தில் நீங்கள் என்ன

[திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு] [2001 செப்டம்பர் 4

செய்தீர்கள் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக திரு. நெப்போலியனைக் கேட்கிறேன். பதில் சொல்ல முடியுமா? மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே செய்யவில்லை. ஏனென்றால், புரட்சித் தலைவி கொடுத்தார், அந்தப் பெயர் புரட்சித் தலைவிக்குச் சென்றுவிடும் என்ற காரணத்தால்தான் அந்த ஐந்தாண்டு காலம் அந்த நிலத்தை ஒப்படைக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் கிடப்பிலே போடப்பட்டது என்பதை நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. அந்த நிலம் கொடுத்தவுடன், அது தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திலே ஒப்படைக்கப்பட்டது. ஆனால், மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் ஐந்தாண்டு காலத்திலே முன்னாள் முதலமைச்சர் எடுக்கவில்லை என்பதை நான் நிச்சயமாக ஆதாரத்துடன் சொல்வேன். ஆகையால், ஏதோ புரட்சித் தலைவி திரைப்படத் துறை உலகத்திற்கு எதிரிபோல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–20*

அடுத்ததாக, செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற மானியக் கோரிக்கைமீது நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அரசும், சமுதாயமும் என்பது, ஒன்றுக்கு ஒன்று இணைந்து செயல்பட வேண்டியதற்கு ஒரு பாலமாக பத்திரிகைத் துறை விளங்க வேண்டும். பத்திரிகைத் துறையினுடைய நோக்கமே அரசும், சமுதாயமும்தான். ஒன்றுக்கொன்று இணைந்து, அரசு என்னென்ன செய்தியை வெளியிடுகின்றதோ, என்னென்ன திட்டங்களைத் தீட்டுகின்றதோ, என்ன செயல்பாடுகளைச் செய்கின்றதோ, அவையெல்லாம் பத்திரிகைத் துறை மூலமாக மக்களுக்குச் சென்றடைய வேண்டும். இதற்குப் பாலமாக விளங்குவதுதான் பத்திரிகைத் துறை. உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஜனநாயக நாட்டிலே Judiciary, Executive and Legislature–இந்த மூன்றும் மூன்று தூண்கள் என்று சொல்வார்கள். ஆனால், நான்காவது தூணாக விளங்குவது பத்திரிகைத் துறை என்பதை புரட்சித் தலைவி பல நேரங்களில் சொல்லியிருக்கிறார்கள். நான்காவது தூணாக இருக்கின்ற அந்தப் பத்திரிகைத் துறைக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று மாண்புமிகு நெப்போலியன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 1996–லே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராக இருந்தபோது, திருவான்மியூரை அடுத்த கொட்டிவாக்கத்திலே பத்திரிகையாளர் வீடு



2001 செப்டம்பர் 4] [திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு]

கட்டிக்கொள்வதற்கு அதிகபட்சமாக ஒருவருக்கு 40,000 ரூபாய் மானியமாகக் கொடுத்தார்கள். அதற்காக 50 இலட்சம் ரூபாயை அப்பொழுதே, 1996 ஆம் ஆண்டிலேயே ஒதுக்கியவர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, 1992 ஆம் ஆண்டு பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை 400 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தியவர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான்.

அடுத்ததாக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இப்பொழுது ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் பத்திரிகையாளர் நலனுக்காகப் பல புதிய திட்டங்களை உருவாக்கியுள்ளார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து உழைக்கும் பத்திரிகையாளரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் அல்லது அடுக்குமாடி வீடுகளை சுலபத் தவணையிலே வாங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, தனியார் தொலைக்காட்சிகளுக்கும், செய்தியாளர்களுக்கும் அட்டை. இதுவரை நாள் இதழ், வார இதழ், Fortnightly, Monthly இப்படிப்பட்ட பத்திரிகைகளில் உள்ள செய்தியாளர்களுக்குத்தான் அந்த செய்தியாளர் அட்டை—Accreditation Cards வழங்கினார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு, தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களில் உள்ள செய்தியாளர்களுக்கும் அரசு அங்கீகார அட்டை வழங்கும் என்று இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்களின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். செய்தியாளர்களுக்காக எந்த அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி செயல்படுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்ததாக, செய்தித் துறைக்கு என்று தனி இணைய மேடை ஒன்றை, ஒளிபரப்பு மேடை ஒன்றை புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். நவீன தொழில் நுட்பத் துணை கொண்டு செய்திகள் மற்றும் புகைப்படங்கள் உடனுக்குடன் பத்திரிகை மற்றும் ஏனைய செய்தி நிறுவனங்களுக்கு எளிதாகச் சென்று அடையச் செய்ய ஏதுவாக பத்திரிகை தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்படும். அந்த வகையிலே இந்த இயக்குநரகத்திலே செய்தித் துறைக்கு என தனி இணைய

மேடை–Web stream–ஒளிபரப்பு மேடை அமைக்கத் திட்டமிட்டு இந்த அரசு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இப்போது இருக்கின்ற அந்த நலத் திட்டங்களுக்கு புரட்சித் தலைவி எந்த அளவுக்கு வாரி வழங்கியுள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பத்திரிகைத் துறையிலே தொடர்ந்து 20 ஆண்டுகளும், அதற்கு மேலேயும் பணியாற்றும் ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள் பணியிலே இருக்கும்போது இயற்கை எய்திவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு இதுவரை 50,000 ரூபாய் கொடுத்து வந்தார்கள். ஆனால், வாரி வழங்கும் வள்ளல் புரட்சித் தலைவி அவர்கள் அதை ரூபாய் 2 இலட்சமாக உயர்த்தியுள்ளார்கள். ஏறத்தாழ 4 மடங்கு புரட்சித் தலைவி அவர்கள் உயர்த்தியுள்ளார்கள். பத்திரிகைகளுக்கு எதுவும் இந்த ஆட்சியிலே செய்யவில்லை என்று இங்கே பேசினார்கள். இப்பொழுது புரட்சித் தலைவி அவர்கள் வாரி வழங்கியுள்ளார்கள். அதுமட்டுமல்ல, பத்திரிகையாளர் ஓய்வூதியம் என்ற திட்டத்தில் இதுவரை பத்திரிகையாளர்கள் ஓய்வூதியமாக மாதம் 2000 ரூபாய் பெற்று வந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசியல் வாரிசான புரட்சித் தலைவி அவர்கள் அதை 3,000 ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் என்ற திட்டத்தில், பத்திரிகையாளர்கள் இயற்கை எய்தினால் அவர்களுடைய துணைவியார்கள் மாதந்தோறும் 500 ரூபாய் பெற்று வந்தார்கள். பல ஆண்டுகளாக 500 ரூபாய் மட்டும் பெற்று வந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு அதை 1,500 ரூபாயாக அதிகப்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு பதில் சொல்ல முடியுமா? பத்திரிகையாளர்கள் நலனுக்காக புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எப்பொழுதும் எதையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. இயேசு பெருமான், "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்றார். இன்று பத்திரிகையாளர்கள் புரட்சித் தலைவி அவர்களிடம் கோரிக்கையை வைத்தார்கள். அதை நிறைவேற்றுகின்ற அரசுதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–25*

பத்திரிகை பற்றிப் பேசும்போது ஒன்று நினைவுக்கு வருகின்றது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருடைய குடும்பப் பத்திரிகையிலே,



28–6–2001 தேதியிட்ட பத்திரிகை—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இதைப் படிக்கின்றேன்— "விழுப்புரத்தில் சன் டி.வி. நிருபர் கைது." மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைச் சொல்லி, "பத்திரிக்கா தர்மம் பாரீர்" என்று முன்னாள் முதல்வர் தன்னுடைய குடும்பப் பத்திரிகையான முரசொலியில் எழுதியுள்ளார். பத்திரிகை தர்மத்தைப் பற்றிப் பேசுவதற்கு இவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிப் பார்க்க வேண்டும். 1996–லே இருந்து 2000 வரை எதிர்க் கட்சியினர் ஆட்சியில் இருந்தனர். அப்போது என்ன செய்தார்கள்? ஜெயா டி.வி. தாக்கப்பட்டது. அப்போது ஜெயா டி.வி. கேமராமேன் தாக்கப்பட்டார். தினமலர் பத்திரிகை அலுவலகம் மதுரையிலே தாக்கப்பட்டது. என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? தினமலர் பத்திரிகையைப் பார்த்தீர்களானால், 2–3–1998–லே நடந்த அந்த வன்முறைத் தாக்குதல் சம்பவம் குறித்து, தினமலர் அலுவலக மேலாளர் பாலமுருகன், முதன்மை உதவி ஆசிரியர் இளங்கோ ஆகியோர் கூறியதாவது: "தினமலர் அலுவலகம்மீது திட்டமிட்ட முறையில் இந்த வன்முறைத் தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. அருப்புக்கோட்டை தொகுதியில் தேர்தல் நடந்தபோது, காரியாப்பட்டி போலீஸ் சரகம், சித்துமூன்றடைப்பு ஓட்டுச் சாவடி முன்பு முதல்வர் மகன் அழகிரி, மதுரை மாநகராட்சி துணை மேயர் மிசா பாண்டியன், தி.மு.க. கவுன்சிலர் குருசாமி ஆகியோர் முன்னிலையில் 50–க்கும் மேற்பட்ட கும்பல் ஒன்று பயங்கர ஆயுதங்களுடன் வன்முறையில் ஈடுபட்டு கள்ள ஓட்டுப் போட முயன்றதாக, அண்ணா தி.மு.க.–வைச் சேர்ந்த பஞ்சவர்ணம் என்பவர் போலீசில் புகார் கொடுத்தார்." 25 ஆம் தேதி தினமலர் இதழில் வெளியிடப்பட்டது. காரியாப்பட்டி போலீஸ் ஸ்டேஷனில் பதிவு செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில் அந்தச் செய்தி வெளியிடப்பட்டது. இந்தச் செய்தி தினமலரில் வந்த மறுநாளே, தினமலர் நிர்வாகத்தை அவதூறு செய்து அச்சுறுத்தும் வகையிலே, மதுரையிலே போஸ்டர் ஒட்டப்பட்டது. அதற்குப் பிறகு வன்முறை நடந்துள்ளது. எனவே, தினமலர் இதழில் வெளியான செய்தியின் எதிரொலியாகத்தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். மேலும் முதல்வர் மகன் அழகிரியின் 25–வது திருமண நாள் விழா ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டபோது, அரசு உயரதிகாரிகள் அந்த விழாவிலே பங்கேற்றது குறித்து தினமலர் இதழிலே செய்தி வெளியானது. அந்தச் சமயத்திலும் தினமலர் நிர்வாகத்தை அவதூறு செய்யும் வகையிலே

போஸ்டர் ஒட்டப்பட்டது. போஸ்டர் ஒட்டிய இருவரைக் கையும் களவுமாகப் பிடித்து ஆண்டாள்புரம் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்தோம். ** ஒருவர் இதில் அடங்குவார் என்றால் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாதவர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசக்கூடாது. அவர் பத்திரிகையிலே வந்ததைத்தான் படிக்கிறாரா அல்லது இவராகப் பேசுகிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பத்திரிகையிலே வந்ததைத்தான் படிக்கிறார். *(குறுக்கீடு)* பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் அவர் படிக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் படிக்கிறேன். தினமலர் பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் நான் படிக்கிறேன். 2–3–1998–ல் தினமலர் பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் தினமலர் பத்திரிகையிலே வந்ததைப் படிக்கிறார். அவராகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு தினமலர் அலுவலகத்திலே வெடிகுண்டு வீசி, பெரிய அளவிலே தாக்குதல் நடத்தத் திட்டமிட்டது; கட்டடங்கள் சேதம் அடைந்தன. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அமைச்சருடைய சொந்தக் கருத்து அல்ல. பத்திரிகையிலே வந்ததைப் படிக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சம்பவத்தில் உண்மையான குற்றவாளியை போலீசார் கைது செய்யவில்லை. ஏனென்றால் ** ஆனால், எய்தவன் எங்கோ இருக்க, அம்பை நோவானேன். *(மணியடிக்கப்பெற்றது)* இதைத்தான் கேட்கின்றோம். *(குறுக்கீடு)*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் பத்திரிகையிலே வந்த செய்திகளா? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* துரைமுருகன் உட்காருங்கள்.

• **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** பத்திரிகை தர்மத்தைப் பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறது என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர், தினமலர் பத்திரிகையிலே வந்த செய்தியை நீங்கள் படித்தீர்கள். அவை அனைத்தும் அவைக் குறிப்பிலே ஏறுகிறது. அதற்குப் பிறகு தங்களுடைய கருத்தாக நீங்கள் நேரடியாக அதைச் சொல்ல வேண்டியது இல்லை. தினமலர் பத்திரிகையிலே வந்த செய்தியே போதுமானது. அதுவே எல்லாவற்றையும் விளக்கிச் சொல்லக்கூடியது. ஆகவே தாங்கள் குறிப்பிட்ட ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** அடுத்ததாக, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை புதியதாக மாற்றி எம்.ஜி.ஆர். அறிவு நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெயர் மாற்றத்தை திரு. முக்தா சீனிவாசன் அவர்களே பாராட்டியுள்ளார்கள். அது பத்திரிகையிலே வந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்திலே நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக சிறந்த களமாக எம்.ஜி.ஆர். அறிவு நகர் அமையும் வகையிலே பெரும் திட்டம் ஒன்று புதிதாக வகுக்கப்படும். மேலும், அங்கே உலகத்தரம் வாய்ந்த மாநாட்டுக் கூடங்கள், அறிவியல் பூங்காக்கள், ஹோட்டல்கள் போன்ற வசதிகள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பகுதி–2 என்ற திட்டத்தின்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். இங்கே பேசியவர்கள் எங்களுடைய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆட்சியிலே என்னென்னவெல்லாம் செய்தோம் என்று பேசினார்கள். ஆனால், கடந்த ஆண்டு பகுதி–2 திட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வெறும் 4 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கினார்கள். புரட்சித் தலைவியைப் பொறுத்தவரையில் பத்திரிகையாளர்களின் நலன், அவர்களுடைய குடும்ப நலன் ஆகியவற்றில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஒரு கோடி ரூபாயை, 8 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு 8 வீடியோ விளம்பர வேன்கள் வாங்க 50 இலட்சம் ரூபாய், 4 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு 4 வீடியோ புரஜெக்டர் வாங்க 14 இலட்சம் ரூபாய், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் பயன்பாட்டுக்காக ஒரு பீட்டா ஒளிப்பதிவு கேமரா வாங்க 15 இலட்சம் ரூபாய், 9 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு 9 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்க 9 இலட்சம் ரூபாய், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திற்குத் தேவையான விளம்பரக் கருவிகள் வாங்க 5 இலட்சம் ரூபாய், 26 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு 26 வீடியோ கேசட் பிளேயர் வாங்க 1 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய், தலைமையிடத்தில் உள்ள புகைப்படப் பிரிவின் பயன்பாட்டுக்காக ஒரு டிஜிட்டல் கேமரா வாங்க 1 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய், தலைமையிட மக்கள் தொடர்பு அலுவலகப் பயன்பாட்டுக்காக ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க 1.15 இலட்சம் ரூபாய், தலைமையிட செய்தி வெளியீட்டுப் பிரிவுக்காக ஒரு கணினி வாங்க 0.98 இலட்சம் ரூபாய், ஆக அந்த ஒரு கோடி ரூபாயை வாரி வழங்கிய அரசுதான் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு என்பதை ஆணித்தரமாக இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'அடுத்ததாக, வனத் துறையை எடுத்துக்கொண்டால், அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் இங்கே பேசினார்கள். தன்னுடைய தொகுதியிலே எப்படியெல்லாம் அந்த சந்தன மரங்கள் கடத்தப்பட்டுள்ளன, கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று சொன்னார்கள். அதற்கு பதிலாக, இங்கு மாண்புமிகு முன்னாள் அமைச்சர், உறுப்பினர் துரைமுருகன் பேசும்போது, ராமன் கமிஷனிலே யார் பெயரையும் குறிப்பிடவில்லை என்று சொன்னார். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இந்த வழக்கு சம்பந்தமாக சுப்பிரமணியசாமியும், ஜனதா தளத் தலைவர் வடிவேலுவும் உயர் நீதிமன்றத்திலே ஒரு ரிட் போட்டார்கள். அதிலே தமிழ்நாடு போலீஸ்



சி.பி.சி.ஐ.டி. விசாரிக்கக்கூடாது, சி.பி.ஐ.தான் விசாரிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்குத் தொடர்ந்தார்கள். அதன் முடிவு, இதை சி.பி.ஐ. தான் விசாரிக்க வேண்டும், சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரிக்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பிலே அந்த உயர் நீதிமன்ற நீதிபதி என்ன சொல்கின்றார் என்றால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு படிக்கின்றேன். அந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு –"The Government has ordered entrustment of investigation by C.B.C.I.D. There was not only a delay but also an attempt to conceal the letting and receipt of the same which contains specific complaint against the fourth respondent Shanmugam"–சண்முகம், திருப்புத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், "The fourth respondent, a Member of the Ruling Party in the Legislative Assembly." ஆணித்தரமாகச் சொல்கிறார், அதில் சண்முகம் குற்றவாளி. அவரைப் பற்றி சி.பி.சி.ஐ.டி. சரியாக விசாரிக்கவில்லை என்று சொல்கிறார். Delay பண்ணியது என்று சொல்கிறார். அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர்களே, இதிலே வேறொரு இடத்திலே சொல்கிறார். "The State C.B.C.I.D. had not investigated with respect to the alleged political interference and in particular to the intervention by fifth respondent in W.P.No.14051/97 and other politicians." இதில் அரசியல் தலையீடு உண்டு, அரசியல்வாதிகள் இதில் தலையிட்டு இருக்கிறார்கள் என்று ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கே பேசும்போது, இராமன் கமிஷனிலே என்ன காரணத்தினால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது? இது நாச வேலையா, இல்லையா, என்பதைத் தெரிவிப்பதுதான் இராமன் கமிஷனின் நோக்கமே. அதே இராமன் கமிஷன் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்... (குறுக்கீடு)

*பிற்பகல் 1–35*

**THIRU. DURAIMURUGAN:** Sir, Point of Order.

**HON. THIRU. S.S. THIRUNAVUKKARASU:** I am not yielding.

**THIRU. DURAIMURUGAN:** Sir, Point of Order.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** இது நாசவேலைதான். இயற்கையாக ஏற்பட்ட தீ விபத்து அல்ல (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெள்ளத் தெளிவாக இராமன் கமிஷனிலே சொல்லியிருக்கிறது. (குறுக்கீடு) ஆனால், இங்கே உறுப்பினர் மறைத்துப் பேசுகிறார்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அமைச்சர் பேசி முடிக்கட்டும். அவர் இங்கே முறையாகப் பேசிக்கொண்டிருக்கிறார். அமைச்சர் விதிக்குப் புறம்பாக எதையும் சொல்லவில்லை. உயர் நீதிமன்ற நீதிபதியினுடைய தீர்ப்பை வாசித்துக் காட்டிக்கொண்டிருக்கிறார். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. இதில் ஒன்றும் Point of Order இல்லை. உட்காருங்கள். அமைச்சர் தொடருங்கள்.

**THIRU. DURAIMURUGAN:** A Member can raise a point of order at any time.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** I am not yielding. அந்த இராமன் கமிஷன் அறிக்கையிலே, இந்தத் தீ விபத்து பற்றி முன்னாள் முதலமைச்சர் பேசும்போது என்ன சொல்கிறார் என்றால்...

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொன்னேனோ, அதை மாற்றிச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமருங்கள். இராமன் கமிஷன் அறிக்கையைப் பற்றி அவர் சொல்லவில்லை. அவர் சொல்வது, உயர் நீதிமன்ற நீதிபதி வழங்கியிருக்கிற தீர்ப்பை, அந்த வாசகங்களை அப்படியே வாசித்துக் காட்டுகிறார்.

**திரு. துரைமுருகன்:** அதில் நான் மாறுபடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாறுபடாத காரணத்தால் பிரச்சினை ஒன்றும் எழவில்லை, உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொன்னேனோ, அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** I am not yielding. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தீ விபத்து பற்றி முன்னாள் முதலமைச்சர் ஓர் அறிக்கை விடுகிறார். அதில், ஏதோ குழந்தை கூட்டாஞ்சோறு ஆக்கியதால் அதில் ஏற்பட்ட தீ விபத்தால்தான் அந்த சந்தனக் கட்டைகள் எரிந்துவிட்டன என்று சொல்கிறார். *(சிரிப்பு)* மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் சொன்னார், இராமன் கமிஷனிலே குற்றவாளி என்று யாரையும் சொல்லவில்லை என்று சொல்கிறார். அந்தத் தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது... *(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அமைச்சரைப் பேசவிடுங்கள். உங்களுடைய கருத்தில் ஒன்றும் மாறுபட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** குழந்தைகள் விளையாட்டால் ஏற்பட்டது என்றார். ஆனால், குழந்தைகள் விளையாட்டால் அல்ல. *(குறுக்கீடுகள்) (கூச்சல் – குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், சுப்பையா பாண்டியன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

*(தி.மு.க. உறுப்பினர்களும், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், என்ன சொல்ல வேண்டும், சொல்லுங்கள். நீங்கள் எழுந்து விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இராமன் கமிஷன் அறிக்கையிலேயிருந்து அதில் கூறியிருப்பதை எடுத்து இந்த அவையில் அவர் படிப்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், நான் சொல்ல வந்ததை மீண்டும் மாற்றிச் சொல்கிறார். நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், அங்கிருக்கிற சந்தனக் கட்டைகளையெல்லாம் எடுத்து வேறொரு இடத்திற்கு அனுப்பிவிட்டு அங்கே தீ வைத்துவிட்டார்கள் என்று சொன்னார் மாண்புமிகு போளூர் வரதன் அவர்கள். ஆனால், இராமன் கமிஷன் அறிக்கையிலே அப்படியில்லை என்று சொன்னேன். ஒரு கமிஷன் அறிக்கையிலே குற்றம், குறை சொல்லியிருக்கலாம், அதை நான் சொல்லவில்லை. நான் சொல்வதற்கு எனக்கு எப்படி உரிமையுண்டோ, அதேபோல் அமைச்சருக்கும் அந்த உரிமையுண்டு. அதில் நான் தலையிடவில்லை. ஆனால், நான் சொன்னேன் என்று மாற்றிக்கொண்டு, அவர் அவருடைய கருத்தைச் சொல்லக்கூடாது., அதனால்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், முன்னாள் அமைச்சர் துரைமுருகன் சொன்னார் என்று சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் சொல்ல வேண்டியது முழுவதும் சொல்லலாம். அதைச் சொல்லலாம். அவர் சொன்னார் என்று சொல்ல வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** நன்றி. பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு அப்பாவி சிறுவன் செய்த விளையாட்டால்தான் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்று சொன்னார். ஆனால், தெள்ளத் தெளிவாக இராமன் கமிஷனிலே சொல்லியிருக்கிறார், ஒரு குழந்தையைச் சிக்க வைத்து, அவன்மீது பொறுப்பைச் சுமத்தச் செய்யும் முயற்சியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஏற்றவாறு வசதி வாய்ப்பான சாக்கு போக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சுதாகரன் என்ற சிறுவனால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்று கருத்துத் தெரிவித்தது குழந்தைத்தனமானது மட்டுமல்ல, கொடூரமானது என்றும் இங்கே சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல, மேலும் சொல்லுகின்ற அந்த இராமன் கமிஷனிலே... (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம் போதும், போதும்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** ஒரு சிறு பிள்ளையின் விளையாட்டுச் செயலால் ஏற்பட்டது என்று முத்திரையிட்ட இந்தக் குற்றச்சாட்டை, திருப்பத்தூர் காவல் துறையினர் பதிவு செய்தபோதிலும் இந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் துறை எடுத்துக்கொண்டவுடன் இயற்கையாகவே அவர்கள் பின்வாங்கியிருக்கின்றார்கள். ஆகையால், ஏதோ குழந்தையைக் காண்பித்து, அதனால்தான் தீ விபத்து ஏற்பட்டது என்று முன்னாள் முதல்வர் அவர்கள் சொல்கின்றார்கள். நான்கு முறை முதலமைச்சராக இருந்தார் என்று சொல்கின்றார்கள். ஆகவே, இப்படி குழந்தைத்தனமாக தவறான ஒரு செய்தியைக் கூறியுள்ளார் என்பதை நான் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வனத்தைப் பொறுத்தமட்டில், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்துள்ளார்கள். இந்த வனம் எப்படி அழிகிறது என்றால், தீ, கஞ்சா பயிர்கள் வளர்த்தல், ஆக்கிரமிப்பு, வன விலங்குகளை வேட்டையாடுதல், கள்ளத்தனமாக மரம் வெட்டுதல் போன்ற பல காரணங்களால்தான் இந்த வன வளம் பாதிக்கப்பட்டிருக்கிறது.



ஆகையால்தான், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு பகுதி 2 திட்டத்தின்கீழ் இந்த அரசு புதிதாக 50 பீட்டுகளை ஏற்படுத்தவும், அங்கே 50 வனக் காப்பாளர்கள் மற்றும் வனக் காவலர்கள் பணியிடங்களைத் தோற்றுவித்து அதற்காக ரூ.50,60,000/– செலவிலே இந்தத் திட்டத்தை உருவாக்கி இந்த அரசு முனைப்போடு செயல்படும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, இந்த வனப் பாதுகாப்பை வளப்படுத்த சேலம், வேலூர், கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய ஐந்து மண்டலங்களிலும் தலா ரூ.5 இலட்சம் வீதம் இந்த ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.25 இலட்சம் செலவில் கம்பியில்லா தொலைத் தொடர்புச் சாதனங்களை வழங்கவும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து T.A.P. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம். Tamil Nadu Afforestation Project. இந்தத் திட்டம் 1994–95–லே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கே மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் பேசும்போது, ஏதோ இந்தத் திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் கொண்டுவந்ததுபோல் ஒரு தவறான செய்தியை இந்த மன்றத்தில் சொல்லியுள்ளார். இந்தத் திட்டத்தை உருவாக்கியவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். இந்தத் திட்டம் ஜப்பான் நாட்டின் கூட்டுறவு வங்கி உதவியுடன் சுமார் ரூ.499.20 கோடி அளவிலே உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் அத்தனை அடிப்படை வேலைகளும் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுதான் செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அறுவடை செய்கின்ற காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் வந்து, செய்ததெல்லாம் நாங்கள்தான் என்று அறுவடைக்காக இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் வந்துவிட்டது. ஏதோ அவர்கள் கொண்டு வந்த திட்டம்போல ஒரு தவறான மாயையை இந்த மன்றத்திலே உருவாக்கியுள்ளார்கள். இந்தத் திட்டத்தின் நோக்கமே இந்தியாவிலே, இந்திய நாட்டிலே முதன்முதலாக கூட்டு வன நிர்வாக முறையிலே கிராம வளர்ச்சியையும், காட்டு வளர்ப்பினையும் ஒருங்கிணைப்பதுதான். இந்தத் திட்டத்தின் நோக்கம், வறுமை ஒழிப்பு, மண் வளப் பாதுகாப்பு,

மழை நீர் சேகரிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்குதல், கிராம நலப் பணிகள், மகளிர் மேம்பாடுத் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை இந்தத் திட்டத்தின் மூலமாக உருவாக்கியுள்ளார் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு 2001–2002–லே சுமார் 100 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவிலே 75,250 ஹெக்டேர் அளவிலே காடு வளர்ப்புப் பணிகள் மற்றும் 5 இலட்சம் மரக்கன்றுகளை இலவசமாக வழங்குவதற்கு எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல – Western Ghat Development Programme – மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் என்ற இந்தத் திட்டத்திலே 2001–2002–லே எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு சுமார் 3 கோடியே 27 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவிலே 1,100 ஹெக்டேர் பரப்பிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறது. காடுகள் தரமிழந்து வருவதைத் தடுக்கவும், வன விலங்குகளைக் கொல்வதைத் தடுக்கவும், தாவர இனத்தை அதிகப்படுத்தவும் இந்தத் திட்டத்தின் மூலமாக இந்த அரசு செயல்படுத்த இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, Hill Area Development Programme—மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இந்த ஆண்டு 2001–2002–ல் ரூபாய் 3 கோடியே 54 இலட்சத்து 10 ஆயிரம் செலவிலே 115 ஹெக்டேர் பரப்பளவில் பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–45*

அடுத்ததாக, வன ஆராய்ச்சிக் கல்விக்காக இந்த ஆண்டு எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1 கோடியே 47 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவிலே திருநெல்வேலி மாவட்டம், களக்காடு–முண்டந்துறை புலிகள் காப்பகம் அருகில் இதைச் செயல்படுத்த இந்த அரசு முனைப்போடு திட்டத்தைத் தீட்டியுள்ளது என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்ததாக, குளக்கரைகளில் தோட்டம் எழுப்ப விதித்துள்ள தடையாணையை நீக்குவது சம்பந்தமாக இங்கே ஒன்றைக் குறிப்பிடுகிறேன். எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி காலத்திலேயும், அதற்கு முன்னர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலேயும் கிராமங்களில் உள்ள ஏரிகள் – அதைக் கண்மாய் என்று சொல்வார்கள் – குளங்கள் ஆகியவற்றில் எல்லாம் கருவேல மரங்கள் நடுவதற்கும், முந்திரித் தோட்டங்கள் அமைப்பதற்கும் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியிலே அந்தத் திட்டத்தை இழுத்து மூடிவிட்டார்கள். அதற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லி வந்தார்கள். அதற்கு முக்கியக் காரணமாகச் சொல்வது, மழை கொள்ளளவு குறைந்துவிட்டது, ஆகையினால்தான் இதை நீக்கினோம் என்றார்கள். எப்படி மழை கொள்ளளவு குறையும்? அந்தக் கருவேல மரங்களை நட்டால், evaporation, ஆவியாவதை அது குறைக்கும். அதுமட்டுமல்ல, அதன்மூலமாக வனத் துறைக்கும் வருமானம். அதுமட்டுமல்ல (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். (Interruption) I am not yielding. நான் பேசி முடித்து விடுகிறேன். வருமானம் ஆண்டு ஒன்றுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அமைச்சர் பேசி முடித்துவிடட்டும், தடைப்படுத்த வேண்டாம். உங்களுக்கும் வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** நான் பேசி முடித்து விடுகிறேன். அதுமட்டுமல்ல, ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய 10–லிருந்து 12 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வந்தது. அந்த வருமானத்திலே 60 சதவிகிதம் அந்தந்த கிராமப் பஞ்சாயத்திற்குக் கொடுத்துவந்தார்கள். ஆனால் என்ன காரணம் என்று தெரியவில்லை. கடந்த ஆட்சியிலே அப்படிப்பட்ட திட்டத்தையே மூடிவிட்டார்கள்; மூடு விழா செய்துவிட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** பகுதி–2 திட்டத்திலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், திரு. துரைமுருகன் ஏதோ ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருவேல மரங்களை ஏரிகளிலே வளர்ப்பதை சென்ற கால ஆட்சியிலே நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்கும், மழை பொழிவதற்கும் சம்பந்தம் இல்லை. குறிப்பாக, ஏரிகளிலே பஞ்சாயத்து யூனியன் ஏரி, பஞ்சாயத்து ஏரிகள் எல்லாம் இருக்கின்றன. அதிலே இந்தச் செடிகளை வளர்ப்பதிலே எந்த ஆட்சேபணையும் இல்லை. பொதுவாக, பொதுப் பணித் துறை சம்பந்தமான ஏரிகளில் மட்டும் இதை வைக்க வேண்டாம் என்று நாங்கள் கருதினோம். காரணம், இப்போதே 620 ஏரிகளுக்கு, இப்போது உலக வங்கியிலே de–silting செய்ய அனுமதி வந்திருக்கிறது. De–silting–ல் தொகுதிக்கு ஒரு ஏரி கொடுக்கிறோம். அதுமாதிரி மக்கள் வருடாவருடம் ஏரிகளுக்குத் தூர் வாரவேண்டும் என்று கேட்கிறார்கள். எல்லோரும் இப்போது கேட்டார்கள். எங்கள் ஏரிகளிலே தூர் வாரவில்லை, தூர் வாரவில்லை என்றார்கள். ஆனால், கருவேல மரங்களை வைத்தீர்கள் என்றால் தூர் வார முடியாது. ஆகையினால்தான் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளில் மட்டும் அதை வைப்பதில்லை என்று முடிவு எடுத்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வனத் துறை அமைச்சர். காடுகளை வளர்க்க வேண்டுமென்று நினைக்கிறார். நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர், வெட்ட நினைக்கிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்து விடட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு உறுப்பினர் ஒன்றை மறந்துவிட்டார். கருவேல மரங்களை நடுவதினால் ஏரிகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து நாம் காப்பாற்றுகிறோம். இப்போது எங்கு பார்த்தாலும் ஏரிகள் ஆக்கிரமிப்பு என்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலத்திலே ஏரிகளை ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். ஆனால், இந்த மரங்களை நடுவதன் மூலமாக அந்த ஆக்கிரமிப்பிலிருந்து அந்தக் கிராமங்களை நாம் காப்பாற்றுகிறோம், அரசைக் காப்பாற்றுகிறோம் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

பகுதி–2 திட்டத்தின்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பசுமை வேலித் திட்டம் என்ற அருமையான திட்டத்தை கொண்டு வந்துள்ளார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் 20 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதாவது, Dry Districts என்று



சொல்வார்களே, வறண்ட மாவட்டங்களான 20 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 ஹெக்டேர் நிலத்தைச் சுமார் 3 இலட்சம் ரூபாய் செலவிலே பசுமை வேலி என்ற திட்டத்திலே அந்த 20 ஹெக்டேர் நிலத்திலே காய்ந்துள்ள நிலங்களிலே, இந்தத் துறையின் மூலமாக மரக் கன்றுகளை நட்டு, மக்களைக் கவருகின்ற வகையிலே, மக்களுக்கு அதிலே ஓர் ஈடுபாடு ஏற்படுகின்ற வகையிலே Highways Road–நெடுஞ்சாலை ஓரமாக அதை நடவேண்டும் என்றும், மக்களிடையே இதன் மூலம் காட்டினுடைய பயன்கள் மற்றும் காட்டை அழிக்கக்கூடாது என்ற ஒரு நல்லெண்ணத்தை உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தின்கீழ் பசுமை வேலித் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு 60 இலட்சம் ரூபாயை இந்த மானியத்திலே ஒதுக்கியுள்ளது.

*பிற்பகல் 1–50*

அதுமட்டுமல்லாமல், செங்கற்பட்டு கோட்டத்திலே இரண்டு Timber Godowns கட்டுவதற்காக ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கியுள்ளதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இரண்டு வன தணிக்கைச் சாவடிகள் நிரந்தரமாகக் கட்டுவதற்கு ரூபாய் 4,40,000/– ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்துவதற்காக ரூ.24 இலட்சத்தை புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

வேலூர் மாவட்டத்திலுள்ள அமிர்தி உயிரியல் பூங்காவை மேம்படுத்துவதற்காக ரூ.5 இலட்சத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் தங்குமிட வசதிகளை அதிகரிப்பதற்காக ரூ.15 இலட்சத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஒதுக்கியுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காடு வளர்ப்புத் திட்டம் – T.A.P.–II என்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். இந்தத் திட்டத்தினுடைய நிதி இலக்கு 780 கோடி ரூபாய். ஆண்டு

ஒன்றுக்கு 200 கிராமங்கள் வீதம் வளர்ச்சி பெற வேண்டும். காட்டை ஒட்டிய அந்தக் கிராமங்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையிலே 5 ஆண்டு காலத்திலே 1,000 கிராமங்கள் இந்தத் துறையின் மூலமாக எல்லா வசதிகளையும் பெறவேண்டும் என்ற நோக்கத்திலே இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இதற்கான பரிந்துரைகள் எல்லாம் டெல்லிக்கு அனுப்பப்பட்டு, டெல்லியினுடைய ஒப்புதலுக்காக அங்கே நிற்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, புதிய திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியுதவி. மேலும் சில புதிய திட்டங்களை வெளிநாட்டு நிதியுதவியுடன் பெற்றுத் தருவதற்குப் பணிக் குழு ஒன்று இந்த அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, அடுத்த இரண்டு மாதங்களில் தன்னுடைய பிரேரணையை அரசுக்கு சமர்ப்பிக்க உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வன இலாகாவிலே மூன்று கழகங்கள் இருக்கின்றன. ஒன்று, அரசு ரப்பர் கழகம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசினார்கள். இப்போது அந்தக் கழகம் நட்டத்திலே இயங்குகிறது என்றார்கள். நட்டத்திற்குக் காரணம், ரப்பர் விலை வீழ்ச்சி மட்டுமல்ல, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையும் ஒரு காரணம். ரப்பர் விலை வீழ்ச்சி மட்டுமல்லாது, நிர்வாகத் திறமை இல்லாத காரணத்தினாலும் அந்த நட்டம் ஏற்பட்டது. கடந்த 5 ஆண்டு காலமாக தொடர்ச்சியாக நட்டம். ஆனால், எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி 1991–96–லே ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அந்த நட்டம் ஏற்படவில்லை. கடந்த 5 ஆண்டு காலத்திலேதான் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நிர்வாகத் திறமையின்மைதான் காரணம் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, TANTEA – தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் குன்னூரிலே அமைந்துள்ளது. அதுவும் நட்டத்திலே இயங்குகிறது. 5 கோடியே 56 இலட்சம் ரூபாய் நட்டத்திலே இயங்குகிறது என்றால் நீங்கள் அதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த நட்டத்திற்குக் காரணம், தாராள இறக்குமதிக் கொள்கை ஒன்று. அடுத்ததாக நிர்வாகத் திறமையின்மை. எங்களுடைய ஆட்சிக் காலத்திலே எல்லாமே இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால், இப்போது நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன.



அடுத்ததாக TAFCORN– தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம். இந்தக் கழகம் இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், ஆண்டுதோறும் வரும் அந்த இலாப விகிதாச்சாரம் குறைந்து கொண்டு வருகிறது. இப்போது கடைசியாக அந்த இலாபம் என்னவென்றால் ரூ.1,37,000/–. கடந்த ஆண்டு இதைவிட அதிகம். ஆனால், 5 ஆண்டு காலத்தில் நாம் பார்த்தோம் என்றால், அந்த இலாப நோக்கு குறைந்து கொண்டே வந்திருக்கிறது.

அடுத்ததாக, Pollution and Environment. இன்று நாடு முழுவதும் சுற்றுச்சூழலைப் பற்றி நாம் பேசுகிறோம். நாம் சுவாசிக்கின்ற காற்று, நாம் குடிக்கின்ற நீர், பயன்படுத்துகின்ற நிலம், இந்த மூன்றுமே இப்போது சுற்றுச்சூழலினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். ஆகையால், இதைக் காப்பாற்ற வேண்டுமென்றால், இது ஒரு மக்கள் இயக்கமாக உருவாக வேண்டும். அப்படி ஒரு மக்கள் இயக்கமாக உருவானால்தான், மக்களுக்கு சுற்றுச்சூழல் நிலைமையை எடுத்துச் சொன்னால்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்.

பிற்பகல் 1–55

வெளிநாடுகளை எடுத்துக்கொண்டால், அந்த நாடுகள் எல்லாம் விஞ்ஞானத் துறையிலே முன்னேறிய நாடுகள். அங்கெல்லாம் கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. இங்கு சுற்றுச்சூழலுக்காக இருக்கிற சட்டம் மத்திய அரசினால் கொண்டுவரப்பட்டது. மாநில அரசு இதுவரை சட்டம் கொண்டுவரவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும் இதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவரவிருக்கின்றார். ஆகையால், இந்தச் சுற்றுச்சூழல் – நிலம், நீர், காற்று ஆகியவை மாசுபடுவதிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உருவாக்க வேண்டும். தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் அதை மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள். சிகப்பு, ஆரஞ்சு, பச்சை என்று. சிகப்பு என்றால் Highly polluting industry என்றும், ஆரஞ்சு என்பது அதைவிடக் குறைந்த, அதாவது சுமார் 50 சதவிகிதம் pollution என்றும், பச்சை என்பது pollution இல்லாத ஒரு நிலை என்றும் உருவாக்கியுள்ளார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். அதிலே மாண்புமிகு சந்திரசேகரன் குறிப்பிட்டார். இராணிப்பேட்டை தொகுதியிலே பாலாறே கெட்டுவிட்டது என்றார். அதற்குக் காரணம் யார்? நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதுசம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார்கள், உச்ச நீதிமன்றம் வரை

சென்றுள்ளார்கள். மக்கள் எல்லாம் வழக்குப் போட்டு அதற்கான நஷ்ட ஈட்டை அதற்குக் காரணமானவர்கள் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். சுற்றுச்சூழலைச் சிறப்பாக எந்த மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் நடைமுறைப்படுத்துகிறாரோ அவருக்கு எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பசுமை விருது என்ற ஒரு விருது வழங்கப்படும் என்று கடந்த 15 ஆம் தேதி சுதந்திர தினத்தன்று (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிட்டார். இதனுடைய நோக்கமே, நம்முடைய பகுதியை, நம் வீட்டை, நம் நாட்டை, சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும், மக்களிடையே ஒரு விழிப்புணர்வு தோன்ற வேண்டும் என்பதுதான்.

அந்த அடிப்படையிலேதான், புரட்சித் தலைவி அவர்கள் கடந்த மாதம் நம்முடைய சட்டசபை வளாகத்துக்கு முன்பாக உள்ள அந்தச் சாலையிலே பிளாஸ்டிக்கிற்கு மாற்றுப் பொருள் என்ன என்பதை விளக்கும் ஒரு நடமாடும் கண்காட்சியைத் துவக்கி வைத்தார்கள். இதில் பிளாஸ்டிக்கினால் எந்த அளவிற்கு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், பிளாஸ்டிக்குக்கு மாற்றுப் பொருள் என்ன என்பதெல்லாம் அந்தக் கண்காட்சி மூலமாக விளக்கப்பட்டது. சென்னையிலே துவக்கி வைக்கப்பட்ட அந்த நடமாடும் கண்காட்சி மக்களிடையே பெரும் வரவேற்பைக் கண்டதனால் மேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இப்படிப்பட்ட கண்காட்சிகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்க வேண்டும், மக்களிடையே, பிளாஸ்டிக்கை உபயோகப்படுத்தினால் எப்படிப்பட்ட தாக்குதலை உடலுக்கு ஏற்படுத்துகிறது என்பதையும், பிளாஸ்டிக்கிலுள்ள டையாக்ஸின் என்ற நச்சுத் தன்மையால் மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்கிற வகையிலே அந்தக் கண்காட்சிகளை உருவாக்க இருக்கிறார்கள். அந்தக் கண்காட்சியிலே பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் என்பதையும், மாற்றுப் பொருளாக எதை, எதை நாம் உபயோகப்படுத்த வேண்டும் என்பதையும்பற்றி ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கவிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரமும், காலமும் இல்லாத காரணத்தால் மற்ற உறுப்பினர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் விளக்கங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆகையால், அதையே என்னுடைய பதிலாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கை தட்டுகிற உறுப்பினர்களுக்குப் பசி அதிகம் என்று தெரிகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தெரிவித்த சில கருத்துகளுக்கு நேரமில்லாத காரணத்தினால் நான் பதில் கூற இயலவில்லை என்றாலும், அவையெல்லாம் அவைக் குறிப்பிலே இடம்பெற்றிருக்கிற காரணத்தினால் அவற்றின்மீது தகுந்த நடவடிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த நான்கு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**திரு. து. நெப்போலியன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், நீங்கள் ஆரம்பித்து வைத்தீர்கள், முடித்தும் வைக்கிறீர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது ஒரு கருத்தைச் சொன்னார். தவறான தகவலைச் சொன்னார். பத்திரிகையாளர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று நான் சொன்னதாகச் சொன்னார். நான் அப்படிச் சொல்லவே இல்லை. இரண்டாவது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அப்படிச் சொல்லவே இல்லை. உட்காருங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** எம்.ஜி.ஆர். பற்றிப் பேசுவதற்குத் தகுதியில்லை என்று சொன்னார். நான் திரைப்படத் துறையில் 75 படங்களுக்கு மேல் நடித்துவிட்டேன். அவர் துறை அமைச்சராக இருக்கலாம். எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட கட்சியினுடைய அமைச்சராக இருக்கலாம். ஆனால், அவர்களைவிட அதிக உரிமை எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** அந்தக் கட்சிக்குத் தகுதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெப்போலியன், கலைத் துறையைச் சேர்ந்தவர் என்ற முறையில் உங்களுக்கு அதிக உரிமை இருக்கிறது. அதை ஒத்துக்கொள்கிறார். அரசியல் ரீதியாக ஏற்பட்ட போராட்டத்தைத்தான் அவர் சொன்னார். அமைச்சர் அரசியல் ரீதியாக நடந்த போராட்டத்தைத்தான் சொன்னாரே தவிர, கலைத் துறையைச் சேர்ந்த உங்களுக்கு முழு உரிமை அதிலே இருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை.

## (அ) கோரிக்கை எண் 37 – சுற்றுச்சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37–சுற்றுச்சூழல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.3,83,43,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 44 – காட்டுவளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 44– காட்டுவளத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.



**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.97,57,97,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 46 – செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46– செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. நெப்போலியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.24,78,70,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஈ)கோரிக்கை எண் 58 – காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 58, காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.கே. வேதரத்தினம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,26,78,53,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் செய்தி–விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

*பிற்பகல் 2–05*

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (5–9–2001) வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 5–9–2001 அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்காக எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2001 செப்டம்பர் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

## 7. அறிவிப்பு

### (ஆ) உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 20 – வேளாண்மை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20 – வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். பூங்கொத்து கொடுத்ததற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.



2001 செப்டம்பர் 4]

***மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1163,52,88,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1391, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1163,52,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 137, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1163,52,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2958, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1163,52,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1477, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3366*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1821*, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3106*, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3037*, திரு. சு. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2727*, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2983*, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3188*, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2621*, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *870*, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3066*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய *20* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1163,52,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *762*, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1974*, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1402*, திரு. ஆர். சக்ரபாணி.



**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கூடுதலாக சேமிப்புக் கிடங்கு அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய *20* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1163,52,88,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2046*, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3062*, திரு. செ.கு. தமிழரசன், இருக்கையில் இல்லை.

## (ஊ) கோரிக்கை எண் 52 – வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் *52*–வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய *52* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.9,48,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *919*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலையிலுள்ள மந்தாரக்குட்டை கிராமத்தில் (ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்) பயிரிடப்படாமல் உள்ள நிலங்களைப் பயிர் செய்ய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கி, சொட்டு நீர்ப்பாசன வசதியையும் இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,48,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2941, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,48,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2591, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,48,11,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1842, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3025, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2687, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3126, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 897, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 781, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி.

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையானது, தமிழகத்தைப் பொறுத்தவரை மிக முக்கியமான துறையாகும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இந்திய தேசத்திற்கே இந்தத் துறை மிக முக்கியமான துறை. நம்முடைய தேசம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குகிற தேசம். வேளாண்மை அதிகம் நடக்கும் தேசம். அந்த அடிப்படையில் இந்தத் துறையில் இணைந்து பணியாற்றுகிற சில உட்பிரிவுத் துறைகளும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. பொறியியல் துறை, அறிவியல் துறை, வேளாண்மை அறிவியல், வேளாண்மை பொறியியல், ஆராய்ச்சி நிலையங்கள், பாசன வசதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சியைப் போக்கும் திட்டம், விதை பரிசோதனைத் திட்டம், விதை ஆய்வுக்கு உரிய திட்டம், உழவர் பயிற்சி நிலையங்கள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள் போன்ற

@343 முதல் 487 வரையிலான பக்கங்களில் இணைப்பு-V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

உட்பிரிவுகள் இணைக்கப்பட்டு அந்தத் துறைகளும் இணைந்து பணியாற்ற வேண்டும். இதைத் தவிர்த்து, வேளாண்மைக்கு உதவி பெறும் துறைகளும் இதற்கு மிக முக்கியமானவை.

*பிற்பகல் 4–35*

கூட்டுறவுத் துறை, நீர்ப்பாசனத் துறை, இவையும் இணைந்தால்தான் இந்தப் பாசனத் திட்டத்தை உள்ளடக்கி வேளாண்மைத் துறை பெருமைப்படும். அதன் அடிப்படையில் ஒரு கருத்தை உங்கள் மத்தியிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் மழை சிற்சில நேரங்களில் விட்டு விட்டுத் தூறினாலும், மேட்டூர் அணை ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறந்தாலும், அது திறந்ததன் அடிப்படையிலே இன்றைக்கு சென்ற ஆண்டைவிட 32 சதவிகிதம் அதிகமான நிலம் பயிரிடப்படுகிறது என்று சொன்னாலும், ஒரு இலட்சத்து சொச்சம் ஹெக்டேர் நிலம் குறுவை சாகுபடி செய்யப்படுகிறது என்று இங்கே அறிவித்திருந்தாலும்கூட, அந்த நிலங்களுக்குப் போதுமான நீர், கடைமடைப் பகுதி வரை சென்று, அந்தத் தண்ணீர் பாய்வதற்கான வாய்ப்பை நீர்ப்பாசனத் துறை அளித்திருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டு, ஒரு வார காலத்தில் முறை வைக்கப்பட்டுவிட்டது. வழக்கம்போல் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் சென்று, உழவு செய்கின்ற காலம் வரையில், நடவு நட்டு, குறுவை நடவு முடிந்து, பிறகுதான் பாசனத்தில் முறை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதன்படிதான் சென்ற முறை எங்கள் ஆட்சியிலேகூட அப்படி ஒரு முறை வைக்கப்பட்டு, அப்போது இருந்த குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டு சிக்கனமாகச் சாகுபடி செய்யப்பட்டது.

இந்த முறை, இத்தனை நாட்கள் தண்ணீர் கொடுத்தோம் என்று பொதுப் பணித் துறையினர் சொல்வதற்குத் தகுதியாக தண்ணீரை முறை வைத்து மாற்றி, குறைத்துக் கொடுத்த காரணத்தினால், கொஞ்சம் தண்ணீர் இருந்தும்கூட கடைமடைப் பகுதிக்குப் போய்ச் சேராத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது கொஞ்சம் வருத்தப்படவேண்டிய சூழ்நிலை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், அரசியலைக் கலக்க நான் நிச்சயமாக விரும்பவில்லை. காரணம், இது உயிர்நாடிப் பிரச்சினை.



இன்றைக்கு நம்மிடத்திலே தேவையான அளவிற்கு உணவு கையிருப்பு இருக்கிறது என்று சொன்னாலும்கூட, அந்த நிலை மாறி வருவதற்கு வெகுகாலம் ஆகாது. ஒரு பசலி பொய்த்து, உற்பத்தி குறைந்துவிடுமேயானால் – நம்முடைய மாவட்டம், அதாவது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், அதைப்போலவே திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகள், அதைப்போலவே தென் ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள், அதாவது காவிரி டெல்டா பகுதியில் சாகுபடி செய்வதற்குத் தகுதியான நிலம் எவ்வளவு இருக்கிறது என்ற கணக்கைப் பார்த்தால், மற்ற மாவட்டங்களைவிட இந்த மாவட்டங்களில்தான் அதிகமான நிலப்பரப்பு சாகுபடிக்குத் தகுதியான நிலங்களாக இருக்கின்றன – உணவுத் தட்டுப்பாடு வந்துவிடும்.

1964–ல் இந்த மன்றத்திலே நான் பணியாற்றியபோது ஒரு கேள்வியை நான் கேட்டேன். தஞ்சை மாவட்டத்தில் சாகுபடிக்குத் தகுதியான நிலம் எவ்வளவு என்று கேட்டேன். அதற்குப் பிறகு அதில் இருபோகச் சாகுபடிக்குத் தயாரான நிலம் எவ்வளவு என்ற ஒரு கேள்வியைக் கேட்டேன். அப்போது 13 இலட்சத்து 40 ஆயிரத்து 150 ஏக்கர் நிலம் சாகுபடிக்குத் தகுதியானதாக இருக்கிறது என்ற பதில் கிடைத்தது. அதிலே 50 ஆயிரம் ஏக்கர்தான் சாகுபடிக்கு, இருபோகச் சாகுபடி செய்யும் நிலம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நிலையில் இன்றைக்குக் கொஞ்சம் அபிவிருத்தி அடைந்திருக்கலாம். அதுபோலவே அந்த நிலங்களை, வீடு கட்டுவதற்கு, மற்ற காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதன் மூலம் சற்றுக் குறைந்தும் இருக்கலாம். எப்படியிருந்தாலும், 14 இலட்சம் ஏக்கருக்குக் குறையாமல் இந்த காவிரி டெல்டா பகுதியில் சாகுபடிக்குத் தகுதியான நிலம் இருக்கிறது.

மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்த காலத்திலே பசுமைப் புரட்சியை அறிவித்தார்கள். அந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்தை மேற்கொண்டு, தமிழகத்தில் பெருவாரியாக முயற்சி எடுத்துக்கொண்டு, இந்தத் துறை சிறப்பாகப் பணியாற்றி இன்றைக்கு ஒரு இலட்சத்து சொச்சம் ஹெக்டேர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அன்றைக்கு அந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்தின் அடிப்படையில் ஒருபோகச் சாகுபடி நிலங்களை இருபோகமாக மாற்றவேண்டும்; முடிந்தால் முப்போகம் நடவேண்டும் என்று அந்தத் திட்டத்தை அறிவித்து, எடுத்த முயற்சியின் பலனாக, ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர் வரையில் இருபோகச் சாகுபடி செய்கிற சூழ்நிலையை இந்த மாவட்டங்களில் ஏற்படுத்தியது தி.மு.க. ஆட்சி. கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அன்றைக்கு இதைச் செய்தார்கள். தயவுசெய்து நான் இங்கே இருக்கிற ஆளும்

கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் ஆரம்பத்திலேயே அரசியலைக் குறிப்பிடவில்லை என்று சொன்னேன். நீங்களும் இந்தக் கொள்கைக் குறிப்பிலேயும், இந்த மானியக் கோரிக்கையிலேயும் சென்ற ஆண்டில் இல்லாத புதிய சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். அதை ரொம்ப இலகுவாக, நாங்கள் தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கும் வாசகத்தை அமைத்திருக்கிறீர்கள். இருந்தாலும், சென்ற ஆண்டில் நீங்கள் சொல்கிற குறைபாடுகளை நாங்கள் ஏற்றுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருப்பதைப் போல, கழக ஆட்சியில், கலைஞர் ஆட்சியில் இந்தத் துறைக்குச் செய்திருக்கிற பணிகளையும், அதனால் கிடைத்த பலன்களையும் நினைவூட்டலாம் என்று கருதுகிறேன். அந்தப் பலனைப் பெற்ற விவசாயிகளின் நலன்களை நாங்கள் எடுத்துச் சொல்வதை தாங்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதிலே இருக்கிற குறைபாடுகளை தேவைப்படுகிறபோது உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ பதிலுரையிலே தெரிவிக்கலாம்.

*பிற்பகல் 4–40*

நான் இதில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, கரும்பைப் பொறுத்தவரையில், விலையை நிர்ணயிப்பதில் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட தி.மு.க. ஆட்சியிலே குறைந்துவிட்டது என்ற வாதத்தை அத்தனை பேரும் சொன்னார்கள். ஒரு விவரத்தை உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகை, 1997–98–ல் கூட்டுறவு மற்றும் பொது சர்க்கரை ஆலைகளுக்கு கலைஞர் அரசு வழங்கிய முன்பணம் 76 கோடியே 41 இலட்சம்; 1998–99–ல் அதே தொகையை 210 கோடியாக உயர்த்தித் தந்திருக்கிறார். 1999–2000–ல் 30 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இனத்திற்காக மட்டும் கலைஞர் ஆட்சியில், 316 கோடியே 41 இலட்சம் ரூபாயை கலைஞர் அரசு இந்த நலிந்துபோன ஆலைகளுக்கு – அதாவது 1996–க்கு முன்னாலேயே கடன் பெற்று நலிவு தொடங்கிய காலத்தில் இருந்த தொகையை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது 316 கோடியே 41 இலட்சம் ரூபாயை வழங்கி, அப்போது அந்த நிலையைச் சற்று சீரமைத்துக் கொடுத்தார். அதற்குப் பிறகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் தேவைப்படும் பொதுச் சந்தை விலையிலே, 1996 டிசம்பரில் 36.66 கோடி ரூபாய் பாக்கி இருந்ததையும் அந்த ஆட்சியிலே அப்போது தரப்பட்டது. அதுபோலவே, இழப்பீட்டுத் தொகைக்காக கலைஞர் அரசு வழங்கிய இழப்பீட்டுத்



தொகை 55 கோடியே 15 இலட்சம் ரூபாய். பயன் பெற்ற விவசாயிகள் 10 இலட்சத்து 5 ஆயிரத்து 160 பேர். மீண்டும் 1997 நவம்பரில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் காரணமாக வெள்ள நிவாரணம் 59 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. பயன்பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 50 ஆயிரத்து 291 பேர். 1997–ல் ஏற்பட்ட பெருமழையால் விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி மட்டும் 44 கோடி ரூபாய் ரத்து செய்யப்பட்டது. 1999–ல் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 33 கோடியே 28 இலட்சம் ரூபாய். 1997 நவம்பரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டதோடு, அபராத வட்டி 50 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

1998–ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனை மாற்றியதால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பீடு 62 கோடியே 35 இலட்சம் ரூபாய். 30–6–1999–க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மையைச் சார்ந்த கடன்களுக்கு 31–7–2000–க்குள் வட்டியும், கடனும் செலுத்திய 3,40,727 சிறிய, பெரிய, குறு விவசாயிகளுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்ட தொகை 13 கோடியே 20 இலட்சம் ரூபாய். 1998–99 நடப்பு கடன் தொகையைத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு, கடன் தொகையில் 6.25 சதவிகித வட்டி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டது. 1–7–1998 முதல் வழங்கிய 6.25 சதவிகித வட்டி ஊக்குவிப்புத் தொகையாக 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இதனால் பயன்பெற்ற விவசாயிகள் 1,47,654 பேர். இந்நிலையில் 1999–2000–ல் ஊக்குவிப்புத் தொகை 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இதில் அரசு வழங்கிய ஊக்குவிப்புத் தொகை 19 கோடியே 72 இலட்சம் ரூபாய். பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 42 ஆயிரத்து 817. டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் 55.15 கோடி ரூபாய்; நவம்பரில் வெள்ளச் சேதம் 59 கோடி ரூபாய்; பெருமழை பாதிப்பால் நிலவரி ரத்து 44 கோடி ரூபாய்; நவம்பரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கோடி ரூபாய்–இப்படி எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால், ஏறத்தாழ அந்த வகையில் 310 கோடி ரூபாய் 4 ஆண்டு காலத்தில் கலைஞருடைய ஆட்சியில் விவசாயிகளுக்காக வட்டியின் பேராலேயும், அதேபோல ஊக்குவிப்புத் தொகையாகவும், கரும்பு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும், நலிந்துபோன ஆலைகளுக்கு வாய்ப்பளிப்பதற்காகவும் இப்படிப்பட்ட தொகைகள் வழங்கப்பட்டன

[திரு. கோ.சி. மணி] [2001 செப்டம்பர் 4

அந்த ஆட்சியிலே என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 4–4.5*

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை, நட்ட குறுவை, அறுவடைக்குத் தயாராய் இருந்தாலும் கை சேருமா, சேர்ந்தாலும் அதை விற்பதற்கு வழி உண்டா, விற்றாலும் நியாய விலை கிடைக்குமா என்ற ஐயப்பாடு நிலவிக் கொண்டிருக்கிறது. தினசரி தொலைபேசி மூலம் தகவல் வந்து கொண்டிருக்கிறது. அறுவடை இப்போது தொடங்கியிருக்கிறது. ஓரளவு ஏற்கெனவே நடப்பட்ட, அதாவது ஏப்ரலிலே தொடங்கப்பட்ட சாகுபடி, பம்ப் செட் மூலம் செய்யப்பட்டது. கலைஞர் ஆட்சியிலேதான் இலவச மின்சாரத்தைக் கொடுத்து அந்த 16 இலட்சம் பம்ப் செட்டுக்களை ஊக்குவித்தார்கள். அந்தப் பெருமை கலைஞரையேதான் சாரும். இந்திய பூபாகத்திலே எந்த மாநிலத்திலேயும் இல்லாமல் முதன்முறையாகவும், முடிவாகவும் கலைஞருடைய ஆட்சியிலேதான் இலவச மின்சாரம் அறிவிக்கப்பட்டது. இலவச மின்சாரத்தை அறிவித்து... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருக்கிறபோதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை அவர்கள் தந்தார்கள். அதுமட்டுமல்ல, 1972–ல் முன்னாள் முதல்வர் அவர்கள் முதல்வராக இருக்கிற காலத்தில் கோவையிலே நாராயணசாமி அவர்கள் தலைமையிலே நடைபெற்ற கட்டை வண்டிப் போராட்டத்தில் ஒரு பைசா குறைக்கவேண்டுமென்று கேட்டதற்காக, 22 பேர்களைச் சுட்டுக் கொன்றவர்கள்தான் நீங்கள் என்பதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, வரலாறே மாறுகிறதே, வரலாறே மாறுகிறதே! நான் என்ன சொல்வதென்றே தெரியவில்லையே! இது என்ன, இருக்கிற இடத்தைப் பொறுத்ததா? வரலாறு மாறுகிறது. நாராயணசாமி நாயுடு அவர்கள் போராட்டம் நடத்தியபோது முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தவர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்தான். (குறுக்கீடுகள்) அதை மறந்துவிடக் கூடாது. இதை தயவு செய்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருக்கிற இடத்தில்... (குறுக்கீடுகள்)



2001 செப்டம்பர் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள். இரண்டு பேரும் முதலமைச்சராக இருந்தபோதும் நாராயணசாமி அவர்கள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1972–லே போராட்டம் நடைபெற்றது. 22 பேர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை. (குறுக்கீடுகள்)

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். யாருடைய ஆட்சியிலே இலவச மின்சாரம் தரப்பட்டது? கலைஞர் அவர்கள் 1989–லே முதலமைச்சராக இருக்கிறபோது நான்தான் மின்சாரத் துறை அமைச்சர். நான்தான் அந்தக் கோப்பிலே கையெழுத்திட்டு, முதல்வர் அவர்களிடத்திலே கொண்டுபோய் கையெழுத்து வாங்கியவன். அடேயப்பா முழுசாய்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மை நிலை வேறு. 1972–லே நாராயணசாமி நாயுடு அவர்களுடைய தலைமையில் போராட்டம் வெடித்து 28 உழவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, அப்போதுகூட ஒரு பைசா, இரண்டு பைசா குறைப்பதற்குக்கூட ஒத்துவரவில்லை. ஆனால், (குறுக்கீடுகள்) ஆனால், – சொல்கிறேன், சொல்கிறேன் (குறுக்கீடு) அதற்குத்தான் வருகிறேன், வருகிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன். இருங்கள், பேச விடுங்கள். (குறுக்கீடு) பேச விடுங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்த பிறகுதான் விவசாயிகளுக்கும், சிறு உழவர்களுக்கும், குறு உழவர்களுக்கும், விவசாயிகளுக்கு முதன்முறையாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே இலவச மின்சாரம் என்ற திட்டத்தை அறிவித்ததே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், (குறுக்கீடுகள்) முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். எதிர்க் கட்சியினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பணக்கார விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்ற ஒரு சலுகையை நீங்கள் தந்தீர்களேயொழிய, உழவர் பெருமக்களுக்கு (குறுக்கீடு) இலவச மின்சாரம் என்பது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தரப்பட்டது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்தை எல்லோருக்கும் அளித்தவர் கலைஞர்தான். ஆனால், அந்த இலவச மின்சாரத்தை ரத்து செய்தவர் *(கூச்சல்–குழப்பம்)*...

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும். பேசி முடித்ததற்குப் பிறகு சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** இலவச மின்சாரத்தை ரத்து செய்தவர் ஜெயலலிதாதான். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** கருணாநிதி என்று அவர்கள் சொன்னார்கள். அதனால்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, நான் சொல்கிறேன், மன்னிக்கவேண்டும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. துரைமுருகன், உட்காருங்கள். உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னேன், எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். *(கூச்சல்–குழப்பம்)* இல்லை, இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். நீங்கள் singular–லே, ஒருமையிலே சொன்னீர்கள். துரைமுருகன் அவர்கள் ஒருமையிலே சொல்கிறார். நான் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். எந்தக் காலத்திலும் *(குறுக்கீடுகள்)* எந்தக் காலத்திலும் எங்கள் புரட்சித் தலைவரை...

**திரு. துரைமுருகன்:** அவர் சொல்கிறார், எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன் என்று. நானும் சொல்கிறேன், முதலமைச்சர் ஜெயலலிதா என்று சொல்கிறேன். அவர் கருணாநிதி என்று சொன்னால், நான் மாண்புமிகு ஜெயலலிதா என்று சொல்கிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்)*



*பிற்பகல் 4–50*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் எதிர்க் கட்சித் தலைவர் *(குறுக்கீடுகள்)* மன்னிக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். நீங்கள் ஒருமையிலே சொன்னீர்கள். துரைமுருகன் அவர்கள் ஒருமையிலே சொல்கிறார். *(குறுக்கீடுகள்)* நான் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். *(குறுக்கீடுகள்)* எந்தக் காலத்திலுமே, எங்கள் புரட்சித் தலைவரை *(குறுக்கீடுகள்)* தவறு. மன்னிக்கவேண்டும். தயவு செய்து நான் விளக்கம் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)* நான் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். ஒருமையிலே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல நான் கூறவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி என்று சொன்னேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவை முன்னவர் பேசிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். அவை முன்னவர் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அவை முன்னவர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விளக்கம் சொல்ல அனுமதி கோருகிறேன். நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி ஆட்சிக் காலத்தில் என்று சொன்னேன். எந்தக் காலத்திலேயுமே தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் புரட்சித் தலைவி அவர்களை புரட்சித் தலைவி என்றும் சொன்னதில்லை, புரட்சித் தலைவர் அவர்களை புரட்சித் தலைவர் என்றும் சொன்னதில்லை, நான் திரு. கருணாநிதி என்று சொன்னேன் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** நானும் சொல்கிறபோது அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா என்றுதான் சொன்னேன். *(குறுக்கீடுகள்)* இல்லையென்றால் விட்டுவிட்டுப் போங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் கூச்சல் போட்டால் நான் என்ன பண்ணுவது? *(குறுக்கீடுகள்)* நீங்கள் கூச்சல் போட்டால் நான் என்ன பண்ணுவது? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, *(குறுக்கீடுகள்)* மற்ற தலைவர்களுடைய பெயரைக் குறிப்பிடும்போது, பெயரைக் குறிப்பிடாமல் மரியாதையாக முன்னாள் முதல்வர் என்றோ, முதலமைச்சர் அவர்கள்

என்றோ குறிப்பிடுவது நல்ல மரபு. அதுதான் மிக முக்கியமானது. நல்ல மரபு. அதிலே ஒன்றும் கருத்து மாறுபாடு இல்லை. நீங்கள் முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சொல்லிக் குறிப்பிட்ட காரணத்தினால் அவர்களுக்கு ஒன்றும் சிறுமை வந்துவிடப் போவதில்லை. ரோஜாவை எந்தப் பெயரைச் சொல்லி அழைத்தாலும் ரோஜாதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ஒன்றும் சிறுமையில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் அவையினுடைய கண்ணியத்தைக் கருதி ஏதாவது (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவையினுடைய கண்ணியத்தைக் கருதி (குறுக்கீடுகள்) அமர்ந்து கொண்டே பேசுவது தவறு. அப்படிப் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) அமர்ந்துகொண்டே பேசுவது தவறு. அப்படிப் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) அமர்ந்து கொண்டு பேசுவது தவறு. அப்படிப் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) அமர்ந்து கொண்டு அப்படி விமர்சனம் செய்வது மரபற்றது. இது சபையினுடைய கண்ணியத்திற்கு மாறுபட்டது. (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தயவுசெய்து பொறுமை காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தவறாகச் சொல்லவில்லை. 'திரு' என்று அடைமொழி போட்டுத்தான் சொன்னார். அதிலே ஒன்றும்... (குறுக்கீடுகள்) பெயர்களைக் குறிப்பிடுவது அவரவருடைய விருப்பம்.(குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் சொன்னதை கண்ணியத்தோடு நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இன்றைய முதலமைச்சரின் பெயரைச் சொல்லவேண்டும் என்கிற எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆனால், அதேநேரத்தில் எங்களுடைய தலைவரை, பெயரைச் சொல்லிச் சொல்கிறபோது, நாங்கள் அதிலே வருத்தப்படுவதற்கு நியாயம் உண்டு. எனவே, முன்னாள் முதலமைச்சர் என்று அவர் சொன்னார். இந்நாள் முதல்வர் மாண்புமிகு முதலமைச்சர் என்று சொல்வதிலே எங்களுக்கு ஒன்றும் இதிலே குறைந்து போவதற்கு இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) துரைமுருகன் கேட்ட ஒரு கேள்விக்கு நான் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். நான் ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். இலவச மின்சாரம் யார் கொடுத்தார்கள் என்று எல்லாம் பிரச்சினை வந்தது. (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் முதல்வராக இருந்தபோது நான் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தேன். நான் கையெழுத்துப் போட்டேன் என்று நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது நான்தான் வேளாண்மைத் துறை அமைச்சர். அவர்கள் சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்று இலவச மின்சாரத்தை அவர் அறிமுகப்படுத்தினார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல, நீங்கள் அதை, எல்லோருக்கும் என்று கொண்டு வந்து இருக்கலாம். அதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்தில்லை. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோ.சி. மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், குறுக்கீடு இல்லாமல் நீங்கள் 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். எல்லோருக்கும் இன்றைக்கு 10 மணித்துளிகள்தான் வழங்கப்பட்டிருக்கிறது. பிரதான எதிர்க்கட்சி என்ற காரணத்தால் உங்களுக்கு 15 மணித்துளிகள் நான் அனுமதிக்கிறேன். எஞ்சியதை 2, 3 மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையொட்டிய சிறு விளக்கம் தரலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடுகள்) அதைப்பற்றி அல்ல, நான் சொல்வதிலே கொஞ்சம்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, அவர் பேசட்டுமே. (குறுக்கீடுகள்)

**திரு. கோ.சி. மணி:** நான் சொல்வது விவசாயிகளுக்காக. சிறு விவசாயிகளுக்குக் கொண்டு வந்தார் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள்; எல்லோருக்கும் சேர்த்துக் கொண்டு வந்தார் எங்கள் தலைவர் என்று குறிப்பிட்டதை ஓரளவிற்கு வாதத்திற்காக வைத்துக்கொள்வோம். அதற்குப் பிறகு, 1991–வது வருடத்தில் இன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இந்த இலவச மின்சாரத் திட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டு G.O. போட்டது உண்டா, இல்லையா?...

*பிற்பகல் 4–55*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்கள் அவைக்கு இதுபோன்ற தவறான தகவலைத் தரவேண்டாம். அதுபோன்ற எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடு) திரு. பரிதி, திரு. மணி பேசுவார்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஓர் உத்தரவு போட்டு, அந்த உத்தரவு வந்ததற்குப் பிறகு எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் நிறைவேற்றி, அதை எதிர்த்து மாட்டு வண்டிப் போராட்டம் நடத்தி, பல ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறைக்குச் சென்று, சிறையிலே இடம் இல்லை என்று தெரிந்து, சிறையில் வைப்பதற்கு வழியில்லாமல், அதற்குப் பிறகு 18 நாட்கள் கழித்து எங்களை விடுதலை செய்துவிட்டு, திரும்பவும் மின்சாரம் இலவசம் என்ற உத்தரவை இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் போட்டார்கள் என்பது உண்மை. இதை யாரும் மறுக்க முடியாது. அன்றைக்குப் பாட்டாளி மக்கள் கட்சி எங்களோடு சேர்ந்து போராடினார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், உங்களுடைய பதிலுரையிலே பதில் சொல்லலாம்.

**திரு. கோ.சி. மணி:** இது என்ன வரலாற்றைத் திரித்துக் கூறுவது? ஆளுங்கட்சியாக இருந்துவிட்ட காரணத்தினாலே, எண்ணிக்கையில் அதிகம் என்ற காரணத்தினாலே வரலாற்றை மாற்றிச் சொல்லமுடியாது. பதிவேடுகளைத் திருத்த முடியாது. அதற்காகத்தான் குறிப்பிடுகிறேன்.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சி பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்துச் சங்கங்களும், விவசாயச் சங்கங்களும் போர்க் குரல் எழுப்பி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதி, ஃபேக்ஸ் செய்திகளும் கொடுத்திருக்கிறார்கள். தங்கள் அனுமதியோடு ஒன்றைச் சொல்கிறேன். குறுவை விவசாயம் – கடைமடைப் பகுதி என்றைச் சொல்கிறேன். குறிப்பிட்டேன் – முதல்மடைப் பகுதியான தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் ஒன்றியத்தில் பழிஞ்சநல்லூர் என்ற கிராமம் உள்ளது. அந்தக் கிராமம் ஏறத்தாழ 100 வேலிக்கு மேல் இருக்கிற கிராமம். அந்தக் கிராமத்தில் குறுவை சாகுபடி செய்த நிலம் அவ்வளவும் பாளம் பாளமாக வெடித்து உள்ளது. தண்ணீர் கொடுக்க முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இது முதல்மடைப் பகுதி.



**மாண்மிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடித்து விடட்டும். 2 மணித்துளிகளில் அவர் பேசி முடித்துவிடுவார். (குறுக்கீடு) அவர் பேசி முடித்து விடட்டும். பேசி முடியுங்கள் அண்ணே!

**திரு. கோ.சி. மணி:** இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. கொள்முதல் விலையைப் பற்றி நான் ஒன்று சொன்னேன். சென்ற ஆட்சியில் செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதலே கொள்முதல் செய்யப்பட்டது. இன்றைக்கு விலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதையும், 10 நாட்களாக, அறுத்து வைத்த நெல்லை விற்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற வரலாறு இன்றைக்கு 1–9–2001 நாளிட்ட திருச்சி பதிப்பு தினமலரிலே செய்தியாக வந்திருக்கிறது. வெளிச் சந்தையில் நெல் விலை எப்படி இருக்கிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். சென்ற ஆண்டில் ஊக்கத் தொகை 40 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதாவது மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிட ஒரு குவிண்டாலுக்கு 40 ரூபாய் சேர்த்துக் கொடுத்த வகையில் அன்றைக்கு சன்ன ரகம் குவிண்டாலுக்கு 580 ரூபாய்க்கு விற்றது. இன்றைய விலை 520 ரூபாய். ஒரு குவிண்டாலுக்கு 60 ரூபாய் விலை குறைத்தும், வாங்குபவர் இல்லாமல் விவசாயிகள் தவிக்கிறார்கள். அதுவும் நெல்லைப் போட்ட அன்றைக்குப் பணம் இல்லை. பணம் கொடுத்தபோதுதான் வாங்கிக் கொள்ள வேண்டும். இப்பேர்ப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நான் உங்களிடத்திலே அன்றைக்கு நினைவூட்டினேன். இப்படிப்பட்ட ஒரு நிலையிருக்கிறது. தயவுசெய்து ஊக்குவிப்புத் தொகை வழங்கப் போகிறீர்களா, இல்லையா? அரசாங்கம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கிறார்களா, இல்லையா? அது இரட்டைக் கொள்முதலா அல்லது கட்டாயக் கொள்முதலா? எந்தக் கொள்முதல் அடிப்படையில் குறுவை நெல்லை வாங்க இருக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்குக்கூட தாங்கள் ஏதோ அவசரப்பட்டுச் சொன்னீர்கள். அரச மரத்தைச் சுற்றி வந்து, அடிவயிற்றைத் தொட்டுப் பார்க்கலாமா என்று கேட்டீர்கள். நான் அதை உங்களிடத்திலே மறுத்துச் சொல்வதற்கு இல்லை. தாங்கள் பெரிய இலக்கியவாதி. உயர்ந்த இடத்தில் இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** இப்போதுகூட முடித்துவிடுகிறேன். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. ஆகையினால் நான் இப்போது குறிப்பிட்டுச் சொல்வது, இப்படிப்பட்ட விலை வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது தெரிந்தும், அதைப்பற்றிச் சொல்லாமல் இருப்பது— 5 ஆம் தேதி அன்றைக்கு அமைச்சரவைக் கூட்டம் வைத்திருக்கிறோம்; அதிலே முடிவெடுக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முடிவு எடுப்பது எப்போது? அறிவிப்பது எப்போது? அறுவடை செய்துள்ள நெல்லை வாங்குவது எப்போது? இப்படிப்பட்ட சூழ்நிலையில்—நான் ஏற்கெனவே சொன்னதில் தவறு இருந்தால்கூட ஒத்துக்கொள்ளத் தயார். ஆனால் நாங்கள் 1 ஆம் தேதி நேரடி நெல் கொள்முதல் நிலையம் வைத்து, 40 ரூபாய் ஒரு குவிண்டாலுக்குக் கூடக் கொடுத்து வாங்கியிருக்கிறோம். அப்படி நீங்களும் வாங்கலாம். அப்படி வாங்குவதற்கு 50 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். வீண் காலதாமதம் எதற்கு? ஏழை விவசாயிகள் ஏன் பாதிக்கப்படவேண்டும்? இவைதான் என்னுடைய கவலையே தவிர, வேறொன்றும் இல்லை.

நான் திரும்பக் கேட்பது, இந்தக் கடன்கள் தள்ளுபடி என்பது, இந்த ஆண்டுக்கும் பொருத்தமானது. அதேநேரத்தில் நான் இன்னொன்றைக் கேள்விப்படுகிறேன். கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்கிற குத்தகைதாரர்களை வெளியேற்றப் போவதாகவும், ஏற்கெனவே ஒத்திவைக்கப்பட்ட ரெவின்யூ கோர்ட்டைத் திரும்பத் திறக்கப் போவதாகவும் எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அது உண்மையில்லாமல் இருந்தால் அதிக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், உண்மையாக இருந்தால் நான் வருத்தப்படுகிறேன். காரணம், எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து—இங்கேயிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன்—இதற்காகப் போராடியவன் நான். பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, சிறைக்குச் சென்று அதற்காகப் பாடுபட்டவன் என்ற முறையிலே தங்களிடத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இருந்தால் அதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த விலை வீழ்ச்சிக்காக நாளைக்கு மறுநாளே, 5 ஆம் தேதி மந்திரி சபைக் கூட்டத்தில் முடிவெடுத்தால் 6–ஆம் தேதியாவது இந்த நெல்லை வாங்குகிற அளவுக்கு நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவையும் தாண்டி கூட்டுறவுச் சங்கங்களுடைய கடன் இன்றைக்கு இருப்பதைப்போல...



*பிற்பகல் 5–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு உரையை முடித்துக் கொள்ளுங்கள். ஒரு மணித்துளியில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** இப்படிப்பட்ட நிலையில், இந்த சர்க்கார்– எது எப்படியிருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்கூடச் சொன்னார்கள். நீங்கள் செய்த வேலைகளுக்கு நாங்கள் ஒப்பந்ததாரர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது, வாங்கிய பொருள்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது, அதற்காக 700 கோடி ரூபாய் துண்டு விழுகிறது, அதை நாங்கள் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அரசாங்கம் நடத்துகிறவர்களுக்குத் தெரியும். மார்ச் மாதத்தோடு நிதி ஆண்டு முடிந்தாலும், ஏப்ரல் மாதத்தில் புதிய ஆண்டு தொடங்கினாலும், தொடர்ச்சியாக செய்கின்ற பணிகளுக்கு ஒருவருக்கொருவர் பணம் கொடுத்து வருவது வழக்கம். சென்ற ஆட்சிக் காலத்தில், நாங்கள் 1996–ல் பொறுப்பேற்றபோது, R.D. Department–ல் மட்டும் ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து சொச்சம் வேலைகளைத் தொட்டும், தொடாமலும், முடிக்காமலும் விட்டுவிட்டுப் போனது அப்போதைய அரசு. அந்த ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து சொச்சம் வேலைகளையும் முடித்து, அதற்குப் போதிய தொகையை, அப்போது ஒதுக்கியதைவிட அதிகமாக செலவழிக்கப்பட்ட தொகையையும் ஈடுசெய்து, அந்த ஆண்டுக்கு உரிய பட்ஜெட் தொகையை வைத்துக்கொண்டு, அந்தத் துறை அந்த ஆண்டுக்குரிய பணிகளைச் செய்து முடித்திருக்கிறது என்ற வரலாற்றை உங்களிடத்திலே தெரிவித்து, காழ்ப்புணர்ச்சியால், உண்மைக்குப் புறம்பாகவும், அதே நேரத்தில் வரலாற்றைத் திருப்புகின்ற வகையிலும் பேச்சுக்கள் அமையக்கூடாது என்பதைத் தெரிவித்து, நீங்கள் தயவுசெய்து கொஞ்சம் பொறுத்தருள வேண்டும். அவ்வாறு அமையும்போது மறுப்பதற்கான வாய்ப்பை எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. இராசேந்திரன்.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைக்கோடித் தொண்டர்களில் ஒருவனாக இருந்த என்னை 1980 ஆம் ஆண்டு ஒன்றியக் கழகத்தினுடைய துணைச் செயலாளராகவும், 1989 ஆம் ஆண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராகவும், அதற்குப் பின்னாலே இணைச் செயலாளராகவும்

இருந்து, கழகத்தினுடைய தேர்தலிலே இரண்டு தடவை ஒன்றியக் கழகச் செயலாளராக அம்மா அவர்களுடைய ஆசியிலே வெற்றிபெற்ற என்னை, கடைக்கோடித் தொண்டனாக இருந்த என்னை, திருவோணம் சட்டப் பேரவை வேட்பாளராக அறிவித்து, என்னை வெற்றி பெறச் செய்த கழகத்தின் காவல் தெய்வம், என்னுடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய விடிவெள்ளி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, விவசாயத் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சதியினால் தேர்தலில் நிற்க விடாமல்—தவறான வழக்குகளைத் தொடர்ந்து, அவர்மீது நடவடிக்கை எடுத்து, தேர்தலில் நிற்க விடாமல்—செய்துவிட்டார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நீதி வழங்குகின்ற முகத்தான், அவரைத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆக்குகின்ற சட்டமன்ற உறுப்பினர்களில் திருவோணம் சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுங்கள் என்று சொல்லி, திருவோணம் தொகுதி வாக்காளப் பெருமக்களிடையே எடுத்து வைத்த கோரிக்கைகளை ஏற்று, என்னை திருவோணம் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய என் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

என்னுடைய குடும்பத்தின் சார்பாகவும், திருவோணம் தொகுதி மக்களின் சார்பாகவும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியினைக் காணிக்கையாக்கி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தே நாளில் ஆளுநர் உரையில், ஏழைகளுடைய வாழ்வு உயர, தொழிலாளர்களுடைய நலன் காக்கின்ற, மாணவர்களுடைய நலன் காக்கின்ற, விவசாயிகளிடையே மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற, மீனவர் நலன் காக்கின்ற, இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, 2001–2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்களுக்கு உயிரோட்டம் கொடுத்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டங்களை எண்ணிப் பார்க்க முடியாதவர்கள் – ஆட்சி தொடங்கிய ஐந்தே நாளில் இவ்வளவு பெரிய சாதனைகளை



அறிவித்திருக்கிறார்கள். கிராமங்களிலே சொல்வார்கள், ஒரு பானை சாதத்தில் ஒரு சாதத்தை எடுத்துப் பார்த்தால் அதனுடைய பதம் தெரிந்துவிடும் என்று சொல்லுவார்கள். 5 ஆண்டு காலம் ஆட்சி செய்யப் போகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்தே நாளில் இவ்வளவு பெரிய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நோக்கத்தை, அவர்களுடைய நல்ல நோக்கத்தை எண்ணிப் பார்த்து, எதிர்க்கட்சியாக இருக்க வேண்டியவர்கள் எல்லாம் எதிரிக் கட்சியைப் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. என்னைப் பொறுத்தவரையில், நான் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்.

*பிற்பகல் 5–05*

தஞ்சை மாவட்டத்தில், திருவோணம் தொகுதியில், திருவோணம் ஒன்றியத்தில், சில்லத்தூர் என்ற கிராமத்தில் சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு இன்றையதினம் விவசாயத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் பல ஆண்டு காலமாக—தஞ்சை மாவட்டம் முழுக்க, முழுக்க விவசாயத்தை நம்பி வாழுகின்ற மாவட்டம். அந்த மாவட்டத்தில்—கடந்த காலங்களில் விவசாயத்திற்காக கூட்டுறவுக் கடன்கள் வாங்கி, திருப்பிச் செலுத்த முடியாத நிலை. வெள்ளத்தாலும், புயலாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்ட காலத்தில் நாங்கள் அங்கே போராடினோம், வாதாடினோம். சென்ற ஆட்சியில் எங்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்து கொடுங்கள், விவசாயிகளுடைய முகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துங்கள் என்று சொன்னோம். ஆனால் அன்றையதினம் ஆட்சியிலே இருந்தவர்கள், எங்களுக்குத் தந்த பரிசு, 'ஜப்தி நடவடிக்கை' என்று நடவடிக்கை எடுத்தார்கள். அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்ட காலகட்டத்தில், அன்றையதினம் வலங்கைமான் தொகுதியிலே, 2 பேர் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள். இதைத்தான் சென்ற அரசு பரிசாகக் கொடுத்தது.(மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று சொன்னார்கள். எங்களுடைய தாய், தாயுள்ளத்தோடு இன்றையதினம், விவசாயப் பெருமக்கள் கேட்காமலேயே, 310 கோடி ரூபாயைத் தள்ளுபடி

செய்து கொடுத்திருக்கிறார்கள். அதுவும் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும். இப்படித் தள்ளுபடி செய்து கொடுத்த காரணத்தால், இப்போது விவசாயிகளுடைய வயிற்றில் பால் வார்க்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கிய அம்மா அவர்களுக்கு நான் பாராட்டுத் தெரிவிப்பதற்கு, வாழ்த்துத் தெரிவிப்பதற்கு வயதில்லை. தஞ்சை மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டும் விட்டுவிடவில்லை. விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு, தாய் உள்ளத்தோடு— ஊட்டி தொழிலாளர்கள், தேயிலை விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தார்கள். அவர்களுக்கு முந்தைய ஆட்சியாளர்கள் எந்த நன்மையும் செய்யவில்லை. ஆனால்—இன்றையதினம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், அந்த ஊட்டி தேயிலைத் தொழிலாளர்களுடைய, விவசாயிகளுடைய நலனைக் காக்கின்ற அரசாக அந்தத் தேயிலைகளையெல்லாம் அரசே கொள்முதல் செய்து அதை அரசினுடைய நியாய விலைக் கடைகளில் விற்கின்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதோடு மட்டும் விட்டுவிடவில்லை. இன்றையதினம் இங்கே பல்வேறு நிலைகளிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பேசிக் கொண்டிருக்கின்றவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில், ஒரு காலத்தில் சோதனைச் சாவடிகளை எல்லாம் ஒரே நாளில் திறந்து விட்டார்கள். யாருடைய நெல் செல்லவேண்டுமென்று தெரியாத நிலையில்—ஆனால் இன்றையதினம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1009 ரக நெல்லையும், 1009 ரக அரிசியையும் வெளி மாநிலங்களில் கொண்டு சென்று விற்று, விவசாயிகளுடைய நலன் காக்கப்பட வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதோடு விட்டுவிடவில்லை. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை, 1974 ஆம் ஆண்டு ஆட்சியிலே இருந்தவர்கள் புதுப்பிக்காத காரணத்தால், இப்போது விவசாயிகள், பல்வேறு நிலைகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு காவிரித் தண்ணீர் அங்கே சரியாகக் கிடைக்கவில்லை. ஆனால், இன்றையதினம் இதய தெய்வம் அம்மா அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையை, அந்த நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை, மத்திய அரசினுடைய அரசாணையில் அறிவிக்க வைத்தார்கள். அப்படிப்பட்ட அம்மா அவர்களுடைய அரசு இப்போது விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக, ஏரி, குளங்களைத் தூர் எடுக்க வேண்டுமென்று, வரத்து வாரிகளைத் தூர் எடுக்க வேண்டுமென்ற நிலையிலே திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.



அப்படிப்பட்ட அம்மா அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதோடுமட்டுமல்லாமல், இன்றையதினம் அம்மா அவர்கள் 20 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்காக அறிவித்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை விவசாயிகளுக்காக அறிவித்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை அறிவித்த அம்மா அவர்களுக்கு நன்றி சொல்வதோடு, என்னுடைய தொகுதியின் சார்பாக நான் இங்கே புதிய உறுப்பினராக இருக்கின்ற காரணத்தால், என்னுடைய கன்னி உரையிலே அவரிடம் என்னுடைய தொகுதியினுடைய வளர்ச்சிப் பணிகளுக்கான கோரிக்கைகளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவோணம் தொகுதியில் 1995 ஆம் ஆண்டு திருவோணம் ஒன்றியத்தைத் தனி தாலுகாவாக ஆக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினம் செய்திருந்தார்கள். அதற்குப் பின்னாலே வந்தவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அதை இந்தத் தடவை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வல்லத்திற்கு அருகில் உள்ள சின்னம்பட்டி ஊராட்சியில், முதலைமுத்துவாரித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, அந்தத் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் எல்லாம் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு அறிவித்தார்கள். அப்படிப்பட்ட திட்டம் இப்போது தனி ஒரு நபருக்காக, புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்றுகொண்டிருக்கிறது. மாமுண்டு ஏரிக்கு அந்தத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 5 ஒன்றிய மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளை அரசு சுகாதார நிலையமாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நெய்வேலியில் உள்ள பெரிய ஏரியைக் காட்டாற்றிலிருந்து, வரத்து வாரி செய்து கொடுக்கவேண்டும். உளூர் ஊராட்சியிலும் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டும். வல்லத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைத்துத் தரவேண்டும். திருவோணம் காவல் நிலையம் 40 ஆண்டு காலத்திற்கும் மேலாக இருக்கின்றது. அந்தக் காவல் நிலையத்திற்கு ஒரு இன்ஸ்பெக்டரை

நியமனம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை ஒன்றியமும், திருவோணம் ஒன்றியமும் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய ஒன்றியங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய தொகுதியில் பல்வேறு இடங்கள் காலியாக இருக்கின்றன. தரிசு நிலமும் நிறைய இருக்கின்றது. அந்த இடத்திலே ஒரு தொழிற்சாலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–10*

அம்மா அவர்கள், 1995–96 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டைக் கண்டபோதுதான், தஞ்சையினுடைய வளர்ச்சி, 100 ஆண்டு காலத்திற்குப் பின்னால் வரவேண்டிய வளர்ச்சியை அன்றையதினம் உருவாக்கித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி உருவாக்கிக் கொடுத்த நிலையில், அன்றையதினம் சுற்றுப்புறச் சாலையை உருவாக்கிக் கொடுத்தார்கள். அதற்குப் பின்னாலே வந்த ஆட்சியாளர்கள் அந்தச் சுற்றுப்புறச் சாலையிலுள்ள துணைச் சாலையைப் போட்டுக் கொடுக்கவில்லை. அந்தச் சாலையை முழுக்க முழுக்க, அம்மா அவர்கள் மீண்டும்—பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்—பூர்த்தி செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.

இதைப்போல் பல்வேறு திட்டங்கள் இருந்தாலும், ஒன்றே ஒன்றை என்னுடைய வேண்டுகோளாகச் சொல்லி, என்னுடைய விருப்பமாக இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். அன்னை தெரசாவால் பாராட்டப்பெற்ற அம்மா அவர்கள், இப்போது ஏழைக் குழந்தைகளுடைய வாழ்விலே வளம் ஏற்பட பல்வேறு நலத் திட்டங்களைப் பெண்களுக்காக அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் அறிவித்திருக்கின்ற திட்டங்கள்; தொட்டில் குழந்தைத் திட்டம், ஒரு பெண் குழந்தை இருந்தால், அந்தக் குழந்தைக்கு ரூ.20,650–ம், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் தலா ரூ. 14,450–ம் தொடக்க வைப்பீடுகளாக அளித்தல், அதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு இலவச சைக்கிள், 5 இலட்சம் பெண்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள். அடுத்த மானியக் கோரிக்கைக்கும் சேர்த்து எல்லாவற்றையும் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சி. இராசேந்திரன்:** மகளிருக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, பெண்களுக்கு வேலை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, காவல் நிலையத்திலே அவர்களுக்குப் பல்வேறு வகையிலே வேலைகளை



உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இன்றையதினம் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு சப்–இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்டபிள்கள் பதவி உருவாக்கித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி எதையெடுத்தாலும், பெண்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளை பெண் குழந்தைப் பிறந்த நாள் விழாவாக இந்த மாமன்றத்திலேயிருந்து அறிவிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு, அத்தோடு இன்னொரு கோரிக்கையை வைக்கிறேன். வேளாண்மைப் பொறியியல் துறையில் 1991–96 வரை வழங்கப்பட்ட, மானியத்தில் வழங்கப்பட்ட, அனைத்து நிலையிலே உள்ள விவசாயிகளுக்கும் தெளிப்பான்கள் வழங்கியது; மாட்டு வண்டி வழங்கியது; உரங்கள், பம்பு செட்கள், கைக்கருவிகள், டிராக்டர்கள் இதுபோன்று வழங்கியதையெல்லாம் 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் நிறுத்தி விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே வேலை செய்கின்றவர்களுக்கும் நிதியில்லை; பணம் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு, அம்மா அவர்களுடைய அரசு தாயுள்ளத்தோடு அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று எனது பணிவான வேண்டுகோளாக வைத்து, இங்கே பேச வாய்ப்பளித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேச இருக்கிறார். அந்த நேரத்தில் குறைத்துக் கொள்வேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am on a point of order. நம்முடைய தமிழக அரசு, பிளாஸ்டிக் பொருட்களையெல்லாம் தடை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிற வேளையில், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இயற்கையான இந்த மலர்களோடு, இந்த பிளாஸ்டிக் பேப்பரையும் சுற்றி, இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே கொடுத்திருக்கிறாரே, அதனுடைய காரணம் என்ன? இங்கு வைக்கப்பட்டிருக்கிற மலர்களின் பெயர்கள் என்ன? எத்தனை வகையான மலர்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன? மலர்களுடைய பெயர்கள் என்ன என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய பதிலுரையில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எம். ராம்குமார் அவர்கள்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய உங்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த சில நாட்களுக்குமுன் மறைந்த, நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற பண்பாட்டுப் பெட்டகம், மனிதரில் புனிதர், மக்கள் தலைவர், ஐயா மூப்பனார் அவர்களுக்கு இறுதிச் சடங்கு முடிகின்ற வரை மாநில அரசின் சார்பாக முழு ஒத்துழைப்பைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ஒரு மாபெரும் தேசியத் தலைவருக்கு முழு அரசு மரியாதையோடு இறுதிச் சடங்கு நடத்த உதவிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய சொந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலே என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த மன்றத்திலே பேச வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த மக்கள் தலைவர் ஐயா அவர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்து, எனது வெற்றிக்காகத் தனது சுற்றுப்பிரயாணத்தை மாற்றியமைத்து, பல்லாயிரக்கணக்கானோர் பங்குகொண்ட சுவாமிமலை பொதுக் கூட்டத்திலே எனக்கு வாக்குக் கேட்டு உரையாற்றி, என் வெற்றிக்கு உதவிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 5–15*

எனது மாவட்டத்தில் எனது வழிகாட்டி, என்னை உயர்த்திய ஐயா ஜி.ஆர். மூப்பனார் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதிகார பலத்தையும், பண பலத்தையும் மீறி எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த எனது தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



புதியதாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அன்புத் தலைவர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கு நம்பிக்கையோடு, முதலாவது வாழ்த்தினைத் தெரிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.எனது வெற்றிக்காக உழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி–டெல்டா மாவட்டங்களிலே நீரின்றி வாடுகின்ற குறுவைப் பயிர்களைக் காப்பாற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பாக கோரிக்கையினை வைத்து இந்த மானியக் கோரிக்கையின் மீதான எனது உரையைத் தொடங்குகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுள்ளபடி, 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர நாடுயரும், நாடுயரக் கோன் உயரும்' என்ற அனுபவ மொழிக்கேற்ப இந்த அரசு செயல்படும் என்று கூறியிருப்பது, விவசாயிகளின் நலனில் அக்கறையுள்ள அரசு இது என்பதைக் காட்டுகிறது. அதற்காக மாவட்ட விவசாயிகளின் சார்பாக இந்த அரசினைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்".

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை".

என்கின்ற வள்ளுவத்தினை மனதிலேகொண்டு, கிராமங்களிலே வாழும் விவசாயிகள் உயர்ந்தால்தான் நாடே உயரும் என்று உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற குறுகிய நாட்களுக்குள்ளாகவே விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான விவசாயிகள் வாங்கியிருந்த கூட்டுறவுக் கடனுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து– –310.50 கோடி ரூபாய்க்கான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்து விவசாயக் குடும்பங்களை வாழ வைத்து சரித்திரம் படைத்திருக்கின்ற தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர்

புரட்சித் தலைவி அவர்களுக்குத் தஞ்சை மாவட்ட விவசாயிகளின் சார்பாக நெஞ்சார்ந்த எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாகுபடி செய்கின்ற நெல்லுக்கு சிறந்த விலை கிடைக்கவும், வெளி மாநிலங்களுக்கு நெல்லை எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென்பதும், காவிரி–டெல்டா பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையினை மனதில் ஏற்று, டி.கே.எம்.9 வகை நெல் மற்றும் அரிசியைக் கட்டுப்பாடின்றி எடுத்துச் செல்ல அனுமதி அளித்ததை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்பதோடு, அதேபோல சி.ஆர்.1009 என்ற மற்றொரு மோட்டா ரக நெல்லையும், அரிசியையும் வெளிமாநிலங்களுக்கு எடுத்துச்செல்ல தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே எனது கோரிக்கையாக வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

நடப்பு குறுவைப் பருவத்திற்கான நெல் கொள்முதலை உடனடியாகத் தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட வேண்டும். கடந்த காலங்களிலே விவசாயிகளுக்கு முளைப்புத் திறன் குறைந்த விதை நெல் வழங்கப்பட்ட காரணத்தினாலே, விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திற்கு உள்ளாகினர். அந்த நிலை மாற்றப்பட்டு தரமான நெல் விதை கிடைக்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல வடிநிலப் பகுதிகளிலே நெல்லுக்கு உற்பத்தி ஊக்கத் தொகையாக ரூ.50 கோடி ஒதுக்கியுள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியினைக் கூறுகின்றேன். சென்ற அரசில் நெல்லுக்குக் கொடுத்த ஊக்கத் தொகையைவிட கூடுதலான ஊக்கத் தொகையாக குவிண்டால் ஒன்றிற்கு 100 ரூபாய் ஒதுக்கீடு செய்து அதையும் அறிவிக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்வருகின்ற ஐந்து ஆண்டு காலத்தில், 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்களை மூன்றாகப் பிரித்து, உயர்தர தரிசு நிலங்களில் நறுமணச் செடிகள், மூலிகைப் பொருட்களைப் பயிரிடவும், நடுத்தர தரிசு நிலங்களில் சமையல் எண்ணெய் மற்றும் எரி எண்ணெய் மரங்கள் பயிரிடவும், தரம் குறைந்த தரிசு நிலங்களில் மின் சக்தி உற்பத்திக்குப் பயன்படும் விறகு வகை மரங்களைப் பயிரிடவும் என்கிற மாபெரும் திட்டத்தை அறிவித்ததன் மூலம், 10 இலட்சம் ஏழையெளிய விவசாய மக்கள் பயன்பெறக்கூடிய அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு



தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த காலங்களிலே உற்பத்தி செய்யப்பட்ட கரும்பிற்குக் கட்டுப்படியான விலை கொடுக்கப்படவில்லை. சென்ற ஆட்சியிலே டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொல்லி கடைசி வரை தராத அந்த நிலையினைப் போக்கி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8.5% பிழிதிறன் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ரூபாய் ஆயிரம் வழங்கி கரும்பு விவசாயிகளைக் காப்பாற்றிட வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தஞ்சை மாவட்டத்தில், பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளைச் சார்ந்த தென்னை விவசாயிகள், கொப்பரைக் கொள்முதல் நிறுத்தப்பட்ட காரணத்தினாலே மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கின்றனர். ஆகவே, தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக இந்தக் கொப்பரைக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து கொள்முதலை ஆரம்பிக்க உத்தரவிட வேண்டும். அதோடு அண்டை மாநிலமான கேரளாவிலே உள்ளதைப்போல முழுத் தேங்காயை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் .5–20*

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, தமிழகத்தின் நெல் களஞ்சிய மாவட்டங்களுக்கு ஒரு விவசாயக் கல்லூரி வேண்டும் என்பது ஆகும். விவசாயத் துறைக்கு அமைச்சரைத் தந்திருக்கிற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த நிதி ஆண்டிலேயே ஒரு விவசாயக் கல்லூரி அந்த மாவட்டத்திலே அமைவதற்கு உத்தரவினை நல்கிட வேண்டும்.

என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற, நீலித்தநல்லூர் மற்றும் ஜெயங்கொண்டம் தொகுதியைச் சார்ந்த மதமத்தூர் பகுதிகளை இணைக்கின்ற வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே சுமார் 1080 மீட்டர் நீளத்திற்கு ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டும். 10 ஆண்டுகளுக்கு முன்பு இதே மன்றத்தில் இதே கோரிக்கை எழுப்பப்பட்டு அப்போது 20 கோடி ரூபாயாக இருந்த மதிப்பீட்டுத் தொகை படிப்படியாக உயர்ந்து இப்போது 60 கோடி ரூபாய்

என்ற அளவை எட்டியுள்ளது. அந்தப் பாலம் கட்டப்பட்டால்தான் அந்தப் பகுதி வழியாக தஞ்சை, பட்டுக்கோட்டை, கும்பகோணம் பகுதிகளில் இருந்து மக்கள் சென்னைக்குச் செல்கின்ற தூரம் 30 கிலோ மீட்டர் குறைகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அணைக்கரையிலே இருக்கின்ற பாலம் 100 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலே, பழுதடைந்திருக்கின்றது. அந்தப் பாலத்திற்கு மாற்று வழியாக புதிய பாலம் அமையும். ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு அதைப் பரிசீலித்து, (மணியடிக்கப்பெற்றது) அரசுத் துறையின் மூலமாகவோ அல்லது தனியார் துறையின் மூலமாகவோ அதைக் கட்டித் தருவதற்கு உத்தரவிட வேண்டுமென்று என் தொகுதி மக்கள் சார்பாகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், தஞ்சாவூர்--கும்பகோணம் மாநில நெடுஞ்சாலையிலே பாபநாசம் நகர் அமைந்திருக்கிற காரணத்தினாலே, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். அவ்வாறு புறவழிச் சாலை இல்லாத காரணத்தினாலே மிக அதிகமான அளவிலே அங்கே வாகனப் போக்குவரத்து தடைபட்டு (மணியடிக்கப்பெற்றது) மணிக்கணக்காக வாகனங்கள் நிற்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு அந்த பாபநாசம் புறவழிச் சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கபிஸ்தலம், அய்யம்பேட்டை காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லை. அதேபோல் காவலர் குடியிருப்புகளும் இல்லை. கபிஸ்தலம் காவல் நிலையத்திற்கு வாகன வசதியும் இல்லை. அதேபோல்தான் என் தொகுதியிலே இருக்கின்ற ஒரே ஒரு தீயணைப்பு நிலையமான பாபநாசம் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடமோ, காவலர் குடியிருப்போ இல்லை என்ற நிலையைப் போக்கி, அங்கே பழுதடைந்த நிலையிலே இருக்கின்ற வாகனத்தையும் மாற்றித் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என் தொகுதியிலே அமைந்துள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை முருகன் கோவிலுக்கு மேலே சென்று முருகப் பெருமானைத் தரிசிப்பதற்கு, வயோதிகர்களும், உடல்நிலை முடியாதவர்களும் சென்று வர விஞ்ச் கார் வசதி செய்து கொடுக்க நன்கொடையாளர்கள் முன்வந்தபோதும் கடந்த ஆட்சியிலே அதற்கு



அனுமதி தரவில்லை. இறை நம்பிக்கை கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை (மணியடிக்கப்பெற்றது) நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எம். ராம்குமார்:**

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறள் மொழிக்கேற்ப, உழவர் பெருமக்களால் ஒருமித்த ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உழவர் பெருமக்களின் வாழ்வில் எதிர்காலத்தில் ஒளியை ஏற்றி வைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு எனது உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார். என்ன டாக்டர் என்று சொல்லிவிட்டீர்கள் என்றால், அதற்குத் தகுந்த மாதிரி இருந்துகொள்வோம். (சிரிப்பு)

***திரு. கு. ஜெயக்குமார்:** பொருளாதாரத்திலே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வேளாண்மைக் கோரிக்கையின்மீது பேசத் தொடங்குவதற்கு முன்பாக, கொள்கைக் குன்றாய் கடைசிவரை மதவாதத்தை எதிர்த்து, கர்மவீரர் காமராஜர் அவர்களுடைய உண்மைத் தொண்டராய் வாழ்ந்து மறைந்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுடைய மறைவிற்கு என் நெஞ்சார்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசியவாதியாகவும், தேசியத் தலைவர்களை எல்லாம் நமக்குப் படம் பிடித்துக் காண்பித்து நடிகர் திலகமாய் நம்மிடம் வாழ்ந்து மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுடைய மறைவிற்கும் என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கான ஒரு வாய்ப்புக் கிட்டும் என்று காத்திருந்தேன். அந்த வாய்ப்புக் கிட்டாத கால கட்டத்திலே, இப்போது இந்த வேளாண்மைத் துறைமீது பேசுகின்ற வாய்ப்பைத் தாங்கள் தந்தமைக்காக நன்றி.

[திரு. கு. ஜெயக்குமார்] [2001 செப்டம்பர் 4

வேளாண்மைத் துறைக்குச் செல்வதற்கு முன்பாக, ஓரிரு வார்த்தைகளை நிதிநிலை அறிக்கையின்மீது சொல்வது இந்த நேரத்திலே சாலப் பொருந்தும் என்று நான் நினைக்கிறேன்.

ஒரு சராசரி மனிதனாக, சற்றுப் பொருளாதாரம் தெரிந்தவனாக, சற்று நிதித் துறையை அறிந்தவனாக நான் இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இங்கே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது, உண்மையிலேயே இதில் ஒன்றும் அதிகமாக இல்லை, எதைச் சொல்லியிருக்கிறார்கள், ஏதோ ஓரிரு திட்டங்களைத் தானே சொல்லியிருக்கிறார்கள். தரிசு நில மேம்பாடு திட்டம் நன்றாக இருக்கிறது. மகளிருக்குத் துப்புரவு வளாகங்கள் கட்டுவது நல்ல திட்டம் என்று நான் நினைத்திருந்தேன்.

*பிற்பகல் 5–25*

இல்லம் சென்றபிறகுதான் வெள்ளை அறிக்கை ஒன்று இருப்பதைப் பார்த்தேன். வெள்ளை அறிக்கையைச் சற்று நன்றாகவே படித்துப் பார்த்தேன். பிறகுதான் இந்த நிதிநிலை அறிக்கையின் மகத்துவம் எனக்குத் தெரிந்தது. The White Paper is the corner–stone of this Budget. இந்தச் சபையிலே அந்த வெள்ளை அறிக்கையை விவாதிக்க வேண்டும் என்று ஒரு சில உறுப்பினர்கள் கேட்டபோதுகூட இதைத் தனியாக விவாதிக்க வேண்டியதில்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தமட்டில் அந்த வெள்ளை அறிக்கையைச் சற்று விரிவாக விவாதித்திருந்தால் இந்த பட்ஜெட்டிலே, நிதிநிலை அறிக்கையிலே எத்தகைய ஒரு சிறப்பான அம்சத்தை இங்கே இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், ஏன் இந்த மந்திரிசபையும் சாதித்து இருந்திருக்கின்றன என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்க முடியும். இந்த வெள்ளை அறிக்கையை நான் முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை. பல நிபுணர்களிடம் சென்றுகூட நான் இதை விவாதித்துப் பார்த்தேன். இதில் இருப்பது எல்லாம் உண்மைதானா என்றும் நான் சரிபார்த்தேன். வெள்ளை அறிக்கையில் இருப்பது அத்தனையும் உண்மையான கருத்துகள். அதனை அடிப்படையாக வைத்துத்தான் இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நினைக்கும்போது இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல. இந்த நிதிநிலை அறிக்கையிலே வேறொன்றையும் சொல்லியிருந்தார்கள்.



2001 செப்டம்பர் 4] [திரு. கு. ஜெயக்குமார்]

இந்த அரசு புள்ளிவிவரங்களை வைத்து எதையும் சாதிக்கப்போவது கிடையாது. புள்ளிவிவரங்களைச் சொல்லி, இதைச் சாதித்தோம், அதைச் சாதித்தோம் என்று நாங்கள் பெயரைத் தட்டிக்கொள்ளப் போவது கிடையாது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். அதை முதன்மையாக வைத்து இந்த நிதிநிலை அறிக்கையை வைக்கின்றோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்றபோது, இந்த அரசின் வெளிப்படையாகச் செயல்படுகின்ற நிலையினைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. வருகின்ற ஆண்டுகளிலேயும் இதைக் காணவேண்டும். வேறொரு இடத்திலேயும் இந்த வெளிப்படைத் தன்மையை நான் கண்ணுற்றேன். TSP and SCPF –Tribal Sub–Plan Fund and Special Component Plan Fund–இதுவரை இந்த நிதியைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் சரியாக ஒதுக்கித் தரவில்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கையிலே பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய வெளிப்படையான தன்மைக்கு உங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிதி ஒதுக்கப்படாத நிலை இனி ஏற்படாது என்றும் நான் கருதுகின்றேன். வருகின்ற காலங்களிலே ஒதுக்கித் தரவேண்டிய பணம் சரியாக ஒதுக்கித் தரப்படும் என்றும் நான் கருதுகின்றேன். ஆக மொத்தத்தில் மொத்தப் பற்றாக்குறையாக 827 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு, முந்தைய அரசு விட்டுச் சென்ற 700 கோடி கடனையும் வைத்து வருவாயில் 94%–ஐ ஊதியம் கொடுப்பதற்காகவும் மற்றும் ஓய்வூதியத்திற்காகவும் கொடுத்துவிட்டு, முந்தைய அரசு மானியமாக வாரி வழங்கிவிட்டுச் சென்ற பிறகு வருவாய் வருவதற்கு வழிகள் இல்லாத காலகட்டத்திலே இத்தகைய நல்லதொரு நிதிநிலை அறிக்கையை அளித்துள்ளார்கள். தரிசு நில மேம்பாடு, மகளிர் துப்புரவு வளாகங்கள், தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு மிதிவண்டி, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உணவுத் தொகையில் கூடுதல், பெண்கள் தொழிற்பேட்டை, வேளாண் வணிகத் துறை, வாட்டர்ஷெட் டெவலப்மென்ட் ஏஜென்சி, சொட்டு நீர்ப்பாசனத்தை வேகப்படுத்துதல், விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்தல், மீனவர்களுக்கு வீடுகள், கடலில் செல்லுகின்ற மீனவர்களுக்கு இரவிலே வழிகாட்டுவதற்காக மித்வைகள், கிராம அலுவலர்களுக்கு அலுவலகம் – இது சிறப்பான திட்டம். ஏனென்றால், வருமான சர்ட்டிபிகேட், கம்யூனிட்டி சர்ட்டிபிகேட் போன்றவற்றை எல்லாம் வாங்க வேண்டும் என்றால் இந்த கிராம அதிகாரிகளை நாம் நாடிச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்களைத் தேடிப் பிடிப்பதற்குள்ளாகக் காலம் கடந்து விடுகிறது. அவர்கள் எல்லாம் ஓரிடத்தில் அமர்ந்து வேலை செய்வதற்காகக் கிராம நிர்வாக

அதிகாரிகளுக்கு அலுவலகம் – தமிழகத்தைத் தொழில் துறையிலே முதன்மைப்படுத்துவோம் என்று சவால் விட்டிருப்பது ஆகிய பல நல்ல திட்டங்களை இதிலே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். இத்தகைய ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொடுத்தவர், நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற நாமக்கல்லைத் தலைநகராகக் கொண்ட நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று நினைக்கின்றபோது, அதுவும் புரட்சித் தலைவி அவர்கள் இதற்கு வழிகாட்டியாக இருந்து இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றபோது, இத்தகைய ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தாங்கள் கொடுத்தமைக்காக உங்களை நான் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5–30*

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு கருத்தை மட்டும் வைத்து அமர்ந்து விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றிய காலகட்டத்திலே, நரசிம்மராவ் அவர்களைக் குறிப்பிட்டு, நரசிம்மராவ் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் இந்த W.T.O. என்ற ஒரு ஒப்பந்தம் வந்தது என்றும். அத்தகைய ஒரு ஒப்பந்தம் வந்ததால்தான் இன்றைக்கு இருக்கின்ற விவசாயம் நலிந்து இருக்கிறது, மற்ற, மற்ற இடர்ப்பாடுகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அவர் எந்த ஒரு நோக்கத்திற்காகக் குறிப்பிட்டார் என்று எனக்குத் தெரியாது. திட்டவட்டமாகச் சொல்லுவேன். அறிந்து சொல்லுகின்றேன். உணர்ந்து சொல்லுகின்றேன். 1991 ஆம் ஆண்டு நரசிம்மராவ் அவர்கள் இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்காமல் இருந்திருந்தால் இந்த நாடு ஒரு பிச்சைக்கார நாடாக மாறி இருந்திருக்கும். பிச்சை எடுக்கின்ற நிலையிலே இந்த நாட்டை விட்டுவிட்டுச் சென்று இருப்பார்கள் என்பதைப் பகிரங்கமாக நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு வேண்டிய புள்ளிவிவரத்தை நான் கொடுக்கின்றேன். ஏன் இதைச் சொல்லுகின்றேன் என்றால், நரசிம்மராவ் அவர்கள், மன்மோகன் சிங் அவர்களை இந்த நாட்டின் நிதியமைச்சராகக் கொண்டு வந்தபோது, அதற்கு முன்பாக நிதியமைச்சராக இருந்தவர், இன்றைக்கும் நிதி அமைச்சராக இருப்பவர் யஷ்வந்த் சின்உறா அவர்கள். நாட்டை எப்படி நடத்த வேண்டும் என்றும், பொருளாதாரத்தை எப்படி வழிநடத்திச் செல்வது என்றும் தெரியாத யஷ்வந்த் சின்உறா அவர்கள் இந்திய நாட்டில் இருந்த தங்கக் கட்டிகளை வெளியே எடுத்துச் சென்று அடமானம் வைத்து, வெளிநாடுகளிலேயிருந்து பணத்தை வாங்கி வந்து கொடுத்து இந்த நாட்டை நடத்தியவர்கள். அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால் இந்த



நாடு அடுத்த கட்டமாக பிச்சை எடுக்கிற நிலையை அடைந்திருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1991–96 ஆம் ஆண்டுகளுடைய புள்ளி விவரங்களைப் பாருங்கள். பொருளாதார வளர்ச்சி 1991–லே 1 சதவீதத்திற்குக் கீழாக இருந்தது. ஆனால், 1995–லே நரசிம்மராவ் அவர்கள் ஆட்சியின் கடைசி ஆண்டிலே இருக்கின்றபோது 5.3 சதவீதம். தொழில் வளர்ச்சி 1/2 சதவீதத்திற்குக் கீழாக இருந்தது. 1996–லே 10.6 சதவீதம். விவசாய உற்பத்தி 10 மடங்கு உயர்ந்தது. அந்நியச் செலாவணி, யஷ்வந்த் சின்உறா இருந்தபோது 3 ஆயிரம் கோடி மட்டுமே இருந்தது. ஆனால், அது 60 ஆயிரம் கோடியாக உயர்ந்தது நரசிம்மராவ் அவர்கள் தலைமையிலே என்றால், இந்த நாட்டைக் காப்பாற்றிய ஒரு தலைவர் அவர். இந்த நாட்டை, debt trap – மீளாக் கடன் என்று சொல்வார்களே, அதிலிருந்து விடுவித்துக் கொண்டு வந்து, மன்மோகன் சிங் அவர்களுடைய தலைமையிலே பொருளாதார வளர்ச்சியை, பொருளாதார எழுச்சியை, இந்த நாடு மற்ற நாடுகளால் மதிக்கத்தக்க ஒரு வளர்ச்சிக்குக் கொண்டு வந்தவர். அதன் அடிப்படையில் வந்ததுதான், the new economic policy, the so–called globalisation, liberalisation and privatisation––உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதல். இதைத் தொடர்ந்து வந்ததுதான். W.T.O. அருமை உறுப்பினர் திரு. ராஜா அவர்கள்கூட, நாம் 10 வருடங்களாக ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்று இருக்கின்றோம் என்று குறிப்பிட்டார். 10 வருடங்களாக அல்ல. உண்மைக்குப் புறம்பான கருத்து அது. முதல் 5 வருடங்களாக இதை எதிர்த்திருந்து இருக்கின்றார்கள். இப்போது என்ன சொல்லுகிறார் பாரதப் பிரதமர் அவர்கள் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைப் பற்றி..(மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு வரியிலே முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னித்துக் கொள்ளுங்கள். The P.M. has changed the portfolios with the intention of sending a message that those Ministers not in sympathy with the logic and politics of the economic reform process could not expect to preside over the key economic ministries. நேற்றையதினம் பாரதப் பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் புதிய பொருளாதாரத்தைக் கொண்டதால்தான் இந்த நாடு காப்பாற்றப்பட்டிருக்கிறது, இந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேறி வந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அருமைமிகு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றேன். உங்களுடைய வெள்ளை அறிக்கையிலே கூறும்போது, இரண்டு காலகட்டங்களை நீங்கள் ஒப்பிட்டுக் காட்டியிருக்கின்றீர்கள். 1991–96 வரையிலும், 1996–2000 வரையிலும் ஒப்பிட்டுக் காட்டியிருக்கின்றீர்கள்.

அப்படிப் பார்க்கின்றபோது, முதல் காலகட்டத்திலே பொருளாதார வளர்ச்சி உச்ச நிலையிலேயும், அடுத்த காலகட்டத்திலே தாழ்ந்த நிலையிலேயும் இருந்தது. அதே நிலைதான் இந்தியாவிலேகூட....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ.து. நடராஜன்.

***திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தாயென்று அழைப்பேன்; தந்தையென்று நினைப்பேன்
உங்கள் சேயென்னும் பதமே, என் சிந்தையில் இனிக்கும்படி
சமுத்திரக் கரைதனிலே நாங்கள் வாழ்ந்தாலும்
சரித்திரமே நீங்கள், புதிய சகாப்தமே நீங்கள்,
வரலாறே நீங்கள், எங்களை வாழ வைக்கும் புதிய
வரலாறே நீங்கள்"

வாவிய குளங்கள், ஊரணிகள் வறண்டு கிடந்த மாவட்டத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அம்மா உங்களை எண்ணுவதில் எங்கள் உள்ளத்தில் பசுமை சுரக்கிறது. வேளாண்மை இல்லாவிட்டாலும் உங்களின் போராண்மை, வீராண்மை அனைத்தையும் நெஞ்சில் நினைத்து உள்ளத்தால் உங்களை பூஜிக்கிறேன், வணங்குகிறேன், வழிபடுகிறேன். அம்மா, தாயே, ஆன்ற ஞானச்சுடரே, உங்களைப் போற்றிப் புகழ்ந்து எனது கன்னிப் பேச்சை இன்றைய வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையிலே தொடங்குகிறேன்.

*பிற்பகல் 5–35*

தாய் மக்களைக் காப்பதும், மக்கள் தாயைக் காப்பதும் இயல்பே. இதைத்தான் சமநீதி பெற்ற மக்கட் சமுதாயம், ஆட்சி, தலைமையைக் காப்பாற்றும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். இது சமூகப் புரட்சி சரித்திரத்தால் உலக அளவில் மெய்ப்பிக்கப்பட்ட உண்மையாகும்.

புரட்சித் தலைமைகள் அனைத்துமே அந்தந்த நாட்டு மக்களால் அரசியல் சூழ்ச்சிக்காரர்களை எதிர்த்து காப்பாற்றப்படும் என்பது உலக வரலாறு. இதைத்தான் திருக்குறளும்,

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்று கூறுகிறது.



இதற்கு முன்பு இருந்த கொடுங்கோல் அரசு (மாமன், மருமகன், மகன் அரசு) அம்மா மீது அடுக்கடுக்காக வழக்குகள் தொடுத்து பழிவாங்க முயற்சித்தாலும் அந்த அரசியல் சுயநலக்காரர்களைத் தோற்கடித்து அம்மாவை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியது இந்த நியதியே.

இதற்கு அம்மாவின் சமூக நீதி ஆட்சியே காரணமாகும். அதனால்தான் தாய் மக்களைக் காப்பாற்றுவார். மக்கள் தாயைக் காப்பாற்றுவர். இந்த இயற்கை நீதிக்கு எந்த மன்றமும் மாறாக இருக்க முடியாது. அது நிதிமன்றமானாலும் சரி, நீதிமன்றமானாலும் சரி, விலக்கு ஏதும் இருக்க முடியாது என்பதை நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, இந்த ஏழை மகனின் மீது கருணை காட்டி 1996–ல் மட்டும் அல்லாது 2001–லும் வாய்ப்பளித்து வழிகாட்டி இந்த மாமன்ற உறுப்பினராக்கிய அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு மீண்டும் வணங்குகிறேன்.

எனது தொகுதியில் துரோகி வேட்பாளருக்கு எதிராக நான் வாக்குக் கேட்கும்போது இந்தத் தொகுதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இளையான்குடி தொகுதியை தனது சொந்தத் தொகுதியாக நினைத்து சிறப்பாகச் செயல்படுத்த உள்ளார்கள் என்று சொல்லி பொது மக்களிடம் வாக்குக் கேட்டேன்.

புரட்சித் தலைவி அம்மாவைச் சொன்னதால்தான் எனக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்தார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இளையான்குடி தொகுதியைத் தத்தெடுத்து தாங்கள் அறிவித்த நல்ல திட்டங்களைச் செயல்படுத்த மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

"புதுமைப் பெண்களடி, பூமிக்குக் கண்களடி" என பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி சொன்னான். அந்த பாரதி கண்ட புதுமைப் பெண்ணாம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையிலும் பசுமைப் புரட்சி செய்திருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது.

அந்த வகையில் விவசாயி – விவசாயப் பெருங்குடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடனே, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டித் தொகையான ரூ.310.50 கோடியைத் தள்ளுபடி செய்துள்ளார்கள் என்பதைப்

பார்க்கும்போது, விவசாயிகளின் நலனில் எந்த அளவுக்கு அக்கறையோடு, விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள் நலனுக்காகப் பல புதிய புரட்சித் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார்கள் என்பது தெளிவாகும்.

'நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி கிளியே, வாய்ச் சொல்லில் 'வீரரடி'

என்று சொல்வதைப்போல், அப்படிப் பேசுபவர்களைப் பார்த்து அந்த வஞ்சக மனம் கொண்டவர்களை, வீணர்களை எதிர்கொண்டு வெற்றிவாகை சூடிய எங்களது வெற்றி நாயகி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், வேளாண்மைத் துறையிலும் இந்த பாரதத் திருநாட்டிலேயே தமிழ் மாநிலத்தை முதல் மாநிலமாக்கி வெற்றிவாகை சூட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் பல புதிய சிறப்புத் திட்டங்களை இந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கிணங்க, உழவு செய்கின்றவர்கள், விவசாயிகள், இந்த உலகத்தார்க்கு எல்லாம் அச்சாணி போன்றவர்கள். அவர்களின் வாழ்வினில் ஒளி சிறக்கச் செய்யவும், அவர்கள் சார்ந்த இந்த வேளாண்மைத் தொழிலை இந்த நாடு, உலகம் போற்றும் அளவுக்கு முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்ல, தொழில்நுட்ப ரீதியாக, அறிவியல் ரீதியாக பல புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவது அவசியமாகிறது.

அந்த வகையிலே உறுதுணையாக இருப்பது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அதனைச் சார்ந்த ஆராய்ச்சி மையங்கள், வேளாண் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில் அமைப்புகளின் செயல் திட்டம் பற்றி இந்த மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

*பிற்பகல் 5-40*

வேளாண்மைத் தொழில் செழித்தோங்க வேண்டும், விவசாயிகள் செழித்தோங்க வேண்டும். அதற்கு நல்ல தரமான விதைகள், நல்ல



தரமான உரங்கள், மண் வளப் பாதுகாப்பு, நல்ல ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றின் நல்ல செயல் திட்டங்கள் உள்ளதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படவுள்ள திட்டத்தில் என்னுடைய இளையான்குடி தொகுதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமாய் அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த உப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு வெயிலுகந்த விநாயகர் ஆலயத்திற்கு இராமபிரான் பூஜித்த சிறப்பு உண்டு. வெளிநாட்டுப் பயணிகளும் வந்து விநாயகரைத் தரிசித்துச் செல்கின்றனர். அதனால் அதைச் சுற்றுலாத் தலமாக மாற்ற ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என்னுடைய இளையான்குடி தொகுதிக்குட்பட்ட சாலைக் கிராமத்தைச் சுற்றிலும் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் சாலைக் கிராமத்தில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி இளையான்குடி தாலுகாவில், நெடுஞ்சாலைத் துறை, ஊரகப் பணித் துறைக்கு உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் இல்லை. அதை அமைத்துத் தர பணிவோடு வேண்டுகிறேன்.

எனது தொகுதியைச் சார்ந்த திருப்பாலைக்குடியில் கிட்டத்தட்ட பத்தாயிரம், பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். ஆகவே, அவர்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நிரந்தரமாகக் குடிநீர் வசதி செய்து தர வேண்டுகிறேன். அதோடு கிட்டத்தட்ட 15-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினால் அங்கு ஒரு கால்நடை (மணியடிக்கப்பெற்றது) மருத்துவமனை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தில் உள்ள வெட்டுக்குளம் அழியாதான்மொழியில் குறுக்கே இருக்கும் ஆற்றில் பாலம் கட்டி, கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்குப் போக்குவரத்திற்கு வழிவகை செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன். ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாயிலிருந்து, ஆர்.எஸ்.மங்கலம் பேரூராட்சிக்குள் செல்லும் வாய்க்காலுக்குப் பாதுகாப்பு தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறேன்.

எனது தொகுதியில், தமிழ்நாட்டிலேயே இரண்டாவது பெரிய கண்மாயாக இருக்கும் ஆர்.எஸ்.மங்கலம் கண்மாயில் கொடிபூசரை என்ற செடி படர்ந்திருக்கிறது. ஆகவே, அதைப் போக்கி மீண்டும் பாசனத்திற்கும், குடிநீருக்கும் ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வைகை ஆற்றிலிருந்து மேலநாட்டார் கால்வாய், கீழநாட்டார் கால்வாய் என்பது கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் நீளமுள்ள கண்மாய். ஆகவே, அதில் நிரந்தரமாக வைகைத் தண்ணீர் வருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவன செய்து தர அன்போடு வேண்டுகிறேன்.

ஆர்.எஸ்.மங்கலம் பேரூராட்சியில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி, சார் பதிவாளர் அலுவலகம், இளநிலைப் பொறியாளர், மின் துறை அலுவலகம், பயணியர் விடுதி ஆகிய அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டித் தருமாறும், மேலும் தீயணைப்புத் துறைக்கு அரசுக் கட்டடம் கட்டித் தருமாறும் பணிவோடு வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஆர்.எஸ்.மங்கலம்–சேதுரஸ்தா ரோடு போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லை. அதனால் அதை அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் இளையான்குடியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக் கட்டடம் கட்டவும், மகளிர் கல்லூரி அமைக்கவும் வேண்டுகிறேன். மேலும், இங்கு அதிகமாக விளையும் பஞ்சு உற்பத்தியைப் பயனுள்ள வகையில் பயன்படுத்த பஞ்சாலை ஒன்று அமைக்க வேண்டுகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எனது தொகுதியில் உள்ள மேலநெட்டூர் கண்மாய்க்கு சுப்பன் கால்வாய்த் திட்டத்தைப் பயன்படுத்தினால், சுற்றியுள்ள 20 கண்மாய்கள் பாசன வசதி பெறும். ஆகவே, இத்திட்டத்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இளையான்குடி தொகுதி முழுவதும் உள்ள அனைத்துக் கண்மாய்களிலும் கொடிபூசரைச் செடி படர்ந்துள்ளதால் பாசனத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும், மீன்கள் உற்பத்தி ஆவதில்லை. ஆகவே, கொடிபூசரைச் செடியை அகற்றி விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையில் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இளையான்குடி தாலுகாவில் தீயணைப்பு மையம் இதுவரையில் இல்லை. அதையும் அமைத்துத் தர வேண்டுவதோடு, நீதிமன்றமும்



தனியார் கட்டடத்தில் நடப்பதால் அரசுக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் உள்ள அனைத்துச் சாலைகள் மற்றும் கிராம இணைப்புச் சாலைகள் அனைத்தையும் சீர் செய்து போக்குவரத்திற்கு வழிவகை செய்ய அன்போடு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மலையப்பசாமி. *(குறுக்கீடு)*

**திரு. வ.து. நடராஜன்:** ஒரே ஒரு நிமிடம். முடித்துவிடுகிறேன். எனது தொகுதியில் பனையேறும் தொழிலாளர்கள் அதிகமாக உள்ளதால் அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்க வழிவகை செய்ய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எனது தொகுதியிலுள்ள ஆனந்தூரில் வேளாண்மைப் பண்டகசாலைக்கு, டெப்போவுக்கு அரசுக் கட்டடம் கட்டித் தருமாறும், காவல் நிலையம் அமைக்கவும், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியும் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு என்னை உருவாக்கிய எனது இதய தெய்வம், குடும்பத்தின் குலவிளக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மலையப்பசாமி.

*பிற்பகல் .5–45*

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு, விவசாய மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பிற்படுத்தப்பட்ட சமூகமான கொங்கு வேளாளக் கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒரு விவசாயப் பட்டதாரியாகிய என்னை, விவசாயிகள் நிறைந்த கபிலர்மலை தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளராக அறிமுகப்படுத்தி சட்டமன்ற உறுப்பினராக்கியதன் மூலம் பாட்டாளி மக்கள் கட்சி அனைத்து சமூகத்தினருக்கும் சமூக நீதி வழங்கி வருகிறது என நாட்டுக்கு உணர்த்தி என்னை ஆளாக்கிய சமூக நீதிக் காவலர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், எனது வெற்றிக்காக ஆதரவு நல்கிய மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. அ.இரா. மலையப்பசாமி] [2001 செப்டம்பர் 4

அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்களுக்கும், என்னை இந்தச் சிறப்பு வாய்ந்த சட்டமன்றத்தில் உறுப்பினராக அமர வைத்த பெருமைமிகு கபிலர்மலை தொகுதி வாக்காளர்களுக்கும், என்னை ஈன்றெடுத்து வளர்த்து ஆளாக்கி கல்வி தந்த என் பெற்றோர்களுக்கும், எங்களது கட்சித் தலைவர் பாசமிகு ஜி.கே. மணி அவர்களுக்கும், எனது நன்றியையும், வணக்கத்தையும் சமர்ப்பித்து, விவசாய மானியக் கோரிக்கையின்மீது எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து'

என்ற வள்ளுவரின் வாக்குக்கு இணங்க, உழவுத் தொழில் செய்வோர் உலகத்திற்கு அச்சாணி போன்றவர் ஆவர் என்பதை உணர்ந்து இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2001–02 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வறுமையை ஒழிக்கவும், வேலைவாய்ப்பை உருவாக்கி வருமானத்தைப் பெருக்கவும், வேளாண் உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யவும் வேளாண்மைத் துறையில் வளர்ச்சி காண்பது இன்றியமையாத தேவையென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள் என்பதும் வரவேற்கத்தக்கதாகும். புதிய வேளாண்மைக் கொள்கை வகுக்கப்பட்டு வருவதும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி தொடர்ந்து கோரி வரும் வேளாண் வணிகத் துறை என்னும் புதியதொரு துறையை ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்து, வேளாண்மைக்கும் தொழில் துறை அந்தஸ்து கொடுக்க முன்வந்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்தத் திட்டத்தை எந்த வகையில் நடைமுறைப்படுத்த இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகின்றேன். அதே நேரத்தில், தமிழகத்தில் வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ள சுமார் 4000 விவசாயப் பட்டதாரிகளை இந்த அரசு மேற்படி துறையில் நியமித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு'

என்பதற்கேற்ப கருவி, காலம், செயல்வகை, செயலின் அருமை ஆகியவற்றை ஆராய்ந்து செய்பவரே அமைச்சர் என்ற வள்ளுவரின்



2001 செப்டம்பர் 4] [திரு. அ.இரா. மலையப்பசாமி]

வாக்குக்கு ஏற்ப இந்த நிதிநிலை அறிக்கையினைத் தயாரித்து, பயிர் செய்யத் தகுதியற்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை 5 ஆண்டுகளுக்குள் நீர்வளத்திலும், நிலவளத்திலும் மேம்படுத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களின் மிகப் பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டமான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இந்த நேரத்தில் இத்திட்டத்தில் குறு, சிறு விவசாயிகள் நேரிடையாகப் பயன்பெற வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்தமாட்டோம் என்று நேற்று முதலமைச்சர் அறிவித்தமைக்காக, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001–02 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள தரிசு நிலச் சீரமைப்புத் திட்டம் மூலமாக, தரம் குறைந்த தரிசு நிலங்களில், மின் சக்தி உற்பத்திக்காகவும், பேப்பர் தயாரிக்கவும் உதவும் மரங்களான காட்டுக் கருவேல், சவுக்கு போன்ற மரங்கள் பயிரிட இருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

எனது கபிலர்மலை தொகுதியில் உள்ள தரம் குறைந்த தரிசு நிலங்களில் தரிசு நிலச் சீரமைப்புத் திட்டத்தை மக்கள் பங்கேற்புடனும், தனியார் துறையின் ஒத்துழைப்புடனும் செயல்படுத்தினால் கிராமப்புற மக்கள் பயனடைவதுடன், மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான, எனது தொகுதிக்கு அருகில் உள்ள புகளூர் தமிழ்நாடு காகித ஆலைக்கு பேப்பர் தயாரிக்க உதவும் என்பதையும், இதனால் மேற்படி ஆலைக்கு போக்குவரத்துச் செலவு குறையும் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு விவசாயப் பட்டதாரியான நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் இந்த நேரத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பெரிய அளவில் எனது தொகுதியில் செயல்படுத்த உத்தரவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்பது பழமொழி. இப்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உழுதவன் இலாபக் கணக்குப் பார்க்க, 2001–02 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அபராத வட்டித் தொகையான ரூ.310.50 கோடியைத் தள்ளுபடி செய்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். நிலவள வங்கிகளிலும் சலுகை அளிக்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட Water Resources Consolidation Project–I–நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம்–1 வருகின்ற 31–3–2002 ஆம் நாளுடன் முடிவு பெறுகிறது. Water Resources Consolidation Project–II–க்கு உலக வங்கியிலிருந்து தற்சமயம் 1100 கோடி ரூபாயை வருகிற மார்ச் மாதத்திற்கு மேலும் செலவு செய்ய நீட்டித்து அறிவித்திருப்பது மகிழ்ச்சியாக இருந்தபோதிலும், காவிரி பாசனப் பகுதியில் உள்ள வாய்க்கால்களுக்கு உலக வங்கியின் நிதியில் Re–modelling செய்ய அனுமதியளிக்கப்பட மாட்டாது என்று உலக வங்கியினர் அறிவித்துள்ளது எனக்கும், காவிரி பாசனப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும் கவலையளிப்பதாக உள்ளது.

*பிற்பகல் 5–50*

காவிரிப் பாசனப் பரப்பில் உள்ள எனது கபிலர்மலை தொகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான ராஜ வாய்க்கால், மோகனூர் வாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால் ஆகியவை விவசாய நிலங்களைவிட ஆழமாக உள்ளபடியால் தண்ணீர் வரத்து ஓரளவுக்கு இருந்தும் கடைமடைப் பகுதிகளில் தண்ணீர் கிடைப்பதில்லை. இதனால் இப்பகுதி விவசாயிகள் எந்த அளவிற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எனது பக்கத்துத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக உள்ள மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் காவிரி டெல்டா பகுதியில் உள்ள ராஜ வாய்க்கால், குமாரபாளையம், மோகனூர் வாய்க்கால்கள் ஆகியவற்றை Re–modelling செய்து புதுப்பித்தால், இப்போது காவிரியில் மேற்படி வாய்க்கால்களுக்காக எடுக்கப்படும் தண்ணீர் அளவை விடக் குறைவாகத்தான் இருக்கும் என்றும், மிகப் பெரிய அளவில் காவிரித் தண்ணீர் மிச்சப்படும் என்பதையும், மைய அரசு மூலம் உலக வங்கிக்கு எடுத்துரைத்து உலக வங்கியின் உதவியுடன் சுமார் 200 கோடி ரூபாய் செலவில் மேற்படி வாய்க்கால்களை Re–modelling செய்து தர வேண்டுமாய் சுமார் 10000 குடும்பங்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மக்கள் தொகைப் பெருக்கம், நகரமயமாக்கம் ஆகியவற்றின் முதல் பலி, ஆக்கிரமிப்புகளுக்கு ஆளாகிய நீராதாரங்கள். இன்று பாகுபாடு இல்லாமல் தமிழகத்தில் உள்ள அனைவராலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள



தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பாசன வாய்க்கால்கள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை 1960 ஆம் ஆண்டில் இருந்த நிலைக்குக் கொண்டு வர ஆய்வு செய்து, அவைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றினால் தமிழ்நாடு நிரந்தரமாகப் பாசன வசதிகளில் தன்னிறைவு பெற முடியும் என்றும், குடிநீர்ப் பஞ்சத்தை முற்றிலுமாக அகற்றிட முடியும் என்பதாலும், அதற்குண்டான நடவடிக்கைகளைக் கட்சிப் பாகுபாடு இல்லாமல் நிறைவேற்ற வேண்டும் என்றும் இந்த நேரத்திலே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மண்ணில், சென்னையின் முன்னேற்றம் கூவம் நதியை சாக்கடையாக்கியது. திருப்பூரின் தொழில் வளர்ச்சி நொய்யலைக் கொன்றது. மதுரையின் சாக்கடை வைகையைப் பாழ்படுத்தியது. கரூரின் மேம்பாடு அமராவதியை அழித்தது. வேலூரின் தோலாலை வளர்ச்சி பாலாற்றைப் பாழடித்தது. இந்த மாசு படிந்த நீர் எல்லாம் மேற்படி ஆறுகளில் கலக்காமல், இவைகளையெல்லாம் சரி செய்தாலே கிராமப்புற இந்தியாவில் 95% முதல் 98% விவசாயத்தை நம்பி உள்ள விவசாயிகளின் வாழ்வு நல்ல முறையில் அமையும் என்பதை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பில் தமிழகத்தில் பரவலாக உள்ள அனைத்துப் பயிர்களுக்கான ஆராய்ச்சி மையங்களில் செய்யப்படும் பணிகளையும், அவற்றால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய பயன்களையும் அவ்வப்போது விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, அந்த ஆராய்ச்சி மையங்கள் இன்னும் நல்ல முறையிலே செயல்பட கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்த இணை வேந்தரான மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையின் பொறுப்பிலுள்ள வேளாண்மைக் கிடங்குகளில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட உள்ள விதை பொருட்கள், பூச்சி மருந்துகள் பற்றிய தகவல்கள் விவசாயிகளுக்குச் சரியான முறையில் தெரிவதில்லை. விவசாயிகளுக்குத் தக்க முறையில் விளம்பரம் செய்து அதைக் கண்காணிக்க, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் ஒரு குழுவினை ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் ஓராயிரம் விலை வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்குத் தொழில் அந்தஸ்து வழங்கியுள்ளதால், விவசாயிகள் கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தவுடன் முன்னுரிமை

அடிப்படையில் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

முந்திரி சாகுபடி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்திட, நமது தமிழ்நாட்டிலேயே உற்பத்தியாகும் முந்திரி தேவையான அளவு இருக்கும்போது, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், நாமக்கல் மற்றும் பிற மாவட்டங்களில் உற்பத்தியாகும் மரவள்ளிக் கிழங்குகளை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்து மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளைக் காத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மத்திய விவசாய அமைச்சர் அவர்கள் கடந்த 10–7–2001 அன்று அறிவித்துள்ள, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு விவசாய மருத்துவ மையம் என்றும், அதில், படித்த, வேலைவாய்ப்பற்ற விவசாயப் பட்டதாரிகளை நியமித்து உதவிட உள்ள திட்டத்தையும், விவசாயிகளுக்கு Credit Card, வரும் 2002 ஆம் ஆண்டிற்குள் வழங்குகின்ற திட்டம், மத்திய அரசு விவசாயம் சம்பந்தமான ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம், தீவிர மக்காச் சோள அபிவிருத்தித் திட்டம், தேசிய பயிர்ப் பெருக்கத் திட்டம் போன்ற 27 நலத் திட்டங்களையும் ஆராய்ந்து, தமிழ்நாட்டிற்குத் தேவையான பயிர் வாரியான திட்டங்களை தமிழக அரசே தயாரித்து நமது மாநிலத்திற்குப் பெற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு மட்டுமல்லாது, பல சாதனை கண்டுள்ள வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வு மேம்படவும், இந்த ஆட்சியின் புகழ் ஓங்கவும் அயராது பணிபுரியும் வேளாண் அலுவலர்களில் சுமார் 601 வேளாண்மை அலுவலர்களைப் பணிப்பெயர்ச்சி மூலம் தோட்டக்கலைத் துறைக்கு மாற்றல் செய்ய முயற்சி மேற்கொள்ளுதலை முற்றிலுமாகக் கைவிட வேண்டும் என்றும், இல்லையென்றால் (மணியடிக்கப்பெற்றது) ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், Agri. Graduate என்கிறீர்கள். கோரிக்கைகளை அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** அதனால்தான் துணைத் தலைவர் அவர்களே, பேசி முடித்து விடுகிறேன்.



வேளாண்மைத் துறையின் செயல்பாடுகளும் குறைந்து, தோட்டக் கலைத் துறையின் செயல்பாடுகள் குறைந்து, நல்ல பல திட்டங்களான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்–இதெல்லாம் முதலமைச்சர் அவர்களுடைய முக்கியமான திட்டங்கள். அதனால் சொல்கிறேன்.– தரிசு நிலச் சீரமைப்புத் திட்டம், புதிய வேளாண் வணிகத் துறைத் திட்டம், மூலிகைப் பண்ணை அபிவிருத்தித் திட்டம் போன்ற நல்ல பல திட்டங்களை விவசாயிகளுக்குச் செய்யக் காத்திருக்கும் இந்த அரசின் திட்டங்களில் தொய்வு ஏற்பட்டு விடும் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு மெத்தப் பணிவுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். வரும் ஆண்டுகளில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கும் முன்பாக விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்துகளைப் பெற்று, முடிவுகளை அறிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் .5–55*

அடுத்தபடியாக, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்யக்கூடிய தகுதியில்லாத சூழ்நிலையைப் போக்க விவசாயிகள், வணிகர்கள், விவசாயத் துறை அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிஞர்களையும் உள்ளடக்கிய குழு ஒன்றை அமைக்க இந்த மாமன்றத்தின் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள அரசு பட்டுப் பண்ணையில் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 1984 ஆம் ஆண்டு முதல் தற்காலிக அடிப்படையில் பட்டு வளர்ச்சி இளநிலை ஆய்வாளர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டு, கடந்த 12 ஆண்டுகளாக தற்காலிக அடிப்படையில் வயது முதிர்ந்த நிலையிலும் பணியாற்றி வரும் அவர்களை, தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் காலியாக உள்ள இடங்களில் இளநிலை பட்டு ஆய்வாளராகப் பணி நிரந்தரம் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் கருத்துப்படி தாலுகா அளவில் சமுதாய தானிய வங்கிகளை–Community Food Banks அமைத்தால் எல்லாப் பகுதி மக்களுக்கும் சீரான முறையில் தானியங்களை விநியோகிக்க முடியும் என்பதால் இந்த அரசு அதற்குண்டான முயற்சிகளில் ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் தேவையில்லை எனக் கருதிய வேளாண்மை உதவி இயக்குநர் பதவிக்கு நேரடித் தேர்வு முறையினை பணி விதிகளில் நிரந்தரமாக ரத்து செய்து, கடந்த 27 ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வு இல்லாமல் தேவையான தகுதிகளுடன் இருக்கும் வேளாண்மை அலுவலர்களையே உதவி இயக்குநர் பதவிக்குப் பதவி உயர்வு செய்து உத்தரவிட வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இரண்டே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். அலுவலக நடைமுறைகளை நெறிப்படுத்துதல் திட்டத்தின்கீழ் – Portals on the Internet திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு Assistant Director of Town Panchayat அதிகாரியை நியமிக்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல காவிரி வடிநில மாவட்டங்களில் 204 பாலங்களைக் கட்டவுள்ள இந்த நல்ல நேரத்திலே கரூர் மாவட்டத்திலுள்ள வாங்கலையும், எனது தொகுதியிலுள்ள மோகனூரையும் இணைக்க காவிரி ஆற்றில் ஒரு பாலம் கட்டவும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியான ஈரோடு மாவட்டம் பாசூரை இணைக்க ஒரு பாலத்தையும் குறுக்கே கட்ட கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** ஒரே ஒரு நிமிடம், தொகுதிக்கு வந்துவிடுகிறேன். எனது வேண்டுகோளை ஏற்று சோளசிராமணி மற்றும் கரிச்சிபாளையம் பகுதியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கிய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியோர் இல்லங்கள் திறக்கப்பட நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஆனால் அதைப் பற்றி அறிவிப்பு எதுவும் இல்லை. அதேபோல – (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன் – மூலிகைத் தாவர வாரியம் ஆரம்பிக்கவுள்ள திட்டமானது மிகவும் பாராட்டுக்குரிய திட்டம். எனது தொகுதியிலே



அந்தத் திட்டத்தை ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். மானிய விலையிலே விவசாயிகளுக்கு உதவக்கூடிய 45 எச்.பி.க்கு மேல் உள்ள டிராக்டர்களையும், விசை உழுவைகளையும், கதிர் அடிக்கும் கருவிகளையும் 90 சதவிகித மானியத்தில் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு முக்கியமான பிரச்சினை. தென்னை மரம் பற்றி ஒன்றே ஒன்று சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் Agri. Graduate என்பதால் அமைச்சர் அவர்களிடம் விவசாயத் துறை சம்பந்தப்பட்டதை எழுதிக் கொடுத்துவிடுங்கள். ஏனென்றால் இன்னும் நிறையப் பேர் பேச இருக்கிறார்கள். வணக்கம் சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** பண்ணை மகளிர் திட்டம் தொடர்ந்து செயல்பட கூடுதல் மகளிர் வேளாண் அலுவலர்களை நியமித்து உதவிடக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தென்னை மரத்தைப் பாதுகாக்க தென்னை மர பூச்சிகளைக் கட்டுப்படுத்த, மருந்துகள் வாங்க மானியம் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். புகையிலைப் பொருட்களைத் தடை செய்ததற்காக நன்றி சொல்லிக்கொள்கிறேன். அதேபோல ஹெல்மெட் அணிவதற்காக ஒரு உத்தரவு வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சசிகலா. (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், அவர் நன்றி சொல்லிவிடுவார்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

***திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமத்தில் வசித்த என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது கோடானுகோடி வணக்கத்தை அம்மா அவர்களின் பொற்பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன். மேலும் என்னை வெற்றிபெறச் செய்த எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மை மானியத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் நானும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவள். அதுமட்டுமல்ல, எங்கள் அப்பா ஒரு வேளாண்மை இணை இயக்குநர் ஆவார். விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில், அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டி ரூபாய் 310.5 கோடியைத் தள்ளுபடி செய்ததற்கு நானும், எனது தொகுதியைச் சார்ந்த மக்களும் எனது அம்மாவிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தை பண்ணைத் தோட்டங்களாக மாற்றும் திட்டத்தின்மூலம் 5 ஆண்டுகளில் கிராமப் பகுதியைச் சார்ந்த ஏழைகள் சுமார் 10 இலட்சம் பேர் வளமாக வாழ வசதி ஏற்படும். இதனால் கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலை உயர்வதுடன், தமிழ்நாடும் செழிப்படையும். ஏழைகளின் துயர் துடைக்கும் நோக்கமாக இருக்கும் என் அன்னைக்கு எனது தொகுதியின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 6–00*

தரிசு நிலங்களை மூன்று வகையாகப் பிரித்து, அதனுடைய நீர்வரத்துக்கு ஏற்ப பயிர் செய்து அதன்மூலம் கிராமப் பகுதியைச் சார்ந்த 10 இலட்சம் மக்கள் பயன்படும் வகையில் இத்திட்டத்தினைத் தீட்டிய என் அன்னைக்கு எனது நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில், அவர்கள் பயிர் செய்த டி.கே.எம்.9 வகை அரிசி மற்றும் நெல்லை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை அகற்றி விவசாயிகள் இலாபம் ஈட்டும் வகையில் நெல் உற்பத்திக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 50 கோடி ஒதுக்கியதற்கு என் அன்னைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை அலுவலர்கள் சங்கம் கொடுத்துள்ள கோரிக்கையை இம்மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். வேளாண்மைத் துறைப் பணியாளர்கள் – வேளாண்மை அலுவலர்கள் – தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்த் துறைக்கு பணிப்பெயர்ச்சி செய்ய இருப்பதைத் தவிர்த்திட அம்மா அவர்களின் நோக்கத்திற்கு ஏற்ப செவ்வனே செயல்பட அவர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்யுமாறு அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



வேளாண்மை அலுவலர்கள்மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையை விரைவில் பரிசீலனை செய்ய அலுவலர்கள் கொடுத்த மனுவை மாண்புமிகு வேளாண்மை அமைச்சரிடம் கொடுத்துள்ளேன். அதை மறுபரிசீலனை செய்யுமாறு தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களிடம் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள முக்கியப் பிரச்சினைகளை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்கள் அனைவரும் நிலத்தடி உப்பு நீரையே அருந்தி வாழ்ந்து வருகின்றனர். மழை இல்லாத காலங்களில் அதுவும் கேள்விக்குறியாகிவிடுகிறது. அம்மா அவர்களின் கடந்த ஆட்சியில் தீட்டப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்டது. அம்மா அவர்கள் மீண்டும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்தி கிருஷ்ணராயபுரம், கடவூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள 505 கிராமங்களுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் கிடைக்க அம்மா அவர்கள், விரைவில் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் வறுமைக் கோட்டிற்குக்கீழே அதிக அளவில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குடியிருக்க இலவச வீடு அதிக அளவில் ஒதுக்கித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் ஏரிகள் அதிகம் உள்ளன. அவைகளைத் தூர் எடுத்து மழை நீரைத் தேக்கி விவசாயத்திற்கும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் உதவிடுமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பெரும்பகுதி சாலை வசதியின்றி மக்கள் அவதிப்படுகிறார்கள். சாலை வசதி சரியில்லாததால் பேருந்து வசதியில்லாமல் மக்கள் நடந்தே செல்ல வேண்டிய நிலை உள்ளது. பள்ளி மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் செல்ல வெகு தொலைவு மோசமான சாலையிலே செல்வதால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனது தொகுதியில் உள்ள சாலைகளின் சீரமைப்புப் பணிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க ஆவன செய்யுமாறு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள மாயனூர் ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை மீண்டும் இயங்க அம்மா அவர்கள் ஆவன செய்து, அங்கு பணிபுரியும் 750 குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என அம்மா அவர்களைக் கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தாந்தோணி ஒன்றியத்தைச் சார்ந்த வெள்ளியணைப் பகுதியில் நீண்ட காலமாக இருந்துவரும் குடகனாறுப் பிரச்சினையை, தாங்கள் ஒரு குழு அமைத்து ஆராய்ந்து அத்திட்டத்தை அமல்படுத்துவதன்மூலம் அப்பகுதியில் உள்ள 1500 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர்ப் பாசனம் கிடைக்கும். இதனால் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவதை எனது கடமையாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையே என்னுடைய சேவையாக இருக்கும் எனக் கூறி, இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் உரையை முடித்ததற்காக இந்த மாமன்றத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மீதான இந்த விவாதத்தில் முதலில் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக, வழங்கப்பட்டிருக்கின்ற அறிக்கை என்பது செறிவான அறிக்கையாக அமைந்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

*பிற்பகல் 6–05*

இதிலே கடன் தள்ளுபடி என்பது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. 310.50 கோடி ரூபாய் வட்டி, அபராத வட்டி தள்ளுபடி அறிவிப்பு வழங்கியதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலை விவசாயிகளின் சார்பாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேநேரத்தில், இதே கோரிக்கைக்காகத்தான், வட்டித் தள்ளுபடி, அபராத வட்டித் தள்ளுபடிக்காகத்தான் கடந்த செப்டம்பர் திங்கள் 25 ஆம் நாள் சென்னை மாநகரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயிகளைத் திரட்டி Memorial Hall அருகில் ஒரு மகத்தான மறியல் இயக்கத்தை நடத்தினார்கள். இந்த மறியல் போராட்டத்தில் காவல் துறையினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தி ரத்தக்களறி ஏற்பட்டது. சென்னை Memorial Hall முன்பாக நடைபெற்ற இந்த அநீதி, விவசாயிகள் இயக்கத்தின் வரலாற்றில் என்றென்றும் வடு போன்ற memory–ஆக, நினைவாக அமைந்துவிட்டது. இதுபோன்ற உணர்வுகளையெல்லாம் மனதில் கொண்டு, இன்றைக்கு ஆளும் கட்சியானவுடன் வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்கிற முறையில் சுமார் 310 கோடி ரூபாய் வரைக்கும் தள்ளுபடி செய்ததை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பிலும், என் சார்பிலும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்தக் கோரிக்கைக்காக மறியல் நடத்தி, இன்றைக்கும் 350 விவசாய சங்க முன்னணித் தலைவர்கள், ஊழியர்கள் வழக்கிற்கு ஆளாகியிருக்கிறார்கள். வட்டியைத் தள்ளுபடி செய்த அரசு இந்த வழக்கையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தரிசு நில மேம்பாடு. நில உச்சவரம்புச் சட்டம் தளர்த்தப்பட மாட்டாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்றையதினம் அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்புக்கு என் சார்பிலும், எனது அமைப்பின் சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன். அதேசமயத்தில், மாநில வேளாண்மை மன்றம் அமைக்கப்படும் என்று இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. இந்த வேளாண்மை மன்றம் சம்பந்தமாக சில விவரங்களைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வேளாண்மை உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் இடம்பெற்றிருந்தார்கள். தற்போது அரசு அமைக்க உத்தேசித்திருக்கிற வேளாண்மை மன்றத்திலும் இதேபோன்று விவசாய சங்கப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும். அதுபோக, வேளாண் விஞ்ஞானிகளுடைய ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மை விஞ்ஞானிகள் என்கிற முறையில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், டாக்டர் அபுல் கலாம், இதுபோன்ற அறிஞர்கள், இந்தியப் புகழ் வாய்ந்த, உலகப் புகழ் வாய்ந்த விஞ்ஞானிகள், அதேபோன்று இளம் விஞ்ஞானிகள் என்ற முறையில்—நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய மைந்தன் நைஜீரிய நாட்டுக்குச்

சென்று இந்திய மூலிகைகள் பற்றி ஆய்வுகளைப் பயன்படுத்தி வருவதை இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் தெரிவித்தார்கள் – அதுபோன்ற இளம் விஞ்ஞானிகளையும் பயன்படுத்தக்கூடிய முறையில் இந்த மன்றத்தின் செயல்பாடு அமைய வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் பல இளம் விஞ்ஞானிகளும் இணைக்கப்பட வேண்டும். உயர் விஞ்ஞானிகளுடைய ஆலோசனைகளையும் அரசு பெறவேண்டும். விவசாய சங்கப் பிரதிநிதிகளும் இந்த மன்றத்தில் இடம்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளில் வேளாண்மைப் பாடம். உண்மையிலேயே அது ஒரு புதிய அறிவிப்பு. இதுவரையிலும், பிளஸ் 2 முடித்த பிறகு கல்லூரிக்குச் செல்கிறபோதுதான் வேளாண்மை என்பது ஒரு பாடமாக வருகிறது. பள்ளிக் கல்வியிலேயே இது வருவது என்பது நல்ல முயற்சி. இளமையில் கல் என்பதற்கேற்ப, இளம் வயதிலேயே வேளாண்மையை ஒரு பாடமாக வழங்குவதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. அ. பாப்பா சுந்தரம் தலைமை)*

அடுத்து, கரும்பு விலை. கரும்புக்குக் கட்டுப்படியான விலை வேண்டுமென்று மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அரசு ஆய்வு செய்கிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார் ஆலைகள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். இந்தத் தடையை நீக்குவதற்கு கடந்த கால அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு அந்தத் தடையை நீக்குவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையின் அனைத்துத் துறைகளையும் ஒரே குடையின்கீழ் கொண்டுவருவது நல்ல முயற்சி. ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொரு துறைக்குச் சென்று அலைந்துகொண்டிருக்கிற அந்த அலைச்சலைத் தவிர்க்கக்கூடிய முறையில் விவசாயிகளுக்கு நலன் பயக்கக்கூடிய நல்ல முயற்சி என்று அதனையும் நான் வரவேற்கிறேன்.

நெல் கொள்முதல் நிலையங்கள் உடனே தொடங்கப்பட வேண்டும். இந்த ஆண்டுக்கான கட்டுப்படியான நெல் விலை உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம். அதில் வாழையும், வெற்றிலையும் சேர்க்கப்பட வேண்டும். அதற்கு அரசு பரிந்துரை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 6–10*

பருத்தி உற்பத்தி சம்பந்தமாக அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. முதிய விதைகள் தயாரிப்பதற்கான முறைகள் – அதனை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நம் நாட்டில் உற்பத்தி செய்கின்ற பருத்தியின்மூலம் தமிழகப் பஞ்சாலைகளுடைய பஞ்சுத் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று இந்தக் குறிப்பிலே இருக்கிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முறையில் மேலும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாற்று நடவு இயந்திரம் வாங்குவதாக அறிக்கையில் இருக்கிறது. அரசு எந்தவிதத்திலும் அதற்கு ஊக்கம் தரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நடவு என்பது பெரும்பாலும் பெண்கள் செய்யக்கூடிய வேலை. அவர்களுடைய வேலைவாய்ப்பைப் பறிக்கக்கூடிய வகையில் இது அமைந்துவிடக்கூடாது என்பதை எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டுகிறோம். ஆகவே, நாற்று நடவு இயந்திரம் வாங்குவதற்கு அரசு ஊக்கப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குளிர் பதனக் கிடங்குகளை, தேவைப்படுகின்ற இடங்களில் அமைத்திட வேண்டும். தேங்காய், முந்திரி, காப்பி ஆகியவற்றின் விலை மத்திய அரசின் இறக்குமதிக் கொள்கையினால் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறது. தேங்காய்க் கொள்முதல் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும். கட்டுப்படியான விலையில் வழங்கப்பட வேண்டும். கொப்பரைத் தேங்காயின்மீது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் வரிக் குறைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் தவறான கொள்கையின் காரணமாக ஏற்பட்டிருக்கிற இந்தப் பாதிப்பிலிருந்து தப்புகிற முறையில் ஏற்கெனவே, நீலகிரி, ஊட்டி, தேயிலை பிரச்சினையில் அரசு ஒரு முயற்சியைக் கையாண்டது. அனைத்திலும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயில் மடத்து நிலங்கள். குத்தகை விவசாயிகளுடைய பிரச்சினை தீர்க்க முடியாததாக இருக்கிறது. தொடர்ந்து கடன் என்பது தள்ளுபடி செய்யப்படவில்லை, பாக்கி என்பது தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. எனவே, நிரந்தரத் தீர்வு காண வேண்டிய வகையில், இந்த நிலங்கள் சம்பந்தமாக விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் பொருத்தமான வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மைப் பொறியியல் மற்றும் கூட்டுறவு இணையம் வேளாண்மைத் துறையின்கீழ் இருந்து வருகிறது. பல்வேறு துறைகளுடைய பணிகளையும்,

அரசு நலத் திட்டத்தையும் நிறைவேற்றுவதில் ஆணையம் பெரும் பங்கு ஆற்றி வருகிறது. கடந்த கால ஆட்சியில் அனைத்துப் பணிகளையும் தனியாருக்கு அளித்துவிட்டார்கள். Open Tender விட்டவுடன், இவற்றுடன் போய் இந்தத் துறை போட்டி போட முடியவில்லை. இதன்விளைவாக, தனியாருக்குச் சென்றதன் காரணமாக, ஊழியர்களுக்கு ஊதியம் பெறுவதற்குக்கூட வழியில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, குடிநீர் வடிகால் வாரியம் ரூபாய் 25 இலட்சத்திற்கும் குறைவான பணிகளை இந்த இணையத்திற்கு வழங்க வேண்டும். அரசின் பல்வேறு துறைகள் இந்த இணையத்திற்குத் தரவேண்டிய நிலுவைத் தொகைகள் இன்னும் பாக்கி இருக்கின்றன. அவைகளையெல்லாம் இந்த இணையத்திற்குக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறிக்கையிலே இந்தத் துறை பற்றி சிறப்பாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசு மானியத்தில் வழங்கப்படும் வேளாண்மைக் கருவிகள் கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால், இப்போது தாலுகாவில் ஒரு இடத்தில் மட்டும் கிடைக்கிறது. இது கூட்டுறவு சொசைட்டிகள்மூலம் வழங்கப்பட்டால் கூடுதலாக விற்பனை ஏற்படும். இதில் முறைகேடு நடக்காமல் இருக்க – அரசாங்கத்தினுடைய மருத்துவமனைகளில் மாத்திரை வழங்கப்படும்போது த.அ. (தமிழக அரசு) என்று போட்டிருக்கிறார்கள் – இந்தக் கருவிகளிலும் ஒரு அரசு முத்திரை இருந்தால் முறைகேடு நடக்காமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு அமைத்திட வேண்டும். அதில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புகையிலை குறித்து தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. புகையிலை பயிரிடுகிற விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நிவாரணம் பெறக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மைத் துறை சம்பந்தமாக ஒரு விரிவான பார்வையுடன், அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அறிக்கை அமைந்திருக்கிறது. மேலும், இதனுடைய பயன்பாடுகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டு, கால அளவைப் புரிந்து, இந்த அளவோடு உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. பாப்பா சுந்தரம்): திரு.** வெ. கோவிந்தராஜ்.



**திரு. வெ. கோவிந்தராஜ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சாதாரண குக்கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, 10 ஆண்டு காலம் கிளைக் கழகத்தின் செயலாளராகப் பணியாற்றிய என்னை, எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும், மாவட்டக் கழகத்தின் செயலாளராகவும் ஆக்கி, இன்று சட்டமன்றப் பேரவையிலே நுழைகின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இங்கே நடந்த 12-வது சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியைத் தேர்வு செய்து அங்கே மனுத் தாக்கல் செய்தார்கள். கடந்த ஆட்சியாளர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்களுடைய பண பலத்தைப் பயன்படுத்தி, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் அவர்களுடைய வேட்பு மனுவை நிராகரிக்கச் செய்தார்கள். மாற்று வேட்பாளராக என்னை வேட்பு மனுத் தாக்கல் செய்ய அனுமதி வழங்கி, இன்று அதிகாரப்பூர்வ வேட்பாளரான என்னை வெற்றிபெறச் செய்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

*பிற்பகல் 6–15*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தமிழகத்தில் புனிதத் தாயினுடைய ஆட்சி மலர்ந்திட அம்மா அவர்களை தமிழகத்தினுடைய முதல்வராகப் பார்க்க ஆவலோடு என்னை கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

கவர்னர் உரையிலேயும், நிதிநிலை அறிக்கையிலேயும் தமிழக மக்களுக்காகவே பல்வேறு திட்டங்களைத் தீட்டி நூறு நாட்களுக்குள்ளாகவே சாதனை படைத்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு இல்லாதபோதும், இங்கே வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பருவ மழை பொய்த்துப்போன காலத்தில், அம்மா அவர்களுடைய திட்டங்கள் மூலம் அனைத்து ஏரிகள், குளங்கள், பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றை நவீனப்படுத்தி தண்ணீருடைய கொள்ளளவுகளை உயரச் செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தை இந்த மாமன்றம் பாராட்ட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றக் கோரி, பல்வேறு போராட்டங்களை 5 ஆண்டு காலத்திலே இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் நடத்தியபோது, அப்போது கண்டுகொள்ளாது இருந்தது முந்தைய அரசு. ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்த முப்பதே நாட்களிலே விவசாயிகளினுடைய நீண்ட நாள் கோரிக்கையான, அவர்கள் விவசாயத்திற்காகப் பெற்ற கடனுக்கு உண்டான வட்டியையும், அபராத வட்டியையும் 310 கோடி ரூபாயை, முப்பதே நாட்களிலே தள்ளுபடி செய்த புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றம் நன்றி கூற வேண்டும்.

அதேபோல், இங்கே 12,619 கிராம ஊராட்சிகளில் படிப்படியாக மகளிர் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் துப்புரவு வளாகங்களை அமைக்க, போதிய மின் வசதி, தண்ணீர் வசதியோடு கழிப்பிடம் மற்றும் குளியல் அறை வசதிகளைக் கொண்ட சுமார் 2 இலட்சம் ரூபாய் செலவிலே மாபெரும் ஒரு திட்டத்தை அறிவித்த, புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தை இந்த நேரத்திலே நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், கிராமப் பகுதிகளிலே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே உதவிக் குழுக்களை அமைத்து, குடும்ப வருமானத்தைப் பெருக்குகின்ற வகையிலே மாபெரும் ஒரு திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்ததற்காக நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம நிர்வாகத்திலே சாதாரண விவசாயக் குடிமக்கள், படிக்கின்ற மாணவர்கள், அவர்களுடைய சொந்தப் பிரச்சினைகளுக்கு கிராம நிர்வாக அலுவலர்களை அணுகுகிறபோது, அவர்கள் 10 கிலோமீட்டர், 20 கிலோமீட்டர் தூரத்திற்குச் சென்று வருகின்ற ஒரு நிலைமையை மாற்றியமைக்க, அவரவர்களுடைய ஊராட்சிப் பகுதியிலேயே கிராம நிர்வாக அதிகாரிகளுக்காக அங்கே அலுவலகத்தைக் கட்ட அனுமதி அளித்த புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தை இந்த நேரத்திலே நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல், புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டமான தரிசு நில மேம்பாட்டுத் திட்டமானது, தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக 20 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை, தரிசு நிலங்களாக இருந்ததை மேம்படுத்துகின்ற வகையிலே ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்த, அம்மா அவர்களுடைய அந்தத் திட்டத்தை இந்த நேரத்திலே நான் வணங்கி வரவேற்கின்றேன்.

*பிற்பகல் 6–20*

அதேபோல, இங்கே கல்வியை எடுத்துக்கொண்டால் சாதனை. இன்று அரசியல் வரலாற்றிலே எந்த முதலமைச்சரும் கொண்டுவராத ஒரு மாபெரும் திட்டத்தை இங்கே கவுன்சலிங் முறை என்று மாற்றப்பட்டு, எந்த ஆசிரியரும் அவர்கள் யாரையும் அணுகாத முறையிலே, பணி மாற்றல் உத்தரவு பெறுகின்ற வகையில் ஒரு மாபெரும் திட்டத்தை அறிவித்த புரட்சித் தலைவி அவர்களின் திட்டத்தை நான் இங்கே வணங்கி வரவேற்கிறேன்.

அதேபோல, 125 உயர்நிலைப் பள்ளிகளையும், 100 நடுநிலைப் பள்ளிகளையும் நிலை உயர்த்தி சாதனை படைத்திட்ட ஆட்சி புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதுபோல, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, அது புரட்சித் தலைவி அவர்களுடைய நேரடிப் பார்வையிலே இருக்கின்ற மாவட்டம் என்பது கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே இங்கே காண்பிக்கப்பட்டிருக்கிறது. காரணம், நீண்ட நாட்களாக தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைப் பல்வேறு கட்சிகள்கூட வைத்திருக்கலாம். ஆனால் ஆட்சிக்கு வந்து 90 நாட்களிலேயே புரட்சித் தலைவி அவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கிருஷ்ணகிரியைத் (மணியடிக்கப்பெற்றது) தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் கண்டவர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கேட்காமலேயே கொடுத்த புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய கிருஷ்ணகிரியிலே மகளிர் காவல் நிலையத்தை, கேட்காமலேயே வழங்கிய புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, புரட்சித் தலைவி அவர்கள் 1991–லேயிருந்து 1996 வரையில் ஆட்சியிலிருந்தபோது கிருஷ்ணகிரியிலே ஒரு பேருந்து நிலையத்தை நிறுவுவதற்காக அன்று நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் ஐந்தாண்டு காலமும் அந்தப் பேருந்து நிலையத்தை நிறுவாமல் காலம் கடத்திவிட்டார்கள். அந்த நிலையை புரட்சித் தலைவி அவர்களுடைய நேரடிப் பார்வைக்கு வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கிருஷ்ணகிரி மூன்று தேசிய நெடுஞ்சாலைகள் இணைகின்ற மையமாக இருக்கின்றது. அங்கே, அந்த நெடுஞ்சாலைகளிலே நிறைய விபத்துக்கள் (மணியடிக்கப்பெற்றது) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாலை விபத்துக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே பாதிக்கப்படக்கூடியவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக, அவசர சிகிச்சைக்காகச் செல்லவேண்டுமென்று சொன்னால், பக்கத்து மாநிலமான கர்நாடகத்திலேயுள்ள பெங்களூருக்குச் செல்ல வேண்டும், அல்லது வேலூருக்குச் செல்ல வேண்டும், அல்லது சேலத்திற்குச் செல்ல வேண்டுமென்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையிலே அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவி அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் அது விவசாயம் நிறைந்த பகுதி. அங்கே மல்லிகைப்பூ அதிகமாக உற்பத்தி ஆகிறது. அந்த மல்லிகைப்பூவை வைத்துக்கொண்டு ஒரு மல்லிகைப்பூ சென்ட் தயாரிக்கின்ற தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வைக்கு வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிருஷ்ணகிரியிலே வேப்பனப்பள்ளி ஒன்றியம் என்று ஒன்று இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் இருந்து போகின்ற பொதுமக்கள் 45 கிலோமீட்டர் கடந்து செல்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. அதை மாற்றுகின்ற வகையில் அங்கே எண்ணேகால்புதூரிலேயிருந்து



குறும்பனப்பள்ளி செல்கின்ற சாலையிலே ஒரு மேம்பாலத்தைக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் 25 கிலோமீட்டரிலே அங்கு செல்கின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்பதையும் அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வைக்கு நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிருஷ்ணகிரி அணை 45 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டி முடிக்கப்பட்ட அணை. அந்த அணையால் இரண்டு போகச் சாகுபடி இருந்த நிலைமை மாறி இப்போது ஒரு போகச் சாகுபடி செய்யக்கூடிய நிலைமையிலே இருந்துகொண்டிருக்கிறது. அந்த அணையைத் தூர் எடுத்து ஆழப்படுத்திக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே இரண்டு போக விவசாயம் நடைபெறுகின்ற வகையிலே அந்தப் பகுதி மக்கள் வளமாக வாழ்வதற்கு அது வாய்ப்பாக அமையும் என்பதையும் அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வைக்கு வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அங்கே 25 குக்கிராமங்களுக்குச் செல்கிறவர்கள் அந்த கிருஷ்ணகிரி அணையின் வழியாகத்தான் செல்ல வேண்டும். அதிலே மழைக் காலத்திலே அதிகமாக நீர் வருகின்றபோது அந்தப் பகுதி சாலைகளின் வழியாகச் செல்ல முடியாமல் காவேரிப்பட்டினத்தின் வழியாகச் செல்கின்ற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. படிக்கின்ற மாணவர்களுக்காக 5, 6 நகரப் பேருந்துகள் அங்கே வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்கு அந்தப் பகுதியினுடைய பள்ளிகளுக்குச் செல்வதற்கான நேரம், காலம் அதிகமாகின்ற காரணத்தினால் அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும், கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, அந்தப் பகுதி மக்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையான, மருத்துவமனையிலே போதிய வசதி இல்லாத நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று அம்மா அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6–25*

அங்கே 17 ஊராட்சிகளுக்கு ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்று இயங்கிக் கொண்டிருப்பதை மூன்றாகப் பிரித்து, 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை இயக்க வேண்டுமென்று அம்மா அவர்களுடைய நேரடிப் பார்வைக்கு வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே கடந்த ஆட்சியாளர்கள் வேப்பனப்பள்ளி ஒன்றியத்திலேயிருந்து இரண்டு கிலோமீட்டர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வெ. கோவிந்தராஜ்:** வேப்பனப்பள்ளியிலேயிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்திலே ஒரு மேம்பாலம் கட்டுவதாக கடந்த ஆட்சியாளர்கள் அந்தப் பணியைத் தொடர்ந்து 3 ஆண்டு காலமாக டெண்டர் விட்டு – அவர்களுக்கு என்ன பிரச்சினை என்று தெரியவில்லை – அது கடைக்கால் எடுத்த நிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கூடியவிரைவிலே அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கிருஷ்ணகிரியிலே பாதாளச் சாக்கடை. அங்கே மழைக் காலங்களிலே சாலையே தெரியாத அளவிற்குத் தண்ணீர் நகரத்திலே தேங்கிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையிலே ஒரு பாதாளச் சாக்கடையை கிருஷ்ணகிரி நகரத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் விரும்பி, வேண்டி கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு எனக்குப் பேச வாய்ப்பு நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அரசன், நீங்கள் train பிடிக்கப் போக வேண்டும். சீக்கிரமாகப் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் தூங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூங்கலாம். ஆனால், குறட்டை விடக்கூடாது. (சிரிப்பு) சத்தம் இல்லாமல்தான் தூங்குகிறார். (சிரிப்பு) அதனால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் விவசாய மானியத்தின்மீது பேசும்போது இலவச மின்சாரத் திட்டம் ஏதோ அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டுவந்ததைப் போல ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே,



மறைந்தும் மறையாமல் நம் உள்ளங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அரசாணை 1809, பொதுப் பணித் துறை, நாள் 31–8–1984–லே சிறு விவசாயிகள் அனைவருக்குமே இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் big farmers–க்கு ஒரு H.P.க்கு 75 ரூபாய் கட்டவேண்டுமென்று அன்றைக்கு உத்தரவிட்டிருந்தார்கள். அதைத்தான் 1–8–1990 ஆம் ஆண்டு – அதுகூட அன்றைக்கு மீட்டர் சார்ஜ் செய்யவில்லை, யூனிட்டுக்குப் பணம் வாங்கப்படவில்லை, – அதைத்தான் 1–8–1990 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பெரு விவசாயிகளுக்கு அந்த 75 ரூபாயை மட்டும்தான் தள்ளுபடி செய்தார்களே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. இலவச மின்சாரத்திற்கு வித்திட்டவர் நம்முடைய புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்கள். (குறுக்கீடு) அரசன் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் பேசட்டும். (குறுக்கீடு) ஜி.ஓ.–வைக் காட்டிவிட்டார். (குறுக்கீடு) சரி, அரசன் அவர்கள் பேசட்டும். நீங்கள் train–ஐப் பிடிக்கப் போக வேண்டும், எங்களுக்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) அவரும் அதைத்தான் சொல்கிறார். அரசன், பேசுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஜி.ஓ.–வின் அடிப்படையிலேதான் தற்போது கூறினார். புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் கூறியதைப்போல சிறு உழவர்களுக்காக முழுக்க, முழுக்க இலவச மின்சாரம் என்ற ஆணையும், அதைப்போலவே பெரு விவசாயிகளுக்கு ஒரு H.P.க்கு 75 ரூபாய் மட்டுமே என்ற ஆணையும், எந்த விவசாயிக்குமே இனிமேல் மீட்டர் இல்லை என்ற ஆணையும், புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே 15–9–1984–லே போடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஆதாரம், (குறுக்கீடு) நான் ஆதாரத்தை வைத்து, ஜி.ஓ. காப்பியை வைத்துத்தான் பேசுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜி.ஓ. காப்பியை வைத்துக்கொண்டுதான் பேசுகிறார்.

*பிற்பகல் 6–30*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜி.ஓ. காப்பியை வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன். அதைப்போலவே தி.மு.க. ஆட்சியிலே, (குறுக்கீடு) தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 1–8–1990–லே தி.மு.க. ஆட்சியிலே, பெரு விவசாயிகளுக்காக ஒரு H.P.க்கு 75 ரூபாய் என்று கொடுக்கப்பட்டு வந்ததை ரத்து செய்து, அந்தப் பெரு விவசாயிகளுக்கு மட்டும் ஒரு சலுகை செய்து என்ன என்று எழுதினீர்கள். "Free supply of electricity is given to all farmers" என்று மக்களை ஏமாற்றுகிற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஜி.ஓ.–வைப் போட்டு, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேயே இலவசமாக மின்சாரம் கொடுக்கப்பட்டு, பெரும்பான்மை மக்களான சிறு உழவர்களுக்கும் நீங்கள் கொடுப்பதைப் போன்ற ஒரு தவறான வாசகத்தையும் அதில் சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மை நிலை என்னவென்றால் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் பெரும்பான்மை உழவர்களுக்கு இலவச மின்சாரம் தரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே விளக்கம் சொல்லியாகிவிட்டது. நான் இருக்கும்போதே சொன்னேன். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். திரு. அரசன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.சி. மணி அவர்களுக்கு. நான் சொன்னதைத்தான் அமைச்சர் சொல்லியிருக்கிறார். நான்தான் அப்போது வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் செய்யும்போது, நீங்கள் பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடு) அதனால், நடந்தது உண்மைதான். திரு. அரசன்.





***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே நான் உரையாற்றுவதற்கு நல்ல வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவைக்கு நான் வருவதற்குக் காரணமாக இருந்த எங்கள் இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர், புதுக்கோட்டை தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணியினுடைய தமிழ்நாடு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முன்னுரையோடு இந்த மானியக் கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் முன்னுரையிலேயே முதல் பக்கத்திலேயே சொல்லியிருக்கிறார். "வேளாண்மை வளர்ச்சியின்மூலமே கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள இந்த அரசு" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் தஞ்சை மாவட்டத்துக்காரர். நானும் அந்தக் காலத்து தஞ்சை மாவட்டத்துக்காரன். இப்படி வேளாண்மையிலே கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்ய வேண்டுமென்று சொன்னால், காவிரியிலே தண்ணீர் வரவேண்டும். ஆகவே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அடிக்கடி எடுத்துச்சொல்லி – உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும், இப்போது அங்கே பயிர்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கொண்டிருக்கின்றன. நானும் கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியிலே உள்ளவன் – ஆகவே மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்லி, விரைவிலே கர்நாடகத்திலேயிருந்து தண்ணீர் பெற்றுத்தர வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் கிராமத்தை அடிப்படையாக வைத்துத்தான் இருக்க வேண்டுமென்று பொருளாதார வல்லுநர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் முன்னுரையிலே சொல்கிறபோது இந்தியாவின் முன்னேற்றம் கிராமங்களின்

வளர்ச்சியில்தான் இருக்கிறது என்று மகாத்மா சொன்னதாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு இந்த நேரத்திலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் இப்போது பல்வேறு பொருளாதாரங்களையெல்லாம், பொருளாதாரங்கள் என்று சொல்கிறார்களே தவிர, அடிப்படையிலே எந்தப் பொருளாதாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்கிற ஒரு சிந்தனை, வளர்ந்து வருகிற பொருளாதாரச் சிந்தனை குறைந்து வருகிற நேரத்தில், கிராமப்புறங்களிலிருந்துதான் பொருளாதாரம் வர வேண்டும்; வேளாண்மைத் துறையிலேயிருந்துதான் பொருளாதாரம் வர வேண்டும் என்று ஒரு நல்ல கருத்தினைச் சொன்னதற்காக நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். திருவள்ளுவர் சொன்னார்:

'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை'

உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகிற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும்கூட வாழ்க்கை இல்லை என்று திருவள்ளுவர் சொன்னார். இந்த நேரத்தில் நான் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு அதைத்தான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய சோழ வள நாடு சோறுடைத்து. தமிழகத்தினுடைய நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டம், அங்கேயிருக்கிற உழவருடைய கை சும்மா இருந்துவிடுமோ என்று அச்சப்படுகிற அளவிற்கு நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய நெற்களஞ்சியமான தஞ்சையைக் காப்பாற்று; மகு 'மன்னுரிமை அடிப்படையிலே செயலாற்ற வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6–3.5*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் அக்கறையோடு, மிகவும் திறமையோடு தம்முடைய மானியக் கோரிக்கையிலே நிறைய செர்ல்லியிருக்கிறார்கள். முதலாவதாக, சான்று பெற்ற விதைகளைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், விதைகளை நாம் விவசாயிகளிடத்திலே இருந்துதான் பெறுகிறோம். முதலிலே certified seed நாம் கொடுக்கிறோம். அதை விவசாயிகள் பயிர் செய்கிறார்கள்.



திரும்பவும் அவர்களிடம் இருந்துதான் நாம் அந்த விதைகளைப் பெறுகிறோம். அப்படி விதைகளைப் பெறுகிறபோது தரம் உள்ள விதையாகத் தருவதற்கு விவசாயிகளிடத்திலே போதிய விஞ்ஞான வளர்ச்சி இல்லை: போதிய அளவுக்கு அறிவியல் வளர்ச்சி இல்லை. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தரம் வாய்ந்த விதைகளைப் பெறுவதற்கு, குறிப்பிட்ட விவசாயிகளுக்கு certified seed கொடுத்து அவர்களிடத்திலே இருந்து தரம் வாய்ந்த விதைகளைப் பெறுகிறோம். ஆகவே அந்த குறிப்பிட்ட விவசாயிகள் அறுவடை செய்கிறபோது, அறுவடை செய்த உடனேயே அந்த தரம் வாய்ந்த விதைகளை பக்கத்திலே இருக்கிற பதப்படுத்துகின்ற நிலையத்திற்குக் கொண்டு சென்று உடனே நல்ல விதையாக, தரம் உள்ள விதையாகத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளிடத்திலே நல்ல விலை கொடுத்து வாங்குகிறீர்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் திரும்ப அதை விவசாயிகளுக்குக் கொடுக்கிறபோது அந்த விலையைவிடக் கூடுதலாக, அதிகமாக விலை வைத்து விற்கிறீர்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத விலைக்கு விற்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை, தரம் வாய்ந்த விதைகளை, விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையிலே கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, பயிர் மற்றும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் என்ற தலைப்பிலே நீங்கள் நிறைய சொல்லியிருக்கிறீர்கள். சொல்லுவது என்பது எளிது. செய்வது என்பது கடினம் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். நீங்கள் சொல்லியிருக்கின்ற காரியங்களை எல்லாம் முழுவதுமாக அல்ல, 75 விழுக்காடு சிறப்பாகச் செய்தாலே போதும், ஏனென்று சொன்னால், பயிர் மற்றும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்திலே நிறைய இருக்கின்றன. அதற்குப் பின்னால் அடுத்த தலைப்பிலே ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்திலேகூட சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது, அதற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். பூச்சிகள் மறுபடியும் உற்பத்தி ஆகின்றன; அதைத் தடுக்க வேண்டும், பூச்சிக்கொல்லி மருந்துகளால் ஏற்படும் தீமையை அகற்றவேண்டும் என்றெல்லாம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காகத்தான் சொல்லுகிறேன், சொல்வது மட்டுமல்ல, செயல்படுகிறபோது மிகச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தரமற்ற மருந்துகள் வியாபாரிகளால் கடைகளில்

வைத்து விற்கப்படுகிறது. ஒரு லிட்டர் மருந்தினுடைய விலை என்ன என்று சொன்னால் 410 ரூபாய் என்று அந்த பாட்டிலிலே போடுகிறார்கள். ஆனால், விவசாயிகளுக்கு 350 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். அதிலே உனக்கு எவ்வளவு இலாபம் என்று கேட்டால் 50 ரூபாய் இலாபம் என்கிறான். 300 ரூபாய்க்குக் கீழே கொடுக்கப்படுகின்ற அந்த மருந்தை 350 ரூபாய் என்று கொடுக்கிறான், 400 ரூபாய் என்று கொடுக்கிறான். விவசாயிக்குத் தகுந்த மாதிரி கொடுக்கிறான். அந்த மருந்து தரமான மருந்துதானா, தரமற்ற மருந்தா, எப்படிப்பட்ட மருந்து என்பதை விவசாயிகளுக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். எந்த மருந்தை எந்த நேரத்தில் உபயோகப்படுத்த வேண்டுமென்பதை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, மரம் வளர்க்கின்ற திட்டத்தைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். இது ஒரு நல்ல திட்டம். நம்முடைய சுற்றுப்புறச்சூழல் அமைச்சரோடு சேர்ந்து இந்தத் திட்டத்தை நீங்கள் சிறப்பாக செயல்படுத்திட வேண்டும். மரம் வளர்க்கிறபோது ஒரு சிறிய தவறை எல்லா அரசாங்கமும் செய்து கொண்டிருக்கின்றன. மரத்தை நட்டுவிட்டு வந்துவிட்டால் மட்டும் மரம் வளர்ந்து விடுவதில்லை. ஒரு மரக் கன்றுக்கு இவ்வளவு ரூபாய் என்று கொடுக்கிறீர்கள். அப்படிக் கொடுக்கிறபோது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வளர்ந்து வருகிற வரைக்கும், அந்த மரக்கன்றைப் பாதுகாக்கின்ற, அந்த மரக்கன்றுக்குத் தண்ணீர் ஊற்றுகிற, அந்த மரக்கன்றுக்கு உரம் இடுகின்ற செலவையும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், மரங்கள் அற்றுப்போவதனாலே பல்வேறு தீமைகள் இன்றைக்கு நாட்டிலே இருப்பதை நீங்கள் உணர வேண்டுமென நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விவசாயத்தைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். கரும்பு விவசாயத்திலே பல்வேறு இடர்ப்பாடுகள், இருக்கின்றன. என்னுடைய பகுதியிலே ஒரு தனியார் சர்க்கரை ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். தனியார் சர்க்கரை ஆலைக்காரர்கள் மிகவும் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். I.C.I.C.I. என்கிற வங்கியிலேயிருந்து விவசாயக் கடன் பெற்று ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்குக் கடன் தருகிறார்கள். ஆனால், அப்படி அவர்கள் கடன் தந்தாலும், எளிதிலே மின்சாரத்தைப் பெற முடியவில்லை. வங்கியிலே கடன் பெற்று, ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தாலும், மின்சாரத்தைப் பெற்று, அதன்



மூலமாகத் தண்ணீரைப் பெற்று, கரும்பு விவசாயம் செய்ய முடியவில்லை. (மணியடிக்கப் பெற்றது) ஒரு நிமிடம் கொடுங்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், தனியார் சர்க்கரை ஆலைகள் மூலமாகக் கடன் பெறுகிற விவசாயிகளுக்கு, ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கிற விவசாயிகளுக்கு, ஏதாவது ஒரு Special G.O. போட்டாவது, மின்சாரம் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். முதன் முதலாகப் பேசுகின்றேன். கொஞ்சம் நேரம் கொடுங்கள். இது என்னுடைய கன்னிப் பேச்சு.

*பிற்பகல் 6–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை சொல்ல வேண்டும்.

**திரு. ப. அரசன்:** அதேபோல, உரப் பரிசோதனை நிலையங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். எங்களுடைய பகுதியிலே வேப்பம்புண்ணாக்கு, தருகிறோம், எலும்பிலேயிருந்து உரம் தருகிறோம் என்றெல்லாம் கொண்டு வந்து தருகிறார்கள். அந்த உரங்களை வாங்கிப் போட்ட விவசாயிகள், பாவம், அந்த ஆண்டு விளைச்சல் இன்றி, மிகவும் சிரமப்படுகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள். தரமில்லாத உரங்கள் விவசாயத்திற்கு வந்து விடுகின்றன. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வேன். எங்களுடைய பகுதியிலே, புதுக்கோட்டை மாவட்டத்திலே கீரமங்கலம் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்தப் பகுதியிலே நிறைய பூக்களைப் பயிர் செய்கிறார்கள். காய்கறிகளைப் பயிர் செய்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள், 150 கிராமங்களைச் சார்ந்த மக்கள் எல்லாம் பூக்களையும், காய்கறிகளையும் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். அவர்களுக்கு சரியான மார்க்கெட் அங்கே இல்லை. அதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய கவனத்திலே கொண்டு, அந்தப் பகுதி பொருளாதார மேம்பாடு அடைவதற்குக் காரணமாக இருப்பது பூக்களும், காய்கறிகளும்தான்; ஆகவே, அவர்களுக்கு ஒரு மார்க்கெட் அமைத்துத் தரவேண்டுமென்று, நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக ஒன்று.

நம்முடைய விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுக்கு வருடத்திலே 4 மாதங்கள்கூட வேலை இருப்பதில்லை. அதற்குப் பின்னாலே, அவர்களுடைய நிலைமை

மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமைகளையெல்லாம் கவனத்திலே எடுத்துக்கொண்டு செயலாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1974 ஆம் ஆண்டு கேரளாவிலே விவசாயத் தொழிலாளர்கள் சட்டம் என்று ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். மிக நல்ல சட்டம். அது என்ன என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மகாராஷ்டிராவில் 1978 ஆம் ஆண்டு, வேலை உத்தரவாதச் சட்டம் என்று ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அதுவும் நல்ல சட்டம். அதையும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த அரிய வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதலிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நாங்கள் எல்லாம் சோழ மண்டலத்துக்காரர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சோழ மண்டலத்தைச் சார்ந்தவர்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைமடைப் பகுதி வேறு. (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** கடைமடைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக, நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போன்று, ஒரு நல்ல அரசுக்கு அறிகுறி, வேளாண்மையிலே முன்னுரிமை கொடுக்கிற அரசு, இந்த நாட்டினுடைய வளர்ச்சியை அக்கறையோடு பார்க்கிற அரசாக நான் கருதுகிறேன். அந்த வகையிலேதான், வளரும் பயிர் முளையிலே தெரியும் என்பது போன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் நிதிநிலை அறிக்கையிலேயும், மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலேயும், வேளாண்மைக்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு திட்டங்களைக் கோடிட்டுக் காட்டியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் பெற்றிருக்கிற கடன்களில்,



அதனுடைய வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்தது, இந்த மன்றத்திலே மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே, அதுவும் காவிரிப் படுகையிலே இருக்கின்ற விவசாயிகள் கடன் பெற்று, கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றவர்களின் வாழ்க்கையில் இதுபோன்ற ஒரு சிறிய சலுகை அளித்திருந்தாலும்கூட, இன்றைக்கு மனப்பூர்வமாக மிகப் பெரிய வரவேற்பை அளித்திருக்கிறார்கள். மன நிம்மதி ஏற்பட்டிருக்கிறது.

நான் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை மீண்டும் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், அநேகமாக இந்த செப்டம்பர் மாதத்தோடு, அதனுடைய கால அளவு நிறைவடைகிறது. காவிரியிலே குறுவை சாகுபடி நடைபெற்று, – உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருப்பதைப் போன்று 1.25 இலட்சம் எக்டேருக்கு மேலே இன்றைக்கு குறுவை சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காவிரியிலே தண்ணீர் குறைந்தவுடனே, மேட்டூரிலே தண்ணீர் குறைந்தவுடனே, விவசாயிகளுடைய கண்களிலே இன்றையதினத்திலே கண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர வேண்டும். ஆகையினாலே, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று ரொம்ப எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள்கூட, வருகின்ற 6 ஆம் தேதி காவிரி நதி நீர்ப் பிரச்சினைகளை டெல்லியிலே போய்ப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஒரு நிரந்தரமான தீர்வினைக் காண்பார் என்ற முழு நம்பிக்கை விவசாயிகளிடத்திலும் இருக்கிறது; எங்களிடத்திலும் இருக்கிறது. தீர்வு காண்பார் என்பதிலே மிக்க நம்பிக்கை இருக்கிறது. இயற்கை நம்மைச் சோதித்துக் கொண்டிருக்கிறது. அநேகமாக இந்த செப்டம்பர் மாதம் தொடங்கினால், ஆங்காங்கே மழை பெய்யும். ஆனால், முற்றிலுமாக இன்றைக்கு மழை பொய்த்துவிட்ட காரணத்தினால், விவசாயிகள் மிகப்பெரிய வேதனையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நானும் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 6–45*

அதேபோன்று, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், செப்டம்பர் மாதத்தோடு இந்தக் கூட்டுறவுக் கடனைக் கட்டினால், வட்டியும், அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்படும் என்பதைத் தாங்கள் காலம் நீட்டித்துக் கொடுக்கவேண்டும். பருவ காலத்தில், அறுவடை காலத்தில் அதைக் கட்டுவதற்கு சிரமம் இருப்பதால், அந்த விவசாயிகள் நன்மை அடைவதற்கு நீங்கள் மிகப்

பெரிய உதவியைச் செய்ய வேண்டுமென்று நான் மீண்டும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்தால் நிச்சயமாக அது மிகப் பெரிய அளவில் அந்த விவசாயிகளுக்கு ஒரு நன்மை அளிக்கும். அந்த வகையிலே அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது – தேசிய வேளாண்மைக் காப்பீட்டுக் கழகம் குறித்து மத்தியிலே இருக்கிற அரசு, இந்தியா பூராவும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. உருளைக் கிழங்கு, பருத்தி, கரும்பு போன்றவைகள் பூச்சியால் பாதிக்கப்பட்டிருந்தால், அதற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அந்தக் காப்பீட்டுக் கழகத்தை அமைத்திருக்கிறார்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்; தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகளுக்கு பயிர்ப் பாதுகாப்பு காப்பீட்டுக் கழகத்தைக் கொண்டு வாருங்கள். பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வாருங்கள். ஏற்கெனவே மத்தியிலே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, பிரத்தியேகமாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டது. அதிலே, நாகை மாவட்டத்தையும், திருவாரூர் மாவட்டத்தையும் எடுத்துக் கொண்டது. அப்படி எடுத்துக்கொண்டு, இயற்கைச் சீற்றத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆண்டுகளில் அந்த விவசாயிகளுக்கு அந்த இன்சூரன்ஸ் பணம் கிடைத்தது. அது முழுமையும் விவசாயிகளுடைய கையிலே கொடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகள் கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே பெற்றிருக்கிற கடனுக்கு அது வரவு வைக்கப்பட்டது. ஆக, கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே கடனைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு, அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டும், நாணயச் சங்கங்களை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கம் எந்தவொரு விவசாயிக்கும் கிடையாது. இல்லையென்று சொன்னால், கடந்த 30 ஆண்டு காலமாக கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்து போயிருக்கும்; கலைந்து போயிருக்கும். விவசாயிகள் நாணயத்தோடு கட்டியதன் விளைவாகத்தான் இந்த நேரத்திலே இப்படி இருந்து கொண்டிருக்கிறது. ஆக, விவசாயிகள் இப்படி பாதிக்கப்பட்டதற்கு அடிப்படையான காரணம், 1924–ல் ஏற்பட்ட காவிரி நதி நீர் ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு காலாவதியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, காலாவதி என்ற அந்தச் சொல் வேண்டாம்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் மாற்றிக்கொள்கிறேன். காலாவதியாகிவிட்டது என்று கர்நாடக அரசு கூறி, மறுத்ததன் காரணமாக, நமக்கு வரக்கூடிய தண்ணீர் வராததனால், விவசாயிகள் பாதிப்பிற்குள்ளானார்கள். வாங்கிய கடனை நியாயமாகத் திருப்பிக் கட்ட முடியவில்லை. அதனால்தான், அந்த விவசாயிகள் அந்தக் கடனைக் கட்ட முடியாமல், அரசாங்கமே ஒத்திவைத்து, கடன்மேல் கடன்பட்டு, வட்டியெல்லாம் சேர்ந்து, அதனுடைய சொத்து மதிப்பைவிட அதிகரிப்பதற்கான காரணங்கள் உருவாக்கப்பட்டன. அந்த விவசாயிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுடைய நல்ல வாழ்க்கையிலே விளக்கேற்றி வைத்து இருக்கிறார்கள். இதையும் நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்தால், கூட்டுறவுச் சங்கங்களிலே யாருக்கும் கடனைத் தள்ளுபடி பண்ணுங்கள் என்கிற கோஷத்தை யாரும் வைக்கமாட்டார்கள். அந்தச் சங்கமும் நலிவு இல்லாமல் சிறப்பான முறையிலே செயல்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று நான் இங்கே குறிப்பிட விரும்புவது, மரியாதைக்குரிய நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கரும்பு விவசாயிகளை, அவர்களுடைய தரத்தினை உயர்த்துவதற்கு, கரும்பு விவசாயிகளுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்குப் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எப்படி உயர்த்தப் போகிறோம்; எதன் மூலமாக உயர்த்தப் போகிறோம் என்று விளக்கம் சொல்லியாக வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு 8.5 சதவீதம் பிழிதிறன் இருக்கக்கூடிய கரும்பிற்கு அநேகமாக 825 ரூபாய் கொடுக்கிறோம். ஒரேயொரு ஆலை, தமிழ்நாட்டிலே ஓர் ஆலைக்கு மட்டும் 10.20 சதவீதம் பிழிதிறன் இருக்கிற காரணத்தினால், அதற்கு மட்டும் ரூ.1000/– கொடுக்கிறோம். அதை தமிழ்நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்குப் பல கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. அரசே மானியம் கொடுக்கிறது. ஆலையை நடத்தச் சொல்கிறது. இன்னும் சொன்னால் அமைச்சர்கூடச் சொல்லியிருக்கிறார், கொள்கை விளக்கக் குறிப்பிலே, இதைவிட அதிகமான கரும்புகளை உற்பத்தி செய்ய விவசாயிகள் இந்த ஆண்டு ஊக்கப்படுத்தப்படுவார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆக, விவசாயிகள் ஆர்வப்பட வேண்டுமென்று சொன்னால், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று சொன்னால், கரும்பிற்குக் கட்டுப்படியான

விலையைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 6–50*

அதோடு, தமிழ்நாட்டிலே மொத்தம் 39 அரசு விதைப் பண்ணைகள் இருக்கின்றன. அதிலே, தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகையிலே மட்டும் 11 பண்ணைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே மட்டும் 6 பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகள் அநேகமாக அரசாங்கம் நடத்தக்கூடிய விதைப் பண்ணைகள். பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் காலியாக இருக்கின்றன. நெல் உற்பத்தியே செய்யவில்லை. அதுமாதிரி இருப்பதிலே எல்லாம் உடனடியாக உற்பத்தி செய்யவேண்டும். அதை நம்பி இருக்கின்ற பண்ணைத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே பார்த்தோம் என்று சொன்னால் — விதை பற்றி எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள் – Agriculture Department–லே இருக்கக்கூடியவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், அநேகமாக அவர்கள் எல்லோரும் டாக்டர்கள் மாதிரி இருக்கிறார்கள். டாக்டர்கள், அரசாங்கத்திலே வேலை பார்க்கின்ற டாக்டர்கள் இருக்கிறார்கள் பாருங்கள், அவர்கள் அரசாங்க மருத்துவமனையிலே வேலை பார்ப்பார்கள். மாலையிலே, ஒரு Clinic வைத்திருப்பார்கள், அங்கே போய்விடுவார்கள். அதேமாதிரி, இந்த வேளாண்மைத் துறையிலே இருக்கின்ற Agri–Officers எல்லாம் என்ன செய்கிறார்கள் என்றால், இந்த அரசாங்கத்திலே கொடுக்கின்ற விதையை வாங்காதீர்கள், இந்தக் கடையிலே இருக்கின்றது, அந்த விதையை வாங்கி உற்பத்தி செய்யுங்கள், அது மிகவும் சிறப்பாக விளையும் என்று அவர்களே ஒரு கடையை ஏற்படுத்தி விடுகிறார்கள். இதிலே மட்டுமல்ல, Nursery பண்ணைகளிலே, நீங்கள் சொல்லக்கூடிய Nursery பண்ணைகளிலே, இன்றைக்கு தருமபுரி பழத்தோட்டத்தில் பார்த்தீர்கள் என்றால், மாம்பழத்திற்குச் சிறந்த மாவட்டம் தருமபுரி. இந்த மாவட்டத்திலே ஒரு Agri–Officer–ஐப் பார்க்கப் போனால், ஒரு பண்ணையை, ஒரு Farm–யை வைத்திருப்பார். அங்கே சிபாரிசு செய்து அனுப்புவார். அரசாங்கப் பண்ணை முற்றிலும் நசிந்துப் போய்விடும். பர்கூர் தொகுதி – மரியாதைக்குரிய முதலமைச்சர் முதன்முதலில் நின்றது பர்கூர் தொகுதி – அங்கே பார்த்தீர்கள் என்று சொன்னால், அந்த பர்கூர் தொகுதியிலே முதலமைச்சர் முதலிலே வெற்றி பெற்றார்கள். இன்றைக்கு இங்கே நம்முடைய கல்வி அமைச்சர் இருக்கிறார். அங்கே பார்த்தீர்கள் என்றால், சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய அந்த முதல்



தொழிற்சாலையை தமிழ்நாட்டிலே அங்கேதான் உருவாக்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் உருவாக்கினார்கள். அதிலே இருக்கின்ற டைரக்டர் ஒருவர், அவர் என்ன செய்தார் என்றால், அந்த டைரக்டர் மூன்று எண்ணெய் பிழியும் தொழிற்சாலைகளை உருவாக்கினார். அரசாங்கத்திலே தொடங்கப்பட்டிருக்கின்ற அந்தப் பண்ணை, அநேகமாக அந்தத் தொழிற்சாலை முற்றிலுமாக மூடப்பட்டுவிட்டது. அதுமாதிரி நிர்வாக அமைப்புகள் இருக்கின்றன. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், அரசாங்கத்திலே இருக்கக்கூடியவர்கள், இதுபோன்ற தவறுகளைச் செய்கின்றவர்கள் நம்முடைய வேளாண்மைத் துறையிலே அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. மிகவும் திறமைசாலிகள். அவர்களை ஒன்றும் சாதாரணமாகச் சொல்ல முடியாது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பாருங்கள். அதைப் பார்த்தீர்கள் என்றால் இவ்வளவு பெரியதாக இருக்கும். எந்த ஒரு மானியக் கோரிக்கைப் புத்தகமும் இப்படி இருக்காது. இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களிலே என்னென்ன விவசாயம் நடக்கிறது என்று இல்லை. தருமபுரியா, அங்கே பழத் தோட்டங்கள் அமைக்கலாம். திருநெல்வேலியா, விருதுநகரா, அங்கே போனால் மிளகாய் இல்லையென்றால் உளுந்து சாகுபடி செய்யலாம். அதை எவ்வளவு extent செய்யலாம், இதையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லமாட்டார்கள். எந்தெந்த மாவட்டங்களிலே எவ்வளவு செய்யலாம். எந்தெந்த நிலங்களிலே எவ்வளவு சாகுபடி செய்யலாம், என்னென்ன செய்யலாம், அந்த விவசாயிகளுக்கு சாத்தியமான திட்டங்கள் என்ன, இது மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையிலே பாருங்கள், முரண்பாடான முறைகள் இருக்கின்றன. விவசாயிகள் தெளிவு பெறவே முடியாது. அந்த அளவிற்குக் கொள்கை விளக்கக் குறிப்புகளைத் தயார் செய்து கொடுத்துவிடுவார்கள். யாரும் புரிந்துகொள்ள முடியாது. எந்த மாவட்டத்திலே எதைச் செய்வது, பழத் தோட்டங்களை எந்த இடத்திலே செய்வது, உளுந்தையும், மிளகாயையும், எந்த இடத்திலே சாகுபடி செய்வது, நெல் சாகுபடியை எந்த மாவட்டத்தில் அதிகப்படுத்துவது என்றெல்லாம், இருக்கின்ற அந்த முறைப்பாடுகளை நம்முடைய வேளாண்மைத் துறை சரியாக, தமிழ்நாட்டிலே இத்தனை இலட்சம் ஏக்கர்களிலே இந்தப் பொருட்களை, இந்தத் தானியங்களை உற்பத்தி செய்யலாம் என்கின்ற ஒரு நிலையைத் தெளிவாக, அடுத்த சட்டமன்ற நிதிநிலை அறிக்கையிலாவது, நம்முடைய அதிகாரிகள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ஜி. பழனிசாமி] [2001 செப்டம்பர் 4

அடுத்து, அக்ரோ நிலங்களை சமன் செய்வதற்காக 1600 எக்டேர் லம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பணம் ல்லாம் ஒதுக்குகிறார்கள். பிரதானமாக, இது தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குப் பயனாக உள்ளது. கடந்த காலங்களில் இயற்கைச் ற்றத்தினால் உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் அந்த டைப்புகளையெல்லாம் அடைக்க முடியவில்லை. மண் மேடிட்டுக் டக்கிறது. நம் ஆட்சி இங்கே வந்திருக்கிறது என்பதற்காக நான் ங்களிடத்திலே குற்றம் சொல்லவில்லை. ஏற்கெனவே நடந்திருக்கின்ற ர்வாகச் சீர்கேட்டினை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு பருகிறேன். குற்றம் சொல்வதாக நீங்கள் கருதிட வேண்டாம். அந்த பகையிலே பார்த்தோம் என்று சொன்னால், இந்த சமன்படுத்துகின்ற இயந்திரத்தை விவசாயிகள் அறிய அவர்கள் பயன்படுத்த வேண்டும். யாராவது விவசாயிகளின் பேரிலே போட்டு, வேறு ஏதாவது சொந்த வேலையிலே இதுவரை நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் அரசு 'அக்ரோஃபெட்'–டிடம் கொடுங்கள்.

*பிற்பகல் 6–55*

தமிழ்நாட்டிலே 1500 தொழிலாளர்கள் இப்போது பழி வாங்கப்பட்டு நிற்கிறார்கள். மிகப் பரிதாபமான நிலைமை. 'அக்ரோஃபெட்'–டிலே இருக்கிறவர்களைப் பார்த்தோம் என்றால், டாக்டர்கள் பதிவு இருந்தது; ார்வா இருந்தது; விவசாயிகளுக்கான கருவிகள் அத்தனையும் இருந்தன. இப்போது ஒன்றுமே கிடையாது. காலையிலே அரசு ஊழியர்கள், கூட்டுறவுச் ங்கம் போய் கான்ட்ராக்ட் எடுத்து, வேலை பார்க்க வேண்டுமென்று சொல்லி, ல்லோரும் போய் கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு பிடிஓ. அலுவலகத்திலே இருக்கிறார்கள் அந்த அதிகாரிகள் பூராவும், சாப்பாட்டுக்கு வழி கிடையாது. ல்லா டிப்போக்களையும் மூடிவிட்டார்கள். அதற்கு நீங்கள் புத்துயிர் கொடுக்க வேண்டும். நம்முடைய வேளாண்மைத் துறை அதிகாரிகள் அதைப் புறக்கணிப்பதற்கான காரணங்கள் என்ன? கடந்த காலத்திலே செய்யாததற்கான காரணங்கள் என்ன என்பதை நீங்கள் ஆராய வேண்டும் ன்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன். இது வேளாண்மைத் துறை, அதனாலேதான் கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுங்கள்.

இது நல்ல துறை. இந்தக் கோளாறு நடந்ததற்கான காரணங்கள் ன்ன? அக்ரோவிலே இருக்கிற டாக்டர்களைக் கொண்டுபோய் ஞ்சாயத்து யூனியனிலே குப்பைகளை அள்ளுங்கடா என்று சொல்லிவிட்டு, அந்த விவசாயிகள் பயன்படுத்தும் பொருள்களை



2001 செப்டம்பர் 4] [திரு. ஜி. பழனிசாமி]

முற்றிலுமாக நாசப்படுத்திவிட்டார்கள். இப்போது வேலை கிடைக்காமல் அவர்களை, கான்ட்ராக்ட் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்கள் Water Board–லே நின்றுகொண்டு, எங்களுக்கு கான்ட்ராக்ட் கொடுங்கள், நாங்கள் 'பைப்' போடுகிறோம் என்று சொல்கிறார்கள்.

உழவர் சந்தையிலேயும் அதேமாதிரிதான். முந்தைய ஆட்சியில் அவர்கள் செய்தார்கள், உழவர் சந்தையிலே கான்ட்ராக்ட் கொடுத்துவிட்டு, அக்ரோவின் மூலமாக அந்த உழவர் சந்தையைக் கட்டிவிட்டு, இன்றுவரையிலே பணமே கிடைக்கவில்லை. அவர்களுடைய Bike–ஐ எல்லாம் பிடுங்கிக்கொண்டு தெருவிலே விட்டுவிட்டார்கள். பல பேர் வேலை இழந்துபோய் நிற்கிறார்கள். எவ்வளவு மோசமான நிலைமை, பாருங்கள். நம்முடைய அதிகாரிகளினுடைய யோசனையிலே அதுவெல்லாம் செய்யப்படுகிறது. நஷ்டம் வருகிறது என்றால், இன்னொருவரிடம் – அக்ரோவிடம் விடுவது; லாபம் வருகிறது என்றால், இவர்கள் வேறு யாராவது ஒப்பந்தக்காரர்களிடம் கொடுப்பது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். சிறப்பான துறையாக வேளாண்மைத் துறை இருக்க வேண்டும் என்பதற்காக இதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்கிறேன்.

அடுத்து, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன். அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே அமைச்சர் ஒன்றைச் சொன்னார். மலைச் சரிவின் ஓரத்திலே பழத் தோட்டங்கள் உருவாக்குகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பழத் தோட்டம் என்பது நம்முடைய நாட்டிலே எப்படியிருக்கிறது? 200 அடிக்குக் கீழே தண்ணீர் இல்லை. ஏரிகள் காய்ந்துபோய்விட்டன. 3 பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. ஒன்று, ஆற்றுப் பாசனம்; ஒன்று, ஏரிப் பாசனம்; ஒன்று, கிணற்றுப் பாசனம். இந்த 3 பாசனங்களையும் பார்த்தோம் என்றால், ரொம்ப மோசமாகப் போய்விட்டன. அநேகமாக இதை எப்படியாவது ஒழுங்குபடுத்தியாக வேண்டும். முகப்பிலேயே அந்தத் தண்ணீரைப் பழத் தோட்டத்திற்குக் கொடுத்துவிட்டால், அங்கேயுள்ள மரங்களை வெட்டி அழித்து விடுவார்கள். வரக்கூடிய நீராதாரங்களையும் தடுத்து விடுவார்கள். அப்படிப் பார்த்தால், சமவெளிப் பகுதிக்கு மிகப்பெரிய ஆபத்து வந்துவிடும். அப்படி வராமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, கருவை மரம் நடுவதைப் பார்த்தோம் என்று சொன்னால், அது ரொம்ப நல்ல திட்டம். இதுவும்கூட கடந்த காலத்திலே மத்திய அரசினுடைய உதவியோடு நடந்துவந்த திட்டம். அவர்கள்தான்

அதற்காகக் கன்றுகளைக் கொடுக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக நடப்படுகிறது. ஏரிகளில் கொண்டுபோய் கருவை மரங்களை நட்டு, அந்த ஏரிகளை ஆழப்படுத்த முடியாமல் ஒரு சூழ்நிலை ஏற்பட்டுப் போய்விட்டது. கரையையும் பலப்படுத்த முடியவில்லை. இதனால் அந்த ஏரிகளைப் பாதுகாக்க முடியாமல், மழை நீரையும் பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, பல இடங்களில் ஏரிகள் உடைந்து, மழை நீர் கடலுக்குப் போய்ச் சேரக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. மேடான பகுதிகளில் கருவையை நடுவதற்கான அந்த முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் அதற்கு நல்ல வழி பிறக்கும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகத்தான் நிலம் செழிப்படைய முடியும். ஐந்து வருடத்திற்கு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அநேகமாக, 20 இலட்சம் எக்டேர் நிலத்தை ஐந்தாண்டு காலத்திலே அந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வருகிற நல்ல திட்டம். இந்தத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்று சொன்னால், நான் பொதுப் பணித் துறை மானியத்திலே பேசுகிறபோது அதற்கான ஆதாரங்களை, விவரங்களைப் பேசுகிறேன். ஏனென்றால், இது அதற்குச் சம்பந்தமில்லாத துறை, நான் பேசக்கூடாது. ஆகவே, ஆங்காங்குள்ள அந்தத் துறைகளை நீங்கள் செழுமைப்படுத்த வேண்டும்.

வேளாண்மையைச் சார்ந்ததுதான் கால்நடைத் துறை. ஒரு விவசாயிக்குத் துணைத் தொழிலே அந்தக் கால்நடைத் தொழில்தான். கால்நடை விவசாயியிடம் இருக்க வேண்டும், மீன் வளர்ப்பு இருக்க வேண்டும், கோழி வளர்ப்பு இருக்க வேண்டும். இவையெல்லாம் இருந்தால்தான் அந்த விவசாயி செழிப்படைய முடியும். அப்படி செழிப்படைய வேண்டுமென்று சொன்னால், வறண்ட பூமியில் ஒன்றும் செய்ய முடியாது. 5 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால், ஒரு ஏக்கரிலாவது ஒரு குட்டையை வெட்டி, தண்ணீரைச் சேகரித்து வைக்கின்ற ஒரு திட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வரவேண்டும். அந்தக் குட்டை ஓரமாக – அந்தக் குட்டையிலே மீன் வளர்ப்பது – கோழி வளர்ப்பது, மரம் வளர்ப்பது போன்ற திட்டங்களை உருவாக்கினோம் என்று சொன்னால், அதுபோன்று கீழ் ஊற்றையும் பாதுகாக்க முடியும். விவசாயிகளுக்குத் தண்ணீர்ப் பற்றாக்குறை வருகிற நேரத்தில், மழை நீரை, கடலிலே போய்ச் சேருகிற அந்த நீரைப் பாதுகாப்பதிலே நம்முடைய மாநிலம் ஒரு முன்னோடி மாநிலமாகவும் இருக்கும். ஆகவேதான், பல



விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்; தமிழ்நாட்டிலே ஏன் தண்ணீர், தண்ணீர் என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? அரபு நாட்டிலே உள்ள எண்ணெயைவிட, உங்களிடத்திலே தண்ணீர் இருக்கிறது. அதைப் பாதுகாக்கத் தெரியாது, அது கடலிலே போய்ச் சேருகிற காரணத்தினால், நீங்கள் தண்ணீருக்கு இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள். அரபு நாட்டிலே எண்ணெய் கிடைப்பதைவிட உங்கள் நாட்டிலே தண்ணீர் கிடைக்கிறது; பாதுகாக்க முடியவில்லை என்று பல நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப் படிப்பினையாக எடுத்துக்கொண்டு, அந்தப் பணியை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, இப்போது நம்முடைய விவசாயத் துறை அமைச்சர், வேளாண்மைத் தொழிலுக்கு பல கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். நடப்பு நடுவதற்குக் கருவி; அறுவடை செய்வதற்கு இயந்திரம்; கதிர் அடிப்பதற்கு இயந்திரம். ஒரு கோடி விவசாயத் தொழிலாளிகள், தமிழ்நாட்டிலே விவசாயத் தொழிலாளிகள், நம்முடைய நிலத்தை நம்பியிருக்கக்கூடிய, நிலத்தைச் சார்ந்திருக்கின்ற விவசாயத் தொழிலாளிகள் 1 கோடி பேர் இருக்கிறார்கள். அந்த ஒரு கோடி பேர் வேலை இழந்தார்கள் என்று சொன்னால், இந்த நாட்டில் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் என்பது குறைந்தால், நீங்கள் என்னதான் திட்டம் கொண்டு வந்தாலும் சரி, அவர்களுடைய வாழ்க்கை மோசமாகிவிடும். அதற்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது. ஆகையால் பல்வேறு இயந்திரங்களைக் கொண்டு வரவேண்டும். ஆறுகளை, கால்வாய்களைத் தூர் வாருவதுகூட இயந்திரத்தில் செய்யலாம். அறுவடை செய்வது, நடவு செய்வது போன்றவற்றிற்கெல்லாம் இயந்திரத்தைப் பயன்படுத்தினால் இந்த ஒரு கோடி விவசாயத் தொழிலாளிகள் அவர்களுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய நஷ்டத்திற்கு ஆளாவார்கள். இதை நீங்கள் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 7–00*

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேளாண்மைத் திட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிக் கொண்டுவருகிறபோது காவிரிப் படுகையாக இருந்தாலும், ஆறாக இருந்தாலும், கரையாக இருந்தாலும் முள் வரக்கூடிய மரங்களை நடாதீர்கள். புளிய மரங்கள் கொடுங்கள்; புளிய மரத்தை நடட்டும், மா

மரத்தை நடட்டும். அதே மாதிரி பனை மரத்தை நடட்டும். நல்ல இலாபம் கிடைக்கும். விவசாயிகளுக்கு நன்மையும் கிடைக்கும். 2–C பட்டா போட்டுக் கொடுத்து அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்யுங்கள்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். தென்னைப் பண்ணை இருக்கிறது பாருங்கள், அதை மூடிவிடுங்கள். தேவையே இல்லை. நம் அதிகாரிகள் தவறான கணக்குகளைச் சொல்வார்கள். அப்படிச் சொல்லிப் பழக்கப்பட்டவர்கள். அதனால், அந்தத் தென்னைப் பண்ணையை, அதனுடைய நாற்றங்காலைக் கலைத்துவிடுங்கள். எந்த விவசாயியும் இனிமேல் தென்னையை நடப்போவதில்லை. தென்னைக்கு ஏற்பட்டிருக்கிற நோயைக் கட்டுப்படுத்தாமல் நீங்கள் என்னதான் ஊக்கப்படுத்தினாலும் தென்னையை எப்படி நடமுடியும்? அது ஒரு தோல்வியான திட்டம்.

பனைப் பண்ணை எங்கள் மாவட்டம் முழுவதும் வந்திருக்கிறது. அதெல்லாம் பார்த்தீர்கள் என்றால், தோல்வியான திட்டம். தஞ்சை மாவட்டத்தில் தண்ணீரே கிடையாது. அந்த மாவட்டத்தில் பனைக் கன்றை நட்டு அந்தக் காயை பறித்தால் 4 மணி நேரத்திற்குள் கொண்டுபோய் அரைக்க வேண்டும். Machines கிடையாது. மில்லும் கிடையாது. அதற்கு ஒரு திட்டம். அதற்கெல்லாம் லோன் கொடுக்கிறீர்கள், Subsidy கொடுக்கிறீர்கள். வீணாய்ப்போன திட்டத்திற்கு நம் அதிகாரிகள் வழிகாட்டியிருப்பார்கள். எந்த மாவட்டத்திற்கு எது சரியாக இருக்கும், எந்த மாவட்டத்தில் என்ன பயிரிட வேண்டும், எந்த விவசாயிகளுக்கு என்ன செய்யவேண்டும் என்று கருதி நீங்கள் பண்ணவேண்டும். இந்த அக்ரோஃபெட்–ஐ நிச்சயமாகப் பாதுகாக்க வேண்டும் என்று கூறி, இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்தீர்கள் விவசாயிகள் என்பதால். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. லா. சந்தானம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உசிலம்படிக்கு என்ன வேண்டும்?

***திரு. லா. சந்தானம்:** மொத்தமாகத் தமிழ்நாட்டிற்கு கேட்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகம் தென்னை உற்பத்தியிலே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. தென்னை உற்பத்தி செய்கின்ற



*அந்த விவசாயிகள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையைக் கேட்டு, அவர்களோடு கலந்து இந்த தென்னை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதுபோல–இன்றைக்கு கேரள மாநிலத்திலே தேங்காயைக் கொள்முதல் செய்கிறார்கள்–இங்கும் அந்தத் தென்னை விவசாயிகளைப் பாதுகாக்கின்ற அளவிலே தேங்காயைக் கொள்முதல் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கின்ற கோரிக்கையை வைக்கிறேன். அதுபோல, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையத்திலே பணிபுரிகின்ற பணியாளர்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுக்கும் பணிப் பாதுகாப்பு தரவேண்டும். அவர்கள் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளாக சம்பளம் பெறவில்லை என்ற நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவர்களை வேளாண் வணிகத் துறை அல்லது நீர்வளத் துறை போன்ற துறைகளிலே பயன்படுத்திக்கொண்டு அவர்களுக்கு உரிய முறையிலே சம்பளம் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அப்படிப் பயன்படுத்த முடியவில்லை என்று சொன்னாலும்கூட, கடந்த காலத்திலே 1991–96–ல் அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்ததுபோல, 90% அவர்கள் செய்கின்ற பணிகளுக்கு அரசாங்கத்தின் மூலமாக முன்பணம் கொடுத்து அவர்களுடைய பணியினை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு சம்பளம் கிடைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கூறி, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

*பிற்பகல் 7–05*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்' எவர் வரினும் நில்லேன், அஞ்சேன் என வெற்றிக் கனியை இம்மண்ணின் மேல் விளைத்த இதய தெய்வமே, 'நீரின்றி அமையாது இவ்வுலகு' என்றார் வள்ளுவர். அவர் சொன்னது தண்ணீரை. ஆனால், தமிழக மக்கள் அதற்கு இப்படி உரை எழுதினார்கள். நீர் இன்றி, அதாவது நீங்கள் இன்றி அமையாது இவ்வாட்சி என்ற தீர்ப்பினைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மண்ணின் தலைமையே, தங்களை நான் வணங்குகிறேன். வண்டலும், வறட்சியும் நான் பிறந்த மண்ணிலே நிறைந்திருக்க, கொண்ட நீரும் வடியாது, கொடும் புயலுக்கும் தப்பாத*

[திரு. இரா. ஜீவானந்தம்] [2001 செப்டம்பர் 4

நாகையிலே நான் வென்றதுகூட உங்கள் தயவிலேதான். சாதாரண ஒரு தொண்டனாக இருந்த என்னை, ஒன்றியக் கழகச் செயலாளராக நியமித்து, அதற்குப் பின்னாலே, மாவட்டக் கழகச் செயலாளராக நியமித்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, இன்றைக்கு நாகப்பட்டினம் மாவட்டத்தில் முதன் முதலாக அமைச்சர் ஆகிற வாய்ப்பைத் தந்த அம்மா அவர்கள் இருக்கிற திசையை நோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை முறை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஜனநாயக நெறிமுறை, புரட்சித் தலைவர் அவர்களுடைய மனித நேயப் பண்புமுறை, ஆகியவற்றைத் தன்னுடைய நடைமுறைப் பண்புகளாகக் கொண்டு இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியை நடத்தி வருகிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மானியக் கோரிக்கைகளிலே கலந்துகொண்டு பேசுகிறபோது, இந்தத் தமிழக அரசால், அதிலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிற தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி கருத்துகளைக் கூறுகிறபொழுது, எல்லோருமே பாராட்டினார்கள். ஆனால், பாராட்டுகிற அந்தநேரத்தில், மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள், அருமை நண்பர் பழனிசாமி போன்றவர்களெல்லாம் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நாங்கள் பழப் பண்ணைகளாக ஆக்குவோம் என்று சொன்னபோது, ஏதோ பண்ணைத் திட்டம் மறுபடியும் வந்துவிடப் போகிறதோ என்ற அச்சத்தோடு இங்கே பேசியதையும் நாங்கள் பார்த்தோம்.

இந்த நேரத்திலே நான் உங்களுக்கு ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள், தான் யார் என்பதை அறிவித்திருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே, மாநிலங்கள் அவையினுடைய உறுப்பினராகச் சென்றபொழுது, தான் யார், யாருக்காகக் குரல் கொடுக்க வந்துள்ளேன் என்று ஒரு அரசியல் சாசனத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசியல் வரலாற்றிலே ஒரு சாசனம். 1984–லே புரட்சித் தலைவி அவர்களுக்கு மாநிலங்கள் அவையில் 185–வது இருக்கை ஒதுக்கப்பட்டிருந்தது. அது முன்பு பேரறிஞர் அண்ணா அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இருக்கை. 'அந்த இருக்கையிலே நின்று நான் பேசுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன் என்று சொன்னால், என்னுடைய வாழ்க்கையிலே நான் பெற்றிருக்கிற மிகப் பெரிய பேறாகக்



2001 செப்டம்பர் 4] [திரு. இரா. ஜீவானந்தம்]

கருதுகிறேன்' என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே உரையைத் தொடங்குகிறபோது, புரட்சித் தலைவி அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், தான் யார் என்பதை அங்கே எடுத்துச் சொல்கிறார். 'ஏழையெளிய மக்களின் பிரதிநிதியாக, நாளும் உழைத்து நலிந்த கூட்டத்தினுடைய பிரதிநிதியாக, கோடிக்கணக்கான எளிய தொழிலாளர்களுடைய பிரதிநிதியாக, விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகளுடைய பிரதிநிதியாக, இவர்கள் அத்துணை பேர்களுடைய பிரதிநிதியாக, அவர்களுடைய எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், நியாயமான ஆசைகள் இவற்றுக்காகக் குரல் கொடுக்கவும், இந்த அவையின் மூலமாக இதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வந்திருக்கிறேன்' என்று அன்றையதினமே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தான் யார் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது 1984–லே நடைபெற்ற நிகழ்ச்சி.

அதற்குப் பின்னாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991–லே மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அதற்குப் பிறகு, 2001–லே மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அவர்கள் அன்றைக்கு என்ன கொள்கையைச் சொன்னார்களோ, எந்தக் கொள்கையை மாநிலங்கள் அவையில் வைத்தார்களோ, அதைத்தான் இன்றைக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே, தமிழகத்திலே இருக்கிற ஏழையெளிய மக்களுக்காக இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய ஏழையெளிய விவசாயிகளுடைய வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 7–10*

நேற்றையதினம்கூட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீங்கள் சந்தேகத்தின்பேரில் கேட்டபோது, அந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றப்படமாட்டாது என்ற உறுதிமொழியைச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று சொன்னவர்கள், சொன்னதைச் செய்ததில்லை. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் என்றைக்கு ஒரு கொள்கையை எடுக்கிறார்களோ, அந்தக் கொள்கையினின்று மாறியதாக சரித்திரமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் இன்றைக்கு உள்ள வரலாறு.

இன்றைக்கு குறிப்பாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே 12 பத்திகளிலே வேளாண்மையைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. வேறு எந்தத் துறையைப் பற்றியும் இவ்வளவு அதிகமாக இல்லை. வேளாண்மைத் துறையின்மீது அவ்வளவு கவனம் செலுத்துகிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம்? அன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளைப் பற்றியும், விவசாயக் கூலிகள் படுகிற துன்பம், துயரங்களைப் பற்றியும் மாநிலங்களவையிலே பேசுகிறபோது சொன்னார்களே, அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்பதற்காக, சமூகத்திலே ஏற்றதாழ்வுகள் ஒழியவேண்டும் என்பதுதான். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 70 அல்லது 80 சதவிகிதம் மக்கள் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் பேசுகிறபோது, ஏதோ இந்த ஆட்சி விவசாயிகளுக்கு எதிரான ஒரு ஆட்சி, ஏதோ அவர்கள் இருக்கிறபோதுதான், விவசாயிகள்மீது மிகவும் அக்கறையோடு நடந்ததாகவும், விவசாயிகள் எந்தக் கோரிக்கையை வைத்தாலும் உடனே சென்று, செய்துவிடுவது போலவும், நாங்கள் ஏதோ விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு விரோதிகளைப் போலவும் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், தொடக்கத்திலே ஒன்றைச் சொன்னார். இந்த வேளாண்மை மானியம் என்பதில் கட்சிகளைப் பார்க்கக்கூடாது, கட்சி மாச்சரியம் எல்லாம் இருக்கக்கூடாது என்று சொன்னார். நான் ஏதோ அப்படித்தான் பேசுவார் என்று நினைத்தேன். அடுத்த நிமிடமே அப்படியே மாற்றிக்கொண்டுவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) பரவாயில்லை. இருந்தாலும்கூட இந்த நேரத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 30 நாட்களுக்குள்ளாகவே, உங்களுடைய ஆட்சி நடக்கிறபொழுது 4 ஆண்டு காலம், அதிலும் குறிப்பாக—உங்களுக்குத் தெரியாதது அல்ல, நம்முடைய நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டம், காவிரி டெல்டாப் பகுதி. வறட்சியும் வரும்; ஓராண்டு வெள்ளமும் வரும்; வெள்ளாமை வீணாகிவிடும். அங்கிருக்கிற விவசாயிகளின் துயர நிலை, அவர்களுடைய வாழ்க்கையே போராட்டமாக அமைந்துவிட்டது. வெள்ளத்தாலும் போராட்டம், வறட்சியாலும் போராட்டம். இது யாருக்கும் தெரியாதது



அல்ல. இது நடந்து கொண்டிருக்கிற நிலை. ஆனால், கடந்த 4 ஆண்டு காலமாக அந்தப் பகுதியிலே வாழும் விவசாயிகள் வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டுவிட்டோம், நாங்கள் தாங்க முடியாத கடன் சுமைகளை சுமந்து கொண்டிருக்கிறோம், எங்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்று உங்களுக்குக் கோரிக்கை வைத்தார்கள் விவசாயிகள். மனுக் கொடுத்தார்கள், நீங்கள் என்ன சொன்னீர்கள்? இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய பழனிசாமி அவர்கள் இருக்கிறார்கள், திரு. ஞானசேகரன் அவர்களும் இருக்கிறார்கள். நீங்கள் ஆளுகிறபோது இந்த விவசாய மானியத்திலே பேசியதை இப்பொழுது உங்களுக்குச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நம்முடைய ஞானசேகரன் அவர்கள் கேட்கிறார்கள். அப்பொழுது என்ன சொன்னீர்கள் நீங்கள்? 'நபார்டு' வங்கி அதைத் தள்ளுபடி செய்வதற்கு ஒப்புக்கொள்ளவில்லை, நாங்கள் என்ன செய்வது என்று நீங்கள் சொன்னீர்கள். சொன்னீர்களா இல்லையா? இதற்குக் காரணம் யார் என்றும் சொன்னீர்கள். முன்னாள் முதலமைச்சர் எழுதிக் கொடுத்துவிட்டார். ஆகவே, எங்களால் முடியாது என்று சொன்னீர்கள். அந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், நீங்கள் கடனைத் தள்ளி வைக்கிறோம் என்று சொன்னீர்கள் அல்லவா? கடனைத் தள்ளி வைக்கிறோம் என்று சொன்னவுடன் ஏதோ இதாவது கிடைத்ததே என்று உடனே எழுந்து முதலமைச்சருக்கு நன்றி சொல்கிறார். அதை இந்த அவையின் ஏட்டிலே நான் பார்த்தேன். ஆக, இப்படி இந்த விவசாயிகள், தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள், தாங்க முடியாத கடன் சுமையிலே நாங்கள் செத்துக் கொண்டிருக்கிறோம்; எங்களைக் காப்பாற்றுங்கள் என்றால், மாண்புமிகு உங்களுடைய தலைவர், எந்த இடத்திற்குச் சென்றாலும் அவர் உற்ற தோழனாகத் தன்னை மாற்றிக்கொள்வார். விவசாயிகளைப் பார்த்தால், விவசாயி என்று சொல்வார்; பத்திரிகையாளர்களைப் பார்த்தால், நான் பத்திரிகையாளன் என்று சொல்வார். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கு சென்றாலும், யாரோடு ஒட்டினாலும், உறவு கொண்டாலும் சரி, அவர்களோடு இணைந்துவிடுகி பழக்கத்தை உடையவர் அவர். சொன்னதைச் செய்கிறவர் செய்வதைத்தான் சொல்கிறவர். அப்படிப்பட்ட நீங்கள் அன்றைக்கு என்ன செய்தீர்கள்? உங்களுக்குத் தேர்தல் வந்தால், கரும்புக்கு இடைநிகழ் வழிநடைச் செலவுகளை எல்லாம் ஏற்றிக் கொடுப்பீர்கள். இதெல்லாம் தெரிந்த விஷயம்தான்.

பிற்பகல் 7–15

இன்னும் ஒன்று சொன்னீர்கள். விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை என்று சொன்னீர்கள். உங்களைக் கேட்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் டி.கே.எம்.9 ரக நெல்லை விளைய வைக்க வேண்டாம் என்று சொன்னாலும், விளைய வைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தந்தி கொடுத்ததாகச் சொல்கிறார்களே, அந்த விவசாயச் சங்கத்தினர் என்னிடம் பேசினார்கள். அவர்கள், டி.கே.எம்.9 ரக நெல்லை நாங்கள் எதுவும் செய்ய முடியாது; வெளி மாநிலங்களுக்குச் செல்வதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்; அப்படி அனுமதிக்கவில்லை என்று சொன்னால் ஒட்டுமொத்தமாக நீங்கள் எங்களுடைய உடலைத்தான் பார்க்கமுடியும் என்பதுபோலப் பேசினார்கள். இது இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குச் சென்ற அடுத்த நாளே, வெளி மாநிலங்களுக்கு இந்த நெல்லை எடுத்துச் செல்லலாம் என்று உத்தரவு போட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விவசாயிகளைக் காப்பாற்றியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

நீலகிரி மாவட்டத்திலே தேயிலைத் தொழிலாளிகளெல்லாம், "ஐயா, தேயிலையினுடைய விலை இறங்கிவிட்டது; எங்களுக்கு நல்ல விலை கொடுங்கள், எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று உங்களைக் கேட்டார்கள். சாலையிலே நின்று அவர்களுடைய உரிமைக்காகப் போராடினார்கள். அவர்களை நீங்கள் என்ன செய்தீர்கள்? காவல் துறையை வைத்து அடித்தீர்களா, இல்லையா? அங்கே விவசாயிகள் நிர்வாணமாக்கப்பட்டார்களா, இல்லையா? இதெல்லாம் நடைபெற்ற நிகழ்ச்சி. நீங்கள் சொல்கிறீர்கள், விவசாயிகளுக்கு நாங்கள் ஒன்றும் செய்யவில்லை என்று. பாதிக்கப்பட்ட தேயிலை விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும், 20 பேருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி ரூ.33.30 இலட்சத்தை உடனே வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லி, இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் என்ன செய்தீர்கள்? ஒன்றும் செய்யவில்லை. அதுமட்டுமல்ல, தேயிலை விவசாயிகளுடைய துயர் துடைக்கவேண்டும் என்பதற்காக பச்சைத் தேயிலையை அரசே வாங்கி இப்போது விற்பனை செய்யவும் வழி வகுத்திருக்கிறது. இப்படி விவசாயிகளுடைய பிரச்சினை எதுவாக இருந்தாலும் இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி



டாக்டர் அம்மா அவர்கள், கேட்காமலேயே செய்துகொண்டிருக்கிறார்கள். இப்போது ரூ.310 கோடி அளவுக்கு அவர்களுடைய வட்டியையும், அபராத வட்டியையும் அம்மா அவர்கள் தள்ளுபடி செய்தார்கள் என்று சொன்னால், யார் கோரிக்கை வைத்தார்கள்? யாரும் சொல்லவில்லை. இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களைக் கேட்கிறேன். யாரும் கேட்கவில்லை. அம்மா அவர்கள் இந்தத் தாங்க முடியாத கடன் சுமையைச் சுமந்துகொண்டிருக்கிற விவசாயிகளை, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, அவர்கள் கேட்காமலேயே ரூ.310 கோடியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பார்த்தா, நீங்கள் விவசாயிகளுக்கு விரோதமான ஆட்சி இது என்று சொல்வது? அது ஏற்றுக்கொள்ள முடியாதது. நீங்கள் வேண்டுமானால் கொஞ்ச காலம் சின்னத்தை முடக்கியிருக்கலாம். ஆனால், புரட்சித் தலைவியினுடைய எண்ணத்தை உங்களால் முடக்க முடியாது, முடக்கவே முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மொத்த நிலப்பரப்பை எடுத்துக்கொண்டால் 129 இலட்சம் ஹெக்டேர் நிலம் இருக்கிறது. அதில் 37.9 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலங்கள். ஆகவே, இந்த நிலப்பரப்பிலேதான் 20 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை எடுத்து அந்த நிலத்தை ஓர் ஆண்டுக்கு 4 இலட்சம் ஹெக்டேர் வீதம் சாகுபடிக்குக் கொண்டுவந்து, இந்த ஐந்தாண்டு காலத்திலே 20 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை நல்ல தோட்டங்களாக, தமிழ்நாட்டைப் பசுமை நாடாக மாற்றவேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் இப்போது இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக ரூபாய் 25 கோடியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு எல்லோருமே பேசுகிறபோது–மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பேசும்போது–தண்ணீரைப்பற்றித்தான் பேசினார்கள். சிலர் சில குறைகளைச் சொன்னார்கள். தண்ணீரைப் பற்றிச் சொன்னார்கள். காவிரி நீரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் சொன்னார்கள். அந்தக் காவிரி நீரைப் பற்றிப் பேசுவதற்கு உரிமையானவர்களே நீங்கள்தான். வேறு யாருமே கிடையாது. நீங்கள்தான் பேசவேண்டும் அதை. ஏனென்றால் உங்களுடைய ஆட்சி இங்கே நடந்தபோது, அங்கே திரு. குஜ்ரால் அவர்கள் பிரதமராக இருந்த

காலத்திலே நீங்கள்தான் அந்த மந்திரிசபையில் இருந்தீர்கள். அவர் ஒரு ஒப்பந்தம் போடுகிறார். அதற்குப் பிறகு மீண்டும் வாஜ்பாய் அவர்கள் அரசாங்கம் உங்களை அழைத்துப் பேசுகிறது. நீங்கள் என்ன சொல்லியிருக்க வேண்டும்? எது பாதுகாப்பான ஒப்பந்தம், தமிழ்நாட்டு மக்களுக்கு? திரு. குஜ்ரால் போட்ட ஒப்பந்தம் பாதுகாப்பானதா? மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள் போடுகிற ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்குப் பாதுகாப்பானதா? இதை நீங்கள் பார்க்க வேண்டுமா, வேண்டாமா? ஒன்றே ஒன்று வேண்டும். நாம் இங்கேயும் பதவியில் இருக்க வேண்டும்; அங்கேயும் நாம் பதவியில் இருக்க வேண்டும்; அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தவிர வேறு எதுவுமே கிடையாது. தமிழ்நாட்டைப் பற்றியே உங்களுக்கு அக்கறை கிடையவே கிடையாது. அக்கறை இருந்தால் இப்படியெல்லாம் ஆகியிருக்குமா? ஆகியிருப்பதற்கு வாய்ப்பே கிடையாது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே....

*பிற்பகல் 7–20*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்_

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திடீரென்று ராஜபார்ட்டுக்காரர் உள்ளே நுழைவதைப்போல நுழைந்திருக்கிறீர்களே! (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** கடைசியில் உட்கார்ந்து உரையைக் கேட்டுக்கொண்டிருந்தேன். நம்முடைய சப்ஜெக்ட் என்று வந்துவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. குஜ்ரால் காலத்திலே போடப்பட்ட அந்த ஒப்பந்தம் என்றார். அந்த ஒப்பந்தம் அல்ல. அப்போது அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி அனுப்பினார்கள். பிறகு வாஜ்பாய் அரசு வந்தது. குஜ்ரால் அரசு காலத்திலே தீட்டி அனுப்பப்பட்ட ஒப்பந்தம் நமக்கு ஏற்றதா, நடைமுறையில் ஒப்புக்கொள்ளக்கூடியதா என்பதை சர்வகட்சிக் கூட்டம் கூட்டி இங்கே பேசினோம். அதிலிருந்து சில மாறுதல்களைச் செய்தோம். அந்த மாறுதலோடு செய்யப்பட்டதற்குப் பிறகுதான் வாஜ்பாய் அரசில் காவிரி ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. நான் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், இந்தக் காவிரி ஆணையத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அதற்கு முன்னாலே புரட்சித் தலைவி அவர்கள் இதிலே திடமான, திட்டமான தன்னுடைய கருத்துகளை அப்போதே



சொல்லிவிட்டார்கள். குஜ்ரால் ஒப்பந்தம்தான் தமிழ்நாட்டிற்குப் பாதுகாப்பான ஒப்பந்தம் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) இது நமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்போதே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு, நம்முடைய உறுப்பினர் அவர்கள் பேசலாம். மரியாதைக்குரிய... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** அவர் அதுகுறித்து அதிகமாகப் பேசுகிறார். அதில் தவறு இல்லை. நான் ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன். அப்படியானால், இப்போது வாஜ்பாய் தலைமையிலே ஓர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கிறீர்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது நான் அமைச்சராக, வாஜ்பாய் அரசில் இருந்தவன்தான். அதைச் சொல்ல விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், வாஜ்பாய் அவர்கள் எங்களுடைய கட்சியையோ, தலைமையையோ கலந்து ஆலோசிக்காமல்தான் அந்தக் கூட்டம் நடைபெற்றது. அது காரணமாக, செய்த முறை சரியில்லை என்பதற்காகவும், இதனால் தமிழகத்திற்கு எந்தப் பலனும் கிடைக்காது என்று அப்போதே நாங்கள் எதிர்த்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்த்து, அதிலிருந்துதான் எங்களுக்கும், அவர்களுக்கும் பிரச்சினை உருவாகி, தமிழ்நாட்டினுடைய நலனைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகக் குரல் கொடுத்து, எங்கள் பதவியை வேண்டாம் என்று சொல்லி வெளியேறினோம். அது முடிந்து போயிற்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினரைக் கேட்கிறேன், உண்மையிலேயே இது நல்ல திட்டமா? இதை அவர்கள் நியாயப்படி தடுத்துக் கொண்டிருக்கிறார்களா? அப்படிச் சரியான முறை இல்லையென்றால் இப்போது இருக்கும் அந்த அரசு, இப்போது இருக்கிறதே, மத்திய அரசிலே இருக்கிறார்களே இவர்கள், இவர்கள் உண்மையாகவே ஜீவாதாரத்தை நாம் காப்பாற்ற வேண்டும் என்று உண்மையிலேயே நினைக்கிறார்களா? உண்மையிலேயே காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தால் ஆட்சியை விட்டு எங்களைப்போல வெளியிலே வருவார்களா? சொல்லட்டும்.

**திரு. துரைமுருகன்:** நான் கேட்கிற ஒரே ஒரு கேள்வி இதுதான். இப்போது நீங்கள் ஆளும் கட்சியில் இருக்கிறீர்கள். இந்த ஆளும் கட்சி மட்டும்...(குறுக்கீடு) ஒரேயொரு கேள்வியைக் கேட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

**திரு. ஜி. பழனிசாமி:** திரு. துரைமுருகன், நீங்கள் அப்புறம் பேசுங்கள். நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக நம்முடைய மாமன்றத்தில் விவாதிக்க வேண்டாம் என்று நான் தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். நம்மிடத்திலேயே ஒரு நதி நீர்ப் பிரச்சினை, தி.மு.க.–வா, அ.தி.மு.க.–வா, கம்யூனிஸ்ட்டா என்பது அல்ல. இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணம். அது ஆணையமாக இருக்கலாம், Monitoring Committee–யாக இருக்கலாம். 6 ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசவிருக்கிறார்கள். காவிரிப் படுகையிலே இருக்கிற விவசாயிகள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், நாம் அரசியலுக்காக விவாதம் நடத்தி, அவர்களுக்குச் சாதகமான எந்த இடத்தையும் அழித்துவிடக் கூடாது என்பதற்காக, இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அடுத்த சப்ஜெட்டுக்குப் போனால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** திரு. பழனிசாமி சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன். கூடுமானவரையில் இந்தப் பிரச்சினையிலே அதிகமாகப் பேசுவதைக்கூட நான் விரும்புவது கிடையாது. காரணம், இது நாட்டு நலனுக்கு உட்பட்ட ஒரு பிரச்சினை. இது ஏதோ திமுக–விற்கும், அதிமுக.–விற்கும் இருக்கிற சண்டை என்றோ, மக்களைப் பாதிக்கக்கூடிய விதத்தில் வந்துவிடக்கூடாது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தால்தான் நான் இதைப் பேசுகிறேனே தவிர, வேறல்ல. ஆனால், மாண்புமிகு அமைச்சர் திரு. தம்பிதுரையானாலும் சரி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரானாலும் சரி, நான் கேட்கிற கேள்வி இதுதான். இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற காவிரி ஆணையத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 7–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அப்படி அமைத்ததனால் ஏதேனும் பலன் இருக்கிறதா, இல்லையா? அதைச் சொல்லுங்கள்.



**திரு. துரைமுருகன்:** பலன் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஆனால், தண்ணீர் வரவில்லையே!

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அவையில் இதுபற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 6 ஆம் தேதி ஓர் இறுதிக் கட்டமாக, ஒரு பெருமுயற்சி டெல்லி அளவிலே நடக்கவிருக்கிறது. மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள் அமைத்த இந்த ஆணையம் பலன் அளிக்கக்கூடிய ஆணையமா என்பதை தி.மு.க.தான் முடிவு செய்யவேண்டும். காரணம், உண்மையிலேயே அது பலன் அளிக்கக்கூடிய ஓர் ஆணையமாக இருந்தால், உங்கள் ஆட்சி அங்கு நடக்கிறது, நீங்களும் அங்கு அங்கத்தினராக இருக்கிறீர்கள். உங்களுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள், காவிரியிலே தண்ணீர் இல்லாத காரணத்தினால் தஞ்சைத் தரணி வாடுகிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அப்படி இருந்தும்கூட, இதுவரை தண்ணீர் விடாத ஒரு நிலையை கர்நாடக அரசு மேற்கொண்டிருக்கிறது. இதற்கு வாஜ்பாய் அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? அந்த ஆணையம் நல்ல ஆணையமாக இருந்தால், பலன் அளிக்கக்கூடிய ஆணையமாக இருந்தால், உங்களுடைய பங்கு அதிலே உண்மையிலேயே இருக்குமேயானால், தண்ணீர் இந்நேரம் வந்திருக்க வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, 6 ஆம் தேதிவரை, பேரவைத் தலைவர் அவர்களே, நாம் பொறுத்திருக்க வேண்டும். 6 ஆம் தேதி புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற முயற்சியினுடைய பலன் கிட்டும் என்று நாங்கள் நம்புகிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள். நாட்டு நலனை முன்னிட்டு–(குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) அண்ணன் மணி அவர்கள், நீங்களும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். நாட்டு நலனை முன்னிட்டு, அமைச்சரவர்கள் சொன்னது, கடந்த காலத்திலே நடைபெற்ற சில நீக்குப் போக்குகளை அவர் விவரித்திருக்கிறார். திரு. குஜ்ரால் அரசு போட்ட அந்த ஒப்பந்தத்தைப் பற்றியும், அதற்குப் பிறகு வாஜ்பாய் அரசிலே போடப்பட்ட அந்த ஒப்பந்தத்தைப் பற்றியும் விவரித்திருக்கிறார். அதுபற்றி கடந்த கால அரசியலிலே விமர்சனங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்,

துரைமுருகன் இப்போது கேட்கிற அந்தக் கேள்வி நியாயமான கேள்வி அல்ல. அது பிரச்சினைகளை இன்னும் சிக்கலாக்கிவிடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த கட்டத்திற்குப் போகலாம். 6 ஆம் தேதி இதுபற்றிப் பேச இருக்கின்ற காரணத்தால், விவாதத்தை இதோடு முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், போதும். மாண்புமிகு அமைச்சர், அடுத்த கட்டத்திற்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே தண்ணீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நிலத்தடி நீர் குறைந்து போய்விட்டது. இப்போது நிலத்தடி நீரை நாம் சேமிக்க வேண்டும். இதற்கான வழிமுறைகள் என்ன? ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் இதுபோன்ற நடைமுறைகளை நடைமுறைப்படுத்தவில்லை. ஏரிகளை வெட்டினோம், வாய்க்கால்களைத் தூர் எடுத்தோம், குளங்களை ஆழப்படுத்தினோம் என்று சொன்னார்கள். நீங்களெல்லாம் பார்த்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். அவை எல்லாம் முறையாக வெட்டப்பட்டனவா? அவை எப்படி வெட்டப்பட்டிருந்தன என்று சொன்னால், 'கிராப்' வெட்டுவதுபோல் ஆங்காங்கே வெட்டியிருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எப்படி இருந்தது? முறையாக வெட்டப்பட்டிருந்தால், தண்ணீர் சேமிக்கப்பட்டிருக்க வேண்டாமா? இப்போது நிலத்தடி நீரே இல்லை. அவ்வளவு மோசமான நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகையினால்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும், கிராமத்திலே வாழ்கின்ற மக்கள், விவசாயிகளுடைய வாழ்க்கையிலே பொருளாதார ஏற்றம் வரவேண்டும் என்பதற்காகத்தான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்து, அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதற்காக அதை ஆய்வுக்கு உட்படுத்தி, எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் இருக்கிறது என்பதெல்லாம் கண்டறியப்பட்டுக்கொண்டு வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நம்முடைய முன்னோர்கள்கூட நிலங்களை 5 வகைகளாகப் பிரித்து வாழ்ந்திருக்கிறார்கள். அந்தந்தத் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப, எந்தெந்தப் பயிர்களை எங்கெங்கு பயிரிட்டால் அது பலனுள்ளதாக இருக்கும், அதிகமான வருவாயைத் தரும் என்பதை எல்லாம் அறிந்து அந்தக் காலத்திலேயே திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே அவர்கள் வெட்டிய அந்த



ஏரிகளை, அந்தக் குளங்களை இப்போது நம்மால் பராமரிக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். அந்த நிலையைத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்ற இருக்கிறார்கள். இதை எல்லோருமே ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த மன்றத்தில் உள்ள அத்தனை பேருமே இது நல்ல திட்டம், இது செயல்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லி ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே, இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் கூறிக்கொள்வதெல்லாம், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, நடைமுறைப்படுத்துகிறபோது, இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு வளமிக்க நாடாக இருக்கும். இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது, நீர்ப் பிடிப்புப் பகுதியினுடைய மேம்பாட்டுத் திட்டம், அதற்காகவும் திட்டம் ஏற்படுத்தப்படும்.

*பிற்பகல் 7–30*

கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டம், மழை நீரைச் சேமிக்கிற திட்டம் இத்தனையையும் இந்தத் திட்டத்திலே உள்ளடக்கி இன்றைக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இன்றைக்கு யாருக்குமே தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழித்து சேமிக்க வேண்டும் என்கிற உணர்வே கிடையாது. எப்போது நமக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லையோ, அப்போதுதான் தண்ணீரைப் பற்றிய சிந்தனையே நமக்கு வருகிறது. மழை நீர் எல்லாம் பெய்து அந்தத் தண்ணீர் எல்லாம் வீணாகக் கடலிலே கலக்கிறபோது அந்தச் சிந்தனை யாருக்கும் வருவதில்லை. இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—ஒரு சொட்டு நீரைக்கூட வீணாக்கக்கூடாது, (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பகுதியிலே மழை பெய்கிறதோ, அந்தப் பகுதியிலே அந்த நீரைத் தேக்கி வைக்கவேண்டும் என்பதுதான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய rain water harvesting–மழை நீர் சேமிப்புத் திட்டம். பலர் சொல்லியிருக்கலாம், சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் இன்றைக்கு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம். இன்றைக்கு மத்தியிலே இருக்கிற அரசுகூட இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறது. அந்த அளவிற்கு இன்றைக்கு இந்தத் திட்டம் மக்களாலே பாராட்டப்படுகிற திட்டமாக இருக்கிறது. இன்றைக்குப் பணம் கொடுத்து உணவுப் பொருட்களை எல்லாம் சேமிக்கிறோம். ஆனால், காசு, பணம் இல்லாமல் வருகிற மழை நீரை நாம் சேமித்து வைக்கவேண்டும். அதற்காக வாய்க்கால்கள், குளங்கள், ஏரிகள் இவற்றை வெட்டி, அவை எல்லாம் சீரமைக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இந்தத் திட்டத்தினுடைய அடிப்படை நோக்கமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்

போனால், இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள்கூடச் சொன்னார்கள். நம்முடைய தஞ்சை மாவட்டம் இன்றைக்கு மிகவும் காய்ந்து போயிருக்கிறது, எப்படியாவது அதைக் காப்பாற்ற வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு மறுசிந்தனைக்கு வரவேண்டிய ஒரு நிலையிலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். சாதாரணமாக, தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்துவதால் அதிகமான விளைச்சல் வந்துவிடுவதாகச் சொல்லமுடியாது. தண்ணீர் என்பது இன்றைக்கு ஒரு விஷம். ஈரம் என்பதுதான் உரம் என்று சொல்ல வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், water is poison and moisture is nutrition என்று யார் சொல்கிறார்கள் என்றால், இஸ்ரேல் நாட்டில் சொல்கிறார்கள். எதற்காகச் சொல்கிறார்கள் என்றால், தண்ணீரை அதிகமாகத் தேக்கினால் அது கீழே போய்விடுகிறது. அங்கே அப்படிக் கிடையாது. வேருக்கே அவர்கள் கொடுத்துவிடுகிறார்கள். ஆகையால், அங்கே விளைகிற பொருட்கள் எல்லாம் அதிகமாக விளைகின்றன. சாதாரணமாக தக்காளியை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தத் தக்காளி நம்முடைய நாட்டிலே ஒரு ஏக்கருக்கு மூன்று, நான்கு டன் விளையும். அவ்வளவுதான். ஆனால், அதே தக்காளி இஸ்ரேலிலே 40 டன் விளைவிக்க முடிகிறது என்று சொன்னால், அதற்குத் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகிற விவசாய முறை. அதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாதிரித் திட்டங்களை எல்லாம் அறிவித்து அதை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும், அப்படி உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களுக்கு எங்கே marketing இருக்கிறது என்பதையெல்லாம் குறித்து இன்றைக்கு திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையிலேதான் எந்தெந்தப் பகுதியிலே எந்தெந்தப் பயிர் செய்யவேண்டும் என்பதை முன்கூட்டியே கணக்கிட்டு, அந்தந்தப் பகுதி விவசாயிகளுக்கு விவசாயத் துறை மூலமாக உரிய தகவல்களை உழவர்களுக்குத் தந்து, அளவான உற்பத்தி, நிகரான இலாபம், நுகரும் மக்களுக்கு நியாயமான விலை என்ற நிலையினை உருவாக்குவதுதான் இன்றைக்கு அம்மாவினுடைய நோக்கம். அதன் அடிப்படையிலேதான் agri business என்னும் வேளாண் வணிகத் துறை, வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம், இவற்றைத் தொடங்கிட அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு பிரேசில், அர்ஜென்டைனா, தாய்லாந்து மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளில் இதுபோன்றுதான் விவசாயிகளுடைய நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. வளர்ந்து வருகிற பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏற்ப – W.T.O. அதற்கு ஏற்ப நம் உற்பத்தியை மட்டும்



அதிகரித்தால் போதாது, உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வேண்டும். உற்பத்தித் திறனை அதிகரித்தால் மட்டும் போதாது. அதனுடைய தரத்தையும் அதிகரிக்க வேண்டும். தரத்தை அதிகரித்ததற்குப் பின்னால்தான் அதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற வாய்ப்பை நாம் உருவாக்க முடியும். வெளி நாடுகளிலே என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால், நாம் அனுப்புகிற பொருள் தரமாக இருக்கிறதா என்பதை அவர்கள் முதலிலே கவனிக்கிறார்கள். குறிப்பாகச் சொல்வது என்று சொன்னால், கொல்லிமலையிலே இருக்கிற அன்னாசிப் பழம். முன்பெல்லாம் பார்த்தீர்கள் என்றால், சாலை ஓரங்களில் எல்லாம் மேடு மேடாகக் குவித்து வைத்திருப்பார்கள். இப்போது அந்தப் பழத்தை நீங்கள் பார்க்க முடியாது. அதற்கு இயற்கையான உரத்தை இட்டு, இன்றைக்குப் பயிர் செய்ததாலே, வெளி நாடுகளில் அதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு அதெல்லாம் ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் நாம் கணக்கிலே கொண்டு, இன்றைக்கு இயற்கை உரங்கள் மூலமாகப் பொருட்களை உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறபோது, இந்த நாடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைத்தது போல, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மை மாநிலம் என்கிற நிலைமை உருவாகிற காலம் மிக விரைவிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதிக விவரங்களைப் பேச இன்னும் நிறைய வாய்ப்புக்கள் எல்லாம் இருக்கின்றன.

*பிற்பகல் 7–35*

இங்கே வைத்திருக்கிற மலர்கள்—மாலை நேரம் இங்கே உங்களுக்கு எல்லாம் நான் நேரடியாக மலர்களைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மலர்களை வைத்திருக்கிறோம். இந்த மலரைப் பற்றிகூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், இதற்கு எல்லாம் என்ன பெயர் என்று கேட்டார்கள். கேட்டதோடு மட்டும் இருந்தால் பரவாயில்லை. இதிலே பிளாஸ்டிக் பேப்பரைச் சுற்றலாமா என்றும் கேட்டார். இன்னும் ஒரு மாத காலம் பிளாஸ்டிக் பேப்பரைப் பயன்படுத்தலாம் என்று இருக்கிறது என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) ஆமாம். இந்த மலர்கள் orchids மலர், வில்லியம் கார்னிசென்ஸ், ஜர்பரா. இந்த மலர்கள் எல்லாம் இருக்கின்றன. (குறுக்கீடு) உங்களிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் இல்லை என்று சொன்னால், யாருக்கும் தெரியாது, அவர்களும் இல்லை என்று சொல்வார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் நினைக்கிறார். அப்படி அல்ல. வேண்டுமென்றால் உங்களுக்கு வராமல் இருந்திருக்கலாம். மற்றவர்களுக்கு அது போய் இருக்கலாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** இவை நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** ஆமாம். நமது மாநிலத்திலே உற்பத்தி செய்யப்பட்டு, நமது துறையின் மூலமாக, நீங்கள் எல்லாம் போகும்போது வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்க் காட்டவேண்டும், இப்படி எல்லாம் நம்முடைய தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லி. இப்போது ஒவ்வொரு இடத்திலேயும் பார்த்தீர்கள் என்றால், இங்கே எது வெளி நாடுகளுக்குத் தேவைப்படுகிறதோ, அதைப்போன்ற பொருட்களை நாம் உற்பத்தி செய்ய வேண்டும். இப்போது பிரேசீலியன் வாழை என்று ஒரு வாழை இருக்கிறது. அது 15 அல்லது 20 நாட்கள் வரையிலும் கெடாமலேயே இருக்கும். அதற்கு உலகச் சந்தையிலே அதிக வாய்ப்பு இருக்கிறது. நாம் இங்கே அந்த பிரேசீலியன் வாழையை உற்பத்தி செய்வதில்லை. நாம் பயிர் செய்தால் அதற்குக் கிட்டத்தட்ட ஓர் ஏக்கருக்கு 75,000 ரூபாய் கிடைக்கும் என்று கணக்குச் சொல்கிறார்கள். ஆக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பிளாஸ்டிக்கைத் தடை பண்ணுகிறோமே, இதிலே சுற்றிக் கொடுத்திருக்கிறீர்களே என்று கேட்டிருக்கிறார். பிளாஸ்டிக் நம்மைவிட்டு விடைபெறப் போகின்ற காரணத்தால், பிரிவு உபசாரத்திற்காக, கடைசியாக வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, இந்த மலர்கள் எல்லாம், இப்போது இங்கே பார்த்தீர்களே, இந்த மலர்களுக்கு எல்லாம் வெளி நாட்டிலே நிறைய வாய்ப்பு இருக்கிறது. நல்ல விலை போய்க் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் மிகவும் அதிகமாகத் தண்ணீர் தேவையில்லை. தண்ணீர் குறைவான பகுதியிலே இந்த மலரை எல்லாம் நாம் பயிர் செய்யலாம். இந்த கிரைசான்டியம், ரோஸ், அந்தூரியம், ஆர்கிட் போன்ற இந்த மலர்கள் எல்லாம் ஏற்றுமதிக்கு மிக உகந்த மலர்கள் என்று சொல்லப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், நாம் பார்த்து இதெல்லாம் என்ன என்று தூக்கி எறிகிற பொருட்களுக்கு எல்லாம் அமெரிக்கா போன்ற நாடுகளில் நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. நெருஞ்சி முள் இருக்கிறது பாருங்கள். நெருஞ்சி முள், கருந்துளசி, கருநொச்சி, சிறியாநங்கை, துளசி, தும்பை, சிறுகுறிஞ்சான், முடக்கத்தான், தூதுவளை, வல்லாரை, கண்டங்கத்தரி



இவையெல்லாம் நமது ரோட்டிலே அங்கே, இங்கே கிடக்கும். நமக்கு அதுபற்றித் தெரியவில்லை. இவை எல்லாம், இந்தப் பயிர்கள் எல்லாம் எங்கே விளையும், எந்தப் பகுதியிலே விளையும் என்று தெரிந்து, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மூலமாக அவை நடப்படுமேயானால் வெளி நாட்டிற்கு நல்ல ஏற்றுமதியாகும். குடிசையில் வாழ்கிற விவசாயி இருக்கிறான் பாருங்கள், அவர்கள் கொஞ்ச நாட்களிலேயே மாளிகைவாசிகளாக ஆகின்ற வாய்ப்பு இருக்கிறது இந்தத் திட்டத்திலே.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜு, என்ன கேட்க வேண்டும், கேளுங்கள். இந்தப் பூக்களை எல்லாம் பார்த்தால் உங்கள் ஊரிலே விளைகிற மாதிரிதான் தெரிகிறது. எங்களுக்குச் சம்பந்தம் இல்லை.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் எல்லா வகையான பூக்களும் சிறப்பாக உற்பத்தி செய்யப்படுகின்றன. நாங்கள் கேட்பது எல்லாம் marketing agency, அரசு marketing agency தேவை. மற்றவர்கள், பூக்களை வாங்குபவர்கள் பணம் தருவதில்லை. ஐந்து ரோஜாக்களைக் கொடுத்தால் 500 ரூபாய் வரை ஐந்து ஸ்டார் ஓட்டலிலே கிடைக்கிறது. எங்களுக்குத் தெரியும். ஆனால், எங்களுடைய கேள்வி எல்லாம், அரசினுடைய marketing agency கண்டிப்பாகக் கிடைத்தால் இந்த floriculture என்ற இந்தப் பூக்களை எல்லாம் நாம் இன்னும் நல்ல வகையிலே உற்பத்தி செய்யலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்புடைய கருத்துதான். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்தக் கருத்துகள் எல்லாம் நம்முடைய திட்டத்திலே இடம்பெற்றிருக்கின்றன. எங்கெங்கே என்னென்ன விளைகிறதோ, அங்கே எல்லாம் அவர்களுக்குத் தேவையான, அதை வாங்குவதற்கு என்ன தேவையோ, அந்த facilities எல்லாம் செய்வதற்கு வழிவகைகள் இங்கே இந்தத் திட்டத்திலே வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 7–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜு, உங்களுக்கு தேயிலைப் பிரச்சினை தீர்ந்தது. பூக்கள் பிரச்சினையையும் பார்த்துவிடுவோம்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** அதுமட்டுமல்ல, மனிதனுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படக்கூடிய அந்த Azadirachtin எனப்படும் உன்னதமான ஒரு இரசாயன மூலப்பொருள். பயிர்களுக்கு அது உரச் சத்தாகவும், பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுகிறது. இதைத்தான் bio-fertilizer, bio–pesticide என்று நாம் சொல்கிறோம். இதெல்லாம் இயற்கை உரம். இது எங்கு பார்த்தாலும் முளைத்திருக்கிறது, எங்கு பார்த்தாலும் பெரிய மரமாக இருக்கிறது. இதை நாம் என்ன செய்ய வேண்டுமென்றால், தோட்டம் தோட்டமாக வளர்க்க வேண்டும். வளர்த்தால் இந்த bio-fertilizer, bio–pesticide என்று சொல்கிறோமே அதற்கெல்லாம் இது ரொம்பப் பயன்படும். இதற்கெல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டிலே அதிகமாக தேவையிருக்கிறது. தேவைக்குக் கொடுக்க முடியவில்லை. இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. ஆகவே, இன்றைக்குப் பல்வேறுபட்ட மூலிகைகள் எல்லாம் தமிழ்நாட்டில் நிறைய இருக்கின்றன. அந்த மூலிகைகளை நாம் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும். அதன்மூலமாக விவசாயிகளுடைய வாழ்க்கையை வளம் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தையெல்லாம் இன்றைக்குக் கொண்டுவந்து, செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் வேம்பு, முந்திரி – முதலிலே சொன்னதுதான் அது – இதெல்லாம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. சில நேரங்களில் அதன் விலை ஏறும், இறங்கும். இது ஒரு cycle. சில நேரங்களில் விலை அதிகமாகிவிடும்.

நம்முடைய விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும் ஒரு குணம் என்னவென்றால், ஒரு ஆள் ஒன்றைப் பயிரிட்டால், டி.கே.எம். நெல் போட்டால், அவர்கள் டி.கே.எம். நெல்லை விட்டு வேறு ஒன்றுமே வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள். அப்போது விலை வீழ்ச்சிதான் ஏற்படும். எங்கே அதிகமாக அது பயிரிடப்படுகிறதோ அப்போது அங்கே விளைச்சல் அதிகமாகி அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை எப்போதுமே உருவாகிவிடுகிறது. அந்த மாதிரி நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், ஜெட்ரோபா என்று சொல்வார்கள். ஜெட்ரோபா, அது வேறு ஒன்றுமில்லை. நம்முடைய வேலியில் முளைத்திருக்கக்கூடிய காட்டாமணி. அதனுடைய பால் இருக்கிறதே,



அது கார்களுக்கு எரிசக்தியாகப் பயன்படுகிறது. இந்த மேற்கண்ட இரண்டும் தென்னாப்பிரிக்கா, அர்ஜென்டைனா, பிரேசில் நாடுகளில் பெரும் வெற்றி அடைந்துள்ளன. இவையெல்லாம் வருகிறபோது ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு தொழிற்சாலை அமையப் போகிறது. நான் கனவாகச் சொல்லவில்லை. நடக்கப் போவதைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் ஒவ்வொரு கிராமத்திலும் வருகிறபோது, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தொழிற்சாலை வரப்போகிறது. அப்படித் தொழிற்சாலை வருகிறபோது அந்தப் பகுதியிலே இருக்கிற ஏழை எளிய மக்கள், விவசாயிகளுக்கெல்லாம் வேலை கிடைக்கப் போகிறது. அப்படி வேலை கிடைத்தது என்று சொன்னால், அவர்களுடைய வருமானம் பெருகும். வருமானம் பெருகினால், அதனால் பணப் புழக்கம் அதிகமாகும். பணப் புழக்கத்தைக் காணோம், காணோம் என்று சொன்னீர்களே (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் பணப் புழக்கம். அந்த நிலையை உருவாக்குவதற்காகத்தான் இன்றைக்கு அம்மா அவர்களே இந்தத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், மறைந்தும் மறையாமல் எங்கள் நெஞ்சத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் பாடினார்கள்,

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் அயல்நாட்டில்

(மேசையைத் தட்டும் ஒலி)

ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்'.

இதுதான் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தமிழகத்தினுடைய மதிப்பு அயல்நாட்டிலே உயர வேண்டும், எங்கும் பறக்க வேண்டும் அன்னக் கொடி, அண்ணா கொடி என்று இன்றைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் திட்டம். இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கிக் காட்டுவேன் என்று புரட்சித் தலைவி அவர்கள் சபதத்தை எடுத்திருக்கிறார்கள். பொருளாதார ரீதியாக இன்றைக்கு தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலம். புரட்சித் தலைவி அவர்கள் எந்த ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொண்டாலும், அந்த இலட்சியத்தை அடைகிறவரை இமை மூடமாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் வரலாறு. இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களை,

[திரு. இரா. ஜீவானந்தம்] [2001 செப்டம்பர் 4

தொட்டில் குழந்தைகள் திட்டம் தந்த தமிழகத்தினுடைய அன்னை தெரசா மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, இந்த வாக்குச் சீட்டின் மூலமாக தமிழக மக்கள் வள்ளுவருடைய குறளையே பரிசாகத் தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவிக்கு வாக்குச் சீட்டின் மூலமாக வள்ளுவருடைய குறளைப் பரிசாகத் தந்திருக்கிறார்கள்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய மக்கள், புரட்சித் தலைவிதான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வரவேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்லி, அம்மா இருக்கின்ற திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். உரையை நிறைவு செய்வதற்கு முன்பு சில அறிவிப்புகளை நான் அறிவிக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியுடன் இங்கே அறிவிக்கிறேன்.

*பிற்பகல் 7–45*

திருச்சியில் வியாபாரிகளுடைய இன்னல்களைப் போக்க நவீன வசதிகளுடன்கூடிய வெல்ல வணிக வளாகம் ஒன்று ரூ.10.00 கோடி செலவில் அமைக்கப்படும். மேலும், இவ்வளாகத்தில் ரூ.3.00 கோடி கூடுதல் செலவில் குளிர்பதனக் கிடங்கு ஒன்றும் அமைக்கப்படும். பேராவூரணியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட—ரூ.85.00 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்று அமைக்கப்படும். ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் மஞ்சள் வணிக வளாகம்—ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் வளாகத்தில் ரூ.32.30 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உற்பத்தியாகும் 11 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் காய்கறிகள் அறுவடைக்குப் பிறகு சேதமுறாமல் பாதுகாக்க 10 இடங்களில் குளிர்சாதன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கோ.சி. மணி, திரு. ராஜேந்திரன், திரு. எம். ராம்குமார், திரு. கு. ஜெயக்குமார், திரு. வது. நடராஜன், திரு. அ.இரா. மலையப்பசாமி, திருமதி ஆர். சசிகலா, திரு. என். நன்மாறன், திரு. வெ. கோவிந்தராஜ்,



2001 செப்டம்பர் 4] [திரு. இரா. ஜீவானந்தம்]

திரு. ப. அரசன், திரு. ஜி. பழனிசாமி மற்றும் திரு. லா. சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை அனைத்தையும் அரசு கருத்தில் கொண்டுள்ளது. மேலும், இந்த மானியக் கோரிக்கையின்மீது 27 சட்டமன்ற உறுப்பினர்கள், 81 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுத்தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (உ) கோரிக்கை எண் 20 – வேளாண்மை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20 – வேளாண்மை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1163,52,88,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ)கோரிக்கை எண் 52–வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52 – வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.9,48,11,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5–9–2001) காலை 10–00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7–49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

58. மானியக் கோரிக்கை எண் 37 – சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

59. மானியக் கோரிக்கை எண் 37–ன்கீழ் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

60. சுற்றுச்சூழல் பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

61. மானியக் கோரிக்கை எண் 44 – வனவளம் மற்றும் கோரிக்கை எண் 58 – வனவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

62. வனத் துறை பற்றிய செயலாக்க வரவு–செலவுத் திட்டம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

63. மானியக் கோரிக்கை எண் 46 – செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

64. மானியக் கோரிக்கை எண் 20 – வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

65. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

66. வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிற்குத் திருத்தம், 2001–2002. (தமிழ், ஆங்கிலம்)

67. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

---



# இணைப்பு–I

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 37 – சுற்றுச்சூழல்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

### 1.0 முன்னுரை

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு உரிய கவனம் அளிக்கும் வளர்ச்சி தற்போது உலகம் முழுவதும் 'நிலைத்தகு வளர்ச்சி' என்று போற்றப்படுகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தவும், நிலைத்தகு வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும், இந்த அரசு மாநிலத்தில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 1.1 சுற்றுச்சூழல் துறை

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் முகத்தான் தனியே "சுற்றுச்சூழல் துறை" 1995–ல் உருவாக்கப்பட்டது. காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளின் மாசு களைதல், சென்னை நகர நீர்வழித் தடங்களைப் பாதுகாக்கும் திட்டம், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம், கடற்கரைப் பகுதி மேலாண்மை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகிய சுற்றுச்சூழல் பணிகளையும், மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் மேற்கொள்ளப்படாத சுற்றுச்சூழல் சம்பந்தமான அனைத்துப் பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

### 1.2 தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

காவிரி ஆறு பாயும் நகரங்களான திருச்சி, குமாரபாளையம், ஈரோடு, பவானி மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய ஐந்து நகரங்களில் நதிநீர் மாசு களையும் பணிக்கான திட்டத்தை மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.3820 இலட்சம் செலவில் 1996–97 முதல் இத்துறை செயல்படுத்தி வருகிறது. ஆற்றில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி மாற்று வழியில் எடுத்துச் சென்று சுத்திகரிக்கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. குறைந்த செலவிலான கழிப்பிட வசதி, நதி முகப்பு அபிவிருத்தி, சலவையாளருக்கான படித்துறை போன்ற சிறு திட்டப் பணிகள் உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளில் 95 விழுக்காடு முடிவடைந்துள்ளது. கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி மாற்று வழியில் எடுத்துச் சென்று சுத்திகரிக்கும் பணி திருச்சி நகரத்தில் இருநீர் வழித் தடங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஈரோடு மற்றும் குமாரபாளையம் நகரங்களில் முன்னேற்றமடைந்து வருகின்றன. இத்திட்டப் பணிகளின் செயல்பாட்டினைக் கண்காணிக்க இத்துறையில் 'திட்ட மேலாண்மைக் குழுமம்' ஒன்று தனியே செயல்பட்டு வருகிறது.

## 1.3 சென்னை நகர நீர்வழித் தடங்கள் திட்டம்

சென்னை நகர நீர்வழித் தடங்களை சுத்தம்செய்து பாதுகாப்பதற்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரத்தின் முக்கிய நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, கேப்டன் குக் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதன் மூலம் சுமார் 400–க்கும் மேற்பட்ட கழிவுநீர் சாக்கடைகளைத் தடுத்து நிறுத்தி குழாய் மூலம் மாற்று வழியில் செலுத்தும் பணி 12 கட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளது. மேலும், இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட கழிவுநீர் 4 சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்தம் செய்யப்படும். இத்திட்டம் சென்னை குடிநீர் வழங்கல் மற்றம் கழிவு நீரகற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதுவன்றி, நீர்வழித் தடங்களின் கரையோர குடிசைகளை இடமாற்றும் பணியினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமும், நீர்வழித் தடங்களில் மணல் மேடுகளை அகற்றி சுத்திகரிக்கும் பணியினை பொதுப் பணித் துறையும், சிறு வடிகால்கள் மற்றும் மழைநீர் வடிகால் பணியினை சென்னை மாநகராட்சியும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. ரூ.1700 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.491 கோடி நிதி உதவி வழங்க இசைந்துள்ளது. இதர துறைகளால் ஏனைய திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியப் பணிகளுடன் இணக்கமுற செயல்படுத்தப்பட்டு நீர்வழிகளிலுள்ள மாசினைக் களைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நான்கு ஆண்டுகளில் முடிக்கப்பட்டு, சென்னை நகர நீர்வழித் தடங்களின் சூழல் நிலையினை





மேம்படுத்தி, சென்னைவாசிகளின் சுகாதார வாழ்வுக்கு அடிகோலும் என்பதில் ஐயமில்லை.

## 1.4. தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் புதிய ஒருங்கிணைந்த திட்டங்கள்

காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மயிலாடுதுறை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நதிநீரை சுத்திகரிக்க மத்திய அரசு ரூ.575.30 கோடிக்கான ஒருங்கிணைந்த திட்டத்திற்கு ஏற்பளித்துள்ளது. இதில் ரூ.282.15 கோடியினை மத்திய அரசும், மீதமுள்ள தொகையினை தமிழக அரசு, உள்ளாட்சி அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், கழிவுநீர் இணைப்புக்கான பொதுமக்கள் டெபாசிட் தொகை மூலமாகப் பெற்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான ஒருங்கிணைந்த திட்டத்தினால் நதிநீர் சுத்தமாவது மட்டுமின்றி மக்களின் நல வாழ்வும் சுகாதாரமும் பேணிப் பாதுகாக்கப்படும்.

## 1.5. மாநிலச் சுற்றுச்சூழல் நிலை அறிக்கை

தமிழகத்தின் தற்போதைய சுற்றுச்சூழல் குறித்த நிலையினை அறியவும், அதற்கேற்ப தமிழக அரசின் சுற்றுச்சூழல் சம்பந்தமான கொள்கைகளை வடிவமைக்கவும் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாநில முழுவதிற்குமான 'சுற்றுச்சூழல் நிலை அறிக்கை' தயாரிக்கப்படும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 1.6. சுற்றுச்சூழல் மன்றங்கள்

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய ஒரு நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்துவது இத்துறையின் முக்கிய இலக்காகும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்கானத் திட்டம் வடிவமைக்கப்பட்டு, மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்துவதன் மூலம் இக்குறிக்கோளை எளிதில் அடைய இயலும். இத்திட்டத்தில் மாணவர்களுக்கு முறைசார்ந்த மற்றும் முறைசாராக் கல்வி மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே முக்கியப் பணியாகும். இதன்மூலம் மனதளவிலும், செயலளவிலும் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் உன்னத நிலையை அடையும்.

சுற்றுச்சூழல் மன்றங்கள் இதுவரை 16 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணியினை மேலும் 14 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி 560 பள்ளி/கல்லூரிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கும் பணி ரூ.15.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செய்து முடிக்கப்படும். மேலும் கூடுதலாக ரூ.15.00 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட திட்டங்கள் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

அ. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் கருத்தரங்கங்கள்

மாசுக் கட்டுப்பட்டுக்கான நெறிமுறைகளை செயல்படுத்துதல் அரசின் பணியாக இருப்பினும் மாசுக்கான காரணிகளை, தோன்றும் இடத்திலேயே கண்டறிந்து குறைப்பது என்பது மிகவும் முக்கியப் பணியாகும். தமிழக அளவில் சுற்றுச்சூழல் சம்பந்தமான ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல் மற்றும் சுற்றுச்சூழல் விளம்பரம் ஆகிய பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். சுற்றுச்சூழல் சம்பந்தமான முக்கிய நிகழ்வுகளை முன்னிறுத்தி நடத்தப்படும் கருத்துப் பட்டறைகள், கருத்தரங்கங்கள் ஆகியவற்றில் இத்துறை பங்கேற்பது மட்டுமன்றி அவற்றுக்கு நிதி உதவியும் அளித்திடும்.

ஆ. சுற்றுச்சூழல் விருதுகள்

தன்னார்வ நிறுவனங்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர்களின் சுற்றுச்சூழல் பணிகளுக்கு அங்கீகாரம் அளித்துப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் விருதுகள் இவ்வாண்டு வழங்கப்பட உள்ளன.

இ. சுற்றுச்சூழல் துறையின் இணைய தளம்

தமிழகத்தின் முக்கிய சுற்றுச்சூழல் நிகழ்வுகள், இத்துறையின் செயல்பாடுகள், கடற்கரை ஒழுங்குமுறை வரைபடங்கள் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம், சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, தமிழகத்தில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள், காற்றின் தரம், தண்ணீரின் தரம், சுற்றுச்சூழல் குறித்து செயல்படும் ஆராய்ச்சி மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் போன்ற செய்திகளை உள்ளடக்கிய ஓர் இணைய தளம் இத்துறையால் உருவாக்கப்பட உள்ளது. சுற்றுச்சூழல் பற்றி அறிந்துகொள்ள பொதுமக்கள் அனைவருக்கும் இந்த இணைய தளம் மிகவும் உதவிகரமாக இருக்கும்.





**1.7. சுற்றுச்சூழல் கொள்கை – தொலைநோக்குப் பார்வை 2005**

சுற்றுச்சூழலுக்குக் குந்தகம் விளைவிக்காத வளர்ச்சியே நீடித்து நிற்கும் வளர்ச்சியாகும். எனவே, சூழலுக்குகந்த வளர்ச்சியை மேற்கொள்ள பல்வேறு துறைகளை உள்ளடக்கிய தொலைநோக்குப் பார்வை தேவை. இதற்கென பல்துறை அறிஞர்கள், சுற்றுச்சூழல் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிறுவனங்கள் பல கட்டத்திலும் ஆராய்ந்து சுற்றுச்சூழல் தொலை நோக்குப் பார்வை 2005 வகுக்கப்பட்டு தமிழ்நாட்டை சுற்றுச்சூழல் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.0. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அமைப்பு**

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1982–ல் அமைக்கப்பட்டு, மாநிலத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கீழ்க்காணும் சட்டங்கள் மற்றும் விதிகளை செயல்படுத்தி வருகின்றது.

- 1978 மற்றும் 1988 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.
- 1991 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1977 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம்.
- 1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.
- 1991 ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதி சட்டம்.
- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.
- 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுப் பொருட்கள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள்.
- 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்களை தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.
- 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

- ❖ 1999 ஆம் ஆண்டு மறுசுழற்சி பிளாஸ்டிக் தயாரிப்பு மற்றும் பயன்பாடு விதிகள்.
- ❖ 2000 ஆம் ஆண்டு நகர திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.
- ❖ 2000 ஆம் ஆண்டு ஒலி மாசு (சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சென்னையில் தலைமை அலுவலகத்துடன் இயங்குகிறது. சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், தாம்பரம், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, உதகமண்டலம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. மீதமுள்ள மாவட்டங்களிலும் புதிய மாவட்ட அலுவலகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் மற்றும் ஈரோடு ஆகிய 10 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், மணலி, தூத்துக்குடி மற்றும் கரூர் ஆகிய 3 இடங்களில் நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

### 2.1. மற்ற நிறுவனங்களுடனான தொடர்பு

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த செயலினை மேற்கொள்வதற்காக தொடர்புடைய பிற துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்கிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நகர திடக்கழிவு மேலாண்மைக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை அளித்து உதவி வருகிறது.

### 2.2. தொழிற்சாலை மாசு கண்காணிப்பு

தமிழ்நாட்டில் வேகமாக பெருகிவரும் தொழிற்சாலைமயமாக்கல் காரணமாக தொழிற்சாலை மாசினை தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த



முக்கியத்துவம் பெறுகிறது. எல்லா தொழிற்சாலைகளும் வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்காக தேவையான மாசு தடுப்பு சாதனங்களை அமைக்க வேண்டும். வாரியத்தின் கள அலுவலர்கள் அவர்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலைகளையும் ஆய்வு செய்து செய்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல் திறனை குறித்த கால இடைவெளிகளில் தொடர்ந்து ஆய்வு செய்கின்றனர். வாரியம், சீரிய முறையில் கண்காணிப்பதற்காக தொழிற்சாலைகளை அவற்றின் மாசு தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது.

### 2.3. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை

வாரியம் கழிவுநீருக்கான தரத்தினையும் சுற்றுப்புற காற்று தரம் மற்றும் புகை வெளியேற்ற தர அளவினையும் நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்குமுன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் முன் தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது. இசைவாணை வழங்கும்போது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகள் பூர்த்தி செய்ய வேண்டிய தரத்தினைக் குறிப்பிடுகிறது.

1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 30 தொழிற்சாலைகள்/ திட்டங்களும் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெறவேண்டும். 10–4–1997–ல் வெளியிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கைக்கான திருத்தத்தின்படி, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள 30 வகை தொழிற்சாலைகள்/ திட்டங்களுக்கு இசைவினை வழங்கும் வகையில் பொது மக்கள்

ஆலோசனைக் குழுவினை அமைக்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற்சாலைகள்/திட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பொது மக்கள் ஆலோசனைகள் மே, 1998-லிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. 31-03-2001 வரை இவ்வகையான 118 தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கு பொது மக்கள் ஆலோசனைகள் நடைபெற்றுள்ளது. பொதுமக்கள் ஆலோசனைக் குழுவிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் வாரியம் அதனை ஆராய்ந்த பின்னர் அந்தத் தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். வாரியத்தின் தடையில்லா சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையுடன், தொழில் முனைவோர் சுற்றுச்சூழல் அனுமதிக்காக இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தினை அணுக வேண்டும். இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி சமர்ப்பிக்கப்பட்டவுடன், தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை வாரியத்தால் வழங்கப்படுகிறது.

1982 ஆம் ஆண்டு முதல் 31-03-2001 வரை 2,695 இசைவாணையினை நீர்ச் சட்டத்தின்கீழும், 2,625 இசைவாணையினை காற்றுச் சட்டத்தின்கீழும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும், 18,796 இசைவாணையினை நீர்ச் சட்டத்தின்கீழும், 16,060 இசைவாணையினை காற்றுச் சட்டத்தின்கீழும் தொழிற்சாலைகள் இயங்குவதற்கும் வாரியம் வழங்கியுள்ளது.

### 2.4. புகார் மற்றும் சட்ட நடவடிக்கை

31-03-2001 வரை. வாரியம் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத தொழிற்சாலைகளுக்கு 16,316 முகாந்திர விளக்கம் கோரும் கடிதங்களையும், 3,210 மூடுதல் ஆணைகளையும் வாரியம் வழங்கியுள்ளது. மாசு தடுப்புச் சட்டத்தினை மீறிய தொழிற்சாலைகளுக்கு எதிராக திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு ) சட்டம், 1974-ன்கீழ் 321 வழக்குகளையும், திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981-ன்கீழ் 134 வழக்குகளையும் வாரியம் பதிவு செய்துள்ளது. நீர்ச் சட்டத்தின்கீழ் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள 242 வழக்குகளில், 74 தீர்ப்புகள் வாரியத்திற்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளன. காற்றுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள 120 வழக்குகளில், 79 தீர்ப்புகள் வாரியத்திற்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளன.



### 2.5. 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்கும் பொருட்டு ஒரு சிறப்புக் கண்காணிப்புப் பிரிவினை வாரியம் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ், 202 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

### 2.6. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது. இது வரை 48 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 32 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. மீதமுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்களின் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகை | உருவாக்கப் பட்ட திட்டங்கள் | செயலில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 23 திட்டங்கள் | 12 திட்டங்கள் |
| 2 | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 23 திட்டங்கள் | 18 திட்டங்கள் |
| 3 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் | 1 திட்டம் |
| 4 | மருத்துவமனைகள் (பொது நிலையம்) | 1 திட்டம் | 1 திட்டம் |
| | மொத்தம் | 48 திட்டங்கள் | 32 திட்டங்கள் |

மேற்கண்ட திட்டங்களில், பம்மல், சிட்கோ–ராணிப்பேட்டை, வாணியம்பாடி, உதயேந்திரம், ராணிப்பேட்டை, ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகைதோப்பு), பேரணாம்பட்டு (பகாளப்பள்ளி), மேல்விசாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜிநகர்) ஆகிய 12 இடங்களில் 576 தோல் தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிப்பாளையம், குன்னங்கல்பாளையம், ஆண்டிப்பாளையம், மன்னரை, அங்கேரிபாளையம் மற்றும் மாணிக்கபுரம்புதூர், கரூர் பகுதியில் கருப்பம்பாளையம், அமராவதி நகர், திருமாநிலையூர், சுக்காலியூர், இராமகிருஷ்ணாபுரம், கலங்கரை விளக்கு பகுதி, செல்லாண்டிப்பாளையம் மற்றும் ஆண்டான்கோயில், அய்யம்பேட்டை–முத்தையால்பேட்டை மற்றும் சேலம் ஆகிய 18 இடங்களில் 815 சலவை மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சேலத்தில் 64 மருத்துவமனைகளிலிருந்து வெளியேறும் நுண்ணுயிர் மருத்துவக் கழிவுகளுக்கான ஒரு பொது நிலையமும், கொடைக்கானலில் 90 உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் தொடங்கப்பட்டுள்ளன.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக தமிழக அரசு, திட்ட மதிப்பில் 25 சதவீதம் வரை மாநில அரசு மானியமாக வழங்குகிறது. இந்திய அரசு, திட்ட மதிப்பில் 25 சதவீதம் வரை மைய அரசு மானியமாக வழங்குகிறது. ஒவ்வொரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப்படும் விதம் மற்றும் திறன் ஆகியவற்றை ஆராய்ந்தபின், அரசிடம் இருந்து பெறும் மானியத் தொகையினை ஒவ்வொரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் வாரியம் வழங்குகிறது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இதுவரை 39 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூபாய் 19.63 கோடி மானியத் தொகையினை பெற்று அதில் 31–03–2001 வரையிலும் 30 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 15.89 கோடி மானியத் தொகையினை வழங்கியுள்ளது. தமிழக அரசு டால்கோ மூலமாக 9 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 6.77 கோடி மானியத் தொகையினை மாநில அரசு மானியமாக திட்ட மதிப்பில் 25 சதவீதம் வரை வழங்கியுள்ளது.





இந்திய அரசு இதுவரை ரூபாய் 20.99 கோடியினை மைய அரசு மானியமாக தமிழகத்திலுள்ள 41 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. இம்மானியத் தொகையினை இந்திய அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், டால்கோ மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (ஐ.டி.பி.ஐ.) மூலமாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இதுவரை ரூபாய் 12.99 கோடியினை மைய அரசு மானியத் தொகையாகப் பெற்று அதில் ரூபாய் 11.39 கோடியினை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு இதுவரை ரூபாய் 4.29 கோடியினை டால்கோ மூலமாகவும் ரூபாய் 3.47 கோடியினை ஐ.டி.பி.ஐ. மூலமாகவும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது.

## 2.7. தூய்மையான தொழில்நுட்பங்கள்

நீண்ட கால அடிப்படையில், வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தேவைகளை அடைய தூய்மையான தொழில்நுட்ப மேம்பாட்டின் மூலம் பூர்த்தி செய்ய முடியும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன், காஸ்டிக் சோடா, சிமென்ட், கந்தக அமிலம் மற்றும் பிற கரியமற்ற இரசாயனங்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள், மேலும் அனல் மின் நிலையங்கள் மற்றும் வெப்பக் கடினப்படுத்தும் நிலையங்கள் ஆகியன தூய்மையான தொழில் நுட்பத்திற்கு மாறியுள்ளன. உதாரணமாக, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரிலிருந்து குரோமியத்தையும், இலுமினைடிலிருந்து அமிலத்தையும், உர தொழிற்சாலையிலிருந்து அம்மோனியாவினையும் மீட்பு செய்வது அடங்கும். தொழிற்சாலைக் கழிவுநீர் வெளியேற்றாத நிலையினை அடைவதற்காக, 16 எரிசாராய தொழிற்சாலைகளில், 12 எரிசாராய தொழிற்சாலைகள், அவற்றின் கழிவுநீரை சர்க்கரை தொழிற்சாலைகளின் கழிவுமண்ணுடன் சேர்த்து உயிர் உரமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன. இதுபோன்ற நடவடிக்கையினை மற்ற 4 எரி சாராய தொழிற்சாலைகளும் எடுக்க உள்ளன. எரி சாராய தொழிற்சாலையில் ஏற்படும் துர்வாடை பிரச்சினை உட்பட சுற்றுச்சூழல் மாசினை கையாள இது ஒரு பெரிய சாதனை ஆகும். இருக்கின்ற 19 சிமென்ட் தொழிற்சாலைகளில் 12 பெரிய தொழிற்சாலைகள் தூசியினைக் கட்டுப்படுத்த எலக்டிரோஸ்டாடிக் பிரிசிபிடேட்டர் மற்றும் பை வடிப்பான்களை பொருத்தியுள்ளன. மற்ற தொழிற்சாலைகளும் இதுபோன்ற தடுப்பு நடவடிக்கைகளை அமைக்குமாறு

வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தூய்மையான தொழில் நுட்ப மேம்பாடு குறித்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியினை, பொருள் உதவி மற்றும் தொழில் நுட்ப உதவியினை அளித்து ஊக்கமளிக்கின்றது. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் , தொழிற்சாலை கழிவு நீரினை வாரியம் நிர்ணயித்துள்ள அளவினை அடைய சுத்திகரிப்பு நிலையத்தினை நிறுவியுள்ளது. இவற்றின் கழிவுநீரில் மொத்த கரைந்துள்ள திடப்பொருளைத் தவிர பொதுவாக அனைத்து தரமும் வாரியம் நிர்ணயித்த அளவுக்குள் காணப்படுகிறது. இப்பிரச்சினையினை எதிர்கொள்ள தொழிற்சாலைகள் எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறை உட்பட மேல்நிலை சுத்திகரிப்பினை அமைக்க வலியுறுத்தப்படுகின்றன. இது அதிக செலவினை ஏற்படுத்தும் சுத்திகரிப்பு முறையாகும்.

மாசு உருவாவது மற்றும் அதன் பாதிப்பினைக் குறைக்கும் வகையில் தூய்மையான தொழில்நுட்பத் திறனை வளர்ப்பதில் வாரியம் ஈடுபட்டுள்ளது. இதில் விளக்கத் திட்டமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல் உடைக்கும் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள பகுதியில் ஒரு கல் உடைக்கும் தொழிற்சாலையில் தூசினைக் கட்டுப்படுத்தும் மாதிரி அமைப்பும், சேலம் மாவட்டத்தில் ஒரு சவ்வரிசி தொழிற்சாலையில் மாதிரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. வாரியம்., தேசிய உற்பத்தி குழுமத்துடன் இணைந்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரி தொழிற்சாலைகளில் காற்று மாசு தடுப்பு சாதனங்களுக்கான, நம்பகமான மற்றும் சிக்கனமான வழிமுறைகளை உருவாக்குவதற்கான திட்டத்தினை ரூபாய் 1.455 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது. பாதரசம் மற்றும் குளோரினை மூலப்பொருட்களாக பயன்படுத்தும் தொழிற்சாலைகள் இதற்கு மாற்றான தூய தொழில்நுட்ப மேம்பாட்டினைக் கண்டறிய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.8. அபாயகரமான கழிவுகள் மேலாண்மை

அபாயகரமான கழிவுகளின் சேமிப்பு, எடுத்துச்செல்லுதல், பெறுதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றல் ஆகியவற்றின் செயல்பாட்டினை வாரியம் திறம்பட கண்காணித்து வருகின்றது. 31–03–2001 வரை 1,170 தொழிற்சாலைகள், அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி, 1989–ன்கீழ் கண்டறியப்பட்டு 1,160 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாரியம், அபாயகரமான கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்காக 7 இடங்களைத் தெரிவு



செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம்–மணலூர் கிராமத்தில் ஒரு இடத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம்–சிறுசேரி கிராமத்தில் ஒரு இடத்திலும், நிலையங்களை தேர்வு செய்வதற்கான சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் அபாய நேர்வு மதிப்பீடு ஆய்வு, தேசியச் சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி கழகத்தினரால் முடிக்கப்பட்டுள்ளது. சிறுசேரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சிப்காட் நிறுவனத்தால் தகவல் தொழில்நுட்ப மையம் மற்றும் பெண்களுக்கான நுண்ணுயிர் தொழில்நுட்ப மையம் ஆகியவை நிறுவுவதற்காகக் கையகப்படுத்தி உள்ளனர். இதற்கு மாற்று இடமாக காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்திலுள்ள ஓரிடம் கண்டறியப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளபடி வாரியம், 25 அபாயகரமான இரசாயன பொருட்களின் தனிப்பட்ட சேமிப்பு கிடங்குகளைக் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் தொடர் கண்காணிப்பினால் 1991 ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதிச் சட்டத்தின்கீழ், 73 தொழிற்சாலைகள் அபாய நேர்வு காப்பீடுகளை எடுத்துள்ளன.

## 2.9. காற்றுத் தன்மை

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கழிவுகளினாலும் மற்றும் பெருகிவரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை பாதிப்படைகிறது. 1981 ஆம் ஆண்டின் காற்றுச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3.0. சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிப்பு

தேசிய சுற்றுப்புற காற்றின் தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தின்கீழ், சென்னை(3 இடங்கள்), கோயம்புத்தூர்(3 இடங்கள்), தூத்துக்குடி(3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுப்புற காற்றின் தன்மையை கண்காணித்து வருகின்றது. சென்னை மாநகரத்தில் சென்னை சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு திட்டத்தின் மூலம் 5 நிலையங்களை வாரியம் தனது நிதியின் மூலம் அமைத்து சுற்றுப்புற காற்றின் தன்மையினை குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப்பகுதிகளில்

கண்காணிக்கிறது. இந்தக் கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத்தர அளவுகள் ஒவ்வொரு வாரமும் முன்னோடி நாளிதழில் வெளியிடப்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் நான்கு இடங்களில் சுற்றுப்புற காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்துள்ளது.

முக்கிய தொழிற்சாலை வளாகங்கள், குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலை குழுமங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், 6 தொடர் காற்றுத்தரக் கண்காணிப்பு நிலையங்களை கடலூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை, மணலி–சென்னை, இராயபுரம்–சென்னை மற்றும் கத்திவாக்கம்–திருவள்ளுர் ஆகிய இடங்களில் சுற்றுப்புற காற்றில் உள்ள மாசு பொருட்களான மிதக்கும் துகள்கள், கரியமில வாயு, நைட்டிரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, அம்மோனியா, குளோரின், ப்ளோரின் முதலியனவற்றை மதிப்பிடவும், தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல்முறையினை மதிப்பீடு செய்வதற்காகவும் அமைத்துள்ளது. மேலும் நிர்ணயித்த தரத்தினை விட மாசு அதிகமாகும்போது காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்த வாரியம் தொழிற்சாலையினை அறிவுறுத்தி வருகின்றது. அதிகமாக மாசு படுத்தும் தொழிற்சாலைகளை தொடர் காற்றுக் கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, தொழிற்சாலையினை சுற்றியுள்ள காற்றின் தரத்தினைக் கண்காணிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய காற்றுக் கண்காணிப்பு அமைப்புகளை தொழிற்சாலைகள் நிறுவியுள்ளன.

### 3.1. வாகனப் புகை கண்காணிப்பு

நகரின் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் வாயுக்கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாகனப்புகை சோதனை செய்யும் மையங்கள் சென்னை மாநகரில் கிண்டி, அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய மூன்று இடங்களில் வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு 1–5–1992 முதல் செயல்பட்டு வருகின்றன. இதனைத்தவிர 102 தனியார் நிலையங்கள், சென்னையில் வாகனப் புகையினை சோதனை செய்ய போக்குவரத்துத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் திண்டுக்கல், பழனி, உதகமண்டலம், காட்டேரி, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் வாகனப்புகைக் கண்காணிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது.





2000–2001 ஆம் ஆண்டில் 45,292 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 1,767 வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குட்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. சென்னைப் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் வாகனங்களின் புகை அளவிற்கான சோதனையினை வாரியம் மேற்கொண்டு புகைமானியினை இப்போக்குவரத்துக் கழகத்திற்கு வாரியம் வழங்கியுள்ளது .

### 3.2. நீரின் தன்மை கண்காணிப்பு

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவு நீராலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீராலும் நதிகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோர் சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும் பொருட்டு நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாக சேகரித்து கண்காணித்து வருகிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்தளவில் வெளியேற்றப்படும் கழிவுநீர், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களை தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரி ஆற்றில் திருச்சிராப்பள்ளி, பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம் மற்றும் குமாரப்பாளையம் ஆகிய இடங்களில் மாசு தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிற நதிகள் மற்றும் நீராதாரங்களும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ளன.

### 3.3. நீரின் தரக் கண்காணிப்புத் திட்டம்

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம் மற்றும் முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றிலும் மற்றும் ஆற்றுப் படுகையிலும், முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கண்காணிக்கிறது. இதுபோல் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் காவிரி (16 இடங்கள்), தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய 3 முக்கிய ஏரிகள் வாரியத்தால் கண்காணிக்கப்படுகின்றன.

[2001 செப்டம்பர் 4

### 3.4. கடற்கரைப் பகுதிகளின் சுற்றுச்சூழலை நிர்வகித்தல்

தமிழ்நாடு சுமார் 1000 கி.மீ தொலைவிற்கு கடற்கரையைக் கொண்டுள்ளது. அளவிற்கு அதிகமாக அவற்றைப் பயன்படுத்துவதிலிருந்து பாதுகாக்கும் வகையில், உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு நுட்பமான பகுதிகள், அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகள் மற்றும் ஓரளவு சுற்றுக்சூழல் குலையாத பகுதிகள் ஆகியவற்றின் தன்மைகளைக் கருத்தில் கொண்டு இக்கடற்கரையோரப் பகுதிகள் முறைப்படுத்தப்பட்ட கடற்கரை மண்டலம் I, II மற்றும் III என வகைப்படுத்தப்பட்டு உள்ளன. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆறுகள் சேரும் இடம் மற்றும் 7 அதிமுக்கிய இடங்களையும் கடலோரப் பகுதிகளில் கண்டறிந்துள்ளது. இப்பகுதிகள், கடலில் வெளியேற்றப்படும் மாசு அளவினை மதிப்பிடவும், அவற்றைக் களைவதற்கான உகந்த முறைகளை மேற்கொள்ளவும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

### 3.5. மழைநீர் சேமிப்பு

நீர் வளம் முக்கியமான மற்றும் பற்றாக்குறையான ஒரு வளம். நீரினை சேமிக்க மழை நீர் சேமிப்பு ஒரு முக்கியமான வழிமுறையாகும். நகர்ப புறங்களில் குடியிருப்புகள் மற்றும் வர்த்தகக் கட்டடங்கள் மழைநீர் சேமிப்பு செய்வதற்கான வழிமுறைகள் நிறுவ வலியுறுத்தப்பட்டு வருகின்றன. புதிய கட்டடங்களுக்கு அனுமதி வழங்கும் போது இவ்வகையான மழைநீர் சேமிப்பு செய்வதற்கான வழிமுறைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது. கிராமப்புறங்கள் மற்றும் பல நகரங்களில், குட்டைகள், ஏரிகள், குளங்கள், கோவில் குளங்கள், சிறு ஏரிகள் மற்றும் இதர நிலப்பரப்பு நீர்நிலைகள் பல நூற்றாண்டுகளாக உள்ளன. துரதிஷ்டவசமாக, கடந்த பல ஆண்டுகளில் இவ்வகையான நீர்நிலைகள் பயன்பாடற்று உள்ளன. பல நீர்நிலைகள் ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாகி உள்ளன. உள்ளாட்சி அமைப்புகளின் திறன் குறைந்த செயல்பாடும், இந்நீர்நிலைகளில் பராமரிப்பில் அவற்றிற்கு அக்கறை இல்லாது போனதும் இவற்றின் சீரழிவுக்குப் பங்களித்துள்ளன. பொதுப்பணித் துறை, இந்து அறநிலையத் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை மாநகர குடிநீர் வழங்கல் வாரியம் ஆகிய துறைகள் இந்நீர்நிலைகளை முறையாக பேணி நிலத்தடி நீர் மேம்பட வழிவகை செய்ய வேண்டும். சிறு தடுப்பணைகள் அமைக்கப்படலாம். ஆக்கிரமிப்பிலிருந்தும் மையகப்படுத்துதலிலிருந்தும் நன்செய் நிலங்கள் பர்துகாக்கப்பட வேண்டும்.



2001 செப்டம்பர் 4]

### 3.6. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

நுகர்வுப் பண்பாடு விரைவாகப் பரவிவருவதால், பயன்படுத்திய பொருட்களைப் பாதுகாத்து மீண்டும் பயன்படுத்தும் பாரம்பரியமும், இயற்கை வளங்களைப் பேணும் மரபும் விரைவாக மறைந்து வருகின்றன. நம்மிடையே பொருட்களைப் பயன்படுத்தி தூக்கியெறியும் கலாச்சாரம் தோன்றிவிட்டது. இதில் அபாயகரமானதாக இருப்பது பயன்படுத்தி தூக்கியெறியப்படும் வகையான பிளாஸ்டிக் பொருட்களை அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுவது ஆகும். பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்தப்படுவதால் விளையும் அதிக தீமைகளை உணர்ந்து முன்னேறிய நாடுகள் பிளாஸ்டிக் பொருட்களில் சில வகையின் தயாரிப்பை தடைசெய்ததோடு மற்ற வகையின் பயன்பாட்டினையும் கட்டுப்படுத்தியுள்ளன.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 1999 ஆம் ஆண்டு மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் பயன்பாடு விதிகளை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் 50-க்கும் மேற்பட்ட நகராட்சிகள் மற்றும் சில மாநகராட்சிகளில் ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுகள், பிளாஸ்டிக் கோப்பைகள், பிளாஸ்டிக் டம்ளர்கள் மற்றும் பிளாஸ்டிக் மேசை விரிப்புகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மாமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### 3.7. மருத்துவ நுண்ணுயிர் கழிவுகள் மேலாண்மை

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட, 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இதுவரை 242 அரசு மருத்துவமனைகளையும், 1405 தனியார் மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. இந்திய மருத்துவ சங்கம் மற்றும் அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகள் அனைத்தும் உரிய கால நடவடிக்கையினை மேற்கொண்டு மருத்துவ கழிவுகளை கையாள பொது அமைப்புகள் ஏற்படுத்த இடம் கண்டறிய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. சில இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மருத்துவக் கழிவுகளை கையாளுவது தொடர்பான பயிற்சியினை வாரிய அலுவலர்கள், இந்திய

[2001 செப்டம்பர் 4

மருத்துவ சங்க உறுப்பினர்கள், மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு அளித்துள்ளது. மனித உறுப்புகள், திசுக்கள் நீங்கலாக மற்ற மருத்துவக் கழிவுகளை எரிக்கக்கூடாது என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்டிப்பாக அறிவித்துள்ளது. மருத்துவக் கழிவுகளை வெளியேற்றஅதி அழுத்தக் கொதிப்பானைப் (autoclave) பயன்படுத்தியோ அல்லது நிலத்தில் புதைத்தல் முறையிலோ வெளியேற்றுவதை வாரியம் ஊக்குவிக்கிறது. மருத்துவ மனைகளிலிருந்து வெளியேறும் நுண்ணுயிர்க் கழிவுகளை 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளில் கூறப்பட்டுள்ள பிரித்தல், சேகரித்தல், சேமித்தல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் ஆகியவற்றை எவ்வாறாக பின்பற்ற வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரி மருத்துவமனை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.8. நகர திடக் கழிவுகள் மேலாண்மை

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக்கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும் நகரப்பகுதிகளில் விஞ்ஞான பூர்வமாக திடக்கழிவுகளைப் பிரித்து கையாண்டு வெளியேற்றுவது அவசரத் தேவையாகிறது. இதுகுறித்து தமிழகத்தில் சுற்றுலா மற்றும் யாத்திரிக தளங்களான கொடைக்கானல், பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மற்றும் மண்டபம் ஆகிய பகுதிகளுக்கான ஒரு சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்கு ரூபாய் 23.6 இலட்சம் வாரிய நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தேர்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் தொடக்க அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளார்கள். அவ்வறிக்கை உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவுகளை மேலாண்மைப்படுத்தும் திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.

நகர திடக் கழிவுகளை கையாள தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்ற சில முனைப்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. பொதுமக்களிடையேயும் உள்ளாட்சி நிறுவனங்களிடமும் 2000 ஆம் ஆண்டு நகர திடக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் பற்றிய விழிப்புணர்வை வாரியம் ஏற்படுத்தி வருகிறது. நகர திடக்கழிவுகளை மேலாண்மை செய்யும் முறைகளைப்பற்றி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் நகராட்சிகளின் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு திடக்



2001 செப்டம்பர் 4] .

கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலேயே பிரிப்பதின் அவசியத்தையும், ஈரமான கழிவுகளை உரமாக்கவும், மறு சுழற்சி செய்யத்தக்க கழிவுகளை மறுசுழற்சி செய்யவும், மக்காத மற்றும் தீங்கான கழிவுப் பொருட்களை குறைக்கவும் வாரியம் உணர்த்தி வருகின்றது.

## 4.0. வாரியத்தின் பிற பணிகள்

### 4.1. சுற்றுப்புறச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை வளர்ச்சி செய்யும் பணியில் ஈடுபடும்பொருட்டு, வாரியம் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிப் பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. தோல்பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீரில் உள்ள கனிம, கரிம டேனின் ஆகியவற்றைக் குறைப்பதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடன், நுண்ணுயிரிகளைக் கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வது பற்றிய ஆய்வறிக்கையினைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக சில. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் மற்றும் மாசு தடுப்பு மற்றும் தூய்மையான தொழில்நுட்ப மேம்பாடு பணிகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு வாரியம் தனது நீர் மேல்வரி நிதியிலிருந்து ஆராய்ச்சி நிதியை உருவாக்கி உதவி வருகின்றது. நிதி உதவிக்கு உகந்த கருத்துருக்களை ஆராயவும் தெரிவு செய்யவும் ஒரு குழுவினை வாரியம் உருவாக்கியுள்ளது. இதுவரை ரூபாய் 45.38 இலட்சம் மதிப்பில் 9 திட்டங்களுக்கு வாரியம் அனுமதியளித்துள்ளது.

### 4.2. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

தொழிற்சாலை பணியாளர்கள், வாரிய ஊழியர்கள், உள்ளாட்சித் துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள் ஆகியோரின் தேவைக்கேற்ப மாசு தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுபடுத்துவதில் திறமை அடைவது ஆகிய நோக்கத்திற்காக டென்மார்க் நாட்டிலிருந்து ரூபாய் 4 கோடி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை, தனது தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ளது. 1995 டிசம்பர் மாதத்திலிருந்து மார்ச் 2001

[2001 செப்டம்பர் 4

வரை, சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் 167 பயிற்சிகளையும், 4,707 நபர்களுக்கு பயிற்சியினையும் அளித்துள்ளது.

### 4.3. ஓசோன் கண்காணிப்புப் பிரிவு

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள ஓசோன் கண்காணிப்புக் குழு, தமிழ்நாட்டில் ஓசோன் சிதைக்கும் பொருட்களை உற்பத்தி செய்யும் மற்றும் உபயோகிக்கும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அவற்றின் இன்றைய தேவைகளையும் எதிர்கால அளவினையும் கணக்கிடும் ஆய்வினை மேற்கொண்டது. 1276.28 டன் ஓசோன் சிதைக்கும் பொருட்களை உபயோகித்திருக்கும் 55 தொழிற்சாலைகளை வாரியம் கண்டறிந்து, அவை மாற்றுப் பொருட்களை உபயோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைக் கொண்டு ஓசோனைச் சிதைக்கும் பொருட்களுக்கு மாற்று அறிவதற்கு ஒரு அடிப்படையாக இந்த ஆய்வு அமையும்.

### 4.4. அரசு சாரா அமைப்புகளின் குழு

அரசு சாரா அமைப்புகளின் குழு, சென்னையில் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியங்கள் மற்றும் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் அரசு சாரா அமைப்புகளிடையே ஒரு தொடர்பினையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் ஒரு அமைப்பாகவும் இக்குழு செயல்படுகிறது.

### 4.5. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சென்னையில் பெரியார் அறிவியல் தொழில்நுட்பத் திடலில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கம், சுற்றுச்சூழல் சம்பந்தமான ஓவியப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி ஆகியவற்றை நடத்துகின்றது. ஒளி–ஒலி சாதனங்கள் மூலமும் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றது. மேலும் வாரியம், தனது தலைமை அலுவலகத்தில் ஒரு மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது. வாரியம், வாகனப்புகை மாசு தடுப்பு, ஒலி மாசு தடுப்பு, அபாயகரமான கழிவுகள் மேலாண்மை, திடக்கழிவுகள் மேலாண்மை, மருத்துவக் கழிவு மேலாண்மை, ஓசோன் மண்டலப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.



2001 செப்டம்பர் 4]

வரைமுறையற்ற உபயோகம் மற்றும் வெளியேற்றப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உணர்ந்து, பிளாஸ்டிக் பைகள் மற்றும் குப்பிகளின் பயன்பாட்டினை குறைக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பல்வேறு முகாம்களை வாரியம் நடத்தி உள்ளது.

வானொலியில் சுற்றுச்சூழல் பற்றிய 'பசுமை நிறைந்த உலகத்திலே' என்னும் நிகழ்ச்சி வானொலி மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் போன்ற தன்னார்வு நிறுவனங்களோடு இணைந்து 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ஒலிபரப்பப்படுகிறது. சுற்றுச்சூழல் பிரச்சினைகளான பிளாஸ்டிக் கழிவுகள் தடுப்பு, திடக் கழிவுகள் மேலாண்மை, வாகனப்புகை, மழைநீர் சேமிப்பு முதலியனவை இந்நிகழ்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும், இந்நிகழ்ச்சி சுமார் 325 சுற்றுச்சூழல் மையங்களின் பங்கேற்புடன் தமிழகத்தில் 30 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

## 5.0. திட்டப் பணிகள்

### 5.1. பசுமை போர்வைத் திட்டம்

நகரப் பகுதிகளில் காற்று மற்றும் ஒலி மாசினைத் தணிப்பதற்காகவும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும் தமிழ் நாட்டில் ஒரு பசுமை போர்வைத் திட்டத்தை மாநகராட்சிகளில் செயல் படுத்துவதற்காக ரூ.455.70 இலட்சம் மதிப்பீட்டில்தொடங்கப்பட்டது. இதில் மத்திய அரசு ரூ. 400 இலட்சம் உதவித் தொகை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சென்னை, மதுரை, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் 2,94,000 மரக்கன்றுகள் நட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 31–3–2001 வரை 2.39 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இத்திட்டத்தினை விரிவுபடுத்தி நகராட்சிப் பகுதிகளில் பசுமைப் போர்வையினை ஏற்படுத்த தமிழ்நாட்டில் 339 தொழிற்சாலைகள் ரூ.70.47 இலட்சம் நிதி வழங்கியுள்ளன. இந்தத் திட்டமானது அனைத்து (102) நகராட்சிகளிலும் மத்திய அரசின் மூலம் ரூ. 76.5 இலட்சமும், வாரியத்தின் மூலம் ரூ. 25.5 இலட்சமும் வழங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் நகராட்சிப் பகுதிகளில் இதுவரை 90,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், வருகின்ற மழைக்காலங்களில் கூடுதலாக மரக்கன்றுகள் நடப்பட உள்ளன.

### 5.2. சுற்றுச்சூழல் வரைபடம் தயாரித்தல்

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவியுடன் சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டத்தினை வாரியம் செயல்படுத்தி வருகின்றது. இதன் முதல் கட்டமாக திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கப்பட்டது. 2000–2001 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

### 5.3. அயல்நாட்டு உதவித் திட்டங்கள்

(1) வேலூர் பகுதியில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரை மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறினை ஆராய அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் 24–11–2000 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்கு 1,80,100 அமெரிக்க டாலரினை(சுமார் ரூ. 81.00 இலட்சம்) நிதி உதவியாக இந்நிறுவனம் அளிக்கிறது.

(2) இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆசிய நகரங்கள் உயிரினச்சூழல் திட்டத்தினை 28–11–2000 அன்று தொடங்கியுள்ளது. வேலூர் மாவட்டம் மற்றும் சென்னை பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொழிற்சாலை மாசு தடுப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் கொள்கைகள், அனுபவங்கள் மற்றும் தொழில் நுட்பங்களில் பரிமாற்றங்களை இத்திட்டம் ஏற்படுத்தும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 4,95,040 யூரோ (சுமார் ரூபாய் 214 இலட்சம்) ஆகும்.

(3) கனடா பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன், சலவை மற்றும் சாய தொழிற்சாலைகளுக்கான தூய தொழில்நுட்ப மேம்பாடு மேற்கொள்ளப்பட உள்ளது. மொத்த கரைந்துள்ள திடப்பொருட்களை, எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையின் மூலமாக குறைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.



### 5.4. பசுமை விருதுகள்

சீரிய பணியின்மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினை தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு பசுமை விருதுகளை வழங்க அரசு உத்தேசித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் தங்களது தனி ஆர்வப் பங்களிப்பாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைதகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு இவ்விருது வழங்கப்படும்.

### 6.0 முடிவுரை

வன வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்துதல் தரிசு நிலங்களை உரிய அளவுக்கு பயன்படுத்துதல், நீர்வரத்துப் பகுதிகளை மேம்படுத்துதல். போன்ற உயிரின வாழ்க்கைச் சூழல் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளிலும் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். சுற்றுச்சூழலைப் பேணிப் பாதுகாப்பதில் இந்த அரசு முழுமையான ஈடுபாடு காட்டும்.

2001 செப்டம்பர் 4]

## இணைப்பு-II

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 37– சுற்றுச்சூழல்

### தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நமது நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக அறிமுகப்படுத்தியதன் மூலம் நமது நாட்டின் பொருளாதார அமைப்பு நவீனப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் உற்பத்தி உயர்வு, வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். இம்முன்னேற்றக் கொள்கையாலும் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற பேரார்வத்தாலும் நமது எரிசக்தியின் தேவை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கின்றது. நாம் நமது தேவைக்கு நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, விறகு போன்ற பல தரப்பட்ட எரிசக்தி ஆதாரங்களை உபயோக்கப்படுத்துகிறோம். மின்சாரம் என்பது ஒரு வகை எரிசக்தி. நமது தேவைக்கேற்ற அளவிற்கு, தேவைப்பட்ட இடத்திற்கு கொண்டு சென்று நாம் உபயோகிக்கக்கூடியது. உலகம் முழுமையும் தற்போது மின்சார உற்பத்திக்கு பெருமளவு நிலக்கரியைச் சார்ந்தே உள்ளது. வரும் ஆண்டுகளிலும் நிலக்கரி மற்றும் எண்ணெய் மூலம் மின் உற்பத்தி செய்வது நிலையாக தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இவைகளை அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி செய்வதால் நமக்கு ஏற்படும் பல இடர்பாடுகளையும், அதாவது வேகமாகக் குறைந்து வரும் நிலக்கரி இருப்பு, நிலக்கரியின் தரக்குறைவு, நிலக்கரி மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்படும் உயர்வு, அன்னியச் செலாவணி, போக்குவரத்து செலவினம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு போன்ற நிலைமைகளையும் நாம் சமாளித்தாக வேண்டும். போன்ற நிலைமைகளையும் நாம் சமாளித்தாக வேண்டும்.

இத்தருணத்தில் புதுப்பிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள் மரபு சார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஓர் முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களை பயன்படுத்துவதன் வாயிலாகத் தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரிய சக்தியை

[2001 செப்டம்பர் 4

அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவைகள் என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும் இவ்வளங்கள் குறைவதே இல்லை.

தமிழ்நாடு அரசு மேற்கண்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பை மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் அதற்கான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தவும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி தொடர்பான மாநில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் சார்பு அமைப்பாக மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்துகின்ற திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்துகின்றது.

தொடக்கத்திலிருந்தே தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், காற்று சக்தி, சூரிய சக்தி, உயிரியல் சக்தி ஆகியவற்றைச் சார்ந்த பல்வேறு முன்னோடி திட்டங்களை போற்றத்தக்க வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட இடையறாத முயற்சிகளால் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய அடிப்படை கருத்து இம்மாநிலத்தில் நன்கு வேரூன்றிக் கீழ்க்கண்ட பலன்களை அடைந்துள்ளது.

அ. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு தரமான மின் உற்பத்தி செய்வதற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெருமளவு முன்னேற்றமும் செய்யப்பட்டுள்ளது.

ஆ. சூரிய ஒளி சுடு நீர் அமைப்புகள், சூரிய ஒளி இறைப்பான்கள் சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி தெரு விளக்குகள், சூரிய சக்தி மூலம் காற்றைச் சூடாக்கும் அமைப்புகள், சாண எரிவாயு கலன்கள், தாவர எரிவாயு இயந்திரங்கள் மற்றும் நீர் இறைக்கும் காற்றாலைகள் போன்ற சாதனங்களின் உபயோகத்தினை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இ. ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவைகள் மூலம் கிராமப்பகுதிகளில் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி பற்றிய கருத்தையும் பயன்களையும் பிரச்சாரம் செய்ய தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தற்போது முனைந்து செயல்படுத்தும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**சூரிய வெப்ப சாதனங்கள்**

**சூரிய வெப்ப சூடுநீர் அமைப்புகள்**

சூரிய வெப்ப சுடு நீராக்கி தொழில் நுட்பம் நன்கு வளர்ந்து வாணிபச் சந்தையில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. பயன்படுத்துவோரின் தேவைக்கேற்ப பல வடிவ அமைப்புகளிலும் கொள்ளளவுகளிலும் இவ்வமைப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

மாநில மற்றும் மைய அரசுகளின் பல்வேறு மானியத் திட்டங்களின்கீழ் இதுகாறும் 3122 வீட்டு உபயோகத்திற்கான சுடு நீர் அமைப்புகளும் (100 லிட்டர் அளவு), 348 பெரிய அளவிலான சுடு நீர் அமைப்புகளும் (1000 லிட்டர் அளவு) நிறுவப்பட்டுள்ளன. பெரிய அளவிலான சூரிய சுடு நீர் அமைப்புகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய சூரிய சுடுநீர் அமைப்புகளை (2000 லிட்டர் அளவு) மாநில அரசின் மருத்துவமனைகளிலும், மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் நிறுவ தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு நிதியுதவி வழங்கி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிறுவி வருகிறது. இதுகாறும் இத்தகைய சூடு நீர் அமைப்புகள் 14 மாநில அரசு மருத்துவமனைகளிலும் 8 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதிகளிலும் மற்றும் ஒரு விருந்தினர் மாளிகையிலும் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வமைப்புகளிலிருந்து பெறப்படும் சுடு நீர் மருத்துவமனை நோயாளிகளுக்கும், விடுதி மாணவர்களுக்கும் பெரிதும் பயனளிக்கிறது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2001–2002 ஆம் ஆண்டில் சூரிய வெப்ப சுடு நீர் அமைப்புகள் நிறுவக் கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்பட உள்ளது.

1. தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான 1000 எல்.பி.டி 8 கலெக்டர்களுடன் சூரிய வெப்ப சுடு நீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.20,000/– வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.

[2001 செப்டம்பர் 4

2. வீட்டு உபயோகத்திற்கான சூரிய வெப்ப சுடு நீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.3000/– வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.

### சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகள்

சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் தேயிலை, பழங்கள், தானிய வகைகளை உலர வைப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகள் சூரிய சக்தியை பெற்று, அதனை வெப்ப சக்தியாக மாற்றி காற்றின் வெப்பத்தை 65–70 டிகிரி வரை அதிகரிக்க செய்கின்றன. இத்தகைய அமைப்புகள் காற்றின் வெப்பத்தை சூரிய சக்தி மூலம் அதிகரிப்பதால் 25 விழுக்காடு எரிபொருள் சிக்கனத்திற்கு வழி வகுக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 14 சூரிய வெப்ப சுடு காற்று அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. தற்பொழுது இத்திட்டத்திற்கு மானியம் வழங்கப்படுவதில்லை.

### சூரிய ஒளி மின் சாதனங்கள்

சூரிய ஒளி மின் தொழில் நுட்பத்தில் சிலிகான் செல்கள் மூலமாக சூரிய ஒளியிலிருந்து நேரடியாக டி.சி. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த டி.சி. மின்சாரத்தை நீர்ப் பாசனத்திற்காக தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தலாம் அல்லது சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட டி.சி. மின்சாரத்தை மின் கலங்களில் சேமித்து ஏ.சி. மின்சாரமாக மாற்றி விளக்குகளையும், மின் விசிறிகளையும் இயக்க உபயோகிக்கலாம். சூரிய ஒளி மின் தொழில் நுட்பம் மூலம் மின்சாரத்தை அதிக அளவில் தயாரித்து மின் வாரியக் கட்டமைப்பில் செலுத்தலாம். எனவே சூரிய ஒளி மின் சாதனங்களின் உபயோகம் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும். சூரிய ஒளி மின் நீரேற்றிகள், லாந்தர்கள், தெருவிளக்குகள், சிறிய அளவிலான மின்சக்தி ஜெனரேட்டர்கள் ஆகிய சாதனங்கள் வர்த்தக ரீதியில் தற்போது பல இடங்களில் விற்கப்படுகின்றன.

### சூரிய ஒளி மின் பம்பு

சூரிய ஒளி மின் பம்பு என்பது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து பம்பை இயக்கித் தண்ணீரை இறைக்கக்கூடிய ஒரு சாதனம். 900 வாட் திறன் உள்ள ஒரு பம்பு ஒரு நாளைக்கு 50000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்க வல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்.



2001 செப்டம்பர் 4]

தமிழ்நாட்டில் மொத்தம் 4,80,000 விவசாயிகள் பம்புகளுக்கு மின்சாரம் பெற காத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிற்கு 40000 பம்புகளுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்குகிறது. ஆண்டுதோறும் மிக அதிக அளவில் பதிய பம்பு செட்டு இணைப்பிற்கான விண்ணப்பங்கள் மின் வாரியத்தால் பெறப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சூரிய ஒளி பம்புகள் சிறு விவசாயிகளுக்கு நம்பகமான ஒரு மாற்றாக அமையும்.

சூரிய ஒளி பம்புகள் நிறுவுவதை ஊக்கப்படுத்துவதற்காக மைய அரசும் மாநில அரசும் கணிசமான அளவில் மானியங்களை வழங்குகின்றன.

சூரிய ஒளி பம்பு பயன்படுத்துபவர்களுக்கு மத்திய அரசு ஒரு வாட்டிற்கு ரூ.110/– வீதம், அதிகபட்சமாக ஒரு பம்புக்கு ரூ.2,50,000/– வரை மானியம் அளிக்கிறது. 900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2,24,000/–. அதில் ரூ.99,000/– மத்திய அரசு மானியமாக வழங்கப்படுகிறது. மாநில அரசு கூடுதல் மானியமாக ஒரு பம்பிற்கு ரூ.59,000/– வீதம் 1997–98, 1998–99 மற்றும் 1999–2000 ஆம் ஆண்டிற்கு வழங்கியுள்ளது. இது தவிர, இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி நிறுவனம், பயனாளிகளுக்கு குறைந்த வட்டியில் மானியம் போக மீதி தொகைக்கு கடன் வழங்குகிறது.

விவசாயத்திற்காக நமது மாநிலத்தில் இதுவரை 195 சூரிய ஒளி பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 பம்புகளும், கோயம்புத்தூரில் 24 பம்புகளும், கடலூர் மாவட்டத்தில் 6 பம்புகளும் சேலம் மாவட்டத்தில் 9 பம்புகளும், ஈரோடு மாவட்டத்தில் 10 பம்புகளும் மீதியுள்ளவை மற்ற 14 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

### சூரிய ஒளி லாந்தர்

சூரிய ஒளி லாந்தர் 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தைத் தரக் கூடிய ஒரு சாதனமாகும். இதைத் தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். ஒரு நாளைக்கு 4 மணி நேரம் எரியும். எளிதாக எடுத்துச் செல்ல முடிவதால் இதனை வீட்டு உபயோகத்திற்கும் வெளி உபயோகத்திற்கும் எடுத்துச் செல்லலாம். இது மின் வசதி செய்யப்படாத இடங்களிலும் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படக்கூடிய இடங்களிலும் மிகவும் உபயோகமாக இருக்கும்.

[2001 செப்டம்பர் 4

ஒவ்வோர் ஆண்டும் மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் தனி நபர்களுக்கும், வணிகம் சாராத நிறுவனங்களுக்கும் மானியத் திட்டத்தின்கீழ் சூரிய ஒளி விளக்குகளை விற்க இலக்கு நிர்ணயம் செய்கிறது. ஒரு விளக்கின் விலை ரூ.4,000/– மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ.1300/–.

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 7898 சூரிய ஒளி லாந்தர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு மானியத்துடன் கூடுதலாக ரூ.500/– மாநில அரசு மானியம் வழங்கி 3000 சூரிய ஒளி லாந்தர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சூரிய ஒளி தெரு விளக்குகள்

11 வாட் திறனுள்ள சிறிய குழல் விளக்கினை உடைய சூரிய ஒளி தெரு விளக்கு தனித்து இயங்கக் கூடியது. இது 12 மணி நேரம் எரியும். அது 37 வாட் திறன் கொண்ட இரண்டு சூரிய ஒளி மாட்யூல்கள், 11 வாட் திறன் உள்ள சிறிய குழல் விளக்கு மற்றும் மின்னணு சுற்றுக்களை உடையது. ஒரு விளக்கின் விலை சுமார் ரூ.30,000/– தமிழ்நாடு அரசு ஒரு விளக்கிற்கு ரூ.12,000/– மானியமாக வழங்குகிறது. தமிழ்நாடு அரசு 20 சூரிய ஒளி தெரு விளக்குகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. அனைத்து 20 விளக்குகளும் நிறுவப்பட்டுவிட்டன.

ஒவ்வொரு சூரிய ஒளி தெரு விளக்கிற்கும் ரூ.12000/– வீதம் மானியம் வழங்கி 40 சூரிய ஒளி தெரு விளக்குகள் நிறுவ ஒப்பளிப்பு வழங்கியது. அந்த விளக்குகள் முழுவதும் நிறுவப்பட்டுவிட்டன. இதுவரை மொத்தம் 1225 சூரிய ஒளி விளக்குகள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தாலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தாலும் நிறுவப்பட்டுள்ளன. தற்போது மத்திய அரசு மானியம் ஒரு விளக்கிற்கு ரூ.11000/– வழங்கப்படுகிறது.

சூரிய ஒளி வீட்டு உபயோக மின் விளக்கு

இது வீட்டினுள் நிலையாக பொருத்தப்பட்ட சூரிய ஒளி மின் விளக்கு. மொத்தம் 4 விளக்குகள் அல்லது 2 விளக்குகள் மற்றும் ஒரு டி.சி. பேன், தொலைக்காட்சிப் பெட்டியையும் இணைக்கலாம். இதன் மொத்த விலை ரூபாய் 18000/– ஆகும். அதில் ரூ.5500/– மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. இதுவரை 70 விளக்குகள் நிறுவப்பட்டுள்ளது.

மின் கலம் மூலம் இயங்கும் ஊர்தி

இந்த ஊர்திகள் இயங்க பெட்ரோல் தேவை இல்லை. சத்தம் எழுப்பாது. சுற்றுச்சூழலின் தூய்மையும் பாதுகாக்கப்படும். இவ்வகை



2001 செப்டம்பர் 4]

ஊர்திகள் நெரிசலான பகுதி, மருத்துவமனை, தொழிற்கூடங்கள், வன விலங்கு பூங்கா, வானூர்தி தளம், பள்ளிக்கூடம் மற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விலை தோராயமாக ரூ.13 இலட்சம் ஆகும். அதில் 50 சதவீதம் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. இதுவரை 17 ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 4 ஊர்திகள் வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா விலங்கியல் பூங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்புடன் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள்:

மின் வாரியக் கட்டமைப்பில் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டங்களாக நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கயத்தாறில் ரூ.44.75 இலட்சம் செலவில் 15 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையம் ஒன்றை நிறுவியுள்ளது. இது 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் தென்னிந்தியாவிலேயே இவ்வகையில் முதலாவதாகும். 100 கிலோ வாட் திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் இணைந்த மற்றொரு மின் நிலையம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை அருகில் நல்லூர்பாளையத்தில் ஒரு தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் இத்தகைய மின் நிலையங்களை நிறுவுவதற்கு மானியம் அளிக்கிறது. ஒவ்வொரு 25 கிலோ வாட் திறனுள்ள நிலையம் நிறுவ, திட்ட மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கை (அதிக பட்சம் ரூ.50 இலட்சம்) மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 25 கிலோ வாட் திறன் கொண்ட இரண்டு மின் கட்டமைப்புடன் இணைந்த மின் நிலையங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் எல்.ஜி.பாளையம் மற்றும் எஸ்.என்.பாளையம் ஆகிய இடங்களில் தனியார் நிறுவனம் மூலம் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தை இந்நிறுவனமே சொந்தமாக இயக்கி வருகிறது.

சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 4 கிவாட் திறன் கொண்ட ஒரு சூரிய ஒளி மின் நிலையத்தினை ரூ.17.80 இலட்சம் செலவில் தனது சென்னை

அலுவலகத்தில் நிறுவியுள்ளது. இது பிப்ரவரி 1999 முதல் செயல்பட்டு வருகிறது. தினமும் 4 மணி நேரத்திற்கும் அதிகமாக அலுவலக விளக்குகள் மற்றும் மின் விசிறி இதன் மூலம் செயல்பட்டு வருவதுடன் இது மின்சார வாரிய மின் விநியோகத்திற்கு ஒரு மாற்றாகவும் செயல்படுகிறது.

**காற்று சக்தி**

காற்று சக்தி மின் உற்பத்தி

தமிழ்நாடு காற்று சக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவில் முதன்மையாக விளங்குகின்றது. மாநில அரசு அறிவித்துள்ள தெளிவான கொள்கைகள் வழங்கி உள்ள வசதிகள் மற்றும் மாநிலத்தில் பரவலாக உள்ள காற்று சக்தி மிகுந்த பகுதிகள் ஆகியவைகளால் காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் பெருகி வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் காற்று மூலம் மின் உற்பத்தி செய்வது தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ரீதிகளில் சாத்தியமானது என்று நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாடு அடைந்துள்ள சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

அ) தமிழ்நாட்டில் 31-3-2001 நாள் வரை அரசு செயல் விளக்க திட்டங்கள் மூலம் 19.355 மெகா வாட் திறன் கொண்ட 120 மின் காற்றாலை இயந்திரங்களும், தனியார் துறையின் மூலம் 793.275 மெகா வாட் திறன் கொண்ட 2980 மின் காற்றாலை இயந்திரங்களும் நிறுவப்பட்டு இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

ஆ) நாட்டிலேயே முதலாவது தனியார் துறை காற்றாலைப் பண்ணை தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இ) காற்றாலைப் பண்ணை மூலம் மின் உற்பத்தி செய்வதில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 61 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காகும்.

ஈ) நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் 415 மெகா வாட் திறன் அளவில் தனியார் காற்றாலைப் பண்ணைகளின் ஒரு பெரிய தொகுப்பு தமிழ்நாட்டில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள காற்றாலைப் பண்ணைகளின் தொகுப்புக்கு அடுத்ததாக உள்ளது.

உ) தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைப் பண்ணைகள் 31-3-2001 வரை 5571 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு மின்



2001 செப்டம்பர் 41 கட்டமைப்புக்கு அளித்துள்ளன. தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கு மைய அரசும், மாநில அரசும் அளிக்கின்ற பல்வேறு சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

மைய அரசின் சலுகைகள்

அ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வெளியில் பொது உரிம திட்டத்தின்கீழ் எளிய முறையில் இறக்குமதி செய்யலாம். நான்கு முக்கியமான உதிரி பாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்.

ஆ) 100 சதவிகிதம் தேய்மான வருமான வரிச் சலுகை.

இ) திட்டத் தொகையில் 75 சதவிகிதம் வரை கடன் வசதி.

தமிழக அரசின் சலுகைகள்

அ) தனியார் நிறுவனத்தினர் தங்களது காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின் வாரிய கட்டமைப்பின் மூலம் செலுத்தித் தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலைகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். அந்த மின்சாரத்தில் இரண்டு விழுக்காடுகள் மட்டும் மின் வாரியத்திற்குக் கமிஷனாக செலுத்த வேண்டும். இதை ஒரு மாத பயனீட்டளவுக்கு எதிராக ஈடுகட்டலாம்

ஆ) உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின் வாரியத்தின் வாயிலாக சேமித்துக் கொள்ளலாம். சேமிக்கும் மின்சாரத்தில் 2 விழுக்காடுகள் மட்டுமே மின் வாரியத்துக்கு கமிஷனாக செலுத்த வேண்டும். இதற்கான கால அளவு ஒரு வருடத்திலிருந்து ஒரு மாதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இ) தனியார் நிறுவனத்தினர் உற்பத்தி செய்யும் காற்றாலை மின்சாரத்தை மின் வாரியம் 1-12-1995 முதல் ஒரு யூனிட்டுக்கு ரூ.2.25 வீதம் வழங்குகிறது. இந்த விலை ஆண்டிற்கு 5 விழுக்காடுகள் வீதம் 5 ஆண்டுகளுக்கு கூடும். தற்பொழுது மின் உற்பத்தி செய்பவர்களுக்கு, 2000-2001-ல் ஒரு யூனிட்டுக்கு ரூ.2.70 வழங்கப்படும். ஆனால் புதிதாக காற்றாலை நிறுவ வருகிறவர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ.2.25 வீதம் மின் வாரியம் டிசம்பர் 2000-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவையாவும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் இப்பொழுது மறு பரிசீலனை செய்யப்படுகிறது. செப்டம்பர் 2001-ல் மறுப்பின்மை சான்றிதழ் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வாங்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.

நம் நாட்டில் காற்றாலை தொழில்நுட்ப உள்ளமைப்பை வலுவுடையதாக்க இந்திய அரசு காற்று சக்தி தொழில்நுட்ப மையம் என்ற அமைப்பை சென்னையிலும் அதனைச் சார்ந்த மின் காற்றாலை ஆய்வு நிலையம் ஒன்றினை தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறிலும் நிறுவி உள்ளது. தமிழக அரசு சென்னை மற்றும் கயத்தாறில் இந்நிலையங்கள் அமைத்திட நிலங்களை அளித்துள்ளது. இம்மையம் இந்தியாவிலேயே காற்று சக்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஒரே ஒரு தொழில்நுட்ப மையமாக இருக்கும். காற்று சக்தி தொடர்பான ஆராய்ச்சி, காற்று வள மதிப்பீடு, அமைப்பு ஒப்புதல், இயந்திரச் சான்றிதழ் வழங்குதல், பயிற்சி அளிப்பு ஆகிய பணிகளை இம்மையம் மேற்கொள்ள உள்ளது. ஆகையால் இம்மையம் காற்று சக்தித் துறையைச் சார்ந்த தொழில் முனைவோருக்கும் முதலீட்டாளர்களுக்கும், காற்றாலை உரிமையாளர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் பெரிதும் உதவிகரமாய் அமையும்.

நீர் இறைக்கும் காற்றாலைகள்

காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுடன் தமிழக அரசு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவவும் ஊக்கமளித்து வருகின்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 871 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக அரசு நான்கு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ தலா ரூ.20,000/– மானியம் அளித்துள்ளது. 2001–2002 ஆண்டிற்கு மாநில அரசு மானியத் தொகை 8 பம்புகளுக்கு வழங்கப்பட உள்ளது.

**உயிரியல் மற்றும் தாவர சக்தி**

கால்நடை மற்றும் விவசாயக் கழிவுப் பொருட்கள் மூலம் சாண எரிவாயு தயாரித்து அதனை எரிபொருளாக உபயோகிப்பது தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இயலும் என்று அறியப்பட்டுள்ளது. இது தவிர ஆய்வுகளின் அடிப்படையில் சர்க்கரை ஆலைகளில் உபயோகமற்றதெனக் கருதப்பட்ட கரும்பு வீழ்படிவு மூலமாகவும் சாண எரிவாயு தயாரிக்க இயலும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மைய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவிகளோடு சர்க்கரை ஆலைகளில் கரும்பு வீழ்படிவுகளை உபயோகித்து பணியாளர்களின் உணவு விடுதி





மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றின் பயன்களுக்காக எரிவாயுக் கலன்களை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. 1999–2000 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் மானியமாக ரூ.75000/– ஒவ்வொரு கலனுக்கும் வழங்கி 60 கன மீட்டர் அளவு கொண்ட 2 கலன்கள் தலா ஒரு கூட்டுறவு, தனியார் சர்க்கரை ஆலைகளில் நிறுவப்பட்டுள்ளது.

முதல் கட்ட நடவடிக்கையாக வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள பத்து தாலுகாக்களில் உபரியாகக் கிடைக்கும் தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பற்றிய மதிப்பீடு ஆய்வு மத்திய அரசு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மார்ச் 1997–ல் முடிவடைந்தது. பின்னர் மேலும் பதினேழு தாலுகாக்களில் 2 தாலுகாக்கள் மாநிலத் திட்டத்தின்கீழ் சேர்த்து ஆய்வு செய்து திட்ட அறிக்கை முடிக்கப்பெற்றது. 10 தாலுகாக்களில் ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியப்பெற்றது. மொத்தம் 37 தாலுக்காக்கள் ஆகும். மேலும் 10 தாலுகாக்கள் இந்த வருடம் ஆய்வு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு அறிக்கைகளின் துணை கொண்டு உபரியாகக் கிடைக்கும் தாவரக் கழிவுப் பொருட்களிலிருந்து மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவிட தனியார் முதலீட்டாளர்கள் அவர்களாகவே முன்வர இயலும். மேலும் இத்திட்டங்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் வட்டி மானியம் பெற இவர்கள் தகுதி பெறுவார்கள். இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் நோக்கத்தில் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ள ஏதுவாக இந்நிறுவனத்தால் தொழில் அபிவிருத்திக் கருத்தரங்குகள் இரண்டு முறை நடத்தப்பட்டன. மேலும் 10 தாலுக்காக்களில் மதிப்பீட்டு ஆய்வு நடத்த மத்திய அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்பெறும் ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகளால் சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்படும் தீங்குகளைக் கட்டுப்படுத்தவும் அக்கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவும் செயல் விளக்க முறையில் ரூ.1.00 இலட்சம் செலவில் மாநில அரசின் நிதியுதவியுடன் அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஒரு திட்ட ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது. ஆய்வறிக்கைகளினை அடிப்படையாகக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் ஒரு தனியார் தொழில் முனைவர் தோராயமாக 500 கிலோ வாட் மின் உற்பத்தி செய்யும் கலன் ஒன்றை நிறுவ முன் வந்ததின்பேரில் அவரது கருத்துரு மத்திய அரசிற்கு ஏற்பளிப்புக்கு சிபாரிசு செய்து அனுப்பப்பட்டதின் பேரில் தற்சமயம் மத்திய அரசு அதனை ஏற்றுச்

செயல் முறை விளக்கத் திட்டத்தின்கீழ் அனுமதி அளித்துள்ளது. அதற்கான திட்ட நடைமுறைகள் நிறைவேற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்ய தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான மத்திய அரசு ஒப்புதல் 14-8-2001-ல் வழங்கப்பட்டுள்ளது.

மாநகர மற்றும் நகரங்களில் வெளிப்படும் அன்றாடக் கழிவுகளை மதிப்பீடு ஆய்வு செய்யவும், அவைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யவும் முதல் கட்டட நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட தறைகளின் துணையுடனும் மைய அரசின் நிதி உதவியுடனும் (50 சதவிகிதம்) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் சேலம் மாநகராட்சிக்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அதனடிப்படையில் தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாநகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. இவ்வறிக்கைகளின் துணை கொண்டு தனியார் நிறுவனங்கள் நகர கழிவுகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை நிறுவ முன் வரலாம்.

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யும் திட்டங்களைப் பெரிய அளவில் நிறைவேற்ற மாநில மற்றும் மைய அரசுகள் ஊக்கம் அளித்து வருகின்றன. இதனால் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இது சம்பந்தமாக சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் மற்றும் இதர உபகரணங்களின் திறனை மேம்படுத்தி இணை மின் உற்பத்தி செய்து. தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அதிகப்படியான மின்சாரம் தயாரித்து வழங்க இவ்வாலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு மைய அரசு கூட்டுறவு ஆலைகளுக்கு ஒரு மெகா வாட் மின் உற்பத்திக்கு ரூ.2.00 கோடி வரையிலும் தனியார் ஆலைகளுக்கு வட்டி மானியமும் வழங்குகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 36 சர்க்கரை ஆலைகளில் பத்து சர்க்கரை ஆலைகளில் 142.10 மெகா வாட் மொத்தத் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு (3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 20.00 மெகா வாட் மற்றும் 7 தனியார் சர்க்கரை ஆலைகள் 122.10 மெகா வாட்) மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இன்னும் கூடுதலாக சுமார் 19 மெகா வாட் திறன் நிறுவப்படலாம். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 500 மெகா வாட் மின் உற்பத்தி குறியீட்டை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



50,000 கிலோ காலரி திறன் கொண்ட 8 சமையல் எரிவாயு இயந்திரங்கள் தமிழ்நாட்டில் உள்ள 8 சிறைச்சாலை விடுதிகளில் ரூ.6.95 இலட்சம் செலவில் சமையல் வேலைக்காக நிறுவப்பட்டது. இதன் பயனாக விடுதிகளின் விறகு எரிபொருளின் செலவினம் 50 சதவிகித அளவில் குறைந்துள்ளது. அதுபோன்று 6 கிளைச் சிறைகளிலும், 50000 கி.காலரி திறன் கொண்ட சமையல் எரிவாயு இயந்திரங்கள் அமைக்கப் பெற்று நல்ல முறையில் இயங்கி வருகிறது.

மேற்கண்ட திட்டத்தின் செயல்பாடுகளைப் பொறுத்து வரும் நிதியாண்டில் மேலும் பல தனியார் பண்ணைகளை நிறுவ ஏற்பாடு செய்யப்படும். மேலும் தமிழ்நாட்டில் 50,000 கிலோ காலரி கொள்ளளவுள்ள தாவர எரிவாயு ஒன்று ஊட்டியில் உள்ள ஆதிதிராவிட மாணவர் விடுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை உதவியுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் மூன்று ஆதிதிராவிடர் பழங்குடியினர் பள்ளி விடுதிகளில் அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் ஒரு கலன், கால்நடைக் கல்லூரி விடுதி, நாமக்கல்லில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி**

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் பல்வேறு குறிக்கோள்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதும் ஒன்றாகும். தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களுடனும், தொழில்நுட்ப நிலையங்களுடனும் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மரபு சாரா எரிசக்தித் திட்டங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளப்பட உள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் கிராம மக்களின் சமையல், விளக்கு வெளிச்சம், குடிநீர் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்குப் பயன்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எரிசக்தி உபகரணங்கள் அவர்களின் தேவைக்கேற்ப மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றது. இத்திட்டத்தில் பணியாளர்களுக்கான சம்பள செலவினத்தை இந்திய அரசும், திட்ட செலவினத்தை தமிழக அரசும் ஏற்கின்றது. கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 2.5 முதல் 100 விழுக்காடுகள் வரை மானியமாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

*1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (100 விழுக்காடு மானியம்)*

*2. உராய்வு குறைவான புட்வால்வுகள் (7.5 விழுக்காடு மானியம்)*

*3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர் தேவைக்காகப் பொது கிணறுகளில் அமைத்தல் (100 விழுக்காடு மானியம்)*

*4. பிறவகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் (25 விழுக்காடு மானியம்)*

**விளம்பரம்**

*மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றியும் அது தொடர்பான பல்வேறு உபகரணங்களின் பயன்களை மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பல கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. பிற நிறுவனங்கள் நடத்தும் கண்காட்சிகளிலும் பங்கேற்று வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் இருக்கும் ஒரு விளம்பர ஊர்தியில் மரபு சாரா எரிசக்தி உபகரணங்களின் மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஊர்தி பொருட்காட்சிகள் அரசு திட்டங்களின் தொடக்க விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள் நடைபெறும் சமயங்களில் எடுத்துச் செல்லப்பட்டு உபகரணங்களின் பயன்கள் மக்களுக்கு விளக்கப்படுகின்றன. 2000–2001 ஆம் ஆண்டில் மரபு சாரா எரிசக்தி வளங்கள் பற்றிய விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூ.5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது.*

*மரபு சாரா எரிசக்தி வளங்கள் பற்றிய இரண்டு ஐந்து நாள் பொருட்காட்சி மற்றும் 3 நாள் கருத்தரங்குகள் சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் நடத்தப்பட்டது. அதுபோன்று சென்னையில் ஐந்து நாள் பொருட்காட்சியும் கருத்தரங்கமும் நடத்தப்பட்டது. மேலும் சென்னையில் நடந்த 27-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் வணிகப் பொருட்காட்சியிலும் (91 நாட்கள்) பங்கேற்றது.*

*மத்திய அரசின் செய்தி மற்றும் விளம்பரத் திட்டத்தின்கீழ் நாட்டிலேயே முதன்மையான சார்பு அமைப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசின் மரபு சாரா அமைச்சகத்தால், தமிழ்நாட்டிற்கு முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.*

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 11–7–2001 அன்று நடந்த ஆய்வின்போது எடுக்கப்பட்ட முடிவுகள்**

*காற்று சக்தியின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லாமல் பெறப்படுவதால், இதனை ஊக்குவிப்பது அவசியம்*



என்று கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தற்பொழுது உள்ள ஒரு யூனிட்டிற்கு ரூ.2.70 விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*2001–2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழக அரசால் அனுமதி வாங்க உள்ள பகுதி II திட்டங்கள்*

| வரிசை எண் | பொருள் | எண்ணிக்கை | விலை (ஒன்று) ரூ. | மொத்த திட்ட செலவு (ரூ. லட்சத்தில்) | த.நா.எ.வ.நி.க்கு மானியம் மற்றும் (சேவை கட்டணம் (ரூ. ஒன்றுக்கு) | மாநில அரசு ஏற்கும் மொத்த மானிய தொகை (ரூ. | மாநில அரசு ஏற்கும் விலை (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சூரிய சுடு நீர் சாதனம் அ) வீட்டு உபயோகத்திற்கு | 400 | 18,000 | 72.00 | 3,000 + 300 | 13.20 | 18.30 |
| | ஆ) தொழிற்சாலை உபயோகத்திற்கு | 20 | 1,50,000 | 30.00 | 20,000 + 2,000 | 4.40 | 14.70 |
| | இ) அரசாங்க கட்டடங்கள் | 3 | 3,50,000 | 10.50 | 100% | 10.50 | 100 |
| 2 | நீர் இறைக்கும் காற்றாலைகள் | 8 | 82,000 | 6.56 | 20,000 | 1.60 | 41 |
| 3 | தாலுகாக்களில் உள்ள தாவர கழிவுகளின் மதிப்பீட்டு ஆய்வு | 2 | 2,00,000 | 4.00 | 100% | 4.00 | 100 |
| 4 | ஊரக, நகராட்சி மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளின் மதிப்பீட்டு ஆய்வு | 2 | 2,00,000 | 4.00 | 100% | 4.00 | 100 |
| 5 | விளம்பரம் (நிதி முன்னதாகவே ஒதுக்கப்பட்டு விட்டது) | | 5,00,000 | 5.00 | 100% | 5.00 | 100 |
| மொத்தம் | | | | 132.06 | | 42..70 | |

இறுதியாக காற்றாலை, சூரிய ஒளி (Solar Energy) எரிசாராவி, கருப்பஞ்சாறு கசண்டுகள், நகராட்சிக் கழிவுகள் போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களுக்குப் புத்துயிர் அளிக்கவும் இந்த அரசால் தனிக் கவனம் செலுத்தப்படும்.



## இணைப்பு–III

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 44–காட்டு வளத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

### 1. முன்னுரை:

வனங்கள், இயற்கை அன்னை மனித இனத்திற்கு அளித்த நன்கொடையாகும். வனங்கள், சுற்றுச்சூழலை நிலைப்படுத்தவும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யவும் இன்றியமையாத மீண்டும் புதுப்பிக்கக்கூடிய முக்கிய இயற்கை வளமாகத் திகழ்கின்றன. வேளாண்மைக்கு அடுத்த படியாக நிலத்தைப் பயன்படுத்தும் பெரிய துறையாகவும், பெருமளவு நிலத்தை நேரடியாக நிர்வகிக்கும் அரசுத் துறையாகவும் வனத் துறை திகழ்கிறது. கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தங்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கு வனங்களையே சார்ந்துள்ளனர். வனங்கள், நீர்ப்பிடிப்புப் பகுதிகளையும், மண் வளத்தினையும் பாதுகாத்து தட்ப வெப்ப நிலையினை சமநிலைப்படுத்தி பூமியை வெம்மையடையாமலும், வறண்டு போகாமலும் தடுத்து பாதுகாக்கின்றன. வனங்களில் இருந்து கிடைக்கும் மரங்கள் மற்றும் பிறவனப்பொருட்கள் மதிப்பு மிக்கவை. அதுபோல் அரிய தாவரங்கள் மற்றும் உயிரினங்களைக் காப்பதிலும் சுற்றுச்சூழலைக் காப்பதிலும் வனங்கள் ஆற்றும் பங்கு அளவிடற்கரியது.

வனத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 22,845 சதுர கிலோ மீட்டர் வன நிலங்கள் உள்ளன. இது மொத்த நிலப் பரப்பளவில் 17.56 விழுக்காடாகும். இது 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உகந்த அளவான 33 விழுக்காட்டிற்கும் மிகவும் குறைவானதாகும். மனிதர்கள் மற்றும் உயிரினத் தலையீடுகளினால் ஏறத்தாழ பாதி வனப்பகுதி தரமிழந்து காணப்படுகிறது. பல்வேறு திட்டங்கள் மூலம் தரமிழந்த காடுகளை மீண்டும் வளப்படுத்தவும் வனப்பகுதிகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் வனங்கள், தமிழ்நாடு மாநில வனச் சட்டம் 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972, வனப்பாதுகாப்புச் சட்டம் 1980

பாதிக்கப்பட்டு தரமிழந்து காணப்படுகிறது. மக்களுக்கு தொடர் வருவாய் கிடைக்கும் பொருட்டு, கூட்டு வன நிர்வாக முறையில் தரங்குன்றிய வனப் பகுதிகளில் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கை உயிரினச்சூழல் மேம்படுத்தப்படும். நமது மாநிலத்தில் 3250 சதுர கிலோமீட்டரில் தரமிழந்த வனங்களின் சுற்றுச்சூழல் மேம்படுத்தும் நோக்கத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியுள்ளது.

3.6. பழங்குடியினர் மற்றும் வனங்கள்:

பழங்குடியினர்கள் வனச்சூழல் அமைப்பின் ஓர் முக்கிய அங்கமாவர். இவர்களின் பொருளாதார நிலை வன வளங்களைச் சார்ந்துள்ளது. பழங்குடியினர் தொடர்ந்து நிலையான பயன்களைப் பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளிலும் மரவகை மற்றும் தாவர வகைகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பினை உருவாக்குதல், கிராமப் பகுதிகளிலுள்ள பழங்குடியினருக்கு அடிப்படை உள்ளமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கல்வி ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

3.7. வனப் பாதுகாப்பு:

விலை மதிப்புமிக்க சந்தன மரம் மற்றும் இதர அட்டவணைப்படுத்தப்பட்ட தடிமரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப்பொருட்கள் அழிவதிலிருந்து தடுக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு நவீன ரக துப்பாக்கிகள், வாகனங்கள், கம்பியில்லா தொலை தொடர்பு சாதனங்கள் வழங்கவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலத்தின் வன வளங்கள், திருட்டு மர வெட்டுகள், கஞ்சா பயிரிடுதல், தீ விபத்துகள், ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் வனஉயிரின வேட்டைக்காரர்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியதாக இருக்கிறது. இவ்வன வளங்களைப் பாதுகாக்க வன உள்ளமைப்பு வசதிகள் மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது.

சமூக விரோதிகளினால் சந்தனமரம் மற்றும் இதர அட்டவணைப்படுத்தப்பட்ட பெருமரங்கள் திருட்டுத்தனமாக கடத்தப்படுகின்றன. 1999–2000, 2000–2001 ஆம் ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் விவரங்கள் பின்வருமாறு:



| ஆண்டு | குற்றங்களின் எண்ணிக்கை | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்) | அரசுடைமையாக்கப்பட்ட வாகனங்கள் | குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1999-2000 | 1395 | 585.524 | 218 | 32 |
| 2000-2001 | 850 | 118.720 | 32 | 8 |

வனங்களுக்கு அருகாமையில் உள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எஸ்டேட் உரிமையாளர்களால் செய்யப்படும் வன நில ஆக்கிரமிப்பு, வன நிர்வாகத்திற்கு மிகுந்த இடையூறாக உள்ளது. வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன், இவ்வகை ஆக்கிரமிப்புகளை அகற்ற வனத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் தடுக்க துறைக்குத் தேவையான வசதிகளை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3.8. வன ஆராய்ச்சி:

உயிரினப்பரவல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்பு ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பல்வேறு வகையான உயிரினப் பரவல்களை பாதுகாத்தும் வன வகைகளில் உள்ள பல்வேறு உயிரினங்களின் இயக்காற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

வனமரபியல் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் அதிக உபயோகப்படுத்தக்கூடிய மரவகைகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய உயிரீட்டங்களான பழங்கள், தண்டுகள், மரஇழைதரவல்ல மரங்கள், இழைமரம், விறகு மரங்கள், கட்டடப் பணிக்காக பயன்படுத்தப்படும் மரங்கள் போன்ற வீரிய மரங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வன ஆராய்ச்சித் துறை வீரிய விதைப்பண்ணைகளில் சேகரித்து வைக்கப் பட்டுள்ளது. சந்தனம், சவுக்கு, யூகலிப்டஸ், புளி, மூங்கில், தடிமரம், இழைமரம், மரஇழை தரவல்ல உற்பத்தித்திறனுள்ள மர இனங்களை ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து வெளிக் கொணர்ந்தது இவ்வன ஆராய்ச்சியின் தலைசிறந்த பங்களிப்பாகும்.

மற்றும் அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளினாலும், அதிகாரங்களினாலும் ஆளுமை செய்யப்படுகின்றன. வனச் சட்டத்தில் வனக் கொள்கையினை செயல்படுத்த உரிய வழிவகைகள் உள்ளன. தரமிழந்த காடுகளையும் அவற்றின் உயிரின வாழ்க்கைச் சூழலையும் மேமபடுத்தி சுற்றுச்சூழலை நிலைப்படுத்துவதே 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையின் முதன்மைக் குறிக்கோளாகும். இதன் மூலம் நேரடியான பொருளாதார பலன்களும் கிடைக்கப் பெறுகின்றன.

## 2. குறிக்கோள்கள்:

தமிழகத்தின் வனங்கள், பின்வரும் குறிக்கோள்களுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன:–

– சுற்றுச்சூழலை சமநிலைப்படுத்தி பராமரித்தல் மற்றும் உயிரினப்பரவல்களைப் பாதுகாத்தல்;

– மாநிலத்தின் வனப்பகுதியையும் மரங்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்துதல்;

– ஆறுகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் மண் அரிமானம் மற்றும் அழிவுகள் ஏற்படாமல் தடுத்தல்;

– கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகளான விறகு மரங்கள் கால்நடை தீவனம் மற்றும் இதர சிறு வனப்பொருட்கள் தேவையினை பூர்த்தி செய்தல்;

– வனத்தொழில் நுட்பத்தினை மேம்படுத்துதல் மற்றும் அந்த தொழில் நுட்பத்தினை கிராமப்புறங்களுக்கு விரிவாக்கம் செய்தல்;

## 3. செயல்முறை:

### *3.1.* பசுமைப் பரப்பினை அதிகப்படுத்துதல்:

வனக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 33 விழுக்காட்டை விட தற்போதுள்ள வன/ மரங்களின் பகுதியானது மிகவும் குறைவானதாகும். வனங்கள் அல்லாத பகுதிகளில் மரவளர்ப்பினை ஊக்குவிப்பதன் மூலம் மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்காக வனங்கள்/ மரங்களின் பரப்பினை உயர்த்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



### *3.2. உயிரினப்பரவல் பாதுகாப்பு:*

*தமிழ்நாடு சிறந்த உயிரினப் பரவல்கள் செறிந்துள்ள பகுதியாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் ஐந்து தேசிய பூங்காக்கள், ஆறு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் பன்னிரண்டு பறவைகள் சரணாலயங்கள் ஆகியவை வன உயிரின பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. இவை மாநிலத்தின் மொத்த வனப் பரப்பில் 2,917 சதுர கிலோமீட்டர் அதாவது 12.8 விழுக்காடாகும். தாவர, வன உயிரினங்கள் பாதுகாத்தலை முதன்மைக் கொள்கையாகக் கொண்டு சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் பாரம்பரிய வனங்கள் உருவாக்கப்படுகின்றது. மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் வன உயிரின மேலாண்மைக்காக பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் பரப்பளவை 25 விழுக்காடாக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பலவகையான மருத்துவச் செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் இப்பகுதிகளில் பாதுகாக்கப்படும்.*

### *3.3. நீர் வள மேம்பாடு:*

*தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2679 கால்வாய்கள், 38863 ஏரி, குளங்கள் உள்ளன. இவற்றின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வனங்களில் அமைந்துள்ளன. வனங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் வன வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்துவதன் மூலம் ஆறுகள் மற்றும் ஓடைகளில் நீரோட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு நிலத்தடி நீர் உயர்த்தப்பட்டு அதனையடுத்த நிலங்கள் வளம் பெற வகை செய்யப்படுகிறது. இவ்வகையான பணிகளினால் நீர்வளம் பெருகுவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாகவும் பயனுறுவர்.*

### *3.4. விரிவாக்க வனவியல்:*

*கிராம மக்கள் விறகு, தீவனம் மற்றும் இதர தேவைகளுக்காக வனத்தினை சார்ந்திருப்பதை தவிர்க்கவும், மொத்தத்தில் பூமியில் பசுமைப் பரப்பளவினை விரிவாக்கத் தக்க வகையில் வன விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

### *3.5. கூட்டு வன நிர்வாக முறை மூலம் உயிரின மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் மீட்பு நிலைப்படுத்துதல் :*

*வனங்களை ஒட்டி அமைந்துள்ள சுமார் 3072 கிராமங்களிலுள்ள கால்நடைகள் மற்றும் மனிதர்களின் தலையீடுகளினால் வனங்கள்*

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு மரபணுத் தோட்டம் அரிதான 4000 தாவர வகைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் பெரும்பாலான இப்பகுதிக்குரிய தாவர வகைகள் அழிந்து வரும் அபாய நிலையிலுள்ளது. இவ்வாறாக அழிந்து வரும் அரிதான 4000 தாவர வகைகளில் 1000 தாவர வகைகளை சேகரித்து இம்மரபணுத்தோட்டத்தில் நட்டு பாதுகாக்க தமிழக வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவு இவ்வாண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மரச்சாமான்களின் உற்பத்திக்கு இதுவரை பயன்படுத்தப்படாத மரங்களை பதப்படுத்தி வீட்டிற்குத் தேவையான மரச்சாமான்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தும் வகையில் தொழில் நுட்பம் ஒன்று தமிழக வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவினால் கண்டறியப்பட்டு வருகிறது.

3.9. கடலோரப்பகுதி வனங்கள்:

தமிழகத்தின் கடலோரப்பகுதிகளில் அதிவேக காற்று மற்றும் புயல்களினால் ஏற்படும் பாதிப்பினை தடுத்துக் கடலோரப்பகுதிகளைப் பாதுகாக்க கடலோரத்தொடர் தடுப்புக்காடுகள் திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் 1000 கிலோ மீட்டரில் கடலோரப் பரப்பு எளிதில் அழிந்துவிடும் உயிரினச்சூழல் அமைப்புகளைக் கொண்டுள்ளது. இதனை பாதுகாப்பது அவசியமாகிறது.

3.10. மனித வள மேம்பாடு:

வனத் துறை மாநிலத்தின் பழமையான துறைகளுள் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் திறமை மற்றும் தொழில் நுட்பம் வாய்ந்த மனித வளம் மாநிலத்தின் வனப்பாதுகாப்பு, வனவளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு தனது முக்கிய பங்களிப்பினை அளித்துள்ளது. இத்திறன் தகுந்த பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தியின் மூலம் மேலும் மேம்படுத்தப்படும். 2000–2001 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் தென்னக வனச்சரகர் கல்லூரியில் 100 வனச்சரகர்கள் மற்றும் 168 வனவர்களுக்கும், வைகை அணை தமிழ்நாடு வனவியல் கல்லூரியில், 50 வனவர்கள் மற்றும் 292 வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

3.11. மகளிர் பங்கேற்பு:

இலட்சக்கணக்கான கிராமப் பெண்கள், குடும்பப் பாதுகாப்பை தங்களது முக்கிய பணியாக மேற்கொண்டுள்ளதால் குடும்பத்தேவைக்காக விறகு சேகரித்தல், கால்நடைத் தீவனம், நீர் எடுத்தல் போன்ற அன்றாடப்



பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வனவளங்கள் நலிவடைவது அவர்களின் பணிகளை மேலும் கடினமாக்குகிறது. ஆதலால், வன வளங்களையே பெரிதும் நம்பியுள்ள ஏழ்மையான பெண்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வளங்களை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்கும், முடிவெடுப்பதில் பங்கேற்பதற்கும், முக்கியத்துவம் அளிக்கப்படும்.

3.12. வேலைவாய்ப்பு உருவாக்குதல்:

வன நிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 75 விழுக்காடு, வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கென செலவிடப்படுகிறது. வனங்களை அடுத்து வாழும் கிராம மக்களின் வேலைத்திறனை அறிந்து கிராம சமுதாயம் பயன்பெறும் வண்ணம் அவர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டுடன் கிராமங்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற நிலைகள் வலுப்படுத்தப்படும்.

## 4. 2000–2001 ஆம் ஆண்டு சாதனைகள்:

❖ 2000–2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.106.01 கோடி செலவில் 75400 ஹெக்டர் பரப்பில் வனவளர்ப்புப் பணியும் 200 கிராமங்களில் கிராம வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

❖ 2000–2001 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் தேனி கோட்டத்தில் தடிமரக்கடத்தல், வன உயிரினங்கள் வேட்டையாடுதலை தடுத்தல், 10 முக்கியமான தணிக்கைச் சாவடிகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டி தணிக்கைச் சாவடிகளை பலப்படுத்துதல், சென்னை நகரில் மரக்கன்றுகள்/ உயரமான மரச்செடிகள் உண்டாக்கி பொதுமக்களுக்கு விற்பனை செய்தல், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மேம்பாடு, கிண்டி தேசிய பூங்கா மேம்பாடு, கொடைக்கானல் கோட்டத்தில் மூன்று விறகு விநியோக விற்பனைக் கிடங்கு அமைத்தல் மூலம் இயற்கைக் காடுகள் அழிவதிலிருந்து பாதுகாத்தல்; களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் நல்லமுறையில் நிர்வகிக்க ஏற்கெனவே இருந்து வரும் உள்ளமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிக்காக ரூ. 87.03 லட்சங்களை ஒப்பளிக்கப்பட்டது. 2000–2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த மொத்தம் ரூ. 55.03 லட்சங்கள் செலவிடப்பட்டது.

[2001 செப்டம்பர் 4

❖ 2000–2001 மற்றும் 2001–2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு திட்டமான கடலோரத்தொடர் தடுப்புச் காடுகள் திட்டத்தினை 1000 எக்டேர் நிலப்பரப்பளவில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ரூ.265.62 லட்சம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முன்னோடி பணிகளை செயல்படுத்துவதற்கு ரூ. 9.58 லட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.

❖ வனத் துறையின் வருவாயினைப் பெருக்க சந்தன மர ஏலம் சீரான இடைவெளியில் நடத்தப்பட்டு வருகிறது. 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.79.67 கோடி மதிப்புள்ள 1477.130 மெட்ரிக் டன் சந்தன மரக்கட்டைகள் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன. மேலும் 2000–2001ம் ஆண்டில் ரூ.1.68 கோடி மதிப்புள்ள 621 மெட்ரிக் டன் வெள்ளடை மரங்கள் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன.

❖ இவ்வாண்டு ரூ.4.15 கோடி மதிப்புள்ள 21.58 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டன.

❖ இவ்வாண்டு தமிழக மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்தி மாசினைக் கட்டுப்படுத்துவதற்கு பசுமை வளையத்திட்டம் ஒன்று ரூ.1.557 கோடி மதிப்பீட்டில் 2,94,000 மரக்கன்றுகள் சென்னை, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் நடுவதற்கு ஒப்பளிக்கப்பட்டது. இதுவரை 2,39,000 மரக்கன்றுகள் நடப்பட்டு ரூ.329.35 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

❖ மனித வள மேம்பாட்டுக்கென சிறப்பு நடவடிக்கை எடுத்து 29 அலுவலர்களுக்கும், 61 பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

### 5. வன வருவாய் மற்றும் செலவுகள்:

#### 5.1. வருவாய்:

2000–2001 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் ரூ.13061.77 லட்சங்கள் விவரம் கீழ்வருமாறு:



2001 செப்டம்பர் 4]

| வ. எண் | வருவாய் வந்த விவரம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| அ. | சந்தன மரம் | 9552.14 |
| ஆ. | தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 100.01 |
| இ. | மரங்களல்லாத வனப்பொருட்கள் (சிறுவனப்பொருட்கள்) | 142.28 |
| ஈ. | தடிமரம், விறகு, மூங்கில், முந்திரி, சவுக்கு, மென்மரம் மற்றும் வனவியல் பண்ணைத்தோட்டங்கள் மற்றவைகள். | 3267.34 |
| | மொத்தம் | 13061.77 |

2001–2002 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 11672.84 லட்சங்களாகும்.

#### 5.2. செலவினங்கள்:

2000–2001 ஆம் ஆண்டில் வன மேம்பாட்டிற்கான திட்டப் பணி செலவு ரூ.14156.26 லட்சங்களாகும். திட்டம் சாரா இனங்களுக்கான செலவு ரூ.6024.53 லட்சங்களாகும். 2001–2002 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு ரூ. 15829.35 லட்சமாகும்.

### 6. திட்டப் பணிகள்:

1999–2000, 2000–2001 ஆம் ஆண்டுகளின் செலவு விவரங்களும், 2001–2002ஆம் ஆண்டு செய்யக் கருதப்படும் திட்டச் செலவு ஆகியவற்றின் விவரமும் பின்வருமாறு:

(ரூ. லட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | 1999—2000ம் ஆண்டின் செலவு | 2000—2001ம் ஆண்டின் செலவு | 2001—2002ம் ஆண்டில் செய்யக் கருதப்படும் திட்டச் செலவு |
|---|---|---|---|
| மாநில வளத்திட்டங்கள் | 12989.26 | 13642.28 | 15493.50 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 320.37 | 215.60 | 100.86 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் (50:50) | 442.54 | 330.99 | 300.15 |
| மண்வளப்பாதுகாப்பு திட்டங்கள் | 122.82 | 132.89 | 84.91 |
| மொத்தம் | 13874.99 | 14321.76 | 15979.42 |
| மத்திய அரசின் உதவித் திட்டம் 50விழுக்காடு கழித்தது | 221.27 | 165.50 | 150.07 |
| நிகர மொத்தம் | 13653.72 | 14156.26 | 15829.35 |





*6.2. 2001–2002ஆம் ஆண்டில் மாநில திட்டங்களின் கீழ் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:*

| வ. எண் | திட்டங்களின் பெயர் | 2001—2002ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட ஒதுக்கீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | உள்ளூர் வனப்பாதுகாப்பு | 9207.06 |
| 2. | பரவலான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம் | 3961.60 |
| 3. | உயிரின பரவல் பாதுகாப்பு | 491.39 |
| 4. | வன ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு | 165.39 |
| 5. | கடலோரப்பகுதி நிர்வாகம் | 152.32 |
| 6. | வன விரிவாக்கம் | 523.90 |
| 7. | வனப்பாதுகாப்பு | 626.95 |
| 8. | பழங்குடியினர் மேம்பாடு | 159.77 |
| 9. | உற்பத்தி வனவியல் | 242.57 |
| 10. | மருத்துவச் செடிகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு | 24.70 |
| 11. | மனித வள மேம்பாடு | 146.91 |
| 12. | தகவல் தொடர்பு வசதிகளுடன் கூடிய உள்ளமைப்பு மேம்படுத்துதல் | 126.79 |
| | மொத்தம் | 15829.35 |

**7. 2001–2002ஆம் ஆண்டின் முக்கிய திட்டப் பணிகள்:**

*7.1.* **தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம்: (கூட்டு வன நிர்வாகம்)**

நமது அரசு ஜப்பான் சர்வதேச கூட்டு வங்கியின் (Japan Bank for International Cooperation) நிதி உதவியுடன் தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்டம் என்னும் தனித் தன்மை வாய்ந்த வனவளர்ப்புத் திட்டத்தினை ரூ.499.20 கோடி செலவில் 1994–95ஆம் ஆண்டு தயார் செய்து, 1997–98 ஆம் ஆண்டு முதல் ஐந்து வருடங்களுக்கு செயல்படுத்தும் வகையில் தொடங்கியுள்ளது. இத்திட்டமானது கூட்டு வன நிர்வாக முறையில் தரமிழந்த காடுகளை ஒட்டியுள்ள கிராம மக்களின் ஒத்துழைப்புடன் திட்டமிடுதல், நடுதல், பாதுகாத்தல், மற்றும் லாபத்தில் பங்கு என்ற வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டப்பகுதிகளில் வாழும்

மக்களின் தேவைகளான மரம், சிறுவனப்படு பொருட்கள் ஆகியவைகளை பூர்த்தி செய்தல், சுற்றுப்புறச்சூழலை நிலை நிறுத்துதல், பழங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பளித்தல், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தரங்குன்றிய காடுகள், சமுதாய நிலங்கள், பட்டா நிலங்கள் ஆகியவற்றில் பெரிய அளவில் மரங்களை நடுதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

1. கூட்டு வனநிர்வாக முறையில் உள்ளூர் வனங்களை பாதுகாத்தல்
2. மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுதல்
3. வன விரிவாக்கத் திட்டம்
4. தொடர் தடுப்புக் காடுகள் தோட்டங்கள்

ஒவ்வோர் ஆண்டும் 200 கிராமங்கள் செயல்பாட்டிற்கென தேர்ந்தெடுக்கப் படுகின்றன. கடந்த நான்காண்டுகளில் மொத்தம் ரூ342.04 கோடி செலவில் 300,369 ஹெக்டர் பரப்பளவில் வனவளர்ப்புப் பணிகளும், 800 கிராமங்களில் கிராம அபிவிருத்திப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருடவாரியான விவரங்கள் கீழ் வருவன:

| வருடம் | சாதனை (கோடியில்) | சாகுபடி (ஹெக்டேரில்) | பயனடைந்த கிராமங்கள் |
|---|---|---|---|
| 1997-1998 | 45.00 | 61,014 | 200 |
| 1998-1999 | 95.20 | 88,548 | 200 |
| 1999-2000 | 95.83 | 75,407 | 200 |
| 2000-2001 | 106.01 | 75,400 | 200 |
| மொத்தம் | 342.04 | 300,369 | 800 |

இத்திட்டத்தின் ஐந்தாவது ஆண்டான 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.100.08 கோடி செலவில் 75,250 ஹெக்டர் பரப்பில் வன வளர்ப்புப் பணிகளும், 200 கிராமங்களில் கிராம வளர்ச்சிப்பணிகளும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டு வன நிர்வாகத்தின் மூலம் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், பயன்களை பகிர்ந்துகொள்ளுதல், ஆய்வு மற்றும் மதிப்பிடுதல் போன்ற பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய உத்திகளாகும். இத்திட்டத்தின் ஒரு முக்கிய இனமான இடைத்தொகுதிகளின் செயல்பாடுகள் மூலம் (Buffer Zone activities) கிராமங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் சக துறைகளில் உள்ள திட்டங்களையும் இணைத்து,



கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளும் ஊக்கமும் வழங்க வனத் துறை மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது.

### 7.2. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம்

நீலகிரியிலுள்ள சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிரந்தர பசுமைப் பரப்பினை விரிவாக்குவது, இயற்கை மீதான மனித தலையீடுகளை முறைப்படுத்துவது, காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் இதரப்பணிகளின் மூலம் காடுகளை பாதுகாப்பது, சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் தரமிழந்த காடுகளில் மரங்களை நடுதல், சோலை வனங்களை சுற்றி கம்பிவேலி நிறுவுதல், நீர்ப்பாதுகாப்புப்பணிகள் மற்றும் மண்வளப்பாதுகாப்பு மூலம் தரமிழந்த சோலை காடுகளை வளமாக்குதல், வனத்தீயினை தடுக்க தீத்தடுப்பு கோடுகளை வெட்டுதல், பராமரித்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.354.18 லட்சங்கள் செலவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 7.3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டம்

தமிழகத்தின் மொத்த 22,845 சதுர கிலோமீட்டர் வனப்பரப்பில், மேற்குத்தொடர்ச்சி மலை 5,596 சதுர கிலோ மீட்டர் வனப்பரப்பினை உள்ளடக்கியுள்ளது. வனச்சுற்றுச்சூழல் தரமிழந்து வரும் நிலையை தடுக்கவும், தற்போதுள்ள வனங்களையும் மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள விலங்கினம் மற்றும் தாவர இனத்தை அதிகமாக்கவும் இடைவெளி மர நடுதல், சிறிய நீர்ப்பிடிப்புப்பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, சிறுவனப்பொருட்கள் தோட்ட உற்பத்தி மற்றும் உயிரினங்களுக்காக இயற்கைச் சூழலை நிலை மாறாமல் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் செய்யப்படும் அனைத்துப் பணிகளும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்படுத்துதல் முறையில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. 2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.327.87 லட்சங்கள் செலவில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 7.4. வன ஆராய்ச்சி, கல்வி மற்றும் விரிவாக்கத் திட்டம்:

1994–95 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகப்பகுதியின் அருகாமையில் உள்ள கிராமப் பகுதிகளில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. சரணாலய நிர்வாகத்தைத் தவிர வன உயிரினங்களைக் கொண்ட வனங்களை சுயநலத்திற்கு உபயோகப்படுத்துவதை தடுத்து, வனங்களை சார்ந்து வாழ்ந்துவரும் கிராம மக்களின் பொருளாதாரநிலை உயர்த்தப்படுகிறது. புதியதாக, சுற்றுச்சூழல் மேம்பாட்டுத்திட்டத்தினை செயல்படுத்த 113 கிராம வனக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வனத்தை சார்ந்திருக்கும் கிராம மக்களின் பழக்க வழக்கத்தை மாற்றுவதற்காக பெரும்பாலான வழிகளில், வருமானத்தைப் பெருக்கும் வழிவகைகளும் இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. சமீபத்தில் இத்திட்டப்பகுதிகளை பார்வையிட்ட உலக வங்கிக்குழு தமிழ்நாட்டில் இத்திட்டச் செயலாக்கத்தினை வெகுவாகப் புகழ்ந்துள்ளது. 2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.147.30 லட்சங்கள் செலவில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**8. பகுதி–II திட்டங்கள்:**

***20 மாவட்டங்களில் தரிசு நிலங்களில் பசுமைப்பகுதி தோட்டங்கள் உண்டாக்குதல்:***

தமிழக மொத்த நிலப்பரப்பான 1,30,057 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வனங்கள் 22,845 சதுர கிலோமீட்டர் பரப்பில் அமையப்பெற்றுள்ளது. இது மொத்த நிலப் பரப்பளவில் 17.56 விழுக்காடாகும். சுற்றுச்சூழல் பராமரித்தல் மற்றும் சமநிலையை பேணிக் காத்தல் ஆகிய முக்கிய குறிக்கோள்களைக் கருத்தில்கொண்டு வனப் பகுதிகளை தவிர்த்து இருக்கும் பிற மழை பெய்யாத தரிசு நிலங்களில் மரங்கள் நடுதல் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த பசுமைப் பகுதிகள் மக்கள் தங்கள் தரிசு நிலங்களில் மரங்கள் நடுவதற்கான ஆர்வத்தை உண்டாக்குவதுடன் அவர்களின் வருவாயையும் பெருக்கும். மாநிலத்தில் 800 மில்லி மீட்டருக்கும் குறைவாக மழைபெய்யும் வறட்சியான 20 மாவட்டங்களில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளுக்கு அருகாமையிலுள்ள 20 எக்டர் தரிசு நிலங்களில் கடினமான, எப்போதும் பசுமையான, வறட்சியை தாங்கக்கூடிய தன்மையுடைய மரவகைகள் நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்தோட்ட உற்பத்திக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.15,000/– வீதம் செலவு செய்யப்படும். இவ்வகைத் தோட்டங்கள் விவசாயிகளையும் மற்றவர்களையும் அவர்தம் நிலங்களில் மரம் நடுவதற்கு ஊக்குவிக்கும். எனவே பகுதி–II



ஆம் ஆண்டு ரூ.60 லட்சம் செலவில் திட்டத்தின்கீழ் 2001–2002 20 மாவட்டங்களில் பசுமைப்பகுதி மாவட்டத்திற்கு ரூ.3 லட்சம் வீதம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தோட்டங்கள் எழுப்ப

இவை தவிர, 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.139 லட்சம் செலவில் இயற்கை தாவர மற்றும் வன உயிரின வளங்களைப் பாதுகாத்து வனத் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளது:

| வரிசை எண் | திட்டம் | செலவினம் (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | புதிதாக 50 பீட்டுகள் ஏற்படுத்துதல் மற்றும் 50 வனக் காப்பாளர்கள் மற்றும் 50 வனக் காவலர் பதவிகளை ஏற்படுத்தல் | 50.60 |
| 2. | வன பாதுகாப்பினை பலப்படுத்த ஒவ்வொன்றும் ரூபாய் 5 லட்சம் செலவில் 5 சரகங்களுக்கு கம்பியில்லா தொலை தொடர்பு சாதனங்கள் வாங்குதல் | 25.00 |
| 3. | செங்கல்பட்டு மற்றும் தாம்பரத்தில் இரண்டு தடிமர சேமிப்பு கிடங்குகள் கட்டுதல் | 15.00 |
| 4. | வனத் தணிக்கை சாவடிகளுக்கு ஒவ்வொன்றும் ரூபாய் 2.20 இலட்சம் செலவில் நிரந்தர கட்டடம் அமைத்து பலப்படுத்துதல் | 4.40 |
| 5. | வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை மேம்படுத்தல் | 24.00 |
| 6. | வேலூர் அமிர்தி உயிரியல் பூங்காவை மேம்படுத்தல் | 5.00 |
| 7. | வேடந்தாங்கல் பறவை சரணாலயத்தில் படுக்கை வசதி கொண்ட துயில்கூடம் கட்டுதல் | 15.00 |
| | மொத்தம் | 139.00 |

[2001 செப்டம்பர் 4

**9. வன உயிரினச் சரணாலயங்கள் :**

1999 ஆம் ஆண்டு திருவாரூர் மாவட்டத்தில் வடுவூர் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசாணை பிறப்பித்துள்ளது. மேலும் புதிய வன உயிரினச்சரணாலயங்கள் கொடைக்கானல், தர்மபுரி, விழுப்புரம், பவானிசாகர், கன்னியாகுமரி, பிச்சாவரம் மற்றும் கோடியக்கரைப் பகுதிகளில் அமைக்க மத்திய அரசுடன் கலந்தாலோசனை செய்து அமைக்கப்படவுள்ளது.

**10. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்:**

தொழிற்சாலைகளுக்கு தேவைக்காக கூழ்மரங்கள் மற்றும் முந்திரி தோட்டங்கள் உற்பத்தி செய்தல், பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் பொதுமக்களின் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் ஆகியவை இக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுகையின் கீழ் 71,013 ஹெக்டேர் காப்புக் காடுகள் வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடியாகும். மற்றும் இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடியாகும்.

சாதனைகள்:

1999–2000 மற்றும் 2000–2001 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ஹெக்டரில்)

| | 1999-2000 | 2000-2001 |
|---|---|---|
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 2336 | 1214 |
| முந்திரி தோட்டங்களின் உற்பத்தி | 481 | 1351 |
| சவுக்குத்தோட்டங்களின் உற்பத்தி | 70 | 111 |

கூழ்மர விநியோகம்:

2000–2001 ஆம் ஆண்டில் இக்கழகம் 1,50,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை அறுவடை செய்துள்ளது. அவ்வாறு அறுவடை செய்த கூழ்மரங்களில் 49,000 மெட்ரிக் டன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கும் 12,000 மெட்ரிச் டன் சேஷசாயி காகித மற்றும் ஆலை நிறுவனத்திற்கும் விநியோகம் செய்யப்பட்டது. எஞ்சியுள்ளவற்றை விற்க கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.



2001 செப்டம்பர் 4]

*சந்தன எண்ணெய் தொழிற்சாலை:*

1999–2000 ஆம் ஆண்டில் இக்கழகம் 7698.225 கிலோ கிராம் சந்தன எண்ணெய் மற்றும் பிற இதர பொருட்களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கழகம் 7975.865 கிலோகிராம் சந்தன எண்ணெயும், மற்றும் பிற இதர பொருட்களும் விற்கப் பட்டுள்ளது. கழகம் சந்தன மர பொருட்களின் பெயர்களை உள்ளூர் மற்றும் அகில உலக சந்தைகளில் நிலை நிறுத்துவதற்கான தீவிர முயற்சியில் வனத்தோட்டக் கழகம் ஈடுபட்டுள்ளது.

*2001–2002 ஆம் ஆண்டின் திட்டங்கள்:*

2001–2002 ஆம் ஆண்டில் இக்கழகம் 1,500 எக்டேரில் வீரிய முறையில் பலன் தரும் கூழ்மரத்தோட்டங்களையும் மற்றும் 1500 ஹெக்டரில் முந்திரி தோட்டங்களையும் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. நுட்பவியல் ஒட்டு மூலம் 100 ஹெக்டர் பரப்பளவில் சவுக்குத் தோட்டங்கள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் 1999–2000 மற்றும் 2000–2001 (உற்பத்தி) மற்றும் 2001–2002 ஆம் ஆண்டின் வரவு செலவு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் லட்சத்தில்)

| வருடம் | வருவாய் | செலவுகள் | இலாபம் (+) நட்டம் (—) |
|---|---|---|---|
| 1999-2000 | 3673.04 | 2732.08 | (+) 940.96 |
| 2000-2001 | 4070.76 | 2696.93 | (+) 1373.83 |
| 2001-2002 மதிப்பீடு | 3359.03 | 2728.24 | (+) 630.79 |

**11. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்:**

தற்போதுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது முந்தைய அரசு தேயிலைத் தோட்டமாகும். இக்கழகம் 1956 ஆம் வருடத்திய கம்பெனி சட்டத்தின்கீழ் 22–08–1975–ல் பதிவு செய்யப்பட்டு 01–04–1976–லிருந்து ஒரு கழகமாக செயல்படத் தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து வெளிநாடுகளிலிருந்து இந்தியா திரும்பிய தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து மறுவாழ்வு கொடுப்பதை இதன் முதல் மற்றும் முக்கிய நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

[2001 செப்டம்பர் 4

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வு பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் துவங்கப்பட்டது. இக்கழகத்தின் அதிகார யளிக்கப்பட்ட மூலதனம் ரூ.10 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.5.96 கோடியாகும்.

**பசுந்தேயிலை உற்பத்தி**

(லட்சம் கிலோவில்)

| 1999—2000 (உற்பத்தி) | 2000—2001 (உற்பத்தி) | 2001—2002 (மதிப்பீடு) |
|---|---|---|
| 477.45 | 422.83 | 500.00 |

**பதப்படுத்தப்பட்ட தேயிலை**

(லட்சம் கிலோவில்)

| 1999—2000 (உற்பத்தி) | 2000—2001 (உற்பத்தி) | 2001—2002 (மதிப்பீடு) |
|---|---|---|
| 113.10 | 101.35 | 119.50 |

இக்கழகம் இதுவரை 2445 குடும்பங்களுக்கு மறுவாழ்வளித்து 7100 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் அதே அளவு தொழிலாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது. தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு அவர்களின் அடிப்படை வசதிகளான வீட்டுவசதி, மின்சாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறைகள் மற்றும் விடுப்பு ஊதியம், மகப்பேறு விடுப்பு, கடன்கள், தொழிலாளர் நலநிதி போன்ற நிதி பலன்களை வழங்கி வருகின்றது. மேலும் தோட்டப் பகுதிகளில் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நவீன வசதிகளைக் கொண்ட இரண்டு மருத்துவமனைகள் இயங்கி வருகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தொழிலாளர்களின் நலனுக்காக கழகம் பள்ளிகளை தனியே இயக்கி வருகின்றது.

**வருவாய் மற்றும் செலவினங்கள்**

(ரூபாய் லட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | வரி செலுத்திய பிறகு நிகர லாபம் (+) நட்டம் (—) |
|---|---|---|---|
| 1999-2000 | 6254 | 6242 | (+) 12 |
| 2000-2001 | 5005 | 5569 | (-) 564 |
| 2001-2002 மதிப்பீடு | 5916 | 6666 | (-) 750 |



2001 செப்டம்பர் 4]

இக்கழகம், தேயிலை விலை வீழ்ச்சியினாலும், தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அதிக செலவினாலும் மற்றும் தேயிலை இறக்குமதி கொள்கை தாராளமயமாக்கலினாலும், நட்டத்தில் இயங்கி வருகிறது.

**12. அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில் :**

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4279.78 ஹெக்டர் வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனி சட்டத்தின்கீழ் 20.08.1984அன்று, அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண்வளம், தட்பவெப்ப நிலை வெப்பநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. நிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது.

**உற்பத்தி மற்றும் விற்பனை**

| வருடம் | ரப்பர் உற்பத்தி அளவு (மெட்ரிக் டன்னில்) | விற்பனை (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூபாய் லட்சங்களில்) |
|---|---|---|---|
| 1999-2000 | 2602 | 2602 | 948.55 |
| 2000-2001 | 3100 | 2813 | 946.37 |
| 2001-2002 (மதிப்பீடு) | 2800 | 2800 | 821.75 |

**வருவாய் மற்றும் செலவுகள்**

(ரூபாய் லட்சங்களில்)

| வருடம் | ரப்பர் விற்பனை மூலம் வருவாய் | செலவுகள் | லாபம் (+) நட்டம் (—) |
|---|---|---|---|
| 1999-2000 | 948.55 | 1549.74 | (-) 601.19 |
| 2000-2001 | 946.37 | 1591.32 | (-) 644.95 |
| 2001-2002 (மதிப்பீடு) | 821.75 | 1725.50 | (-) 903.75 |

அரசு ரப்பர் கழகம், கடந்த சில ஆண்டுகளாக சந்தையில் ஏற்பட்ட ரப்பர் விலை வீழ்ச்சியினாலும், இறக்குமதி செய்யப்பட்ட ரப்பர், மலிவான

[2001 செப்டம்பர் 4

விலையில் கிடைப்பதாலும், ரப்பர் உற்பத்தியில் ஏற்படும் அதிக செலவுகளினாலும், நட்டத்தில் இயங்கி வருகிறது.

முடிவுரை:

வனவியல் செயல்கள் யாவும் அதிக அளவில் உழைப்புத் திறனை நம்பியே உள்ளது. அதிகப்படியான மூலதனம் ஒவ்வொன்றும், குறிப்பாக, ஏழை கிராம மக்கள் மற்றும் மலைவாழ் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும். நலிவடைந்த மக்கள், குறிப்பாக பழங்குடியினருக்கு ஊதியம் கிடைக்கும்வகையில் தேவையான வேலைவாய்ப்பினைத் தொடர்ந்து உருவாக்கிட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

## இணைப்பு-IV

(54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 46 – செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

#### முன்னுரை

இலக்கியத்தில் மிகப் பழமையான நூலையும் அறிவியலில் புத்தம் புதிய நூலையும் படிக்கவேண்டும் என்பார்கள். செய்தி–மக்கள் தொடர்புத் துறைக்கும் இக்கருத்துக்கும் ஒரு வகையில் பொருத்தமுண்டு. செய்திப் பகிர்வும், மக்கள் தொடர்பும் பழமையானவை. ஆனால் அவை தொடர்பான உத்திகள் புதுமையானவை.

விளம்பரக்கலை, செய்தி–மக்கள் தொடர்பு – இவற்றின் குறிக்கோளே, சரியான செய்தி சரியான நேரத்தில் சரியான இலக்கை அடையச் செய்வதுதான்! நாம் எய்த விரும்பிய விளைவை ஏற்படுத்தும் வண்ணம் இவை அமைந்திட வேண்டும்.

அரசு, சமுதாயம் இரண்டுக்கும் இடையே இடைவெளியைக் குறைத்து, இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கியிருக்குமாறு செய்யவேண்டும். இந்த விளைவை ஏற்படுத்தும் இடையில்லா முயற்சியே, செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் விளம்பரத் துறையின் பணியாகும்.

செய்தி–மக்கள் தொடர்புத் துறை இயக்ககம் அரசாங்கத்தின் பழமையான அங்கம்! தொன்மையான துறை! அரசின் செயற்பாடுகள் – குறிப்பாக நலப்பணிகள், வளர்ச்சிகள், திட்டங்கள் பற்றிய புதிய தகவல்களை எல்லோரும் அறிந்துகொள்ளச் செய்வது இத்துறைக்கே உரிய பொறுப்பாகும். எனவே, தகவல் தொடர்பு மற்றும் தகவலை வழங்கும் விதம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள புத்தம் புதிய மாறுதல்களோடு, செய்தி–மக்கள் தொடர்புத் துறை செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மேலும், இத்துறை சார்ந்த பணியாளர்களுக்கு, மக்கள் தொடர்பு சாதனம், விளம்பரம் மற்றும் தகுந்த தகவல் தொடர்பு உத்திகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கேற்ப, புதிய பயிற்சி அளிக்க வேண்டிய அடிப்படைத் தேவையும் உள்ளது. இத்தேவை உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

[2001 செப்டம்பர் 4

செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் பணிகள் பல்வேறு வகைப்பட்டவை. தகவல் களஞ்சியமாய்த் தமிழரசு ஏடு – கண்டு மகிழ்ந்து பயன்பெறத் திரைப்படப் பிரிவு, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் – துறைசார்ந்த செய்திகளை விளக்கமாய்த் தெரிவிக்கும் விளம்பரப் பிரிவு – ஆட்சியின் சாதனைகளைக் காட்சிக்கு வைக்கும் பொருட்காட்சி – சான்றோர் நினைவைப் பேணி வளர்க்கும் நினைவகப் பிரிவு – அரசின் அறிவிப்பை வழங்க அல்லும் பகலும் இயங்கும் செய்தி வெளியீட்டுப் பிரிவு – கேட்டவுடனே தகவல் வழங்கும் மேற்கோள் பிரிவு – திட்டப் பலன்களைச் சென்று விளக்கும் பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் – இவை செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சிறப்புமிகு அங்கங்களாகும்.

இவற்றின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரைகளுக்கிணங்க வகுக்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :

1. மாநிலத்தின் தொலைதூரப் பகுதிகளையும் மூலைமுடுக்குகளையும் சென்று சேருவதை உறுதிப்படுத்தும்வகையில் களவிளம்பரத்தை மையமாகக் கொண்டு மக்கள் தொடர்பு உத்திகள் புதிதாக வடிவமைக்கப்படும்.

2. தனியார் மக்கள் தொடர்பு சாதனங்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களுக்கு இணையதள கட்டமைப்பு வசதிகளும், கருவிகளும் நவீனப்படுத்தப்படும். இதன் மூலம், செய்திகளையும் புகைப்படங்களையும் உடனுக்குடன் பரிமாறிக்கொண்டு இணைந்து செயல்பட இயலும்.

3. செய்தித் துறைக்கென்று தனியாக இணையதளம் ஒன்றை ஏற்படுத்துவதுடன், இயக்குநரகத்தை மையமாகக்கொண்டு மாவட்ட மக்கள்–தொடர்பு அலுவலகங்கள் கணினிகள் மூலம் இணைக்கப்படும்.

4. அரசு வெளியீடுகள், குறிப்பாக, 'தமிழரசு' இதழின் உருவமும் உள்ளடக்கமும் மேம்படுத்தப்படும்.

5. செய்தியாளர்க்கு அங்கீகார அட்டை வழங்கும் முறை நெறிப்படுத்தப்படும். செய்தியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எளிதில் கிடைக்கும் வண்ணம் வழிமுறைகள் எளிமைப்படுத்தப்படும்.

6. ஆவணங்களைப் பாதுகாத்து வைத்தலுக்கும், புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகள் போன்றவற்றைத் தொகுத்து,



2001 செப்டம்பர் 4]

தேவைப்படும்போது திரும்ப பயன்படுத்துவதற்கும் மற்றும் புள்ளி விவரங்களை முறைப்படுத்தி எப்போதும் தயார் நிலையில் வைத்து, எளிதாகப் பராமரிக்கவும் கணினிகளைப் பயன்படுத்தி மென்பொருள்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

மக்கள் தொடர்பு ஒரு கலை! விளம்பரம் ஒரு கலை! இந்தக் கலைகள் அறிவியல், தொழில்நுட்ப உத்திகளோடு புதிய பரிணாமத்தை அடையவேண்டியது இன்றைய தேவை; அதைச் செம்மையுறச் செய்வதே செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் சேவை!

## அத்தியாயம் – 1

### பத்திரிகையாளர் நலன் – செய்தி வெளியீட்டுப் பிரிவு

பத்திரிகைகள், மக்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்தும் முக்கிய சாதனமாக உள்ளன. தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, அரசுக்கும் பத்திரிக்கைகளுக்கும் உள்ள உறவை மேம்படுத்தும் முக்கிய பணியினை நிறைவேற்றும் பிரிவாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்களின் அலுவலகங்களில் இருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள் மற்றும் அரசின் அனைத்துத் துறைகளில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் ஆக்கப்பணிகளைப் பற்றி நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்கள், வானொலி மற்றும் செய்தி இணைய தளங்கள் என சுமார் 100 தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு நேரிலும், ஃபேக்ஸ் மற்றும் கணினி வழியாகவும் செய்திகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்படும் செய்தியாளர் கூட்டம் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பி, அங்குள்ள செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக அனைத்து மாவட்டங்களிலும் செய்திகள் வெளியாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[2001 செப்டம்பர் 4

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை ஆகியவற்றைப் புகைப்படமெடுத்து அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்குதல் மற்றும் தொலைக்காட்சியினர் இந்நிகழ்வுகளைப் படமெடுப்பதற்கான அனைத்து உதவிகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

### நாளிதழ்களின் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்

சென்னையிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வெளியாகும் நாளிதழ்களின் சென்னைச் செய்தியாளர்கள், அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப்பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு அரசால் அமைக்கப்பட்ட செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப ஆண்டுதோறும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 464 பேர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு அங்கீகார அட்டைகள் பெற்ற பத்திரிகையாளர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்ய பயண அட்டை, இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகை, அரசு வாடகைக் குடியிருப்பு வீடுகள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சியினருக்கு செய்தியாளர் அட்டை

அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பதற்கென பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இதுவரை 269 பேருக்கு செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாளிதழ்களின் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகார அட்டை வழங்கப்படுவதைப் போன்று, நாள்தோறும் செய்தி சேகரிக்க வரும் தனியார் தொலைக்காட்சி



2001 செப்டம்பர் 4]

நிறுவனங்களின் செய்தியாளர்களுக்கும் அரசு அங்கீகார அட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். எனவே, தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்

பத்திரிகைத் துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகளும் அதற்கு மேலும் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு 'முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கும் "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித்திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு தலா ரூ.50,000 நிதியுதவியாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 9 பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு, தலா ரூ. 25,000/-மும், 6 பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கு, தலா ரூ.40,000-மும், ஒரு பத்திரிகையாளர் குடும்பத்திற்கு ரூ.50,000-மும், ஆக மொத்தம் 16 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5.15 இலட்சம் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, 2001-2002 நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவி நிதியை ரூ.50,000-லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் பத்திரிகையாளர் குடும்பங்களுக்கான பொருளாதார ஆதரவு நிலையை உயர்த்திட இந்த அரசு வழிவகை செய்துள்ளது.

### பத்திரிகையாளர் ஓய்வூதியம்

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1986 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதந்தோறும் ரூ.250 பத்திரிக்கையாளர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர், பத்திரிகையாளர் ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்பொழுது மாதந்தோறும் ரூ.2,000 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. ஓய்வு பெற்று வறுமை நிலையில் உள்ள 76 பத்திரிக்கையாளர்கள் தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் மாத ஓய்வூதியமாக ரூ.2,000 பெற்று வருகிறார்கள். இத்தொகையை மேலும் உயர்த்தி வழங்க வேண்டும் என்ற

பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையை ஏற்று 2001–2002 நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, பத்திரிக்கையாளர் ஓய்வூதியத் தொகை உயர்த்தி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிக்கையாளர் இயற்கை எய்திவிட்டால், அவரின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.500 அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. மறைந்த 5 பத்திரிக்கையாளர்களின் துணைவியர்களுக்கு தற்பொழுது பத்திரிக்கையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது பத்திரிக்கையாளர் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பத்திரிகையாளர்களுக்கு சுலபத் தவணையில் வீடுகள்**

2001–2002 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, தமிழகத்தில் உள்ள அனைத்து உழைக்கும் பத்திரிக்கையாளர்களும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் அல்லது அடுக்குமாடி வீடுகளை சுலபத்தவணையில் வாங்குவதற்கு ஏதுவாக ஓர் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இத்திட்டம் விரைவில் அமல்படுத்தப்படும்.

**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்து உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் புகைப்படப் பிரிவுக்கென ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் டிஜிட்டல் கேமரா ஒன்று புதிதாக வாங்கப்பட உள்ளது. இந்த கேமராவினால் தெளிவான, துல்லியமான புகைப்படங்களை இ–மெயில் மூலம் பத்திரிக்கைகளுக்கு உடனுக்குடன் அனுப்ப இயலும்.





**செய்தி வெளியீட்டுப் பிரிவுக்கு கணினி மற்றும் ஜெராக்ஸ் இயந்திரம்**

செய்தி வெளியீட்டுப் பிரிவுக்கென ரூ.98 ஆயிரத்திற்கு மிகாமல் ஒரு கணினியும், அதற்குத் தேவையான உபகரணங்களும் வாங்க ரூ.1.15 இலட்சம் செலவிற்கு மிகாமல் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்றும் பகுதி – 2 திட்டத்தின் கீழ் வாங்கி வழங்கப்படவுள்ளது.

**செய்தித்துறைக்கென தனி இணைய மேடை ஒளிபரப்பு (WEB STREAMING)**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் பத்திரிக்கைகள் மற்றும் ஏனைய செய்தி நிறுவனங்கள் எளிதாகப் பெறும்வகையில் செய்தித் துறைக்கென தனி இணைய மேடை ஒளிபரப்பு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் அரசின் முக்கிய நிகழ்ச்சிகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த செய்திகளை உடனுக்குடன் ஒளிபரப்ப இயலும். இந்த இணைய தளம் பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் விளம்பர சாதனங்கள்**

*மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுலகங்களுக்கு வீடியோ கேசட் பிளேயர்கள்*

26 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.1.82 இலட்சம் செலவில் 26 வீடியோ கேசட் பிளேயர்கள் 2001–2002 பகுதி – 2 திட்டத்தின்கீழ் வாங்கி வழங்கப்படவுள்ளது.

*4 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வி.சி.ஆர். வசதியுடன் 4 வீடியோ புரொஜெக்டர்கள்*

காஞ்சிபுரம், கடலூர், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.16 இலட்சம் செலவில் வி.சி.ஆர். வசதியுடன் நான்கு வீடியோ புரொஜெக்டர்கள் பகுதி–2 திட்டத்தின்கீழ் வாங்கி வழங்கப்படவுள்ளது.

[2001 செப்டம்பர் 4

**புதிய மாவட்டம் அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு**

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தை அமைக்கத் தேவையான அனைத்து பொருட்கள், தகவல் தொடர்பு மற்றும் விளம்பர சாதனங்கள் வாங்க ரூ.5 இலட்சம் பகுதி – 2 திட்டத்தின்கீழ் வழங்கப்படவுள்ளது.

**8 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வீடியோ வேன்கள்**

8 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் 8 வீடியோ வேன்கள், பகுதி – 2 திட்டத்தின்கீழ் வாங்கி வழங்கப்படவுள்ளது.

**மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள்**

காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய 9 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரூ.9 இலட்சம் செலவில் 9 ஜெராக்ஸ் இயந்திரங்கள், பகுதி – 2 திட்டத்தின்கீழ் வாங்கி வழங்கப்படவுள்ளது. ஜெராக்ஸ் வசதி இல்லாத ஏனைய 13 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 13 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்கி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு புகைப்பட இருட்டறை வசதி, ஃபேக்ஸ் இயந்திரங்கள் மற்றும் கேமராக்கள் வாங்கி வழங்குவது**

புகைப்படக்காரர் இல்லாத 9 மாவட்டங்களுக்கு புகைப்படக்காரர்களை நியமிக்கவும், அவர்களுக்குத் தேவையான கேமராக்கள் வாங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், புகைப்பட இருட்டறை வசதி இல்லாத 10 மாவட்டங்களுக்கு புகைப்பட இருட்டறை வசதிகளும், ஃபேக்ஸ் இயந்திரம் இல்லாத 13 மாவட்டங்களுக்கு ஃபேக்ஸ் இயந்திரங்களும் வாங்கி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

**அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு கணினி வசதி**

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களை நவீனப்படுத்தி, கணினி மயமாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள ஆலோசனையின்படி, 30 கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 2

### நினைவகங்கள்

நாட்டு சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களின் நினைவினை என்றென்றும் போற்றிடும்வகையில், அரசு நினைவகங்கள் மற்றும் சிலைகள் அமைத்து சிறப்பு செய்து வருகிறது. தற்போது, அரசால் 37 நினைவகங்கள், 2 அரங்கங்கள், 4 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைக்கப்படும் நினைவகங்கள் செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலும், பொதுப்பணித் துறையின் பராமரிப்பிலும் உள்ளன. இத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் பூங்கா ஆகியவை பின்வருமாறு :

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம், பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், சென்னை
2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், சென்னை
3. வள்ளுவர் கோட்டம், சென்னை
4. கலைவாணர் அரங்கம், சென்னை
5. இராஜாஜி மண்டபம், சீரணி அரங்கம், சென்னை
6. காந்தி மண்டபம், கிண்டி, சென்னை
7. இராஜாஜி நினைவாலயம், கிண்டி, சென்னை
8. காமராஜர் நினைவகம், கிண்டி, சென்னை

[2001 செப்டம்பர் 4

9. மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை
10. தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை
11. காமராஜர் நினைவு இல்லம், தியாகராயநகர், சென்னை
12. பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம், கிண்டி, சென்னை
13. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி, சென்னை
14. வெள்ளையனே வெளியேறு இயக்க பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை
15. சுதந்திரப் பொன்விழா நினைவுச்சின்னம் (போர் நினைவுச் சின்னம் அருகில்), சென்னை
16. குடியரசு பொன்விழா நினைவுத் தூண் (காந்தி சிலை அருகில்) சென்னை
17. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்
18. முத்து மண்டபம் – இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வேலூர்
19. அண்ணா கலை அரங்கம், வேலூர்
20. சிப்பாய்க் கலகம் நினைவுத் தூண், வேலூர்
21. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி, தருமபுரி மாவட்டம்
22. பெரியார்–அண்ணா நினைவகம், ஈரோடு
23. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்
24. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், திருச்சிராப்பள்ளி
25. பகுத்தறிவுக் கவிராயர், உடுமலை நாராயண கவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.



2001 செப்டம்பர் 4]

26. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்
27. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்
28. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
29. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
30. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
31. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்
32. தியாகசீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்
33. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெல்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம்
34. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
35. காமராஜர் இல்லம், விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
36. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
37. பாரதி இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
38. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்
39. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி
40. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கன்னியாகுமரி
41. சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

[2001 செப்டம்பர் 4

12. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம். நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

13. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான கயத்தாறில் பூங்கா, தூத்துக்குடி மாவட்டம்.

14. பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்

| | | |
|---|---|---|
| மொத்தம் நினைவகங்கள் | – | 37 |
| அரங்கங்கள் | – | 2 |
| நினைவுத் தூண் | – | 4 |
| பூங்கா | – | 1 |

2. அரசால் அமைக்கப்பட்டுள்ள நினைவகங்களை இன்னும் செம்மையாகப் பராமரிக்கும் வகையில், சென்னை நகரிலுள்ள நினைவகங்களையும் மற்றும் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட நினைவகங்களை மட்டும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, தொடர்ந்து பொதுப்பணித் துறையின் மூலம் பராமரிக்கப்படும். அவை பின்வருமாறு :

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம், பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், சென்னை
2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், சென்னை
3. வள்ளுவர் கோட்டம், சென்னை
4. கலைவாணர் அரங்கம், சென்னை
5. இராஜாஜி மண்டபம், சீரணி அரங்கம், சென்னை
6. காமராஜர் நினைவு இல்லம், தியாகராய நகர், சென்னை
7. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி, சென்னை
8. காந்தி மண்டபம், கிண்டி, சென்னை
9. காமராஜர் நினைவகம், கிண்டி, சென்னை



2001 செப்டம்பர் 4]

10. இராஜாஜி நினைவாலயம், கிண்டி, சென்னை
11. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், கிண்டி, சென்னை
12. தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை
13. மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை
14. வெள்ளையனே வெளியேறு இயக்க பொன்விழாநினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை
15. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்)சென்னை
16. குடியரசு பொன்விழா நினைவுச் சின்னம் (காந்தி சிலை அருகில்), சென்னை
17. பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்
18. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்
19. பெரியார்–அண்ணா நினைவகம், ஈரோடு
20. காமராஜர் இல்லம், விருதுநகர்
21. அண்ணா கலை அரங்கம், வேலூர்
22. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
23. பாரதி இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
24. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்
25. தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப் பட்டி, மதுரை மாவட்டம்

3. கன்னியாகுமரியில் இத்துறையால் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை, சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பராமரிப்புப் பணிகளை சுற்றுலாத்துறையின் கண்காணிப்பில் பொதுப்பணித் துறை மேற்கொள்ளும்.

4. மாவட்டங்களில் அரசால் அமைக்கப்பட்டுள்ள நினைவகங்களை நிர்வாகக் காரணங்களை முன்னிட்டும், மேலும் சிறப்பான முறையில்

[2001 செப்டம்பர் 4

பராமரித்திடவும் மற்றும் வருவாயைப் பெருக்கிடவும், கீழ்க்காணும் நினைவகங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்படும்:

1. சிப்பாய்க் கலகம் நினைவுத்தூண், வேலூர்
2. முத்துமண்டபம், இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங் ராஜா நினைவகம், வேலூர்
3. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி, தருமபுரி மாவட்டம்
4. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், கோவை மாவட்டம்
5. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோவை மாவட்டம்
6. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், திருச்சி
7. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.
8. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்
9. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
10. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
11. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
12. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
13. சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
14. பொதுவுடைமை வீரர் பஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
15. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி



2001 செப்டம்பர் 4]

16. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கன்னியாகுமரி
17. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான கயத்தாறில் பூங்கா தூத்துக்குடி மாவட்டம்.
18. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்
19. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெல்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம்

சென்னையிலுள்ள காயிதெமில்லத் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் கண்ணியத்திற்குரிய காயிதெமில்லத் மணிமண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு விரைவில் பணிகள் முடிக்கப்பட உள்ளன.

வேலூரில் உள்ள அண்ணா கலை அரங்கம் ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள மருது பாண்டியர் நினைவிடத்தில் ரூ.20.50 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம் கட்டாரங்குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் அமைக்க ரூ.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## அத்தியாயம் - 3

### அரசு விழாக்கள்

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ் மொழிக்காகவும் அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர்களையும் நினைவுகூர்ந்து நாட்டு மக்கள் அறிந்திடும்வகையில், அவர்களது பிறந்த நாளினை அரசு விழாக்களாக கொண்டாடப்பட்டும், திருவுருவச்சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்தும் மரியாதை செலுத்தப்படுகிறது.

[2001 செப்டம்பர் 4

கடந்த ஆண்டுகளில் கீழ்க்கண்ட தலைவர்களின் பிறந்த நாளன்று திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. ஜனவரி 17 | – | முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர்.பிறந்தநாள் |
| 2. ஜனவரி 23 | – | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள் |
| 3. ஜனவரி 30 | – | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4. ஏப்ரல் 14 | – | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் |
| 5. ஏப்ரல் 27 | – | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் |
| 6. ஏப்ரல் 29 | – | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் |
| 7. ஜூன் 5 | – | கண்ணியத்திற்குரிய காயிதெமில்லத் பிறந்த நாள் |
| 8. ஜூன் 24 | – | கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள் |
| 9. ஜூலை 15 | – | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் |
| 10. ஜூலை 17 | – | தியாகிகள் தினம் |
| 11. செப்டம்பர் 5 | – | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள் |
| 12. செப்டம்பர் 15 | – | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் |
| 13. செப்டம்பர் 17 | – | தந்தை பெரியார் பிறந்த நாள் |
| 14. செப்டம்பர் 29 | – | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள் |
| 15. அக்டோபர் 2 | – | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் |
| 16. அக்டோபர் 30 | – | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்த நாள் |
| 17. நவம்பர் 14 | – | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் |



2001 செப்டம்பர் 4]

| | | |
|---|---|---|
| 18. டிசம்பர் 10 | – | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் |
| 19. டிசம்பர் 11 | – | மகாகவி பாரதியார் பிறந்த நாள் |

1999 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 17ஆம் நாள் அன்று, கிண்டி காந்தி மண்டப வளாகத்திலுள்ள தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்ற பாஷ்யம் ஆகியோரது திருவுருவச்சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு தியாகிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் கீழ்க்கண்ட தலைவர்களின் பிறந்தநாள் விழாக்கள், மாவட்டங்களில் கொண்டாடப்பட்டன:

1. தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா, மே திங்கள் 12 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

2. சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா, அக்டோபர் 2 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

3. சிவகங்கை, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்தநாள் விழா, அக்டோபர் 30 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

4. அனைத்து மாவட்டங்களிலும் அக்டோபர் 31 ஆம் நாள், மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்களை நினைவுகூரும் வகையில் தேசிய மறுஅர்ப்பணிப்பு நாள் நடத்தப்பட்டது.

5. தருமபுரி மாவட்டத்தில் டிசம்பர் 10 ஆம் நாள், மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

6. தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் டிசம்பர் 11 ஆம் நாள், மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

7. சென்னையில், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் பெயரில் விருது வழங்கும் விழா டிசம்பர் 24 ஆம் நாள் நடத்தப்பட்டது.

8. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் 3–8–2001 அன்று வல்வில் ஓரி விழா கொண்டாடப்பட்டது.

9. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாள் விழா, 10-8-2001 அன்று கொண்டாடப்பட்டது.

10. வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா 13-8-2001 அன்று, தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் கொண்டாடப்பட்டது. இனிவரும் காலங்களில் வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் மார்ச் மாதம் 31 ஆம் நாள் கொண்டாடப்படும்.

2001-2002 ஆம் ஆண்டில் மேற்கண்ட அரசு விழாக்கள் குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்படும்.

### பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்

அரசின் அனைத்துத் துறைகளும் பங்கேற்று, அந்தந்தத் துறைகள் சார்ந்த அரங்கங்கள் அமைத்து, அரசின் சாதனைகள் பற்றிய விளக்கங்கள், வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றிய கண்காட்சிகள் மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகின்றன. கலை நிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள், வீடியோ படக்காட்சிகள் போன்றவற்றை கிராமப் பகுதிகளில் ஏற்பாடு செய்து விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலம் முழுவதும் பரவலாக நடைபெறும் இம்முகாம்களின்போது, மக்களின் கோரிக்கை பற்றிய மனுக்கள் பெறப்பட்டு, உரிய அலுவலர்களுக்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் பொருட்டு அனுப்பி ஆவன செய்யப்படுகின்றன. அரசின் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இம்முகாம்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுக்கு 12 இடங்களில் ஊராட்சி ஒன்றிய அளவில் அமைத்து கள விளம்பரப் பணிகளை முனைப்பாக நடத்திட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் போன்றவற்றை மாவட்டத்திலுள்ள மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.



அப்பணியினைத் தீவிரப்படுத்தி, செம்மையாகச் செயலாற்றும் வகையில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் "மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு" அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக் கூட்டம், வருங்காலத்தில் மாதம் ஒருமுறை, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூட்டப்படும். இக்கூட்டத்தில் அரசின் திட்டங்கள் விளம்பரப்படுத்தப்படவேண்டிய முறைகள் பற்றி விவாதிக்கப்பட்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## அத்தியாயம் - 4

## திரைப்பட விருதுகள்

### சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டம்

திரைப்படத் துறையை ஊக்குவிக்கும்பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக்குழு அரசால் அமைக்கப்படுகிறது.

தேர்வு பெறும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன.

1. முதல் பரிசு – ரூ.2 இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு
2. இரண்டாம் பரிசு – ரூ.1 இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு
3. மூன்றாம் பரிசு – ரூ.75 ஆயிரம் மற்றும் நினைவுப் பரிசு
4. சிறப்புப் பரிசு – ரூ.75 ஆயிரம் மற்றும் நினைவுப் பரிசு

திரைப்படங்களில் பெண்களை இழிவுபடுத்துவதைத் தவிர்க்கவும், பெண்கள் நிலையை உயர்த்திக் காட்டவும் தயாரிக்கப்படும் திரைப்படத்திற்கு ரூ.1.25 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

[2001 செப்டம்பர் 4

தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

**கலைத் துறை வித்தகர் விருதுகள்**

திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம்பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜாசாண்டோ, எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி, தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அரசு மானியம்**

சமுதாய நோக்குடன் கூடிய தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்வதற்காக அரசினால் ஆண்டுதோறும் ஒரு தேர்வுக்குழு அமைக்கப்படுகிறது. படம் வெளியான ஆறு மாதங்கள் வரை 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல் எடுக்கப்படும் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

**கேளிக்கை வரி விலக்கு அளிக்கும் திட்டம்**

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், தகுதியுடைய திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் நான்கு வாரங்களுக்கு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**அண்ணல் அம்பேத்கர் படம் தமிழாக்கத்திற்கு ஊக்கம்**

அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை, தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் ஆங்கில மொழியில் திரைப்படமாக எடுத்துள்ளது. அத்திரைப்படம் தமிழாக்கம் செய்து வெளியிடப்படுமேயானால், தமிழக அரசின் உதவித் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

**திரைப்படத் துறையினருக்கு அரசின் சலுகைகள்**

1. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

2. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

3. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

4. திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் சாதனை புரிந்தவர்களுக்கு வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

5. நியாயமான கட்டணங்களில் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் படப்பிடிப்பு, ஸ்டுடியோ மற்றும் வசதிகள் அளிக்கப்படுகின்றன.

6. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது.

7. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. சண்டைக் காட்சிகளில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

## அத்தியாயம் – 5

### தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

இந்தியாவிலேயே திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களையும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு நுணுக்கங்களையும் கற்றுத் தருகின்ற மூன்று முக்கியமான திரைப்படக் கல்லூரிகளில் தமிழக அரசால் நடத்தப்படும் தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் ஒன்றாகும். ஏனைய

[2001 செப்டம்பர் 4

இரண்டு கல்வி நிறுவனங்கள் பூனா மற்றும் கொல்கத்தாவில் மைய அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனம் திரைப்படத் தொழில் நுணுக்கங்களையும் வீடியோ தயாரிப்பு உத்திகளையும் முக்கியமாக கலைத்திறனைப் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். கலை மற்றும் பொழுதுபோக்கு சாதனங்களில் முதன்மை பெற்றுத் திகழும் திரைப்படம், தொலைக்காட்சி, வீடியோ படங்கள் ஆகியவற்றின் தயாரிப்பில் தரமான பயிற்சி அளிப்பதும் இவை தொடர்பான தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பயிற்றுவிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த நிறுவனத்தினால் நடத்தப்பட்டுவரும் திரைப்பட இயக்கம் மற்றும் திரைக்கதை வசனம் எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, படத்தொகுப்பு மற்றும் படச்சுருள் பதனிடுதல் ஆகிய ஐந்து துறைகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்பு வகுப்புகளில் உள்ள மாணவர் எண்ணிக்கை திரைப்படத் துறையின் தேவைக்கேற்ப அதிகரிக்கப்படும்.

பல்வேறு துறைகளின் மாணவர்கள் சேர்ந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும் அனைத்துப் பிரிவு மாணவர் ஒருவர் வீதம் கூடி ஒரு முழுமையான திரைப்படம் தயார் செய்வது குறித்து விவரமான பயிற்சி அளிக்கப்படுகிறது. இறுதியாண்டு மாணவர்கள் குழு தனியே ஒரு குறும்படம் தயாரிக்கவும் பாடத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு, தயாரிப்புச் செலவிற்காக ஆண்டுதோறும் ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லாப் பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவால் (AICTE) அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் மாணவர்கள் தயாரித்த பல குறும்படங்கள் தேசிய விருதுகளையும் பிற சிறப்பு விருதுகளையும் பெற்றுள்ளன.

இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் என்ற பெயரில் தலா ஒரு பவுன் தங்கப் பதக்கமும் ரூ.5,000 ரொக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.



2001 செப்டம்பர் 4]

தற்போதைய திரைப்பட உலகம், கணினி மூலம் தொழில்நுட்பங்களைப் புகுத்தி முன்னேற்றம் பெற்றுத் திகழ்கிறது. எனவே, தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுவரும் தொழில்நுட்பப் பயிற்சிகளான ஒளிப்பதிவு, ஒலிப்பொறியியல், படத்தொகுப்பு மற்றும் படம் பதனிடுதல் ஆகிய துறைகளில் கணினிமயமாக்கப்பட்ட அதிநவீன டிஜிட்டல் கருவிகள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக, இணையதளம் மற்றும் ஃபேக்ஸ் வசதியுடன் கூடிய கணினிகள் நிறுவ திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் – 6

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழகம் முழுவதும் நடைபெறும் தமிழக அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள், மக்கள் நலத்திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியன குறித்து வீடியோ செய்தி மலர்களையும் 35 மி.மீ. வண்ணப்படச் சுருளில் விளக்கப் படங்களையும் தயாரித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு 12 வீடியோ செய்தி மலர்களும், 6 விளக்கப் படங்களும் தயாரித்து வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் வீடியோ செய்தி மலர்கள் சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகளிலும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வேன்கள் மூலமும் பொது மக்களுக்குத் திரையிட்டுக் காட்டப்படுகின்றன. 35 மி.மீ. வண்ணப் படச்சுருளில் தயாரிக்கப்படும் விளக்கப் படங்களின் 73 பிரதிகள் மைய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் தமிழகமெங்கும் உள்ள திரையரங்குகளில் பொது மக்களுக்குத் திரையிட்டுக் காட்டப்படுகின்றன. இந்த நடைமுறையில் செய்திகள் மக்களைச் சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுவதால், 73 பிரதிகளுக்குப் பதிலாக 147 பிரதிகள் எடுத்து வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மக்கள் பயனடையக்கூடிய வகையில் குடும்பநலம், சமூகக் காடுகள், வேளாண்மை, சுகாதாரம், வனப்பாதுகாப்பு, கூட்டுறவு மற்றும் இதர துறைகள் குறித்து பல்வேறு துறைகள் அளிக்கும் நிதிக்கு ஏற்ப திரைப்படங்களையும், வீடியோ விளக்கப் படங்களையும் தயாரித்து வெளியிட்டு வருகிறது. இதுவரை 262 வீடியோ விளக்கப்

படங்கள் மற்றும் விளம்பரப் படங்கள் ஆகியவை தயார் செய்து வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தானே விளக்கப் படங்கள் தயாரிப்பதுடன், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் படத் தயாரிப்பாளர்களையும் பயன்படுத்துகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு பிற அரசுத் துறைகளுக்காக வீடியோ வி.எச்.எஸ். நகல்கள் எடுத்துத் தரும் பணியையும் மேற்கொள்கிறது.

மாவட்டங்களில் கள விளம்பரத்திற்கு வீடியோ செய்தி மலர்ப் பிரதிகள் எடுத்து திங்கள்தோறும் அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் ஒளிநாடா கருவிகள் மூலம் எடுக்கப்பட்டு வரும் வீடியோ படங்கள் நல்ல தரம் வாய்ந்ததாகவும் ஒளிபரப்புத் தகுதி உடையதாகவும் விளங்குகின்றன.

2001–2002 ஆம் நிதியாண்டில் பகுதி–2 திட்டத்தில் ஒரு பீட்டா ஒளிப்பதிவுக் கேமிரா ரூ.15 இலட்சம் செலவில் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 7

### எம்.ஜி.ஆர். அறிவு நகர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை புதிதாக மாற்றி அமைத்து "எம்.ஜி.ஆர். அறிவு நகர்" என்று பெயர் மாற்றம் செய்யப்படும்.

இம்மாநிலத்திலேயே, நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான சிறந்த களனாக எம்.ஜி.ஆர். அறிவு நகர் அமையும் வகையில் பெருந்திட்டம் ஒன்று புதிதாக வகுக்கப்படும். மேலும் அங்கு உலகத் தரம் வாய்ந்த மாநாட்டுக் கூடங்கள், அறிவுப் பூங்காக்கள் மற்றும் ஓட்டல்கள் போன்ற வசதிகளும் உருவாக்கப்படும்.





## அத்தியாயம்-8

### சினிமா, வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்றாகும். மேலும், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிக படங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு நிதி ஆதாரமாக இருந்து வருகிறது.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு நிறைய சலுகைகளை திரைப்படத் துறைக்கு அளித்து வருகிறது. அதிலும், குறிப்பாக ஏழை மக்களுக்கும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கும் முக்கியமான பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக திரைப்படம் தொடர்ந்து இருந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் மொத்தம், 2354 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவையாவன:

| | சாதாரணம் | குளிர்சாதன வசதி |
|---|---|---|
| 1. நிரந்தர திரையரங்குகள் | 1372 | 159 |
| 2. பகுதி நிரந்தர திரையரங்குகள் | 183 | – |
| 3. நடமாடும் திரையரங்குகள் | 626 | – |
| 4. திறந்தவெளி திரையரங்குகள் | 12 | – |
| 5. வீடியோ திரையரங்குகள் | 2 | – |
| மொத்தம் | 2195 | 159 |

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொதுமக்களுக்குக், கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட நிலைப்புத் தன்மை, முறையான பராமரிப்பு இவற்றைத் தருகின்ற வகையில் 1955 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டில்

தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டு நடைமுறையில் உள்ளன.

அரசு, 1994 ஆம் ஆண்டில் திரையரங்கு நிர்வாகம் நுழைவுக் கட்டணத்தினை தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ (கடைசி வகுப்பினைத் தவிர இதர வகுப்புகளுக்கு) உரிமம் வழங்கும் அதிகாரிக்கும், வணிகத் துறை அதிகாரிக்கும் முன்னறிவிப்பு கொடுத்து மாற்றிக் கொள்ள அனுமதி அளித்துள்ளது. ஆனால், மேற்குறிப்பிட்ட கட்டண விகித மாற்றம் 26–10–1994–க்கு முன்பு இருந்த நுழைவுக் கட்டண விகிதத்துக்கு குறையாமல் இருக்க வேண்டும். இந்த ஆணை திரையரங்குகளில் நுழைவுக் கட்டணச் சீட்டினை கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதை தடுக்கும்பொருட்டும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமான நபர்களை அனுமதிப்பதை தடுக்கும் பொருட்டும் வெளியிடப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் திரையரங்குகளில் கடைசி வகுப்பைத் தவிர ஏனைய வகுப்புகளுக்கான நுழைவுக் கட்டணத்தில் ஓர் உச்சவரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அரசு கருதியது. அதன்படி, திரையரங்கு உரிமதாரர்கள் நுழைவுக் கட்டண விகிதங்களை உயர்த்தும்போது 28–10–1994–க்கு முன்பு இருந்த நுழைவுக் கட்டண விகிதங்களுடன் கூடுதலாக 75 விழுக்காடுகளுக்கு மிகாமல் நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசின் இவ்வாணையினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்குகள் அனைத்தும் 14–10–1997 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு அரசின் ஆணை உறுதி செய்யப்பட்டது. எனினும், சில திரைப்பட உரிமதாரர்கள் இவ்வாணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஆயினும் இம்மேல் முறையீட்டு மனுமீது 3–3–1998 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு முந்தைய உயர்நீதிமன்றத்தின் ஆணையை சில மாறுதல்களுடன் உறுதி செய்துள்ளது. அதே சமயத்தில் திரையரங்குகள் கடைசி வகுப்புக் கட்டணத்தை மாறுதல் செய்யக் கோரும் மனுக்கள் உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் நில நிர்வாகத் துறையின் குறிப்பிட்ட பரிந்துரையின்பேரில் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நுழைவுக் கட்டணங்களுக்குக் கூடுதலாக கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுகளை விற்பது, நிர்ணயம் செய்யப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கைகளுக்கு அதிகமான நபர்களை அனுமதிப்பது போன்ற குறைபாடுகள் பற்றிய முறையீடுகள் அரசுக்கு வந்தவண்ணம்





உள்ளன. அதுபோன்ற புகார் மனுக்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், திரையரங்குகளை அடிக்கடியும் மற்றும் திடீர் சோதனை மேற்கொண்டும் விதிகளுக்குப் புறம்பாக செயல்படும் திரையரங்குகளின்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை கருத்தில் கொண்டு குற்றத்தின் தன்மையைக் கடுமையாக்கி, தண்டனைகளை வழங்குவது குறித்து 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் தமிழ்நாடு சட்டம் எண் 30/97–ல் வெளியிடப்பட்டு 1–7–1997 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குற்றத்தை ஒப்புக் கொள்ளும் நபர் இசைவு அபராதமாக செலுத்த சம்மதிக்கும் நேர்வில் உரிமம் வழங்கு அலுவலர் நிரந்தரத் திரையரங்கினைப் பொறுத்தவரை ரூ.1000 (ரூபாய் ஆயிரம் மட்டும்)க்கு மிகாமலும் நடமாடும் திரையரங்கைப் பொறுத்தவரை ரூ.600 (ரூபாய் அறுநூறு மட்டும்)க்கு மிகாமலும் குற்றத்திற்கான இணக்கத் தொகையாக செலுத்துவதை ஒத்துக் கொள்ளலாம். இதன்படி குறிப்பிட்ட குற்றத்திற்காக குற்றமிழைத்தவர் காவலில் வைக்கப்பட்டிருப்பின் அவரை உடனே விடுவிப்பதுடன் குறிப்பிட்ட குற்றத்திற்காக அவர்மீது மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படக் கூடாது. தற்போது அரசாணை எண் 46 உள் (சினிமா – 2) துறை நாள் 17–1–2001–ல் புதிதாக விதி 44 பி பாகம் 2 ஏற்படுத்தப்பட்டு சில குற்றங்களை/விதிமீறல்களை இசைவு அபராதத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது.

### வீடியோ தொடர்பான சட்டமும் விதிகளும்

தமிழ்நாடு மாநிலத்தில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப்படுத்துவதற்காகவும், இதற்கு இடை நிகழ்வாகவும் தொடர்புடையதாகவும் உள்ள விஷயங்களுக்காகவும், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியாருக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்டங்கள் மட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சென்னை மாநகரில், காவல் துறை ஆணையரும்

உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டுப் பயனுக்காக, வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படம் போட்டுப் பார்ப்பதற்கு உரிமம் எதுவும் அவசியமில்லை. இம்மாநிலத்தில், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற 738 வீடியோ நூலகங்களும் 2 வீடியோ திரையரங்குகளும் உள்ளன.

## திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

வீடியோ திருட்டைத் தடை செய்வதற்காக, தமிழ்நாடு அரசு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலமும், கேபிள் தொலைக்காட்சி இணைப்பு மூலமும் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தின்கீழ் வீடியோ நூலகங்கள், வீடியோ திரையரங்குகள் ஆகியவை உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். உரிமத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளை மீறுபவர்களுக்குத் தண்டனைகள் விதிப்பதற்காக வீடியோ தொடர்பான சட்டம் மற்றும் விதிகளில் போதிய விதிமுறைகள் இயற்றப்பட்டுள்ளன.

திருட்டு வீடியோவை ஒழிக்க தமிழக அரசு ஆணை எண் (3டி) 16 நாள் 17-2-1995 ஆணையின்படி ஒரு சிறப்புப் பிரிவு காவல் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு காவல் துறைத் தலைவரின் (சிறப்புப் புலனாய்வுத் துறை) தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. காப்பிரைட் உரிமையை மீறுவோர்மீதும் இப்பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பிரிவில் பணிபுரிய 1 காவல் கண்காணிப்பாளர், 1 துணை காவல் கண்காணிப்பாளர், 6 ஆய்வாளர்கள், 2 உதவி ஆய்வாளர்கள், 14 முதல்நிலைக் காவலர்கள், 2 வாகனம் ஓட்டும் காவலர்கள் ஆகியோர் ஒதுக்கப்பட்டனர். இவர்களில் 3 ஆய்வாளர்கள், 1 உதவி ஆய்வாளர், 10 முதல்நிலைக் காவலர்கள் ஆகியோர் சிறப்புப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரிய காவல் துறை இயக்குநர் அவர்கள் 28-9-1997 அன்று ஆணையிட்டுள்ளார். காவல் கண்காணிப்பாளர், திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு, சிறப்புப் புலனாய்வுத் துறை (வடக்கு) சென்னை பணிகளையும் மேற்கொள்கிறார்.



திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 6 யூனிட்டுகள் உள்ளன. இப்பிரிவில் தலா, 1 ஆய்வாளர் தலைமையில் 2 முதல்நிலைக் காவலர்கள் பணிபுரிகின்றனர்.

வீடியோ நூலகத்துடன் தொடர்பு வைத்துள்ள நபர்கள் புது படங்களைத் திரையரங்கு முதலாளிகள் அல்லது திரைப்படக் கருவி (புரொஜெக்டர்) ஓட்டுபவர்களின் உதவியுடன் திருட்டு வீடியோ எடுக்கின்றனர். மலேசியா, சிங்கப்பூரிலிருந்தும் வீடியோ காம்பாக்ட் டிஸ்குகள் பதிவு செய்யப்பட்டு இங்கு எடுத்து வரப்படுகின்றன. எனினும் விமான நிலையத்தில் சோதனை செய்யப்படுவதால் தற்போது இது குறைந்துள்ளது.

திருட்டு வீடியோவை தடுக்க, காப்பிரைட் சட்டம் 1957, தமிழ்நாடு கேபிள் டி.வி. சட்டம், 1984, சினிமோட்டோகிராபி, சட்டம் 1952 முதலிய சட்டங்களின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சட்டங்களின்கீழ் அனைத்து குற்றங்களும் நிரூபிக்கப்படக்கூடிய குற்றங்களே. குற்றவாளியை பிடியாணை இல்லாமல் கைது செய்து முதல் வகுப்பு நீதிமன்ற நடுவரால் விசாரிக்கப்படுகிறது.

## திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவின் சிறப்பான செயல்கள்

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில் 1995-ல் 14 வழக்குகளும் 1996-ல் 77 வழக்குகளும், 1997-ல் 77 வழக்குகளும், 1998-ல் 170 வழக்குகளும், 1999-ல் 123 வழக்குகளும், 2000 ஆம் ஆண்டில் 249 வழக்குகளும் 2001-ல் 15-7-2001 வரை 224 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு மாவட்டந்தோறும் காவல் துறை காப்பிரைட் சட்டம், 1957-ன்கீழ் திருட்டு வீடியோ வழக்குகள் பதிவு செய்யப்படுவதையும் கண்காணித்து வருகிறது. மாதந்தோறும், திருட்டு வீடியோ ஒழிப்புப் பிரிவு பற்றியும் இது தொடர்பான உள்ளூர் காவல் துறையின் பணிகள் பற்றியும் திறனாய்வுகளை அரசுக்கு அனுப்பி வருகிறது.

## கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை

கேபிள், தொலைக்காட்சி மூலமாக, திரைப்படங்களைத் திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1991 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல்

[2001 செப்டம்பர் 4

(முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது.

கேபிள் டி.வி. அமைப்பு முறையை நெறிப்படுத்த மத்திய அரசு கேபிள் டி.வி. அமைப்பு ஒழுங்குபடுத்துதல் சட்டம் மற்றும் விதிகளை 1995 இல் இயற்றியுள்ளது. இச்சட்டம், இந்தியா முழுவதற்கும் பொருந்தும். அதன்படி தலைமை தபால் அதிகாரியே பதிவு செய்யும் அதிகாரியாவார். மேலும் திருத்திய கேபிள் டி.வி. அமைப்பு முறையை நெறிப்படுத்த மத்திய அரசு கேபிள் டி.வி. அமைப்பு (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2000-ன்படி மாவட்ட குற்றவியல் நீதிபதி, உதவி கோட்ட குற்றவியல் நீதிபதிகள் மற்றும் காவல் ஆணையர்கள் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளாக வரையறுக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மேற்படி சட்டத்தில் பிரிவு 3, 5, 6 மற்றும் 8 ஆகியவற்றை மீறும் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

## அத்தியாயம் - 9

## பொருட்காட்சி

அரசு வகுத்திடும் கொள்கைகள், நலத்திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களை மக்களறியச் செய்திடும் பணியினை, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவு செவ்வனே செய்து வருகிறது. மாநிலத்திலுள்ள கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

ஆண்டுதோறும் மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவின்போது ஏப்ரல் - ஜூன் மாதத்திலும், கோயம்புத்தூரில் தொழிலாளர் தின விழாவின்போது ஏப்ரல் - ஜூன் மாதத்திலும், சேலத்தில் நடைபெறும் மாரியம்மன் கோயில் திருவிழாவின்போது ஜூலை - செப்டம்பர் மாதத்திலும், இரண்டாண்டிற்கு ஒருமுறை வேலூரில் கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகை விழாவின்போது டிசம்பர் - ஜனவரி மாதத்திலும், திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் திருவிழாவின்போது ஜூன் - ஜூலை மாதத்திலும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பொருட்காட்சிகளில், அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவை பங்கு கொள்கின்றன.



2001 செப்டம்பர் 4]

1978 ஆம் ஆண்டில் அரசு பொருட்காட்சி நடத்தத் தொடங்கப்பட்டது. 2001 ஜூன் திங்கள் முடிய, மொத்தம் 105 பொருட்காட்சிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

சேலத்தில் 9-8-2001 அன்று அரசு பொருட்காட்சி தொடங்கப்பட்டுள்ளது. வேலூரில் வரும் டிசம்பர் திங்களில் பொருட்காட்சி நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியிலும், புதுதில்லியில் நவம்பர் 14 முதல் 27 வரை நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளும் பங்குகொள்ளும் அரங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுதில்லியில் அக்டோபர் மாதம் நடைபெறும் மலர்ப் பேரணி விழா (Phool Walon Ki Saire)-விலும் இத்துறை பங்கேற்றுச் சிறப்புப் பெற்று வருகிறது.

ஆண்டுதோறும், புதுதில்லியில் ஜனவரி 26 ஆம் நாள் நடைபெறும் குடியரசு நாள் விழாவினையொட்டி அலங்கார ஊர்திகள் அணி வகுப்பில், சில ஆண்டுகளில் நமது மாநிலத்து ஊர்தியும் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றது. அதே போன்று, சென்னையில் நடைபெறும் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பிலும் இப்பிரிவு பங்கேற்று, ஒருங்கிணைப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது.

## அத்தியாயம் - 10

## தமிழரசு

அரசுக்கும் மக்களுக்கும் இடையே அமைந்த அச்சுப் பாலமாக, கடந்த 30 ஆண்டுகளாக அரிய பணியை ஆற்றி வருவது "தமிழரசு" இதழாகும்.

அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், நலத்திட்ட உதவிகள் ஆகியவை குறித்த தகவல்களைத் தாங்கி வருகிறது "தமிழரசு". மக்கள் குறை தீர்க்கும் வகையில் 'எங்கள் ஊர் பிரச்சினை' என்னும் பகுதி மூலம் அவர்களின் கடிதத்தைப் பெற்று அவற்றை உரிய துறைகளுக்கு

[2001 செப்டம்பர் 4

அனுப்பி, அந்தத் துறைகள் அனுப்புகின்ற பதிலையும் "தமிழரசு" வெளியிட்டு வருகிறது. இவற்றோடு இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம் சார்ந்த கட்டுரைகளையும், வாழ்வாங்கு வாழ்ந்த பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளையும், துறைதோறும் புகழ்பெற்று விளங்கும் வல்லுநர்களின் பேட்டிகளையும், இளைஞர் நலம், விளையாட்டுத் துறை பற்றிய செய்திகளையும் "தமிழரசு" வெளியிட்டு வருகிறது.

அவ்வப்போது இலக்கியம் சார்ந்த போட்டிகளை நடத்தி தகுதிபெறும் படைப்புகள் வெளியிடப்படும். இளைஞர்கள் குறிப்பாக மாணவரிடத்திலும் பெண்களிடத்திலும் ஆளுமைப் பண்புகளை வளர்க்கும் விதத்தில் எழுத்தாக்கங்களும், ஆலோசனைகளும் தமிழரசில் வெளியிடப்படும். பிறமொழி எழுத்தோவியங்களும் இனி மொழிபெயர்ப்பு வடிவில் "தமிழரசு" இதழில் வெளியிடப்படும். அரசு வேலைவாய்ப்பு செய்திகளை ஒருங்கிணைத்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

"தமிழரசு" ஆசிரியர் குழுவை வலுப்படுத்தும் வகையிலும், தமிழரசின் உள்அடக்கத்தின் சிறப்பை உயர்த்தும் வகையிலும், பல துறைகளில் ஆற்றல் பெற்ற எழுத்தாளர்களின் குழு ஏற்படுத்தப்படும்.

"தமிழரசு" இதழ், தமிழில் மாத இதழாகவும், ஆங்கிலத்தில் காலாண்டு இதழாகவும் வெளிவந்து கொண்டிருக்கிறது. "தமிழரசு" தமிழ் இதழின் விலை ரூ.10, ஆங்கில இதழ் ரூ.15, தமிழிதழ் ஆண்டுச் சந்தா ரூ.120, ஆயுள் சந்தா ரூ.1,000 (10 ஆண்டுகள்). தமிழில் 47,000 படிகளும், ஆங்கிலத்தில் 1,200 படிகளும் அச்சிடப்படுகின்றன. "தமிழரசு" தமிழ் இதழ்களின் விற்பனையை உயர்த்த புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படும். "தமிழரசு" தமிழ் இதழின் ஒரு பகுதியை வண்ணத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பு வெளியீடுகள்:

அரசின் ஆக்கப் பணிகள், பலதுறைகளின் சாதனைகள், மாண்புமிகு முதலமைச்சரின் உரைகள் ஆகியவை தொகுக்கப்பட்டு, அவ்வப்போது சிறப்பு வெளியீடுகளாக வெளியிடப்படுகின்றன. நினைவகங்களில், நினைவுக்குரிய பெரியோர்களின் வாழ்க்கை மற்றும் பணிகளை விளக்கும் மடிப்பேடுகளை விநியோகிப்பதற்கு ஏதுவாக "தமிழரசு" அவற்றைத் தயாரித்து வெளியிடும்.



2001 செப்டம்பர் 4]

மேம்பாட்டுப் பணிகள்:

"தமிழரசு" அலுவலகம் மற்றும் அச்சகம் ஆகியவற்றிற்குரிய ஆவணங்களைப் பாதுகாத்து வைப்பதற்காகவும், கணக்கர் மற்றும் அச்சக, அலுவலகப் பணியாளர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காகவும், "தமிழரசு" அச்சக அலுவலகத்தின் கட்டடத்தின் மேல்மாடியில் இரண்டாவது தளத்தின் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## அத்தியாயம் – 11

### விளம்பரம்

மாநில அரசின் அனைத்துத் துறைகள், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை பத்திரிக்கைகளில் வெளியிடும் மைய நிறுவனமாக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது. அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின்கீழ் அரசு விளம்பரங்கள் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் பத்திரிக்கைகளுக்கு மட்டுமன்றி சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரங்கள் அளிக்கப்படுகின்றன.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆறு இணைய தளம் வழியாகவும் அரசு விளம்பரங்கள் இலவசமாக வெளியிடப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

ரூ.25 இலட்சம் வரை மதிப்புடைய அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தகவல்கள் அனைத்து மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்களில் (அரியலூர் மாவட்டம் தவிர) மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அதிகாரியான அந்தந்த மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களால் வெளியிடப்படுகின்றன. ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தகவல்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அதிகாரியான செய்தி மக்கள் தொடர்பு இயக்குநரால் சென்னை தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி செய்திமலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை வெளியிடப்படுகின்றன. அரசு அலுவலகங்களுக்கு இலவசமாகவும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி

[2001 செப்டம்பர் 4

மலருக்கு ரூ.1000/–மும், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கு ரூ.600/–ம் ஆண்டுச் சந்தா செலுத்தும் தனிநபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் இம்மலர்கள் அளிக்கப்படுகின்றன.

## அத்தியாயம் – 12

### மாநிலச் செய்தி நிலையம், சென்னை

மாநிலச் செய்தி நிலையம் மற்றும் நூலகம், சென்னை திருவல்லிக்கேணி, மகாகவி பாரதியார் இல்லத்தில் முதல் தளத்தில் செயல்பட்டு வருகிறது.

மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, குழந்தை நூல்கள் உட்பட பல்வேறு தலைப்புகளில் சுமார் 16,000த்திற்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில நூல்கள் உள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், அரசுத் துறை வெளியீடுகள், தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழு வெளியீடுகள் ஆகியவையும் இங்குள்ளன. மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் இந்நூலகத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் குடும்ப நலம், சிறுசேமிப்பு, அறிவியல், கல்வி போன்ற தலைப்புகளில் 300 தமிழ் மற்றும் ஆங்கிலப்படச் சுருள்கள் உள்ளன.

பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் மத்திய, மாநில அரசு நிறுவன ஊழியர்கள் கண்டு பயன்பெறும் வகையில் இப்படச் சுருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பல அரசுத் துறை நிறுவனங்கள் இரவல் அடிப்படையில் படச்சுருள்களைப் பெற்றுத் திரும்பத் தருகின்றன.

தகவல் தொடர்பு சாதனங்கள் அமைப்பதற்கு போதுமான இடவசதி பாரதியார் நினைவு இல்லத்தில் இல்லாததால் மாநிலச் செய்தி நிலையத்தினை பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெறத்தக்க வகையில் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கத்தின் பின்புறம் ஏற்கெனவே மாநிலச் செய்தி நிலையம் செயல்பட்டு வந்த அலுவலகத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

## அத்தியாயம் – 13

### மேற்கோள் பிரிவு

அரசின் செயல்பாடுகளைப் பாராட்டும், குறை நிறைகளை எடுத்துக்காட்டும், மக்களின் தேவைகளை, அவர்களுடைய பிரச்சினைகளை, தமிழ்நாட்டில் நிலவும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை வெளியிடும் நாளிதழ் மற்றும் பருவ இதழ்களின் செய்தி நறுக்குகளை அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைச் செயலர்கள் பார்வைக்கும், நடவடிக்கைக்காகவும் என தொகுத்து அனுப்பிவைக்கும் பணியை இத்துறையில் இயங்கிவரும் மேற்கோள் பிரிவு ஆற்றி வருகிறது. மற்றைய மாநிலங்களின் அரசியல் நிலவரங்கள் அந்தந்த அரசு நிர்வாகத்தில் மேற்கொள்ளும் திட்டங்கள் அவற்றின் செயல்பாடுகள் போன்ற செய்திகளின் நறுக்குகள், வெளி மாநில ஆங்கில நாளிதழ்களிலிருந்து மற்றும் பருவ இதழ்களிலிருந்தும் எடுத்தும் தொகுக்கப்பட்டு தொடர்புடையவர்களுக்கு பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

## அத்தியாயம் – 14

### பகுதி–2 திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களின் விவரம்

| | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தை அமைக்கத் தேவையான அனைத்துப் பொருட்கள் மற்றும் விளம்பரக் கருவிகள் வாங்க | 5.00 |
| காஞ்சிபுரம், கடலூர், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில்உள்ள மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வி.சி.ஆர். வசதியுடன் 4 வீடியோ புரொஜக்டர்கள் வாங்கி வழங்க தலா ரூ. 4 இலட்சம் வீதம் | 16.00 |

[2001 செப்டம்பர் 4

| | | |
|---|---|---|
| 3. | 26 மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 26 வீடியோ கேசெட் பிளேயர்கள் வாங்கி வழங்க | 1.82 |
| 4. | காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய 9 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 9 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்கி வழங்க | 9.00 |
| 5. | தலைமையிடத்திலுள்ள புகைப்படப் பிரிவு பயன்பாட்டிற்காக ஒரு டிஜிட்டல் கேமரா | 1.05 |
| 6. | தலைமையிட செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு ஒரு கணினி மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்க | 0.98 |
| 7. | தலைமையிட மக்கள் தொடர்பு அலுவலகப் பயன்பாட்டிற்காக ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் | 1.15 |
| 8. | தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ஒரு பீட்டா ஒளிப்பதிவு கேமராமற்றும் தொடர்புடைய துணைக் கருவிகள் வாங்க | 15.00 |
| 9. | செய்தி மக்கள் தொடர்புத் துறையில் 8 மாவட்டங்களுக்கு வீடியோ வேன்கள் | 50.00 |
| | மொத்தம் | 100.00 |



2001 செப்டம்பர் 4]

# இணைப்பு - V

(147 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண்கள் 20 மற்றும் 52
## வேளாண்மை

### அத்தியாயம் 1

### முன்னுரை

'சுழன் றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை' என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கு மேலும் மெருகூட்டுகிறது ஆங்கிலத்தின் வர்ணிப்பு - ஆம். ANY CULTURE STARTS FROM AGRICULTURE - மனிதனின் வேளாண்மை ஈடுபாடே நாகரீகத் தோற்றத்திற்கு முதற்படி அதிலிருந்து தான் மற்ற வளர்ச்சிகளும், தேவைகளும், ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் தொடங்கியிருக்கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை பெரும் பங்கு ஆற்றி வருகிறது. வேளாண்மை வளர்ச்சியின் மூலமே கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் 'அம்மா' அவர்கள் விவசாயிகளின் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டி தொகை ரூ.310.50 கோடியை தள்ளுபடி செய்ததுடன், TKM 9 நெல், அரிசியை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல கட்டுப்பாட்டை நீக்கி அரசு வழங்கிய உத்தரவால் அவர்தம் நலிவைப் போக்கி புதுப் பொலிவைக் கொண்டுவரும் திட்டங்களைத் தந்துள்ளார்கள். மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் வேளாண்மையின் சராசரி வளர்ச்சி 1991-96 காலகட்டத்தில் ஆண்டொன்றுக்கு 4.33 சதவீதம் இருந்தது. ஆனால் அது 1996-2001 காலகட்டத்தில் 2.66 சதவீதமாக சரிந்துள்ளது. வேளாண்மையைப் பொறுத்தவரை 25 சதவீதம் மட்டுமே உற்பத்தியில் பங்கு பெற்றாலும் 65 சதவீதம் மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது.. 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 79 இலட்சம் நபர்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 1994-1995-ல் ரூ.14365 கோடியிலிருந்து 1999-2000-ல் ரூ.14255 கோடியாகக் குறைந்துள்ளது. இந்தியாவின் முன்னேற்றம் கிராமங்களின் வளர்ச்சியில்தான் இருக்கிறது என்றார் மகாத்மா. கிராமங்களில் வாழும் விவசாய மக்கள் உயர்ந்தால் நாடே உயரும். இந்தக் கொள்கையைச் செயல்படுத்த இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு அவர்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்த அயராது பாடுபடும்.

இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிலவுகின்ற தட்பவெப்ப மண்டலங்களுக்கேற்ப வேளாண் நில பயன்பாட்டு உத்தியை மாற்றி அமைத்து வேளாண் தொழிலை மேம்படுத்த வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது. இம்மாநிலத்தின், மொத்த நிலப் பரப்பின் 43 சதவீதப் பகுதி தற்போது சாகுபடியில் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்னும் மிகப் பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி அவற்றை விளை நிலங்களாக மாற்றி கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு புது வேகம் பெறும் வகையில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

தரிசுநிலச் சீரமைப்புத் திட்டம் மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டதாகும். உறுதியாக மழை பொழியும் பகுதிகளில் அமைந்துள்ள உயர்தர தரிசு நிலங்கள், மூலிகைகள் மற்றும் நறுமணச் செடிகள் பயிரிடவும், பழத் தோட்டங்களை அமைக்கவும் பயன்படுத்தப்படும். நடுத்தர தரிசு நிலங்களில் சமையல் எண்ணெய் மற்றும் எரி எண்ணெய் உற்பத்திக்குப் பயன்படும் பாரடைஸ் மரம் (Paradise Tree), ஜட்ரோஃபா (Jatropha) முதலிய எண்ணெய் வித்துத் தாவரங்கள் பயிரிடப்படும். தரம் குறைந்த தரிசு நிலங்களில் மின் சக்தி உற்பத்திக்கு உதவும் மரங்களான காட்டுக்கருவேல் (Prosopis) சவுக்கு (Casurina) போன்ற விறகு மரவகைகள் பயிரிடப்படும். இத்திட்டம், மக்களின் பங்கேற்புடனும், தனியார் துறையின் ஒத்துழைப்புடனும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஐந்து ஆண்டுகளில் கிராமப் பகுதியைச் சேர்ந்த 10 இலட்சம் மக்கள் பயனடையக்கூடும்.

'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர நாடுயரும், நாடுயரக் கோன் உயரும்' என்ற அனுபவ மொழி அன்னையின் ஆட்சியில் கடைப்பிடிக்கப்படும்.

வேளாண்மையோடு தொடர்புடைய கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் மரம் வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கிய 'ஒருங்கிணைந்த பண்ணையம்' முறை உருவாக்கப்பட்டு, அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

- உற்பத்தித் திறனைக் கூட்டுதல்
- உற்பத்தி செய்யும் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்
- வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைப் பெருக்குதல்



- சிறு விவசாயப் பண்ணைகளை மேம்பாடடையச் செய்தல்

போன்ற திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளும்.

உயர் தொழில்நுட்ப தோட்டக்கலையை மேற்கொண்டு வணிக விளைபொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கான நிலையை உருவாக்கும் வகையில் பல்வேறுபட்ட விஞ்ஞான ரீதியான தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து:

1 மண்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு

2 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை

3 ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம்

4 உயிரியல் சார்ந்த தொழில்நுட்பம்

5 தகவல் பரிமாற்றம்

6 விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலை

7 விண்வெளி சார்ந்த தொழில்நுட்பத்தின் மூலம், வெள்ளம் வறட்சி - இவற்றை முன்கூட்டியே அறிந்து செயல்படல்.

வேளாண் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க, அறிவியல் ரீதியான நடைமுறைகளை மேற்கொண்டு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின்கீழ் விவசாயத் தொழில் புரட்சியை உருவாக்கி தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்குவோம் என்பதே தமிழக முதல்வர் 'அம்மா' அவர்களின் இலட்சியம்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்", என்ற குறள் மொழிக்கேற்ப தமிழ்க் குடிபெருமக்களும், உழவர் பெருமக்களும், தேர்ந்தெடுத்த நம் அன்னையின் இந்த அரசு உழவர்களுக்கு என்றும் உறுதுணையாக நிற்கும்.

[2001 செப்டம்பர் 4

## வேளாண்மைத் துறைக்கான திருத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

கோரிக்கை எண் 20 (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலை | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2000—2001 | திருத்திய திட்ட மதிப்பீடு 2000—2001 | இடைக் கால வரவு செலவு திட்ட மதிப்பீடு 2001—2002 | திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு 2001—2002 |
|---|---|---|---|---|
| 2059 பொதுப் பணிகள் | 76,60 | 76,60 | 76,60 | 88,09 |
| 2216 வீட்டு வசதி | 10 | 10 | 10 | 10 |
| 2401 பயிர் வளர்ப்பு | 6,41,36,99 | 9,53,61,48 | 6,75,07,30 | 9,19,79,61 |
| 2402 மண்வள. நீர்வளப் பாதுகாப்பு | 66,69,33 | 50,90,47 | 56,68,47 | 60,54,93 |
| 2415 வேளாண் ஆராய்ச்சியும் கல்வியும் | 61,77,06 | 68,05,34 | 62,49,04 | 63,03,59 |
| 2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 36,30,11 | 35,53,73 | 37,90,73 | 37,21,65 |
| 2501 ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 6,52,00 | 8, 96,05 | 9,71,18 | 9,71,18 |
| 2551 மலைப் பகுதிகள் | 11,06,79 | 11,19, 65 | 7,83,22 | 16,14,00 |
| 2702 சிறுபாசனம் | 11,49,50 | 10,93,92 | 13,76,00 | 13,52,49 |
| 2705 பாசனப் பகுதி மேம்பாடு | 33,28,07 | 29,37,22 | 31,04,69 | 31,33,28 |
| 3054 சாலைகளும் பாலங்களும் | 8,00,00 | 11,11,91 | 11,33,98 | 11,33,98 |
| 3435 உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் | 1 | 1 | 1 | 1 |
| துணை மொத்தம் | 8,77,26,56 | 11,80,46,48 | 9,06,61,32 | 11,63,52,91 |



2001 செப்டம்பர் 4]

## வேளாண்மைத் துறைக்கான திருத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

கோரிக்கை எண் 52 (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2001—2002 | திருத்திய திட்ட மதிப்பீடு 2000-2001 | இடைக்கால வரவு செலவு திட்ட மதிப்பீடு 2001—2002 | திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீடு 2001—2002 |
|---|---|---|---|---|
| 4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 4,80,21 | 7,05,40 | 3,73,09 | 4.23,09 |
| 4402 மண் வள மற்றும் நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 75,00 | 45,30 | 25,00 | 25,00 |
| 4415 வேளாண்மை ஆராய்ச்சி,, கல்வி குறித்த மூலதனச் செலவு | 15,01 | 15,01 | 2 | 2 |
| 4435 ஏனைய வேளாண் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 4,00 | 11,00 | - | - |
| 5054 சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 5,00,00 | 5,00,00 | 5,00,00 | 5,00,00 |
| துணை மொத்தம் | 10,74,22 | 12,76,71 | 8.98,11 | 9,48,11 |
| பெரு மொத்தம் | 8,88,00,78. | 11,93,23,19 | 9.15.59,43 | 11,73.01,02 |

[2001 செப்டம்பர் 4

# 2001–2002 ஆம் ஆண்டிற்கான பகுதி – 2 திட்டங்கள்

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2001-2002-ல் செலவு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | *வேளாண்மைத் துறை* | |
| 1 | பழைய வேளாண் விரிவாக்க மையங்களை பழுது பார்த்தல் | 20.00 |
| 2 | வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மர அட்டகங்கள் வழங்குதல் | 10.00 |
| 3 | வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு தார்பாய்கள் அளித்தல் | 10.00 |
| 4 | வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு ஈரப்பதம் அறியும் கருவிகள் வழங்குதல் | 10.00 |
| 5 | பயறு வகைகளுக்காக பயிர் பாதுகாப்பு - ஒருங்கிணைந்த திட்ட உழவர் வயல் வெளிப்பள்ளி அமைத்தல் | 6.50 |
| 6 | பசுந்தீவன பயிர் உற்பத்தி | 10.00 |
| 7 | ஒட்டுரக அரிசி உற்பத்தி உதவித் தொகைத் திட்டம் | 20.00 |
| 8 | விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 2500.00 |
| | மொத்தம் | 2586.50 |



2001 செப்டம்பர் 4]

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2001-2002-ல் செலவு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | *தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை* | |
| 9 | மாநில தோட்டக்கலை பண்ணை 19இல் சொட்டு நீர் பாசன வசதி அமைத்தல் | 50.00 |
| 10 | ஜீனூர் மற்றும் வல்லாத்திரக் கோட்டையில் உள்ள மாநில தோட்டக்கலைப் பண்ணையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் | 10.00 |
| | மொத்தம் | 60.00 |
| | *வேளாண் பொறியியல்* | |
| 11 | நிலத்தடி நீர் வள ஆய்வுக் கருவிகள் 18 வாங்குதல் | 9.00 |
| 12 | திருச்சிராப்பள்ளி வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 10.00 |
| 13 | நிலத்தடி நீர் நிலைமானிகள் மற்றும் மின் கடத்திடு திறன் அளவைமானி 10 வாங்குதல் | 4.80 |
| 14 | கூட்டு அறுவடை இயந்திரங்கள் ஏற்றிச் செல்வதற்காக, இரண்டு வாகனங்கள் வாங்குதல் | 10.00 |
| 15 | 4 வட்டார அலுவலங்களுக்கு அலுவலக சாதனங்கள், கணினி, ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் நகரி இயந்திரம் வாங்குதல் | 12.00 |
| 16 | செயற் பொறியாளர்கள் நால்வருக்கு தொலைபேசி இணைப்பு அளித்தல் | 0.10 |
| | மொத்தம் | 45.90 |

[2001 செப்டம்பர் 4

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2001 2002 ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | *வேளாண் விற்பனைத்துறை* | |
| 17 | மாநில அக்மார்க் தரம் பிரிப்பு சோதனைக் கூடங்கள் நான்கினை வலுப்படுத்துதல் | 12.00 |
| 18 | ஒவ்வொன்றும் ரூ.1 இலட்சம் செலவில் வேளாண்மை விளை பொருள் விற்பனை மையங்கள் பத்தினை ஏற்படுத்துதல் | 10.00 |
| | மொத்தம் | 22.00 |
| | *விதைச் சான்றளிப்புத் துறை* | |
| 19 | கண்ணம்பாளையம் இனத்தூய்மைப் பண்ணைக்கு கம்பி வேலி | 2.00 |
| | மொத்தம் | 2.00 |
| | *தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்* | |
| 20 | ADTRH 1 மற்றும் CORH 2 வீரிய ஒட்டு நெல் விதை உற்பத்தித் திட்டம் | 14.40 |
| 21 | தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களுக்கு ஏற்ற தோட்டக்கலைப் பயிர்களுக்கான வேளாண் தொழில்நுட்பத்தை தரப்படுத்துவதற்கான திட்டம் | 3.38 |
| 22 | கோயம்புத்தூர், வேளாண்மைப் பொறியியல் கல்லூரியில் அறுவடைக்கு பிந்தைய செயல்முறை குறித்து ஆராய்ச்சியை வலுப்படுத்துதல் | 15.00 |
| 23 | கலப்பின பருத்தி மேம்பாடு | 17.15 |
| 24 | வீரிய ஒட்டு நெல் உருவாக்குதல் | 8.00 |
| | மொத்தம் | 57.93 |



2001 செப்டம்பர் 4]

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2001 2002 ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **தமிழ்நாடு வேளாண் பொறியியல் கூட்டுறவு இணையம்** | |
| 25 | கூட்டு அறுவடை இயந்திரங்கள் வாங்குதல் (அரசின் உதவித் தொகை) | 12.00 |
| | மொத்தம் | 12.00 |
| | **மொத்த திட்டப் பணிகள்** | **2786.33** |

## அத்தியாயம் 2

### வேளாண்மை

*பருவநிலை மற்றும் பயிர் விவரம்*

(மில்லி மீட்டரில்)

| வ. எண் | பருவம்/ மாதம் | இயல்பான மழை | பெய்த மழை 2000-2001 | பெய்த மழை 1999-2000 | வேறுபாடு(விழுக்காடு) இயல்பு மழையுடன் | வேறுபாடு(விழுக்காடு) கடந்த ஆண்டு மழையுடன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோடை (மார்ச்-மே 2000) | 136.5 | 77.9 | 116.4 | (-)43 | (-)33 |
| 2. | தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்டம்பர் 2000) | 307.6 | 314.5 | 199.4 | (+)2.2 | (+)58 |
| 3. | வடகிழக்கு பருவம் (அக்டோபர் டிசம்பர் 2000) | 438.7 | 335.6 | 497.1 | (-)23 | (-)32 |
| 4. | குளிர்காலம் (ஜனவரி - பிப்ரவரி 2001) | 42.2 | 27.3 | 119.5 | (-)35 | (-)77 |
| | மொத்தம் | 925.0 | 755.3 | 932.4 | (-)18 | (-)19 |

[2001 செப்டம்பர் 4

2000-2001 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 755.3 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இம்மழை சராசரி மழையளவான 925 மி.மீ.க்கு 18 சதவீதம் குறைவாக 82 சதவீதமே பெறப்பட்டுள்ளது. பருவம் வாரியாக மழையளவினை ஒப்பிடுகையில் கோடைக் காலத்தில் சராசரி மழையளவான 136.5 மி.மீ.க்கு 43 சதவீதம் குறைவாக 77.9 மி.மீ. அளவே பெறப்பட்டுள்ளது. ஆனால் தென்மேற்கு பருவத்தில் சராசரி அளவான 307.6 மி.மீட்டரை விட கூடுதலாகப் பெறப்பட்ட 314.5 மி.மீ. மழை ஓரளவு நிலைமையை சரி செய்தது. காவிரி கழிமுகப் பகுதிகளில் கூடுதலாக மழை பெறப்பட்டதுடன் மேட்டூர் அணை குறித்த காலத்தே திறக்கப்பட்டதன் விளைவாக 1.26 இலட்சம் எக்டர் பரப்பில் 32 சதவீதம் கூடுதலாக நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு இதே காலத்தில் 0.958 இலட்சம் எக்டரில் மட்டுமே நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. . 2000-2001 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவத்தில் 23 சதவீதம் குறைவாக மழை பெறப்பட்டது. மேலும் இப் பருவ சராசரி மழையளவான 438.7 மி.மீ.க்கு 335.6 மி.மீ. மழையே பெறப்பட்டதால் பயிர் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

## பயிர் சாகுபடி பரப்பு

கோடை மற்றும் வடகிழக்குப் பருவத்தில் குறைவான மழை பெறப்பட்ட காரணங்களால் சாகுபடி பரப்பு குறைந்து அரிசி, பருத்தி மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் உற்பத்தியும் குறைந்தது. மேட்டூர் அணை பாசனத்திற்காகக் குறித்த காலத்தே அதாவது ஜூன் 12ம் நாள் திறந்துவிடப்பட்டதால் காவிரி நதிப்படுகை பகுதிகளில் குறுவை சாகுபடி 1,26,300 எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. 0.958 இலட்சம் எக்டர் சாகுபடி செய்யப்பட்ட கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இது 32 சதம் கூடுதலாகும். கரீப் 2000-ல் 6.103 இலட்சம் எக்டர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. வடகிழக்குப் பருவத்தில் 32 சதவீதம் குறைவான மழை பெறப்பட்டதால் சராசரி பரப்பைவிட குறைவாக சுமார் ஒரு இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இப்பரப்பு குறைபாடு குறுவை மற்றும் சம்பா பருவங்களில் உயர்உற்பத்தி அடைந்ததன் விளைவாக ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. சிறுதானியங்கள் பெரும்பாலும் மானாவாரியாகவே பயிராகிறது. கரீப் பருவத்தில் குறைவான மழை பெறப்பட்ட காரணத்தினால் சிறுதானியப் பரப்பு குறைவாகவே இருந்தது. எனினும், தென்மேற்குப் பருவகாலத்தில் 2.2 சதம் கூடுதல் மழை பெற்ற காரணத்தினால் முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டில் கூடுதல் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எனினும் கடலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை குறைவாகப் பெறப்பட்ட



2001 செப்டம்பர் 4]

காரணத்தினால் கரீப் பருவத்தில் இலக்கிடப்பட்ட 9.45 இலட்சம் எக்டருக்கு 3.64 இலட்சம் எக்டர் பரப்பு குறைவாக சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் 3.00 இலட்சம் எக்டர் குறைவாக மொத்தம் 13.00 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. பயறுவகைப் பயிர்களில் கடந்த ஆண்டு பயிர் சாகுபடி பரப்பு திருப்திகரமாக இருந்தது. கரீப் 2000 பருவத்தில் ஒரு இலட்சம் எக்டர் பரப்பு குறைவு ஏற்பட்ட போதிலும் இவ்விழப்பு ரபி பருவத்தில் இலக்கைவிட கூடுதலாக ஒரு இலட்சம் எக்டர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டு ஈடுசெய்யப்பட்டது. இலக்கிடப்பட்ட 103.00 இலட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானிய உற்பத்திக்கு கடந்த ஆண்டில் 95.4 இலட்சம் மெ.டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது சிறுதானியப் பயிர்களின் உற்பத்தி குறைவினால் ஏற்பட்டது. முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டில் எண்ணெய்வித்துப் பயிர்கள் கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. கோடை மற்றும் தென்மேற்குப் பருவங்களின் முன்பருவத்தில் குறைவான மழை பெற்றதால் 2.55 இலட்சம் எக்டர் சாகுபடி குறைவு ஏற்பட்டது. ஒட்டுமொத்தமாக கடந்த ஆண்டில் 3.33 இலட்சம் எக்டர் பரப்பு சாகுபடிக் குறைவு ஏற்பட்டது. இலக்கிடப்பட்ட 22 இலட்சம் மெடன் உற்பத்திக்குப் பதிலாக 17.52 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியானது எனக் கணிக்கப்பட்டுள்ளது. கரீப் மற்றும் ரபி பருவத்தில் கரும்பு உற்பத்திக்குச் சாதகமான சூழ்நிலை இருந்தது. கடந்த ஆண்டில் கூடுதல் பரப்பில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டில் பருத்தி கூடுதல் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு சுமார் 3.76 இலட்சம் பொதிகள் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என கணிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழை குறைவினால் பருத்தி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டது.

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) இலக்கு 2000–2001 | சாதனை | உற்பத்தி இலக்கு 2000–2001 | (இல.மெ.டன்) சாதனை |
|---|---|---|---|---|
| அரிசி | 22.00 | 21.13 | 80.50 | 72.18 |
| சிறுதானியங்கள் | 15.00 | 10.77 | 16.00 | 13.47 |
| பயறுவகைகள் | 10.00 | 11.09 | 6.50 | 5.56 |
| மொத்த உணவுதானியங்கள் | 47.00 | 42.99 | 103.00 | 91.21 |
| எண்ணெய்வித்துக்கள் | 14.00 | 10.64 | 22.00 | 16.10 |
| பருத்தி (இல. பொதிகள்) | 2.50 | 1.94 | 6.50 | 3.26 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 3.17 | 37.00 | 33.57 |

[2001 செப்டம்பர் 4

## 2001–2002 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு

இயல்பான மழை மற்றும் பருவநிலை நிலவும் என எதிர்பார்த்து ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஐந்தாம் ஆண்டில், வரையறுக்கப்பட்ட உற்பத்தியைக் கணக்கில் கொண்டு கீழ்க்கண்டவாறு 2001-2002 ஆம் ஆண்டின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| பயிர் | பரப்பு (இல.ஏக்டர்) | உற்பத்தி (இல.மெ.டன்) |
|---|---|---|
| அரிசி | 22.00 | 80.50 |
| சிறுதானியங்கள் | 15.00 | 16.00 |
| பயறு வகைகள் | 10.00 | 6.50 |
| மொத்த உணவு தானியங்கள் | 47.00 | 103.00 |
| எண்ணெய் வித்துக்கள் | 14.00 | 22.80 |
| பருத்தி (இலட்சம் பொதிகள்) | 3.00 | 6.50 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 37.00 |

## இடுபொருள் திட்டங்கள்

### அ. சான்று பெற்ற விதைகள்

வல்லுநர் விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட பின் 39 அரசு விதைப் பண்ணைகள் மூலம் ஆதார விதைகளாக பெருக்கம் செய்யப்பட்ட பின் இந்த ஆதார விதைகள் விவசாய நிலங்களில் சான்று விதைகளாக பெருக்கம் செய்யப்படுகின்றன. சான்று விதைகளின் தரத்திற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் மாநிலத்தில் இயங்கும் 16 பெரிய, 3 நடுத்தர மற்றும் 51 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இச்சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும் 28,500 மெட்ரிக் டன். விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இவ்விதைகள் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.



2001 செப்டம்பர் 4]

2001-2002 ஆம் ஆண்டு பல்வேறு பயிர்களின் விதை மாற்று விகிதம் பின்வருமாறு:

| வ. எண் | பயிர் | மத்திய அரசு பரிந்துரைக்கும் விதை மாற்று விகிதம் | மாநில அரசு பின்பற்றும் விதைமாற்று விகிதம் |
|---|---|---|---|
| 1. | அ. நெல் | 17 | 17 |
| | ஆ. சிறுதானியங்கள் | 7 | .. |
| 2. | பயறு வகைகள் | 12.50 | 11 |
| 3. | பருத்தி மானாவாரி | 10 | 15 |
| | பருத்தி இறவை | 15 | 15 |
| 4. | நிலக்கடலை | 5 | 3 |
| 5. | எள் | 15 | 10 |
| 6. | சூரியகாந்தி | 50 | 50 |
| 7. | ஆமணக்கு | 30 | 20 |
| 8. | சோயாமொச்சை | 20 | ... |

2000-2001 ஆம் ஆண்டின் விதை கொள்முதல், விநியோக இலக்கு சாதனை மற்றும் 2001-2002 ஆம் ஆண்டின் திட்டம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(அலகு மெ.டன்கள்)

| வ. எண் | பயிர் | இலக்கு | சாதனை 2000-2001 | 2001-2002 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|---|
| (அ) | கொள்முதல் | | | |
| 1. | நெல் | 18000 | 19895 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 410 | 400 |
| 3. | பயறு வகைகள் | 2600 | 1734 | 2600 |
| 4. | எண்ணெய்வித்துக்கள் | 11912.5 | 4671 | 11912.5 |
| 5. | பருத்தி | 375 | 245 | 375 |
| (ஆ) | விநியோகம் | | | |
| 1. | நெல் | 18000 | 18518 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 420 | 400 |
| 3. | பயறுவகைகள் | 2600 | 1759 | 2600 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 11912.5 | 4381 | 11912.5 |
| 5. | பருத்தி | 375 | 225 | 375 |

ஆ. உரங்கள்

பயிர்களின் பல்வேறு நிலைகளில் சரியான விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை தாவல்ல இரசாயன உரங்களை இட்டால் அதிக மகசூல் பெறுவது உறுதி 2000-2001 ஆம் ஆண்டில் இரசாயன உர உபயோகமும் 2001-2002 ஆம் ஆண்டிற்கான திட்டமும் வருமாறு:

(இலட்சம் மெட்ரிக் டன்கள்)

| சத்துக்கள் | இலக்கு 2000-2001 | சாதனை | 2001-2002 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|
| தழை | 5.15 | 5.47 | 5.25 |
| மணி | 2.10 | 2.08 | 2.25 |
| சாம்பல் | 2.05 | 2.08 | 2.10 |
| மொத்தம் | 9.30 | 9.63 | 9.60 |

நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி மற்றும் விநியோகம்

குடுமியான்மலையில் இயங்கிவரும் நுண்ணூட்ட உரக் கலவை தயாரிக்கும் மையம் ஆண்டுதோறும் 1250 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரக் கலவையினைத் தயாரித்து விநியோகித்துவருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு 1287 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டும் 1250 மெட்ரிக் டன் நுண்ணூட்ட உரக் கலவை தயாரித்து வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

சிங்க் சல்பேட் உரம் விநியோகித்தல்

2000-2001 ஆம் ஆண்டில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகட்கு 25000 எக்டர் நிலத்தில் பயன்படுத்தப்படும் 625 மெட்ரிக் டன் சிங்க் சல்பேட் உரத்திற்கு 25 விழுக்காடு ரூ.3125 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 23970 எக்டர் பரப்பில் 574 மெட்ரிக் டன் சிங்க் சல்பேட் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இயற்கைப் பண்ணையம்

வேளாண் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இயற்கைப் பண்ணையம் பரிந்துரைக்கப்படுகிறது. தரமான மக்கு எரு, உயிர் உர உபயோகம், பசுந்தாள் உரம் மற்றும் ஊட்டமேற்றிய தொழு உர உபயோகம் போன்றவை சாகுபடி செலவைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த பயிர்சத்து மேலாண்மை





தொழில்நுட்பத்திற்காகவும் பரிந்துரைக்கப்படுகின்றன. இயற்கைப் பண்ணையத்தினை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

உயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகம்

நமது மாநிலத்தில் வேளாண் துறையால் உயிர் உர உபயோகம் குறித்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 இடங்களில் இயங்கும் உயிர் உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுதோறும் 1400 மெட்ரிக் டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு 1406 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டும் 1400 மெட்ரிக் டன். உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1999-2000 ஆம் ஆண்டில் உயிர் உர தரக் கட்டுப்பாட்டிற்கான ஆய்வகம் திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டு உயிர் உர தர நிர்ணயம் செய்யும் பணியினைத் தொடங்கியது. வழங்க உள்ள உயிர் உரங்களின் விவரம் வருமாறு:

| வஎண் | பெயர் | வழங்கவுள்ள அளவு (மெட்ரிக் டன்.) |
|---|---|---|
| 1. | ரைசோபியம் | 280 |
| 2. | அசோஸ்பைரில்லம் | 800 |
| 3. | பாஸ்போபேக்டீரியம் | 320 |
| 4. | நீலப்பச்சைப் பாசி (**) | 500 |
| 5. | அசோலா (**) | 250 |

(**) அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் விநியோகம்

மண்ணின் மக்கு அளவினை அதிகரிக்க பசுந்தாள் உரத்தினைப் பயிர்செய்து அந்நிலத்திலேயே மடக்கி உழுவதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு 90 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள் ரூ.9.00

இலட்சம் செலவில் கொள்முதல் செய்து 25 விழுக்காடு மானியத்தில் இலாப/நட்ட மற்ற நோக்கத்துடன் விநியோகிக்க ஆணை பெறப்பட்டு, 54381 மெட்ரிக் டன் பசுந்தாளுர விதைகள் ரூ.9.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, 50.424 மெட்ரிக் டன்கள் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் 125 மெட்ரிக் டன்கள் கொள்முதல் செய்து, விநியோகிக்கப்பட்டு உள்ளது.

## இ. பயிர் பாதுகாப்பு

### பூச்சி நோய் கண்காணிப்பு

மாநிலத்தில் முறையான பூச்சி நோய் கணிப்புப் பணி செயல்படுத்தப்பட்டு, பூச்சி மற்றும் நோய்களின் நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் 7356 இடங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை ஆய்வு செய்து பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறித்து விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்பட்டு வருகிறது. உணவுப் பயிர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் 507 இலட்சம் எக்டர் பரப்பிலும், உணவு அல்லாத பயிர்களில் 28 இலட்சம் எக்டர் பரப்பிலும் மற்றும் விதை நேர்த்தி 22 இலட்சம் எக்டர் பரப்பிலும் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

### பயிர் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு

இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டில் பொது மற்றும் சிறப்புக் கூறுகள் தலைப்பின்கீழ் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் உயிரியல் பூச்சி மருந்துகள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, தேசியத் திட்டங்களான பருத்தி தொழில்நுட்பக் குழு 2. எண்ணெய்வித்து பெருக்கத் திட்டம், தேசிய பயறுவகை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவைகளின்கீழ் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மேலும் விவசாயிகளுக்குத் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்க தனியார் பூச்சி மருந்துக் கடைகளிலிருந்தும் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்தும் 16236 எண்கள் பூச்சி மருந்து மாதிரிகள் ஆண்டுதோறும் எடுக்கப்பட்டு 9 பூச்சிக் கொல்லி ஆய்வகங்களுக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டு தரமற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள்மீதும் போலி பூச்சி மருந்துகள் தயாரிப்பாளர்கள் மீதும் பூச்சி மருந்து சட்டம் 1968ன்படி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





### ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, உழவர் வயல்வெளிப் பள்ளிகள் திட்டம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குறைந்த செலவில் அதிக உற்பத்தி செய்வதும் அதே நேரத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகளால் ஏற்படும் தீமைகளான சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு, நச்சுப்படிவு, பூச்சிகளின் மறு உற்பத்தி போன்றவற்றைத் தடுப்பதாகும். மத்திய சார்புத் திட்டங்களான தானிய உற்பத்தித் திட்டம், மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம், எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டம், தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பருத்தி தொழில்நுட்பவியல் குழு 2 ஆகியவற்றின் மூலமாகப் பின்வரும் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்புத் திட்டம் 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது:

| வ. எண் | திட்டம் | பொருள் குறியீடு | பொருள் சாதனை |
|---|---|---|---|
| 1. | தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 933 | 878 |
| 2. | பருத்தி தொழில்நுட்பவியல் குழு 2 திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 50 | 50 |
| 3. | மணிலாவில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள்\ (எண்கள்) | 150 | 150 |
| 4. | பயறுவகையில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 100 | 100 |
| 5. | தேசிய பயறு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டர்) | 667 | 667 |
| 6. | எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்ட செயல்விளக்கம் (எக்டர்) | 4000 | 4000 |

இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் மேற்கூறிய நோக்கோடு மேலும் விரிவுபடுத்தப்படும்.

[2001 செப்டம்பர் 4

**உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மற்றும் மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம்**

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்ட நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்குடன் 8 உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்களும், 49 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களும், 2 மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையங்களும் டிரைக்கோகிராமா, டிரைக்கோடர்மாவிரிடி, என்பி வைரஸ், சூடோமோனாஸ்ஃப்ளுரோசன்ஸ் போன்ற காரணிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது. இவற்றின் மூலம் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும் பரப்பு விவரம் வருமாறு:

(பரப்பு எக்டர்)

| பயிர்/ பூச்சிகள் | மையங்களின் எண்ணிக்கை | பரப்பு (எக்டர்) குறியீடு | சாதனை | 2001-2002க்கான குறியீடு |
|---|---|---|---|---|
| <u>ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள்</u> | | | | |
| 1. டிரைக்கோகிராமா (கரும்பு இடைக்கணுப்புழு) | 21 | 10500 | 11910 | 10500 |
| 2. பெத்திலிட்ஸ், பிரகோனிட்ஸ், யூலோபிட்ஸ் (தென்னை கருந்தலைப்புழு) | 19 | 10250 | 9898 | 10250 |
| 3. என்பிவி (பருத்தி காய்ப்புழு) | 3 | 1500 | 1603 | 1500 |
| 4. என்பிவி (மணிலா சிகப்பு கம்பளிப்புழு மற்றும் புரோடீனியா) | 4 | 480 | 504 | 480 |
| 5. பச்சை மஸ்கார்டின் பூஞ்சாணம் (குப்பிகள்) (தென்னை காண்டாமிருக வண்டு) | 2 | 10000 | 10000 | 10000 |
| <u>உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம்</u> | | | | |
| 6. டிரைக்கோகிராமா (பருத்தி, நெல், பயறுவகை மற்றும் மணிலா) | 10 | 50000 | 63000 | 50000 |



2001 செப்டம்பர் 4]

இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

**இலை மூலம் டை அமோனியம் பாஸ்பேட் தெளித்து பயறு வகைகள் உற்பத்தியை அதிகரித்தல்**

பயறு வகைகள் உற்பத்தியை உயர்த்த, குறிப்பாக நஞ்சை தரிசில் இலை மூலம் 2 விழுக்காடு டை அமோனியம் பாஸ்பேட் கரைசல் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. இதற்காக மானியமாக எக்டருக்கு ரூ.62.50 வீதம் வழங்கப்பட்டு 2000-2001 ஆம் ஆண்டில் 50000 எக்டர் பரப்பில் ரூ.31.25 இலட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்பட்டது. கடந்த ஆண்டு 49507 எக்டர் பரப்பில் ரூ.30.834 இலட்சம் செலவினத்தில் தெளிப்புப்பணி நிறைவடைந்தது.

**மரம் வளர்ப்புத் திட்டம்**

மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் 27 மாவட்டங்களில் உள்ள 81 ஊராட்சி ஒன்றியங்களில் மரக் கன்றுகள் நடப்பட்டு, நடப்பட்ட இம்மரங்களின் பராமரிப்புப் பணி ஊராட்சி ஒன்றியங்களிடம் 1.4.99 முதல் ஒப்படைக்கப்பட்டது.

**மாநில வேளாண்மை மன்றம்**

வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துதல் மற்றும் அதன் பொருட்டு மாநில வேளாண்மை மன்றம் அமைப்பதற்கான சட்டம் இயற்றுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**துறைகளின் செயல்பாடுகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வருதல்**

வேளாண்மை மற்றும் அதன் சகோதரத் துறைகளின் செயல்பாடுகள் தனித்தனியே வெவ்வேறு அலுவலகங்களில் உள்ளதால் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் பெற சிரமமான சூழ்நிலை இருந்தது. இதனைக் கருத்தில்கொண்டு மாவட்டங்களில் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து இடுபொருட்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் ஆகியவை ஒரே இடத்தில் கிடைக்கச் செய்ய வேளாண் துறையின் சகோதரத் துறைகள் அனைத்தும் இணைந்து செயல்படுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

50 எக்டர் நிரூபணம்

விவசாயிகளிடையே பல்வேறு தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்காக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 50 எக்டர் பரப்பில் பல்துறை செயல்விளக்கப் பண்ணையினை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. வேளாண் துறை மற்றும் அதன் சகோதரத் துறைகளும், பொதுத் துறை நிறுவனங்களும் இந்த செயல்விளக்கப் பண்ணையில் இணைந்து பங்கேற்று தொழில்நுட்பங்களைப் பரப்பும் பணியைச் செய்யும். 384 ஊராட்சி ஒன்றியங்களில், 461 இடங்களில், 50 எக்டர் நிரூபணங்கள் சகோதர மற்றும் பிற துறைகளின் பங்கேற்போடு அமைக்கப்பட்டன. இத்துறைகளிடையே சிறிய ஒருங்கிணைப்புக்கும், இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கும், வேளாண் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு ஒரு மாநிலக்குழுவையும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களைத் தலைவர்களாகக் கொண்டு மாவட்டக் குழுக்களையும் நியமித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இஸ்ரேல் நாட்டு ''தஹல்'' நிறுவன ஆலோசனை ஆய்வு

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தர்மபுரி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அதிகவருவாய் தரவல்ல பயிர்கள், சாகுபடி மற்றும் அதிக வருவாய் தரவல்ல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உகந்த திட்டமிடுதலுக்கான ஆய்வை இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த 'தஹல்' பொறியாளர்களின் ஆலோசனை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையை ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு ஒரு தொழில்நுட்பக் குழுவை அரசு அமைத்தது. அக்குழு அறிக்கையினை விரிவாக ஆராய்ந்து, பரிந்துரை அறிக்கையினை அரசுக்குச் சமர்ப்பித்தது. இதன் அடிப்படையில் மாவட்டங்களில் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநிலத் திட்டங்கள்

தென்னை மேம்பாட்டு திட்டங்கள்

தமிழ்நாட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்க பல்வேறு தென்னை அபிவிருத்தி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. நெட்டை மற்றும் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கென 26 தென்னை நாற்றங்கால்களும்,





நெட்டை இரக நெற்றுகள் உற்பத்தி செய்வதற்கென இரண்டு தாய்மரத் தோட்டங்களும் பராமரிக்கப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெட்டைக் கன்றுகள் கன்று ஒன்றுக்கு ரூ.12 எனவும், நெட்டை x குட்டைக் கன்றுகள் ரூ.20 எனவும் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2000-2001 ஆம் ஆண்டு தென்னை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆண்டு இலக்கு, சாதனை மற்றும் 2001-2002- க்கான இலக்கு ஆகியவை பின்வருமாறு:

(அலகு இலட்சம் எண்கள்)

| வ. எண் | இரகங்கள் | 2000-2001 இலக்கு | சாதனை | 2001-2002 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | நெற்றுகள் கொள்முதல் | | | |
| | அ. நெட்டை | 15.50 | 1270 | 13.50 |
| | ஆ. நெட்டை / குட்டை | 8.65 | 778 | 8.00 |
| | மொத்தம் | 24.15 | 20.48 | 21.50 |
| 2. | தென்னங்கன்றுகள் விநியோகம் | | | |
| | அ. நெட்டை | 12.00 | 10.54 | 10.08 |
| | ஆ. நெட்டை / குட்டை | 7.00 | 479 | 6.30 |
| | மொத்தம் | 19.00 | 15.33 | 16.38 |

**பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசுத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே ஆகும். 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கு, சாதனை மற்றும் 2001-2002 ஆம் ஆண்டிற்கான குறியீடு விவரங்கள் வருமாறு:

[2001 செப்டம்பர் 4

| வ. எண் | இனங்கள்/அலகு | 2000-2001 இலக்கு | 2000-2001 சாதனை | 2001-2002 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | உயர் மற்றும் வீரிய இரக சாகுபடி பரப்பு (இல.எக்.) | 3.00 | 1.841 | 3.00 |
| 2. | உற்பத்தி (இல.பொதி) | 6.50 | 3.76 | 6.50 |
| 3. | சான்று பெற்ற விதை உற்பத்தி (குவி) | 3750 | 2450 | 3750 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி) | 3750 | 2250 | 3750 |
| 5. | விதைகொள்முதல் (நிதி ரூ.இலட்சம்) | 78.62 | 77.99 | 78.62 |
| 6. | என்.பி.வி.நச்சுயிரி விநியோகம் (எக்) | 1500 | 1603 | 1500 |
| 7. | என்.பி.வி.நச்சுயிரி விநியோகம் (ரூ.இலட்சம்) | 0.60 | 0.47 | 0.60 |

### மாநில பருத்திக் குழு

தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க மாநில பருத்திக் குழுவினை வேளாண் அரசுச் செயலரைத் தலைவராகவும், வேளாண்மை இயக்குநரை உறுப்பினர் செயலாளராகவும் நியமித்து, அரசு அமைத்துள்ளது.

பருத்தி பயிரிடப்படும் பரப்பளவை அதிகரித்து, உற்பத்தித் திறனை உயர்த்தி, உற்பத்தியை அதிகப்படுத்தி தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சுத் தேவையைப் பூர்த்தி செய்வது இக்குழுவின் பிரதான நோக்கமாகும். இக்குழுவின் கூட்டம் இருமுறை கூட்டப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு உதவுவதற்கு வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்ட ஒரு அடிப்படைக் குழுவினையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுவும் இருமுறை கூட்டப்பட்டுள்ளது.

### கரும்பு அபிவிருத்தித் திட்டம்

பல்வேறு தொழில்நுட்பங்களைக் கையாண்டு, கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



2001 செப்டம்பர் 4]

| வ. எண் | இனங்கள்/அலகு | 2000-2001 இலக்கு | 2000-2001 சாதனை | 2001-2002 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | பரப்பு (இல.எக்.) | 2.75 | 3.051 | 2.75 |
| 2. | உற்பத்தி(இல.மெடன்) (வெல்லமாக) | 37.00 | 37.00 | 37.00 |
| 3. | ஒட்டுண்ணி விடுதல் (எக்) | 10500 | 11910 | 10500 |
| 4. | ஒட்டுண்ணி விடுதல் (நிதி ரூ.இலட்சத்தில்) | 3.75 | 3.75 | 3.75 |
| 5. | செயல்விளக்கப் பாத்தி அமைத்தல் (எண்) | 575 | 575 | 575 |

### 2001-2002 ஆம் ஆண்டிற்கான கரும்பு பயிரிடுதல் மற்றும் அதன் விளைச்சல்

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2001-2002 அரவை ஆண்டிற்கு 2.11 இலட்சம் ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் அரவைப் பருவத்தில் 64.00 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் அரவைப் பருவத்தில் 68.00 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் சராசரி கரும்பு விளைச்சல் ஹெக்டேர் ஒன்றுக்கு 79 மெட்ரிக் டன்களாக உள்ளது. தனியார் சர்க்கரை ஆலைகளில் 2000-2001 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 112 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது. 2001-02 பருவத்தில் 120 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மாநில சராசரி விளைச்சலைக் காட்டிலும் குறைவாக விளைச்சல் பெறப்படும் ஆலைப்பகுதிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனைகளைப் பெற்று, சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டு, விளைச்சலை அதிகப்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

### அதிக சர்க்கரைச் சத்துள்ள ரகங்களும் ஆலைகளின் கட்டுமான விகிதமும்

ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதில், அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு ரகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. 2000-01 ஆம் அரவைப் பருவத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு சுமார் 25% அளவிற்கே அரவை செய்துள்ளன. 2001-2002 அரவைப் பருவத்தில் அதிக சர்க்கரைச்

சத்துள்ள கரும்பின் அரவை 50 சதவீதம் அளவிற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தற்போது சராசரி கட்டுமானம் 9.36% அளவில்தான் உள்ளது. 2001-02 அரவைப் பருவத்தில் சராசரி கட்டுமானம் 9.65% ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்பு விலை

2000-01 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமுள்ள கரும்பிற்கு நிர்ணயிக்கப்பட்ட மைய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ.595 ஆகும். மேலும் ஒவ்வொரு 0.1 சதவீத கட்டுமானத்திற்கும் டன் ஒன்றுக்கு ரூ.7.00 வீதம் விலை அதிகரித்து வழங்கப்படுகிறது. கரும்பு கொள்முதல் செய்த 14 நாட்களுக்குள் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையைச் சர்க்கரை ஆலைகள் கண்டிப்பாக வழங்க வேண்டும். 2000-2001 ஆம் அரவைப் பருவத்திற்கு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 8.5 சதவீதம் கட்டுமான சர்க்கரை கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 775/-ம், 10.0 சதவீதம் சர்க்கரை கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1000.00. எனவும் வழங்க வேண்டுமென மாநில அரசு அறிவித்தது.

1998—99 ஆண்டு மாநில அரசு அறிவித்த கரும்பு விலையை எதிர்த்து தனியார் சர்க்கரை ஆலைகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். இதன்மீது சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து, 1998—99 ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு பரிந்துரை செய்த விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுக்க வேண்டுமென மாநில அரசு வற்புறுத்தக் கூடாது என இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. எனினும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விடக் கூடுதலாகவே தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்கி வருகின்றன.

அதிக கரும்பு விலை, குறைவான சர்க்கரை விலை மற்றும் நிதி இழப்பு

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானம் கடந்த ஆறு பருவங்களில் ஏறக்குறைய 1.0 சதவீதம் குறைந்துள்ளது. அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பு இரகமான கோ.க.671 செவ்வழுகல் நோயின் தாக்கத்தின் காரணமாகக் கைவிடப்பட்டதன் காரணமாக இவ்வாறு சர்க்கரைக் கட்டுமானம் குறைந்தது. மேலும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கூலி உட்பட நிர்வாகச் செலவுகள் அதிகமானதாலும், தேவைக்கு அதிகமான பணியாளர்கள்





பெரும்பாலும் அனைத்து ஆலைகளில் உள்ளதாலும் நிர்வாகச் செலவு அதிகமாகியுள்ளது. குறைவான சர்க்கரைக் கட்டுமானம், அதிக கரும்பு விலை மற்றும் அதிகமான செலவினங்களினால், உற்பத்திச் செலவு அதிகமாகி, ஆலைகள் தொடர்ச்சியாக நிதி இழப்பை அடைந்து வருகின்றன.

கரும்பின் கொள்முதல் விலை மற்றும் உற்பத்திச்செலவு அதிகமானபோதிலும் அந்த உயர்விற்கேற்றாற்போல், சர்க்கரையின் சராசரி விலை அதிகரிக்கவில்லை. 1993-94 ஆம் ஆண்டை அடிப்படையாக எடுத்துக்கொண்டால் கரும்பின் விலை 55 சதவீதம் உயர்ந்திருந்தும், லெவி சர்க்கரையின் விலை 12 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. உற்பத்திச் செலவிற்கும், சர்க்கரை மற்றும் துணைப் பொருட்களான சர்க்கரைப்பாகு போன்றவற்றை விற்பதால் கிடைக்கும் வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் மிக அதிக அளவில் இருப்பதால், சர்க்கரை ஆலைகளின் நிதி இழப்பு படிப்படியாக உயர்ந்துள்ளது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் மொத்த இழப்பு

கூட்டுறவு மற்றும் பொதுத் துறையிலுள்ள சர்க்கரை ஆலைகள் 1993-94 பருவம் வரை லாபத்தில் இயங்கிக்கொண்டிருந்தன. ஆனால் 1994-95 ஆம் ஆண்டு முதல் மிகவும் அதிகப்படியான கரும்பு கொள்முதல் விலை கொடுத்ததால் ஆலைகள் பெருத்த இழப்பு அடையத் தொடங்கின. 1999-2000 ஆம் ஆண்டு வரை மொத்த இழப்பு ரூ.689.29 கோடியாகும், 2000-2001 ல் எதிர்பார்க்கப்படும் இழப்பு ரூ.125.88 கோடியும் சேர்த்து, 31-3-2001 வரை மொத்த இழப்பு ரூ.815.17 கோடியாகும். இந்த பெருத்த இழப்பினால் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையைக் கூட வழங்க முடியவில்லை. இதனால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மாநில அரசு பரிந்துரை விலையில் அதிகமாக நிலுவை உள்ளது.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்பு பயிரிடும் பகுதிகளுக்குமிடையில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் கரும்பு போக்குவரத்து எளிதாக இருக்கவும் தொடர்ந்து சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை ஏற்றிச்செல்லவும், விவசாயிகளுக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் 1949ன்படி உள்ளூர்

பகுதியைத் தவிர வெளியிலிருந்து ஆலைகளுக்கு அரவைக்காகக் கொண்டு வரும் கரும்பின்மீது கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ5 வீதம் வசூலித்து இந்நிதி கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த ஐந்தாண்டுகளில் கரும்பு மேல்வரி வசூலிக்கப்பட்ட விவரம், சாலை பராமரிப்புக்கு மேற்கொண்ட செலவு விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | கரும்பு மேல் வரி வசூலித்தது (இல.ரூ.) | புதிய சாலைகள் அமைக்க (இல.ரூ.) | சாலையின் நீளம் (கி.மீ.) | பராமரிப்பு பணிகள் (இல.ரூ.) | மொத்த செலவினம் (இல.ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1996-97 | 630.29 | 436.89 | 35.650 | 425.00 | 861.89 |
| 1997-98 | 393.98 | 411.30 | 34.900 | 475.12 | 886.42 |
| 1998-99 | 522.22 | 258.80 | 25.050 | 324.58 | 583.38 |
| 1999-2000 | 654.25 | 338.78 | 31.170 | 200.40 | 539.18 |
| 2000-2001 | 1015.96 | 500.07 | 59.000 | 199.76 | 699.83 |
| 2001-2002 (ஜூன் 2001 வரை) | 228.41 | 49.76 | 16.20 | 16.11 | 65.87 |

கரும்பு பயிரிட சொட்டுநீர்ப் பாசனம்

நீர்வளம் தற்போது அரிதாகிவிட்டதாலும், வழக்கமான நீர்ப் பாசன முறைகளால் அதிக அளவு தண்ணீர் செலவாவதாலும், தண்ணீரைச் சேமித்து அதிகப் பரப்பளவில் கரும்பு பயிரிடுவதற்கு ஏதுவாக சொட்டு நீர்ப் பாசன முறையைப் பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உழவர் பயிற்சி நிலையங்கள்

விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சியளித்து, அதன் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக்கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கு கிராம அளவிலான அடிப்படைப் பயிற்சியும், களப்பயிற்சி செயல் விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. மேலும் பண்ணைச் செய்திகள் வானொலி மற்றும் தினசரிகள் மூலம் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.





வருடந்தோறும் உழவர் தினவிழா நடத்தப்பட்டு, விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள இதர வல்லுநர்கள் கலந்துகொண்டு விவசாயிகள் பயனடைய வழி வகுக்கப்படுகிறது. மற்றும் விவசாயிகள் ஆண்டுதோறும் சுற்றுலாவாக ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் வயல்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டு நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சியை நேரில் கண்டறிந்து, அனுபவம் பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு வேளாண்மை பற்றிய பயிற்சி அளிப்பதுடன் மட்டுமல்லாது, உழவர் பயிற்சி நிலையங்கள், வேளாண் சார்ந்த சிறு தொழில் குறித்து சிறப்புப் பயிற்சிகளும் அளித்து, விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவுகின்றன. காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தர்மபுரி, பவானி, இலால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் திருப்பதிசாரம் ஆகிய இடங்களில் இயங்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் சுமார் 40000 விவசாயிகள் பயனடைகின்றனர்.

2000-2001 ஆம் ஆண்டு இலக்கு சாதனை மற்றும் 2001-2002 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | 2000-2001 இலக்கு | 2000-2001 சாதனை | 2001-2002 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | ஆண்/பெண் விவசாயிகளுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 264 | 271 | 264 |
| 2. | உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான கிராம அளவிலானபயிற்சி (எண்) | 120 | 127 | 120 |
| 3. | களப்பயிற்சி மற்றும் இரண்டாம் நிலை செயல்விளக்கம் (எண்) | 1320 | 1324 | 1320 |
| 4. | வயல்வெளிச் செயல்விளக்கம் (எண்) | 528 | 530 | 528 |
| 5. | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | 24.50 | 18.82 | 22.30 |

[2001 செப்டம்பர் 4

## மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்

குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் வேளாண் துறையின்கீழ் பணியாற்றிவரும் விரிவாக்க அலுவலர்கள் மேன்மேலும் சிறந்த முறையில் பணியாற்றிட, நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மாநில அளவிலான இப்பயிற்சி நிலையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள், இதர அரசுத் துறை மற்றும் இதர நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களுக்கும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

*2001-2002 ஆம் ஆண்டிற்கான இலக்கு பின்வருமாறு:*

| வ.எண் | பயிற்சி விவரம் | இலக்கு |
|---|---|---|
| 1 | வயல்விளக்க அலுவலர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி | 50 |
| 2 | நிலைபெற்ற வேளாண்மை (எண்) | 400 |
| 3. | தரக்கட்டுப்பாட்டுப் பயிற்சி | 200 |
| 4. | கேள்-காண் சாதனங்கள் கையாளுதல்பற்றி பயிற்சி (எண்) | 200 |
| 5. | வேளாண் விரிவாக்க மைய மேலாண்மை (எண்) | 200 |
| 6. | வேளாண் விரிவாக்க மையப் பராமரிப்பு (எண்) | 200 |
| 7. | கணினிப்பொறி பயிற்சி (எண்) | 120 |
| 8. | நிதி ஒதுக்கீடு (இலட்சம் ரூபாயில்) | 11.60 |

## மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு

மண்ணின் தன்மை, அதன் பௌதீக மற்றும் இரசாயன குணங்கள் ஆகியவற்றைக் கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகள் மூலம் கண்டறிந்து, சர்வதேச நிலைக்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி நில அமைப்பியலின்படி வரைபடம் வரைந்து பல்வேறு வகையான உபயோகங்களுக்கு பயன்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கும் இம்மண் அளவை அமைப்புகளில் ஆண்டு இலக்கான 1.30 இல. எக்டரில், 1.09 இல. எக்டர் பரப்பில் விரிவான அளவை மேற்கொள்ளப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டு 1.10 இலட்சம் எக்டர் பரப்பில் 'விரிவான மண் அளவை' தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.



2001 செப்டம்பர் 4]

## மாவட்ட மண்வளத் தொகுப்பேடு

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடக்க மண் வகையீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, ஏட்டளவில் இருந்த மண்வளத் தொகுப்பேடுகள் உலக வங்கி நிதி உதவியுடன் அச்சிடப்பட்டு தகவல் களஞ்சியமாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1997-98 ஆம் ஆண்டில் ரூ.7.13 இலட்சம் செலவில் 7 மாவட்டங்களுக்கு, இரண்டாம் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் ரூ.15 இலட்சம் செலவில் 16 மாவட்டங்களுக்கு மண்வளத் தொகுப்பேடுகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் மாவட்டத்தின் பொதுவான தகவல்கள், மண்ணின் வகை மற்றும் குணாதிசயங்கள், மண்ணின் திறன், உற்பத்தித் திறன், பாசனத்திறன், ஏற்புடைய பயிர்கள் போன்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன. நிலப்படத் தொகுப்பு அச்சிடாமல் உள்ள கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களின் நிலப்படத் தொகுப்பு தயாரிக்கத் தேவையான தகவல்கள் ஒருங்கிணைப்பு பணி தற்சமயம் நடைபெற்று வருகின்றது.

## களர் உவர் நிலச் சீர்திருத்தம்

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ஆண்டிற்கு 1600 எக்டர் வீதம் மூன்று ஆண்டுகளில் (1998-99, 1999-2000 மற்றும் 2000-2001) 4,800 எக்டர் பரப்பில் களர் உவர் நிலச் சீர்திருத்தம் ரூ.404.68 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 1778 எக்டர் பரப்பில், களர், உவர் நிலங்களைச் சீர்திருத்துவதற்காக ரூ.116.88 இலட்சம் நிதி செலவிடப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.126.39 இலட்சம் செலவில் 1600 எக்டர் பரப்பில் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## மண் பரிசோதனை நிலையங்கள்

தமிழ்நாட்டில் தற்போது இயங்கிவரும் 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்து குறிப்பான உரப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இலக்கிடப்பட்ட 8.42 இலட்சம் மண் மாதிரிகளில், 5.54 இலட்சம் மாதிரிகள் 2000-2001 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டன. 2001-2002 ஆம் ஆண்டில் மண் ஆய்வுக்கூடங்கள் மூலம் 8.4

இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 2.88 இலட்சம் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வகங்கள் களர், உவர் மண் பகுதிகளுக்குச் சீர்திருத்த ஆலோசனை வழங்குதல், கிராம அளவிலான மண் வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர் தன்மையை அறிதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம், மண் பரிசோதனை முகாம், கருத்துக்காட்சிகள் மூலம் மண், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட உரத் தொழில்நுட்பங்களைப் பரப்புவதில் இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் உறுதுணை புரிகின்றன. பரிசோதனைத் தரத்தை துல்லியமாக்கவும், பரிசோதனைக்கூட ஆய்வாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கவும் குடுமியான்மலையில் 'மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம்' ஒன்றும் இயங்கி வருகிறது.

## உரப் பரிசோதனை நிலையங்கள்

விவசாயிகளுக்குத் தரமான இரசாயன உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி வழங்கும் நோக்கத்துடன் உரக் கட்டுப்பாடு ஆணையின்கீழ் உர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண்மை அலுவலர்கள், சில்லரை மற்றும் மொத்த உர விற்பனை மையங்கள், உர உற்பத்திக் கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து உர மாதிரிகளை எடுக்கின்றனர். ஆண்டொன்றுக்கு 17.220 உர மாதிரிகள் 14 உரப் பரிசோதனைக் கூடங்கள் மூலம் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்விலக்கில் 2000-2001 ஆம் ஆண்டு 17583 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் 17220 மாதிரிகள் ஆய்விட இலக்கிடப்பட்டுள்ளது. இத்துறையின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவால் அமலாக்கப்படும் 1985 ஆம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணை கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் தரமான இரசாயன உரங்களை விநியோகிக்க வழி வகுக்கிறது.

## பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்

வேளாண்மைத் துறையில் ஆண்டு ஒன்றுக்கு 16,236 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்ட ஒன்பது பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு, 16648 எண்கள் மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் 16236 மாதிரிகள் ஆய்விட இலக்கிடப்பட்டுள்ளது.





## பயிர் விளைச்சல் போட்டி

உயர் வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தியை உயர்த்த பயிர் விளைச்சல் போட்டி மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல் அவசியமாகிறது. இந்நோக்கத்தை அடைய பயிர் விளைச்சல் போட்டித் திட்டம், மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கு இந்த போட்டி நடத்தப்படுகிறது.

வழங்கப்படும் பரிசுத் தொகை பின்வரு[illegible]று:

(அலகு ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| இதர பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |

2000-2001 ஆம் ஆண்டில் இந்தப் போட்டிகள் ரூ. 16.63 இலட்சம் ஒதுக்கீட்டுடன் நடத்தப்பட்டன. மாநில அளவு போட்டிக்கு நுழைவுக் கட்டணமாக நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.100 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ.50 ஆகவும், மாவட்ட அளவில் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.50 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. 25 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மாநில அளவில் 382 விவசாயிகளும், மாவட்ட அளவில் 1532 விவசாயிகளும் பதிவு செய்தனர். 2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம்

மத்திய அரசு, தற்போது மாநிலம் முழுவதும் அமலில் உள்ள விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்குப் பதில் 'தேசிய வேளாண்மை காப்பீடு' எனும் புதிய திட்டத்தை 1999 முதல் செயல்படுத்த அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்கப்படும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குக் காப்பீட்டுக் கட்டணத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படும். இத்தொகையினை மத்திய, மாநில அரசுகள் சரிசமமாக ஏற்கும். இத்திட்டத்தின்கீழ் உணவு

[2001 செப்டம்பர் 4

தானியங்கள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிகப் பயிர்களான கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு ஆகிய பயிர்களுக்கு வழங்கப்படும். கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் இந்தத் திட்டம் கரீப் 2000 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## பள்ளிக் கல்வியில் வேளாண்மையைப் பாடமாக அமைப்பது

வேளாண்மைக் கல்லூரிகளில் சேர முனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக அமைப்பதுபற்றி அரசு பரிசீலித்து, 100 மேல்நிலைப் பள்ளிகளிலும், 100 உயர்நிலைப் பள்ளிகளிலும் வேளாண்மைப் பாடத்தை அறிமுகப்படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. 113 ஆசிரியர் பணியிடங்களையும் தோற்றுவித்துள்ளது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட நால்வர் குழுவினரால் தயாரிக்கப்பட்ட வேளாண்மைப் பாடத்திட்டம் மற்றும் புத்தகங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக பள்ளிகளில் வேளாண்மை அறிவியல் பாடமாகக் கற்பிக்கப்படும்.

## பேரியல் மேலாண்மை வேளாண் திட்டம்

### தானிய அபிவிருத்தித் திட்டம்

தமிழ்நாட்டில் நெற்பயிர் மிகுதியாகப் பயிரிடப்படும் மாவட்டங்களில் அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. நெல் சாகுபடியில் மேலும் அதிக கவனம் செலுத்தும் வகையில் தொழில்நுட்பங்களைப் பரவலாக்குவது மற்றும் அவசிய இடு பொருட்களை மானிய விலையில் விநியோகித்தல் போன்ற இனங்களைக் கொண்ட இத்திட்டம் ஒரு மத்திய அரசு சார்புத் திட்டமாக, மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனைவிட உற்பத்தித் திறன் குறைவாக உள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட 140 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் மத்திய அரசின் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தொகுக்கப்பட்டு, மத்திய, மாநில அரசுகள் செலவினத்தை முறையே 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.



2001 செப்டம்பர் 4]

இனவாரியாக 2000-2001 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| | சான்றுபெற்ற விதை விநியோகம் (மெடன்) | | | | |
| 1. | நெல் மற்றும் சிறு தானியங்கள் | 7866 | 6974.5 | 161.33 | 144.72 |
| 2. | உற்பத்தித் தொழில்நுட்ப நிரூபணம் (ஏக்கர்) | 467 | 550 | 11.67 | 13.77 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 220 | 223 | 11.00 | 11.13 |
| 4. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பம் (எண்) | 933 | 878 | 56.00 | 54.18 |
| 5. | வீரிய ஒட்டு நெல் உற்பத்தி தொழில்நுட்பம் (ஏக்கர்) | 1333 | 1340 | 13.33 | 13.20 |
| 6. | விசை உழுவைகள் விநியோகம் (எண்) | 800 | 743 | 240.00 | 240.00 |
| 7. | சில்லரைச் செலவினம் | ... | ... | 5.18 | 5.26 |
| 8. | விளம்பரம் | ... | ... | 13.33 | 11.43 |
| | மொத்தம் | ... | ... | 511.84 | 493.69 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

### கரும்பு பெருக்குத் திட்டம்

மத்திய அரசு செயல்படுத்தி வந்த கரும்பு ஆதாரமுள்ள பயிர் செய்யும் முறைக்கான நிலையான வளர்ச்சித் திட்டத்தினை கடந்த ஆண்டு பேரியல் மேலாண்மை திட்டப் பிரிவின்கீழ் ரூ.19.196 இலட்சம் செலவில் செயல்படுத்தியது. இத்திட்டச் செலவினை மத்திய, மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

[2001 செப்டம்பர் 4

2000-2001 ஆம் ஆண்டில் இனவாரியாக பொருள், நிதி இலக்கு மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | களசெயல் விளக்கம் (எண்.) | 200 | 200 | 10.00 | 10.00 |
| 2. | மாநில பயிற்சி (எண்) | 2 | 2 | 0.30 | 0.30 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 106 | 106 | 5.333 | 5.298 |
| 4 | ஒட்டுண்ணி விடுதல் (எக்டர்) | 6665 | 6313 | 1.333 | 1.165 |
| 5. | சில்லரைச் செலவினம் | .. | ... | 2.20 | 1.165 |
| | மொத்தம் | .. | ... | 19.196 | 18.801 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

## பண்ணை இயந்திரமாக்கும் திட்டம்

சிறு விவசாயிகள் காலத்தே பண்ணை வேலைகளை ஆற்ற உதவும் வகையில், விவசாய வேலைகள் முழு வீச்சில் உள்ள, ஆட்பற்றாக்குறை தோன்றும் முக்கிய பருவ காலங்களில் பயன்படுத்தும் நோக்கில் 30 குதிரைத் திறன் வரையுள்ள சிறு இழுவைகளை (டிராக்டர்) மானியத்தில் (தேவையான இணைப்புக் கருவிகளுடன் பெறக்கூடியது) வழங்கும் திட்டம் 90:10 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகளின் பங்களிப்போடு 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது.

2000-2001 ஆம் ஆண்டில் மத்திய அரசின் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 100 எண்கள் 30 குதிரைத் திறன் கொண்ட இழுவைகள் ரூ. 30 இலட்சம் செலவிலும், 25 எண்கள் நெல் நாற்று நடும் கருவி ரூ.7.50 இலட்சம் செலவிலும், 100 எண்கள் கதிரடிக்கும் கருவிகள் ரூ.10 இலட்சம் செலவிலும் வழங்க அரசாணை பெறப்பட்டு, அதில் செலவுத் தொகை மூன்றில் இரண்டு பங்காகக் குறைக்க வழங்கிய உத்திரவின்படி, 66 எண்கள் 30 குதிரை திறன் கொண்ட இழுவைகளும், 16 எண்கள் நெல் நாற்று நடும் கருவிகளும், 66 எண்கள் கதிரடிக்கும் கருவிகளும் விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டம் 2001 - 2002 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்



2001 செப்டம்பர் 4]

## தென்னை மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசின் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தென்னை மேம்பாட்டுக்கென பல்வேறு இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் வருமாறு:

(ரூ இலட்சத்தில்)

| வ. எண் | இனம்/அலகு | பொருள் (2000-2001) | | நிதி (2000-2001) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு | 825000 | 825000 | 66.000 | 65.980 |
| 2. | நுண்ணூட்டச்சத்து விநியோகம் | 66680 | 66767 | 16.670 | 16.650 |
| 3. | பல இரக சாகுபடி | 400 | 396.50 | 0.80 | 0.79 |
| 4. | இலை தின்னும் புழுவைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி உற்பத்தி | 10 | 4.62 | 1.47 | 0.665 |
| | மொத்தம் | | | 84.940 | 84.085 |

## தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதித் திட்டம்

தேசிய மானாவாரி நீர்ப்பிடி முகடு திட்டம் 1990-1991 ஆம் ஆண்டு முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, திருநெல்வேலி, விருதுநகர், தருமபுரி ஆகிய 19 மாவட்டங்களில் உள்ள 84 வட்டாரங்களில் ரூ.41.51 கோடி மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் 1,75,704 எக்டர் பரப்பளவில் 8 ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு 1,72,657 எக்டர் பரப்பில் 38.48 கோடி செலவினம் செய்யப்பட்டது. மத்திய அரசால் 9-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ரூ.80 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 9-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மேற்கொண்ட செலவின விவரம் வருமாறு:-

| வருடம் | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| 1997-98 | 736.090 |
| 1998-99 | 1769.838 |
| 1999-2000 | 1704.957 |

2000-2001 ஆம் ஆண்டில் மத்திய அரசு 1800 இலட்சம் ஒப்பளிப்பு செய்ததுடன் அதற்கு முந்தைய ஆண்டு செலவிடாத் தொகை ரூ 56.019

[2001 செப்டம்பர் 4

இலட்சத்தினையும் ஒப்பளிப்பு செய்தது. இத்திட்டம் அனைத்து வட்டாரங்களிலும் 30 சதவிகிதத்திற்கும் குறைவான நீர்ப்பாசன வசதியுள்ள பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் கடந்த ஆண்டு முதல் மத்திய அரசின் பெரும் மேலாண்மை வேளாண் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இதில் திட்டச் செலவினம் ரூ.1196 இலட்சத்திற்கு குறைக்கப்பட்டது. இயற்கை வளங்களை ஒருங்கிணைந்த முறையில் பாதுகாத்தல், மண்வளம் பாதுகாத்தல், கிடைக்கும் இடத்திலேயே ஈரத்தைப் பாதுகாத்தல், கிராமங்களுக்கு பரந்த அளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல், கிராம மக்கள் நகர்ப்புறம் செல்வதைத் தவிர்த்தல், மானாவாரி மற்றும் இறவைப் பகுதிகளிடையே உள்ள வேறுபாட்டைக் குறைத்தல், இருக்கும் வளங்களை வைத்து உணவு, எரிபொருள், தீவனம் தொடர்ந்து கிடைக்கச் செய்தல், மானாவாரி மற்றும் நிலமற்ற விவசாயிகளின் பொருளாதாரத்தை உயர்த்துதல் ஆகியவையே திட்ட நோக்கங்கள். இத்திட்டத்தின்கீழ், 2000-2001 ஆம் ஆண்டிற்கான ரூ.1124.75 இலட்சம் செலவினமும், 1999-2000 ஆம் ஆண்டில் செலவழிக்காத தொகையான ரூ.56.019 இலட்சம் செலவினமும் சேர்த்து ரூ.1180.770 இலட்சம் செலவிடப்பட்டது. திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இனம் வாரியாக 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனை விவரம் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | செயல்பாடுகள் | 2000-2001 இலக்கு | 2000-2001 சாதனை | 2001-2002 இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | அடிப்படை செயல்பாடுகள் | 676.493 | 406.921 | 601.650 |
| 2 | சாகுபடிக்கு ஏற்ற நிலம் | 492.972 | 347.956 | 464.130 |
| 3 | சாகுபடிக்கு லாயக்கற்ற நிலம் | 578.462 | 350.608 | 550.080 |
| 4 | கால்நடை அபிவிருத்தி | 108.092 | 75.285 | 103.140 |
| | மொத்தம் | 1856.019 (**) | 1180.770 (**) | 1719.000 |
| | செயல்பரப்பு (எக்டரில்) | 53029 | 33736 | 49114 |

(**) 1999-2000 ஆம் ஆண்டிற்கு செலவழிக்கப்படாத தொகை ரூ. 56.019 இலட்சம், 2000-2001 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டது.



2001 செப்டம்பர் 4]

மத்திய அரசு சார்புத் திட்டங்கள்

தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் விதை சிறுதளை இனம் (100 விழுக்காடு மத்திய அரசு செலவினம்) தவிர மீதமுள்ள இன செலவினங்களை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டம் கோவை, திண்டுக்கல், ஈரோடு மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

2000-2001 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் சாதனை விவரம் வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | வயல்விளக்கம் (எண்) | 856 | 856 | 8.560 | 8.560 |
| 2. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் (எண்) | 30 | 30 | 1.800 | 1.800 |
| 3. | விவசாயிகள் பயிற்சி (எண்) | 31 | 31 | 1.550 | 1.550 |
| 4. | மேம்படுத்தப்பட்ட கருவிகள் விநியோக மானியம் (2 மாவட்டங்கள்) | ... | ... | 0.800 | 0.800 |
| 5. | விளம்பரம் (2 மாவட்டங்கள்) | ... | ... | 0.550 | 0.550 |
| 6. | சில்லறைச் செலவினம் (2 மாவட்டங்கள்) | ... | ... | 0.540 | 0.519 |
| 7. | விதை சிறுதளை செயல் விளக்கம் வீரிய ஒட்டு இரகம் | 720 | 666 | 0.400 | 0.397 |
| | மொத்தம் | .. | .. | 14.200 | 14.186 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2001 செப்டம்பர் 4

## தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்

மாநிலத்தின் பருப்பு வகைகள் தேவைக்கும், கிடைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய சுமையைக் குறைக்கவும், தேவையான உற்பத்தி உயர்வை அடைய மாநில அரசு தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பெருவிளக்கப் பண்ணை மூலம் புதிய ரகங்களை அறிமுகப்படுத்துதல், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, விவசாயப் பயிற்சி மற்றும் நீர் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்துகிறது. இவ்வாறான நடவடிக்கைகளில் மத்திய அரசு மானியம் என்ற வகையான நிதி உதவி இத்திட்டத்தின்மூலம் அளிக்கிறது. அதற்கான மொத்த செலவில் 75:25 என்ற விகிதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் பங்கேற்கின்றன.

இனவாரியாக 2000-2001 ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/ அலகு | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | கருவிதை கொள்முதல் (குவி) | 140 | 172.58 | 7.00 | 8.74 |
| 2. | ஆதார விதை உற்பத்தி (குவி) | 1000 | 1463.00 | 5.00 | 7.249 |
| 3. | விதை கிராமம் (குவி.) | 5600 | 8943.84 | 28.00 | 43.633 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி.) | 10100 | 3200.00 | 30.30 | 9.600 |
| 5 | பெருவிளக்க பண்ணை (எக்) | 909 | 1416.77 | 20.00 | 19.871 |
| 6. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் (எக்) | 667 | 667.00 | 10.00 | 8.917 |
| 7. | பயிற்சிகள் (எண்) | 13 | 13 | 2.00 | 1.950 |
| 8. | நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் (எக்) | 10000 | 2783[illegible].00 | 5.00 | 5.601 |
| 9. | நுண்ணூட்ட சத்துகள் விநியோகம் (எக்) | 1000 | 206[illegible].00 | 2.00 | 2.039 |



2001 செப்டம்பர் 4]

| வ. எண் | இனம்/ அலகு | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 10. | பயிர்பாதுகாப்பு கருவிகள் (எண்) | 571 | 758.00 | 8.00 | 7.742 |
| 11. | விதைநேர்த்தி 50ரூபாய் மானியம் (எக்) | 2000 | 36782 | 2.00 | 1.950 |
| 12. | தெளிப்பு நீர் பாசன கருவிகள் (எண்) | 200 | 122 | 15.00 | 14.354 |
| 13 | ஜிப்சம்.விநியோகம் (எக்) | 2000 | 7164 | 10.00 | 9.127 |
| 14 | என்.பி.வி. விநியோகம் (எக்) | 800 | 884 | 2.00 | 1.872 |
| 15. | பணியாளர் சம்பளம் | | | 7.00 | 6.96 |
| | மொத்தம் | | | 153.30 | 149.605 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

## பருத்தி தொழில்நுட்பவியல் குழுத் திட்டம்

மத்திய அரசு, ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் செயல்படுத்துவதற்கு, பருத்தி தொழில்நுட்பக் குழுத் திட்டம் II என்கிற புதிய திட்டத்தினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும் வண்ணம் நடைமுறைப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தி உற்பத்தி அதிகரிப்பு, பருத்திப் பயிர்ப் பாதுகாப்பு அறுவடைத் தொழில்நுட்பங்கள் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப விளக்கம் போன்றவைகளை தேவைப்படும் மாவட்டத்திற்கு வழங்குதல் ஆகியன. இதற்கென மொத்தம் ரூ.556.50 இலட்சம் ஒதுக்கி, அதனை தமிழ்நாடு உட்பட 11 பருத்தி அதிகமாகப் பயிரிடும் மாநிலங்களில் செயல்படுத்தி வருகிறது.

2000-2001 ஆம் ஆண்டு மத்திய அரசின் ரூ.556.30 இலட்ச நிதி ஒப்பளிப்புடன் இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இனவாரியாக ஒதுக்கீடு மற்றும் செலவின விவரம் வருமாறு:

[2001 செப்டம்பர் 4

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | சான்று பெற்ற விதை விநியோகம் ரூ.1000/குவிண்டால் | 280 | 282 | 2.80 | 2.816 |
| 2. | செயல் விளக்கம் ரூ.2500/எக்டர் | 6090 | 6339 | 152.25 | 150.055 |
| 3. | விரிவாக்க பணியாளர் பயிற்சி ரூ.15000/பயிற்சி | 24 | 24 | 3.60 | 3.60 |
| 4 | விவசாயிகள் பயிற்சி ரூ.10000/பயிற்சி | 130 | 113 | 13.00 | 11.30 |
| 5. | பூச்சி நோய் கண்காணிப்பு (மாவட்டங்கள்) | 23 | 23 | 55.83 | 53.028 |
| 6. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் மற்றும் பயிற்சி ரூ.5000/பயிற்சி | 50 | 49 | 42.50 | 39.989 |
| 7. | இனக்கவர்ச்சி பொறி விநியோகம் ரூ.500/எக்டர் | 3000 | 281 | 15.00 | 1.567 |
| 8. | உயிர் காரணிகள் விநியோகம் ரூ.300/எக்டர் | 3000 | 3131 | 9.00 | 8.927 |
| 9. | கையால் இயக்கப்படும் தூவுவான் மற்றும் தெளிப்பான்கள் விநியோகம் ரூ.700/எண் | 1460 | 1361 | 10.22 | 7.467 |
| 10. | விசைத் தெளிப்பான் மற்றும் தூவுவான் ரூ.1500/எண் | 960 | 684 | 14.40 | 10.559 |



2001 செப்டம்பர் 4]

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 11. | உயிரியல் கட்டுப்பாட்டு கூடம் ரூ.100 இலட்சம்/கூடம் | 2 | – | 200.00 | – |
| 12. | தெளிப்பு நீர்பாசன கருவி விநியோகம் அ) ரூ.10000/எக்டர் ஆ) ரூ.15000/எக்டர் | 150 | 132 | 17.70 | 16.817 |
| 13. | சொட்டுநீர்ப் பாசன கருவிகள் விநியோகம் ரூ.25000/எக்டர் | 20 | 51 | 5.00 | 12.363 |
| 14. | இதர செலவினங்கள் | | | 15.00 | 12.484 |
| | மொத்தம் | – | – | 556.30 | 330.972 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்**

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஆர்வத்துடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாகவும், முக்கியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவதன் மூலமும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும் இம்மாநிலத்தில் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில் இத்திட்டம் மத்திய அரசு சார்புத் திட்டமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

2000-2001 ஆம் ஆண்டில் இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை விவரம் கீழ்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டமைப்பு வசதிகள் | - | - | 5.00 | - |
| 2. | வல்லுனர் விதை உற்பத்தி(குவி) | 867 | 891.63 | 13.00 | 14.13 |

[2001 செப்டம்பர் 4

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 3. | ஆதார விதை உற்பத்தி (குவி) | 4000 | 4904.15 | 20.00 | 22.32 |
| 4. | விதைக் கிராமம் (குவி) | 10000 | 12786.79 | 50.00 | 52.11 |
| 5. | சான்றுவிதை விநியோகம் (குவி) | 11713 | 22998.26 | 93.70 | 103.94 |
| 6. | விதை சிறுதளை விநியோகம் (எண்) | - | 8500 | - | - |
| 7. | பெருவிளக்கப்பண்ணை அமைத்தல் (எக்டர்) | 1000 | 1228 | 20.00 | 13.14 |
| 8. | விதைநேர்த்தி (எக்டர்) | 20000 | 44475.4 | 20.00 | 20.68 |
| 9. | நுண்ணுயிர் விநியோகம் (எக்) | 40000 | 68924.10 | 20.00 | 22.21 |
| 10. | ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு நிருபணம் (எண்) | 4000 | 3694 | 60.00 | 48.94 |
| 11. | ஜிப்சம் விநியோகம் (எக்) | 34000 | 45664.20 | 170.00 | 169.29 |
| 12. | வேளாண் கருவிகள் விநியோகம் (எண்) | 250 | 517 | 5.00 | 1.00 |
| 13. | பயிர்பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்) | 571 | 676 | 8.00 | 7.73 |
| 14. | நுண்ணூட்டச் சத்து விநியோகம் (எக்) | 12500 | 19925.50 | 25.00 | 24.05 |
| 15. | உழவர் பயிற்சி (எண்) | 200 | 200 | 30.00 | 29.97 |
| 16. | தெளிப்புநீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 336 | 280 | 42.00. | 36.73 |
| 17. | சம்பளம் மற்றும் இதர செலவினம் | | | 45.00 | 53.98 |
| | மொத்தம் | | | 626.70 | 620.22 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.



2001 செப்டம்பர் 4]

**எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம்**

சமையல் எண்ணெய் தேவையை மாநிலத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மத்திய அரசு சார்புத் திட்டமாக மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் நிதி உதவி செய்து செயல்படுத்தப்படுகிறது. சாகுபடிப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் 6 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யும் வகையில் 900 கன்றுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் எண்ணெய்ப் பிழிந்தெடுத்து சுத்திகரிப்பு செய்யும் ஆலைகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் எண்ணெய்ப்பனை சட்டமொன்றும் இயற்றப்பட்டுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு | பொருள் சாதனை | நிதி (ரூ.இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ.இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | திட்டத்திற்கு முந்திய நடவடிக்கைகள் (எக்டரில்) | 1000 | 787 | 54.00 | 42.47 |
| 2. | பரப்பு விரிவாக்கம் (எக்) | 1400 | 938.98 | 98.00 | 65.65 |
| 3. | அலுவலர், விரிவாக்க பணியாளர் மற்றும் எண்ணெய்ப்பனை உற்பத்தியாளர் பயிற்சி | 550 | 203 | 2.00 | 1.69 |
| 4. | விளம்பரம் மற்றும் விரிவாக்கம் | - | - | 1.65 | 1.66 |
| 5. | இரண்டாம் ஆண்டு முதல் பராமரிப்பு செலவு (எக்) | 1952 | 1186 | 55.48 | 29.14 |
| 6. | சொட்டுநீர்ப் பாசனம் (எக்) | 310 | 173 | 17.77 | 10.67 |
| 7. | சம்பளம் | | | 7.50 | - |
| | மொத்தம் | | | 236.40 | 151.28 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2001 செப்டம்பர் 4

### விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம்

வெளி மாநிலங்களில் வேளாண் திட்டங்களையும், கடைப் பிடிக்கப்படும் தொழில் நுட்பங்களையும் நேரில் கண்டு சாகுபடி முறைகளை அறிந்து கொள்ள 20 பேர் அடங்கிய குழுக்களாக நம் மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்று பார்வையிட போக்குவரத்துச் செலவினமாக ஒரு குழுவிற்கு ரூ.50,000/- வீதம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 20 பேர் அடங்கிய மூன்று குழுக்கள் உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு பயிர் சாகுபடி முறையை அறிய சென்று வந்துள்ளனர்.

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்

### தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம்

தென்னை நெற்றுகள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம் கொச்சியில் உள்ள தென்னை அபிவிருத்தி வாரியம் வழங்கும் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தென்னை நடவு செய்ய முதலாண்டு ரூ.4000/-மும், இரண்டாம் ஆண்டில் ரூ. 4000/-மும், மொத்தம் எக்டர் ஒன்றுக்கு ரூ.8000/- மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் வழங்கப்படும் மானியத் தொகை தென்னை நடுவோர்க்குத் தேவையான கன்றுகள், குழிகள் எடுத்தல், நடவு மற்றும் இதர செலவினங்களுக்கும், இரண்டாவது ஆண்டில் பராமரிப்புச் செலவுகளுக்கும் வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.55.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

### தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணைமுறை

தென்னை நெற்றுகள் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் முதிர்ந்த மற்றும் நோயுற்ற தென்னை மரங்களை அகற்றுதல்; மாதிரி விதைப்பண்ணை அமைத்தல் மற்றும் இயற்கை உரம் தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர, தனியார் தென்னை



2001 செப்டம்பர் 4]

நாற்றுப்பண்ணைகளுக்கு கன்றுகள் உற்பத்திக்கு ஊக்கம் தர திட்டம் உள்ளது. அனைத்து விவசாயிகளும் மேற்படி திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர். முழுமையான மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டத்திற்கான நிதியுதவி தென்னை அபிவிருத்தி வாரியம் மூலமாக வழங்கப்படுகின்றது.

2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படும்.

### நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி

கொச்சியிலுள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் வேலூர் மாவட்டம், நவ்லாக்கில் நெட்டை X குட்டை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 50:50 நிதி பங்கீட்டுடன் செயல்பட்டு வருகின்றது. 2000-2001 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடும் செலவினமும் பின்வருமாறு:

| பொருள் (இலட்சம் எண்கள்) | | நிதி (இலட்சம் ரூபாய்) | |
|---|---|---|---|
| 2000-2001ம் ஆண்டு இலக்கு | சாதனை | ஒதுக்கீடு 2000-2001 | செலவினம் |
| 1.00 | 1.16 | 25.00 | 24.95 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

### மத்திய அரசு முழு நிதியுதவி பெறும் திட்டங்கள்

### நெல் மற்றும் சிறு தானிய சிறுதளைகள் திட்டம்

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களை விரைவாக விவசாயிகளிடையே பரவச் செய்யவும் வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்புத் தன்மையை தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்களின் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும் சிறுதளைப்பைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. மத்திய அரசின் திட்டமான இத்திட்டத்தின் முழுச் செலவினையும் மத்திய அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுதளைப்பைகள் விவசாயிகளுக்கு 90 விழுக்காடு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றது.

[2001 செப்டம்பர் 4

2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | இனம் அலகு | பொருள் | | நிதி (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | நெல் | 70000 | 72123 | 26.660 | 26.600 |
| 2 | சிறுதானியங்கள் | 23400 | 24317 | 4.910 | 4.910 |

2001-2002 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

## அத்தியாயம் 3

## தோட்டக்கலை

தமிழகத்தில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலைப் பயிர்கள் மற்றும் மலர்கள் ஆகியவற்றைச் சாகுபடி செய்வதற்கேற்ற மாறுபட்ட தட்பவெப்ப நிலை நிலவுவதால் இவற்றை அதிக அளவில் பயிரிட வாய்ப்புள்ளது.

1999-2000 ஆம் ஆண்டில் மொத்த சாகுபடி பரப்பில் பழங்கள் 2.32 இலட்சம் எக்டராகவும், காய்கறிகள் 2.09 இலட்சம் எக்டராகவும், நறுமணப் பயிர்கள் 1.75 இலட்சம் எக்டராகவும், மலைப் பயிர்கள் 1.95 இலட்சம் எக்டராகவும், மலர்கள் 0.18 இலட்சம் எக்டராகவும் இருந்தது. மொத்த உற்பத்தியில் பழங்கள் 59.39 இலட்சம் மெட்ரிக் டன்களும், காய்கறிகள் 56.60 இலட்சம் மெட்ரிக் டன்களும், நறுமணப் பயிர்கள் 3.10 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலைப் பயிர்கள் 7.05 இலட்சம் மெட்ரிக் டன்களும், பூக்கள் 1.42 இலட்சம் மெட்ரிக் டன்களும் (தற்காலிகம்) ஆக இருந்தது.

2000-2001 ஆம் ஆண்டில் இவற்றின் மொத்தஉற்பத்தியில் பழங்கள் 62.40 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், காய்கறிகள் 59.13 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 3.26 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், மலைப் பயிர்கள் 7.33 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், மலர்கள் 1.51 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும் அமையும். 2001-2002 ஆம் ஆண்டிற்கான உற்பத்திக் குறியீடு, பழங்கள் 63.65 இலட்சம் மெட்ரிக் டன்களும், காய்கறிகள் 60.90 இலட்சம் மெட்ரிக் டன்களும், நறுமணப் பயிர்கள் 3.33 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலைப் பயிர்கள் 7.48 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலர்கள் 1.57 இலட்சம் மெட்ரிக் டன்களும் ஆகும்.



2001 செப்டம்பர் 4]

**2001–2002 ஆம் ஆண்டிற்கான முக்கியக் கொள்கைகள்**

தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக அந்தந்தப் பகுதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்திட முக்கியத்துவம் அளித்து தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கச் செய்தல்.

சிறந்த உர மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவதன் மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்.

உழவர் சந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் காய்கறி உற்பத்தி செய்து உழவர் சந்தைக்குத் தொடர்ந்து காய்கறி வழங்குதலை உறுதி செய்தல்.

உயர்நுட்பத் தோட்டக்கலை தொழில்நுட்பங்களைத் (கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் உற்பத்தி செய்தல்) தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் பிரபலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

உழவர்களுக்கும், களப்பணியாளர்களுக்கும் நவீன சாகுபடி நுட்பங்களில் பயிற்சி அளித்தல்.

நடவிற்குத் தேவையான தரமான செடிகளின் உற்பத்தியை அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் அதிகரிக்கச் செய்தல்.

கீழ்க்கண்ட மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்கள் 2001-2002 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**1. மாநிலத் திட்டங்கள்**

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

***அ. பரப்பு விரிவாக்கம்***

இத்திட்டமானது பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலர்கள் மற்றும் ஏற்றுமதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்திடவும், புதிய விஞ்ஞான தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்கச் செய்து உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் உதவுகிறது. மேலும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் பராமரிப்பது குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான நடவுச் செடி, விதைகள், உயிர் உரங்கள், தாவரப்

பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக பழங்கள், நறுமணப் பயிர்களில் ஒரு எக்டர் வரையிலும், காய்கறி மற்றும் மலர்ச் சாகுபடியில் 0.5 எக்டர் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது.(தற்காலிகமாக)

2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.220.00 இலட்சத்தில் 16200 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு. மார்ச் 2001 முடிய 18459 எக்டர் பரப்பு சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டு ரூ.220.170 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.332.190 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### ஆ. ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு ஒதுக்கீட்டுத் திட்டம்

தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்திட ஊக்குவித்தல் மூலம் ஆதிதிராவிடர் பிரிவினைச் சார்ந்த விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திட செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் 50 விழுக்காடு மானிய விலையில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள், உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டில் 1460 எக்டர் பரப்பில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. மார்ச் 2001 முடிய 1536 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு ரூ.9.365 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.11.60 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### இ. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள்

தரம் வாய்ந்த மற்றும் பாரம்பரிய செடிகள் மற்றும் விதைகள் மாநிலத்தில் உள்ள 54 தோட்டக்கலை பண்ணைகளில், சுமார் 2598 எக்டர் பரப்பளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள், விவசாயிகளுக்கு மாதிரி விளக்கப் பண்ணையாகச் செயல்படுவதுடன், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கும் வழிவகுக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில், 101.891 இலட்சம் நடவுச் செடிகள் ரூ.501.21 இலட்சம் செலவில் உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 2001 முடிய 97.981 இலட்சம் செடிகளும், 99.908 மெட்ரிக் டன் காய்கறி விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.501.065 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.556.49 இலட்சம் மதிப்பீட்டில் 75.246 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.





### ஈ. தோட்டக்கலைப் பயிற்சி மையம், மாதவரம் மற்றும் குடுமியான்மலை

குடுமியான்மலையில் உள்ள தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் துறையில் உள்ள களப்பணியாளர்களான உதவி வேளாண்மை அலுவலர் / வயல் விளக்க அலுவலர் ஆகியோருக்கு தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியில் உயரிய தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் களப்பணியாளர்களின் தொழில்நுட்பங்கள் பற்றிய தரம் மேம்பாடு அடைகிறது. ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்களுக்கு ஈராண்டு பட்டப்படிப்பு மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. 2000-2001 ஆம் ஆண்டில் 600 துறை அலுவலர்களுக்கும், 80 மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க ரூ.0.85 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மார்ச் 2001 வரை ரூ.0.85 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.1.00 இலட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2. ஒருங்கிணைந்த பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடி மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்தில் அப்பகுதியிலுள்ள வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் சேர்வராயன்மலை, கல்ராயன்மலை, அறுநூற்று மலை மற்றும் பச்சைமலை, நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை, திருச்சி மாவட்டத்தில் பச்சை மலை, தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலை, விழுப்புரம் மாவட்டத்தில் கல்ராயன் மலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவில் பழத்தோட்டம் அமைப்பதற்கு ரூ.1750/- மதிப்புள்ள தரம் வாய்ந்த பழச்செடிகள் மற்றும் இடுபொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் பழங்குடி விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 1307 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு இதற்காக ரூ.17.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மார்ச் 2001 வரை ரூ.17.20 இலட்சம் செலவிடப்பட்டு, 1307 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.48.20 இலட்சம் செலவில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுத்து, இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது இத்திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் கோவை, ஈரோடு, திண்டுக்கல், விருதுநகர், தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்குத் தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள், வேளாண் கருவிகள் மற்றும் இதர இடுபொருட்கள் 50 விழுக்காடு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.146.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2400 எக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டம் தீட்டப்பட்டு, 2001 மார்ச் முடிய ரூ.128.571 இலட்சம் செலவிடப்பட்டு 2601 எக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டன. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 4 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடுத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்திட ஏதுவாக ஆண்டு பயிர்கள் சாகுபடியிலிருந்து நிரந்தரப் பயிர்களான தேயிலை, காபி, பழப்பயிர்கள், நறுமணப் பயிர்கள் மற்றும் இதரப் பொருளாதாரப் பயிர்களுக்கு மாற்றும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றது. 10 விழுக்காட்டிற்கும் குறைவான மலைச்சரிவுப் பகுதிகளில் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் விவசாயிகளுக்கு மானிய விலையில் அவைகள் வழங்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு ரூ.299.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மார்ச் 2001 முடிய ரூ.279.178 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.299.236 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 5. திண்டுக்கல் மாவட்டத்தில் மலை வாழை சாகுபடியினை புத்துயிர்ப்பு செய்யும் திட்டம்

பழனி மலைப் பகுதியில் முடிக்கொத்து, நச்சுயிரி நோயினால் அழிந்த பாரம்பரியம்மிக்க மலைவாழை சாகுபடியினை மீண்டும் சாகுபடிக்கு





கொணருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலாமாண்டில் நோயற்ற மலை வாழைக் கன்றுகளைத் தேர்வு செய்து, அவற்றை நடவிற்காக அதிக அளவில் உற்பத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நச்சுயிரி நோய் தாக்காத தாய்க்கிழங்குகள் தேர்வு செய்யப்பட்டு, மேலும் உயரிய தொழில்நுட்பங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டு பின்னர் திசு வளர்ப்பு முறையில் இனவிருத்தி செய்யப்படுகிறது. இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்ட திசுக்கன்றுத் துணுக்குகள் பூச்சி நோய் தாக்காதவாறு கண்காணிப்புடன் வளர்க்கப்பட்டு 2000-2001 ஆம் ஆண்டு 8 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு மார்ச் 2001 முடிய ஒதுக்கப்பட்ட ரூ.18.00 இலட்சத்தில் ரூ.0.35 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.17.20 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் 200 எக்டர் பரப்பில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

### 6. பசுமைக் குடில்களில் மலர்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யும் திட்டம்

மலர்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், சந்தைத் தேவைக்கேற்ப உற்பத்தியைச் சீராக்குவதற்கும் இத்திட்டத்திற்கு தமிழக அரசினால் 1999-2000 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் 25 பசுமைக் குடில்கள் ஒவ்வொன்றும் 500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டு பசுமைக் குடில் ஒவ்வொன்றிற்கும் 33.33 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை வழங்கப்பட்டது.

### 7. நிழல்வலைக் குடிலில் காய்கறி மற்றும் மலர் சாகுபடி

காய்கறி மற்றும் மலர் வகைப் பயிர்களை ஆண்டு முழுவதும் பயிர் செய்யத்தக்க வகையில், நிழல் வலை குடில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு அனைத்துத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 100 விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர். ஒவ்வொரு விவசாயிக்கும் 500 சதுர மீட்டர் நிழல் வலைக் குடில் அமைக்க ரூ.25 மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.5000/- வழங்கப்பட்டுள்ளது. இவ்வகையில் மொத்தம் ஒதுக்கப்பட்ட ரூ.20.00 இலட்சத்தில் ரூ.5.00 இலட்சம் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 8. குளிர்கால காய்கறிகள் அனைத்துப் பகுதிகளிலும் சாகுபடி செய்வித்தல்

குளிர்கால காய்கறிகளான முட்டைக் கோசு, காலிபிளவர், பீட்ரூட், கேரட், முள்ளங்கி, பீன்ஸ் முதலானவைகளை மலைப்பிரதேசம் அல்லாத பிற பகுதிகளிலும் சாகுபடி செய்வித்து, அதன்மூலம் உற்பத்தியை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் மேற்படி காய்கறிகளின் விதைகள் 50 விழுக்காடு மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு, அதிகபட்சமாக 1 எக்டருக்கு ரூ.2000/- வரையிலும் ஒரு விவசாயிக்கு 0.5 எக்டர் என்ற வரையிலும் விவசாயிகள் பயனடைகின்றனர். 2000-2001-ல் 500 எக்டர் நிலத்தில். ரூ.10.00 இலட்சம் மானியத்தில் விதைகள் விநியோகிக்கப்பட்டன.

### 9. வெற்றிலையில் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்துதல்

இத்திட்டத்தின்கீழ், வெற்றிலையில் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த 50 விழுக்காடு மானியத்தில், ட்ரைகோடெர்மா விர்டி வழங்கப்படுகின்றது. 2000-2001-ல் ரூ.6.19 இலட்சம் மானிய செலவில் 2500 எக்டர் நிலப்பரப்பில் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## 2. மத்திய அரசு திட்டங்கள்

### ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம் மூன்று முக்கியப் பிரிவுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது முந்திரிப் பயிரின் பரப்பினை அதிகப்படுத்துதல், நலிவடைந்துள்ள தோட்டங்களில் மறுநடவு செய்து புத்துயிர் ஊட்டுதல் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல், முந்திரி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்திட இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முந்திரி பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி உற்பத்தியை அதிகரிக்கும் உயர்தொழில் நுட்பங்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றது. முந்திரி பரப்பு அதிகரித்தல் மற்றும் நலிவடைந்த தோட்டங்களுக்குப் புத்துயிர் ஊட்டல் ஆகிய திட்டங்களில் உயர் விளைச்சல் தரும் விருத்தாச்சலம்-1, 2 மற்றும் 3 ஆகிய உயர் விளைச்சல் முந்திரி ஒட்டுக் கன்றுகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.95.967 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.226.90 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.





### ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

தமிழகத்தில் நறுமணப் பயிர்களின் பரப்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு இத்திட்டத்தின் மூலம், மிளகு, மஞ்சள் மற்றும் மிளகாய் போன்ற நறுமணப் பயிர்களின் விதைகள் மற்றும் நடவுச் செடிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. உயர் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டு, செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.182.990 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.244.40 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### ஒருங்கிணைந்த வெப்ப, குளிர் மற்றும் வறட்சி மண்டல பழ அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பழப்பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதாகும். இத்திட்டத்தில் தரமான உயர் விளைச்சல் ரக நடவுச் செடிகள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. பழ உற்பத்தியை அதிகரிப்பதற்காக கூடுதல் பரப்பு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பழப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்படுகிறது. விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.89.320 இலட்சம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.126.65 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்

மலர் சாகுபடியை வணிக நோக்குடன் அதிகப் பரப்பில் கொண்டு வரும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளின் நிலங்களில் 0.10 எக்டர் பரப்பில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்க ரூ.6000/- மதிப்புள்ள இடுபொருட்கள் விநியோகிக்கப்படுகிறது. இதன்மூலம் மலர்களின் சாகுபடிப் பரப்பு அதிகரிக்கப்படுகிறது. மாதிரி மலர் மையம் ஒன்று உதகையில் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் திசு வளர்ப்புச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.12.809 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.49.57 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

### கோகோ அபிவிருத்தித் திட்டம்

மாநிலத்தின் கோகோ உற்பத்தி மற்றும் அதன் உற்பத்தித் திறனை அதிகரித்திட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் உயர் விளைச்சல் ரக கோகோ நடவுச் செடிகளைக் கொண்டு செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு சாகுபடி நுணுக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. சாகுபடிப் பரப்பை அதிகரிப்பதற்காக மானிய விலையில் நடவுச் செடிகள் விநியோகிக்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.2.262 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.4779 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### காய்கறி, வேர் மற்றும் கிழங்கு பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

மாநிலத்தின் காய்கறிகள், வேர் மற்றும் கிழங்குப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். புதிய ரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு இத்திட்டத்தில் நடவுப் பொருட்கள், உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்து போன்றவைகள் ரூ.200/- மதிப்புள்ள சிறுதளைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. ரூ.10/- மட்டும் அடையாளத் தொகையாக பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளின் வயல்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கு ரூ.500/- மதிப்புள்ள இடுபொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.15.67 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.43.177 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### காளான் வளர்ப்புத் திட்டம்

தமிழகத்தில் காளான் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும், தரத்தை உயர்த்தும் நோக்குடனும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் காளான் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.4.01 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.



### ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

தமிழகத்தில் முக்கிய மூலிகை பயிர்கள் சாகுபடியை அறிமுகப்படுத்தி அதன்மூலம் இப்பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், செயல் விளக்க மற்றும் விதை உற்பத்தி திடல் 0.05 எக்டர் பரப்பில் விவசாயிகளின் வயல்களில் அமைக்க பாத்தி ஒன்றுக்கு ரூ.1500/- மதிப்புள்ள இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.7.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### தோட்டக்கலையில் பிளாஸ்டிக்கின் உபயோகம்

#### பசுமைக் குடில்கள் அமைத்தல்

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்த மதிப்பீட்டு பசுமைக்குடில் அமைப்பதற்கு ஒரு அலகிற்கு 40 விழுக்காடு மானியமாக ரூ.40000/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பிற இனங்களான நறுமணப் பயிர்களின் விளைபொருட்களை உலர்த்த பாலித்தீன் விரிப்புகள் வழங்குதல் மற்றும் செடிகள் உற்பத்திக்காக தாழ்வான பசுமைக் குடில்கள் அமைத்தல் ஆகியனவும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு முடிய ரூ.8.128 இலட்சம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 4

## அட்டவணை - 1

### தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

| | |
|---|---|
| பரப்பு | எக்டரில் |
| உற்பத்தி | டன்களில் |
| உற்பத்தித் திறன் | டன்/எக்டர் |

| வ.எண் | விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| 1 | பழங்கள் | | | | | |
| | பரப்பு | 185687 | 194709 | 194987 | 210660 | 221391 |
| | உற்பத்தி | 4818576 | 4912945 | 3855807 | 5033080 | 4508714 |
| | உற்பத்தித் திறன் | 25.96 | 25.23 | 19.78 | 23.89 | 20.40 |
| 2 | காய்கறிகள் | | | | | |
| | பரப்பு | 174818 | 157665 | 169380 | 193130 | 185800 |
| | உற்பத்தி | 4397932 | 3956661 | 4001733 | 5079505 | 4257717 |
| | உற்பத்தித் திறன் | 25.16 | 25.09 | 23.67 | 26.3 | 22.90 |
| 3 | நறுமணப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 165522 | 142750 | 160001 | 157022 | 170776 |
| | உற்பத்தி | 272888 | 190958 | 223718 | 249078 | 265119 |
| | உற்பத்தித் திறன் | 1.65 | 1.34 | 1.40 | 1.58 | 1.60 |
| 4 | மலைப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 177108 | 178511 | 182707 | 186527 | 191160 |
| | உற்பத்தி | 582328 | 585155 | 602793 | 649192 | 675620 |
| | உற்பத்தித் திறன் | 3.28 | 3.28 | 3.3 | 3.48 | 3.50 |
| 5 | மலர்கள் | | | | | |
| | பரப்பு | 14194 | 14843 | 15856 | 16788 | 17315 |
| | உற்பத்தி | 70970 | 81642 | 95136 | 117516 | 129871 |
| | உற்பத்தித் திறன் | 5.00 | 5.50 | 6.00 | 7.00 | 7.50 |



2001 செப்டம்பர் 4]

### மாநில தோட்டக்கலைப் பண்ணைகள்

| வ.எண் | மாவட்டம் | பண்ணை பெயர், | இடம் |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | அ.தோ.ப. | மாதவரம் |
| 2 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | ஆத்தூர் |
| 3 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | விச்சந்தாங்கல் |
| 4 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | மேல்கதிர்பூர் |
| 5 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | மேல்ஒட்டிவாக்கம் |
| 6 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | பிச்சிவாக்கம் |
| 7 | கடலூர் | அ.தோ.ப. | நெய்வேலி |
| 8 | கடலூர் | அ.தோ.ப. | விருத்தாசலம் |
| 9 | திருவண்ணாமலை | அ.தோ.ப. | தகரக்குப்பம் |
| 10 | வேலூர் | அ.தோ.ப. | கூடப்பட்டு |
| 11 | வேலூர் | அ.தோ.ப. | நவ்லாக் |
| 12 | சேலம் | அ.தோ.ப. | ஏற்காடு |
| 13 | சேலம் | மா.ப.ப. | கருமந்துறை |
| 14 | சேலம் | அ.தோ.ப. | மணியார்குண்டம் |
| 15 | சேலம் | கா.வி.உ.மை. | கருமந்துறை |
| 16 | சேலம் | அ.தோ.ப. | கருமந்துறை |
| 17 | சேலம் | அ.தோ.ப. | முள்ளுவாடி |
| 18 | சேலம் | அ.தோ.ப. | சிறுமலை (அருணூத்துமலை) |
| 19 | நாமக்கல் | அ.தோ.ப. | செம்மேடு |
| 20 | நாமக்கல் | அ.தோ.ப. | படசோலை |
| 21 | தர்மபுரி | அ.தோ.ப. | திம்மாபுரம் |
| 22 | தர்மபுரி | அ.தோ.ப. | ஜீனூர் |
| 23 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | ஆனைக்கட்டி |

[2001 செப்டம்பர்

| வ.எண் | மாவட்டம் | பண்ணை பெயர், இடம் |
|---|---|---|
| 24 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | கல்லார் |
| 25 | கரூர் | அ.தோ.ப. | முதலைப்பட்டி |
| 26 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | குடுமியான்மலை |
| 27 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | வல்லத்திராக்கோட்டை |
| 28 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | நாட்டுமங்கலம் |
| 29 | தஞ்சாவூர் | அ.தோ.ப. | ஆடுதுறை |
| 30 | தஞ்சாவூர் | அ.தோ.ப. | மருங்குளம் |
| 31 | தேனி | அ.தோ.ப. | பெரியகுளம் |
| 32 | திண்டுக்கல் | அ.தோ.ப. | கொடைக்கானல் |
| 33 | திண்டுக்கல் | பிரையன்ட் பூங்கா | கொடைக்கானல் |
| 34 | திண்டுக்கல் | அ.தோ.ப. | தாண்டிக்குடி |
| 35 | திண்டுக்கல் | அ.தோ.ப. | ரெட்டியார்சத்திரம் |
| 36 | திண்டுக்கல் | அ.தோ.ப. | சிறுமலை |
| 37 | விருதுநகர் | அ.தோ.ப. | பூவாணி |
| 38 | விருதுநகர் | அ.தோ.ப. | திருவில்லிபுத்தூர் |
| 39 | சிவகங்கை | அ.தோ.ப. | தேவகோட்டை |
| 40 | சிவகங்கை | அ.தோ.ப. | நேமம் |
| 41 | நீலகிரி | அ.தோ.ப. | பர்லியார் |
| 42 | நீலகிரி | அ.தோ.ப. | காட்டேரி |
| 43 | நீலகிரி | அ.தோ.ப. | குன்னூர் |
| 44 | நீலகிரி | பழவியல் நிலையம் | குன்னூர் |
| 45 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா | குன்னூர் |
| 46 | நீலகிரி | அ.தோ.ப. | தொட்டபெட்டா |



2001 செப்டம்பர் 4]

| வ.எண் | மாவட்டம் | பண்ணை பெயர், இடம் |
|---|---|---|
| 47 நீலகிரி | அ.தோ.ப. | தும்மனட்டி |
| 48 நீலகிரி | அ.தோ.ப. | விஜயநகரம் |
| 49 நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா | உதகை |
| 50 நீலகிரி | அ.தோ.ப. | நஞ்சநாடு |
| 51 நீலகிரி | அ.தோ.ப. | தேவாலா |
| 52 திருநெல்வேலி | அ.தோ.ப. | குற்றாலம் |
| 53 கன்னியாகுமரி | அ.தோ.ப. | கன்னியாகுமரி |
| 54 கன்னியாகுமரி | அ.தோ.ப. | பேச்சிப்பாறை |

அ.தோ.ப. அரசு தோட்டக்கலைப் பண்ணை
மா.ப.ப. மாபெரும் பழப் பண்ணை
கா.வி.உ.மை. காய்கறி விதை உற்பத்தி மையம்

## அத்தியாயம் 4

## வேளாண்மைப் பொறியியல்

### முன்னுரை

தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் என்னும் பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டுள்ளது. "நீர்வடிப்பகுதி மேலாண்மை" மற்றும் "பாசனநீர் மேலாண்மை" இத்துறையின் இரு முக்கிய குறிக்கோள்கள் ஆகும். மழை நீர் சேகரிப்பு மற்றும் சிக்கன நீர்ப்பாசன முறைகளான நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்தி பரவலாக்குதல் ஆகிய புதிய திட்டங்களுக்கு இத்துறை முக்கியத்துவம் வழங்கி செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை கீழ்க்காணும் திட்டப் பணிகளை மத்திய, மாநில அரசுகள்

மற்றும் வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் திட்டங்களை கீழ்க்காணும் குறிக்கோள்களுடன் செயல்படுத்தி வருகிறது:

- நீர் வடிப்பகுதிகளில் முக்கியமாக மானாவாரி நிலங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் மண் அரிப்பை தடுத்தல், மண்ணில் ஈரம் காத்தல் மற்றும் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல்.
- மண் அரிப்பைத் தடுத்து, நில உபயோகத்தை மேம்படுத்துதல், நதிப்பள்ளத்தாக்குகளின் நீர்பிடிப்புப்பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் மற்றும் மற்ற மலைப் பகுதிகளை மேம்படுத்துதல்.
- உபயோகத்தில் இல்லாத மற்றும் தரம் குன்றிய நிலங்களை சீர்திருத்தி உபயோகத்திற்கு கொண்டு வருதல்.
- ஏரி மற்றும் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகப் பணிகளைச் செயல்படுத்தல். நிலத்தடி நீர்வள ஆதாரங்களை மேம்படுத்தி பாசன வளங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
- சிறுபாசனத் திட்டப்பணிகள் மூலம் பாசன வளங்களை உருவாக்குதல் மற்றும் நிலைப்படுத்துதல். நீர்ப்பாசனத்தில் சிக்கனத்தைக் கையாளும் வகையில் நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை பரவலாக்க வழி வகுத்தல்.
- வேளாண்மைப் பணிகளைக் குறித்த காலத்தில் மேற்கொள்வதற்கு ஏதுவாக பண்ணைக் கருவிகளை வழங்குதல் மற்றும் நிலத்தை சீர்திருத்துதல் இயந்திர சாகுபடி, கதிர் அறுவடை போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்.

**1. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

*1. 1 சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)*

தமிழ்நாட்டில் சுமார் 32.50 இலட்சம் எக்டர் மானாவாரி சாகுபடியில் உள்ளது. இந்தப்பகுதி பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி போன்ற பயிர்களின் உற்பத்தியிடமாகும். குறிப்பாக மானாவாரி நிலங்களில் மண் அரிமானத்தைத் தடுத்து மண்ணில் ஈரப்பதத்தைக் கூட்டி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை நீர் சேமிப்பிற்கு வழி வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னை, தஞ்சாவூர், திருவாரூர்



மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களின் சமவெளிப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.. சிறிய நீர்வடிப்பகுதி அடிப்படையில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்வடிப்பகுதிகளில் மண்வளப்பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நிலத்தின் தன்மைக்கேற்ப மரம் வளர்த்தல், பண்ணைக்காடு வளர்த்தல் போன்ற மாறுபட்ட நில உபயோகப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ138271 இலட்சம் செலவில் 92,290 எக்டர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பணிச் செலவினத்தில் சமவெளிப் பகுதிகளுக்கு 25 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. பணிச்செலவினம் முன்னதாக அரசினால் ஏற்கப்பட்டு பிறகு இத்தொகை உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து பணி முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 50,000 எக்டர் நிலத்தில் மண்வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மழை நீர் சேகரிப்பு, பண்ணைக் காடு வளர்த்தல், மரம் வளர்த்தல் போன்ற கூடுதல் பணிகளை தேர்வு செய்யப்பட்ட நீர்வடிப்பகுதிகளில் மேற்கொள்வதன் மூலம் நீர்வடிப்பகுதிகளை திறம்பட மேம்படுத்தப்பட ஏதுவாகிறது. இந்தக் கூடுதல் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதால் மண்வளப்பாதுகாப்புப் பணிக்கான ஆண்டு இலக்கு குறைக்கப்பட்டுள்ளது.

*1. 2 தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்*

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை ஆகிய மூன்று துறைகளும் இணைந்து செயலாக்கி வரும் தரிசு நில் மேம்பாட்டுத் திட்டத்தில், நில மேம்பாடு, மழை நீர் சேகரிப்பு மற்றும் புதிய பாசன ஆதாரங்களை உருவாக்குதல் போன்ற அடிப்படைப் பணிகளை மேற்கொள்ளுவதில் வேளாண்மைப் பொறியியல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு, 10,000 எக்டர் பரப்பில் பணி மேற்கொள்ளப்பட்டது.

வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை மூன்றும் இணைந்து 2000-2001-ல் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, ஈரோடு, திருச்சி, பெரம்பலூர், கரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 12.500 எக்டர் பரப்பில் பணி மேற்கொள்ளப்பட்டது. நில மேம்பாடு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு மற்றும் குழாய் கிணறுகள் அமைத்தல் போன்ற

[2001 செப்டம்பர் 4

பணிகளை ரூ.248.47 இலட்சம் செலவில் வேளாண்மைப் பொறியியல் துறை நிறைவேற்றியது.

1. 3. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)

பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மண்ணின் வளத்தைப் பாதுகாப்பதாலும், மண்ணின் ஈரத் தன்மையை அதிகரிப்பதாலும், நில உபயோகத்தை மேம்படுத்துவதாலும், உற்பத்தியை பெருக்கிட முடியும். பல துறைகள் இணைந்து பழங்குடியினர் வாழும் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்கின்றன. இத்திட்டம் ஜவ்வாது மலை (வேலூர் மாவட்டம்), கல்ராயன் மலை (திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டம்), ஏற்காடு மலை (சேலம் மாவட்டம்), சித்தேரி மலை (தர்மபுரி மாவட்டம்), கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்) மற்றும் பச்சைமலை (திருச்சி மாவட்டம்) ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது. நிலம் சமன் செய்தல், சம உயரக் கற்சுவர் அமைத்தல் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுதல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 100 சதவீத மானியத்துடன் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களது நிலங்களைப் பண்படுத்தி விளைச்சல் நிலமாக மாற்றவும் வழி வகுக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.92.00 இலட்சம் செலவில் 664 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டன. 2001-2002 ஆம் ஆண்டில் 602 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1. 4. மலைப் பகுதிகளில் சிறப்பு மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்

மலைப் பகுதிகளில் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப் பயன்பாட்டை முறைப்படுத்துதல், இயற்கை வனப்பைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுடன் மலைப் பகுதிகளில், வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

அ. நதிப் பள்ளத்தாக்கு திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)

நீர்த்தேக்கங்களி ல் வண்டல் படிவதால் அவற்றின் கொள்ளளவு குறைந்து பாசனப் பரப்பு, மின் உற்பத்தி போன்றவற்றைப் பாதித்து நீர்த் தேக்கங்களின்



2001 செப்டம்பர் 4]

ஆயுட்காலத்தைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானம் மற்றும் முறையற்ற நில உபயோகம் ஆகியவற்றால், நீர்த் தேக்கங்களில் வண்டல் சேர்கிறது. நீர்த் தேக்கங்களில் வண்டல் சேர்வதைக் குறைத்திட வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பல மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நீர் உபயோக அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப் படுத்திய நீர்வடிப் பகுதிகளில், பணிகள் ஒவ்வொரு நீர்வடிப் பகுதி வாரியாக மேற்கொள்ளப்படுகின்றன. மழை அளவு, மண்ணரிப்பு நிலை, மண்ணின் கட்டமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. பிப்ரவரி 2000 - 2001 ஆம் ஆண்டில் ரூ. 512.30 இலட்சம் செலவில் 3,347 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு பணிச் செலவில் 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு மீதம் கடனாக கருதப்படுகிறது. கடன்தொகை விவசாயிகளிடமிருந்து பணிகள் முடிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குப்பின் உரிய வட்டியுடன் பத்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகின்றது. 2001-2002 ஆம் ஆண்டில் தேனி மாவட்டத்தில் உள்ள வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.550 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

பல துறைகளால் இணைந்து செயல்படுத்தப்படும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு பணிச் செலவில் 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு மீதம் 50 சதவீதம் கடனாகக் கருதப்பட்டு, மேற்படி கடன் தொகை பணி முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டு சம தவணைகளில் உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து மீள வசூலிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.300.55 இலட்சம் செலவில் 7,402 எக்டர் நிலத்தில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன. 2001-2002-ல் எட்டு மாவட்டங்களில் உள்ள 32 நீர்வடிப் பகுதிகளில் 3717 எக்டர் பரப்பில் ரூ.355.59 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த வகையில் மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 4

### இ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள நீர்வடிப்பகுதி வரைபடத் தொகுப்பின் அடிப்படையில் நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப் பகுதிகளில் மிகவும் வளம் குன்றிய நீர்வடிப் பகுதிகளில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. இப்பணிகளுக்கு பணிச் செலவினத்தில் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மீதம் கடனாகக் கணக்கிடப்பட்டு மேற்படி கடன் தொகை பணிகள் முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு பத்து ஆண்டு சமதவணைகளில் உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து மீள வசூலிக்கப்படுகிறது. நிலச் சரிவுகளைத் தடுப்பது மிக முக்கிய பணியாக இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.300.27 இலட்சம் செலவில் வடிகால் சீரமைப்பு, ஆறுகள் அகலப்படுத்துதல், மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிலச்சரிவை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 352.88 இலட்சம் செலவில் இப்பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 2. தொலை உணர்வுப் பிரிவு

### அ. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் தகுதி நிலை அறிக்கை

தொலை உணர்வுப் பிரிவு தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் தகுதி நிலை அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளின் தகுதிநிலை அறிக்கைகள் வருடத்திற்கு 1500 சதுர கிலோ மீட்டர் பரப்புக்கு தயாரிக்கப்படுகிறது. விண்வெளிக் கோள் மூலம் பெறப்பட்ட விவரங்கள் மற்றும் ஆகாய விமானம் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு மண் அரிமானம், நில உபயோகம், புவியியல் மற்றும் வடிகால் வசதி போன்ற தகவல்களின் அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. தகுதி நிலை அறிக்கைகள் வழங்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள நீர்வடிப் பகுதிகள் தேர்வு செய்யப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பகுதியின் பரப்பளவான 26,000 சதுர கிலோ மீட்டரில் மார்ச் 2000 வரை 21,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள 5,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு தகுதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும். 2001-2002 ஆம் ஆண்டில் 1500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு கணினி புவியியலில் தகுதி நிலை அறிக்கைகள் தயாரிக்கப்படவுள்ளது.



2001 செப்டம்பர் 4]

### ஆ. நீர்வடிப்பகுதிகளின் வரைபடத் தொகுப்பு.

மாநில நில பயன்பாட்டுக் குழுமம் நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்கியுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

### இ. மண்ணின் வரைபடத் தொகுப்பு

மண்ணின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை மாநில நில பயன்பாடு குழுமம், வேளாண்மைப் பொறியியல் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இந்த வரைபடத் தொகுப்பில் நீர்வடிப் பகுதிவாரியாக மண்வள விவரம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் வரைபடத் தொகுப்புகள் தயாரிக்கும் பணி 2001-2002 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

### ஈ. மண்ணின் வரைப்படத் தொகுப்பை வட்டில் பதிவு செய்தல்

மண்ணின் வரைபடத் தொகுப்பு பயன்படுத்தும் துறைகளுக்கு கிடைக்கும் வகையில் கணினி வட்டில் ப்திவு செய்யும் பணியை மாநில நில உபயோக வாரியம் வேளாண்மை பொறியியல் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இப்பணி நடைபெற்று வருகிறது.

### உ. பெரம்பலூர் மாவட்டத்தில் மண் அரிமானம் மற்றும் சுற்றுப்புற சூழல் நிலை குறித்தான அறிக்கை:

பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்படும் மண் அரிமானத்தையும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டையும் தொலை உணர்வு குறிப்புகள் மற்றும் விண்வெளிக்கோள் மூலம் பெறப்பட்ட விபரங்கள் மற்றும் ஆகாய விமானம் மூலம் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் ஆகிய விவரங்கள் மூலமாக ஆய்வு செய்து அறிக்கை வழங்கும்படி மாநில நில உபயோக வாரியம் (ஆராய்ச்சி பணியை) வேளாண்மைப் பொறியியல் துறையிடம் ஒப்படைத்துள்ளது. 2001-2002-ல் இப்பணி மேற்கொள்ளப்படும். 2002-2003-ல் அரியலூர் மாவட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## 3. தோட்டக்கலை பயிர்கள் மற்றும் தென்னைக்கு சொட்டு நீர்ப்பாசனம் (மத்திய அரசு நிதியுடன் செயல்படுத்தும் திட்டம்)

தமிழ்நாட்டில், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகிய நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் வேளாண்மைப் பொறியியல்

[2001 செப்டம்பர் 4

துறையினால் 1985-86-ல் அறிமுகப்படுத்தப்பட்டு பிரபலமாக்கப்பட்டது. 1991-92 முதல் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் தோட்டப் பயிர்களுக்காக சொட்டு நீர்ப்பாசன முறை செயல்படுத்தப்பட்டு விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் 40 சதவிகித பாசன நிலங்கள் கிணற்றுப் பாசனத்தை நம்பியுள்ளன. இந்நிலையில் பாசன நீர் சேமிப்பு மற்றும் நீர் இறைக்கும் செலவினத்தை குறைப்பது அத்தியாவசியமாகிறது.

2000-2001 ஆம் ஆண்டின் சாதனை விபரங்கள் வருமாறு

நிதி ரூ. இலட்சங்களில்

| வ. எண் | பணி விபரம் | ஆண்டு இலக்கு செயல்(எக்டரில்/ எண்களில்) | ஆண்டு இலக்கு நிதி | சாதனை செயல்(எக்டரில்/ எண்களில்) | சாதனை நிதி |
|---|---|---|---|---|---|
| 1 | சொட்டு நீர்ப்பாசனம் நிறுவுதல் | 6000 | 1155.00 | 9317.64 | 642.41 |
| 2 | சொட்டு நீர்ப்பாசனம் செயல் விளக்கம் | 15/30 | 15.00 | 41/58.69 | 11.46 |
| 3 | தெளிப்பு நீர்ப்பாசனம் | 1100 | 130.00 | 513.17 | 70.67 |
| | மொத்தம் | | 1300.00 | | 724.54 |

2001-2002-க்கான செயல்முறைத் திட்டம் பின்வருமாறு:

| வ. எண் | பணிவிபரம் | ஆண்டு இலக்கு செயல்(எக்/எண்) | நிதி |
|---|---|---|---|
| 1 | *சொட்டு நீர்ப்பாசனம் நிறுவுதல்* | | |
| | அ 2001-2002க்கான திட்டப் பணி | 6000 | 1155.00 |
| | ஆ 2000-2001 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் மீதப்பணி | 2660 | 512.59 |
| 2 | *சொட்டு நீர்ப்பாசன செயல்விளக்கம்* | | |
| | அ 2001-2002க்கான திட்டப் பணி | 50 | 15.00 |
| | ஆ 2000-2001 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் மீதப்பணி | 13 | 3.54 |



2001 செப்டம்பர் 4]

| வ. எண் | பணிவிபரம் | ஆண்டு இலக்கு செயல்(எக்/எண்) | நிதி |
|---|---|---|---|
| 3 | *தெளிப்பு நீர்ப்பாசனம்* | | |
| | அ 2001-2002க்கான திட்டப் பணி | 800 | 60.00 |
| | ஆ 2000-2001 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் மீதப்பணி | 490 | 59.33 |

**4. டிராக்டர், புல்டோசர் மற்றும் ஒருங்கிணைந்த நவீன அறுவடை இயந்திரம் வாடகைத் திட்டம்**

பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து உழவு செய்தல், பண்படுத்துதல், கோடை உழவு மற்றும் கதிர் அறுவடை செய்தல் போன்ற இயந்திர சாகுபடிப் பணிகளை மேற்கொள்வதில் வேளாண்மைப் பொறியியல் துறை விவசாயிகளுக்கு உதவி வருகிறது. பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து விளைநிலங்களாக மாற்றிட இத்துறையில் 122 புல்டோசர்களும், உழவு செய்தல் மற்றும் அது தொடர்பான பணிகளை செய்திட 122 டிராக்டர்களும் நான்கு நவீன அறுவடை இயந்திரங்களும் உள்ளன. 2000-2001-ல் புல்டோசர்கள் 1,00,779 மணி நேரம் பணி செய்துள்ளன. இதேபோல் டிராக்டர்கள் 63,531 மணிநேரம் பணி செய்துள்ளன. 2000-2001-ல் புல்டோசர்கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் காவிரி, வெண்ணார், கல்லணைக் கால்வாய் ஆகியவற்றின் வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இப்பணியில் 66 புல்டோசர்கள் ஈடுபடுத்தப்பட்டு 14,033 மணிநேரம் பணி செய்துள்ளன. 2001-2002-ல் வங்கிக் கடனுதவியுடன் 100 டிராக்டர்கள் வாங்கப்பட்டுள்ளன. இரண்டு நவீன அறுவடை இயந்திரங்கள் 1343 மணி நேரம் பணிபுரிந்துள்ளன. 2001-2002-ல் வங்கிக் கடன் உதவியுடன் மேலும் இரண்டு நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு தற்போது 4 இயந்திரங்கள் பணிக்கு உபயோகப்படுத்தப்பட உள்ளன.

**5. நீர் வள நிர்வாகம்**

*குழாய்க்கிணறு திட்டம் (மாநிலத் திட்டம்)*

நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாசனப் பரப்பை நிலைப் படுத்துதல் போன்றவை சிறுபாசனத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டின் பாசன நீர் ஆதாரங்கள் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்ட நிலையில் விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க பாசனத்திற்கு நிலத்தடி நீரையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டுபோன கிணறுகளில் பக்கவாட்டில் துளையிடுதல், ஆழ்ப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறைக்குச் சொந்தமான ரெஸிஸ்டிவிடி மீட்டர் மற்றும் மின்சார லாகிங் கருவி ஆகியவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நீர் ஊற்று இருக்குமிடம், குழாய்க்கிணற்றின் வடிவம் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இத்துறையில் இப்பணிக்காக 3 மின்சார லாகிங் கருவிகளும், 22 ரெஸிஸ்டிவிடி மீட்டர்களும் உள்ளன. விசைத் துளைக் கருவி, சிறு விசைத் துளைக் கருவி, கைத் துளைக் கருவி, பாறை வெடிக் கருவி, நீள் துளைக் கருவி மற்றும் காற்றழுத்தக் கருவி போன்ற இயந்திரங்கள், குழாய்க்கிணறுகள் அமைத்தல், வறண்டுபோன கிணறுகளில் நீர்வளம் மீட்டுதல் ஆகிய பணிகளுக்காக விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறையிடம் பல்வகையான 440 சிறுபாசன இயந்திரங்கள் உள்ளன. 2000-2001-ல் 5000 குழாய்க்கிணறுகள் அமைக்க திட்டமிடப்பட்டு, 5,521 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2001-2002ல், 5,000 குழாய் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன.

**6. பாசனப் பகுதியில் நீர் மேலாண்மை (மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்)**

*6.1. பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்*

பாசன நீர் மேலாண்மைப் பணிகள் காவிரி பாசனப் பரப்பிலும் (1967) மற்றும் சாத்தனூர் பாசனப் பரப்பிலும் (1969) மண் மற்றும் நீர் மேலாண்மையின் ஒரு பகுதியாக முதன் முதலாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்திலிருந்து பாசனப் பகுதி மேன்மைத்திட்டச் செயல்பாட்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. மத்திய அரசு காவிரி, பெரியார் - வைகை, கீழ்பவானி





பாசனப் பகுதிகளில் பணி செயலாக்க திட்டத்தை அங்கீகரித்தது. ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் சாத்தனூர், பரம்பிகுளம் ஆழியார், அமராவதி, கம்பம் பள்ளத்தாக்கு, கோதையார், சித்தார், பட்டணங்கால் மற்றும் தாமிரபரணி பாசனப் பகுதிகளில் பாசன மேன்மைக்குத் திட்டங்கள் சேர்க்கப்பட்டன. மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாசனப் பகுதிகளில் மதகிற்குக் கீழே பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் செயல்படுத்தப்படுகிறது:

1. பாசனதாரர்களிடையே அடிப்படைத் திட்டம் தயாரித்தல், திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் கூட்டுச் செயல்பாட்டை உருவாக்குதல்.

2. முறையான நீர் மேலாண்மைக்கு உதவிட, பாசன நீரை எடுத்துச் செல்லுதல் மற்றும் நீர்ப்பங்கீடு சேதாரத்தைக் குறைத்தல் ஆகியவற்றுக்குத் தேவையான பண்ணை அளவிலான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

3. விவசாயிகளிடையே கருத்து வேறுபாடில்லாமல் சமநீர்ப் பங்கீட்டிற்கு வழிவகுத்தல்.

பண்ணை மேன்மைப் பணிகள் என்பது நீரை எடுத்துச் செல்லுதல், பங்கிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்குத் தேவைப்படும் கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகும். புதிய வாய்க்கால் அமைத்தல், காரை வாய்க்கால் அமைத்தல் பங்கீடு அல்லது நீர்பிரிப்புத் தொட்டிகள் கட்டுதல் போன்றவை இப்பண்ணை மேம்பாட்டு பணிகளில் அடங்கும். சுழற்சி முறை நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வயலுக்கும் தேவையான நீர் சரியான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, விவசாயிகளின் பங்கேற்புடன் சம விகித அளவில் பாசன நீர்ப்பங்கீட்டினை அறிமுகப்படுத்துதல் அடுத்த முக்கியமான பணியாகும். 2000-2001-ல், 22,075 எக்டர் பரப்பில் பண்ணை மேன்மைப் பணிகளும், 58,020 எக்டர் நிலத்தில் சுழற்சி முறைப் பாசனப் பணிகளும் செயலாக்க திட்டமிடப்பட்டு 25,083 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும் 56,524 எக்டர் நிலத்தில் சுழற்சி முறைப் பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2001-2002 காவிரி, பரம்பிகுளம் ஆழியாறு, அமராவதி, கோதையார், சித்தார், பட்டணங்கால் மற்றும் தாமிரபரணி பாசனப்பகுதிகளில் 53,260 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும், 1,13,300 எக்டர் நிலத்தில் சுழற்சி முறை பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட உள்ளன.

[2001 செப்டம்பர் 4

பாசன மேலாண்மை செயல் விளக்கத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் செயல்படும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்ட அதிகாரக் குழு பாசன மேலாண்மை செயல் விளக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்த 400 செயல் விளக்கப் பண்ணைகள் வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10 எக்டர் கொண்ட ஒரு செயல் விளக்கப் பண்ணைக்கு ரூ.55,000/- வீதம் இதுவரை 212 பண்ணைகளுக்கு ரூ.116.60 இலட்சம் பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்திடமிருந்து வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 118 செயல்விளக்கப் பண்ணைகளில் பணி முடிக்கப்பட்டு ரூ.58.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள்

பாலாறு, பொரந்தலாறு திட்டம், தொப்பையாறு திட்டம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட புதிய திட்டங்கள் தமிழக அரசு ஒப்புதலுடன் 2001-2002-ல் துவக்கப்பட்டு செயலாக்கப்படும்.

**6.2. நீர் மேலாண்மையில் விவசாயிகளின் அணுகுமுறை**

அ. விவசாயிகளின் சங்கங்கள்

பாசனப் பகுதி மேன்மைத் திட்டப் பணிகளின் வெற்றி என்பது பயனாளிகளான விவசாயிகளின் பங்கேற்பைச் சார்ந்தே உள்ளது. விவசாயிகள் தாங்களாகவே தங்கள் பண்ணைகளில் நீர் மேலாண்மையை அமல்படுத்தவும், அதனை நீண்ட காலத்துக்குச் செவ்வனே நிறைவேற்றும் வண்ணமாக ஒருமுகமாகச் செயல்படவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த விவசாய சங்கங்கள் ஒருங்கிணைந்த செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மூன்றடுக்கு நிலையில் ஒவ்வொரு திட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அவை;

1. நீர்ப்பாசனச் சங்கம் - மதகளவில்
2. பாசன சபைகள் - கிளை வாய்க்கால் அளவில் (1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது)



2001 செப்டம்பர் 4]

3. பாசன இணையம் / உச்சநிலை குழு -பாசனப்பகுதி முழுமைக்கும்

மார்ச் 2001 வரை 479 விவசாய சபைகளும் 8216 விவசாய சங்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஆ. விவசாய சபைகளுக்கான மேலாண்மை மானியம் / விவசாய குழுக்களுக்கு நிதியுதவி**

அமைக்கப்பட்ட விவசாய சங்கங்கள்/சபைகள் நீண்ட காலம் நிலை பெற்றிருப்பதற்காகவும், சமமான நீர்ப் பங்கீட்டிற்கான சுழற்சி முறை பாசனத்திட்டத்தைத் தொடர்வதற்காகவும் பதிவு செய்யப்பட்ட விவசாய சபைகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.450.00 என்ற அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இச்செலவினம் மத்திய மற்றும் மாநில அரசால் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகளும் எக்டருக்கு ரூ.50 வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும். 1999-2000-ல் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய சபைகளுக்கு ரூ.170.00 இலட்சம் மேலாண்மை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2000-2001ல் பதிவு செய்யப்பட்ட 49 விவசாய சபைகளுக்கு ரூ.124.65 இலட்சம் மேலாண்மை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 5

## நீர்வடிப் பகுதி மேம்பாடு

வேளாண்மை உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு தொடக்கத்தில் நீர்ப்பாசனப் பயிர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து மகசூல் அதிகம் தரக்கூடிய வீரிய ரக விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு அதிக அளவில் ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் உபயோகப்படுத்தப்பட்டன. அனைத்து நீர்ப்பாசன ஆதாரங்களும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டன. 20-25 ஆண்டுகளுக்குப் பிறகு அதிக அளவு ரசாயன உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து உபயோகத்தினால், மண்ணில் வீரியம் குறைந்து பயிரிடப்பட்ட பயிர்களை நோய்களும், பூச்சிகளும் எளிதில் தாக்கின. இதனால் மகசூல் அளவும் குறையத் தொடங்கியது. அதோடு மட்டுமல்லாமல் மக்கள் தொகை பெருக்கம் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தை விட அதிகமாக இருப்பதால் உணவு தானிய உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

2. இதனை ஈடு செய்ய மாநில அரசு மானாவாரி பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முன் வந்துள்ளது. இதுகாறும் மானாவாரி பயிர்களுக்கான பல்வேறு திட்டங்களை பல்வேறு துறைகளால் பல்வேறு

இடங்களில் செயலாக்கப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் அதிக அளவில் பயன்பெற அனைத்து திட்டங்களும் ஒருங்கிணைந்த முறையில் மக்களின் ஒத்துழைப்போடு நீர்வடிப் பகுதிகளில் அமலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் முக்கியமாக மண் அரிப்பைத் தடுப்பதற்கும் மண் மற்றும் ஈரத்தன்மையை காப்பதற்கும் தரம் குன்றிய தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கும் பெரிதும் பயன்படுகின்றன. மைய அரசின் ஆதரவு பெற்ற வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் டானிடா உதவி பெறும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர்வடிப் பகுதிகளிலுள்ள இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவைகளை சீரிய முறையில் பயன்படுத்தி வறட்சியின் சீற்றத்தை குறைப்பதும், நிலவளம் மேலும் சீர்கெடாமல் தவிர்ப்பதுமாகும். மேலும், இத்திட்டம் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் உதவுகிறது.

இத்திட்ட செலவை 31.3.1999 வரை மைய அரசும் மாநில அரசும் சம பங்காக 50:50 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொண்டன. 1.4.1999 முதல் மைய மாநில அரசுகளின் பங்கு 75:25 என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. புதிய வழிகாட்டி நெறிமுறைகளின் சிறப்பு அம்சம், நீர்வடிப் பகுதிகள் மேம்பாட்டுக்குத் தேவையான பணிகளை அப்பகுதி மக்களே தேர்ந்தெடுத்து நீர்வடிப் பகுதி குழுக்கள் மூலம் திட்டம் தீட்டி, அக்குழுக்களாலேயே செயலாக்கவும் படுகின்றன. திட்ட செயலாக்க முகமைகளின் பணி அக்குழுக்களுக்குத் தேவையான உதவிகளையும் ஊக்கமும் அளிப்பது மட்டுமேயாகும்.

இத்திட்டம் முதல் அணியில் 80 ஒன்றியங்களில் 16 வறட்சிக்கு இலக்காகும் பகுதி மாவட்டங்களில் 297 நீர்வடிப் பகுதிகளில் 1995-96 முதல் 1999-2000 வரை செயல்படுத்தப்பட்டுள்ளது. மைய அரசும் மாநில அரசும் இணைந்து மொத்தத்தில் ரூ.5920.25 இலட்சங்கள் விடுவித்துள்ளன. திட்டப் பணிகள் அனைத்தும் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. மேம்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1,48,911 எக்டேர் ஆகும்.





நான்காம் அணியில் 14 வறட்சிக்கு இலக்காகும் பகுதி மாவட்டங்களில் 103 நீர்வடிப் பகுதிகளுக்கு ரூ.2060.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்டப் பணிகள் 1997-98ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை மைய அரசும் மாநில அரசும் இணைந்து ரூ.810.50 இலட்சம் விடுவித்துள்ளன. இதில் 610.44 இலட்சங்கள் ஜூன் 2001 வரை செலவழிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

புதிய அணிக்காக மைய அரசு 16 வறட்சிக்கு இலக்காகும் பகுதி மாவட்டங்களில் 299 நீர்வடிப் பகுதிகளுக்கு ரூ.5980.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்து 1999-2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசும் மாநில அரசும் இணைந்து ரூ.1369.00 இலட்சங்கள் விடுவித்துள்ளன. அதில் 818.36 இலட்சங்கள் ஜூன் 2001 வரை செலவழிக்கப்பட்டுள்ளது. நுழைமுகப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

மேலும் நடப்பு ஆண்டில் மீதமுள்ள 102 நீர்வடிப் பகுதிகளுக்கு மைய அரசிடம் ஒப்புதல் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் நிதியுதவியோடு 1990-91ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் இரு முக்கிய நோக்கங்கள் உற்பத்தியை நீடித்து நிலை நிறுத்துதலும், சுற்றுச்சூழல் பாதிப்பைச் சமன்படுத்துவதுமாகும். தமிழ்நாட்டில் 84 நீர்வடிப் பகுதிகளில் கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 19 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு மொத்த திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானியமாகவும் 25 விழுக்காடு கடனாகவும் அளிக்கிறது. நடப்பாண்டு 2000-2001-க்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1800 இலட்சத்துடன் கடந்த ஆண்டு செலவாகாமல் நிலுவையில் இருந்த தொகை ரூ.6.153 இலட்சத்தையும் சேர்த்து ரூ.1806.153 இலட்சம் திட்ட செயலாக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,62,526 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

[2001 செப்டம்பர் 4

இத்திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கு, சாதனை மற்றும் 2001-2002ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணிகள் விவரம் | 2000-2001ஆம் ஆண்டு இலக்கு | செலவினம் தொகை | 2001-2002ஆம் ஆண்டு இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | அடிப்படைச் செயல்பாடுகள் | 634.350 | 406.921 | 429.750 |
| 2 | சாகுபடிக்குகந்த நிலம் செயல்பாடுகள் | 324.000 | 232.136 | 309.420 |
| 3 | வீட்டுத் தோட்டங்கள் | 17.338 | 14.489 | 17.190 |
| 4 | வீடுகளில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் | 144.000 | 101.331 | 137.520 |
| 5 | சாகுபடிக்கு ஒவ்வாத நிலச் செயல்பாடுகள் | 181.307 | 140.398 | 171.900 |
| 6 | வடிகால்களில் மேம்பாடு | 391.005 | 210.210 | 103.140 |
| 7 | கால்நடை பராமரிப்புப் பணிகள் | 108.00 | 75.285 | 378.180 |
| 8 | பணியாளர் செலவினம் | - | - | 171.900 |
| | மொத்தம் | 1800.000 | 1180.770 | 1719.000 |

3. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

நிலைபடுத்துதல், சமபங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாத்தல் போன்ற பரந்த குறிக்கோள்களைக் கடைப்பிடிக்கும் வாயிலாக, கிராமப் பகுதியில் வாழும் மக்களில், குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சமுதாயத்தில் இதர நலிந்தோர்களின் தேவைக்கேற்றவாறு, விறகு, தீவனப் பயிர், மரத்தேவை மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



2001 செப்டம்பர் 4]

2. மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் நிலவள ஆதாரங்கள் துறையின் 100 சதவீத் மானியத்தில் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்துவதற்கு 1994-95 முதல் 2000-2001 வரை மத்திய அரசு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது.

1994-95ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டம் | வட்டாரம்/ நீர்வடிப் பகுதி | திட்டப் பரப்பு (எக்) | திட்ட முதலீடு | 31.3.2001 வரை மைய அரசால் விடுவிக்கப் பட்ட தொகை | 31.3.2001 வரை செலவழிக் கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1. சிவகங்கை | காளையார் கோயில் | 3073 | 284.74 | 264.71 | 206.560 |
| 2. ஈரோடு | குதியாலத்துார் | 4000 | 343.93 | 343.93 | 294.102 |
| 3. வேலூர் | பொன்னையாறு | 5000 | 296.04 | 296.04 | 296.040 |
| மொத்தம் | | 12073 | 924.71 | 904.68 | 696.702 |
| 1997-98ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள் | | | | | |
| 1. திண்டுக்கல் | சாணார்பட்டி | 5090 | 200.00 | 180.00 | 171.430 |

1999-2000ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

[2001 செப்டம்பர் 4

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டம் | வட்டாரம்/ நீர்வடிப் பகுதி | திட்டப் பரப்பு (எக்) | திட்ட முதலீடு | 31.3.2001 வரை மைய அரசால் விடுவிக்கப்பட்ட தொகை | 31.3.2001 வரை செலவழிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | வட்டமலைகரை | 9058 | 362.32 | 88.49 | 62.450 |
| 2. சேலம் | ஆலத்தூர் | 5000 | 200.00 | 49.89 | 22.660 |
| 3. நாமக்கல் | சேந்தமங்கலம் | 5105 | 204.20 | 52.05 | 31.730 |
| 4. தேனி | வைகை, மஞ்சளாறு, சுருளியாறு | 5156 | 206.29 | 51.56 | 49.063 |
| 5. கரூர் | கடவூர் | 11606 | 464.29 | 116.06 | 58.240 |
| 6. விருதுநகர் | வெம்பக்கோட்டை | 5300 | 212.00 | 52.89 | 26.470 |
| 7. இராமநாதபுரம் | நாயினார்கோயில் | 5060 | 202.04 | 30.36 | 28.640 |
| 8. திருநெல்வேலி | நாங்குனேரி, இராதாபுரம் | 10000 | 400.00 | 60.00 | 43.530 |
| 9. கடலூர் | கடிலம் | 5580 | 223.20 | 33.48 | 29.68 |
| மொத்தம் | | 61865 | 2474.34 | 534.78 | 352.43 |

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் மத்திய அரசு 9 புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



2001 செப்டம்பர் 4]

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | வட்டாரம்/ நீர்வடிப் பகுதி | திட்டப் பரப்பு (எக்) | திட்ட மதிப்பீடு | மைய அரசு விடுவித்துள்ள தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரை | அலங்காநல்லூர் | 5100 | 200.00 | 30.60 |
| 2 | பெரம்பலூர் | பெரம்பலூர் அரியலூர் திருமானூர் செந்துறை | 10000 | 400.00 | 60.00 |
| 3 | திருச்சிராப்பள்ளி | தாத்தையங்கார் பேட்டை | 12100 | 484.00 | 72.00 |
| 4 | புதுக்கோட்டை | அறந்தாங்கி | 11684 | 467.40 | 70.11 |
| 5 | தருமபுரி | அரூர் | 9500 | 380.00 | 57.00 |
| 6 | ஈரோடு II | மூலனூர் தாளவாடி | 5529 | 221.16 | 33.17 |
| 7 | சிவகங்கை II | சிவகங்கை மானாமதுரை திருபுவனம் | 10000 | 400.00 | 60.00 |
| 8. | திண்டுக்கல் II | வேடச்சந்தூர் | 10045 | 401.80 | 60.27 |
| 9 | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் ஆழ்வார்திருநகரி திருச்செந்தூர் | 7500 | 300.00 | 45.00 |
| | மொத்தம் | | 81458 | 3254.36 | 488.15 |

தொழில்நுட்ப வளர்ச்சி விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் அனுப்பிவைக்கப்பட்ட கருத்துருவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டாரம், மருத்துவாழ்மலையில் 75 எக்டேர் பரப்பில் மருத்துவ மூலிகைப் பண்ணை அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 40 வகையான மருத்துவ மூலிகைச்

செடிகள் 35 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கும், தாவரவியல் மாணவர்களுக்கும் மருத்துவ மூலிகைப் பண்ணை அமைக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டத்தின் பெயர் | திட்ட அமலாக்க முகமை | திட்டப் பரப்பு (எக்) | திட்ட மூலதனம் | இதுவரை விடுவித்த தொகை | செலவினம் |
|---|---|---|---|---|---|
| மருத்துவாழ்மலை, கன்னியாகுமரி | ஊரக வளர்ச்சி முகமை கன்னியா குமரி | 75 | 25.44 | 16.67 | 16.67 |

4. மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் மேம்படுத்திட தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்னும் மிகப் பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி அவற்றை விளைநிலங்களாக மாற்றி கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு புதுவேகம் பெறும் வகையில் பல திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

தரிசு நிலச் சீரமைப்புத் திட்டம் மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டதாகும். உறுதியாக மழை பொழியும் பகுதிகளில் அமைந்துள்ள உயர்தர தரிசு நிலங்கள், மூலிகைகள் மற்றும் நறுமணச் செடிகள் பயிரிடவும் பழத் தோட்டங்களை அமைக்கவும் பயன்படுத்தப்படும். நடுத்தர தரிசு நிலங்களில் சமையல் எண்ணெய் மற்றும் எரி எண்ணெய் உற்பத்திற்குப் பயன்படும் பாரடைஸ் மரம் (Paradise Tree), ஜட்ரோபா (Jatropa) முதலிய எண்ணெய் வித்துத் தாவரங்கள் பயிரிடப்படும். தரம் குறைந்த தரிசு நிலங்களில் மின்சக்தி உற்பத்திக்கு உதவும் மரங்களான காட்டுக் கருவேல் (Prosopis) சவுக்கு (Casurina) போன்ற விறகு மரவகைகள் பயிரிடப்படும். இத்திட்டம் மக்களின் பங்கேற்புடனும், தனியார் துறையின் ஒத்துழைப்புடனும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஐந்து ஆண்டுகளில், கிராமப் பகுதியைச் சேர்ந்த 10 இலட்சம் மக்கள் பயனடையக் கூடும்.



## அத்தியாயம் 6

## வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்து, பண்ணை விளைச்சலையும், நாட்டின் வேளாண் உற்பத்தியையும் பெருக்குவதே இப்பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மிகவும் சீரிய முறையில் செய்து வருகின்றது. இப்பல்கலைக்கழகம் நாட்டிலேயே முதன்மையான ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்ற விருதை இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து 1999 ஆம் ஆண்டு பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் பணிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### கல்வி

கோயம்புத்தூர், மதுரை, கிள்ளிகுளம், குமுளூர், பெரியகுளம், திருச்சிராப்பள்ளி, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஏழு வளாகங்களில் 10 கல்லூரிகளின் மூலம் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், மனையியல், பொறியியல் உணவு பதனிடும் கலை போன்ற துறைகளில் இளநிலை பட்டப்படிப்பும், 26 துறைகளில் முதுநிலை பட்டப்படிப்பும், 20 துறைகளில் முனைவர் பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் 371 இளநிலை, 311 முதுநிலை மற்றும் 145 முனைவர் பட்டப்படிப்பு மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 47 விழுக்காடு பெண்கள் ஆவர். மாணவர் சேர்க்கையில் அனைத்திந்திய போட்டித் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு இளநிலை பட்டப்படிப்பில் 10 விழுக்காடு இடமும், முதுநிலைப் பட்டப்படிப்பில் 15 விழுக்காடு இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் 69 மாணவர்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இளநிலை கல்வி உதவித் தொகையைப் பெற்றுள்ளனர். இதனால் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் இந்தியாவிலேயே செயல் மிக்க துணை வேந்தர் என்று இந்திய தேசிய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலம் கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

[2001 செப்டம்பர் 4

இளநிலைப் பட்ட வகுப்பு மாணவர்கள் கிராமப்புறம் மற்றும் பண்ணையின் உண்மை நிலைகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, அவர்கள் 3 மாத காலத்திற்கு கிராமங்களிலேயே தங்கியிருந்து ஊரக வேளாண்மை செயல் அனுபவக் கல்வி பெற்று வருகிறார்கள். வேளாண்மைத் தொழில் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு மாணவர்கள் 4 அல்லது 5 மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 10 நாட்களுக்கு வேளாண்மையைச் சார்ந்த தொழிற்சாலைகளில் தங்கியிருந்து அனுபவரீதியாகப் பயின்று வருகின்றனர். மாணவர்களின் செயல் திறமையை மேம்படுத்த "வணிக வேளாண்மை" என்ற ஒரு பாடத்தில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஒரு பிரிவில் அரையாண்டு செய்தொழில் பயிற்சி பெற்று நல்ல திறமை பெற்று வருகின்றனர். மேலும், தோட்டக்கலை மற்றும் நன்செய் பயிர் சாகுபடியிலும் இரண்டு அரையாண்டுகளில் மாணவர்களுக்குத் தனித்தனியாக நிலம் ஒதுக்கி பயிற்சி கொடுக்கப்படுகின்றது.

அதிவேகமாக மாறிவரும் காலத்தேவைகளுக்கு ஏற்ப பாடத் திட்டங்கள் சமீபத்தில் நன்கு மாற்றி அமைக்கப்பட்டு, 1999-2000ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலாண்மை பாடத்திற்கான ஆராய்ச்சி மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பினை மேலும் பலப்படுத்த, வேளாண்மை மற்றும் ஊரக மேலாண்மைத் துறை என்ற ஒரு புதிய துறை மார்ச் மாதம் 2000 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சி**

பல்வேறுபட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கைகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கிய நிறுவனங்கள்

| நிதி உதவி வழங்குவோர் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| இந்திய அரசு | 33 | 312.50 |
| இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் | 146 | 2020.36 |
| தனியார் நிறுவனங்கள் | 55 | 371.33 |



2001 செப்டம்பர் 4]

| நிதி உதவி வழங்குவோர் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| அயல் நாட்டு நிறுவனங்கள் | 26 | 389.38 |
| அரசு திட்டப் பணிகள் | 155 | 2032.61 |
| இதர நிறுவனங்கள் | 30 | 388.45 |
| மொத்தம் | 445 | 5514.63 |

இந்திய வேளாண்மை தொழில் நுட்பத்தினை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிகழகம் சமீபத்தில் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மட்டும் 58 ஆராய்ச்சித் திட்டங்களை சுமார் ரூ13 கோடி அளவில் பெற்று செயல்படுத்தி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் 110 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு மேல் இரண்டாம் சுற்றில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர். இதில் ஏற்கெனவே 6 திட்டங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் கடின உழைப்பால் 14 புதிய பயிர் இரகங்களும் 6 பண்ணைக் கருவிகளும் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நெல்லில் ஆடுதுறை(ஆர்) 45 மற்றும் திருச்சி(ஆர்) 2, சோளத்தில் கோ(எஸ்) 28, தீவனச் சோளத்தில் கோ(எப்எஸ்) 29, பச்சைப் பயறில் விஆர்எம் (ஜிஜி)1, விபிஎன் (ஜிஜி) 2, நிலக்கடலையில் கோ(ஜிஎன்) 4 மற்றும் விஆர்ஐ (ஜிஎன்) 5, வெங்காயத்தில் கோ(ஒஎன்) 5, சக்கரவத்தி கீரை ஊட்டி (சிகோ) 1 மற்றும் சென்னா கேகேஎம் (எஸ்இ)1 போன்ற பதினொன்று புதிய இரகங்களையும், கம்பு கோ(சியு)எச் 8, சுத்தரி கோபிஎச் 1 மற்றும் பாகல் கோ(பிஜி)எச் 1 ஆகிய மூன்று வீரிய ஒட்டு இரகங்களும், மேலும் வேளாண் மக்களின் வேலைப் பளுவைக் குறைத்து பணியை எளிதில் செய்ய ஆறு புதிய வேளாண் கருவிகளான பவர்டில்லருடன் இணைந்து விதை விதைக்கும் கருவி, டிராக்டரினால் இயங்கும் மஞ்சள் அறுவடை கருவி, வரிசைப் பயிரினுள் பவர் டில்லரால் இயங்கும் குழல் வடிவ தெளிப்பான், காற்றழுத்த விதைப்புக் கருவி, தக்காளியைக் கூழ் ஆக்கி வடிகட்டும் கருவி, தானியங்கி களை எடுக்கும் மற்றும் மண் அணைக்கும் இயந்திரம் ஆகியவை உருவாக்கப்பட்டன. இப்பயிர் இரகங்களும் வேளாண் கருவிகளும் பொங்கல் பரிசாக சனவரி 9, 2001 அன்று தமிழ்நாடு வேளாண் பெருங்குடி மக்கள் நலனுக்காக வெளியிடப் பட்டுள்ளன.

[2001 செப்டம்பர் 4

இந்திய நாட்டில் ஒருசில வேளாண் பல்கலைக்கழகங்கள்தான் வீரிய ஒட்டு இரக நெல்லைக் கண்டுபிடித்துள்ளன. அவற்றில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் ஒன்றாகும். கோவை வீரிய ஒட்டு நெல் 1 மற்றும் 2 மேலும் ஆடுதுறை வீரிய ஒட்டுநெல் 1 போன்ற அதிக விளைச்சல் தரக்கூடிய வீரிய ஒட்டு நெல் இரகங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. ஒட்டு நெல் விதைகளை 125 ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளையும் வேளாண் பல்கலைக்கழகம் செய்து வருகின்றது.

பயறு வகை உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து வம்பனிலுள்ள தேசிய பயறு ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பயறு வகைகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் கண்டறியப்பட்டன.

சமீப காலங்களில் தென்னை சிலந்திப்பூச்சியின் தாக்குதல் மிகவும் அதிகரித்து, தென்னை மகசூல் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒரு சீரிய ஆராய்ச்சி வேளாண் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு, சிறந்த முறையில் இச்சிலந்திப் பூச்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய "உயிர் பூச்சிக்கொல்லி" என்ற ஒரு புதிய மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதேபோன்று கரும்பில் "சிகப்பு அழுகல்'' நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்பங்களைக் கண்டறிய ரூ.27 கோடி செலவில் ஒரு ஆராய்ச்சித் திட்டத்தை தமிழ்நாடு அரசு தனது கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படுத்தி வருகின்றது.

மேலும் களர், உவர் நிலங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகள் திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மிகவும் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக திருச்சி 1, 2 போன்ற களர், உவர் நிலங்களுக்கு ஏற்ற நெல் இரகங்களும், திருச்சி 1 ராகி இரகமும் வெளிவந்துள்ளன. தொழிற்சாலைகளினால் விளைநிலங்கள் பல இடங்களில் மாசுபடுத்தப்பட்டு வருவதைச் சீராக்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தேவையான அளவு உரங்களையும் மற்றும் நுண் ஊட்டச் சத்துக்களையும் பயிர்களுக்குச் சரியான விகிதத்தில் தேவையான நேரத்தில் இடுவதில் விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில் ஒவ்வொரு பயிருக்கும் "ஒருங்கிணைந்த பயிர் ஊட்டச் சத்துக்கள்" இடும் கட்டுக்கோப்பை



2001 செப்டம்பர் 4]

வெளியிடும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மண்வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உரம் பற்றி சீரிய முறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் செயற்கை உரச் செலவினைச் சிக்கனப்படுத்தும் நோக்கத்திலும், தழைச் சத்தைச் சுலபமான முறையில் பயிர்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொருட்டும் உயிர் உரங்களில் சீரிய முறையில் ஆய்வு நடத்தி நீலப்பச்சைப் பாசி, அசோலா, ரைசோபியம், அசோஸ்பைரில்லம் போன்ற உயிர் உரங்களை வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு விநியோகித்து வருகிறது. பயிர் சாகுபடி செலவுகள் விளைபொருள் விற்பனை, உள்ளீட்டுப் பொருள்களின் விற்பனை, வேளாண்மை சார்பு தொழில் நிர்வாகம், விளைபொருட்கள் பற்றிய பல ஆராய்ச்சிகளும் நடந்து வருகின்றன. மேலும் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உழவர் சந்தை செயல்பாட்டினைப் பற்றியும் ஆராய்ந்து இரு அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

காய்கறிகள் ஆராய்ச்சிக்கென்றே பாலூரில் ஒரு ஆய்வு நிலையம் உள்ளது. மேலும் தோட்டக்கலைக் கல்லூரிகள் கோவையிலும், பெரியகுளத்திலும், ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. சமீபத்தில் வெளியிடப்பட்ட கோபிஎச்.1 என்ற வீரிய ஒட்டுக் கத்தரி மற்றும் கோ(பிஜி)எச்.1 என்ற வீரிய ஒட்டுப்பாகல் ஆகிய இரகங்கள் மிகவும் உன்னத வெளியீடுகளாகும்.

பேச்சிப்பாறை, ஏற்காடு, தடியன்குடிசை மற்றும் உதகை போன்ற இடங்களில் செயல்பட்டுவரும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களில் காய்கறிகள், பழங்கள், மலர்கள், வாசனைப் பயிர்கள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சமீபத்தில் மூலிகைச் செடிகள் பூங்காக்கள், ஏற்காடு, கோவை மற்றும் பெரியகுளம் போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமீபத்தில் கிள்ளிகுளத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கிள்ளிகுளம் கேகேஎம்(எஸ்இ)1 என்ற புதிய சென்னா இரகத்தை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் வனச் செல்வங்களைப் பெருக்கவும், பாதுகாக்கவும் வன ஆராய்ச்சிகள் மேட்டுப்பாளையம் வனக் கல்லூரியில் சீரிய முறையில் நடந்து வருகின்றன. சவுக்கு, தைலமரம், தேக்கு மற்றும் "பாரடைஸ் மரம்" போன்ற மரங்கள் விவசாயிகளுக்கு ஒரு நல்ல வருமானத்தைத் தந்து வருகின்றன. இக்கல்லூரியின் ஆய்வுகளின் முடிவுகள் "நீர்பிடிப்புப் பகும்'' மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மிகவும் உறுதுணையாக உள்ளன. வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மூலம் கோவை மற்றும் குமுளூர் ஆகிய இடங்களில் மண் அரிப்புத் தடுப்பு, மண்

[2001 செப்டம்பர் 4

ஈரத்தைப் பாதுகாப்பது போன்ற ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் 97-க்கும் மேற்பட்ட புதிய பண்ணைக் கருவிகளை இக்கல்லூரிகள் ஆராய்ச்சிகளின் மூலம் வெளியிட்டுள்ளன. நெல் விதைக்கும் உருளை மரங்களுக்கு பூச்சி மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் அடிக்கும் தெளிப்பான்கள், தக்காளி விதைப் பிரிக்கும் இயந்திரம், மணிலா மற்றும் மஞ்சள் அறுவடை மற்றும் செடியிலிருக்கும் காய்களைப் பிரித்தெடுக்கும் இயந்திரங்கள் போன்றவை சில சிறந்த கண்டுபிடிப்புகளாகும்.

கிடைக்கக்கூடிய பாசன நீர் வசதிகள் குறைந்து கொண்டே வருவதால் பாசன நீரைச் சிக்கன முறையில் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கரும்பிற்கு இரு வரிசை பாசன முறை தென்னை மற்றும் பழத் தோட்டங்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம் மிகவும் ஏற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள விளை நிலங்களில் மூன்றில் இரண்டு பங்கு மானாவாரி நிலங்களாகும். இந்த மானாவாரி சாகுபடி சம்பந்தமான ஆராய்ச்சிகள் அருப்புக்கோட்டையிலும், கோவில்பட்டியிலும் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மானாவாரிக்கு ஏற்ற பருத்திப் பயறு சிறு தானியங்கள், தோட்டக்கலைப் பயிர்கள், மரச்செடிகள் ஆகியவற்றில் புதிய இரகங்கள் கண்டுபிடிப்பில் முக்கிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயிர் நுட்ப ஆராய்ச்சிகள் மூலம் நோய் பூச்சிகள் தாக்காத இரகங்கள் கண்டுபிடிப்பில் முனைந்துள்ளது. வாழைக்கன்றுகள், கரும்புக்கன்றுகள் ஆகியவைகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய ஆராய்ச்சிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

## வல்லுநர் விதை உற்பத்தி

விவசாயிகளுக்கு அதிக விளைச்சல் தரும் பயிர் இரக விதைகள் தொடர்ந்து விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அரசு வேளாண்மைத் துறையுடன் சேர்ந்து விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. 163 இரகங்களை 26 மையங்களில் வல்லுநர் விதை உற்பத்தி செய்து வேளாண்மைத் துறைக்கும், மத்திய அரசுக்கும் தனியார் நிறுவனத்திற்கும் வழங்கி வருகின்றது. வல்லுநர் விதைகள் உற்பத்தி மற்றும் விநியோக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



2001 செப்டம்பர் 4]

### வல்லுநர் விதை உற்பத்தி

| பயிர் | உற்பத்தி குறியீடு 2000-2001 | | | விநியோகம் (31-3-2001 முடிய) | | |
|---|---|---|---|---|---|---|
| | துறை | தனியார் | மொத்தம் | துறை | தனியார் | மொத்தம் |
| 1 நெல் | 27815 | 32500 | 60315 | 31370 | 47502 | 78872 |
| 2 சிறுதானியங்கள் | 342 | 50 | 392 | 518 | 217 | 735 |
| 3 பயறு வகைகள் | 44446 | 200 | 14646 | 18551 | 2088 | 20639 |
| 4 எண்ணெய் வித்து | 78968 | 30000 | 108968 | 78648 | 39870 | 118518 |
| 5 பருத்தி | 527 | 200 | 727 | 427 | 533 | 960 |
| 6 கால்நடைப் பயிர்கள் | 48 | 200 | 248 | 48 | 270 | 318 |
| 7 காய்கறிப் பயிர்கள் | 73 | 150 | 223 | 63 | 209 | 272 |
| மொத்தம் | 122319 | 63300 | 185619 | 129625 | 90689 | 220314 |

## வேளாண்மை விரிவாக்கம்

வேளாண் கல்வி மற்றும் ஆய்வுகள் மூலம் வெளிவரு கண்டுபிடிப்புகளை விவசாயிகளின் வயல்களில் எந்த அளவிற்குச் செயல்படுத்த இயலும் என்பதை அறியும் பொருட்டும், அவ்வாறு செயல்படுத்துவதற்கான வாய்ப்புள்ள கண்டுபிடிப்புகள் வேளாண் துறையின் மூலம் விவசாயிகளுக்குச் சென்றடையச் செய்யவும் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. ஒரு தகவல் தொடர்பு மையம், 5 வேளாண்மை அறிவியல் மையங்கள், 5 பயிர் மருத்துவ மையங்கள், ஒரு பயிற்சி மையம் ஆகியவை இந்த இயக்குநரகத்தின்கீழ் வேளாண் விரிவாக்கப் பணிகளை தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு இடங்களில் செயல்படுத்துகிறது.

வானொலி மூலம் வேளாண் பள்ளி, தொடர் தூரக் கல்வி, கேள்காண் நாடாப் பாடங்கள் தயாரித்தல் மூலம் விவசாயிகளுக்கும், வேளாண் விரிவினை அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல், விவசாயிகளுக்குத் தொழில் நுட்ப

[2001 செப்டம்பர் 4

ஆலோசனைகளைக் கூறுதல் போன்ற மற்றும் சில விரிவாக்கப் பணிகளை இந்த இயக்குநரகம் மேற்கொண்டு வருகிறது. இதுவரையில் 132 வானொலிப் பாடங்கள் அகில இந்திய வானொலிப் பள்ளி மூலம் ஒலிபரப்பப்பட்டுள்ளது. மேலும் 12 - 15 பாடத்திட்டங்கள் தொலைதூரக் கல்வி மூலம் கற்பிக்கப்பட்டுள்ளது. கேள் நாடாப் பாடங்கள் 35-க்கும் மேற்பட்ட தலைப்புகளிலும், கேள்காண் நாடாப் பாடங்கள் 100-க்கும் மேற்பட்டும் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், 734 பயிற்சிகள் பல்வேறு துறைகளைச் சார்ந்த 13877 பயிற்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண் அறிவியல் நிலையங்களின்மூலம், உழவர் தின விழா கிராமக் கூட்டங்கள், கருத்தரங்குகள், செயல்விளக்கங்கள் ஆகியவை விவசாயிகளின் பயன் கருதி நடத்தப்பட்டு வருகின்றன. நிலத்தின் தன்மை காரணமாக பயிர்களைத் தாக்கும் நோய், பூச்சி ஆகியவற்றிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க பயிர் மருத்துவ மையம் முனைப்பாக ஈடுபட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் புதிதாக இவ்வாண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம தத்தெடுப்புத் திட்டம் அல்லது ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தரும் மற்றும் பேராசிரியருமான முனைவர் எஸ். கண்ணையன் அவர்களால் 16-6-2000-ல் ஆரம்பிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு சமுகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தும் வகையில் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப முறைகளை விவசாயிகளிடையே ஊக்குவிப்பது இதன் முக்கிய நோக்கமாகும். அனைத்து 10 கல்லூரிகளும், 31 ஆராய்ச்சி நிலையங்களும், 5 வேளாண் அறிவியல் நிலையங்களும், 5 பயிர் மருந்து மையங்களும், தலா 2 கிராமங்களைத் தத்தெடுத்து ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இக்கிராமங்களில் சர்வே எடுத்து தேவையான வளர்ச்சித் திட்டங்களை அறிந்து, ஒவ்வொன்றாக நிறைவேற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 100 கிராமங்களில் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களையும் இக்கிராமங்களில் செயல்விளக்கங்கள் செய்து காட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவர் தின விழா மற்றும் வேளாண் கருத்தரங்கு

மாநில அளவிலான உழவர் தின விழா மற்றும் வேளாண் கருத்தரங்கு 2001 ஜனவரி மாதம் 9 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.



2001 செப்டம்பர் 4]

பொருட்காட்சி ஜனவரி 9ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள், பல்வேறு துறைகள், தமிழக அரசின் வேளாண்மை மற்றும் இதர விரிவாக்கத் துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களும் பங்கேற்றன. அச்சமயம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகளான புதிய பயிர் வகைகளும் வேளாண் கருவிகளும் வெளியிடப்பட்டன. 2001 ஜனவரி 9ஆம் தேதியன்று மூலிகைப் பயிர்கள் மற்றும் வேளாண்மையில் மகளிர் என்பது குறித்தும், ஜனவரி 10ஆம் தேதியன்று பண்ணைக் கருவிகள், மானாவாரி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், வேளாண் ஏற்றுமதி மற்றும் வேளாண் காடுகள் என்பது குறித்தும், ஜனவரி 11ஆம் தேதி உழவர் மன்ற அமைப்பாளர் கருத்தரங்கு, நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணை மேலாண்மை மேலும், ஜனவரி 12ஆம் தேதியன்று மானாவாரி தோட்டக்கலைப் பயிர்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள் குறித்தும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. ஜனவரி 10 ஆம் தேதியன்று மானாவாரி வேளாண்மைத் தொழில்நுட்பக் கருத்தரங்கு நடைபெற்றது. இவ்விழாவில் 4000-க்கும் மேற்பட்ட உழவர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### வேளாண்மை ஆராய்ச்சி தகவல் அமைப்பு

இவ்வமைப்பு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியால் வேளாண் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. வேளாண் ஆராய்ச்சிகளைப் பற்றிய எல்லா தகவல்களையும், கணினியின் உதவி கொண்டு சேகரித்து கோப்புகளில் வைக்கப்பட்டுள்ளது. எந்தவொரு ஆராய்ச்சியாளரும் இத்தகவல்களைப் பயன்படுத்த வழி வகுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளுக்கு இடையேயும் மற்றும் ஒரே கல்லூரியில் பல துறைகளுக்கிடையேயும், வேளாண் ஆராய்ச்சித் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும்வகையில் கணினிகளின் உதவி கொண்டு ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அறிவியல் கண்டுபிடிப்புகளை எல்லோரும் கண்டறியும் வண்ணம் தகவல்தட்டு, தகவல் வலை, மின் அஞ்சல் வசதிகளும் உண்டாக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இவ்வசதியினை நன்கு பயன்படுத்தும்வகையில் இந்த வேளாண்மை ஆராய்ச்சித் தகவல் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 4

## அத்தியாயம் 7

### விதைச் சான்றளிப்பு

1966 ஆம் ஆண்டின் மத்திய விதைச் சட்டம் மற்றும் 1968ஆம் ஆண்டின் விதை விதிகளின்படி விதைச் சான்று நிறுவனப் பணிகளை விதைச் சான்றுத் துறை செயல்படுத்தி வருகிறது. மேலும் இத்துறை விதைச் சான்றளித்தல், விதை ஆய்வு, விதைப் பரிசோதனை மற்றும் விதைச் சான்று குறித்து பயிற்சிகள் நடத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது.

### 1. விதைச் சான்றளிப்பு

விதைச் சான்று என்பது உயர் ரக பயிர் ரகங்களின் விதைகளில் வரையறுக்கப்பட்ட முளைப்புத் திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, விதை ஆரோக்கியம் ஆகியவற்றைப் பேண நடைமுறைகளை வகுத்து, பின்பற்றி சான்று வழங்குவதாகும். வருடாந்திர சராசரி விதை உற்பத்தி 25,000 மெட்ரிக் டன்களாக இருந்தது. 2000-2001-ல் 42,811 மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 43,000 மெட்ரிக் டன்கள் சான்று விதை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2. விதை ஆய்வு

தரமான விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய விதை ஆய்வுப் பிரிவின் விதை ஆய்வாளர்களால் விதை விற்பனை நிலையங்களால் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளியில் ஆய்விடப்பட்டு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு முறையாக அனுப்பப்படுகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளின்படி, தரக்குறைவான விதை விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர விதைகள் கட்டுப்பாடு ஆணை 1983-ன்படி விதை விற்பனை உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

2000-2001 ஆம் ஆண்டின் இலக்கான 25,000 விதை விற்பனை நிலைய ஆய்விற்கு, 26,989 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 18,500 விதை மாதிரிகள் இலக்கிற்கு 20,581 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2001-2002ஆம் ஆண்டில் 26,000 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 19,000 விதை மாதிரிகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தரக்குறைவான விதை மாதிரிகளின் அளவு 6.5 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 5.0 விழுக்காடாகக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

### 3. விதைப் பரிசோதனை

விதைகளின் இனத்தூய்மை, புறத்தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றைச் சோதனை செய்வதும், அவ்வகையில் சோதனை செய்யப்பட்ட விதைகள் எப்பகுதியில் சோதனை செய்தாலும் ஒரே மாதிரியான முடிவுகளைப் பெறக்கூடிய வகையிலிருப்பதும் இதன் நோக்கமாகும். விதைச் சான்று மற்றும் விதை ஆய்வுத் திட்டங்கள் செவ்வனே நடைபெற விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கிய அங்கம் வகிக்கிறது. ஆண்டுதோறும் 42,000 விதை மாதிரிகளை பகுப்பாய்வு செய்யும் திறனுக்கு 2000-2001-ல் 63,283 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இப்பரிசோதனை நிலையங்களில் சான்று விதை, ஆய்வு விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுவதுடன் விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் விதை விற்பனையாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் 50,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

இனத்தூய்மைப் பரிசோதனைகள் கண்ணம்பாளையம் பண்ணையிலும், இவ்வியக்ககத்திலும் நடத்தப்படுகின்றன. விதைச் சான்று பிரிவில் வீரிய பருத்தி மற்றும் ஆதார நிலை பருத்தி விதை மாதிரிகள் இனத்தூய்மைப் பரிசோதனை செய்யப்படுவதுடன், விதை ஆய்வுப் பிரிவில் ஐயத்திற்குரிய விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனை செய்யப்படுகின்றன.

### 4. விதைச் சான்று பயிற்சி

சான்று விதை உற்பத்தி முறைகள் குறித்தும், விதைத்தரம் பேணுதல் குறித்தும், விதை உற்பத்தியாளர்கள், சாகுபடியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் அறியும் பொருட்டு விதைச் சான்றுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2000-2001-ல் இலக்கான 24,000 நபர்களுக்கு மேல் 26,990 நபர்களுக்கு வெவ்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. 2001-2002ஆம் ஆண்டில் 24,500 நபர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆற்றுப்படுத்தும் பயிற்சி - விதைச் சான்றுத் துறையில் புதிதாகப் பணியில் அமர்த்தப்படும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு விதைச் சான்றளிப்பு நடைமுறைகள், வயல் ஆய்வுப் பணிகள், விதை சுத்திகரிப்புப் பணிகள், விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல் மற்றும் பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

புத்தூட்டப் பயிற்சி - இத்துறையில் பணிபுரியும் விதைச் சான்று அலுவலர், விதை ஆய்வாளர்கள் மற்றும் விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ஆகியவர்களுக்கு விதைச் சான்று நடைமுறைகள், விதை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட ரகங்களின் குணாதிசயங்கள் பற்றியும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

விதை உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்கள் பயிற்சி - விதைச் சான்று துணை இயக்குநர் மற்றும் விதைச் சான்று உதவி இயக்குநர்களால், அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் உற்பத்தியாளர் மற்றும் சாகுபடியாளர்களுக்கு சான்று விதை உற்பத்தி பற்றிய தொழில்நுட்பங்கள் மற்றும் சாகுபடி முறைகளைத் தெளிவாக விளக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

விதை விற்பனையாளர் தரக் கட்டுப்பாடு பயிற்சி - விதை விற்பனையாளர்களுக்கு விதைகள் சேமித்தல், விதைத் தரம் பேணுதல், சேமிப்பில் விதைகளைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுடன் விதைகள் சட்டம் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## அத்தியாயம் 8

## வேளாண் விளைபொருள் விற்பனை

கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதிலும், அங்காடி அடிப்படை வளர்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல்திறன் மேம்படுவதற்கு சாகுபடி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு விற்பனையும் முக்கியமாகத் திகழ்கிறது. பன்னிரண்டாவது தேசிய வேளாண் குழுவின் பரிந்துரைப்படி, வேளாண்மை விற்பனை என்பது ஒரு விவசாய விளைபொருளை விற்பனைக்காக உற்பத்தி செய்திட முடிவெடுத்தவுடனேயே தொடங்குகிறது. மேலும், வேளாண்மை விற்பனை என்பது அங்காடி முறையில் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது என்பதோடு அறுவடைக்கு முன்னும் பின்னும் செய்கின்ற செய் நேர்த்திகள், விளைபொருளை ஓரிடத்திற்குக்கொண்டு வந்து சேர்ப்பது, தரம் பிரிப்பது, சேமிப்பது மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது மற்றும் விநியோகிப்பது ஆகியவையும் அதனுள் அடங்கும்.





### வேளாண்மை விற்பனைத் துறை

தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறையானது 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருவதுடன், தற்போது இந்திய ஆட்சிப்பணி அலுவலர் தலைமையின்கீழ் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இத்துறையானது விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்வதில் உதவி புரிவதுடன், உரிமம் பெற்ற வியாபாரிகளின் மூலம் நியாயமான விலை, சரியான எடைக்கு உத்தரவாதம் மற்றும் உடனடி பணம் போன்ற சேவைகளை வழங்குகின்றது.

### வேளாண் விற்பனைத் துறையின் முக்கிய செயல்பாடுகள்

1. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் வாங்குவது, விற்பது ஆகிய செயல்களை ஒழுங்குபடுத்துதல்.

2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவில் விளைபொருட்களை தரம் பிரித்து நல்ல விலை கிடைத்திட உதவுதல்.

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் வரத்தினை அதிகரிக்கவும், அவ்விற்பனைக் கூடத்தில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள், வாய்ப்புகள் ஆகியவற்றைப் பற்றி விவசாயிகளிடையே விளம்பரம் மற்றும் பிரச்சாரப்பணி மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல், புள்ளியியல் கணக்கெடுப்பு, விற்பனைக் கூடங்களை மேம்படுத்துதல் போன்றவற்றை தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தின் மூலம் செயல்படுத்துதல்.

4. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள், வனப்பொருட்கள் போன்றவற்றை நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.

### விற்பனைக் குழுக்கள்

தமிழகத்தில் தற்போது 16 விற்பனைக் குழுக்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்த விழையும் கருத்துருக்கள் பரிசிலனையில் உள்ளன.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

16 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 272 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை விற்பனைக் கூட வளாகத்தில் ஒன்றுகூட்டி விளைபொருள் வாங்குவது, விற்பது போன்ற பல செயல்களை முறைப்படுத்தி மறைமுக ஏலமுறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விற்பனைக் குழுக்கள் விளைபொருள் மதிப்பில் 1 சதவீதத்தினை விற்பனைக் கட்டணமாக வியாபாரிகளிடம் வசூலிக்கின்றன. வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்/ விற்பனை செய்வோரிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இடைத்தரகர்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினால் கிடைக்கும் பயன்கள்**

1. ஒரே சீராக சரியான எடைக்கான விற்பனை

2. வணிகமுறை தரம் பிரிப்பு

3. கிட்டங்கி வசதி

4. உரிமம் பெற்ற வியாபாரிகளிடையே போட்டி விற்பனையில் அதிகபட்ச விலை

5. இடைத்தரகர்கள், கமிஷன் ஏஜெண்டுகள் ஆகியவர்களைத் தவிர்த்தல்

6. மறைமுக ஏலமுறை

7. வங்கி வசதிகள்

8. உடனடி பணம் பட்டுவாடா





9. அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு

10. பொருளீட்டு கடன் வசதி

11. விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, சுகாதார கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள்

12. வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி

13. இலவச மருத்துவ வசதி

14. தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

15. தேவையான அளவு விளை பொருட்களை ஒரே இடத்தில் வாங்க வசதி

16. பணப் பட்டுவாடா செய்திட வசதி

17. தொலைபேசி வசதி

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 2000—2001 ஆம் ஆண்டு முடிய அமைக்கப்பட்ட விற்பனைக் குழு வாரியான அடிப்படை வசதிகள் விவரங்கள் அட்டவணை 2—ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்**

முக்கிய விளைபொருட்களில் வாணிபத்தை ஒழுங்குபடுத்திட இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, மஞ்சள் போன்ற 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன்**

சிறு/மிகச்சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும்பொருட்டு, 147 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 50—75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, ரூ.50,000/— அதிகபட்சமாக பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை. மீதமுள்ள நாட்களுக்கு 12 விழுக்காடு முதல் 14.5 விழுக்காடு வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணப்பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உள் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 4. விற்பனை அபிவிருத்தி நிதி

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்திற்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்த தொகையில் 50 விழுக்காடு சந்தை அபிவிருத்தி நிதிக்காக ஒதுக்கீடு செய்து விற்பனைக் குழு அபிவிருத்திக்காக விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவற்றைச் சேர்த்து செலவிடப்படுகிறது. மீதமுள்ள 50 விழுக்காடு தொகை வாரிய நிர்வாகத்திற்கும், வாரியத்தின் இதர பணிகளுக்காகவும் செலவிடப்படுகிறது.



## அட்டவணை — 1

### மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம் பிரிப்பு மையம் விவரங்கள்

| வ எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் | துணை விற்பனை கூடங்கள் | சோதனை சாவடிகள் | ஊரகக் கிடங்கிகள் | வணிக முறை தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 1 | 2 | 5 | 7 | - | - |
| 2 | வேலூர் | 12 | - | - | 4 | 5 | - | - |
| 3 | திருவண்ணாமலை | 16 | - | - | 7 | 10 | - | - |
| 4 | கடலூர் | 10 | 1 | - | 3 | 6 | - | - |
| 5 | விழுப்புரம் | 18 | - | - | 9 | 13 | 1 | - |
| 6 | சேலம் | 19 | - | - | 2 | 6 | - | - |
| 7 | தர்மபுரி | 16 | - | 2 | 4 | 5 | - | - |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 5 | - | 11 | 2 | 3 | - |
| 9 | ஈரோடு | 25 | 6 | 1 | 8 | 10 | 2 | 1 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 19 | 2 | 4 | 10 | 4 | - | - |
| 11 | தஞ்சாவூர் | 29 | - | 2 | 7 | 5 | - | - |
| 12 | புதுக்கோட்டை | 10 | - | 1 | 2 | 2 | - | - |
| 13 | மதுரை | 21 | - | - | 8 | 7 | 1 | - |
| 14 | இராமநாதபுரம் | 20 | - | 1 | 10 | 6 | 1 | - |
| 15 | திருநெல்வேலி | 19 | - | - | 13 | 6 | 3 | - |
| 16 | கன்னியாகுமரி | 6 | - | 2 | 5 | 2 | - | - |
| | மொத்தம் | 272 | 15 | 15 | 108 | 96 | 11 | 1 |

தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் விளைபொருளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.50,000/— வரை மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, உயிர் இழக்கும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் குடும்பத்தில் உள்ள சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில் நபரொன்றுக்கு வருடமொன்றுக்கு தவணைக் கட்டணமாக ரூ.10/—ஐ உரிய விற்பனைக் குழுவும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியமும் சமபங்காகச் செலுத்துகின்றன.

வணிகமுறை தரம் பிரிப்பு

விவசாயிகளின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக 96 வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் 1 புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் இப்பணி கிராமங்களில் விவசாயிகளின் பண்ணைகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. இம்மையங்கள் 'அறுவடைக்குப் பின்செய்நேர்த்தி தொழில்நுட்ப மையம்' என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்ப பணி வசதிகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள். இம்மையங்களில் பணியாற்றும் வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் தற்போது உழவர் சந்தையில் பணியாற்றி வருகிறார்கள்.

அக்மார்க் தரம் பிரிப்பு

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் ஒரு முதன்மை ஆய்வகமும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம் பிரிப்பின்கீழ் மைய



தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களும், பயிற்சி பெற்ற தொழில் நுட்ப அலுவலர்களால் தரம் பிரிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு அக்மார்க் முத்திரைச் சீட்டுகள். உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிபபடையில ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் முன்னிலையில் வழங்கப்படுகின்றன. 2000—2001 ஆம் நிதியாண்டில் வேலூர், கரூர், தேனி, நாகர்கோவில் மற்றும் காங்கேயம் ஆகிய ஐந்து அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்த அரசு ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. நவீன உபகரணங்கள் வாங்கி பொருத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் முக்கிய பணிகள் வருமாறு:

1. விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகள்

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்வதில் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்

திருச்சியை மையமாகக் கொண்டு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறை மற்றும் விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

3. கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக்

[2001 செப்டம்பர் 4

## அட்டவணை — 2

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள்

| வ. எண் | விற்பனை குழுக்கள் | சொந்த நிலம் | கிடங்கி | ஊரக கிடங்கி | பரிவர்த்தனைக் கூடம் | உலர் களம் | வியாபாரிகள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | - | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | - | 4 | 3 |
| 7 | தர்மபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 12 | 8 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 12 | 12 | 7 | 20 | 9 | 8 | 11 | 11 |
| 12 | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 14 | 1 | 8 | 10 | 16 | 4 | 10 | 12 |
| 14 | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல்வேலி | 15 | 3 | 13 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |



2001 செப்டம்பர் 4]

## அட்டவணை — 3

### விற்பனைக்குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2. திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வானாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிரப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிபூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர் |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| 1. விருதாச்சலம் | 1. திண்டிவனம் | 11. மணலூர்பேட்டை |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் | 12. அவலூர்பேட்டை |
| 3. பண்ருட்டி | 3. உளுந்தூர்பேட்டை | 13. மரக்காணம் |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் | 14. விக்ரவாண்டி |
| 5. காட்டுமன்னார்கோவில் | 5. சின்னசேலம் | 15. அனந்தபுரம் |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி | 16. வளத்தி |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி | 17. மூங்கில்துறைப்பட்டு |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் | 18. கிளியனூர் |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் | |
| 10. புவனகிரி | 10. திருவெண்ணெய்நல்லூர் | |

| 6. சேலம் | 7. தர்மபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தர்மபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருக்ஷ்ணகிரி | 2. அவினாசி |
| 3. நாமக்கல் | 3. ஓசூர் | 3. சேவூர் |
| 4. ராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருச்செங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பெண்ணாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கணாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டிணம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கரை | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிப்பட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப்பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. ராயக்கோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாரப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. சங்கவல்லி | | 17. பெதப்பம்பட்டி |
| 18. கருமந்துரை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராம்பட்டிணம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. இலால்குடி | 8. பாபநாசம் |
| 9. மைலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தப்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |



தொடர்ச்சி

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 13. வெள்ளக்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. வலங்கைமான் |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிபட்டி | 14. பாப்பாநாடு |
| 15. புஞ்சைபுளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | 15. கீவலூர் |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | 16. கொரடாச்சேரி |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார்பேட்டை | 17. குத்தாலம் |
| 18. குன்னத்தூர் | 18.மேலணைக்குழி | 18. மன்னார்குடி |
| 19. காங்கேயம் | 19.அரும்பாவூர் | 19. மயிலாடுதுறை |
| 20. வெள்ளாங்கோவில் | | 20. நாகப்பட்டினம் |
| 21. தாராபுரம் | | 21. பூந்தோட்டம் |
| 22. மூலனூர் | | 22. செம்பனார்கோவில் |
| 23. அலங்கியம் | | 23. சீர்காழி |
| 24. முத்தூர் | | 24. வேதாரண்யம் |
| 25. எழுமாத்தூர் | | 25. வடுவூர் |
| | | 26. குடவாசல் |
| | | 27. திருப்பூண்டி |
| | | 28. திருவாரூர் |
| | | 29. திருத்துறைப்பூண்டி |

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. தேனி | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. திண்டுக்கல் | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. திருமங்கலம் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வகோட்டை | 4. ஒட்டன்சத்திரம் | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. உசிலம்பட்டி | 5. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6. கீரனூர் | 6. பழனி | 6. வத்திராயிருப்பு |
| 7. கீரமங்கலம் | 7. நத்தம் | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | 8. கம்பம் | 8. சிவகங்கை |
| 9. இலுப்பூர் | 9. வத்தலகுண்டு | 9. திருபுவனம் |
| 10. கரம்பக்குடி | 10. மேலூர் | 10. மானாமதுரை |
| | 11. போடிநாயக்கனூர் | 11. சிங்கம்புணரி |
| | 12. சின்னமனூர் | 12. காரைக்குடி |
| | 13. மதுரை | 13. இளையான்குடி |
| | 14. கோபால்பட்டி | 14. தேவகோட்டை |
| | 15. டி. கல்லுப்பட்டி | 15. இராமநாதபுரம் |
| | 16. வாடிப்பட்டி | 16. பரமக்குடி |
| | 17. வடமதுரை | 17. கமுதி |
| | 18. ஆண்டிப்பட்டி | 18. திருவாடனை |
| | 19. வேடசந்தூர் | 19. இராசசிங்கமங்கலம் |
| | 20.உத்தமபாளையம் | 20. முதுகுளத்தூர் |
| | 21. பெரியகுளம் | |

[2001 செப்டம்பர் 4

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி |
|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி |
| 3. தூத்துக்குடி | 3. கலியக்காவிளை |
| 4. புதூர் | 4. திங்கள்சந்தை |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் |
| 6. கழுகுமலை | 6. தொடுவட்டி |
| 7. தென்காசி | |
| 8. அம்பாசமுத்திரம் | |
| 9. வள்ளியூர் | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | |
| 11. திருநெல்வேலி | |
| 12. விளாத்திகுளம் | |
| 13. கடையநல்லூர் | |
| 14. திசையன்விளை | |
| 15. பாவூர் சத்திரம் | |
| 16. திருவேங்கடம் | |
| 17. எட்டையபுரம் | |
| 18. சிவகிரி | |
| 19. ஆலங்குளம் | |



2001 செப்டம்பர் 4]

## அட்டவணை - 4

## தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|
| 1. சென்னை | சென்னை(வடக்கு), (தெற்கு) மற்றும் முதன்மை ஆய்வகம் |
| 2. வேலூர் | வேலூர் |
| 3. கடலூர் | பண்ருட்டி |
| 4. தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி—1, திருச்சிராப்பள்ளி—2 |
| 6. கரூர் | கரூர் |
| 7. மதுரை | மதுரை—1, மதுரை—2 |
| 8. தேனி | தேனி |
| 9. திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10. விருதுநகர் | விருதுநகர் |
| 11. திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12. தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13. கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14. சேலம் | சேலம் |
| 15. தர்மபுரி | தர்மபுரி |
| 16. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17. ஈரோடு | பெருந்துறை, ஈரோடு 1, 2, காங்கேயம் 1, 2 வெள்ளக்கோவில், சித்தோடு |

[2001 செப்டம்பர் 4

## அத்தியாயம் 9

## வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்

### வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்

வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் 1995—96 ஆம் ஆண்டு முதல் ரூ.112.01 கோடி செலவில், தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி, இத்திட்டத்திற்கு, டிசம்பர், 2001 வரை கால நீட்டிப்பு வழங்கி உள்ளது. வேளாண் உயர் கல்வியின் தரத்தையும் இதன் தொடர்புடைய பணியிடைப் பயிற்சியினை மேம்படுத்துவதும், இத்திட்டத்தில் பங்கேற்கும் மாநிலங்களில் வேளாண் மனித வளத்தை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். வேளாண் துறையை, நவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நம் முயற்சிக்கு இது பேருதவியாக இருக்கும்.

இத்திட்டத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா, தாய்லாந்து மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று 459 அலுவலர்கள் பயிற்சி பெற்று வேளாண் சார்ந்த நவீன தொழில் நுட்பங்களை அறிந்து வந்துள்ளார்கள். மேலும், இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற பல்வேறு நிறுவனங்களில் 4742 அலுவலர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 71 ஆசிரியர் குடியிருப்புகள், தேர்வு அறை மற்றும் கணினி மையங்கள் போன்றவை கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மாணவர், ஆசிரியர் விடுதிகள் மற்றும் 2 விளையாட்டு வளாகங்கள், நூலகம் மற்றும் கணிப்பொறியகம் உள்ளடக்கிய மாணவர் வகுப்பறைகளைக் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம், அச்சகக் கட்டடம் தகவல் தொடர்பு மைய கட்டடம், வெளிமாநில ஆசிரியர்கள் தங்கும் விடுதி போன்றவை கட்டப்பட்டுள்ளன. மாதவரத்தில் தோட்டக்கலைப் பயிற்சி மையம், அபிசேகப்பட்டி மற்றும் ஓசூர் ஆகிய கால்நடைப் பண்ணைகளில் பயிற்சி நிலையம் மற்றும் விடுதி, வைகை அணையில் வனத் துறை பயிற்சி மையம், கணினி அறை மற்றும் சென்னையில் மீன் வளப் பயிற்சி மையம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் மற்றும் துறைகளின் திட்டப் பணிகளைச் செவ்வனே செய்திட பல்கலைக்கழகங்களுக்கும்,



2001 செப்டம்பர் 4]

துறைகளுக்கும் 726 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒலி, ஒளிக்கருவிகள், அலுவலக ஆய்வக உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் வாங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் அலுவலர்களை அதிக அளவில் களப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு ஏதுவாக 17 ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 112.01 கோடி ரூபாயில் ஏப்ரல் 2001 முடிய ரூ.98.19 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை 31.12.2001—க்குள் செலவிடப்படும்.

அட்டவணை

ஒப்பளிப்பு மற்றும் செலவினம்

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | துறை | ஒப்பளிப்பு | செலவினம் ஏப்ரல் 2001 முடிய |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் | 48.96 | 43.41 |
| 2 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 41.10 | 36.89 |
| 3 | வேளாண்மை | 2.09 | 2.26 |
| 4 | தோட்டக்கலை | 4.95 | 4.81 |
| 5 | வேளாண் பொறியியல் | 3.68 | 2.42 |
| 6 | கால்நடைப் பராமரிப்பு | 4.46 | 3.21 |
| 7 | மீன் வளம் | 2.22 | 1.81 |
| 8 | வனம் | 3.36 | 2.17 |
| 9 | திட்ட மேற்பார்வை மற்றும் செயலாக்கப் பிரிவு | 0.84 | 0.94 |
| 10 | மனித சக்தி தேவை மதிப்பீடு | 0.35 | 0.27 |
| | மொத்தம் | 112.01 | 98.19 |

[2001 செப்டம்பர் 4

## 2. தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்

சிறு மற்றும் மிகச் சிறு விவசாய பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களின் உணவுத் தன்னிறைவை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத் திறனையும் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் அயல்நாட்டு நிதி உதவி பெறும் திட்டமாகச் செயல்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் ரூ.33.92 கோடி ஒதுக்கீட்டுடன் 83145 பண்ணை மகளிரை நேரடிப் பயிற்சியாளராகப் பயிற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தை மார்ச் 2003 வரை நீட்டிக்க கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

2000—2001 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.495.90 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு ரூ.450.033 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பொருள் மற்றும் நிதி இலக்கு சாதனை மற்றும் 2001—2002 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன வருமாறு:

| வ. எண் | இனம் | 2000—2001 இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 1. | கிராமப்புற பயிற்சி | 555 | 518 |
| 2. | குழு அமைப்பு பயிற்சி | 370 | 340 |
| 3. | குழு உறுதிபடுத்தும் பயிற்சி | 370 | 354 |
| 4. | குழு சார்ந்த பயிற்சி | 370 | 347 |
| 5. | பண்ணை மகளிர் கருத்தரங்கு | 54 | 54 |
| 6. | மாதிரிப்பண்ணை | 555 | 509 |
| 7. | வயல்விழா | 1110 | 998 |
| | நிதி ரூ.இலட்சத்தில் | 495.90 | 450.033 |



2001 செப்டம்பர் 4]

*2001—2002 ஆம் ஆண்டிற்கான திட்டம்*

| வ. எண் | இனம் | இலக்கு (எண்களில்) |
|---|---|---|
| 1. | கிராமப்புற பயிற்சி | 370 |
| 2. | சகபண்ணை மகளிர் பயிற்சி | 370 |
| 3. | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்பு கருத்தரங்கு | 56 |
| 4. | குழு உறுதிப்படுத்தும் பயிற்சி | 370 |
| 5. | குழு சார்ந்த சிறப்புப் பயிற்சி | 370 |
| | நிதி (ரூ. இலட்சத்தில்) | 648.894 |

## 3. விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களாவன:

1. தரங்குன்றிய நிலங்களில் உரிய நில உபயோக முறைகளை அறிய வைத்து பிரபலப்படுத்துதல்.

2. மண் மற்றும் நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்து அவற்றைச் சீரியமுறையில் உபயோகித்து உரிய பலன்பெற மானாவாரி சாகுபடிக்கும், தோட்டக்கலை பயிர் வளர்ப்பிற்கும், காடு வளர்ப்பிற்கும் நில உபயோகிப்பாளர்களுக்கு வழிவகுத்தல்.

3. விவசாயிகளுக்குக் குறுகிய மற்றும் நீண்ட நாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

இத்திட்டத்தில்—

ஒ தாவர அரண்கள் அமைத்தல்

ஒ வேளாண் காடுகள் மேம்படுத்துதல்

ஒ துளைக் கிணறுகள் அமைத்தல்

ஒ தாவர அரண்கள் பாதுகாத்தல்

ஒ வேளாண் காடுகள்

ஒ மேய்ச்சல் நிலங்களைப் பராமரித்தல்

ஒ ...ிர்கள் வளர்த்தல்

ஈ இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர், சிக்கனமான செலவின மரங்கள் மற்றும் வருடாந்திர பலன்தரும் மரங்கள் வளர்த்தல் மற்றும்

உ மண் மற்றும் நீர் வகைப் பாதுகாப்பு போன்றவற்றின் தொடர்புடைய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.1. டேனிடா உதவியுடன் கூடிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (கட்டம் 2)**

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் கட்டம் 2 செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 120 கிராமங்களில் மாநிலத்தின் பங்காகிய ரூ.995.44 இலட்சம் உள்ளடக்கி ரூ.4,172.44 இலட்சம் செலவில் 42,500 எக்டர் நிலத்தில் ஏழு ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் ஆகஸ்டு 1994இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மார்ச் 2003 வரை நீட்டிக்க மாநில அளவிலான திட்டக் குழு அதன் 11 வது கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மார்ச் 2001 வரை ரூ.3098.492 இலட்சம் செலவில் 31669 எக்டர் பரப்பில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.474.733 இலட்சம் செலவில் 3237 எக்டர் பரப்பில் வேளாண் காடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் நடப்பட்டுள்ள மரக் கன்றுகளை நீர்ப்பாய்ச்சிப் பராமரிக்க 256 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இது தவிர, குடிநீருக்கென 16 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 1624 குடும்பங்களுக்கு விதைகள் வழங்கப்பட்டன. 196 நிலமற்ற குடும்பங்களுக்கு பொருட்களாக உதவிகள் வழங்கப்பட்டன. 2065 எக்டர் பரப்பில் நில மேம்பாட்டுப் பணிகளும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. 6 குளங்கள் சீரமைக்கப்பட்டன. 63 மண் அரிப்பு தடுப்பு கட்டுமானங்கள் கட்டப்பட்டன. 2001—2002 இல் ரூ.442.372 இலட்சம் செலவில் 3150 எக்டர் பரப்பில் வேளாண் காடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.2. டேனிடா உதவியுடன்கூடிய விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 83 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம்





மாநிலப் பங்காகிய ரூ.71.39 இலட்சத்தைச் சேர்த்து மொத்தம் ரூ.1300.30 இலட்சம் செலவில் 11,000 எக்டர் நிலத்தில் செயல்படுத்தப்பட வழி வகுக்கப்பட்டுள்ளது. ஜனவரி 1999 இல் வருகை தந்த டேனிடா ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்பேரில் இத்திட்டம் 31.12.2000 வரை நீட்டிக்கப்பட்டது. எனினும் இத்திட்டத்தை 31.12.2001 வரை நீட்டி ,, மாநில அளவிலான திட்டக் குழு அதன் 11வது கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசின் பங்காகிய ரூ.105.220 இலட்சத்தை உள்ளடக்கி இத்திட்டத்தின் திருத்திய செலவினம் ரூ.1405.514 இலட்சம். திட்ட தொடக்க நாளிலிருந்து 31.3.2001 முடிய ரூ.1161.481 இலட்சம் செலவில் 6489 எக்டரில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2000—2001 இல் ரூ.164.664 இலட்சம் செலவில் 377 எக்டர் பரப்பில் வேளாண் காடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை நீர்ப்பாய்ச்சிப் பராமரிக்க 18 ஆழ்துளைக் கிணறுகள், 9 திறந்த வெளிக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 738 குடும்பங்களுக்கு விதைகள் வழங்கப்பட்டன. 189 நிலமற்ற குடும்பங்களுக்குப் பொருட்களாக உதவிகள் வழங்கப்பட்டன. 259 எக்டர் பரப்பில் நில மேம்பாட்டுப் பணிகளும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. 47 குளங்கள்/குட்டைகள் சீரமைக்கப்பட்டன. 204 எக்டர் பரப்பில் தாவர அரண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2001—2002 இல் ரூ.80.129 இலட்சம் செலவில் வேளாண் காடுகள் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 10

### மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

**அ. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் (அக்ரோஃபெட்)**

1972 ஆம் ஆண்டு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களைக் கூட்டுறவுத் துறையிலும் நிறுவி செயல்படுத்துவதற்கு தமிழக அரசால் ஆணையிடப்பட்டது. மேற்கண்ட மையங்கள் பின்னர் மத்திய அரசின் "ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு" திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

2. வேலையில்லாப் பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்பத்திறன் கொண்டோருக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவதற்கும் விவசாயப்

பொறியியல் மற்றும் தொழில் நுட்ப சேவைகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்குவதற்காகவும், வட்டார வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இம்மையங்கள் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய இயந்திரங்களைத் தயாரித்து வழங்கியும் விவசாயக் கருவிகளைப் பராமரித்துப் பழுதுபார்த்தும் சேவை செய்கின்றன.

3. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையமும் (அக்ரோஃபெட்) அதன் 211 சார்புச் சங்கங்களும் கீழ்க்காணும் முக்கிய செயல் திட்டங்களைக் கொண்டுள்ளன.

1) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்/மையங்கள், மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கைக்கருவிகளைத் தயாரிக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது. தொகுப்பு வீடுகளுக்குத் தேவையான கருவிகள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்களில் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகியவற்றின் தேவைகளை இந்நிறுவனம் நிறைவேற்றுகிறது.

2) இணையத்தில் இயந்திரப் பிரிவு தனியே இயங்குகிறது. அனுபவமிக்க பொறியாளர்களைக் கொண்டு இயந்திரப் பிரிவு சிறந்த முறையில் இயங்கி வருகிறது. இயந்திரப் பிரிவில் வேளாண்மைத் துறைக்கு உபயோகப்படும் அனைத்து இயந்திரங்களும் உள்ளன.

3) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையத்தின் இயந்திரப் பிரிவில் சாலை உருளைகள், டிராக்டர் டோசர்கள், புல்டோசர்கள், நெல் அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றைத் திறமையாக இயக்குபவர்களைக் கொண்டும், அனுபவமிக்க கண்காணிப்பாளர்களைக் கொண்டும் இயங்கி வருகிறது. இவர்களின் சேவையை மாநிலப் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளும் அவர்களின் கட்டட கட்டுமானப் பணிகளுக்கும் சிறிய பாலங்கள் அமைப்பதற்கும் மற்றும் பொறியியல் பணிகளுக்கும் பயன்படும்.

4) வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம், மையங்கள் வேளாண் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் வட்டார அளவில் ஆரம்பிக்கப்பட்டது. வறட்சி நிலங்களை மேம்படுத்துதல், வறண்ட நிலங்களை மேம்படுத்தல், தரிசு





நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களை வட்டார அளவிலான மையங்களால் மேற்கொள்ளலாம்.

5) தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் உள் கட்டமைப்பு வசதிகளையும் இயந்திரப் பிரிவினையும் கொண்டுள்ளது. இயந்திரங்களைக் கொண்டு அனைத்துப் பஞ்சாயத்து யூனியன்களிலும் நகராட்சிகளிலும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிகளை மேற்கொள்ளும் வசதிகளைக் கொண்டுள்ளது.

6) இணையம், ஊருணிகள், கண்மாய்கள் மற்றும் ஏரிகள் போன்றவற்றை ஆழப்படுத்துதல் மற்றும் தூர் வாருதல் போன்ற பணிகளை மேற்கொள்ளத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும் தொழில்நுட்பத்தையும் பெற்றுள்ளது. இப்பணிகள் நேரிடையாக வேளாண் மக்களுக்குப் பயன்படும்.

## ஆ. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துகள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்)

*முன்னுரை*

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துகள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) 1981 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் 1961ன்படி (உட்பிரிவு எண் 9) பதிவு செய்யப்பட்டது. இத்திட்டமானது தேசிய பால் வள வாரியத்தின் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவியுடன் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் இந்த இணையத்தில் 335 எண்ணெய்வித்து உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 5 மாவட்டங்களில் (திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர் மற்றும் திருவள்ளூர்) 1492 கிராமங்களை உள்ளடக்கி, 84920 விவசாய உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றன. மொத்தம் 131 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பு எண்ணெய்வித்து சாகுபடியில் இவ்வமைப்பின்கீழ் உள்ளது. டான்காப்பின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.5.0 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.160.05 இலட்சமாகும். இதில் தேசிய பால்வள வாரியம் வழங்கிய ரூ.98.88 இலட்சங்களும், எண்ணெய்வித்து உற்பத்தியாளர் சங்கங்கள் வழங்கிய ரூ.61.17 இலட்சங்களும் அடங்கும். எண்ணெய்வித்துகள் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை (எண்ணெய் மற்றும் அதன் உபபொருட்கள்) ஆகியவற்றினை ஒருங்கிணைப்பதே இவ்விணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

கட்டுமான வசதிகள்

2. தற்சமயம் டான்காப்பில் எண்ணெய்வித்துகளைப் பதப்படுத்தும் இரண்டு ஆலைகள் திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. எண்ணெயைச் சிப்பமிடும் அமைப்பானது திருவண்ணாமலை, விருத்தாசலம் மற்றும் சென்னை (கிண்டி) ஆகிய மூன்று இடங்களில் உள்ளது. இணையத்தில் எண்ணெய்வித்துகளைப் பதப்படுத்த, பாதுகாக்க மற்றும் எண்ணெயைச் சிப்பமிடுவதற்காகப் பின்வரும் கட்டுமான வசதிகள் உள்ளன. எனவே இந்த செயல்பாட்டு வசதிகளைக் கருத்தில் கொண்டு அனைத்து எண்ணெய்வித்துப் பயிர்களையும் குறைந்தபட்ச ஆதார விலைத் திட்டத்தில் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தும் முகவர் அமைப்பாக அரசு 2000—2001 ஆண்டுக்கு அங்கீகரித்துள்ளது.

| வ. எண் | விவரம் | அலகு | தி.மலை | விருத்தாசலம் | கிண்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மணிலா உடைத்தல் | டன் நாள் | 150 | 150 | - | 300 |
| 2 | எண்ணெய் பிழிதல் | டன் நாள் | 125 | 100 | - | 225 |
| 3 | எண்ணெய் சுத்திகரித்தல் | டன் நாள் | 10 | - | - | 10 |
| 4 | பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் | | 40 | 40 | - | 80 |
| 5 | கிடங்கு வசதி | டன் | 7000 | 5000 | - | 12000 |
| 6 | எண்ணெய் சேமிப்பு கலன் | டன் | 1000 | 1700 | 5020 | 7720 |
| 7 | சிப்பமிடுதல் | டன் நாள் | 30 | 30 | 45 | 105 |

3. மேலும், நெய்வேலியில் 120.4 எக்டேர் நிலப்பரப்பில் வட்டார உழவியல் மையம் ஒன்றை டான்காப் நிறுவியுள்ளது. இந்த வட்டார உழவியல் மையமானது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் கருவித்து மணிலா உற்பத்தி செய்வதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது. இப்பண்ணையானது தமிழ் நாடு மாநிலத்தின் மொத்த கருவித்து மணிலா உற்பத்தியில் 50 விழுக்காடு விதையினை உற்பத்தி செய்கிறது. இதே வளாகத்தினுள் ஒரு பயிற்சி மையமும் அமைந்துள்ளது. இப்பயிற்சி மையத்தின் முக்கிய



நோக்கம் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் முன்னோடி விவசாயிகளுக்கும் பயிற்சி கொடுப்பதேயாகும். 2000—2001 ஆண்டில் இப்பயிற்சி மையம், பயிற்சியாளர்களுக்கும் ஒரு சிறப்புப் பயிற்சி முகாமை ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் நிதி உதவியோடு நடத்தியது. அத்துடன் இணையத்தின் பயிற்சி மையத்தினை தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கும் நிறுவனமாக அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4. டான்காப், செப்டம்பர் 1997ல் நான்கு விதை சுத்திகரிக்கும் நிலையங்களை நெய்வேலி, விருத்தாசலம், திருவண்ணாமலை மற்றும் செய்யார் ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது.

முக்கிய பணிகள்

5. இலாபகரமற்ற வியாபார சூழ்நிலையின் காரணமாக, இணையத்தின் கொள்முதல் மற்றும் எண்ணெய்வித்து உற்பத்திப் பணிகள் 1992—93ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1993—94 ஆம் ஆண்டிலிருந்து பாமாயிலினை வெளிச் சந்தையில் வாங்கி, சிப்பமிட்டு மீண்டும் கூட்டுறவுத் துறையின் விற்பனை அங்காடிகளுக்கு விற்பனை செய்வதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. தமிழக அரசு ஆணை (நிலை) எண் 687 வே (எ.வி.) துறை, நாள் 6.12.1993 ஆணையின்படி இந்த இணையத்தின் புனரமைப்புக்காக வழிவகைகள் நிதியாக ரூ.1 கோடியும், ஆதார நிதியாக ரூ.80 இலட்சமும் உதவியளித்து இவ்விணையத்தின் வளர்ச்சிக்கு மேலும் உதவி செய்தது. இது தவிர மதிய உணவுத் திட்டத்திற்காகத் தேவைப்படும் சமையல் எண்ணெய் அனைத்தையும் டான்காப்பிடமிருந்து கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மேற்கண்ட அரசாணை அதிகாரமளித்தது. தேசிய பால்வள வாரியத்தால் புதுப்பிக்கப்பட்ட விருத்தாசலத்தில் அமைந்துள்ள எண்ணெய் பிழியும் ஆலையில் சோதனை ஓட்டம் நடத்த தமிழக அரசு ஆணை பிறப்பித்ததை அடுத்து ஏப்ரல்—ஜூன் 1998 காலகட்டத்தில் 1600 மெ.டன்கள் மணிலா பயிறு கொள்முதல் செய்யப்பட்டு, ஆலையில் அரைக்கப்பட்டு சிறந்த தரமிக்க கடலை எண்ணெய் 600 மெ.டன் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு இலாபகரமாக விற்பனை செய்யப்பட்டது. இந்த இலாபகரமான மாதிரி ஓட்டத்தைத் தொடர்ந்து டான்காப், கரீப் 1998—99 மற்றும் ரபி 1999 பருவத்திலும் கடலை எண்ணெயைத் தொடர்ந்து உற்பத்தி செய்து,

[2001 செப்டம்பர் 4

இவ்வகையில் ஒன்றரை வருட குறுகிய காலகட்டத்தில் இந்த இணையமானது கடலை எண்ணெயை மீண்டும் நுகர்வோர் விற்பனைக்காக அறிமுகம் செய்து வெற்றி கண்டது.

6. 1998—99 ஆம் ஆண்டில் கடலை எண்ணெயிலும், சூரியகாந்தி எண்ணெயிலும் புதிய வணிகப் பெயர்களில் ஒரு லிட்டர் சிப்பத்திலும், 15 கிலோ டின்களிலும் நுகர்வோர் சந்தைக்கு அறிமுகம் செய்தது. வடித்தெடுக்கப்பட்ட கடலை எண்ணெயினையும், சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெயினையும், “சுவை” என்ற வணிகப் பெயரில் மீண்டும் வெளியிட்டது. சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் “சந்தோஷ்” என்ற வணிகப் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டது. பாமாலினைத் தவிர டான்காப்பின் எண்ணெய் வகைகள் அனைத்துமே அக்மார்க் முத்திரையின்கீழ் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

7. இந்த இணையமானது சமையல் எண்ணெய் வகைகளை விரிவாக்கும் நோக்கத்துடன் 1999—2000 ஆண்டினபோது அக்மார்க் தரமுடைய நல்லெண்ணெயை “சந்தோஷ்” என்ற விற்பனைப் பெயருடன் அறிமுகம் செய்தது. இந்த நல்லெண்ணெய் மொத்த விற்பனையின் அடிப்படையில் கோயில்கள் போன்ற மொத்த வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

8. டான்காப் தன் வசமிருக்கும் அனைத்து கட்டுமான வசதிகளின் உபயோகத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் சிப்பமிடும் வசதிகள், தேவைக்கு அதிகமாக உள்ள எண்ணெய்க் கிடங்குகள், மணிலா விதைக் கிடங்குகள் ஆகியவற்றை வாடகைக்கு விட்டு வருகிறது.

விற்பனை

9. 2000—2001 ஆம் ஆண்டில் (மார்ச் 2001 வரை) நுகர்வோர் விற்பனை, மொத்த விற்பனை எண்ணெய்வித்து விதைகள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனை, வாடகை ஆகியவற்றின் மூலமாக ஏற்பட்ட மொத்த விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



2001 செப்டம்பர் 4]

(அளவு—மெட்ரிக் டன்னில், ரூபாய்—இலட்சத்தில்)

| வ. எண் | விவரம் | இலக்கு | | சாதனை | | திட்டம் 2001—02 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு | நிதி | அளவு | நிதி | அளவு | நிதி |
| அ | சில்லரை விற்பனை | | | | | | |
| 1 | கடலை எண்ணெய் | 235.00 | 94.00 | 138.85 | 57.88 | 200.00 | 66.00 |
| 2 | சூரியகாந்தி எண்ணெய் | 1200.00 | 336.00 | 412.98 | 129.82 | 800.00 | 280.00 |
| 3 | நல்லெண்ணெய் | 190.00 | 77.90 | 66.98 | 29.91 | 65.00 | 24.05 |
| 4 | பாமாயில் | 2540.00 | 609.60 | 817.62 | 211.39 | 2500.00 | 575.00 |
| 5 | தேங்காய் எண்ணெய் | 205.00 | 92.25 | 79.33 | 37.030 | 50.00 | 17.50 |
| 6 | தளர்படுத்தி எடுக்கப்பட்ட மணிலா | 10.00 | 2.50 | - | - | - | - |
| 7 | ஆமணக்கு எண்ணெய் | 37.00 | 16.65 | 6.32 | 2.90 | 10.00 | 3.30 |
| ஆ | மொத்த விற்பனை | | | | | | |
| 1 | கடலை எண்ணெய் | 350.00 | 140.00 | 166.71 | 66.35 | | |
| 2 | பாமாலின் | 1800.00 | 441.00 | 1910.36 | 431.22 | 1800.00 | 414.00 |
| 3 | பிண்ணாக்கு | 1440.00 | 104.10 | 466.78 | 49.27 | 500.00 | 42.50 |
| | மொத்தம் | | 1914.00 | | 1015.77 | | 1422.35 |

எண்ணெய்வித்து உற்பத்திப் பெருக்குத் திட்டம்

10. மத்திய அரசின் எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின் ஒரு பகுதியை டான்காப் தன் திட்டப் பகுதிகளில் செயல்படுத்தி வருகிறது. 2000—2001 ஆண்டில், பல்வேறு இடுபொருட்களை திட்டப் பகுதிக்கும் (சங்கங்கள் மூலமாக) மற்றும் பிற மாவட்டங்களுக்கும் வழங்குவதற்காக அரசு ரூ.233.900 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தின் மூலமாக இடுபொருட்கள் விநியோகம் (ஜிப்சம், விதை நேர்த்தி மருந்து மற்றும் வல்லுநர் விதைகள் உட்பட) குறியீடு மற்றும் சாதனை 31.5.2001 முடிய கீழே தரப்பட்டுள்ளது.

(நிதி ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | விவரம் | இலக்கு | | சாதனை | | திட்டம் 01—02 |
|---|---|---|---|---|---|---|
| | | அளவு | நிதி | அளவு | நிதி | நிதி |
| | வேளாண்மைத் துறைக்கு இடுபொருள் விநியோகம் | | | | | |
| 1 | ஜிப்சம் (மெ.டன்) | 14239 | 135.000 | 14377 | 134.950 | 200.00 |
| 2 | வேர்ப்புழு கட்டுப்படுத்தல் | - | - | - | - | 15.00 |
| 3 | விதை நேர்த்தி மருந்து | 18.000 | 18.00 | - | 18.00 | 30.00 |
| | | | | | | 50.00 |
| 4 | சிறுதளை | - | - | - | - | 10.00 |
| 5 | இனக்கவர்ச்சிப் பொறி | - | - | - | - | 5.00 |
| 6 | பயிர்ப் பாதுகாப்புக் கருவி | - | - | - | - | |

[2001 செப்டம்பர் 4

| வ. எண் | விவரம் | இலக்கு அளவு | இலக்கு நிதி | சாதனை அளவு | சாதனை நிதி | திட்டம் 01—02 நிதி |
|---|---|---|---|---|---|---|
| 7 | பண்ணைக் கருவி | - | - | - | - | 10.00 |
| | கூடுதல் | | 153.000 | | 152.950 | 320.00 |
| | டான்காப் விவசாயிகளின் இடுபொருள் விநியோகம் | | | | | |
| | அ. விதை பொருட்களுக்கு | | | | | |
| 1 | வல்லுநர் விதைகொள்முதல் | 87 | 1.300 | 245.2 | 4.770 | 6.000 |
| 2 | ஆதார விதை உற்பத்தி | 400 | 2.000 | 1152.5 | 5.520 | 7.500 |
| 3 | விதை கிராமம் | 1000 | 5.000 | 704.6 | 3.360 | 7.500 |
| 4 | சான்று விதை விநியோகம் | 1713 | 13.700 | 1270 | 7.140 | 9.000 |
| 5 | உண்மை விதை விநியோகம் | - | - | 327.56 | 1.330 | 8.000 |
| 6 | மினி கிட் விநியோகம் | - | - | - | - | 20.000 |
| | விதையில்லாப் பொருட்கள் | | | | | |
| 1 | பெருவிளக்கப் பண்ணை | 400 | 8.000 | 787 | 7.960 | 10.000 |
| 2 | விதை நேர்த்தி மருந்து (எக்) | 2000 | 2.000 | 3470 | 2.680 | 15.000 |
| 3 | ஜிப்சம்(மெ.டன்) | 3575 | 35.000 | 3545 | 34.290 | 70.000 |
| 4 | விவசாயிகளுக்குப் பயிற்சி (எண்) | 3300 | 9.900 | 3300 | .9.900 | 15.000 |
| 5 | பயிர்ப் பாதுகாப்புக் கருவி(எ) | 214 | 3.000 | 278 | 3.000 | 5.000 |
| 6 | பண்ணைக் கருவிகள்(எண்) | 50 | 1.000 | 517 | 1.000 | - |
| | மொத்தம் | | 80.900 | | 80.95 | 180.500 |
| | ஆக மொத்தம் | | 233.900 | | 233.900 | 500.500 |

## ஆதரவு விலைத் திட்டம்

11. மத்திய அரசின் ஆதரவு விலைத் திட்டத்தின் கீழ் எண்ணெய்வித்துகள் கொள்முதல் செய்வதற்கு முகவராகச் செயல்பட டான்காப் நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்விணையத்திற்குச் சொந்தமான இரு ஆலைகளும் சோதனை ஓட்டத்திற்குப் பிறகு 2 ஆண்டுகள் இயங்காமல் உள்ளன. டான்காப் நிறுவனத்தின் வருமானத்தை அதிகப்படுத்தவும் ஆலைகளை இயக்கவும் கொப்பரைத் தேங்காயைப் பதப்படுத்துவதற்கு நாபார்ட்—ஐ அணுகியதில் அந்நிறுவனம் கருத்துருவை ஏற்று, ஏப்ரல் 2001 முதல் கொப்பரைத் தேங்காய்



2001 செப்டம்பர் 4]

அரைக்கப்பட்டு எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது. 2001—2002 ஆம் ஆண்டில் டான்காப் நிறுவனம் 25,000 டன் கொப்பரைத் தேங்காயை அரைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இ.தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (டி.என்.ஏ.ஐ.)

தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

அ) வேளாண்மை வளர்ச்சி பெறச் செய்யவும், நவீனமயமாக்க உதவும் பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்தல், நிறுவுதல், தானே நிறுவி நடத்துதல்.

ஆ) வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்.

இ) மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளை விரைவில் வளர்ச்சி பெற ஊக்குவித்தல்.

2) இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 498.15 இலட்சமாகும். இதில் மத்திய அரசு ரூபாய் 165 இலட்சம், தமிழ்நாடு அரசு ரூபாய் 333.15 இலட்சம் தங்களின் பங்கு மூலதனமாக அளித்துள்ளன.

3) இந்நோக்கங்களைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, இந்நிறுவனம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

அ) சூரியகாந்தி எண்ணெய், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் மீன்பிடி வலைகள் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்து பெருமளவில் விற்பனை செய்வது

ஆ) உரங்கள், விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்களைப் பெருமளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வது.

### உற்பத்திப் பிரிவு

### 3.1 பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் ஆலை, அம்பத்தூர்

இக்கழகம் 1976 ஆம் ஆண்டு அம்பத்தூரில் நிறுவப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பு ஆலை மூலம் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

[2001 செப்டம்பர் 4

இந்த ஆலையின் மூலதனச் செலவு ரூபாய் 34 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 1000 லிட்டர் திரவ மருந்துகளைத் தயாரிக்கும் திறன் கொண்டது. கீழே குறிப்பிட்டுள்ள திரவ பூச்சிக்கொல்லி மருந்துகளை இந்த ஆலை உற்பத்தி செய்கிறது.

திரவ மருந்து

| | | |
|---|---|---|
| அ) | சைபர்மெத்ரின் | 10% இ.சி. |
| ஆ) | பாஸ்போமிடான் | 86% இ.சி. |
| இ) | என்டோசல்பான் | 35% இ.சி. |
| ஈ) | குனால்பாஸ் | 25% இ.சி. |
| உ) | மானோகுரோட்டோபாஸ் | 36% இ.சி. |
| ஊ) | குளோரோபைரிபாஸ் | 20% இ.சி. |
| எ) | பென்வலரேட் | 25% இ.சி. |
| ஏ) | அஸாடிரக்டின் (வேப்பெண்ணெய் சார்ந்தது) | 0.03% |
| ஐ) | மெதைல் பார்த்தியான் | 50% இ.சி. |
| ஒ) | புடோகுளோர் | 50% இ.சி. |
| ஓ) | டைமெத்தியேட் | 30% இ.சி. |
| ஔ) | டைகுளோராவாஸ் | 76% இ.சி. |
| ஃ) | மாலத்தியான் | 50% இ.சி. |

இந்தப் பிரிவின் கடந்த ஐந்து ஆண்டுகால நடவடிக்கை மற்றும் 2001—2002க்கான இலக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அளவு லிட்டரில்)

| விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 148290 | 197800 | 215582 | 218408 | 25340 | 240000 |
| விற்பனை | 152925 | 196948 | 215955 | 210042 | 24212 | 240000 |
| மதிப்பு( ரூபாய் இலட்சத்தில்) | 334.31 | 382.44 | 395.53 | 350.23 | 34.55 | 511.52 |



2001 செப்டம்பர் 4]

3.2 மீன்பிடி வலை பிரிவு, கிண்டி

மீனவர்களுக்கு தேவையான மீன்பிடி வலைகளைத் தயாரிக்க இப்பிரிவு தொடங்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 60 மெ. டன் மீன்பிடி வலைகள் தயாரிக்கும் திறன் கொண்டது.

இந்தப் பிரிவின் கடந்த ஐந்து ஆண்டு கால நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(மெ. டன்களில்)

| விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 21 | 22 | 31 | 25 | 8 | - |
| விற்பனை | 25 | 26 | 32 | 24 | 8 | - |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 43.02 | 46.12 | 50.73 | 38.36 | 10.11 | - |

இந்தத் தொழிற்சாலை லாபகரமாக இயங்காத காரணத்தால் தமிழக அரசு, ஆணை எண் 313, தேதி 10.8.2000ன்படி இவ்வாலையை மூடுவதற்காக உத்தரவிட்டுள்ளது. அதன்படி தளவாடங்கள் மற்றும் இயந்திரங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக 2001—2002 ஆண்டிற்கான இலக்கு இந்த ஆலைக்கு நிர்ணயிக்கப்படவில்லை.

3.3 சூரியகாந்தி எண்ணெய் ஆலை, போச்சம்பள்ளி

இக்கழகம் 1978 ஆம் ஆண்டு பின்தங்கிய மாவட்டமான தருமபுரியில் உள்ள போச்சம்பள்ளி என்ற இடத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியது. இந்த ஆலையின் மூலதனச் செலவு ரூ.236 இலட்சமாகும். இந்த ஆலை நாளொன்றுக்கு 50 டன் சூரியகாந்தி விதையைப் பிழிந்து எண்ணெய் எடுக்கவும், 40 டன் சூரியகாந்தி புண்ணாக்கிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கவும், 20 டன் கச்சா சூரியகாந்தி எண்ணெயை சுத்திகரிக்கவும் திறன் கொண்டது. இந்த ஆலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் சனோலா என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் துணை உற்பத்திப் பொருளாகிய எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்ட

புண்ணாக்கு கோழி மற்றும் கால்நடை உணவுப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க தாய் நிறுவனம் சூரியகாந்தி விதையை முறையாக விவசாயிகளிடமிருந்து நேரடியாக நல்ல விலை கொடுத்து கொள்முதல் செய்கிறது.

சூரியகாந்தி எண்ணெய் விற்பனையை அதிகரிக்கும்பொருட்டு இக்கழகம், மொத்த விற்பனையாளர்களை வட மாநிலங்களிலும் புதுடில்லியிலும் நியமனம் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவர்களின் நியமனம் ஆகஸ்ட் 2001க்குள் உறுதி செய்யப்படும்.

இந்தப் பிரிவின் கடந்த ஐந்து ஆண்டு கால நடவடிக்கைகள் மற்றும் 2001—2002 ஆண்டுக்கான இலக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(மெ. டன்களில்)

| விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | | | | | | |
| பிழிதல் | 5731 | 7450 | 6680 | 4789 | 2945 | 6100 |
| சுத்திகரித்தல் | 3033 | 3081 | 3016 | 2260 | 1944 | 4700 |
| கரைமத்தில் பிழிந்தெடுத்தல் | 4880 | 4628 | 4059 | 2977 | 1719 | 4500 |
| விற்பனை | | | | | | |
| சனோலா | 3204 | 3387 | 2955 | 2353 | 1903 | 4500 |
| உபபொருட்கள் | 2377 | 4101 | 4708 | 3019 | 2109 | 3263 |
| விற்பனைமதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 1590.71 | 1767.08 | 1932.75 | 1348.97 | 975.90 | 2602.94 |

*3.4 விற்பனைப் பிரிவு*

**அ) வேளாண்கருவிகள் விற்பனை**

இக்கழகம் பிரசித்தி பெற்ற அனைத்து வகை டிராக்டர்கள் மற்றும் விசை உழுகருவிகள் விற்பனை செய்யும் உரிமம் பெற்றுள்ளது. கேஜ்வீல்ஸ், டயர், டியூப், பாட்டரிகள் போன்ற விவசாயக் கருவிகள் இக்கழகத்தின்





பல்வேறு வட்டார நிலையங்களிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இக்கழகத்திற்கு தமிழ்நாடு முழுவதிலும் 9 வட்டார மையங்களும், 16 விற்பனை கூடங்களும் உள்ளன.

இந்தப் பிரிவின் கடந்த 5 ஆண்டுகால நடவடிக்கைகள் மற்றும் 2001—2002 ஆம் ஆண்டுக்கான இலக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(மெ. டன்களில்)

| விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|---|
| டிராக்டர்கள் பவர் டில்லர்கள் | 952 | 1664 | 1508 | 1788 | 1435 | 1805 |
| மதிப்பு ரூபாய் இலட்சத்தில் | 1091.84 | 1930.19 | 1692.34 | 1740.39 | 1554.29 | 2154.86 |
| உதிரி பாகங்கள் முதலியன ரூபாய் இலட்சத்தில் | 729.14 | 673.07 | 826.92 | 748.19 | 944.03 | 1197.60 |

**ஆ) விவசாயத்திற்கு இயந்திர உபகரணங்களை விவசாயிகள் பயன்படுத்த ஊக்குவித்தல், சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் சிறிய டிராக்டர்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (மத்திய நிதித் திட்டத்திலிருந்து)**

*(i) மானிய விலையில் பவர்டில்லர் வழங்குதல்*

அரசு ஆணை எண் 472 வேளாண் (வ & தி) பிரிவு தேதி 27.12.2000ன்படி திமுக அரசு 2000—2001ல் பவர்டில்லர் ஒன்றுக்கு ரூபாய் 30,000 மானிய தொகை அடிப்படையில் 1200 பவர்டில்லர்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கிட ரூபாய் 360 இலட்சம் இக்கழகத்துக்கு அளித்துள்ளது. 2000—2001 ஆம் ஆண்டில் 800 பவர்டில்லர்கள் வழங்க ரூபாய் 240 இலட்சம் முதல் கட்டமாக அனுமதி வழங்கி உள்ளது. இக்கழகம் 785 பவர் டில்லர்களை இதுவரை விநியோகித்து ரூபாய் 235.50 இலட்சம் மானிய தொகையை செலவு செய்துள்ளது. மீதமுள்ள 15 பவர்டில்லர்கள் 31—8—2001க்குள் விநியோகிக்கப்படும், மீதமுள்ள 400 பவர்டில்லர்களை இந்த வருடத்தில் அரசிடமிருந்து மானிய பணம் வந்தவுடன் வழங்கப்படும்.

[2001 செப்டம்பர் 4

### (ii) மானிய விலையில் டிராக்டர்கள் வழங்குதல்

30 குதிரை சக்தி திறன் கொண்ட 100 சிறு டிராக்டர்கள், ஒரு டிராக்டருக்கு ரூபாய் 30,000/— மானிய தொகை அடிப்படையில் சிறு விவசாயிகளுக்கு வழங்கிட தமிழக அரசு ரூ.30 இலட்சம் (தமிழ்நாடு அரசு ஆணை எண் 472, வேளாண்மை (வ & தி) பிரிவு, நாள் 27.12.2000ன்படி) வழங்கியுள்ளது. இதுநாள் வரை அரசு ரூபாய் 19.80 இலட்சம் மட்டுமே 66 டிராக்டர்கள் சப்ளை செய்ய மானியம் வழங்கியுள்ளது. இக்கழகம் இதுவரை 15 டிராக்டர்கள் வழங்கியுள்ளது. மற்ற பயனாளிகளை இனம் கண்டவுடன் வேளாண் இணை இயக்குநர்களின் பரிந்துரைப்படி மீதமுள்ள டிராக்டர்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

### (iii) மானிய விலையில் கதிர் அடிக்கும் இயந்திரம்

கதிர் அடிக்கும் இயந்திரம் ரூபாய் 10,000/— மானிய தொகை அடிப்படையில் வழங்க தமிழக அரசு ரூபாய் 10 இலட்சம் (தமிழ்நாடு அரசு ஆணை எண் 472, வேளாண்மை (வ & தி) பிரிவு, நாள் 27.12.2000ன்படி) வழங்க ஆணையிட்டுள்ளது. இதில் அரசு ரூபாய் 6.60 இலட்சம் மட்டுமே 66 கதிர் அடிக்கும் இயந்திரங்களை வழங்க மானியம் வழங்கியுள்ளது. இக்கழகம் இதுவரை 18 கதிர் அடிக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளது. மீதமுள்ளவற்றை, பயனாளிகளை இனங்கண்டவுடன், வேளாண் இணை இயக்குநர்கள் பரிந்துரைப்படி வழங்கப்படும்.

### (iv) மானிய விலையில் நெல் நாற்று நடும் இயந்திரம்

விவசாயிகளுக்கு நாற்று நடும் இயந்திரம் ரூ.30,000/— மானிய தொகை அடிப்படையில் வழங்க தமிழக அரசு ரூபாய் 7.50 இலட்சம் (தமிழ்நாடு அரசு ஆணை எண் 472, வேளாண்மை (வ & தி) பிரிவு, நாள் 27.12.2000ன்படி) வழங்க ஆணையிட்டுள்ளது. அரசு இதுவரை ரூபாய் 4.80 இலட்சம் மட்டுமே 16 இயந்திரங்களை வழங்கிட மானியம் அளித்துள்ளது. இக்கழகம் இதுவரை 6 இயந்திரங்களை விநியோகித்துள்ளது. மீதமுள்ள இயந்திரங்கள் பயனாளிகளை இனங்கண்டவுடன் வழங்கப்படும்.

### (v) 25 சதவிகித மானிய விலையில் விவசாயிகளுக்கு சிங் சல்பேட் உரங்கள் வழங்குதல்

தமிழக அரசு ஆணை எண் 127, எ.பி.3, விவசாயம், நாள் 2.5.2000—ன்படி 25 சதவிகிதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு சிங் சல்பேட் உரம் வழங்கிட ரூபாய் 31.25 இலட்சம் மானிய தொகையாக



2001 செப்டம்பர் 4]

இக்கழகத்திற்கு வழங்கியுள்ளது. இக்கழகம் 2000—2001 ஆம் ஆண்டில் ரூபாய் 129.86 இலட்சம் பெறுமான 625 மெ.டன் சிங் சல்பேட் உரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கி இத்திட்டத்தை நல்லபடியாக அமல் செய்துள்ளது.

### (இ) உர விற்பனை

தாய் நிறுவனம் பல்வேறு பிரசித்தி பெற்ற உரங்களை விற்பனை செய்து வருகிறது.

இந்தப் பிரிவில் கடந்த ஐந்து ஆண்டுகால நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(மெ.டன்களில்)

| விவரம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை | 8182 | 9112 | 16269 | 6309 | 625 | - |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 326.99 | 384.49 | 712.28 | 277.79 | 130.00 | - |

உற்பத்தியாளர்களே குறைந்த விலையில் நேரடியாக விற்பனை செய்வதால் இக்கழகத்தால் அவர்களுடன் போட்டியிட முடியவில்லை. எனவே, ஏப்ரல் 2000லிருந்து இந்த விற்பனை நடவடிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டது.

### 4. உணவு பதப்படுத்தும் பிரிவு

தமிழ்நாடு அரசு தமிழ்நாடு வேளாண்மை தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தை மாநில அளவில், மாநில அளவிலான பதப்படுத்தப்பட்ட உணவு வகை தொழில் வளாகத்தை மேம்படுத்துவதற்கான செயல்முறை திட்டங்களை எடுத்துரைத்து ஊக்குவிக்கும் நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.

இது சம்பந்தமாக இக்கழகத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

(அ) தொழில் முனைவோரின் திட்டங்களுக்கு சரி ஒப்புரவு பங்குத்தொகை முதலீடு செய்து நிதி உதவி வழங்குதல்

(ஆ) உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான பல்வேறு மானிய உதவித் தொகையை தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு கிடைக்கச் செய்தல்

(இ) தொழில் முனைவோர்களுக்கு அத்தியாவசியமான பயிற்சித் திட்டங்களை அளித்து திட்டங்களை செயல்படுத்துவதற்கும், வளர்ச்சிக்கும் ஆவன செய்தல்

(ஈ) இக்கழகத்தினால் உணவு பதப்படுத்தும் பிரிவில் இணை பிரிவின்கீழ் திட்டங்கள் தொடங்குவதற்கு 11 விழுக்காடு சரி ஒப்புரவு தொகையை அரசிடமிருந்து பெற்று முதலீடு செய்து அத்திட்டத்தில் பங்கு பெறுதல். கடந்த ஐந்து வருடங்களில் இக்கழகம் கீழ்க்கண்ட திட்டங்களில் 11 விழுக்காடு சரி ஒப்புரவு தொகையாக வழங்கி திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

| வ என் | தொழில் முனைவோரின் பெயர் | தொழில்கள் வகை | திட்டத்தின் மதிப்பு (இல. ரூ) | தாயின் சரிஒப்புரவு பங்கு(இல.ரூ) |
|---|---|---|---|---|
| 1 | மெஸர்ஸ் டேன்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட். | பூச்சிக்கொல்லி ரசாயனமூலப் பொருட்கள் உற்பத்தி | 1250.30 | 9.90 |
| 2 | மெஸர்ஸ் இண்டஸ் புளோரா பேஸ் லிமிடெட் | பூப்பண்ணை (உதிரிப் பூக்கள் ஏற்றுமதி) | 232.34 | 11.00 |
| 3 | மெஸர்ஸ் டச்ராமா அக்ரோபுட்ஸ் லிமிடெட் | காளான் உற்பத்தி | 1650.00 | 40.00 |
| 4 | மெஸர்ஸ் சச்சின் ப்ளோரிடெக் லிமிடெட் | பூப்பண்ணை (உதிரிப் பூக்கள் ஏற்றுமதி) | 930.00 | 52.25 |
| 5 | மெஸர்ஸ் போசிராஜு ப்ளோரிடெக் லிமிடெட் | பூப்பண்ணை (உதிரிப் பூக்கள் ஏற்றுமதி) | 1159.00 | 25.83 |
| 6 | மெஸர்ஸ் சன்பிளாசம் ப்ளோரிடெக் லிமிடெட். | பூப்பண்ணை (உதிரிப் பூக்கள் ஏற்றுமதி) | 585.00 | 20.00 |
| 7 | மெஸர்ஸ் நெக்டர் பயோடெக் லிமிடெட் | இயற்கைப் பூச்சிக் கொல்லி (வேப்ப எண்ணெய் மூலப் பொருட்கள்) | 1077.15 | 22.00 |
| | மொத்தம் | | 6883.79 | 180.98 |

**5. அபீடாவின் நடைமுறை அலுவலகம், சென்னை**

அபீடாவின் நடைமுறை அலுவலகம் சென்னையில் இக்கழகத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ளது. அபீடா நிறுவனம் தமிழ்நாட்டில் தங்களுடைய நடைமுறை அலுவலகம் ஒன்றை தாய் நிறுவனத்தில்



அமைத்துள்ளது. அதன்மூலம் விவசாய உற்பத்தி பொருட்களின் சமீபத்திய நிலைமை உலக அளவிலான வழங்குதல் மற்றும் தேவை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உற்பத்தி பொருட்களை வழங்குவதற்கான வழிமுறைகள் போன்ற விவரங்களை அளிக்கும். சென்னையில் இந் நடைமுறை அலுவலகம் திறந்ததனால் தொழில் முனைவோர்க உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், பெங்களூருக்கோ, ஐதராபாத்துக்கோ செல்லாமல், ஏற்றுமதிக்கான தற்போதைய விவரங்கள் மற்றும் எந்தெந்த நாடுகளில் விற்பனை செய்யலாம் என்ற விவரங்களை பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டிலுள்ள தொழில் முனைவோர்களுக்கு, தொழிலை மேம்படுத்துவோர் ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்ய இந்த புதிதாக திறக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**6. மாவட்டங்களில் இயக்கப்படும் தாய் நிறுவனத்தின் வட்டார அலுவலகங்களில் கணிப்பொறி அமைத்தல்**

புதுடெல்லியிலுள்ள மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகம் தாய் நிறுவன மண்டல அலுவலகங்களில் கணிப்பொறிகளை அமைத்து தேவையான தகவல்களை விரைவில் பெற்று உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை விரைவில் நிறுவிட ரூ.5.88 இலட்சங்களை வழங்கியுள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு வழங்கிய இந்நிதியை உபயோகப்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள தனது 5 மண்டல அலுவ்லகங்களில் கணிப்பொறி வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கணிப்பொறிகளை உபயோகித்து விவரங்களை அறிந்து உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவிட இக்கழகம் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**7. விற்பனை அளவு**

2000—2001 ஆம் ஆண்டு இக்கழகத்தின் மொத்த விற்பனை ரூபாய் 36 கோடியாகும். 2001—2002 ஆம் ஆண்டில் மொத்த விற்பனை ரூபாய் 65 கோடியாக இருக்குமென திட்டமிடப்பட்டுள்ளது.

ஈ. தமிழ் நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் (டேன்ஹோப்)

1. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம், தொடக்க கூட்டுறவு சங்கமாக தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டம் 1983ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 18—1—1995 முதல் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறையினைச் சார்ந்த கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ஒருவர் தனி அலுவலராகச் செயல்பட்டு வருகிறார்.

2. சங்க துணை விதிகளின்படி இக்கூட்டுறவு சங்கத்தின் தலையாய நோக்கம், தோட்டக்கலைப் பயிர்களின் அபிவிருத்தி மற்றும் தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்குத் தேவையான இடுபொருட்கள், போக்குவரத்து வாகன வசதிகள் ஏற்படுத்துதல், குளிர்பதன கிடங்கு வசதிகள் மற்றும் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்குத் தேவையான சந்தை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதாகும். இச்சங்கம் தோட்டக்கலைத் துறைக்கென செயல்படும் ஒரு கூட்டுறவு சங்கமாகும். இச்சங்கமானது தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களுக்கும் தேவையான இடுபொருட்களை வழங்கி வருகிறது.

3. சங்கத்தில் தற்பொழுது 3685 பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். அவர்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.05 இலட்சமாக உள்ளது. சங்கம் 1997—98ல் ரூ.39.58 இலட்ச மதிப்பிலும், 1998—99ல் ரூ.85.86 இலட்சமும், 1999—2000ல் ரூ.105.29 இலட்சமும், 2000—2001ல் ரூ.36.19 இலட்சம் மதிப்பிற்கும் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

4. தற்பொழுது இச்சங்கம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக கடனுதவியுடன் தமிழ்நாட்டில் ரூ.470 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து மலர்கள், காய்கறி மற்றும் பழங்களை அவர்களது நிலத்திலிருந்தே கொள்முதல் செய்து இடைத்தரகர்களைத் தவிர்த்து நியாயமான விலையில் நுகர்வோருக்கு கிடைக்கச் செய்வதாகும். இத்திட்டத்தின்கீழ் அரசின் பங்களிப்புத் தொகையாக ரூ.188.00 இலட்சம் பெறப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



படப்பையிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரத்திலும், சேலம் மாவட்டத்தில் ஒரு கொள்முதல் மையம் உள்பட மொத்தம் மூன்று கொள்முதல் மையங்கள் செயல்பட்டு வருகிறது. இவற்றில் படப்பை மற்றும் ஒட்டன்சத்திரம் கொள்முதல் மையங்களில் ரூ.13.14 இலட்சம் மதிப்பில் உள்நுழை குளிர்பதன அறைகள் அமைக்கப்பட்டு விரைவில் செயல்பட உள்ளது. சென்னை, திண்டுக்கல், சேலம் மாவட்டங்களில் இதுகாறும் 17 சில்லரை விற்பனை அங்காடிகள் அமைக்கப்பட்டு காய்கறிகள், கனிகள், நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. (இத்திட்டத்தின்கீழ் 30—4—2001 முடியவுள்ள சாதனை அறிக்கை இணைப்பு (1)ல் அளிக்கப்பட்டுள்ளது.)

6. நடப்பு நிதியாண்டில் (2001—2002) இந்நிறுவனம் பின்வரும் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

1. சென்னை, திண்டுக்கல், சேலம் மாவட்டங்களில் 20 சில்லரை விற்பனை அங்காடிகள் தொடங்குதல் மற்றும் கொள்முதல் மையங்கள் அமைத்தல்.

2. ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்பதன அறையுடன் கூடிய நடமாடும் வேன் மூலம் மக்கள் பெருமளவில் கூடுமிடங்களில் மற்றும் இரயில் நிலையங்களில் நுகர்வோருக்கு குறைந்த விலையில் காய்கறிகள் விநியோகம்.

3.தருமபுரி மாவட்டத்தில் ஓசூரில் ஒரு கொள்முதல் மையம் ஏற்படுத்தி மலைக்காய்கறிகள் மற்றும் கனிகளைக் கொள்முதல் செய்து பிற கொள்முதல் மையங்கள்/சில்லரை விற்பனை அங்காடிகள் மூலம் விநியோகம்.

4. சென்னையில் காய்கறிகள்/கனிகள் தோட்டக்கலை விவசாயிகளின் விளை பொருட்களை விற்பனை செய்திட சூப்பர் மார்கெட் அமைத்தல்.

5. விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பில் பல்வகை பழரச உற்பத்தி அலகு அமைத்தல்.

6. மேற்காணும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கொள்முதல் மையங்களும், சில்லரை விற்பனை அங்காடிகளும் நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. டேன்ஹோப் — ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை 30—4—2001 முடிய

[2001 செப்டம்பர் 4

| வ. எண் | பொருள் | | செயல் இலக்கு | செயல் சாதனை | நிதி (இலட்சங்களில்) இலக்கு | நிதி (இலட்சங்களில்) சாதனை |
|---|---|---|---|---|---|---|
| 1 | சில்லரை விற்பனை அங்காடி | அ சென்னை<br>ஆ திண்டுக்கல்<br>இ சேலம்<br>மொத்தம் | 56<br>7<br>12<br>75 | 7<br>3<br>7<br>17 | 67.20<br>8.40<br>14.40<br>90.00 | 14.59 |
| 2 | கொள்முதல் மையம் | அ சென்னை<br>ஆ திண்டுக்கல்<br>இ சேலம்<br>மொத்தம் | 4<br>3<br>3<br>10 | | 32.00<br>24.00<br>24.00<br>80.00 | |
| அ | கொள்முதல் மையம் உள்நுழை குளிர்பதன கருவியுடன் | அ சென்னை<br>ஆ திண்டுக்கல்<br>இ சேலம்<br>மொத்தம் | 2<br>1<br>1<br>4 | 1<br>1<br>-<br>2 | 40.00<br>20.00<br>20.00<br>80.00 | 20.05 |
| 3 | போக்குவரத்து வாகனங்கள் | அ சென்னை<br>ஆ திண்டுக்கல்<br>இ சேலம்<br>மொத்தம் | 10<br>4<br>4<br>18 | 1<br>1<br>1<br>3 | 50.00<br>20.00<br>20.00<br>90.00 | 13.11 |
| 4 | பல்வகை பழரச உற்பத்தி அலகு (விழுப்புரம் மாவட்டம்) | | 1 | | 15.00 | 0.80 |
| 5 | வாழையை பழுக்க வைக்கும் அலகு | அ சென்னை<br>ஆ திண்டுக்கல்<br>இ சேலம்<br>மொத்தம் | 2<br>1<br>1<br>4 | | 10.00<br>5.00<br>5.00<br>20.00 | |
| 6 | விளம்பரத் தொகை | | | | 20.00 | 1.83 |
| 7 | முன் செலவினம் | | | | 45.00 | 6.82 |
| 8 | இதர செலவினம் | | | | 20.00 | 0.58 |
| 9 | கணினி | | | | 10.00 | - |
| | மொத்தம் | | | | 470.00 | 57.78 |

மே 2000 முதல் 30—4—2001 முடிய 38197 டன் காய்கறிகள், கனிகள் இந்நிறுவனம் மூலம் நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 4]

| | | | |
|---|---|---|---|
| 5 | விழுப்புரம் | 10 | மேச்சேரி |
| 1 | திண்டிவனம் | 11 | வாழப்பாடி |
| 2 | திருக்கோவிலூர் | 12 | தம்மம்பட்டி |
| 3 | உளுந்தூர்பேட்டை | 13 | நாமகிரிப்பேட்டை |
| 4 | விழுப்புரம் | 14 | தலைவாசல் |
| 5 | சின்னசேலம் | 15 | ஓமலூர் |
| 6 | கள்ளக்குறிச்சி | 16 | கடயம்பட்டி |
| 7 | செஞ்சி | 17 | கங்காவல்லி |
| 8 | தியாகதுர்க்கம் | 18 | கருமாந்துறை |
| 9 | சங்கராபுரம் | 19 | சோளக்காடு |
| 10 | திருவெண்ணெய்நல்லூர் | | |
| 11 | மணலூர்பேட்டை | 7 | தர்மபுரி |
| 12 | அவலூர்பேட்டை | 1 | தர்மபுரி |
| 13 | மரக்காணம் | 2 | கிருஷ் ணகிரி |
| 14 | விக்கிரவாண்டி | 3 | ஓசூர் |
| 15 | அனந்தபுரம் | 4 | கீழமங்கலம் |
| 16 | வாளத்தி | 5 | பாலக்கோடு |
| 17 | மூங்கில்துறைப்பட்டு | 6 | பெண்ணாகரம் |
| 18 | கிளியனூர் | 7 | போச்சம்பள்ளி |
| | | 8 | காவேரிப்பட்டினம் |
| 6 | சேலம் | 9 | உத்தங்கரை |
| 1 | சேலம் | 10 | அரூர் |
| 2 | ஆத்தூர் | 11 | பாப்பிரெட்டிப்பட்டி |
| 3 | நாமக்கல் | 12 | கொளத்தூர் |
| 4 | ராசிபுரம் | 13 | பர்கூர் |
| 5 | திருச்செங்கோடு | 14 | ராயக்கோட்டை |
| 6 | சங்ககிரி | 15 | தேன்கனிக்கோட்டை |
| 7 | கொங்கணாபுரம் | 16 | பாப்பாரப்பட்டி |
| 8 | கொளத்தூர் | | |
| 9 | வேலூர் | | |

[2001 செப்டம்பர் 4

| | | | |
|---|---|---|---|
| 8 | கோயம்புத்தூர் | 10 | கவுண்டம்பாடி |
| 1 | திருப்பூர் | 11 | கோபி |
| 2 | அவினாசி | 12 | நம்பியூர் |
| 3 | சேவூர் | 13 | வெள்ளக்கோயில் |
| 4 | அன்னூர் | 14 | சத்தியமங்கலம் |
| 5 | காரமடை | 15 | புஞ்சைபுளியம்பட்டி |
| 6 | கோயம்புத்தூர் | 16 | தாளவாடி |
| 7 | சூலூர் | 17 | பெருந்துறை |
| 8 | பல்லடம் | 18 | குன்னத்தூர் |
| 9 | உடுமலைப்பேட்டை | 19 | காங்கேயம் |
| 10 | ஆனைமலை | 20 | வெள்ளக்கோயில் |
| 11 | பொள்ளாச்சி | 21 | தாராபுரம் |
| 12 | மலையாளிப்பாளையம் | 22 | மூலனூர் |
| 13 | நெகமம் | 23 | ஆலங்கியம் |
| 14 | கிணத்துக்கடவு | 24 | முத்தூர் |
| 15 | தொண்டாமுத்தூர் | 25 | எழுமத்தூர் |
| 16 | மடத்துகுளம் | | |
| 17 | பெதப்பம்பட்டி | 10 | திருச்சி |
| 18 | பொங்கலூர் | 1 | ஜெயங்கொண்டம் |
| | | 2 | கரூர் |
| 9 | ஈரோடு | 3 | அரியலூர் |
| 1 | ஈரோடு | 4 | மணப்பாறை |
| 2 | அவள்பூந்துறை | 5 | ஆண்டிமடம் |
| 3 | கொடுமுடி | 6 | துறையூர் |
| 4 | சிவகிரி | 7 | பெரம்பலூர் |
| 5 | சித்தோடு | 8 | லால்குடி |
| 6 | பவானி | 9 | திருச்சி |
| 7 | பூதப்பாடி | 10 | தொட்டியம் |
| 8 | அந்தியூர் | 11 | மணச்சநல்லூர் |
| 9 | மயிலம்பாடி | 12 | குளித்தலை |
| | | 13 | துவரங்குறிச்சி |
| | | 14 | இரும்புதிபட்டி |
| | | 15 | சின்னதாராபுரம் |
| | | 16 | புள்ளம்பாடி |
| | | 17 | தாத்தையங்கார்பேட்டை |
| | | 18 | மேலணைக்குழி |
| | | 19 | அரும்பாவூர் |



2001 செப்டம்பர் 4]

| | | | |
|---|---|---|---|
| 11 | தஞ்சாவூர் | 12 | புதுக்கோட்டை |
| 1 | அதிராம்பட்டினம் | 1 | ஆலங்குடி |
| 2 | அம்மாபேட்டை | 2 | அறந்தாங்கி |
| 3 | பூதலூர் | 3 | புதுக்கோட்டை |
| 4 | கும்பகோணம் | 4 | கந்தர்வக்கோட்டை |
| 5 | மதுக்கூர் | 5 | ஆவுடையார்கோவில் |
| 6 | ஒரத்தநாடு | 6 | கீரனூர் |
| 7 | பட்டுக்கோட்டை | 7 | கீரமங்கலம் |
| 8 | பாபநாசம் | 8 | பொன்னமராவதி |
| 9 | பேராவூரணி | 9 | இலுப்பூர் |
| 10 | தஞ்சாவூர் | 10 | கரம்பக்குடி |
| 11 | வல்லம் | 13 | மதுரை |
| 12 | திருப்பணந்தாள் | 1 | தேனி |
| 13 | வலங்கைமான் | 2 | திண்டுக்கல் |
| 14 | பாப்பாநாடு | 3 | திருமங்கலம் |
| 15 | கீவளூர் | 4 | ஒட்டன்சத்திரம் |
| 16 | கொரடாச்சேரி | 5 | உசிலம்பட்டி |
| 17 | குத்தாலம் | 6 | பழனி |
| 18 | மன்னார்குடி | 7 | நத்தம் |
| 19 | மயிலாடுதுறை | 8 | கம்பம் |
| 20 | நாகப்பட்டினம் | 9 | வத்தலக்குண்டு |
| 21 | பூந்தோட்டம் | 10 | மேலூர் |
| 22 | செம்பனார்கோவில் | 11 | போடிநாயக்கனூர் |
| 23 | சீர்காழி | 12 | சின்னமனூர் |
| 24 | வேதாரண்யம் | 13 | மதுரை |
| 25 | வடுவூர் | 14 | கோபால்பட்டி |
| 26 | குடவாசல் | 15 | தி. கல்லுப்பட்டி |
| 27 | திருப்பூண்டி | 16 | வாடிப்பட்டி |
| 28 | திருவாரூர் | 17 | வடமதுரை |
| 29 | திருத்துறைப்பூண்டி | 18 | ஆண்டிப்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| 19 | வேடசந்தூர் | 6 | கழுகுமலை |
| 20 | உத்தமபாளையம் | 7 | தென்காசி |
| 21 | பெரியகுளம் | 8 | அம்பாசமுத்திரம் |
| 14 | இராமநாதபுரம் | 9 | வள்ளியூர் |
| 1 | விருதுநகர் | 10 | ஸ்ரீவைகுண்டம் |
| 2 | இராஜபாளையம் | 11 | திருநெல்வேலி |
| 3 | சாத்தூர் | 12 | விளாத்திகுளம் |
| 4 | அருப்புக்கோட்டை | 13 | கடையநல்லூர் |
| 5 | திருவில்லிப்புத்தூர் | 14 | திசையன்விளை |
| 6 | வத்திராயிருப்பு | 15 | பாவூர்சத்திரம் |
| 7 | வெம்பக்கோட்டை | 16 | திருவேங்கடம் |
| 8 | சிவகங்கை | 17 | எட்டையாபுரம் |
| 9 | திருபுவனம் | 18 | சிவகிரி |
| 10 | மானாமதுரை | 19 | ஆலங்குளம் |
| 11 | சிங்கம்புணரி | 16 | கன்னியாகுமரி |
| 12 | காரைக்குடி | 1 | ஈத்தாமொழி |
| 13 | இளையான்குடி | 2 | வடசேரி |
| 14 | தேவகோட்டை | 3 | களியக்காவிளை |
| 15 | இராமநாதபுரம் | 4 | திங்கள்சந்தை |
| 16 | பரமக்குடி | 5 | குலசேகரம் |
| 17 | கமுதி | 6 | தொடுவட்டி |
| 18 | திருவாடனை | | |
| 19 | இராஜசிங்கமங்கலம் | | |
| 20 | முதுகுளத்தூர் | | |
| 15 | திருநெல்வேலி | | |
| 1 | கோவில்பட்டி | | |
| 2 | சங்கரன்கோவில் | | |
| 3 | தூத்துக்குடி | | |
| 4 | புதூர் | | |
| 5 | கடம்பூர் | | |





தமிழ்நாட்டில் உள்ள அக்மார்க் ஆய்வுக்கூடங்கள் மாவட்டம் வாரியாக

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வ. எண் | அக்மார்க் ஆய்வுக்கூட இருப்பிடம் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | சென்னை (வடக்கு) |
| | | 2 | சென்னை (தெற்கு) |
| | | 3 | முதன்மை ஆய்வகம்,<br>வே.வி. இயக்குநர் அலுவலகம் |
| 2 | வேலூர் | 4 | வேலூர் |
| 3 | கடலூர் | 5 | பண்ருட்டி |
| 4 | தஞ்சாவூர் | 6 | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | 7 | திருச்சி–1 |
| | | 8 | திருச்சி–2 |
| 6 | கரூர் | 9 | கரூர் |
| 7 | மதுரை | 10 | மதுரை–1 |
| | | 11 | மதுரை–2 |
| 8 | தேனி | 12 | தேனி |
| 9 | திண்டுக்கல் | 13 | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | 14 | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | 15 | திருநெல்வேலி |
| | | 16 | தென்காசி |
| 12 | தூத்துக்குடி | 17 | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | 18 | நாகர்கோவில் |
| | | 19 | மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | 20 | சேலம் |
| 15 | தர்மபுரி | 21 | தர்மபுரி |
| 16 | கோயம்புத்தூர் | 22 | கோயம்புத்தூர் |
| | | 23 | திருப்பூர் |
| | | 24 | பல்லடம் |
| 17 | ஈரோடு | 25 | பெருந்துறை |
| | | 26 | ஈரோடு–1 |
| | | 27 | ஈரோடு–2 |
| | | 28 | காங்கேயம்–1 |
| | | 29 | காங்கேயம்–2 |
| | | 30 | வெள்ளக்கோவில் |
| | | 31 | சித்தோடு |

[2001 செப்டம்பர் 4

அக்மார்க் தரமிடுதல்

தரப்படுத்தப்படும் உணவுப் பொருள் விவரங்கள்

| வ. எண் | ஒருமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் | வ. எண் | பன்முகப்படுத்தப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|
| 1 | நல்லெண்ணெய் | 1 | அரிசி |
| 2 | கடலை எண்ணெய் | 2 | கேழ்வரகு |
| 3 | தேங்காய் எண்ணெய் | 3 | பயறு வகைகள் |
| 4 | விளக்கெண்ணெய் | 4 | உருளைக்கிழங்கு |
| 5 | பருத்திக்கொட்டை எண்ணெய் | 5 | வெல்லம் |
| 6 | சூரியகாந்தி எண்ணெய் | 6 | முட்டை |
| 7 | கடுகு எண்ணெய் | 7 | கொட்டை நீக்கிய புளி |
| 8 | நெய் | | |
| 9 | வெண்ணெய் | | |
| 10 | தேன் | | |
| 11 | மசாலாப் பொடி | | |
| 12 | கடலை மாவு | | |
| 13 | கோதுமை மாவு | | |
| 14 | ரவை | | |
| 15 | மைதா | | |
| 16 | ஜவ்வரிசி | | |
| 17 | உலர் தேங்காய்ப் பொடி | | |
| 18 | புண்ணாக்கு | | |
| 19 | பெருங்காயம் | | |
| 20 | முழு மசாலாப் பொருட்கள் | | |



2001] செப்டம்பர் 4]

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்ட மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்கள்

| வ.எண் | மாவட்டம் | வ.எண் | வ.இ.ப.தி.மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தர்மபுரி | 1 | பர்கூர் |
| | | 2 | ஒசூர் |
| | | 3 | கீழமங்கலம் |
| | | 4 | மொரப்பூர் |
| | | 5 | நல்லம்பள்ளி |
| | | 6 | ஊத்தங்கரை |
| | | 7 | பெண்ணாகரம் |
| | | 8 | சூளகிரி |
| | | 9 | தளி |
| | | 10 | வேப்பனப்பள்ளி |
| | | 11 | தர்மபுரி |
| | | 12 | பாலக்கோடு |
| | | 13 | காரமங்கலம் |
| | | 14 | மாத்தூர் |
| 2 | புதுக்கோட்டை | 1 | புதுக்கோட்டை |
| | | 2 | திருவரங்குளம் |
| | | 3 | கரம்பக்குடி |
| | | 4 | கந்தர்வகோட்டை |
| 3 | சிவகங்கை | 1 | இளையான்குடி |
| | | 2 | காளையார்கோவில் |
| | | 3 | தேவகோட்டை |
| | | 4 | கண்ணன்குடி |
| | | 5 | கல்லல் |
| | | 6 | சிங்கம்புணரி |
| | | 7 | எஸ். புதூர் |
| 4 | விருதுநகர் | 1 | சிவகாசி |
| | | 2 | சாத்தூர் |
| | | 3 | வேம்பக்கோட்டை |
| | | 4 | காரியாபட்டி |
| | | 5 | நரிகுடி |
| | | 6 | விருதுநகர் |
| | | 7 | அருப்புக்கோட்டை |

| | | |
|---|---|---|
| 5 இராமநாதபுரம் | 1 | மண்டபம் |
| | 2 | திருப்புள்ளி |
| | 3 | கடலாடி |
| | 4 | முதுகுளத்தூர் |
| | 5 | கமுதி |
| | 6 | பரமக்குடி |
| | 7 | போகலூர் |
| 6 தூத்துக்குடி | 1 | கோவில்பட்டி |
| | 2 | கயத்தார் |
| | 3 | புதூர் |
| | 4 | விளாத்திகுளம் |
| | 5 | உடன்குடி |
| | 6 | சாத்தான்குளம் |
| | 7 | ஓட்டப்பிடாரம் |
| | 8 | தூத்துக்குடி |
| 7 திருநெல்வேலி | 1 | குருவிக்குளம் |
| 8 வேலூர் | 1 | வேலூர் |
| | 2 | கணியம்பாடி |
| | 3 | திமிரி |
| | 4 | காட்பாடி |
| | 5 | ஆலங்குளம் |
| | 6 | கந்திலி |
| 9 திருவண்ணாமலை | 1 | செய்யார் |
| 10 சேலம் | 1 | நங்கவள்ளி |
| | 2 | மேச்சேரி |
| | 3 | கொங்கணாபுரம் |
| | 4 | மகுடன்சாவடி |
| | 5 | கடையாம்பட்டி |
| 11 நாமக்கல் | 1 | மல்லசமுத்திரம் |
| | 2 | எலச்சிபாளையம் |
| | 3 | புதுச்சத்திரம் |
| 12 கோயம்புத்தூர் | 1 | அன்னூர் |
| | 2 | அவினாசி |
| | 3 | பல்லடம் |
| | 4 | திருப்பூர் |
| | 5 | சூலூர் |
| 13 [illegible] | 1 | அரவக்குறிச்சி |
| | 2 | கே. பரமத்தி |
| 14 திருச்சி | 1 | துறையூர் |



| | | | |
|---|---|---|---|
| 15 | பெரம்பலூர் | 1 | ஆண்டிமடம் |
| | | 2 | அரியலூர் |
| | | 3 | செந்துறை |
| | | 4 | வேப்பூர் |
| | | 5 | ஆலத்தூர் |
| | | 6 | ஜெயங்கொண்டான் |
| 16 | திண்டுக்கல் | 1 | ஆத்தூர் |
| | | 2 | நத்தம் |
| | | 3 | கொடைக்கானல் |

**விதைப் பரிசோதனை நிலையங்கள்**

| வ. எண் | அமைவிடம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | கோவை | கோவை, ஈரோடு மற்றும் நீலகிரி |
| 2 | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 3 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 4 | தருமபுரி | தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் |
| 5 | தஞ்சை | தஞ்சை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவள்ளூர் |

...வணக் காப்பகம்
224969
சென்னை-600 008
நூலகம்

## விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | பெரிய விதை சுத்திகரிப்பு நிலையம் | நடுத்தர விதை சுத்திகரிப்பு நிலையம் | சிறிய விதை சுத்திகரிப்பு நிலையம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | | மதுராந்தகம், அச்சரப்பாக்கம், காட்டாங்கொளத்தூர் குன்றத்தூர், சித்தாமூர், திருக்கழுக்குன்றம் |
| 2 | திருவள்ளூர் | கொளந்தலூர் | | சோழவரம், மீஞ்சூர், கும்மிடிபூண்டி |
| 3 | கடலூர் | | | வண்டுராயன்பட்டு, மிராமூர் |
| 4 | விழுப்புரம் | இருவேல்பட்டு, கள்ளக்குறிச்சி | | வானூர், காக்குப்பம் |
| 5 | வேலூர் | | | கால்புதூர்,அவரைக்கரை |
| 6 | திருவண்ணாமலை | அத்தியந்தல், வரூர் | | வந்தவாசி, செய்யார், ஆரணி |
| 7 | சேலம் | மேட்டூர் அணை | | டேனிஷ்பேட்டை |
| 8 | நாமக்கல் | | | தில்லைபுரம் |
| 9 | தர்மபுரி | | காவேரிப்பட்டிணம் | பாப்பாரப்பட்டி, அரூர், ஒசூர் |
| 10 | கோயம்புத்தூர் | | | பொங்கலூர்,பாப்பான்குளம், கோயம்புத்தூர் |
| 11 | ஈரோடு | பவானி | | சத்தியமங்கலம் |
| 12 | திருச்சிராப்பள்ளி | | | மணச்சநல்லூர், நெய்க்குப்பைபுதூர் |
| 13 | கரூர் | இனுங்கூர் | | |
| 14 | பெரம்பலூர் | | | திருமானூர் |
| 15 | புதுக்கோட்டை | வம்பன்–1 | அன்னாபண்ணை2 | அன்னாபண்ணை –1, வம்பன்–2 |
| 16 | தஞ்சாவூர் | காட்டுத்தோட்டம் சாக்கோட்டை | | சாக்கோட்டை |
| 17 | நாகப்பட்டிணம் | | | செல்லூர் (சிக்கல்) நாகமங்கலம் திருக்கடையூர் சிக்கல் |
| 18 | திருவாரூர் | திருவாரூர் | | ஒரத்தூர் தியாகராஜபுரம் நெடும்பலம் காஞ்சிகுடிகாடு |
| 19 | மதுரை | சோழவந்தான் | | வினாயகபுரம்–1, வினாயகபுரம்–2 |
| 20 | தேனி | | | கீழ்கூடலூர் |
| 21 | திண்டுக்கல் | சின்னக்கலயம்புதூர் | | |
| 22 | இராமநாதபுரம் | | உத்திரகோசமங்கை | பரமக்குடி |
| 23 | சிவகங்கை | | | சிவகங்கை |
| 24 | விருதுநகர் | | | ஏ.இராமலிங்கபுரம், தேவதானம், கோபாலபுரம் |
| 25 | திருநெல்வேலி | | | அம்பாசமுத்திரம், கரையிருப்பு, தென்காசி |
| 26 | தூத்துக்குடி | கிள்ளிகுளம் | | கோவில்பட்டி |
| 27 | கன்னியாகுமரி | | | திருப்பதிசாரம் |



## மாநில தோட்டக் கலைப் பண்ணைகள்

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | மாதவரம் |
| 2 | காஞ்சிபுரம் | ஆத்தூர் |
| 3 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் |
| 4 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் |
| 5 | காஞ்சிபுரம் | மேல்ஒட்டிவாக்கம் |
| 6 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் |
| 7 | கடலூர் | நெய்வேலி |
| 8 | கடலூர் | விருத்தாச்சலம் |
| 9 | திருவண்ணாமலை | தகரக்குப்பம் |
| 10 | வேலூர் | கூடப்பட்டு |
| 11 | வேலூர் | நவ்லாக் |
| 12 | சேலம் | ஏற்காடு |
| 13 | சேலம் | கருமந்துறை |
| 14 | சேலம் | மணியார்குண்டம் |
| 15 | சேலம் | கருமந்துறை |
| 16 | சேலம் | கருமந்துறை |
| 17 | சேலம் | முள்ளுவாடி |
| 18 | சேலம் | சிறுமலை (ஆருனாத்து) |
| 19 | நாமக்கல் | செம்மேடு |
| 20 | நாமக்கல் | படசோலை |
| 21 | தர்மபுரி | திம்மபுரம் |
| 22 | தர்மபுரி | ஜீனூர் |
| 23 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி |
| 24 | கோயம்புத்தூர் | கல்லார் |

2001 செப்டம்பர் 4].

| அரசு விதைப்பண்ணைகள் | | |
|---|---|---|
| வ. எண் | இடம் | மாவட்டம் |
| 1 | கொளந்தலூர் | திருவள்ளூர் |
| 2 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 3 | அத்யேந்தல் | திருவண்ணாமலை |
| 4 | வாழவச்சனூர் | திருவண்ணாமலை |
| 5 | வானூர் | விழுப்புரம் |
| 6 | வடக்கநந்தல் | விழுப்புரம் |
| 7 | இருவேல்பட்டு | விழுப்புரம் |
| 8 | காக்குப்பம் | விழுப்புரம் |
| 9 | வண்டுராயன்பட்டு | கடலூர் |
| 10 | மிராளூர் | கடலூர் |
| 11 | டேனிஷ்பேட்டை | சேலம் |
| 12 | மேட்டூர் அணை | சேலம் |
| 13 | பாப்பாரப்பட்டி | தர்மபுரி |
| 14 | பாப்பான்குளம் | கோயம்புத்தூர் |
| 15 | பொங்கலூர் | கோயம்புத்தூர் |
| 16 | பவானி | ஈரோடு |
| 17 | சத்தியமங்கலம் | ஈரோடு |
| 18 | இனுங்கூர் | கரூர் |
| 19 | புதூர்பாளையம் | திருச்சி |
| 20 | நெய்குப்பைப்புதூர் | திருச்சி |
| 21 | அண்ணாபண்ணை | புதுக்கோட்டை |
| 22 | திருக்கடையூர் | நாகப்பட்டினம் |
| 23 | நாகமங்கலம் | நாகப்பட்டினம் |
| 24 | சிக்கல் | நாகப்பட்டினம் |
| 25 | ஒரத்தூர் | திருவாரூர் |
| 26 | நெடும்பலம் | திருவாரூர் |
| 27 | மூங்கில்குடி | திருவாரூர் |
| 28 | தியாகராஜபுரம் | திருவாரூர் |
| 29 | சக்கரமங்கலம் | திருவாரூர் |
| 30 | தீவாம்பாள்பட்டினம் | திருவாரூர் |
| 31 | கீராந்தி | திருவாரூர் |
| 32 | காஞ்சிகுடிகாடு | திருவாரூர் |
| 33 | சாக்கோட்டை | தஞ்சாவூர் |
| 34 | கீழகூடலூர் | தேனி |
| 35 | வினாயகபுரம் | மதுரை |
| 36 | தேவதானம் | விருதுநகர் |
| 37 | கரையிருப்பு | திருநெல்வேலி |
| 38 | மேலகரம் | திருநெல்வேலி |
| 39 | திருப்பதிசாரம் | கன்னியாகுமரி |

[2001 செப்டம்பர் 4

| | | |
|---|---|---|
| 25 | கரூர் | முதலைப்பட்டி |
| 26 | புதுக்கோட்டை | குடுமியான்மலை |
| 27 | புதுக்கோட்டை | வல்லதிராக்கோட்டை |
| 28 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் |
| 29 | தஞ்சாவூர் | ஆடுதுறை |
| 30 | தஞ்சாவூர் | மருங்குளம் |
| 31 | தேனி | பெரியகுளம் |
| 32 | திண்டுக்கல் | கொடைக்கானல் |
| 33 | திண்டுக்கல் | கொடைக்கானல் |
| 34 | திண்டுக்கல் | தாண்டிக்குடி |
| 35 | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் |
| 36 | திண்டுக்கல் | சிறுமலை |
| 37 | விருதுநகர் | பூவாணி |
| 38 | விருதுநகர் | திருவில்லிபுத்தூர் |
| 39 | சிவகங்கை | தேவகோட்டை |
| 40 | சிவகங்கை | நேமம் |
| 41 | நீலகிரி | பர்லியார் |
| 42 | நீலகிரி | காட்டேரி |
| 43 | நீலகிரி | குன்னூர் |
| 44 | நீலகிரி | குன்னூர் |
| 45 | நீலகிரி | குன்னூர் |
| 46 | நீலகிரி | தொட்டபெட்டா |
| 47 | நீலகிரி | தும்மனட்டி |
| 48 | நீலகிரி | விஜயநகரம் |
| 49 | நீலகிரி | உதகை |
| 50 | நீலகிரி | நஞ்சநாடு |
| 51 | நீலகிரி | தேவாலா |
| 52 | திருநெல்வேலி | குற்றாலம் |
| 53 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி |
| 54 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை |



2001 செப்டம்பர் 4]

## ஆய்வக நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | உரங்கள் பரிசோதனை நிலையம் | நடமாடும் மண் பரி சோதனை நிலையம் | மண் பரி சோதனை நிலையம் | பூச்சி மருந்து ஆய்வகம் | உயிர்உரம் தயாரிப்பு நிலையம் | நுண்ணூட்டச் சத்துக் கலவை தயாரிப்பு நிலையம் | களர் உவர் நில சீர் திருத்தத் திட்டம் | மண் வளமேம்பாடு மற்றும் நிலப் பயன்பாடு நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | | | காஞ்சிபுரம் | |
| 2 | கடலூர் | | கடலூர் | கடலூர் | கடலூர் | கடலூர் | | | |
| 3 | விழுப்புரம் | | | | | | | | |
| 4 | வேலூர் | | மேலாலத்தூர் | மேலாலத்தூர் | | | | வேலூர் | வேலூர் |
| 5 | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | சேலம் | | சேலம் | |
| 6 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | | | | கோயம்புத்தூர் |
| 7 | ஈரோடு | | ஈரோடு | ஈரோடு | ஈரோடு | | | | |
| 8 | திருச்சி | திருச்சி | திருச்சி | திருச்சி | திருச்சி | திருச்சி | | | |
| 9 | புதுக்கோட்டை | | குடுமியான்மலை | குடுமியான் மலை | | குடுமியான் மலை | குடுமியான் மலை | | |
| 10 | தஞ்சாவூர் | கும்பகோணம் | ஆடுதுறை | ஆடுதுறை | ஆடுதுறை | சாக்கோட்டை | | | தஞ்சாவூர் |
| 11 | மதுரை | மதுரை | மதுரை | மதுரை | மதுரை | | | | |
| 12 | திண்டுக்கல் | திண்டுக்கல் | | திண்டுக்கல் | | | | | |
| 13 | இராமநாதபுரம் | பரமக்குடி | பரமக்குடி | பரமக்குடி | | இராமநாதபுரம் | | | |
| 14 | விருதுநகர் | | அருப்புக்கோட்டை | | | | | | |
| 15 | தூத்துக்குடி | கோவில்பட்டி | கோவில்பட்டி | கோவில்பட்டி | கோவில்பட்டி | | | | |
| 16 | கன்னியாகுமரி | நாகர்கோவில் | நாகர்கோவில் | நாகர்கோவில் | | | | | |
| 17 | தர்மபுரி | தர்மபுரி | தர்மபுரி | தர்மபுரி | | | | | |
| 18 | திருவாரூர் | திருவாரூர் | | | | | | திருவாரூர் | |
| 19 | தேனி | | | தேனி | | | | | |
| 20 | சிவகங்கை | | | சிவகங்கை | | | | | |
| 21 | திருநெல்வேலி | | | திருநெல்வேலி | | | | | திருநெல்வேலி |
| 22 | நீலகிரி | உதகை | உதகை | உதகை | | | | | |

[2001 செப்டம்பர் 4

| உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண். | மாவட்டம் | உயிரியல் கட்டுப்பாடு உற்பத்தி நிலையம் | கரும்பு ஒட்டுண்ணி உற்பத்தி நிலையம் | தென்னை ஒட்டுண்ணி உற்பத்தி நிலையம் | பச்சை மங்காடின் பூஞ்சான நிலையம் | என்.பி.வி. வைரஸ் (நிலக்கடலை) | என்.பி.வி. வைரஸ் (பருத்தி) | மாநில ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிலவளம் |
| 1 | காஞ்சிபுரம் | | மதுராந்தகம் | செங்கல்பட்டு | | காஞ்சிபுரம் | | |
| 2 | கடலூர் | | விருதாச்சலம் | கடலூர் | விருதாச் சலம் | | விழுப்புரம் | |
| 3 | விழுப்புரம் | | கள்ளக்குறிச்சி | | | | | |
| | | | விழுப்புரம் | | | | | |
| | | | திண்டிவனம் | | | | | |
| 4 | வேலூர் | | ஆம்பூர் | மேலாளத்தூர் | | | | |
| | | | குடியாத்தம் | வாணியம்பாடி | | | | |
| | | | திருப்பத்தூர் | ஆம்பூர் | | | | |
| 5 | திருவண்ணா மலை | | திருவண்ணாமலை | | | | | |
| 6 | சேலம் | | மோகனூர் | ஆத்தூர் சேலம் | | | | |
| 7 | நாமக்கல் | நாமக்கல் | | | | | | |
| 8 | தர்மபுரி | பாப்பாரப்பட்டி | பாலக்கோடு | பாப்பாரப்பட்டி | | | | |
| 9 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | உடுமலைப்பேட்டை | பொள்ளாச்சி | | கோயம்புத்தூர் | | |
| 10 | ஈரோடு | பவானி | கோபி | கோபி | | | கோபி | |
| 11 | திருச்சி | திருச்சி | லால்குடி | திருச்சி | | திருச்சி | | |
| 12 | பெரம்பலூர் | | பெரம்பலூர் | | | | | |
| 13 | கரூர் | | குளித்தலை,கரூர் | | | | | |
| 14 | புதுக்கோட்டை | | | | | | | |
| 15 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | | | | |
| 16 | திருவாரூர் | | நன்னிலம் | | | | | |
| 17 | மதுரை | விநாயகபுரம் | நிலக்கோட்டை, மேலூர் | மதுரை | | மதுரை | மேலூர் | விநாயகபுரம் |
| 18 | இராமநாதபுரம் | | | உச்சிப்புளி | | | | |
| 19 | சிவகங்கை | | | சிங்கம்புணரி | | | | |
| 20 | விருதுநகர் | | | இராஜபாளையம் | | | | |
| 21 | திருநெல்வேலி | திருநெல்வேலி | | செங்கோட்டை | | | | |
| 22 | கன்னியாகுமரி | | | நாகர்கோவில் | நாகர் கோவில் | | | |
| 23 | தூத்துக்குடி | | | உடன்குடி | | | | |



2001 செப்டம்பர் 4]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்லூரி வளாகங்கள், ஆராய்ச்சி மையங்கள், வேளாண் அறிவியல் மையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள்

**கல்லூரி வளாகங்கள்**

| | | |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 2. மதுரை | 3. கிள்ளிகுளம் |
| 4. பெரியகுளம் | 5. திருச்சி | 6. மேட்டுப்பாளையம் |
| 7. குமுலூர் | | |

**ஆராய்ச்சி மையங்கள்**

| | | |
|---|---|---|
| 1. ஆடுதுறை | 2. ஆளியார்நகர் | 3. அம்பாசமுத்திரம் |
| 4. அருப்புக்கோட்டை | 5. பவானிசாகர் | 6. கடலூர் |
| 7. கொடைக்கானல் | 8. கோவில்பட்டி | 9. சந்தியூர் |
| 10. மேலாலத்தூர் | 11. பையூர் | 12. பாலூர் |
| 13. பரமக்குடி | 14. பட்டுக்கோட்டை | 15. பேச்சிப்பாறை |
| 16. இராமநாதபுரம் | 17. சிறுகமணி | 18. திருவில்லிப்புத்தூர் |
| 19. தஞ்சாவூர் | 20. தடியன்குடிசை | 21. திண்டிவனம் |
| 22. திருப்பதிசாரம் | 23. திரூர் | 24. புதுக்கோட்டை |
| 25. வேப்பங்குளம் | 26. ஊட்டி | 27. விருஞ்சிபுரம் |
| 28. விருத்தாசலம் | 29. ஏற்காடு | 30. வைகை அணை |
| 31. கூடலூர் | 32. ஏத்தாபூர் | |

**வேளாண்மை அறிவியல் மையங்கள்**

| | | |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 2. மதுரை | 3. சிறுகமணி |
| 4. விருத்தாசலம் | 5. மல்லூர் | |

**பயிர் மருத்துவ மையங்கள்**

| | | |
|---|---|---|
| 1. பவானிசாகர் | 2. விருஞ்சிபுரம் | 3. கிள்ளிகுளம் |
| 4. திருவில்லிபுத்தூர் | 5. திரூர் | |

[2001 செப்டம்பர் 4

விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 3 | திருவண்ணாமலை |
| 1 | காஞ்சிபுரம் | 1 | திருவண்ணாமலை |
| 2 | திருத்தணி | 2 | ஆரணி |
| 3 | திருவள்ளூர் | 3 | வந்தவாசி |
| 4 | செங்குன்றம் | 4 | சேத்துப்பட்டு |
| 5 | மதுராந்தகம் | 5 | செய்யார் |
| 6 | உத்திரமேரூர் | 6 | போளூர் |
| 7 | பொன்னேரி | 7 | செங்கம் |
| 8 | திருக்கழுக்குன்றம் | 8 | புதுப்பாளையம் |
| 9 | சுங்குவார்ச்சத்திரம் | 9 | வனபுரம் |
| 10 | பள்ளிப்பட்டு | 10 | வேட்டவலம் |
| 11 | ஊத்துக்கோட்டை | 11 | தெள்ளார் |
| 12 | அச்சரப்பாக்கம் | 12 | மங்கலமாமண்டூர் |
| 13 | கும்மிடிப்பூண்டி | 13 | தேசூர் |
| 14 | நகரத்பேட்டை | 14 | பெரணமல்லூர் |
| | | 15 | தூசி |
| 2 | வேலூர் | 16 | கீழ்பெண்ணாத்தூர் |
| 1 | வேலூர் | | |
| 2 | திருப்பத்தூர் | 4 | கடலூர் |
| 3 | ஆற்காடு | 1 | விருத்தாசலம் |
| 4 | குடியாத்தம் | 2 | கடலூர் |
| 5 | அரக்கோணம் | 3 | பண்ருட்டி |
| 6 | வாணியம்பாடி | 4 | திட்டக்குடி |
| 7 | காவேரிபாக்கம் | 5 | காட்டுமன்னார்கோவில் |
| 8 | கலவை | 6 | சிதம்பரம் |
| 9 | அம்மூர் | 7 | குறிஞ்சிப்பாடி |
| 10 | காட்பாடி | 8 | சேத்தியாதோப்பு |
| 11 | ஆம்பூர் | 9 | திருமுத்தினம் |
| 12 | திமிரி | 10 | புவனகிரி |
| | | | |